# தமிழ் இலக்கிய வரலாறு

## பன்னிரண்டாம் நூற்றாண்டு

முதல் பாகம்



மு. அருணாசலம்

# தமிழ் இலக்கிய வரலாறு

# தமிழ் இலக்கிய வரலாறு

பன்னிரண்டாம் நூற்றாண்டு,

பாகம் - 1

மு. அருணாசலம்

# தமிழ் இலக்கிய வரலாறு

## பன்னிரண்டாம் நூற்றாண்டு

### பாகம் - 1

மு. அருணாசலம்

**The PARKAR**

தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்

*293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்*

*இராயப்பேட்டை நெடுஞ்சாலை*

*இராயப்பேட்டை*

*சென்னை - 14.*

# தமிழ் இலக்கிய வரலாறு

பன்னிரண்டாம் நூற்றாண்டு, பாகம் – 1

மு. அருணாசலம்

© ஆசிரியர்

முதற் பதிப்பு : பங்குனி 1973.
திருத்தப்பட்ட பதிப்பு : மார்கழி 2005.
பக்கம் : lii + 440 = 492.

பதிப்பு :
**தி பார்க்கர்**
293, அகமது வணிக வளாகம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**விலை : 361. 00**

வடிவமைப்பு :
**வே. கருணாநிதி**

அச்சிட்டோர்:
**தி பார்க்கர்**
293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.

# முகவுரை

*திரு மு. அ. என்றே அழைக்கப்பட்ட இவ்வாசிரியர் ஒரு பன்முக எழுத்தாளர். அவருடைய வாழ்க்கையைப் பல கட்டங்களாகப் பிரிக்கலாம். அவருடைய எழுத்தும் அவ்வாறே. எனினும் 1930இல் சென்னையில் குடியேறியதில் இருந்து, தமிழ்ப் பெரியோர்களுடன் அவருக்கு இருந்த நெருக்கமான தொடர்பினால், அவரது தமிழ் ஆர்வமும் ஆராய்ச்சியும் வாழ்நாள் முழுவதும் அமைந்தன. ஐயங்களுக்கு விடைகாணவும், முடிவுகளை விவாதிக்கவும், பல நூலகங்களையும் அனேக தமிழ் அறிஞர்களையும் நாடிச் சென்றார்.*

*'தமிழ் இலக்கிய வரலாறு' என்பது ஒரு தனி மனிதனின் உழைப்பும், ஆழ்ந்த அறிவின் பயனும் ஆகும். இது 1969-முதல் பகுதி, பகுதியாக, 'காந்தி வித்தியாலயம்' சார்பில் வெளியிடப்பட்டது. அன்றைய தொழில் நுட்ப முறையில் பல அச்சகங்களை நாடி, பலவிதமான தாள்களில் வெளிவந்தன. இருப்பினும், பதினொரு தொகுதிகளுக்கும் வடிவம் ஒன்றே. சுமார் இருபதாண்டுகளாக இவற்றின் பிரதிகள் கிடைக்கப் பெறாமையால் தமிழ்ப் படிப்பவர்களுக்கு ஏமாற்றமளித்தது. இன்று மிக மிக முன்னேற்றம் அடைந்த அச்சுத்தொழில் முறையில் இவற்றை வடிவமைத்து மறுபதிப்புக்காக வெளியிட 'தி பார்க்கர்' பதிப்பகத்தார் முன்வந்துள்ளனர். அவர்களுக்கு நன்றி.*

*திருச்சிற்றம்பலம்.* **அ. சிதம்பரநாதன்**
*15. 11. 2004.*

# நன்றியுரை

தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு முறை தொகுதிகள் அனைத்தையும் அறிஞர் மு. அருணாசலம் ஐயா அவர்கள் குறித்து வைத்திருந்த திருத்தங்களுடனும் புதிய கருத்துகளுடனும் புதிதாக வடிவமைத்து மறுபதிப்புச் செய்து வெளியிட எமது நிறுவனத்திற்கு அனுமதி அளித்த ஆசிரியரின் புதல்வர் திருமிகு அ. சிதம்பரநாதன் அவர்கள் மற்றும் அவரது சகோதரிகள் அனைவருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகள்!

இம்முயற்சியில் என் துணை நின்று வழிநடத்தியவர் மனைவி இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள்.

இத்தொகுதிகளின் உருவாக்கப்பணியில் என் அலுவலகப் பணியாளர்களுடன் சேர்ந்துகொண்டு என் சிந்தனைக்கு வலுச் சேர்த்து உழைத்தவர், மதுரை அமெரிக்கன் கல்லூரி, தமிழ்த்துறை விரிவுரையாளர் நண்பர் உல. பாலசுப்பிரமணியன் அவர்கள்.

உத்வேகம் கொடுத்து எம்மை உழைக்க வைத்தவர் தமிழக சட்டமன்ற சபாநாயகர் காளிமுத்து ஐயா அவர்கள். தோள்கொடுத்து உதவியவர்கள் : மதுரை வணிகவரி உதவி ஆணையர் திரு. தேவேந்திர பூபதி, நண்பர் சி. ஆறுமுகம், அமுத நிலையம் உயர்திரு வீரபாகு, மைத்துனர் காலிப் அல்தாப், மைத்துனர் முகமது தானியெல், திரு. முருகன் (முருகன் பேப்பர்ஸ்), எனது தம்பிகள் வே. உதயசூரியன், வே. சிற்றரசு, அண்ணன் கோணங்கி, நண்பர் பிரபாகர் ஜெயராஜ், எம். ஜெயசந்திரன், ஜெ. சந்திரா, நண்பர்கள் நாசர், சாகுல், ஆனந்த்.

எமது நிறுவனப் பணியாளர்கள் : ஜெ. கலைவாணி, அ. ஜெயந்தி, எஸ்.என். விஜயகுமார், ஜெ. சரவணன், ஜெயகுமார், தனசேகர், பால சுப்பிரமணியன், பஹிமா, மெஹபூப் சுபுஹானி, சைதாபானு, கயல் விழி, தேன்மொழி, பாத்திமா, சுகுணா, அனுராதா, சுமதி, தேவி, ஜாய்ஸ், நஸ்ரின், நஜீலா, சரஸ்வதி, தமிழ்ச்செல்வி, ஈஸ்வரி, திலகவதி, சித்ரா, கவிதா, வசந்தி, ராஜேஸ்வரி, ஷமா, கல்பனா, சையதுஅலி பாத்திமா, ஜோதி, நிஷா, கலா, பவானி, ராணிசித்ரா, மல்லிகா, அம்மு, ரதிதேவி - இதனால் சகலமானவருக்கும் எமது நன்றிகள்.

# பதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு முறை அடிப்படையிலான தொகுதிகளின் வெளியீட்டுத் திட்டத்தில், இது 12ஆம் நூற்றாண்டின் முதலாம் பாகம். இரண்டு பாகங்களாக 12ஆம் நூற்றாண்டு வரலாற்றை ஆசிரியர் எழுதி வெளியிட்டுள்ளார். 12ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு கூறும் இம்முதல் பாகத்தின் முகவுரையில் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"எவ்வளவுதான் கவனமாய்ச் சிந்தித்துக் கருத்துக்களைத் தொகுத்து ஒரு முகப்படுத்திய போதிலும் கூட, பல விட்டுப் போகின்றன. முக்கியமான சில கருத்துக்களே விடுபடுகின்றன. இவற்றை அடுத்த பதிப்பிற்குப் பயன்படுத்திக் கொள்வது எளிது. இங்கு அப்படிச் செய்யாமல் முடிந்தவரை அந்தந்த அத்தியாயத்தின் இறுதியில், விடுபட்ட குறிப்புக்களாகத் தந்துள்ளோம்."

"இவையன்றிப் பின்னும் பல செய்திகள் குறிப்பிட முடியாமல், சில குறிப்புக்கள் என்ற பகுதியில் ப்க்க எண் குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ளன. இவையனைத்தையும் வாசகர் உரிய இடத்தில் பொருத்தி வாசித்துக் கொள்வது பயனுடையது." என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்திருத்தப்பட்ட பதிப்பில் ஆசிரியருடைய மேற்கண்ட குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு உரிய செய்திகளை அதற்குரிய இடத்தில் நாம் சேர்த்துள்ளோம். முடிந்தவரை இது எம்மால் முறையாகச் செய்யப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலத்திலுள்ள ஆசிரியரது வீட்டில் இப்பணி தொடர்பாக நாம் சிலகாலம் தங்கியிருந்தோம். அங்குள்ள அவரது நூலகத்தில் அவரால் எழுதி வெளியிடப்பட்ட இலக்கிய வரலாற்றுத் தொகுதிகள் அனைத்தும் பக்கத்துக்குப் பக்கம் வெள்ளைத்தாள் இடையிட்டு கட்டமைப்புச் செய்யப்பட்ட ஒரு தொகுப்புக் காணப்பட்டது. இத்தொகுதிகளில் புதிய செய்திகளும் திருத்தங்களும் ஆசிரியரால் குறித்து வைக்கப் பட்டிருந்தன. அவற்றை நாம் ஒவ்வொரு தொகுதியிலும்

சேர்த்தும் திருத்தியும் முறைப்படுத்தியுள்ளோம். இதனால் ஆசிரியரால் வெளியிடப்பட்ட முதல் பதிப்பிற்கும் எமது இத் திருத்தப்பட்ட பதிப்பிற்கும் இடையில் பக்க அளவிலும் வேறுபாடு காணப்படும்.

12ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியரது முகவுரை மற்றும் முன்னுரை இம்முதல் பாகத்தில் மட்டுமே ஆசிரியரால் அச்சிடப் பட்டுள்ளது. மீண்டும் அதையே 12ஆம் நூற்றாண்டின் இரண் டாம் பாகத்திலும் சேர்த்துக்கொள்ள நாமும் விரும்பவில்லை. தேவை கருதி வாசகர்கள் இதனை 12ஆம் நூற்றாண்டு இரண் டாம் பாகத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வரலாற்றுத் தொகுதிகள் மொத்தம் 14 நூல்களாக வெளிவருகின்றன. 14வது தொகுதியாக மேற்படி நூல்களில் உள்ள வரலாற்று அட்டவணைகள் மற்றும் ஆராய்ந்த நூல்கள் ஒருங்கு தொகுக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் கருத்துப்படி நாம் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

இப்பதிப்பு முயற்சிக்கு 1992ஆம் ஆண்டளவிலேயே என் சிந்தனையில் வித்திட்டவர் எனது ஆய்வு மேற்பார்வையாளர் முனைவர் வீ. அரசு அவர்கள்.

தன் தந்தையாரின் இவ்விலக்கியப் பணியை மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் வெளிக்கொணர எமக்கு அனுமதியளித்து, தனது வீட்டில் தங்கவைத்து எம்மை ஊக்கப்படுத்திய அவர் மகனார், உணவளித்து எம்மை உபசரித்த அவர் மருமகளார் இருவரும் மிகுந்த போற்றுதலுக்கு உரியவர்கள்.

ஒரு தனி மனிதன் தனது வாழ்நாளில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்காகவே செல விட்டிருக்கிறார். இத்தொகுதிகளை அவர் வெளியிட்ட அன்றைய காலகட்டத்தில் இருந்த அச்சமைப்பு வசதிகள் அவரது பாரிய சிந்தனைக்கு ஈடுகொடுக்காமையினால் அவரது விருப்பப்படி இத்தொகுதிகளை அவரால் வடிவமைக்க முடியவில்லை; இக் குறைபாட்டை நீக்கும் முகமாகவும் அவரது பணியைப் போற்றும் விதமாகவும் அன்னாரின் மகனார் ஒத்துழைப்பின் அடிப்படை யில் எமது நிறுவனம் இவற்றை வெளியிட்டு மகிழ்கிறது.

சென்னை
25.12. 2005.

**வே. கருணாநிதி**

# முதல் பதிப்பின் முகவுரை

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்,
வெய்ய வினைப்பகையும் பைய நையும்;
எம்பரிவு தீர்ந்தோம், இடுக்கண் இல்லோம்;
எங்கெழிலென் ஞாயிறு, எளியோம் அல்லோம்;
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி,
அனலாடி, ஆன்அஞ்சும் ஆட்டு கந்த
செம்பவள வண்ணர், செங்குன்ற வண்ணர்,
செவ்வான வண்ணர் – என்சிந்தை யாரே. – அப்பர்

*இந்த இலக்கிய வரலாற்று நூல், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் - 1100 - 1200 ஆகிய கால எல்லைக்குள் - வாழ்ந்த ஆசிரியர் வரலாற்றையும் அவர்கள் செய்த நூல்களையும் ஆராய்கிறது. எமது தமிழிலக்கிய நூற்றாண்டு முறை வரலாற்று நூல்களில் இது ஆறாம் புத்தகமாகும்; உண்மையில் காலமுறைப்படி இது நான்காம் புத்தகமாகவே வந்திருக்க வேண்டியது. முன்வந்த புத்தகங்கள் ஒவ்வொன்றும் சுமார் 500 - 600 பக்கம் கொண்டதாக அச்சிடப்பெற்றது. இது பக்க அளவு அதிகமானபடியால், படிப்போரின் சௌகரியம் கருதியும் முந்திய தொகுதிகளோடு இயைவது கருதியும், இரு பகுதிகளாகக் கட்டடம் செய்யப் பெற்றுள்ளது. பக்க எண்களும் முன்னுரை, பின் அகராதி அமைப்பு போன்றவையும், ஒரு புத்தகம் போலவே தொடர்பாகச் செய்யப் பெற்றுள்ளன.* இவ்வெளியீட்டோடு, 10 முதல் 15 வரையுள்ள ஆறு நூற்றாண்டு இலக்கிய வரலாறுகள் தனித்தனியே வெளியிட்டு முடிகின்றன. அடுத்து 9, 16 ஆகிய நூற்றாண்டுகள் எழுதித் தயாராக உள்ளன; உடன் வெளியாகும்; 7, 8 என்ற இரண்டும்❖ தனித்தனியே எழுதப் பெறுகின்றன. இவ்வரலாற்று நூல்களின் பொதுவான அமைப்பைக் குறித்த ஒரு விளக்கம், 11ஆம் நூற்றாண்டு வரலாற்று முகவுரையின் தொடக்கத்திலும் 14ஆம் நூற்றாண்டு வரலாற்று முகவுரையின் இறுதியிலும் காணலாம்.*

---

* இத்திருத்தப்பட்ட பதிப்பில் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

❖ இவை இரண்டும் ஆசிரியரால் வெளியிடப்படவில்லை.

## கால ஆராய்ச்சி

இவ்விலக்கிய வரலாற்று நூல்கள் அனைத்திலும் கால ஆராய்ச்சி முக்கிய இடம் பெறுகிறது. மொழியோ, சமயமோ, வாழ்க்கைத் தத்துவமோ, இலக்கிய இலக்கணமோ எதுவாயினும், கால உணர்வோடு அமைந்தால்தான் அது உண்மைக்குப் பொருந்துவதாய் இருக்கும். ஆங்கில மொழியின் இலக்கிய வரலாற்றுப் பயிற்சியுடையவர்கள் இது அதிகம் என்று எண்ணுதல் இயல்பு. அம்மொழியில் இலக்கியம் எழுந்ததே ஐந்நூறு ஆண்டுகளுக்கு உள்ளான காலத்தில்தான். ஆனால், இக்காலத்துக்கு முன்னதாகவே, அங்கு மக்களுக்கு அரசியல் உணர்ச்சி மேலோங்கி நின்றது. ஆதலால், எல்லா வகையான வரலாறுகளையும் அங்கு ஆதாரத்தோடு நன்கு தொகுத்து வைத்திருக்கிறார்கள். ஆசிரியர் வரலாறு பற்றியும், வாழ்க்கை பற்றியும், நூல்கள் பற்றியும், காலம் பற்றியும், எந்த ஐயப்பாடும் இல்லை. அப்படி இருந்தும், அங்கு ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஷேக்ஸ்பியரே செய்தாரா, வேறு பேகன் என்பார் செய்தாரா, பிறர் செய்தனரா என்ற ஐயங்களெல்லாம் இருக்கவே செய்கின்றன. நம்முடைய நிலைமை வேறு. குறைந்த அளவு இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியம் வளர்ந்திருக்கிறது. ஆனால் எங்குமே வரலாற்று உணர்வும் கால உணர்வும் இல்லை; பல சமயம், ஆசிரியர் பெயரே தெரிவதில்லை. இந்த நிலையில் நூலை ஆராயுமுன் அது எந்தக் காலத்துக்கு உரியதென்று வரையறை செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. காலக்கண் கொண்டு பார்த்தால்தான் இலக்கியத்தின் உண்மை நிலையை அறியமுடியும். தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு எத்தனையோ மாறுதல்களையும் கொந்தளிப்புக்களையும் கொண்டது; சமய வேறுபாடுகளையும் கொண்டது. அன்றியும், ஒரே பெயருடைய பல ஆசிரியர் பல வேறு காலங்களில் வாழ்ந்து நூல் செய்திருக்கிறார்கள். இப்படிப் பலர் வாழ்ந்தார்கள் என்ற செய்தியே புதிதாய்ச் சொல்ல வேண்டியிருக்கிறது. பல சமயம் பல வேறு வகையான அபிமானங்களும் கலந்து, கால வரையறையைக் குழப்பத்துக்குள்ளாக்குகின்றன. ஆகவேதான் கால ஆராய்ச்சி முக்கியமானதாகி விடுகிறது.

பெரும் பேராசிரியர் என்று பெயர் பெற்றிருந்த கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தமது தமிழ் இலக்கிய வரலாறு முதல் புத்தகம் என்ற நூலில் (1930) முழுமையும் விசித்திரமான கூற்றுக்களையே நிரப்பியிருக்கிறார். 'விருத்தப் பெருங்காப்பியங்களில்,

சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டிலும் பெரியபுராணம் பதினோ ராம் நூற்றாண்டின் இறுதியிலும் தலபுராணம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கம்பராமாயணம் பன்னிரண் டாம் நூற்றான்டின் இறுதியிலும் இயற்றப்பட்டனவாகும். விருத் தப்பாவில் அமைந்த காவியங்களுள் இந்நான்குமே தலைசிறந் தனவாம். சிந்தாமணி, கந்தபுராணம் என்னும் இரண்டும் ஒத்த சொல்லையுடையன. இவ்விரண்டும் ஆண் அழகுடையன என லாம். கம்பராமாயணம் பெண் நடையுடையது. இருவகை நயமும் உடையது பெரியபுராணம்' என்பது அவருடைய கூற்று. கால அமைப்பினாலும் சரி, நூலின் பொருண்மையினாலும் சரி, இக் கூற்றுப் பொருத்தமுடையதன்று என்பது, இன்று நூலாராய்ச்சி யில் தொடக்க நிலையிலுள்ளோருக்கும் நன்கு தெரியும். ஆகவே தான், எமது நூல்களில் மிகவும் திட்டமாகவும் திருத்தமாகவும் ஆதாரத்தோடும் காலத்தைச் சொல்லும் கடப்பாடு முக்கியமான தாய் அமைகிறது.

### வரலாற்றுப் பார்வையின் பொருத்தம்

எம்முடைய இலக்கிய வரலாறுகள் கி.பி. 15ஆம் நூற்றாண் டில் தொடங்கிக் காலத்தில் பின்னோக்கி 15, 14, 13, 12, 11, 10, 9, என்று எழுதப்பெற்று வந்திருக்கின்றன. தொடக்க காலமுதலே ஏன் எழுதக்கூடாது என்பது கேள்வி. எழுதலாம். ஆனால் ஆரம் பக் காலத்தில் - கி.பி. முதலாவது நூற்றாண்டு - பொருள்கள் எல் லாமே ஐயத்துக்கு இடமானவை. பல செய்திகள் உறுதியாக முடிவு செய்து, சொல்வதற்கு இயலாதவை. சொல்லினும் பிறர் ஏற்பு எளிதில் அமையாது. ஆகவே, எவ்வளவுதான் துணிந்தா லும் அங்கு மனநிறைவு ஏற்படுவது அருமை. ஆனால், இங்கு எடுத்துக்கொண்டது போல 15ஆம் நூற்றாண்டிலிருந்து பின் னோக்கிப் போகும்போது, எடுத்த பொருளைக் குறித்த திட மான அறிவு உண்டாகிறது; உறுதியாகச் சொல்ல முடிகிறது; செய்திகளும் மிகப் பலவாகக் கிடைக்கின்றன. ஆகவே, வரலாறு முடிக்கும்போது, ஒரு மனநிறைவு ஏற்படுகிறது. இது மேலும் செய்வதற்குச் சிறந்த தூண்டுதல் அளிக்கிறது. இதனால் அடுத்த நூற்றாண்டாராய்ச்சியை இன்னும் தைரியமாகச் செய்ய முடி கிறது. மேலும் 15, 14 முதலான நூற்றாண்டு வரலாற்றுப் பொருள் கள் முப்பது ஆண்டுக்காலமாக யாம் ஆய்ந்து சிந்தித்து வைத்த வையாகும். இது பற்றியே, அருகிலுள்ள காலமாகிய 15ஆம்

நூற்றாண்டில் தொடங்கி, வரவரச் செய்மையிலுள்ளதும் வரலாற்றுச் செய்திகள் குறைவானதுமான காலத்தை நோக்கிச் செல்கிறோம்.

மற்றொரு பொருத்தமும் இங்கு உண்டு. நூலின் பாகுபாட்டுக்கு, 15ஆம் நூற்றாண்டு தொடங்கி, சுமார் 7ஆம் நூற்றாண்டு வரை பின்னோக்கிப் போகும்போது, ஒரேவிதமான இயல்பு காணப்படுகிறது. இலக்கியம், இலக்கிய உரை, இலக்கணம், இலக்கணவுரை, சைவம், வைணவம், வேதாந்தம், சைனம், பிரபந்தம் என்ற தொகுப்புப் பார்வை இங்கு மேற்கொள்ளப் பட்டது. இப்பார்வை, இந்த ஒன்பது நூற்றாண்டுக் காலத்துக்கும் நன்கு பொருந்துவதைக் காண்கிறோம். இக்காலத்துக்குப் பின், அதாவது 16ஆம் நூற்றாண்டிலிருந்து, இப்பார்வையைச் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. பின்னால் இலக்கண நூல்கள் சிறப்பாய் எழவில்லை. இலக்கிய இலக்கணவுரைகள் எழவில்லை. தனி இலக்கியங்களும் பெருங்காப்பியங்களை ஒத்தவையாய்த் தோன்றவில்லை. புராணங்கள் மிகவும் அதிகமாய்த் தோன்றுகின்றன. தோத்திர இலக்கியம் மிக்க அதிகமாய் எழுகிறது. சாத்திர உரைகளும் புதிதாகத் தோன்றிப் பெருகியிருக்கின்றன. இவற்றையொட்டி நூற்பாகுபாட்டில் புதிய தலைப்புக்களைப் பெய்துகொள்ள வேண்டியிருக்கிறது; பழையனவற்றை நீக்கவும் வேண்டியிருக்கிறது. முன்னும், புராணம் சாத்திர உரைகள் இருந்தன; பின்னால்தான் விரிவு. இலக்கணம் இலக்கியம் பின்னால் தோன்றியும் சிறப்பு இல்லை. ஆகவே தலைப்பில் மாறுதல் தேவைப்படுகிறது. ஆதலால், எம் ஆராய்ச்சி 15ஆம் நூற்றாண்டில் தொடங்கியது பொருத்தமுடையது என நன்கு புலப்படும்.

### ஆராய்ச்சியின் அடிப்படை

ஆராய்ச்சி உண்மையைக் காண்பதற்காகவே என்பதில் ஆட்சேபமிருக்க முடியாது. ஆனால் உண்மை என்பது என்ன? எந்தப் பொருளையும் எந்தக் கோணத்திலிருந்தும் அளந்து பார்க்கமுடியும். பார்ப்பது சரியா? ஆதலால், பொருளின் தன்மை பற்றி அதற்கென்று ஒரு கோணம் உண்டு; அதன் வழியேதான் அதைப் ப்ார்க்கவேண்டும்; அப்போதுதான் அதுகாட்டும் உண்மை வெளிப்படும். அதைவிட்டு ஒருவர் குற்றம் கண்டு பிடிக்கும் நோக்கோடுதான் பார்ப்பேன், அல்லது என் கோணத்தி

லிருந்துதான் பார்ப்பேன் என்று முயன்றால், அவர் அந்த ஆராய்ச்சி வேலைக்கு வந்திருக்கக்கூடாது என்று மட்டுந்தான் சொல்லலாம்.

மகாத்மா காந்தி தம் வாழ்க்கை முழுமையும் சத்தியமே கடவுள் என்ற பேருண்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தார். அதற்காகவே இளமை முதல் கடும் சோதனைகள் நடத்தினார். அதற்காகவே தம் உயிரையும் கொடுத்தார். இளமையில் ஷேக் மேதாப் என்பவனுடைய தூண்டு கோலுக்குட்பட்டு சுதந்திரப் போர் வீரனாக வேண்டும் என்ற உணர்வால், பலநாள் புலால் உண்ண முயன்றார், ஆகவே அவர் புலால் உண்பவர்தான் என்று எழுதினால், எழுதியவரைப் பற்றி என்ன நினைப்போம்?

இலக்கிய ஆராய்ச்சி என்பது எவ்வளவுதான் அறிவியல் ரீதியாகச் செய்யப்புகுந்தாலும், மக்கட் சமுதாயத்தினுடைய மரபுகளையும் குறிக்கோளையும் கற்பனைகளையும் உண்மை நிலையையும் அடியோடு மறுத்து எழுதல் இயலாது. எடுத்துக்காட்டாக, சேக்கிழார் நூலை நாம் பார்க்கும்போது, அதுகாட்டும் சமுதாய நோக்கத்துள் நாம் புகாமல், சமயம் என்ற உயிரும், கற்பனை என்ற சதையும் இரத்தமும் இல்லாத வெறும் வரலாற்று எலும்புச் சட்டமாக அதை ஆராய்தல் அறிவுடைமை ஆகாது.

வரலாற்றுப் பேராசிரியரொருவர் அறுபத்து மூவர் வரலாறு என்பது, சமண சமயத்திலுள்ள ஒரு வரலாற்றை மாற்றி அமைத்துக் கொண்ட சைவச் செய்தி என்று எழுதினார். இது தவறு என்பது மட்டுமல்ல; ஆராய்ச்சியோ, அறிவியலோ ஆகாது. இது சிறிதும் ஈடுபாடு இல்லாமல் எழுந்த கூற்று என்று சொல்வது மிகை. சேக்கிழார் அறுபத்து மூவர் என்று சொல்லவில்லை. ஈடுபாடு கண்ணை மறைக்கக்கூடாது என்பது உண்மை. ஆனால் ஈடுபாடு இன்றிச் செய்வது உண்மை ஆராய்ச்சி ஆகமுடியாது.

பக்தி இல்லாதவர் சேக்கிழாரிடத்தில் போய்ப் பயனில்லை. மேலும், பைரவர் வேடம் பூண்டு சிவபெருமான் சிறுத்தொண்டரது பக்தியைச் சோதிக்கும் பொருட்டு எழுந்தருளி வந்தார். ஆனால் பலருக்கு இது ஒரு பக்தி வரலாறு என்ற உணர்வு வராமல், தமிழ்நாட்டிலும் காபாலிக சமயம் இருந்தது என்பதற்கு ஒரு சான்றாக இதைக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் வேறு இடங்களில் இருந்த அச்சமயம் இங்கும் இருந்தது என்று சான்று காட்ட இத்தகைய பொருள் வலிந்து செய்ய வேண்டிய

தில்லை. சிறுத்தொண்டருடைய செயல், பத்தி வெறியால் விளைந்த செயல்.* இதுபோன்ற செயல்களைப் புராணத்துள் பல இடங்களிலும் காணலாம். ஒவ்வொன்றும் அக்காலத்தில் எங்கோ இருந்த ஒரு நெறியின் பிரதிபலிப்பு என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும்?

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணிலேயே விளைந்த மொழி வளமும் பண்பாட்டு வளமும் சமய வளமும், தமிழுக் குரியனவல்ல, இவ்வகை வளர்ச்சியொன்றுமில்லாத பிற நாடு களிலிருந்தும் மொழிகளிலிருந்தும் எடுத்து வைத்துக் கொள் ளப் பெற்றது என்று மனம் போனபடி எழுதுவது ஆராய்ச்சி யாகாது, உண்மையுமாகாது.

இந்த நிலை ஒரு புறம். மற்றொரு புறம் முழுமையும் அபி மானம் ஒன்றையே கொண்டு ஆராய்ச்சிக்குச் சிறிதும் பொருத்த மில்லாமலே எழுந்த கதைகளையும் இங்கு மறுக்க வேண்டி யிருக்கிறது. எடுத்துக்காட்டாக ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது பாடினார் என்பது போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். இந் நூல் பாடியதால் தான் அவருக்குப் பெருமை என்பதில்லை. அவர் பெரும்புலவர், கவிச்சக்கரவர்த்தி; சோழப் பேரரசர் மூவர் ஆதரவு அவருக்கு இருந்தது. பிறருடைய ஆதரவை அவர் நாடு பவரல்லர். அவர் ஈட்டி எழுபது பாடினார் என்பது போல்வன அபிமானங்கொண்டு எழுந்த போலிச் செய்திகள். நுண்மாண் நுழைபுலம் மிக்க மு. இராகவையங்கார் என்ற பெரியார் கூட இவற்றில் சிலவற்றை உண்மையென்று கொண்டிருந்தது பெரும் வியப்பு.

பொதுவாக இலக்கிய ஆராய்ச்சி பற்றி இந்நூலில் பேசும் போது சில கருத்துக்களை நாம் அடிப்படையாகக் கொண்டி ருக்கிறோம். காலத்தில் பின்னோக்கிச் செல்லச் செல்ல வரலாற் றுச் செய்திகள் கிடைப்பது அருமை; போலிக் கதைகளும் புனைந் துரைகளும் மிகுதியாகவே காணப்படும். முக்கியமாக இப்பன்னி ரண்டாம் நூற்றாண்டானது போலிக் கதைகளுக்கு அதிகம் இடம் கொடுத்துள்ள காலப்பகுதி. எனவே, இந்த நூற்றாண்டின் செய் தியை இங்கு நாம் கூறும்போது, பலருடைய விருப்பு வெறுப் புக்கள் வந்து மோதவே செய்யும். ஒரு சார்பாக நின்று பேசுவது

---

* ஆங்கிலச் சைவ சித்தாந்தம் தொகுதி ஏழு, இதழ் ஒன்று சிறுத் தொண்டர் வரலாற்று விளக்கம் என்ற எமது ஆங்கிலக் கட்டுரை பார்க்க.

மனித இயற்கை எனினும், அவ்வாறு இன்றி நடுநிலையாகவே நின்று, வரலாறுகளை ஆராய யாம் இங்கு முயன்றிருக்கிறோம். நம் முன்னோரும், இதுவரையில் தமிழ்ப்புலவர் வரலாறு தமிழ் இலக்கிய வரலாறு எழுதினோரும், கால உணர்வை முக்கியமாகக் கருதியதில்லை. நூல் நயத்தைக் காட்டிய போதிலும்கூட, காலத்தையும் முக்கியமாக வரையறை செய்யக்கருதி இங்கு நாம் நூல் செய்கின்றோம்; ஆதலால், இங்கு கால ஆராய்ச்சி சில ஆசிரியர் வரலாற்றில் விரிவான இடம் பெற்றிருக்கும். இவ்வாராய்ச்சி முழுமையும் புதிய முயற்சியாதலால் இவற்றுள் பிழையோ தவறான முடிவுகளோ இருத்தல் இயல்பே. மேலும் இனிச் செய்கின்ற ஆராய்ச்சிகளாலும், இனிக் கிடைக்கின்ற நூல்கள், சாசனங்களாலும் எமது முடிவுகள் சிறிது மாறினும் அதற்காக வருந்த வேண்டியதில்லை. இம்முயற்சி அந்த ஆராய்ச்சிக்கும் வழிகாட்டியாக அமைந்து, சிறந்த பயனுடையதாய் என்றும் நிலவும்.

இங்கு சில ஆராய்ச்சிகளில் முன்வந்தோர், பின்வந்தோர் என்று குறிப்பிடும்போது, ஒரு நூறாண்டு எல்லை கட்டிச் சொல்கிறோம். நூறு ஆண்டுகளுக்குள் குறித்த ஓர் ஆசிரியருக்கும் அவர் தமிழ் நூலுக்கும், தமிழ் பயின்றாரிடையே வழக்கு ஏற்பட்டு இருத்தல் பொருந்துவதே. வேறு காலஅளவை கிடைக்காத வரையில், ஒரு நூறு ஆண்டுக்காலம் பொருந்தும் என்றே நாம் கொள்ளுதல் தகும்.

ஆசிரியர் மாணாக்கர் என்ற முறையில் குறிப்பிடும்போது இருவரையும் உடன் காலமாகவோ ஒரு தலைமுறை முன்பின் இருந்தோராகவோ குறிப்பிடுகிறோம். தலைமுறைக்கு இருபத்தைந்து ஆண்டுகள் ஒதுக்கலாம் என்ற ஒரு பொதுவிதியைக் கொண்டு இந்த வரையறை செய்யப்படுகிறது.

சில சமயம் சம்பிரதாயமான கதைகளையும் புராணக் கதைகளையும் இந்நூலுள் அதிகமாகச் சொல்லியிருப்பது போலத் தோன்றலாம். இதில் சிறிது உண்மை உண்டு. இக்கதைகளை அடியோடு ஒதுக்கிவிட்டால் வரலாறு நிறைவு பெற்றதாக ஆகாது. இயன்றவரை கதைகளைச் சொல்லி அவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து, தள்ளவேண்டியவற்றை இங்கு தள்ளியிருக்கவும் காணலாம். அன்றியும் பல சமயம், எந்த வரலாறுமே தெரியாமல் கதைகள் மட்டுமே மிச்சமாயிருக்கும் இடங்களும் உள்ளன.

ஒரு விளக்கமும் இல்லாத இடத்து, கதைகள் சிறிதேனும் விளக்கம் தருதலும் கூடும். ஏன் சம்பிரதாயக் கதைகள் எழுந்தன? அவற்றுக்கு உண்மையொடு பொருந்திய மூலமொன்று இருந்திருக்க வேண்டுமல்லவா?

## இலக்கியம் என்ற தலைப்பு

இலக்கிய ஆசிரியர் என்பதுவே நூலின் முதல் அத்தியாயத்தின் தலைப்பு; இது எமது பிற வரலாறுகள் அனைத்திலும் பெய்யப் பெற்றுள்ளது; இத்தலைப்பே இங்கும் அமைந்துள்ளது. இது பற்றி ஒரு கருத்துக் குறிப்பிடுதல் தகும்.

உரை, இலக்கணம், சமயம், பிரபந்தம் என்ற வேறு தலைப்புக்கள் எல்லா நூல்களிலும் உள்ளன. இவை யாவுமே ஒரு வகையில் இலக்கியம் என்று பேசுகிறோம். காப்பியம், பெருங்காப்பியம் என்பவற்றையும், குறித்த நூலின் தனித்தகுதி பற்றித் தனியே எடுத்துப் பேசத்தக்கவற்றையும், இங்கு இலக்கியம் என்ற பெயரால் அடக்கிக் குறிப்பிட்டுள்ளோம். கம்பர், திருத்தக்கதேவர் காப்பியங்களையும், பெருங்கதை, முத்தொள்ளாயிரம் போன்றவற்றையும், நாலடி போன்ற நூல்களையும், இலக்கியம் என்று தலைப்பிடுவதை எல்லோரும் ஏற்பர். சயங்கொண்டாருடைய கலிங்கத்துப் பரணி, கூத்தருடைய மூவருலா முதலியன பிரபந்தங்களல்லவா, பெரியபுராணம் சைவ இலக்கியமல்லவா எனக் கேட்டல் இயல்பு. இருப்பினும், இவை தனிப்பிரபந்தங்கள் அல்லாது, வெறும் சைவ இலக்கியம் என்ற நிலையையும் கடந்து, சிறப்புடைய இலக்கிய நிலையில் நிற்கின்றன. ஆகவே இவற்றையும் இவை போல்வனவற்றையும் இலக்கியம் என்ற தலைப்பிலேயே ஆராய்கிறோம்.

ஆத்தி சூடியும் கொன்றை வேந்தனும் இவையொத்த இலக்கியமாகுமா? தனியே நீதி நூல்கள் என்று தொடர்ந்த தலைப்புக் கொடுத்து இவற்றை ஆராயலாமே என்று சொல்லக்கூடும். உண்மை. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பாடிய அவ்வையாருக்குள்ள பெருந்தகுதி பற்றி இவற்றைத் தனி இலக்கியங்களாகக் கருதி இந்தத் தலைப்பினுள் ஆராய்ந்திருக்கிறோம்.

### விளக்கங்கள்

நூலும் ஆசிரியரும் பற்றிய பண்டைய வழக்காறுகள், ஆசிரியருடைய வாழ்க்கைச் சரித்திரம், நூல் ஆராய்ச்சி, கால

வரையறை ஆகியவை இந்நூலின் உறுப்புக்கள். இந்நூற்றாண்டுக்குரிய நூல்களைத் தொகுத்து இலக்கியம், இலக்கிய உரை, இலக்கணம், இலக்கண உரை, சைவம், வைணவம், சைனம், பிரபந்தம், பிறவகை என்ற முறையில் பாகுபடுத்தி, அப்பாகுபாடு ஒவ்வொன்றுக்கும் தனித்த முன்னுரை ஒன்று அமைத்திருக்கிறோம். இம்முன்னுரை ஒரு சிறப்புடைய பகுதி. இவற்றுக்கும் மேலாக, இந்நூலில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பகுதிகள் பல உள்ளன. இவை பிற இடங்களில் காணப்படாதனவாயும், புதிய விளக்கம் பொருந்தியனவாயும் இருக்கும். சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

நூல் பற்றிய விளக்கம் - கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், வைணவ இலக்கியங்கள், தில்லையுலா, உத்தர காண்டம், வீரசோழிய உரை, புகலூர் அந்தாதி, சில வைணவ நூல்கள்.

வரலாற்று விளக்கம் - அவ்வையார், தண்டி, குணவீர பண்டிதர், உய்யவந்தார், குணாதித்தன் சேய்.

காலம் பற்றிய விளக்கம் - சயங்கொண்டார், சேக்கிழார், பெருந்தேவனார், அம்பிகாபதி, அருங்கலச் செப்பு; பொதுவாக இந்நூல் முழுமையுமே.

கருத்து விளக்கம் - பரணி பற்றிய விளக்கம், சேக்கிழாரின் சிவஞான ஜனநாயகம், முத்தமிழ் நூல்கள், ஆழ்வார் காலமுறை, காகுத்தன் கதை, அவ்வையார் பலர், கம்பர் இருவர் போன்றன. மணிப்பிரவாளம் பற்றிய விரிவான குறிப்பு முன்னமே 13ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில்* தரப்பட்டுள்ளது. இங்கும் ஒரு விரிவான குறிப்புள்ளது. அரசியல் வரலாற்றுக் குறிப்புடைய நூல்களில் அவ்வரலாறுகளையும் ஆங்காங்கு தெளிவுபடுத்துகிறோம்.

இவை பற்றி இங்கு சில சொற்கள் கூறுவது பொருந்தும். கலிங்கத்துப்பரணி நாட்டுப்பற்றை ஊட்டுகின்ற ஒரு சிறு காவியம் என்பது விளக்கப்பட்டுள்ளது. சேக்கிழாரின் பெரிய புராணமானது, இக்கால ஆராய்ச்சி முறைக்குப் பொருந்த, பல வாழ்க்கைத்துறை இயல்களாக ஆராயப் பெற்றிருக்கிறது. ஒட்டக்கூத்தர் குலோத்துங்கன் மீது பிள்ளைத்தமிழ் பாடிய காலம், அவன் மகுடம் சூடுமுன்; ஈட்டி எழுபது அவர் பாடியது அன்று;

* 13ஆம் நூற்றாண்டு வரலாறு காண்க.

அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்ற இசை நாடக நூல்கள் பலவற்றின் விளக்கம்; வடமொழித் தண்டியைப் பற்றிய குறிப்பு; தமிழ்த் தண்டிக்கு முன்னிருந்த அணி இலக்கணம் பற்றிய குறிப்பு; நல்வழக்கு பற்றிப் பொதுவாக அது வினையும் பயனும் என்ற கருத்தையும் அதிகம் சொல்கிறது என்பது; பெருந்தேவனாரைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி; ஆழ்வார்களின் கால முறையைத் திருவரங்கத்தமுதனார் தமது இராமானுச நூற்றந்தாதியில் பாடியுள்ள வரிசைக்கிரமப்படி கொள்வதே கால முறைக்குப் பொருந்தும் என்பது; இந்நூற்றாண்டில் சடகோபர் அந்தாதி முதலான சிறுநூல்கள், கம்பர் அல்லாதவராய், பிற்காலத்தில் வாழ்ந்த மற்றொரு புலவரால் செய்யப்பெற்றிருக்க வேண்டும், இவரை இரண்டாம் கம்பர் என்று சொல்வதில் பிழை இல்லை என்ற கருத்து; 'ஆவின் கொடைச் சகரர்' என்ற பாடல் கூறுகின்றபடி குணாதித்தன் சேய் என்ற பெயர் தெரியாத புலவன் காகுத்தன் கதை என்ற அம்மானை பாடல் பாடியிருக்கலாம் என்பது.

இந்த வரலாற்று நூலில் இலக்கிய விமரிசனம் சிறப்பான அம்சமாகும். பொதுவாக, இலக்கியப் போக்கும் வளர்ச்சியும் எல்லாத் தலைப்புகளிலும் சுட்டப் பெற்றிருக்கின்றன.

உரைநடைக்கு எடுத்துக்காட்டாகத் தேர்ந்து இங்கு காட்டுகின்ற பகுதிகளில் சிறப்பாய்க் குறிப்பிடத்தக்க இரண்டு. ஒன்று விக்கிரம சோழனுடைய திருவாரூர்க் கல்வெட்டு. இது மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்த செய்தியை வரலாறாகவே சொல்கிறது. இதுகூறும் செய்திகள் அறிஞர் அறிதற்குரியன. மற்றது இரண்டாம் இராசாதிராசன் காலத்துப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு. நீண்ட இக்கல்வெட்டால் தெரியும் செய்திகள் விக்கிரம சோழனுடைய மகள் ஆளுடை நாச்சியின் மகன் நெறியுடைப் பெருமாளின் புதல்வன் எதிரிலாப் பெருமாள் என்பவன் இரண்டாம் இராசாதிராசனாக 1163இல் முடிசூட்டப் பெற்றான் என்றும், அப்போது இரண்டாம் இராசராசனுடைய பிள்ளைகளுக்கு வயது 2, 1 என்றும் அறிகிறோம்.* மூத்தவன், பின் 1178இல் மூன்றாம் குலோத்

* எமது 13ஆம் நூற்றாண்டு வரலாற்றிலும் இந்நூலிலும் இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் சங்கரசோழன் ஆகியோர் வரலாறுகளில் சிறிது மாறுபாடு காணப்படும். முன்கூறியவற்றை விட இப்போது கூறிய கருத்தே திருத்தமானது.

துங்கன் என்று முடி புனைகின்றான். இவன் தம்பியே உலாக் கொண்ட சங்கரசோழன் என்பவன். இக்கல்வெட்டே மிகவும் அரிய இந்தச் சரித்திர வரலாற்றுக்கு ஆதாரமானது.

அருள் நூல்கள் என்றும் புதிய கருத்துக்களை உணர்த்திக் கொண்டேயிருக்கின்றன. நவில்தொறும் நூல் நயம் போலும் என்பது பொன்மொழியல்லவா? இந்நூல் சேக்கிழார் வரலாற்றில், சம்பந்தர் திருவாவடுதுறை அடைந்து 'இடரினும் தளரினும்' என்ற பதிகம் பாடிப்பொற்கிழி பெற்றதைச் சொல்லும்போது, 'ஈவதொன்று எமக்கில்லையேல்' என்பதற்கு விளக்கமாக, 'நீள் நிதி வேண்டினார்க்கு ஈவதொன்றும் மற்றிலேன்' என்று சேக்கிழார் காட்டும் விளக்கம் சொல்லப்பட்டது. இக்கருத்தைச் சேக்கிழார் வற்புறுத்திச் சொல்வதை மற்றோர் இடத்திலும் காணலாம். திருவீழிமிழலைப் பஞ்சத்தில், இறைவன், சம்பந்தர் அப்பர் இருவர் கனவிலும் எழுந்தருளி, 'நீங்கள் பஞ்சத்தால் துன்புற மாட்டீர்கள்; எனினும் உங்களை வழிபடுவார்க்கு அளிக்கக் காசு தருகிறோம்' என்று சொல்வதாகப் பாடியிருப்பது சிறப்பாய்க் கருதத்தக்கது:

காலநிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீர்எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின் றோம் என்று
கோலங் காண எழுந்தருளிக் குலவும் பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார்.

'வாய்மூரில் இருப்போம் தொடர வா' என்று சொல்லி அழைத்துச் சென்று மறைந்த திருவாய்மூர் இறைவனை அப்பர் பாடும்போது, திருமறைக்காட்டில் தாம் கதவு திறக்கப் பாடியதைக் குறிப்பிட்டு, 'அருகே அக்கதவத்தை மறைக்கப் பாடிய சம்பந்தர் நிற்கின்றார்; பெருமான் தம்மை மறைக்கவல்லரோ?' என்று ஒரு பாடல் பாடியிருக்கிறார்:

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.

இந்தப் பாடலை நினைவு கூர்ந்து இதில் சொல்லிய செய்தியையும், மனத்தில் ஏற்றுச் சேக்கிழார் பெரியபுராணத்தில் இதையே குறிப்பிடுவது மிகவும் சிறப்புடையது.

அழைத்துக் கொடுபோந் தணியார்போல்
    காட்டி மறைந்தார் எனஅயர்ந்து,
பிழைத்துச் செவ்வி அறியாதே
    திறப்பித் தேனுக் கேயல்லால்,
உழைத்தா மொளித்தால் கதவந்தொண்டு
    உறைக்கப் பாடி அடைப்பித்த
தழைத்த மொழியார் உப்பாலார்,
    தாமிங் கெப்பால் மறைவதென.

எமது நூல்களை ஆழ்ந்து பயில்வோருக்கு அவற்றின் பொருள் அமைப்பில் ஒரு வளர்ச்சியிருப்பது புலப்படும்.

இதுவரை வெளியாகியுள்ள நூற்றாண்டு வரலாற்று நூல்கள் பின்வரும் வரிசைக்கிரமத்தில் வெளியாயின; 14, 15, 13, 11, 10, 12. நூல்களில் 14, 15, இரண்டிலும் பொருளமைப்பு சுருக்கமாகவே இருக்கும். அங்கு பொருள்களைச் சேகரிப்பதும் தொகுப்பதும் பாகுபடுத்துவதும் முதலில் வந்த செயல் ஆதலால், அவற்றில் முயற்சியே அதிகம் இருக்கும். எதிர்பார்க்கிறபடி விளக்கம் அவ்வளவு அதிகமாய் இருக்காது. ஆனால் பின்வந்த எல்லா நூல்களிலும் விளக்கம் அதிகமாய் இருக்கும். இக்காலங்களில் இலக்கியம் என்பது கவிதை ஆதலால், ஆங்காங்கு பொருள் விளக்கத்துக்கு மட்டுமல்லாமல் கவிதைச் சுவையை எடுத்துக் காட்டுவதற்காகவும், பாடல்கள் அதிகமாய்த் தரப்பட்டிருக்கும். உண்மையில், நூலின் பயன் கால அட்டவணை கொடுப்பதும் கதைகளைப் பெருக்குவதும் அல்ல: கவிச்சுவை தேர்ந்து சுவைப்பது அல்லவா? ஆகவே, இந்த வரலாற்று நூலில் கவிதைகள் அதிகமாய்க் காணப்படுவற்கு ஒரு காரணம், கவிச்சுவை ஊட்டுவதே ஆகும்.

## அட்டவணைகள்

இலக்கிய வளர்ச்சியின் தொகுப்பறிவுக்கு அட்டவணைகள் எவ்விதம் பெரும்பயன் தருகின்றன என்பதை முன்னமே விளக்கியுரைத்திருக்கிறோம்.* அதனையொட்டி இந்நூலிலும் பத்துக்கு மேற்பட்ட அட்டவணைகள் அமைக்கப்பெற்றுள்ளன. இவை, வரலாற்றில் குறித்த பொருளை ஒரு படம் போல் பிடித்துக் காட்டும் என்பது எமது கருத்து. பல சொற்களாலும் வாக்கியங்

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்றாண்டு முகவுரை பார்க்க.

களாலும் மிகவும் பெருக்கியும் விரித்தும் சொல்ல வேண்டிய பொருளை அட்டவணை மூலமாக எளிதில் கருத்தில் பதியு மாறு காட்ட முடிகிறது. போதனைப் பயிற்சிக் கல்லூரியில் பயின்றோருக்கு அவர்கள் கற்ற கல்வி இயலின்படி இது எவ் வளவு சிறப்பானது என்பது நன்கு விளங்கும்.

பரணிப் பிரபந்தங்கள் அமைப்பால் எவ்வாறு வேறுபடு கின்றன, எத்தனைப் பிரபந்தங்கள் எழுந்துள்ளன. என்பவற்றை ஓர் அட்டவணை காட்டும். தமிழில் முதலில் தோன்றியுள்ள புராணம் பெரிய புராணமே; 15ஆம் நூற்றாண்டு வரை எழுந்த வேறு புராணங்கள் மிகச் சிலவே; இந்த நிலையை ஓர் அட்ட வணை காட்டும்; பிற்காலத்தில் புராணங்களே மிகவும் அதிக மாய் எழுந்தன. அவ்வையார் பலர் இருந்தனர் என்பதை ஓர் அட்டவணையால் காட்டியிருக்கிறோம்.

பொதுவாகத் தமிழன்பர் சொல்லுகின்ற ஒரு கருத்து, பெரும்பான்மையான உரையாசிரியர் சைனரே, அவர்களே தமிழை வளர்த்தார்கள் என்பது; இலக்கிய இலக்கண உரை அட்டவணையைப் பார்த்தால் இக்கருத்து எவ்வுளவு தூரம் உண்மை என்பது நன்கு விளங்கும். இங்கு சொல்லப்பட்ட உரையாசிரியர் நாற்பதின்மரில் பரிமேலழகர் ஒருவரே வைண வர் என்பதும் அறியத்தக்கது. அடியார்க்கு நல்லாருக்கு உரை எழுத மூலமாய் இருந்த நூல்கள் இயலுக்குத் தொல்காப்பிய மும், இசை நாடகத்துக்கு, இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், ஆகிய நூல்களும். அவர் காலத்தில் முழுமையும் கிடைத்திருந்த இந்த ஐந்து நூல்களும் இன்று முழுமையும் இறந்து போயின என்று அறிய யாரே வருந்தாமல் இருக்க முடியும்?

ஒட்டக்கூத்தர் சோழர் மூவரால் ஆதரிக்கப்பெற்று மூவர் மீதும் உலா பாடினார்: வேறு பல பிரபந்தங்களிலும் சோழ ரைப் போற்றியிருக்கிறார். மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் குணவீர பண்டிதர் வாழ்ந்து இலக்கண நூல்கள் செய்தார். இக் காலங்களை நன்குணர உதவியாய் இருக்கும் பொருட்டு இக் காலத்துக்குரிய சோழர் பரம்பரை அட்டவணை ஒன்றும் நூலிறுதியில் உள்ளது. எல்லா அட்டவணைகளின் பட்டிய லொன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

### பிற்சேர்க்கை

எவ்வளவுதான் கவனமாய்ச் சிந்தித்துக் கருத்துக்களைத் தொகுத்து ஒரு முகப்படுத்திய போதிலும் கூட, பல விட்டுப் போகின்றன. முக்கியமான சில கருத்துக்களே விடுபடுகின்றன. இவற்றை அடுத்த பதிப்பிற்குப் பயன்படுத்திக் கொள்வது எளிது. இங்கு அப்படிச் செய்யாமல் முடிந்தவரை அந்தந்த அத்தியாயத்தின் இறுதியில், விடுபட்ட குறிப்புக்களாகத் தந்துள்ளோம்.* இவற்றுட் சில: சயங்கொண்டார் - தீபங்குடி: இப்பகுதி அச்சிட்டு முடியும் தருணத்தில் அவ்வூர் சென்று செய்திகளை அறிந்து இங்கு சேர்த்தோம். பின்னரும் ஒரு விரிவான குறிப்பு உள்ளது ஒட்டக்கூத்தர்: உத்தரகாண்டம் பற்றிய பிற்குறிப்பு. மேலும் வரலாற்றுச் செய்திகளும் இலக்கிய விமரிசனமும் முடிந்து போவன அல்ல. பிற நூற்றாண்டை ஆராயும்போதும் இந்நூற்றாண்டுச் செய்திகள் விளக்கமாகிக் கொண்டே வருவதால், பொருள் விரிவடைகிறது.

இவையன்றிப் பின்னும் பல செய்திகள் குறிப்பிட முடியாமல், சில குறிப்புக்கள் என்ற பகுதியில் பக்க எண் குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ளன. இவையனைத்தையும் வாசகர் உரிய இடத்தில் பொருத்தி வாசித்துக் கொள்வது பயனுடையது.* இப்பகுதியில், சேக்கிழார் ஒட்டக்கூத்தர், அவ்வையார் பற்றிய சிறப்புச் செய்திகள் பல உள்ளன. பின்னும் சில, தனிப்பகுதிகளாகப் பிற்சேர்க்கையில் காணப்படும்; அவை மேலும் ஆராய்ச்சிக்குரியன.

### முடிவுரை

முன்னர் வெளிவந்த எமது வரலாற்றாராய்ச்சி நூல்களின் முகவுரை முன்னுரைகளில் அவ்வப்போது மனத்தில் எழுந்த சிறப்பான கருத்துக்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்றில் சொல்லிய பொருளை மற்றொன்றில் மீண்டும் சொல்லவில்லை. இந்நூலைக் கற்பவர் அவற்றையும் ஒருசேரப் படித்தறிந்து கொள்வது பயனுடையதாயிருக்கும். எமது கருத்துக்களே முடிவானவை என்று யாம் எப்போதும் சொல்லவில்லை. அறிஞர் இவற்றை நன்கு சிந்தித்து ஆராய்ந்தே ஏற்றுக் கொள்வார்களாக. முந்தைய ஆராய்ச்சியாளருடைய குறிப்புக்கள் ஆங்காங்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஐயரவர்களுடைய பதிப்

* இவை இத்திருத்தப்பட்ட பதிப்பில் உரிய இடங்களில் சேர்க்கப் பட்டுள்ளன.

புக்கள், மு. இராகவையங்கார் நூல்களில் கண்ட கருத்துக்கள், சதாசிவ பண்டாரத்தார் எழுதிய சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு என்ற நூல்கள் ஆகியவற்றைச் சிறப்பாய்க் குறிப்பிட லாம். பிந்திய இரு நூல்களும் நாட்டு வரலாற்றாராய்ச்சிக்குப் பெரும்துணையாவன. இருப்பினும், பல இடங்களிலும் இவ் வாசிரியன்மாருடைய கருத்துக்கு மாறான முடிவுகளையே நாம் கொள்ள வேண்டியிருக்கிறது.

நூல்களை முன்வெளியிட்டோருக்கும் ஆராய்ந்தோருக் கும் எமது நன்றி உரியது. முக்கியமான பதிப்புக்களைப் பற்றிய குறிப்புக்கள் இயன்றவரை அவ்வவ் அத்தியாயத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இந்நூலுள் சயங்கொண்டார், சேக்கிழார், ஒட்டக்கூத்தர், அடியார்க்கு நல்லார் வரலாறுகளை மட்டும் சில அன்பர் விரும்பியவாறு தனி நூலாக வெளியிட்டிருக் கிறோம். இக்காலப் பகுதிக்குரிய அவ்வையார் வரலாறு இங்கு விரிவாகவே சொல்லப்பட்டுள்ளது. இவர் வரலாற்றைத் தனியே வெளியிடவில்லை. அவ்வையார் பலர்; 14ஆம் நூற்றாண்டு வர லாற்றில் ஒருவர் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளார். பின்னும் சங்க கால அவ்வை விரிவான ஆராய்ச்சிக்கு உரியவர். இவ்வளவை யும் ஒன்று சேர்த்தால்தான் அவ்வை வரலாறு பூர்த்தியாகும். ஆகவே, 12ஆம் நூற்றாண்டு அவ்வை வரலாற்றை மட்டும் தனியே எடுத்து வெளியிடவில்லை.

10ஆம் நூற்றாண்டு வரலாறு மிக விரையில் அச்சிட்டு வெளி வந்தது. ஆனால், 12 அச்சாகி வர எதிர்பார்த்ததைவிட மிக மிக அதிகமான கால தாமதம் ஆயிற்று. இந்நூல் முதன்முதலில் 1968இல் எழுதி முடிக்கப்பெற்றது. 1972இல் அச்சிடத் தொடங் கியபோது பெரிதும் அதைத் திருத்தி எழுதுவதில் தாமதம் நேர்ந்தது. நூலும் அளவில் அதிகம் விரிந்தது. இவ்விரிவு, தமிழ் நாட்டு அரசியலின் பொற்காலங்களில் ஒன்று என்று கருதத் தக்க 12ஆம் நூற்றாண்டுக்குப் பொருந்துவதேயாகும்.

இவ்வரலாற்று வரிசையில் முதல்முதல் வெளியான 14, 15 நூற்றாண்டு வரலாறுகளுக்கு இந்திய அரசினர் உதவியளிப்ப தாக 1968இல் வாக்களித்தனர். அதன்மேல் அவ்வாண்டிலேயே தொடர்ந்த அவ்வுதவி வேண்டுமென்று, 11, 12, 13ஆம் நூற்றாண்டு வரலாறுகளுக்கான விண்ணப்பம் அனுப்பினோம். அப்போது

இப்புத்தகம் 350 பக்கமே இருக்கும் என்ற திட்டப்படி மத்திய அரசை உதவி கேட்டோம். அவர்கள் 1973இல் ஓரளவு உதவி செய்தார்கள். இப்போது இந்நூல் மட்டும் 1028 பக்கமாகியிருக் கிறது. செலவு நான்கு மடங்கு. மேலும், விண்ணப்பம் அனுப்பிய காலத்துக் காகித விலைக்கும் அச்சுக் கூலிக்கும் இன்று நிலவும் காகித விலை அச்சுக் கூலிகளுக்கும் சம்பந்தமே இல்லை. புத்தகங் களுக்கு ஆன செலவை நோக்க, இந்திய அரசின் உதவி குறைவு தான். இருப்பினும், பிந்திய இரு நூல்களுக்கும் (11, 13 வரலாறு கள்), இந்த நூலுக்கும் பகுதி உதவியளிக்க முன்வந்த இந்திய அரசின் பண்பாட்டுத் துறையினருக்கு எம் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

அச்சுப் பிழைகள், எவ்வளவு கூர்ந்து பார்த்தாலும் நிகழ்ந்து விடுகின்றன. சென்ற இரண்டாம் உலக யுத்தத்தின் பின் உலகமே மாறிவிட்டது. எந்த நிலையிலும் எந்தத் துறையிலும், இம்மாற் றத்தின் விபரீத விளைவுகளைக் காணமுடிகிறது. அச்சுத்துறை யும் இதற்கு விலக்கன்று இப்புத்தகம் ஆறு மாதம் முன்னமே வெளிவந்திருக்க வேண்டும். இந்த அளவில் இது இப்போதேனும் வெளிவருவதுபற்றி, அச்சகத்துக்கு நாம் நன்றி பாராட்டும் கடப் பாடுடையோம். அன்பர்கள் தாமதமும் பிழையும் பொறுக்க.

இந்நூல் எழுதிய காலத்தில் எம்மிடம் பயின்ற மாணாக்கர் சிலர் சொல்வதெழுதியும், பெயர்த்தெழுதியும் உதவிசெய்தனர். அவர்களுக்கு இறைவன் எல்லா நலன்களும் அருளுவானாக. அன்பர் பலர் விரும்பியவாறு, தமிழிலக்கிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட சுருங்கிய வரலாற்று நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி அச்சிடுகிறோம்; விரைவில் வெளிவரும். எம்மை இத்துறையில் ஈடுபடுத்தி நடத்தி வருகின்ற இறைவன் திருவருளை எந்த நேரமும் சிந்திக்கின்றோம்.

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதின்
'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்' என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான். – சேக்கிழார்

திருச்சிற்றம்பலம். **மு. அருணாசலம்**
14 - 04 - 1973.

# பொருளடக்கம்

**1. இலக்கியம் – 1** **1**

சயங்கொண்டார் - வரலாறு - சமயம் - கலிங்கத்துப் பரணி - முன்னூல்கள் - பிரபந்தங்களும் பரணியும் - பாடியாடுதல் - பரணியும் போரும் - பரணி பாட்டின் பழமை - பரணி இலக்கணம் - நூற்பொருள் - பரணியைச் சிறப்பித்தோர் - தனிப் பாடல்கள் - முதற் குலோத்துங்கசோழன் (1070-1120) - கருணாகரத் தொண்டைமான் - காவியப் பண்பும் நாட்டுப்பற்றும் - நாடகத்தன்மை - நூல்நயம் - சுவைகள் - அச்சச்சுவையும் வீரச்சுவையும் - உருத்திரச்சுவை - அவலச்சுவை - நகைச் சுவை - பக்திச்சுவை - அகப்பொருட்சுவை - வள்ளைப் பாட்டு - அடுக்குக் கருத்துக்கள் - சொல்நயங்கள் - கம்பரும் சயங்கொண்டாரும் - கலிங்கத்துப் பரணியால் விளைந்த தமிழ்வளம் - முடிவுரை - பதிப்பு - பிற நூல்கள் - இசையாயிரம் - தீபங்குடி

**2. இலக்கியம் – 2** **62**

சேக்கிழார் - வரலாறு - சேக்கிழார் புகழ் - சேக்கிழார் காலம் - முதலாம் இராசேந்திரன் - முதலாம் குலோத்துங்க சோழன் - இரண்டாம் இராசராசன் - மூன்றாம் குலோத்துங்க சோழன் - இரண்டாம் குலோத்துங்கன் - சுந்தரர் காலமும் நம்பியாண்டார் நம்பி காலமும் - திருத்தொண்டர் புராணம் - நூற்பெயர் - தொண்டர் காலம் - தொகைவகை விரி - புராண அமைப்பு - இடைச்செருகல் - வடமொழி நூல் - அறுபத்து மூவரும் சைனப் புராதன புருஷரும் - வரலாற்றியல் - நாட்டியல்பு - வரலாற்றறிவு - பிற சமயங்கள் - ஆசிரிய இயல் - சேக்கிழாரின் ஆசிரியத் தன்மை, நூலாசிரியர் - உரையாசிரியர் - போதகாசிரியர் - ஞானாசிரியர் - திருமுறைச் செய்திகள் - சமய இயல் - சமய தத்துவம் - தில்லை திருநடனம் - .பக்திச்சுவை - அன்பும் ஆய்வும் - ஞானநெறி - அருள் - காப்பிய இயல் - காப்பியம் ஒரு பொதுநோக்கு - நூலின் காப்பியத் தன்மை - தமிழ்ப்பற்று - பிறநூல் ஒப்புமை - நாடகப் பண்பு - கவிதை இயல் - துதிப் பாடல்கள் - வருணனை - சந்தம் - சில மடக்கு நயங்கள் - சொல்லாட்சி - ஐயர் - நாய

னார் - வள்ளல் - திருக்களிற்றுப்படி - திருவாசகம் - கலையியல் - உள்ளத்தின் அழகு - ஓவியம் - சிற்பம் -கட்டிடக்கலை - இசைக்கலையும் கூத்தும் - பூத்தொடுத்தல் - கலைப்பண்பு - பொருளியல் - அரசியல் - போரும் வீரமும் - நீதி - பிற செய்திகள் - சமூகவியல் - உழைப்பே உயர்வு - பெண்களின் உயர்வு - சீர்திருத்தக் கருத்துக்கள் - சாதிப்பாகுபாடு - சமூக சேவை - சேக்கிழார் காட்டும் பொதுமை - முடிவுரை - சிவஞான ஜனநாயகம் - பெரியபுராணமும் பிற்காலமும் - மாகேசுர பூசை - வீரசைவ வரலாறுகள் - சிற்பங்கள் - நூல்கள் - தனிப் பாடல்கள் - பதிப்பு.

3. இலக்கியம் – 3 255

ஒட்டக் கூத்தர் - வரலாறு - தனிப்பாடல்கள் - சோழர் மூவர் வரலாறு - விக்கிரமசோழன் (1118-35) - இரண்டாம் குலோத்துங்க சோழன் (1133-50) - இரண்டாம் இராசராசசோழன் (1146-1163) - ஒட்டக்கூத்தர் நூல்கள் - கிடைக்கிற நூல்கள் - கிடைக்காத நூல்கள் - கோவை - மூவருலா - விக்கிரம சோழன் உலா - கலிங்கத்துப் பரணி - குலோத்துங்கச் சோழன் உலா - உரை - குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் - இராசராசன் உலா - தக்கயாகப்பரணி -நூற்பொருள் - நூல் - உரை - உத்தரகாண்டம் - ஆசிரியர் - கதைச்சுருக்கம் -நூல் - இதிகாசமும் புராணமும் - குறிப்பு - அரும்பைத் தொள்ளாயிரம் - நாலாயிரக்கோவை - எதிர்நூல் - கண்டன் கோவையும் அலங்காரமும் - தில்லையுலா - ஈட்டி எழுபது - வீர சிங்காதன புராணக்கதை - பதிப்பு.

4. அவ்வையார் 345

அவ்வை என்ற சொல் - அவ்வை பாடல் - அவ்வையார் - சங்ககால அவ்வை - அங்கவை சங்கவை கால அவ்வை - சோழர்கால அவ்வை - தனிப்பாடல்கள் - சமயப் புலவர்கள் அவ்வையார் - பிற அவ்வை - அவ்வையார் நூல் - ஆத்திசூடி - கொன்றைவேந்தன் - மூதுரை - பதிப்பு - நல்வழி - பதிப்பு - அசதிக்கோவை - பந்தனந்தாதி - காலம் - முடிவுரை - ஆராய்ச்சி நூல்கள் - பாடல் தொகுப்புகள் - குறிப்பு.

5. சொல்லாட்சியும் பொருளும் 409

6. மேற்கோள் செய்யுள் அகராதி 411

7. பொருள் அகராதி 420

8. சிறப்புப் பெயர் அகராதி 425

ooo

# இவ்வரலாற்றில் ஆராய்ந்த நூல்கள்


| | |
|---|---|
| அசதிக் கோவை | 399 |
| அருங்கலச் செப்பு | 1 |
| அரும்பைத் தொள்ளாயிரம் | 334 |
| அவ்வை பாடல் | 347 |
| ஆத்திசூடி | 382 |
| ஆத்திசூடி திறவுகோல் | 386 |
| ஆத்திசூடி வெண்பா | 385 |
| இசையாயிரம் | 59 |
| இராசராசன் உலா | 303 |
| ஈட்டி எழுபது | 338 |
| உத்தர காண்டம் | 318 |
| எதிர் நூல் | 337 |
| எழுப்பெழுபது | 219 |
| கண்டன் அலங்காரம் | 338 |
| கண்டன் கோவை | 338 |
| கந்தி பாடல்கள் | 110 |
| கலிங்கத்துப் பரணி | 9 |
| கலிங்கத்துப் பரணி (வேறு) | 290 |
| கன்னிவன புராணம் | 6 |
| குலோத்துங்கன் உலா | 294 |
| குலோத்துங்க பிள்ளைத்தமிழ் | 298 |
| கொன்றை வேந்தன் | 386 |
| சரசுவதி அந்தாதி | 277 |
| சிலப்பதிகார உரை | 24 |
| ஞானாமிர்தம் | 408 |
| தக்கயாகப்பரணி | 306 |
| தண்டியலங்காரம் | 171 |
| திருக்களிற்றுப்படியார் | 196 |

| | |
|---|---|
| திருக்கை வழக்கம் | 72 |
| திருத்தொண்டர் புராணம் | 105 |
| திருப்பதிக் கோவை | 74 |
| திருவாசகம் | 198 |
| தில்லையுலா | 338 |
| நல்வழி | 396 |
| நாலாயிரக் கோவை | 277 |
| பந்தனந்தாதி | 403 |
| பூம்புலியூர் நாடகம் | 6 |
| மூதுரை | 390 |
| மூவருலா | 278 |
| வச்சணந்தி மாலை | 17 |
| விக்கிரமசோழன் உலா | 285 |
| வீரசிங்காதன புராணம் | 341 |


 OOO

## அட்டவணைகள்

இந்நூலகத்தும் இறுதியிலும் பல்வேறு அட்டவணைகள் பயன் கருதி அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியலைக் கீழே காண்க.


| | | |
|---|---|---|
| 1. | பிரபந்தங்களின் பாட்டுடைத் தலைவர் | 12 |
| 2. | பரணி இலக்கிய அட்டவணை | 56 |
| 3. | புராண அட்டவணை | 252 |
| 4. | சோழர் இராசபாரம்பரியம் - உலாக்கள் | 280 |
| 5. | கலிங்கத்துப்பரணியும் தக்கயாகப்பரணியும் | 310 |
| 6. | உத்தரகாண்டம் - படலம், பாட்டு | 328 |
| 7. | அவ்வையார் அறுவர் | 391 |


OOO

# முன்னுரை

## காலப் பாகுபாடு

தமிழிலக்கிய வரலாற்றை எத்தனையோ முறைகளில் தொகுத்து ஆராயமுடியும். நூற்றாண்டுக் காலமுறை ஒன்றையே கொண்டு தொகுத்துச் செய்யும் ஆராய்ச்சியில் இந்தநூல் 12ஆம் நூற்றாண்டுக்குரிய ஆராய்ச்சியாகும். காலந்தோறும் தோன்றிய இலக்கிய இலக்கணங்களின் இயல்பையும் பொருளையும் ஒரு தொகுப்பாக நோக்கிப் பின்வருமாறு ஒரு பாகுபாடு செய்யவும் கூடும். பலர் பலவிதமாகக் காலத்தைத் தொகுத்துக்காட்டு வதால், எமது கருத்துக்களை விளக்கி யாமும் ஒரு தொகுப்புச் செய்து காட்டுவது அவசியமாகிறது.

### 1. கடைச் சங்கத்துக்கு முந்திய காலம்

கி.மு. 300 வரை முதற்சங்கம், இடைச்சங்க காலங்கள்.

### 2. கடைச் சங்க காலம்

கி.மு. 300 - கி.பி. 250 கடைச் சங்கமும் அதையொட்டிய காலமும். ஆராய்ச்சிக்குரியவை : 1. அ. தொல்காப்பியம்; ஆ. சங்க இலக்கியம் 2. இ. திருக்குறள் ஈ. சிலப்பதிகாரம்.

### 3. கடைச் சங்கத்தையடுத்த காலம்

கி.பி. 250 - கி. பி. 600 (களப்பிரர் ஆதிக்கக் காலம்). 1. அ. பதி னெண் கீழ்க் கணக்கினுள் சில. 2. ஆ. காரைக்காலம்மையார், திரு மூலர். இ. முதலாழ்வார். 3. ஈ மணிமேகலை.

### 4. பாசுர காலம்

கி.பி. 600 - 900. 1. அ. நால்வர் பாசுரங்கள், ஆ. ஆழ்வார் பிரபந்தங்கள். 2. இ. பதினெண் கீழ்க்கணக்கினுள் எஞ்சியவை. 3. ஈ. பெருங்கதை. 4. உ. பாட்டியல் துறைகள், களவியல்.

**5. சோழர் ஆதிக்கக் காலம்**

*கி.பி. 850 - 1300 1. அ. காப்பியம்: சிந்தாமணி, சூளாமணி, பெரிய புராணம். 2. ஆ. சமய நூல்கள் திருவிசைப்பா முதலியன. 3. இ. இலக்கணம், உரைகள்.*

**6. சமய எழுச்சிக் காலம்**

*கி.பி. 1150 - 1600. 1. வைணவம் அ. வியாக்கியானங்கள், குரு பரம்பரை; ஆ. பிற சாத்திரங்கள். 2. இ. சைவம்: சாத்திரம்; ஈ. தோத்திரம் - அருணகிரிநாதர்.*

**7. புராண எழுச்சிக் காலம்**

*கி.பி. 1450 - 1700. அ. சைவ புராணங்கள்; ஆ. வைணவ புராணங்கள்; இ. சைனம். 2. ஈ. சைவசாத்திர உரைகள். 3. உ. பிர பந்தங்கள் ; ஊ. பிற.*

**8. பிற நாட்டார் தொடர்பு**

*கி.பி. 1700 - 1900.*

**9. தற்காலம் (1900 க்குப் பின்)**

*அ. 1900 - 50. புத்தெழுச்சிக் காலம்*

*ஆ. 1950க்குப் பின். அமெரிக்க - ரஷ்ய அடிமைக் காலம்.*

*இது ஓரளவு எல்லாத் தன்மைகளையும் உளப்படுத்திக் கொண்ட ஓர் அமைப்பாகும். இதையே இன்னும் சுருக்கித் தருவதனால், பின்வருமாறு காட்டலாம்.*

I. *சங்ககாலம்: 1 - 2 பிரிவுகள்.*

II. *பாசுரகாலம்: 3 - 4 பிரிவுகள்.*

III. *சோழர் ஆதிக்கக்காலம்: 5 பிரிவு மட்டும்.*

IV. *சமய எழுச்சிக்காலம்: 6 - 7 பிரிவுகள்.*
*8 இல் ஒரு பகுதி: 1700 - 1800 வரை.*

V. *தற்காலம்: 8இல் பிற்பகுதி; 9: 19, 20ஆம் நூற்றாண்டுகள்.*

*இந்தப் பாகுபாட்டை விளக்கிச் சொல்வதனால் மிக விரியும். இது இப்போது எமது நோக்கமன்று. எனினும், பல நூற்றாண்டு வரலாறுகளை முறையாக எழுதி முடித்த இந்த நிலையில், எமது*

கருத்தையும் சொல்வது பயனுடையது என்ற உணர்வோடு இப் பாகுபாட்டை இங்கு தந்திருக்கிறோம். காலம் என்பதெல்லாம், செயற்கையான ஒரு வரையறை. ஒரு காலத்தில் ஒரேவிதமான நூல்களே தோன்றின என்பதில்லை. எல்லாக் காலத்திலும் எல்லா விதமான நூல்களும் தோன்றியுள்ளன. இருப்பினும், பொதுத் தன்மையை உணர்ந்துகொள்ள இப்பாகுபாடு பயன்படும் என்ற துணிவுடையேம். ஒரு காலம் மற்றொன்றின் பகுதியாகவும் சேர்ந் திருக்கக் காணலாம். இலக்கியப்போக்கு இப்படி இருப்பதால், இந்த மாதிரியாக, ஒன்றை மற்றொன்றைச் சார்த்திக் காட்டு வதும், அவசியமாகிறது.

## தமிழ் நாட்டின் பொற்காலம்

பத்தாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றில், தமிழ் நாட் டின் பொற்காலம் எனத்தக்க 12ஆம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றுக்கு அது ஒரு நுழைவாயிலாய் அமைந்தது என்று குறிப்பிட்டோம். அவ்வாயில் வழியாக நுழைந்து இடைகழியான 11ஆம் நூற்றாண்டைக் கடந்து இந்த நூற்றாண்டுக்குள் புகுந்தோ மானால், அப்பொற்காலத்தின் பொலிவு முழுமையும் இங்கு காண்கிறோம். ஆட்சியின் சிறப்பு, எண்ணற்ற பெருங்கோயில் களின் அமைப்பு, அவற்றில் விழாக்கள், அவற்றின் நிர்வாக முறை, இசை நடனங்கள், பல நீர்ப்பாசனத் திட்டங்கள், கல்விச் சாலைகள், ஆதுலர் சாலைகள், ஊர்ப்பஞ்சாயத்து முறை, இசை வளர்ச்சி முதலிய பலவும் இங்கு காண்கிறோம். வளர்ந்து வந்த சோழருடைய செயல்திறனை உணர்த்தும் மெய்க்கீர்த்திகளைக் காணும்போது, இன்றுகூட நம் மனத்தில் ஒரு பெருமித உணர்ச்சி தலையெடுக்கிறது. 'நாட்டில் சுருதிகளின் முறை வாழ்த்தெழு கிறது. ஆதியுகம் கொழுந்துவிட்டுத் தழைத்தோங்குகிறது. கோடா தறங் குளிர் தூங்குகிறது. மாரிவாய்த்து வளஞ்சுரக்கிறது, தாரணி யோர் பிணி நீங்குகிறது, நல்லோர்தங் கற்புயர்கிறது, நான்மறை யோர் தொழில் வளர்கிறது, எல்லாரும் தனித்தனியே 'வாழ்ந் தனம்' என மனமகிழ்கிறார்கள். வெருவரு பகைமை மனத்தின்றி, விழைந்து காதலுடன் சேர்ந்து வாழ்கிறார்கள்'* இது கற்பனை யன்று, உண்மையான வாழ்க்கையே. இவ்வாழ்க்கையைப் படைத் துத் தந்த ஆட்சியில் இலக்கியத்தின் வளர்ச்சியை எல்லாத் துறை களிலும் காண்கிறோம்.

---

* இராசராசன் II மெய்க்கீர்த்தி, பூமருவிய பொழிலேழும் என்பது.

## சோழர் பேரரசு

இந்த நூற்றாண்டின் வரலாறு ஒருவகையில் சோழநாட்டில் ஒரு குலோத்துங்கனோடு தொடங்கி மற்றொரு குலோத்துங்கனோடு முடிகிறது. முதற் குலோத்துங்க சோழன் சோழநாட்டுக்கும் வேங்கி நாட்டுக்கும் தலைவனாய் 1070இல் மகுடம் புனைந்து 1120 வரையில் ஆட்சி புரிந்தான். மூன்றாம் குலோத்துங்கன் 1178இல் மகுடம் புனைந்து 1218 வரையில் ஆட்சி புரிந்தான். இவ்விருவருக்கும் இடையில் நான்கு மன்னர் ஆட்சி புரிந்தனர். இச்செய்தியைப் பின்னுள்ள சோழர் பரம்பரை அட்டவணையால் விளக்கமாக அறியலாம். இந்த ஆட்சிப் பகுதியானது தமிழ் வளர்ச்சிக்குரிய பொற்காலமாய் அமைந்திருந்தது.

கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், அவ்வையார், அடியார்க்கு நல்லார், பெருந்தேவனார், தண்டியாசிரியர் ஆகிய பெரும்புலவர்கள் இக்காலத்தே அரசர் ஆதரவில் வாழ்ந்து கணக்கற்ற தமிழ்நூல் செய்தார்கள். சோழ மன்னர் தங்களிடம் வந்து குவிந்த அளவற்ற பொருளை வைத்துச் சிவபிரானுக்கு நாடெங்கும் கற்கோயில் கட்டினார்கள். நாட்டில் பல இடங்களிலும் வாழ்ந்த பெரும்புலவர்கள் அரசர் ஆதரவைப் பெற்றவர்களாய் அருள்பெற்ற பெருஞ் சொற்கோயில் அமைத்தார்கள். இக்காலம் பொதுவகையால் சோழ நாட்டிலும் சரி தமிழ்நாட்டிலும் சரி பெரும் போர்கள் இல்லாத காலம். ஆகவே, எல்லா வகையாலும் இது தமிழ் நாட்டுக்கும் மக்களுக்கும் தமிழ்மொழிக்கும் ஒரு பொற்காலம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழ்நாட்டின் வாழ்வு எப்படி ஒரு பொற்காலமாயிருந்தது என்பதை, இக்காலச் சோழ மன்னர் ஆட்சிச் சிறப்பைச் சுருக்கி உணர்த்துவதன் மூலம் காட்ட எண்ணுகிறோம்.*

கி.பி. 1070இல் பட்டமேற்ற முதற் குலோத்துங்கன் இந்த நூற்றாண்டிலும் இருபது ஆண்டுகள் ஆட்சி புரிகிறான். கீழைச் சாளுக்கிய மரபுக்கும் சோழர் மரபுக்கும் தனித்தலைவனாக, உபய குலோத்தமனாக, இவன் முடி புனைந்தான்.

மேலைச் சாளுக்கியர், பாண்டியர், சேரர், கலிங்கர் முதலிய பல நாட்டு மன்னரோடு இவன் போர் புரிந்திருந்திருக்கிறான். தென்கலிங்கப் போர் இவன் மகன் விக்கிரமன் தலைமையில்

* இக்குறிப்புக்களுக்கு ஆதாரம், தி. வை. சதாசிவ பண்டாரத்தார் எழுதிய சோழர் வரலாறு - இரண்டாம் பகுதியாகும்.

1096இல் நடைபெற்றது. அக்காலத்தில் இளைஞராயிருந்த ஒட்டக்கூத்தர், ஒருகால் இளம் போர்வீரராகவும் இப்போரில் ஈடுபட்டிருக்கலாம். இது பற்றியும் இவர் ஒரு பரணி பாடுகிறார்; ஆனால் காலத்தில் பின்னால் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. குலோத்துங்கனுடைய வடகலிங்கப்போர் சுமார் 1112இல் நடந்திருக்கும். உடன்காலத்தில் சயங்கொண்டார் அதை ஒரு பரணியாகப் பாடினார். இக்குலோத்துங்கன் காலத்தில் (1077) ஒரு பெரிய தூது கோஷ்டி சீன நாடு சென்றது.

இம்மன்னன் இளவரசாயிருந்தபோது, தன் மாமன் வீர சோழியத்தில் சிறப்பிக்கப் பெற்ற வீரராசேந்திரன் காலத்தில் (1068) கடார நாடு (மலாயா) சென்று போர்புரிந்து வெற்றி பெற்றிருக்கிறான். இவனால் உதவப்பெற்ற கடார மன்னன் நாகப்பட்டினத்தில் ஒரு புத்த விகாரம் அமைத்தான்; அதற்குக் குலோத்துங்கன் சில நிபந்தங்கள் அளித்தான். மேலும் இவனுக்குக் கம்போடியா, பர்மா, கன்னோசி முதலான நாடுகளோடு தொடர்பு இருந்தது. தன்நாட்டில் சுங்கவரியை நீக்கினான்; ‘மனு முதலோர் நாளில் தவிராத சுங்கம் தவிர்த்தோன்’ என்று ஒட்டக்கூத்தர் இவனைப் பாடுகிறார். நாடு முழுமையும் இவன் காலத்தில் நிலம் அளக்கப் பெற்றது. இவன் சிறந்த சைவன்; திருநீற்றுச் சோழன் என்று போற்றப் பெற்றான்; வைணவ பௌத்த சைனக் கோயில்களுக்கும் நிபந்தங்கள் அளித்திருக்கிறான். இன்றைய இராசமன்னார்குடி இராசகோபாலசாமி கோயில் குலோத்துங்க சோழ விண்ணகரம் என்ற பெயரால் இவன் கட்டியது. இவன் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் கீழைச்சாளுக்கிய நாட்டுக்குரிய தெலுங்கு மொழியிலும், வல்லவன். இசைத்தமிழ் நூல் ஒன்று செய்தான். இதைச் சயங்கொண்டார், சோழ குல சேகரன் வகுத்த இசை என்று குறிப்பிட்டு,

தாளமும் செலவும் பிழையாவகை
  தான்வகுத்தன தன்னெதிர் பாடியே
காளமும் களிறும் பெறுபாணர்தம்
  கல்வி யிற்பிழை கண்டனன் கேட்கவே* 325

* ஆசிரியருடைய கருத்து, குலோத்துங்கன் தமிழ்க் கல்வியில் பெரிதும் வல்லவன், பாணர் பாடலில் பிழையைக் காணும் திறன் உடையவன் என்பதாகும். இப்படியே குலோத்துங்கசோழன் கோவையுடையார், ‘பாவனைத்தும் கோதே பிரித்தெறி கோமான்’ என்றும், ‘உரை வாணர் தங்கள் நவைகாணின் மாற்றும் குமார குலோத்துங்கன்’ என்றும் மூன்றாம் குலோத்துங்கனைக் கூறியிருப்பதும் இங்கு அறியத்தக்கது

என்று குறிப்பிடுகிறார். இவன் செய்த இசையைப் பாணர் பாடி வந்ததோடன்றி, இவன் தேவியருள் ஒருத்தியாகிய ஏழிசை வல்லபியும் பாடி இசை வளர்த்தாள்:

வாழி சோழ குலசேகரன் வகுத்த இசையின்
மதுர வாரி எனலாகும் இசைமாது அரிது எனா,
ஏழுபார் உலகொடு ஏழ்இசை வளர்க்க உரியாள்
யானை மீது பிரியாது உடன் இருந்து வரவே. 286

இவன் அவையை அலங்கரித்த புலவர்களுள் ஒருவரான திருநாராயணபட்டர், இவன் வீர வரலாற்றைக் குலோத்துங்க சோழ சரிதை என்று ஒரு காப்பியமாகப் புனைந்தார். இவனுக்குப் பிள்ளைகள் பலர்; விக்கிரமசோழனே அடுத்து முடிபுனைகிறான். பெண்கள் சுத்தமல்லி ஆழ்வார், அம்மங்கையாழ்வார் என இருவர்; அம்மங்கை மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்கூட (1184வரை) உயிர் வாழ்ந்திருக்கிறாள். இவனுடைய சகோதரிகள் குந்தவையாழ்வார் மதுராந்தகியாழ்வார் என்போர். கலிங்கப் போர் வென்ற கருணாகரத் தொண்டைமான், மணவிற்கூத்தன், காலிங்கராயன், வாணகோவரையன், வச்சராயன், மூவேந்த வேளான் முதலியோர் இவனுடைய படைத்தலைவராயிருந்தனர்.

குலோத்துங்கன் காலத்தில் போர்கள் நிகழ்ந்தபோதிலும் கூட, அவை சோழநாட்டுக்கு வெளியில் நிகழ்ந்தவை. நாட்டுக்குள் அமைதியே நிலவிற்று. இவ்வமைதி அடுத்து முறையாக ஆட்சிபுரிந்த விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன் ஆகியோர் காலங்களிலும் தொடர்பாக நிலவிற்று. இது இக் காலப் பகுதியில் சோழ நாடும் தமிழ் நாடும் எல்லாத் துறைகளிலும் முன்னேற இடமளித்தது. விக்கிரம சோழன் தில்லையில் திருப்பணிகள் பல செய்தான். ஒட்டக்கூத்தரை அவைப் புலவராக்கிச் சிறப்புச் செய்தான். இவன் படைத் தலைவர் பலர். இவன் காலத்தில் அனாதைகள் சாலை, மருத்துவம் இலக்கணம் கற்போருக்கு உணவுச்சாலை முதலான தருமங்கள் நடைபெற்றன. ஒட்டக்கூத்தரிடம் உலாவும் பரணியும் பெற்றான். இவனைக் குறித்த ஏனைய செய்திகள் இந்நூலகத்தே சொல்லப்பட்டுள்ளன.

இரண்டாம் குலோத்துங்கன் காலம் பின்னும் சிறப்புடையது. இவன் ஒட்டக்கூத்தரிடம் உலாவும் பிள்ளைத் தமிழும்

கொண்டான். சேக்கிழாரை அமைச்சராக்கிப் பெரிய புராணம் பாடுவித்து அதைப் பன்னிரண்டாம் திருமுறையாக்கினான். தில்லைத் திருப்பணிகள் அளவின்றிச் செய்தான். சிறந்த கலா விநோதனாய் வாழ்ந்தான். அசுவ சாத்திரம் இசைநூல் முதலிய வற்றில் வல்லவன். தண்டியாசிரியரும் இவன் ஆதரவு பெற்ற புலவர்.

அடுத்த இரண்டாம் இராசராசன் காலத்திலும் ஒட்டக் கூத்தர் வாழ்ந்து அவனைச் சிறப்பித்து உலாவும் தக்கயாகப் பரணியும் பாடினார். இன்றைய தாராசுரம் என்ற இராசராச மாபுரப் பெருங்கோயிலை இவன் கட்டினான். வேறெங்குமே காணப்படாத சிற்பச் சிறப்புக்கள் இக்கோயிலில் உள்ளன. இவன் முத்தமிழ் வல்லவன். தன் தந்தை காலத்தில் திருமால் சமயத்துக்கு ஏற்பட்டிருந்த இன்னல்களைப் போக்கியமையால். 'விழுந்த அரி சமயத்தை மீள எடுத்தான்' என்று சொல்லப் பெறுகிறான்.

இரண்டாம் இராசாதிராசன் (1163 - 1178) காலத்தில், பாண்டி நாட்டில் தாயத்தார் பூசல் மிகவும் அதிகம். அவற்றுள் ஒரு பிரிவினனுக்கு இம்மன்னன் உதவிசெய்து தன் படைத்தலை வரைப் பாண்டியனுக்கு இன்னல் விளைவித்த சிங்கள மன்னனை அடக்கும் பொருட்டு, ஈழ நாட்டுக்கும் அனுப்பிப் போரில் வெற்றிபெறச் செய்தான். பிற்காலத்தில் சோழர்களில் இவனுக் குக் கரிகாலச்சோழன் என்ற பெயரும் வழங்கியது. இவனுடைய படைத்தலைவர் பலர். இலக்கியத்துறையில் இவனைக் குறித்துச் சிறப்பாக எதுவும் தெரியவில்லை.

மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178 - 1218) அடுத்த நூற்றாண்டிலும் சிலகாலம் மிக்க பராக்கிரமத்தோடு ஆட்சி புரிந்தவன். இவன் ஆட்சியின் பெருஞ்சிறப்பு, இன்றைய திரு புவனத்தில் இவன் கட்டிய திருபுவனப் பெருங்கோயில்; இது சரபமூர்த்தி கோயில்; தமிழ்நாட்டில் வேறெங்கும் இல்லாதது. இவன் காலத்தில் எண்ணற்ற போர்கள். இணையற்ற வீரனாக இவன் இருந்தபடியால், நாட்டைக் குலையாது தொகுத்து ஆட்சி புரிந்தான். தன் போர்களில் தனக்குத் தெய்வபலம் வேண்டு மென்பதற்காக, உக்கிர மூர்த்தியாகிய சரபமூர்த்திக்குப் பெருங் கோயில் கட்டி வழிபட்டான் போலும். இவனுக்குப் பின் நாடு சீர்குலைந்து விட்டது. இவன், இத்தனைப் போர்களுக் கிடை யிலும் பெரும்புலவனாயும் வாழ்ந்தான். குலோத்துங்க சோழன்

கோவை இவனைப் புகழ்வது.* 'திரிபுவன வீரதேவன்' என்ற பட்டமுடைய இவன் காலத்தில் குணவீரபண்டிதர் வாழ்ந்து இலக்கண நூல்கள் செய்தார். அடுத்த நூற்றாண்டில் இவன் ஆதரவில் மகாபாரதம் தமிழில் எழுதப்பெற்றது.* பவணந்தி முனிவர் இவனுடைய படைத்தலைவன் ஆதரவில் வாழ்ந்து நன்னூல் செய்தார்.* இவன் காலத்திலும் நாடு முழுவதும் அளக்கப் பெற்றது.

தமிழ்நாட்டு வரலாற்றில் இச்சோழர் ஆட்சிக்காலமே மிகச் சிறந்த ஒரு பொற்காலம் என்பதைப் புலப்படுத்தவே இந்நூற்றாண்டில் வாழ்ந்த சோழர் வரலாறு இங்கு இந்த அளவு உரைக்கப்பட்டது. சங்ககாலம் என்று சொல்லுகின்ற காலத்தில் மதுரையில் பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தது உண்மையே. ஆனால் களப்பிரர் ஆட்சியில் அவையெல்லாம் ஒடுங்கிய பின்னர், தமிழை வளர்த்தவர்களும் நாட்டை வளர்த்தவர்களும் சமயத்தை வளர்த்தவர்களும் தமிழர் நாகரிகத்தைப் பேணியவர்களும், சோழமன்னரே. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரை (845 - 1275), நானூற்று முப்பது ஆண்டுக் காலத்தில் பெரும்பகுதி தமிழ்நாடு முழுமையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்து, உலக வரலாற்றில் தமிழர் என்றால் கோயிற் சிற்பத்தில் வல்லோர் என்று பெயர் வாங்குமாறு செய்தோர் சோழமன்னரே. பாண்டிய பல்லவ மரபினர் அந்தந்தச் சமயத்துக்கேற்றபடி பிறமதம் தழுவி வாழ்ந்தனர். அவர்கள் பரம்பரைகளில் சைவரும் உண்டு, வைணவரும் உண்டு, சைனரும் உண்டு; சேரர் வைணவராகவே இருந்து பின்னால் தனியே பிரிந்தும் விட்டனர். ஆனால் சோழர் மட்டும் சைவராகவே இருந்து வந்திருக்கிறார்கள். சோழ மரபினர் வேறு சமயம் தழுவியதில்லை; ஆனால் வேறு சமயங்களுக்கு ஆதரவு அளித்திருக்கிறார்கள்.

### பிற அரசுகள்

சோழ மன்னர் பேரரசர்களாய்த் தஞ்சையிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் இருந்து ஆட்சி செய்த காலத்தில் பிற முடிமன்னர் யாரும் சிறப்பாக ஆட்சி புரியவில்லை. பல்லவ

---

* இது பாடப்பெற்ற காலம் கி.பி. 1210. இது பற்றிய செய்திகளையும் இக்குலோத்துங்கன் வரலாற்றையும் 13ஆம் நூற்றாண்டு வரலாற்றில் காணலாம்.

ஆட்சி 9ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே முடிந்துவிட்டது. அந்த நூற்றாண்டின் இறுதியில் திருப்புறம்புயப் போரில் ஆதித்த சோழனுக்குத் துணையாக வரகுண பாண்டியனோடு போர் செய்யவந்த அபராசிதவர்ம பல்லவனோடு பல்லவராட்சி முடிவடைந்து விட்டது. அடுத்த நூற்றாண்டுகளில் பல்லவர் ஆட்சியே இல்லை. 12ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டில் நடைபெற்றது சோழர் ஆட்சியே. அதுபற்றித்தான் தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் இருந்த சேக்கிழாரை இரண்டாம் குலோத்துங்க சோழன் தன் தலைநகருக்கு வருவித்துத் தனக்கு அமைச்சராக்கிக் கொள்ள இயன்றது.

இவர்கள் போலவே பாண்டிய மரபிலும் நாம் கருதும் நூற்றாண்டுப் பகுதியில் சிறப்பான பாண்டியர் எவரும் ஆட்சி புரியவில்லை. அவர்கள் ஐந்து கொத்தாராக இருந்து ஆட்சி புரிந்தார்கள் என்று கலிங்கத்துப் பரணியாலும் முதல் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியாலும் அறிகிறோம். இருப்பினும், பின்வரும் பாண்டியர் பல இடங்களில் இருந்து ஆட்சி புரிந்தனர் என்று மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் கிடைக்கின்ற அவர்களுடைய கல்வெட்டுக்களாலும் மெய்க்கீர்த்திகளாலும் அறிகிறோம். சடையவர்மன் சீவல்லபன், மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் பராந்தகன், மாறவர்மன் சீவல்லபன், சடையவர்மன் குலசேகரன், சடையவமன் வீர பாண்டியன், மாறவர்மன் விக்கிரமன் என்போர் குறிப்பிடத்தக்கார்.* சோழப் பேரரசர்களான முதல் குலோத்துங்கன் தொடங்கி இரண்டாம் இராசாதிராசன் வரையில் இவர்களுடைய வலிமை முழுமையும் ஒடுங்கியிருந்தது. சில சமயம் இவர்களில் சிலர் சேரனுக்குத் திறை செலுத்தியும் வந்தனர். 1178இல் முடிபுனைந்த மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பாண்டிய அரசர்களுக்குள்ளேயே பூசல் அதிகமாக நிகழ்ந்தது. குலோத்துங்கன் கி. பி. 1180இல் சேரன் உதவியோடு தன்னை எதிர்த்த வீரபாண்டியனை வெற்றி கொண்டான். அக்காலம் குலோத்துங்கன் ஒப்பற்ற வீரனாக விளங்கினான். இவன் 1190இல் முடிசூடிய சடையவர்மன் குலசேகரனுக்குப் பேராதரவு அளித்திருந்தான். இக்குலசேகரன் சில ஆண்டுகளில் மனம் மாறி எக்காரணத்தினாலோ சோழன் மீது பெரும்போர் செய்தான். பெருவீரனாயிருந்த குலோத்துங்

* பாண்டியர் வரலாறு, சதாசிவ பாண்டாரத்தார்.

கன், தன்னோடு நன்றி மறந்து போரிட்ட இக்குலசேகரனை வென்றதோடு அமையாது பாண்டிநாட்டின் தலைநகரான மதுரையையே அழித்தான். பாண்டி மண்டலத்துக்குச் சோழ பாண்டியன் மண்டலம் என்றும், மதுரை நகருக்கு முடித்தலை கொண்ட சோழபுரம் என்றும் பாண்டியர் கொலு மண்டபத்துக்குச் சேர பாண்டியர் தம்பிரான் என்றும் பெயரிட்டான். மதுரையில் தங்கித் திரிபுவன வீரதேவன் என்று பெயர் புனைந்து விசயாபிடேகம், வீராபிடேகம் செய்து கொண்டான். இவன் ஆலவாய்ப் பெருமானடிகளுக்கு அளவற்ற திருப்பணிகள் செய்த போதிலும்கூட, இவன் மதுரையை அழித்த செய்தி சோழர் வரலாற்றில் அவமானம் தரத்தக்க செய்தியாகும். இதற்கும் பலன் இல்லாமல் போகவில்லை. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் அவனுடைய இணையற்ற பேராண்மை காரணமாய்ச் சோழ நாடு குலையாமல் இருந்தபோதிலும், மிகவும் பலவீனனாகிய அவனுடைய மகன் மூன்றாம் இராசராசன் காலத்தில் குலைந்தது. சுந்தர பாண்டியன் அப்பகைமையை மனத்திற்கொண்டு பெரும் படையெடுத்து வந்து சோழ நாட்டை அழித்தான். சோழரின் தலைநகரங்களான, தஞ்சை, உறையூர், பழையாறை ஆகிய பெருநகரங்களை அடியோடு அழித்துவிட்டான். கடியலூர் உருத்திரங்கண்ணனார் கரிகாற்பெருவளத்தானிடம் பட்டினப் பாலைக்குப் பரிசிலாகப் பெற்ற பதினாறுகால் மண்டபம் ஒன்றுமே அழியாமல் நின்றது என்று திருவெள்ளறைக் கல்வெட்டுக் கூறுகிறது. சுந்தர பாண்டியனால் ஏற்பட்ட அழிவு (1219) சோழநாடு என்றுமே கண்டிராத அழிவு. இவ்விரண்டு அழிவுகளாலும் நாம் அறிய வேண்டியது ஒன்று. களப்பிரரால் அழிக்கப் பட்டவைப் போக எஞ்சிநின்ற தமிழ்நூல்கள் மதுரையிலும் சோழநாட்டிலும் இருந்து இவ்விரு போர்களாலும் பெரும் பகுதி அழிவுண்டன என்று கருதவேண்டும்.

## சைவ இலக்கியம்

இந்த நூற்றாண்டினுடைய பெருஞ்சிறப்பு, சேக்கிழார் பெரியபுராணம் பாடிய அருஞ்செய்தி. இது எக்காலத்திலும் எந்நாட்டிலுமில்லா ஓர் அரிய பக்திச்சாசனம். கவிதையில் அமைந்தது, பெருநூல், காப்பியத் தன்மையுடையது; பன்னிரண்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றது. இந்த நூற்றாண்டில் விரிவான பெரிய காவியம் எழவில்லையே என்ற குறையை இது போக்குவது. அமைச்சராயிருந்த தன்மையினால் சேக்கிழார்

தாம் பாடிய வரலாறுகளுக்குரிய ஆதாரங்களைத் தொகுத்தும் ஆராய்ந்தும் விரிவாக நூலமைக்க முடிந்தது. சுந்தரமூர்த்தி சுவாமி களுடைய குறிப்பு என்ற வரையறைக்குள் பாடியதால், திருவாத வூரடிகள் ஆகிய சமயாசாரியர், திருவிசைப்பாவுடையார் போன்ற அடியார், ஒப்பற்ற சமயப் பணிபுரிந்த செம்பியன் மாதேவியார் போன்ற அரசியார் வரலாறுகளைச் சேக்கிழார் பாடவில்லை. இனி, இவர்தம் நூல் சைவப் பெருங்காப்பியமாய் அமைந்தது போல, சாத்திரங்களாய் அமைந்தனவும் இக்காலத்தில் மூன்று நூல்கள் உள்ளன: திரு உந்தியார், திருக்களிற்றுப்படியார், ஞானா மிர்தம் என்பன; முதல் இரண்டும் ஒரு சூழலிலும், மற்றது வேறு சூழ்நிலையிலும் தோன்றின. இவையன்றி, பிரபந்தங்களாகப் பல்வேறு நிலையில் பலநூல்கள் தோன்றியிருக்கின்றன. இரண் டாம் இராசராசன் ஆதரவில் ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி ஒரு சிறந்த சைவப் பிரபந்தம்; வீரபத்திரருடைய புகழைக் கூறுவது. அபூர்த்தியாய்க் கிடைக்கிற தில்லையுலாவும் மிகச் சிறந்த ஒரு சைவப்பிரபந்தம்; சிறிதும் ஆட்சியில் இல்லாதது. பெரிதும் ஆட்சியில் இருந்துவந்த திருப்புகலூரந்தாதி மற்றொரு முக்கியமான பிரபந்தமாகும்.

இங்கு காட்டிய நூல்கள் யாவுமே ஒரு கருத்தைத் தோற்று விக்கின்றன. பொதுவாகப் புலவர் என்றால் வறுமையின் சின் னம் என்ற நினைவுதான் சங்ககாலம் முதல் இன்று வாழ்ந்த பாரதிவரையில் நம் மனத்தில் எழுவது. ஆனால் இத்தலைப்பில் நாம் கூறிய புலவர் அப்படி வறுமையை அறிந்தவர் அல்லர். சேக்கிழார் பேரமைச்சர். சக்கரவர்த்தியே அவருக்குக் கவரி வீசி னான். ஒட்டக்கூத்தர் மூன்று சக்ரவர்த்திகளால் போற்றப்பெற்று சிறப்பாக வாழ்ந்தவர். நெற்குன்றவாணர் தாமே பெருஞ்செல்வர்.

### வைணவ இலக்கியம்

இந்த நூற்றாண்டு, வைணவ மரபில் சிறப்பு வாய்ந்த ஒரு பகுதி. இதன் முதல் 37 ஆண்டுகள் வரை இராமானுசர் இருக் கிறார். இக்காலப் பகுதியில் குலோத்துங்கன் தில்லைக்கோவிந்த ராசரைப் பெயர்த்துக் கடலில் போடச்செய்தான் என்று இரா மானுசார்ய திவ்விய சரிதை கூறும் (ஆண்டு 1127இல்). இக்காலம் குலோத்துங்கன் இளவரசாயிருந்த காலம்.* இராமானுசருக்குப்

* தில்லையுலா ஆராய்ச்சியில் இது விரிவாக ஆராயப்பெறுகிறது.

பல இன்னல்கள் விளைந்தது என்பதில் சிறிது உண்மை இருக் கவே செய்யும். இது ஒருபுறமிருக்க , வைணவருடைய தினசரி ஒழுக்கத்தையும் ஆலய வழிபாட்டு முறைகளையும் இராமானு சர் ஒழுங்குபடுத்தியது இந்நூற்றாண்டில் நிகழ்ந்த முக்கியமான செயல். இதில் சிறப்பான ஓர் அம்சம், நித்தியானு சந்தானம் என்று பெயரில் அவர் நாலாயிரத்தினின்றும் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை எல்லா வைணவர்களும் நாள் தவ றாமல் ஓதவேண்டும் என்று நியமித்ததும், அதுபோலவே திரு வரங்கம் முதலான எல்லாத் திருமால் ஆலயங்களிலும், இன் னின்ன காலங்களில் இன்ன பாசுரங்களைச் சேவிக்க வேண்டும் என்று நியமித்ததுமாகும். இந்த நியமனங்களால் நாலாயிரப் பிர பந்தங்கள் வைணவருடைய குடும்ப வாழ்க்கையில்கூடப் புகுந்து, அனுபவிக்கத்தக்க பொருளாகி விட்டன. இந்தச் சிறப்பு, சொல்லப் போனால், உலக வரலாற்றிலேயே வேறெந்தச் சமய இலக்கியத் துக்கும் இல்லாத ஒரு மேலான வாய்ப்பாகும்.

இதுவன்றியும் மற்றொரு நிலைமை குறிப்பிடத்தகும். நம் மாழ்வார் - மதுரகவிக்குப் பின்னர்த் தோன்றிய வைணவ ஆசிரி யர் அனைவரும், இராமானுசர் உள்பட, வடமொழியொன்றி லேயே நூல் செய்தார்கள். தமிழ்ப் பிரபந்தங்களை இவர்கள் அரும் பாடுபட்டு ஆட்சிக்குக் கொண்டுவந்த போதிலும், இவர்கள் தமிழில் ஒரு சொல் எழுதியவர்கள் அல்லர். இராமானுசரை யடுத்து இந்த நிலைமை மாறுகிறது திருவரங்கத்தமுதனார், இராமானுசர் புகழாக முதல்முதல் ஒரு தமிழ்நூல் செய்கிறார்: இதுவே சிறந்த பக்தி நூலாகிய இராமானுச நூற்றந்தாதியாகும். இவரைப்போலவே, இராமானுசரால் ஆட்கொள்ளப்பெற்ற அருளாளப் பெருமாள் எம்பெருமானார் என்ற அடியவர், விஞ் ஞான சாரம், பிரமேயசாரம் என்ற இரு சிறு சாத்திரநூல்கள் செய்தார். இந்த மூன்று நூல்களையுமே இராமானுசர் பார்த்து அங்கீகரித்தர் என்பது வரலாறு. இவைமூன்றும், அன்றுமுதல் வைணவருடைய தினசரிப் பாராயணத்துக்கு (தென்கலை நித்தி யானுசந்தானத்துக்கு) உரியனவாகச் சேர்க்கப்பட்டன என்றால், இவற்றின் பெருமைக்கு வேறு சொல்வது மிகை.

மற்றொரு சிறப்பும் வைணவத்தில் உண்டு. முதல் மணிப் பிரவாள நூல் இந்நூற்றாண்டில் செய்யப்பட்டது. இராமானு சர் உத்தரவின்படி, திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஆறாயிரம் கிரந்த அளவில் திருவாய்மொழிக்கு வடமொழியும் தமிழும்

கலந்த உரைநடையில் முதல்முதல் ஒரு வியாக்கியானம் எழுதி னார். இது பின்னால் 9, 24, 36, 12 ஆயிரப்படி என்றெல்லாம் வளர இடங்கொடுத்தது.

இவ்விதமாக, இந்த நூற்றாண்டில் வைணவ சமயம் இலக் கியத் துறையிலும் ஒரு புதுமலர்ச்சிபெற்று வளர்வதைக் காண் கிறோம்.

## சைன இலக்கியம்

சைன சமயத்தார் கிறிஸ்து அப்தத் தொடக்கம் முதல் தமிழ்நூல் செய்துகொண்டே வந்திருக்கிறார்கள். நூற்றாண்டு தோறும் அவர்கள் செய்த நூல்கள் கிடைக்கின்றன. காப்பியம், நீதிநூல், இலக்கணம், இலக்கண இலக்கிய உரை என்ற முறையில் மூன்றாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினாறாம் நூற்றாண்டு வரை அவர்கள் நூல் செய்திருக்கிறார்கள். சில சமயம் சிறப்பு டைய பேரிலக்கியங்கள், சில சமயம் சிறப்புடைய நீதி நூல்கள், பல சமயம் சிறந்த இலக்கண நூல்கள், உரைகள் - இவ்வாறு அவர்களுடைய நூல்கள் தோன்றியுள்ளன. எனினும், சமய தத்துவ விளக்கமாக மட்டும் அவர்கள் தமிழில் எழுதிய நூல்கள் மிகவும் குறைவு. சமயத்தைப் பெருநூல்களில் போதித்து வந்தார்களே யன்றி, தனிச்சமய நூலாக அவர்கள் எழுதவில்லை. பத்தாம் நூற்றாண்டில் அவர்கள் செய்த நீலகேசி ஒரு சமயவாத நூல்; குண்டலகேசி என்ற புத்தசமய நூலைக் கண்டிக்கவென்றே எழுந்தது; தன் சமய விளக்கமாக எழவில்லை; ஆனால் நாம் கருதும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தான் அவர்களுடைய சமயநூலாக ஒரு தனிநூல் எழுந்தது. இது சிறு நூலாயினும், சைன தருமங்களை உணர்த்துவதற்கென்றே வந்த நூல். இதற்கு மூலம் வடமொழி என்று சொன்ன போதிலுங்கூட, தமிழில் இதற்குத் தனிச் சிறப்பு உண்டு. இதையன்றி உரையில் செய்யப் பெற்ற வேறெந்த நூலும் இக்காலத்தில் எழவில்லை . எப்படியோ சோழப் பேரரசரிடம் சைவ சமயத்துக்கு இருந்த பேராதரவு, பிற சமயத்தார் நூல் செய்யவும் நினைக்காதபடி தடுத்துவிட்டது போலும்.

## பௌத்த இலக்கியம்

கொஞ்ச காலமேனும் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த சைன சமயத்தின் நிலைமை இதுவென்றால், என்றுமே தமிழ்

நாட்டில் அரசியல் ஆதிக்கம் பெற்றிராத பௌத்த சமயம் ஓங்காததில் வியப்பில்லை. அன்றியும் நீலகேசியைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, சைனர் தம் அரசியல் ஆதிக்கத்தைப் பயன்படுத்திப் பௌத்தரை வன்மையாக ஒடுக்கினார்கள் என்று காண்கிறோம். சோழமன்னர் பலரும் பௌத்தருக்குப் பலவகையாலும் நிபந்தங்கள் மூலம் உதவியளித்திருக்கிறார்கள். இருந்தும், பௌத்தம் முழுமையும் ஒடுங்கிவிட்டது. சுமார் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கருதத்தக்க மணிமேகலையொன்று தவிர, வேறு பௌத்த சமயநூல் எதுவுமே இல்லை; பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய குண்டலகேசி இறந்தே போயிற்று; அடுத்த நூற்றாண்டில் வீரசோழியம் என்ற ஓர் ஐந்திலக்கண நூல் பௌத்தர் ஒருவரால் செய்யப்பட்டது என்பதே பெரும் வியப்புக்கிடமான பொருள். இதற்கும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ஒரு சைவர் உரை எழுதினார். இவைபோக இலக்கியத்துறையில் பௌத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

**இலக்கண வளர்ச்சி**

ஐந்திலக்கணம் என்ற கருத்து இந்த நூற்றாண்டுக்கு முன்னமே எழுந்த வீரசோழியத்தின் மூலம் உருவாகிவிட்டது. ஐந்தாம் பகுதியாகிய அணிக்கு இந்த நூற்றாண்டில் தான் தண்டியலங்காரமாகிய தனி இலக்கணம் தோன்றுகிறது. இதன் ஆசிரியர் வடமொழி அலங்கார சாஸ்திரத்தின் வழியே தம் நூல் செய்வதால், வடமொழிக்கு இருந்த செல்வாக்கு நன்கு புலனாகும்; வீரசோழியக்காரரும் 11ஆம் நூற்றாண்டில், தண்டி சொன்ன நூலின்படியே தாமும் அணியதிகாரம் செய்வதாகச் சொல்வதும் இங்கு கருதத்தக்கது.

‘தொல்காப்பியக் கடலின் சொல் தீபச் சுற்றளக்கப் பல்காற் கொண்டோட்டும் படகு’ ஆக,* குணவீரபண்டிதர் இந்நூற்றாண்டில், நேமிநாதம் என்ற இலக்கண நூல் செய்தார். இதில் ஒரு பொருத்தம் இங்கு சிந்தித்தற்குரியது. பெண்டிரை இழித்தொதுக்கிய திகம்பர சைனர் மதுரையில், மூன்று நூற்றாண்டுகள் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில், பெண்ணைச் சிறப்பித்துப் பேசும் தொல்காப்பியப் பொருளதிகாரம் வீழ்ச்சியுற்றது. இத

* இப்பாடலை இந்நூலில் காண்க.

னோடு ஏனைய எழுத்தும் சொல்லுங்கூட, சிறப்புக் குன்றியிருந் தன. இந்த நிலையில் தான் அரசனுடைய கவற்சியைப் போக்கும் பொருட்டு, எட்டாம் நூற்றாண்டில் பொருளில் சிறப்பான கள வியல் மட்டும் செய்து தரப்பட்டது. 11ஆம் நூற்றாண்டில் தான் பக்குவமான உள்ளம் படைத்த இளம்பூரணர் தொல்காப்பியத் தைப் புதிதாகக் கண்டுபிடித்து உரை வகுத்து, ஆட்சிக்குக் கொண்டு வருகிறார்; இவரே சைனர் என்பதும் இதன் விசித்திர மான நிலை. தொல்காப்பியத்தின் பெரும்பகுதியான அகத்துக் கும் புறத்துக்கும் விளக்கமாக, தமிழ்நெறி விளக்கம் என்ற அகப் பொருள் நூலும் புறப்பொருள் வெண்பாமாலை என்ற புறப் பொருள் இலக்கண நூலும் தோன்றிவிட்டன: எழுத்தும் சொல் லும் பற்றிய தனியான நூல் தோன்றவில்லை. ஒருகால் இந்தக் குறையை நீக்கவே, குணவீரபண்டிதர் திட்டமிட்டுத் தம் நேமி நாதம் செய்தார் என்று எண்ணும்படியுள்ளது; தொல்காப்பியக் கடலையளக்கும் படகு என்று இச்சிறு நூல் சொல்லப்பெற்றி ருப்பதும் இதை நன்கு உணர்த்தும். மற்றொரு சிறப்பான நூல், இதே ஆசிரியர் செய்த வச்சணந்திமாலை என்ற வெண்பாப் பாட்டியல் நூலாகும். 8 - 9 நூற்றாண்டுகளில் கடல்போன்ற ஒரு பாட்டியல் நூற்பரப்பு ஏற்பட்டிருந்தது. என்ன காரணத்தி னாலோ அக்கடல் முழுமையுமே பத்தாம் நூற்றாண்டில் வற்றி விட்டது; நூல் ஒன்றும் இல்லை. கிடைத்த அல்லது தம் நினை வில் வந்த பாட்டியற் சூத்திரப் பகுதிகளையெல்லாம் பன்னிரு பாட்டியலுடையார் தொகுத்து வைத்தார். அடுத்த நூற்றாண் டில் குணவீர பண்டிதர், இந்த நிலைமைகளை நன்குணர்ந்து, நூல்கள் இறந்துபோனமையும் கருத்தில் கொண்டு, புதிதாக வெண்பா யாப்பில் அந்தாதியாக ஒரு பாட்டியல் செய்தார். அந் தாதியாகச் செய்தமையால், கற்போர் நினைவில் நூல் தங்கி, முந்தைய நூல்கள்போல அழிந்துபோகாது என்று கருதினார் போலும். இந்தச் சிறுநூல் இன்றுவரையில் கல்வியாளர் விரும் பிப் பயிலும் நூலாகப் புகழோடு விளங்குகிறது. பிற்காலத்தில் இவ்விலக்கண நூல்கள் அனைத்துக்குமே சிறப்புடைய உரை கள் செய்யப்பெற்றன.

## உரை நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிகவும் சிறப் பான இடம் உண்டு. அந்த முறையில் இந்த நூற்றாண்டில் எல்லா வகையாலும் சிறப்பு வாய்ந்த மூன்று உரைகள் தோன்றி

யிருக்கக் காண்கிறோம். முதலாவது சொல்லத்தக்கது, பதினொ ராம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய வீரசோழியம் என்ற ஐந்திலக்கண நூலுக்கு, அந்நூலாசிரியரின் மாணாக்கராகிய பெருந்தேவனார் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்த உரையாகும். பெருந்தேவனார் சைவர், (பெருந்தேவர், மகாதேவர் - சிவபெருமான்) ஆசிரியர் பௌத்தர்; சமயக் காழ்ப்பு எதுவும் இல்லாது இலக்கிய இலக்கண ஈடுபாடு ஒன்றே குறியாகக் கொண்டு, இந்த ஆசிரியரும் உரைகாரரும் வாழ்ந்திருக்கிறார் கள். இவ்வுரையாசிரியர் பெரும்புலவர். பல புத்த நூல்கள் இவ ரால் விளக்கமாகின்றன. ஆசிரியர் பௌத்தர் ஆனமையால், பல் பௌத்த சமயச் செய்திகளையும், பாடல்களையும் இவர் தேடி எடுத்துத் தருவது இவருடைய பெருந்தன்மையைக் காட்டு கின்றது. இப்பாடல்களில் நெஞ்சத்தை அள்ளும் பாடல்களும் உள்ளன. சைவத் திருமுறைப் பாடல்களையும் இவர் எடுத்துக் காட்டுவது இவருடைய தனிச்சிறப்பு. திருமாலையும் குறை வின்றிப் போற்றுகின்றார். இவருடைய உரை காலத்தின் கண் ணாடி என்று நாம் கருதுவோமானால், இவர் காலத்தில் சோழர் பேரரசில் இலக்கியத் துறையில் மட்டுமேனும் சமயப் பகைமை இல்லாத இன்பமயமான ஒரு கலைச் சூழ்நிலை இருந்தது என்று நாம் நன்கு உணரலாம்.

இலக்கியத் துறையைப் பார்த்தால் இரண்டு பேருரைகள் இக்காலத்திற்கு உரியனவாய்க் காண்கின்றோம். ஒன்று, பெயர் அறியப்படாத ஓர் ஆசிரியர் புறநானூற்றுக்கு எழுதிய அழகான இனிய உரை. மற்றது சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் செய்த பேருரை. இந்த இரண்டு மூல நூல்களும் ஓரளவிற்கு முழு நூல்களாக இன்று நமக்குக் கிடைக்கின்றன. இரண்டையும் தருபவர் ஐயரவர்கள். ஆனால் இரண்டின் உரைகளும் முழுமை யும் நமக்கு கிடைக்காதது நாம் செய்த பாவம். புறநானூற்று உரையாசிரியரைப்போல மூலத்தையொட்டிக் கண்டனம் இல் லாது அழகாக உரை எழுத யாருக்கும் வராது: அவரிடத்தில் உரை எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகாரப் பேருரையானது தமிழ்நாடே கண்டறியாத பெருமையுடையது. அதன் பெருமை முழுவதையும் பின்னே குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு கருத்தை மட்டும் இங்கு சொல்லி நிறுத்திக் கொள்கிறோம். அவர் காலத்

திற்கு முன்னமேயே முத்தமிழ் நூல்களும் இறந்துபோனமையைக் கண்டார். எஞ்சி உள்ளனவும் தம் காலத்தில் இறந்துபோய்க் கொண்டு வருவதையும் அறிந்தார். அறிந்தபோது மனத்தில் தோன்றிய பெரு வருத்தத்தினால், இயன்றவரையில் பிற்காலத்தாருக்கு அளிக்கவேண்டும் என்ற ஒரு பேர் உபகார எண்ணத்தினால் தம் நினைவில் நின்றவற்றையும், ஆராய்ந்து சேகரித்தவற்றையும் நமக்குத் தொகுத்து தருகிறார். இத்தகைய தொகுப்பு தமிழ் இலக்கிய உலகில் வேறெங்கும் காண்பதற்கில்லை. தமிழ் இலக்கியத்தின் விரிவையெல்லாம் ஒரு தொலைநோக்கி மூலம் காண்பதுபோல, முதலாவதாக இறையனார் களவியல் உரை நமக்குக் காட்டுகின்றது. ஒரு துணிக்கடைக்குள் புகுந்து துணி வாங்க வந்தவன் பல ரகங்களையும் பார்த்து வியந்து ஒன்றும் தோன்றாததுபோல, யாப்பருங்கலவிருத்தி, தமிழ் இலக்கிய இலக்கணப் பரப்பை நமக்குக் காட்டுகின்றது. அடியார்க்கு நல்லார் உரையானது ஒவ்வொன்றையும் கையில் எடுத்துப் பார்ப்பதுபோல, பொருளின் மென்மை, நயம், பொலிவு, ஆழம், அகலம் ஆகியவற்றை நமக்கு உணர்த்துகின்றது. என்ன சொல்லி என்ன பயன்? யாவற்றையும் இழந்துவிட்டோம்.

அடியார்க்கு நல்லார் நமக்கு உணர்த்தும் நிலை பெருந்தேவனார் காட்டுகின்ற நிலையே: சைவம், வைணவம், பௌத்தம், அருகம், முதலிய எல்லாச் சமயங்களும் கூடி வாழ்கின்ற ஒரு நிலை, இன்ப நிலை. இறையனார் களவியலுரையாசிரியர், யாப்பருங்கல விருத்தியுரைகாரர், அடியார்க்கு நல்லார் போன்ற பேராசிரியர்கள் ஒரு மொழியில் அடிக்கடி தோன்ற மாட்டார்கள்; ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருவர் தோன்றலாம் என்றால் உண்மை. நம் வருத்தத்துக்கிடையிலும், இவர்கள், 8, 11, 12 நூற்றாண்டுகளில் நெருங்கிய காலத்தில் வாழ்ந்து நூல் செய்தார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது.

### சிற்றிலக்கியம்

சிற்றிலக்கியம் என்று இக்காலத்தார் கூறுகின்ற பிரபந்த இலக்கியத்தின் வளர்ச்சி இந்த நூற்றாண்டில் மிகவும் சிறப்பித்துச் சொல்லத்தக்கது. இந்த வரலாற்று நூலின் தொடக்க நூலாக ஆராயப்பட்ட கலிங்கத்துப்பரணி, எக்காலத்துப் பிரபந்த இலக்கியங்களுள்ளும் தலையாயது. கவிதைச் சிறப்பினாலும் பொருட்பெருமையினாலும் வரலாற்று விளக்கத்தாலும் இதையொத்த

ஒரு பெருநூல் வேறு எழுந்ததில்லை, இனி எழுவதற்கும் இல்லை. உலா, பரணி, கோவை, பிள்ளைத்தமிழ், அந்தாதி, உந்தி முதலான பலவகைப் பிரபந்தங்கள் இக்காலத்தே எழுந்தன. யாவும் தத்தம் அளவில் பெருஞ் சிறப்புடையன. சாத்திரம் பாடவந்த உய்யவந்த தேவரும் தம் கருத்தை உந்தி என்ற பிரபந்த வகையாகப் பாடிவைத்தமை, பொதுவாக இவ்வகைப் பாடல்களில் இயல்பாகப் பொருந்தியுள்ள ஓர் அமைப்பு நயத்தைப் புலப்படுத்தும்.

உலாவைக் குறிப்பிட்டபோது ஒரு கருத்தைச் சொல்வதும் பொருத்தமாகலாம். ஆதியுலா திருக்கயிலாய ஞானஉலா (எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்). அங்கு உலா வருபவர் சிவபெருமான். அவர் சர்வ வியாபி, சர்வ சக்திமான், ஞானவடிவினர், அழகே திருமேனியாக உடைய சொக்கமூர்த்தி. உலா வருவதன் நோக்கம், உலகத்தார் அனைவரையும் ஆட்கொள்ளுதல்; ஆலயத்துட் சென்று வழிபடாதோருக்கும் காட்சிகொடுத்து அவர்கள் மனத்தையும் உருக்குவது திருவுலாவின் நோக்கம். ‘நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே - ஐயா நீ உலாப்போந்த அன்று முதல்’ என்ற கருவூர்த்தேவரின் திருவிசைப்பா, உலாவின் நோக்கத்தை உரைக்கிறது.

உலாவருவது பெருமானின் திருவுருவமாகிய செப்புத் திருமேனி. இந்தத் திருவுருவத்தைக் கண்டு எல்லோரும் காதல் கொள்ளுகிறார்கள். காதல் கொள்ளுபவர்கள் குழந்தை முதல் முதியவர் வரையில் உள்ள எல்லாப் பருவமகளிரும். இது உடற்காதல் அல்ல, உள்ளத்தில் பிறந்த, தெய்வத்தினிடம் கொண்ட பக்திக்காதல். இந்த பக்திக்காதலைக் கொள்ளுகிறவர்கள் பெண்கள் மட்டுமா? ஆடவர்கள் அனைவரும் கூட. ஆகவே, இறைவன் உலா வரும்போது ஏழு பருவமகளிரும் காதல் கொள்ளுகிறார்கள் என்றால், அங்கு தொனிப்பது நாயக நாயகி பாவம். ஆன்மாக்களாகிய நாயகிகள் தெய்வமாகிய தங்கள் நாயகன் மீது காதல் கொள்ளுகிறார்கள். ஆதி உலாவாகிய சேரமான் பெருமாள் செய்த உலா இந்த நிலையை உள்ளடக்கி இருக்கிறது. ஆகவேதான் அது ஞானஉலா எனவும் பெறுகிறது. அழகே வடிவமான பெருமான் உலாவர, எல்லோரும் அவனிடம் தம் நெஞ்சைப் பறிகொடுக்கிறார்கள். நெஞ்சைப் பறிகொடுப்பவள் நாயகியாகவே, ஒரு பெண்ணுக்குரிய மெய்ப்பாடுகள் யாவும் அவளுக்கேற்றிச் சொல்லப்படுகின்றன. இக்கூற்று, உலா வருப

வன் இறைவனாதலால் இயல்பாகவே அமைகிறது. இதுவே உலாவிற்கான பொருள் அமைதி. இதைக் கடவுள்மாட்டு மானிடர் நயந்த பக்கம் என்று சொல்லலாம். பிற்காலத்தில் தெய்வம் உலா வருவதாகப் பாடிய உலாப் பிரபந்தங்கள் அனைத்திற்கும் இக்கருத்தே பொருந்துவது.

ஆனால் இந்த நிலைமை மாறிவிடுகிறது. பன்னிரு பாட்டியல் ஆனாது, உலா என்ற தலைப்பில் 24 நூற்பாக்கள் கொடுக்கிறது. இங்கு ஒத்தகாமத்து இளையாள் வேட்கை, உரியான் ஒருவன், குடி நெறிமரபு கொளல் என்ற கருத்துக்களும், இவ்வுலாப் பாட்டிற்கு உரியார் வேந்தர் கடவுளர் விதிநூல் வழியுணர் மாந்தர் என்பதும், இது கூறுகிறது. இவற்றை ஊன்றி நோக்கும் போது, ஆதியில் இருந்த உலா பற்றிய கருத்துத் தாழ்வடைந்து விட்டது என்பது புலப்படும். இறைவன் உலா வரும்போது எந்தப் பெண்ணும் கண்டு காமுறலாம். அது ஒழுக்கத்தில் தவறன்று. மேற்குறித்தவாறு ஆடவரும் கண்டு காமுறலாம். ஆனால் இறைவனுக்குச் சொல்லிய உலாவை வேந்தர் - மாந்தருக்கு ஏற்றும் போது, பெரும்பிழை நேருகிறது. வேந்தரையோ மாந்தரையோ உலா வரக்கண்டு ஏழுபருவ மகளிரும் காதல் கொண்டார்கள் என்றால், இதில் பெரிய ஒழுக்கப் பிழையும், பண்பாட்டுப் பிழையும் நேரிடுகிறது. இதை நன்குணர்ந்தே ஆன்றோர்கள் இவ்வாறு காதல் கொண்டு அவசம் உறுபவர்கள் பொதுமகளிர் என்ற புதுக் கருத்தைச் சொன்னார்கள். இது நேர்ந்துவிட்ட ஒரு பிழைக்கு அமைதி காணுகின்ற முயற்சியே அன்றி, சிறப்புடைய ஒரு பொருள் அமைதி ஆகாது. இந்த வரலாற்று நிலையில் ஒட்டக் கூத்தருடைய உலாக்கள் எழுகின்றன. தெய்வத்திற்குச் சொல்லியதெல்லாம் தெய்வத்தின் உருவ வெளிப்பாடு ஆகிய சமயாசாரியருக்கும் பொருந்துமாதலால், சேரமான் உலாவிற்கு உரிய பொருத்தம் ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலைக்கும் பொருந்துவது ஆகும். கூத்தர் பாடிய மூவர் உலாக்களுக்கும் அந்த நிலை பொருந்தாது. ஆகவே, பொதுமகளிர் என்ற கருத்து இங்கு வருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மூவர் உலாவைத் தழுவிப் பிற்காலத்தில் உலகியல் தலைவர் மீது பாடப்பெற்ற அத்தனை உலாக்களுக்கும் நிலைமை இதுவே.*

* சென்னைக் கருத்தரங்கொன்றில் அ.ச. ஞானசம்பந்தமும் இக் கருத்தை வெளியிட்டார்.

பிற நூற்றாண்டுகளில் இலக்கியத்திற்குப் புறம்பாக கனா நூல், சோதிட நூல் போன்ற எவ்வகை நூலும் இந்த நூற்றாண்டில் எழுந்ததாகத் தெரியவில்லை.

### முத்தமிழ்

இதுபற்றிப் பிற இடங்களில் விரித்து எழுதியிருக்கிறோம். இயல் தமிழ் நூற்றாண்டு தோறும் வளர்ந்து வந்திருக்கிறது. இசைத்தமிழ் நாடகத்தமிழ் பற்றி அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் கணக்கற்ற செய்திகளைத் தருகிறார். ஆனால் அவர் குறிப்பிடும் நூல்களோ, வேறெந்த நூல்களுமோ, நமக்கு கிடைக்கவில்லை. இருப்பினும், இசையும் நாடகமும் பற்றிய இரண்டு குறிப்புக்களை இங்கு சொல்லலாம். முதல் குலோத்துங்க சோழனைக் குறிப்பிட்ட இடத்து அவன் சிறந்த இசைத்தமிழ் நூல் செய்தான் என்றும் அவனது இரண்டாம் தேவியாகிய இசையினாலே சிறப்புப்பெயர் பெற்ற ஏழிசை வல்லபியே அந்த இசையைப் பாடிவந்தாள் என்றும் குறிப்பிட்டோம். இது வரலாற்றிலேயே பெருஞ்சிறப்புடைய ஒரு செய்தி. இது சக்கரவர்த்தியாக இருந்த பேரரசனுடைய கலைத்திறமையை மிக உயர்ந்த நிலையில் வைத்துக் காட்டுகின்றது. உதயணன், சீவகன் முதலிய காப்பியக் கற்பனைத் தலைவர்கள் பெரும் இசைப் புலவர்களாக இருந்தார்கள் என்பது இயல்பிற்கு முரணல்ல என்று இது காட்கின்றது. இக்குலோத்துங்கனுடைய காலத்தில் வீரைத் தலைவன் பரசமய கோளரி மாமுனி என்ற புலவர் இவன் சரிதையை ஒரு நாடக நூலாகப் பாடியிருந்தார். அந்நாடகம் கோயிலில் நடிக்கப் பெற்றது. ஆனால், எத்தனையோ பெரு நூல்களைக் கைநெகிழவிட்ட தமிழர் தங்கள் இயல்புக்கு முரண் அல்லாதபடி, இந்த இசை நூலையும் நாடக நூலையும் கைநெகிழ விட்டு விட்டார்கள்.*

### சிறப்புக்கள்

இந்த நூற்றாண்டு, பல இலக்கியப் பிரிவுகளில் முதல் முதலாக நூல் தோற்றுவித்த பெருமையுடையது. பெரு நூலாக செல்வோமானால், முதல் புராணமாகிய பெரிய புராணம் இந்த நூற்றாண்டில் எழுந்தது. புராணம் என்ற பெயரால் இடைச் சங்கத்தில் பூத புராணம், மா புராணம் என்ற இரு இலக்கண நூல்கள்

* எமது பத்தாம் நூற்றாண்டு வரலாறு காண்க.

எழுந்திருந்தன என்றும், சாந்தி புராணம் என்ற ஒரு சைனப் புராணம் எட்டாம் நூற்றாண்டில் தோன்றிற்று என்றும் அறிகிறோம்; ஆனால் அந்நூல்கள் இன்று இல்லை. கிடைக்கிற புராணங்களுள் முதலாவது தோன்றிய புராணம், பெரிய புராணமே. இது போல. கிடைக்கிற பரணிப் பிரபந்தங்களுள் காலத்தால் முதல் பரணியாகிய சயங்கொண்டார் செய்த கலிங்கத்துப் பரணியும் இந்நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் தோன்றிற்று. அடுத்து, இன்றைய பிள்ளைத் தமிழுக்கான உறுப்புக்களைப் பெரியாழ்வார் முன்னமே பாடியிருந்தார்: பிரபந்தமாகப் பாடவில்லை. பிள்ளைத்தமிழ் என்ற பெயரும் ஒரு புதுவகை நூலுக்குப் பெயராகச் சூட்டப் பெறவில்லை. ஒட்டக்கூத்தர் முதல் முதலாக ஒரு பிள்ளைத் தமிழைப் பத்துப் பருவங்களாகப் பாடி அதற்குப் பிள்ளைத் தமிழ் என்ற பெயரும் சூட்டப்பெற்ற பெருமை இந்த நூற்றாண்டுக்கே உரியது. அவர் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே இவ்வகையில் முதல் நூலாகும் பெரியாழ்வார் தருகின்ற பல தலைப்புக்களிலும், ஏனைய நாலாயிரப் பிரபந்தத் தலைப்புக்கள் பலவற்றிலும், எப்படி இவர் இப்பத்துக்களை மட்டும் தேர்ந்து கொண்டார் என்பது வியப்பான ஒருசெய்தி. ஒருகால் பன்னிருபாட்டியல் இவருக்குத் துணைசெய்திருக்கக் கூடும்.

மற்றொன்று: முந்திய நூற்றாண்டுகளில் தெய்வத்தின் மீது உலாவும் அடியவர் மீது உலாவும் தோன்றியிருந்தன, முதன் முதலாக இந்த நூற்றாண்டில்தான் அரசர் மீது உலா தோன்றுகிறது. ஒட்டக் கூத்தர் சோழ மன்னர் மூவர் மீது மூவர் உலா பாடினார். தெய்வத்தை நோக்கியே சென்ற பிரபந்த அமைப்பும் இப்போது அரசரை நோக்கிச் செல்கிறது.* குறிப்பிடத்தக்க மற்றொரு பிரபந்தம் அம்பிகாபதி கோவையாகும். 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாண்டிக்கோவை, களவித் தலைவனோடு கூட, நெடுமாறனாகிய பாட்டுடைத் தலைவனையும் கொண்டது. அடுத்துத் தோன்றிய திருக்கோவையும் நடராசப் பெருமானாகிய பாட்டுடைத் தலைவனையுடையது. இந்த நூற்றாண்டில் தோன்றிய அம்பிகாபதி போவையில் பாட்டுடைத் தலைவன் இல்லாது பாடப்பெற்ற நூல்; 'அறியேன் சொற்ற புன்கவிக்கு நாட்டும் தலைவனும் இல்லை' என்று இதன் ஆசிரியரே சொல்லுகிறார். நூறு கோவைகளுக்குமேல் எழுந்துள்ளனவெனினும், பாட்டு

* இந்நூலில் பக்கம் 12இல் அட்டவணை காண்க.

டைத் தலைவன் இல்லாது பாடப் பெற்ற நூல் இது ஒன்றே என்பது; இதற்குரிய சிறப்புகளில் ஒன்று; இது மிகவும் அதிகமான பாடல்களையும் (565) துறைகளையும் உடையது.

அடுத்து இலக்கணத்துறைக்கு வந்தால், வெவ்வேறு இலக்கண நூல்கள் வெவ்வேறு நூற்றாண்டுகளில் செய்யப் பெற்றிருந்தாலும், கிடைக்கிற நூல்களில் முதலாவதான அலங்கார சாஸ்திரம் - தண்டியலங்காரம், இந்த நூற்றாண்டில்தான் செய்யப் பெற்றது. (அணியியல் என ஒரு நூல் எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பெற்றிருந்தது, கிடைக்கவில்லை.)

இதுபோல சமயத்துறைக்கு வந்தால், சைவத்தில், முதல் சைவசித்தாந்த சாத்திரங்கள் - திருஉந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும் இந்த நூற்றாண்டில் தான் செய்யப் பெறுகின்றன. (ஒரு கால் மெய்கண்டாரும் இக்காலத்தில் வாழ்ந்து சிவஞான போதம் பாடியிருக்கலாம் என்ற ஐயமும் வேறிடத்தில் சொல்லப் பட்டுள்ளது.)* திருக்கோவையாருக்குரிய பழையவுரையும் இந்த நூற்றாண்டில் எழுந்தது என்று குறிப்பிடுகிறோம். கோவை எட்டாம் திருமுறைக்குரியது என்ற கருத்து நிலவுகிறது. வேறு எந்தத் திருமுறைக்கும் பண்டைய உரை எழுந்ததில்லை. இது போல வைணவத்தில், நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு, திருக்குருகைப் பிரான் பிள்ளான் எழுதிய ஆறாயிரப்படி உரையே முதலாவதாக எழுந்த சமய நூல் உரையாகும்; அன்றியும், இதுவே தமிழ் மொழியில் முதல்முதலாக எழுந்த மணிப்பிரவாள நடை நூலுமாகும்.

இவ்விதமாக, இந்தப் பன்னிரண்டாம் நூற்றாண்டே பல துறைகளில் முதன்முதலாக நூல்களைத் தோற்றுவித்திருக்கிறது என்பதைத் தெளிவாகக் காண்கிறோம்.

ஒரு குறிப்பை இங்கு சொல்வது அவசியம், ஆதிசங்கரர் ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றி அத்துவைத நிருபணம் செய்தார்; வடநாட்டில் காசியில் சென்று செய்தார்; தமிழ் நாட்டில் சைவமும் வைணவமும் மிகுதியும் பரவி ஆலய வழிபாட்டின் மூலம் மக்கள் மனத்தைப் பற்றியிருந்தமையால் அவருக்கு இங்கு வேலையில்லை. பல இடங்களில் அவர் மடம் நிறுவினார்; தமிழ் நாட்டுக் காஞ்சியிலும் அவர் ஒரு மடம் நிறுவினார். இவை

* எமது 13ஆம் நூற்றாண்டு வரலாறு காண்க.

யாவும் தமிழ் மக்களுடைய பக்திநெறியைப் பாதிக்கவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டில் மாணிக்க வாசகர், மிண்டிய மாயா வாதம் என்னும் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்தது என்றும், உலகாயதம் என்னும் ஒண் திறற் பாம்பின் கடுவிடம் எய்திற்று என்றும் பாடுகிறார். ஆனால் இதன் பொருள் இந்த இரண்டுமே தம் சூழலில் ஓங்கிநின்றன என்று பொருளாகுமென்று தோன்ற வில்லை; நானே கடவுள் என்ற மாயாவாதமும் காண்கின்ற காட்சியே எல்லாம் என்கிற மாயா வாதமும் பேசப்படுகின்றன என்று பாண்டி நாட்டில் அமைச்சராயிருந்த வாதவூரடிகள் அறிந்திருந்தார் என்பதே பொருளாகும். சங்கரமாயாவாதம் தம் சம்பந்தமாக அவர் காலத்திலும் பின்னர் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் வரையிலும் தமிழில் நூல்கள் எழவில்லை என்பது சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் தான் முதன் முதலாகத் தமிழ் இலக்கியத்துறையில் மாயாவாதக்காற்று வீசத் தொடங்குகிறது. அதுவும் தனி நூலாக உருவெடுக்க வில்லை. வடமொழிப் பகவத்கீதையை, சங்கரபாஷ் யத்தை யொட்டி மாயாவாதக்கருத்து வெளிப்படுமாறு ஸ்ரீபட்ட னார் என்பவர் தமிழில் மொழிபெயர்த்துப் பாடுகிறார்.* 15ஆம் நூற்றாண்டில் பெரும்புலவரான தத்துவராயர் கணக்கிற்ற அத்துவைத வேதாந்த நூல்கள் செய்திருக்கிறார். நாம் இங்கு அறியவேண்டியது இந்தப் பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், இதற்கு முன்னும் எந்த அத்துவைத வேதாந்த நூலும் தமிழில் தோன்றவில்லை என்பது.

ooo

* எமது 13ஆம் நூற்றாண்டு வரலாறு காண்க.

"எமது வரலாற்றாராய்ச்சி நூல்களின் முகவுரை முன்னுரைகளில் அவ்வப்போது மனத்தில் எழுந்த சிறப்பான கருத்துக்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்றில் சொல்லிய பொருளை மற்றொன்றில் மீண்டும் சொல்லவில்லை. இந்நூலைக் கற்பவர் அவற்றையும் ஒருசேரப் படித்தறிந்து கொள்வது பயனுடையதாயிருக்கும்."

"இவ்வரலாற்று நூல்களின் பொதுவான அமைப்பைக் குறித்த ஒரு விளக்கம், 11ஆம் நூற்றாண்டு வரலாற்று முகவுரையின் தொடக்கத்திலும் 14ஆம் நூற்றாண்டு வரலாற்று முகவுரையின் இறுதியிலும் காணலாம்."

"அட்டவணைகள் வரலாற்றில் குறித்த பொருளை ஒரு படம் போல் பிடித்துக் காட்டும் என்பது எமது கருத்து. பல சொற்களாலும் வாக்கியங்களாலும் மிகவும் பெருக்கியும் விரித்தும் சொல்ல வேண்டிய பொருளை அட்டவணை மூலமாக எளிதில் கருத்தில் பதியுமாறு காட்ட முடிகிறது. போதனைப் பயிற்சிக் கல்லூரியில் பயின்றோருக்கு அவர்கள் கற்ற கல்வி இயலின்படி இது எவ்வளவு சிறப்பானது என்பது நன்கு விளங்கும்."

- ஆசிரியர் முகவுரையிலிருந்து.

அத்தியாயம் 1

# இலக்கியம் – 1

## சயங்கொண்டார்

### முன்னுரை

பன்னிரண்டாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாறு என்ற உலகத்தில் நாம் புகத் தொடங்கும்போது, சயங்கொண்டார் என்ற ஒரு பெருங் கவிச்சக்கரவர்த்தியை முன்னிட்டுக் கொண்டு புகுகிறோம். இது ஒரு பெரிய பேறு என்பதில் ஐயமில்லை. இந்த நல்ல அறிமுகங் கொண்டு, அடுத்து, புவிச் சக்கரவர்த்தி தொண்டு பூண்டொழுகிய தொண்டின் சக்கரவர்த்தியாகிய சேக்கிழாரையும், மற்றொரு கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரையும் இந்த நூற்றாண்டில் நாம் பார்க்க முடியும்.

ஒரு சிறுநூல் பாடிக் கவிச்சக்கரவர்த்தி என்று கொண்டாடப்படும் பெருந்தகுதி படைத்தவர் சயங்கொண்டார். இவர் பாடியது கலிங்கத்துப்பரணி. இது பிற்காலத்தில் தொண்ணூற்றாறு என வரையறைபெற்ற பிரபந்தவகையில் முதன்மை பொருந்திய ஒரு பழமையான வகையாகிறது. காலக் கண்ணோடு இந்த நூலை நாம் நோக்குவோமானால், முந்திய நூற்றாண்டு முதல் வளர்ந்துவந்த சோழர் பேரரசின் சிறப்புக்களனைத்தையும் தன்னகத்தே வைத்து இழைக்கப்பட்ட ஒரு மாணிக்கப் பேழை - அருங்கலச் செப்பு என்று இதைச் சொல்லலாம். சோழர் பெருமைக்கு வேறெந்த நூலும் வேண்டுவதில்லை, இது ஒன்றே போதும் என்று சொல்லத்தக்க அளவுக்கு, இது பேரரசின் ஆட்சிச் சிறப்பையும் வெற்றிப் பெருமிதத்தையும் எடுத்துக்காட்டவென்றே எழுந்ததுபோல் அமைந்துள்ளது. பரணி என்பது ஒரு

போர்க் காவியம்; பண்டிதர்கள் இதைக் காவியம் என்று சொல்ல மாட்டார்கள்; சிற்றிலக்கியம்* என்று இக்காலத்தில் சொல்வார்கள். இது சிற்றிலக்கியம் மட்டுந்தானா?

போரைக் குறித்த இலக்கியம் என்றால் அதில் பயங்கர மான நிகழ்ச்சிகள் மட்டுமே இருக்குமென்று நாம் நினைப்போம். கலிங்கத்துப் பரணியில் பயங்கரம் மட்டும் தானா உள்ளது? சுவைகள் ஒன்பது என்று கலையுணர்வுடையோர் சொல்வர். இப்பரணியுள் இவ்வொன்பது சுவைகளையும் அவ்வவற்றின் இயல்பான பொலிவோடு பார்க்கலாம்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் சுதந்திர இந்தியாவில் வாழ்பவர்கள், நேரிலும் பத்திரிகை வானொலி வாயிலாகவும், எத்தனையோ போர்களைப் பார்த்திருக்கிறார்கள். இந்திய சுதந்திரப்போர், இரண்டு பெரும் உலகப் போர்கள், நம் நாட்டிலேயே பிரிவினையால் ஏற்பட்ட கொடுமைப் போர்கள் சீனப்போர், பாகிஸ்தான் போர்கள் - இத்தனையும் பார்த்த நாம், சயங்கொண்டார் கவிதையில் மற்றோர் உண்மைப்போரையும் பார்ப்போம்.

இன்னும் ஒன்று மட்டும் சொல்ல வேண்டும். கொப்பத்துப் பரணி, கூடல் சங்கமத்துப்பரணி, கலிங்கத்துப் பரணிகள் - யாவும் சோழ மன்னருடைய போரையும் வெற்றியையுமே பாடு கின்றன. தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாடு என்ன ஆயிற்று? சிற்பக் கலை வளர்த்த பல்லவ நாடு என்ன ஆயிற்று? போருக்கென்றே சிறப்பு வாய்ந்த காண்டற்கினிதாகிய யானை யுடைய படை பெற்ற சேர நாடு என்ன ஆயிற்று? அந்நாட்டு மன்னர் அனைவரும் தமிழ் மன்னர்களல்லவா? அவர்கள் ஆதர வில் ஏன் ஒரு பரணிகூடத் தோன்றியதாக வரலாறு இல்லை? ஏன் எல்லாப் பரணிகளும் சோழனையே பாடுகின்றன? சோழர் மட்டுந்தானா பெரும் போர் செய்தார்கள்? சோழர் மட்டுந் தானா புலவருக்கு ஆதரவு தந்தார்கள்?

இதற்கு விடை எளிது. பிற தமிழ் வேந்தர்கள் தமிழகம் முழுமையும் எந்தக் காலத்திலும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்ததில்லை. தமிழகம் என்று இன்று நாம் பேசியபோதிலும்

---

* பிரபந்தம் வடசொல் ஆதலால் தனித்தமிழ்ப் புலவர் அதைச் சொல்ல மாட்டார்; ஆனால் சிற்றிலக்கியம் என்பது பொருளுடைய சொல்லன்று.

கூட, தமிழ்நாடு அன்று 'ஒரு - வேந்தர்' நாடாக இருந்ததில்லை; மூவேந்தர் நாடாகவே இருந்தது. சேர, சோழ, பாண்டியர் மூவ ரும் தங்களுக்குள் எந்த நேரமும் போரிட்டுக்கொண்டிருந் தார்கள். சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்ற பிரிவுணர்ச்சி ஓங்கி இருந்ததே ஒழிய, தமிழரின் ஒருமைப்பாடு அன்று அறவே இல்லை. இது காரணத்தால்தான் போலும், அக்காலத்தில் எந் தப் பரணி நூலும் எழவில்லை. ஏனெனில், பரணி பாடினால் தோற்றவன் பெயரைச் சார்த்திச் சொல்ல வேண்டும். தோற்றவர் யாராயிருந்தாலும் ஒரு தமிழ் மன்னர். ஆகவே சேரன் பரணி, சோழன் பரணி, பாண்டியன் பரணி என்று சொன்னால், அது தமிழுக்கே இழுக்காகும். இதுபற்றி, சோழன் நலங்கிள்ளி உறை யூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியை யும் கோவூர்கிழார் பாடிய 45ஆம் புறப்பாடல் இங்கு கருதத் தக்கது: ஒருவீர் தோற்பினும் தோற்பது உம் குடியே' என்று அவர் கூறுகிறார். பிற்காலத்தில், விசயாலயன் தஞ்சையில் கி.பி. 845இல் சோழ அரசை மீண்டும் நிலைநாட்டியபின், அவன் மரபில் இராசராசன் இராசேந்திரன் காலங்களில் தமிழ்நாடு முழுமையும் ஒரு குடைக் கீழ் வந்தது. பல்லவர் முதல் பாண்டியர் வரையில் எல்லோரும் சோழரின்கீழ் அடங்கி வாழ்வாராயினார். அவர்களுடைய போரில் தோற்றவர் தமிழரல்லர், பிறநாட்டு மன் னர். ஆகவே சோழர் வெற்றிகுறித்த பரணி நூல்கள் எழலாயின.

## சயங்கொண்டார்

**வரலாறு**

கலிங்கத்துப் பரணி பாடிய ஆசிரியர் சயங்கொண்டார். சயங்கொண்டார் பெயர் இயற்பெயரே. முன் இத்தொடர் இருந்தது - சயங்கொண்ட சோழ மண்டலம் - இராசராசன் I செயங்கொண்ட மகரிஷி செய்த கலிங்கத்துப்பரணி என்று சரசுவதிமகால் நூலகத்தில் ஓர் ஏட்டில் காணப்படுகிறது. ஏட்டுப் பிரதியில் "குலோத்துங்க சோழப் பெருமாளுக்குத் தீபங்குடி கவிற்சண்டிதன்* கவிச்சக்ரவர்த்தி செயங்கொண்டான் பாடிய

---

* கவிற்சண்டிதன் என்றே ஏட்டிலிருப்பதாக மு. இராகவ ஐயங்கார் முதலான பலரும் கூறுகிறார்கள். ஆனால் உலகநாத பிள்ளை அச்சிட்ட தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய ஏட்டுச்சுவடி அட்டவணைப் பட்டியலில் 'கவிராச கண்டிதன்' என்றே இத்தொடர் காணப் படுகிறது: பட்டியல் தொகுதி 1.1925, பக்கம் 228.

கலிங்கத்துப் பரணி" என்ற தொடர் காணப்படுவதால் இது விளங்கும். இத்தொடரினால் இவருடைய ஊர் தீபங்குடி என்பது வெளியாகின்றது. இத்தீபங்குடி சோழ நாட்டில் திருவாரூரின் அருகில் உள்ளது. சயங்கொண்டார் சரிதத்தை அறிவதற்குப் புறச் சான்றுகள் மிகவும் குறைவு; இவர் செய்த நூலின் அகச் சான்றுகள் பெரிதும் உதவுகின்றன. இவர் தம் காலத்துச் சோழ நாட்டில் ஆட்சி புரிந்த மன்னனை முதன்முதலாகச் சென்று கண்டபோது, அவ்வரசன் இவரை "உமது ஊர் யாது?" என்று கேட்டதாகவும், அப்போது இவர் கூறிய விடையாகவும் பின்வரும் பாடலைத் தமிழ் நாவலர் சரிதை* குறிப்பிடுகின்றது:

**செய்யும் வினையும் இருளுண் பதுவும்**
**தேனும் நறவும் ஊனும் களவும்**
**பொய்யும் கொலையும் மறமும் தவிரப்**
**பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர் –**
**கையும் முகமும் இதமும் விழியும்**
**காலும் நிறமும் போலும் கமலம்**
**கொய்யும் மடவார் கண்வாய் அதரம்**
**கோபம் கமழும் தீபங் குடியே.**

"இது சயங்கொண்டாரை அபயன் உமது ஊர் யாது?' என்று கேட்டபோது அவர் சொன்னது". 'அபயன்' என்பது கி.பி. 1070 முதல் 1120 வரை அரசாண்ட முதல் குலோத்துங்கசோழனது சிறப்புப் பெயர். இத்தீபங்குடியில் முற்காலத்தில் சைனர் பலர் வாழ்ந்தனர். இக்கவிஞர் காலத்தில் சைனரால் இவ்வூர் மிகவும் புகழ்பெற்றிருந்தது போலும். ஆகவேதான் ஊர் எனக் கேட்கும் போது, இவர் அருக சமயத்தால் புகழ்வாய்ந்த இவ்வூரின் தன்மையை நினைவூட்டிப் பாடுகிறார் என்று நாம் கொள்ள வேண்டும். நினைவூட்டியதாலேயே இவர் சைனராகார்.

அபயன் என்ற குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டைத் தன்னகப்படுத்த வேண்டித் தன்னிடம் முதன் மந்திரியாகவும் தளபதியாகவும் இருந்த வண்டை நகர் கருணாகரத் தொண்டைமானைக் கலிங்கப் போருக்கு அனுப்பினான்; அவன் போரில் வெற்றிகொண்டு திரும்ப, அவனைக் கோதாவரி நதிக்கரையில்

* தமிழ் நாவலர் சரிதையின் கூற்றுக்கள் பல பிழைபட்டவை இக்கூற்றும் மெய்யென்று கொள்வதற்கில்லை.

எதிர்கொண்டு வரவேற்றான் என்பது வரலாறு. இவ்வெற்றி காரணமாக அரசனுக்குச் சயங்கொண்டான் என்ற பெயரும். விசயதரன் முதலான பல பெயர்களும் அமைந்தன. அச்சமயம் கவிஞர் சயங்கொண்டார் போரை நேரில் கண்டு போரின் சிறப்பையும் வெற்றிப் பெருமையையும் நன்கு பாராட்டி, கலிங்கத்துப்பரணி பாடினார். "புவிச்சக்ரவர்த்தி சயங்கொண்டானைக் கவிச்சக்ரவர்த்தியாகிய சயங்கொண்டார் பாடுதல் கடன்" என்று இவர் இப்பரணி பாடினார் என்பர். இப்பரணி பாடிய பெருமையினால் இவருக்குக் கவிச்சக்கரவர்த்தி என்ற பெயர் பின்னர் அமைந்தது. பரணித் தாழிசை ஒவ்வொன்றுக்கும் குலோத்துங்கன் ஒரு பொற்றேங்காய், பரிசாக வழங்கினான் என்று ஒரு வரலாறு வழங்கும். இவர் வேறு நூல் பாடி அதனால் பெருமை பெற்றதாகத் தெரியவில்லை.

இவ்வாறு சயங்கொண்டார் குலோத்துங்கனால் மிகவும் போற்றப்பெற்று, கவிச்சக்கரவர்த்தி என்று மிக்க பெருமையோடு விளங்கிய காலத்தில், ஒரு சமயம் இவர் மன்னனோடு முனிவு கொண்டு பாடினார் என்று பின்வரும் தனிப்பாடல் அதே தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகிறது. இப்பாடல், தமக்கு அபயன் அளித்த பொருள் நிலையாகாப் பொருள், ஆனால் தாம் அவனுக்கு அளித்த கவிதைப் பொருளாகிய புகழ் நிலைத்த பொருள் என்று கூறும்:

**காவலர் ஈகை கருதுங்கால், காவலர்க்குப்**
**பாவலர் நல்கும் பரிசொவ்வா: – பூவில்நிலை**
**ஆகாப் பொருளை அபயன் அளித் தான், புகழாம்**
**ஏகாப் பொருள் அளித்தேம் யாம்.**

சயங்கொண்டார் என்பது இவருடைய இயற்பெயர் ஆகாது. அபயனுடைய சயத்தைப் பாடியமையால் சயங்கொண்டார் எனப்பெற்றார் என்று கருதவேண்டும்*. இவருடைய பரணியின் பெருமையை நன்குணர்ந்த பழம் புலவர் 'வெண்பாவில் புகழேந்தி' என்ற பாடலில், 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று பாராட்டியிருத்தல் இங்கு குறித்தல் தகும். இப்பாடலில் சொல்லப்பட்டவை யாவும் திருத்தமுடையன அல்ல. அபயன்

* தொண்டை மண்டல சதகம் பதிப்பித்தவர், 'இப்பெயர் பெற்றதற்குக் காரணம் இவர் சோழன் சமஸ்தானத்து வித்துவானாய் இருந்த போது, தென்னாட்டுப் புலவர் சிலர் தம்மோடு வாதம்புரிந்து தோற்கத் தாம் வெற்றிபெற்றதனால் வந்ததென்ப' என்கிறார்: இதில் சிறப்பில்லை.

இவர் பரணியில் ஒவ்வொரு தாழிசைக்கும் ஒரு பொன் தேங்காய் பரிசிலாக வழங்கினான் என்ற ஒரு செய்தியும் வழங்குகின்றது.

புகலூரந்தாதி பாடிய நெற்குன்றவாணரும், கன்னிவன புராணம் பூம்புலியூர் நாடகம் பாடிய வீரைப் பரசமய கோளரி மாமுனியும் குலோத்துங்க சோழ சரிதை பாடிய கவி குமுத சந்திர பண்டிதனாகிய திருநாராயண பட்டனும், சயங்கொண்டாரோடு சமகாலத்தில் புலவர்களாக விளங்கியிருக்கிறார்கள். இவர்களுள் நெற்குன்றவாணர் பாடிய நூலே கிடைத்துள்ளது. ஏனையோர் செய்திகள் கல்வெட்டால் மட்டுமே தெரியவருவன.

**சமயம்**

தீபங்குடி என்பதால் இவர் சைனர் என்று சிலர் கூறுவது பொருந்தாது. இவர் செய்த நூலுள் சிவ வழிபாட்டையே சொல்கிறார். கடவுள் வாழ்த்துப் பகுதி இருபது பாடல்களும் முறையே உமாபதி, திருமால், நான்முகன், சூரியன், கணபதி, முருகவேள், நாமகள், கொற்றவை, சத்தமாதர் ஆகியோர் துதியாகவும், வாழ்த்தாகவும் உள்ளன. இவற்றை நோக்கும்போது இவர் சிவ வழிபாடு உடையவர் என்பதற்குத் தடை இல்லை. தேவியைப் பாடும்போது,

> **ஓங்காரத்துட் பொருளாய் ஒருவாது நடந்தாளை**
> **நீங்காமல் நின்றாளை எவ்வண்ணம் நிகழ்த்துவாம்.**

என்று கூறுதல் காண்க.

'உமது ஊர் எது' என்று கேட்ட மன்னனுக்கு இவர் விடையாகக் கூறிய 'செய்யும் வினையும்' என்ற பாடலும் இங்கு கருதத்தக்கது. பாடலின் முதற்பாதியில் அறங்களைக் குறிப்பிட்டு அறநூல் செய்தார் தமது ஊர் என்ற கருத்தைச் சொன்னார். பின்னிரு வரிகளில் முழுமையும் மடவார் வருணனையாகப் பாடுகிறார். இவர் சைனராயிருப்பின் இவ்வருணனை இவர் நாவில் எழாது. எனவே, இவர் சைனர் அல்லர் என்றே இது கொண்டு கருதவேண்டும்.

உமாபதி, திருமால் முதலான தெய்வங்களைத் துதிக்கும் இடத்து இவர் அந்த அந்தத் தெய்வத்தின் சிறந்த அடியவராகவே நின்று பாடுகிறார். ஈடுபாடு இல்லாவிட்டால் இத்தகைய சொல் நயம் பாடலில் வராது. திருமால், நான்முகன், கணபதி ஆகிய மூவரைப் பாடும் பாடல்களை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்:

ஒரு வயிற்றும் பிறவாது பிறந்தருளி உலகுஒடுக்கும்
திருவயிற்றது ஒருகுழவி திருநாமம் பரவுதுமே.

உகம்நான்கும், பொருள்நான்கும், உபநிடதம் ஒருநான்கும்
முகம்நான்கும், படைத்துடைய முதல்வனையாம் பரவுதுமே.

காரண காரியங்களின் கட்டுஅறுப்போர் யோகக்
கருத்துஎன்னும் தனித்தறியில் கட்டக் கட்டுண்டு
ஆரணம்ஆம் நால்கூடத்து அணைந்து நிற்கும்
ஐங்கரத்தது ஒருகளிற்றுக்கு அன்பு செய்வாம்.

கணபதியைத் துதிக்கும் இடத்து, தோத்திரமாக மட்டும் அல்லாமல் சமய தத்துவத்தின் உட்புகுந்தும் இவர் பேசுகிறார். கடவுள் வாழ்த்துப் பகுதியிலோ வேறு எந்த இடத்திலுமோ இவர் அருகக் கடவுள் வணக்கம் சொல்லவில்லை. தேவியைப் பாடிய இடத்து இவருக்கு மொழியும், சமயக் கருத்தும், திரு உருவத்தைக் கண்ணால் காணும் காட்சியும், ஏவல் செய்வதைப் பாடல்களில் காணலாம்.

அருமறை ஒத்துஉலகத்து அருள்நெறி உய்த்தகுணத்து
அபயன் உதித்தகுலத்து, உபயகுலத்து முதல்
திருமதி ஒக்கும்என, தினகரன் ஒக்கும் என,
திகழ்வத னத்தினிடைத் திலக வனப்பினளே.

இத்தகையதொரு சொல்திறனும் பொருளமைதியும் கருத்துச் செறிவும் வைதிக சமயத்தினருக்கல்லாது, ஆருகத சமயத்தினருக்கு அமைதல் இயல்வதொன்றன்று. மேலும், வாழ்த்துக் கூறுமிடத்து, கடவுள் வாழ்த்தின் இறுதியிலும், நூலின் முடிவிலும், 'விதிமறையவர் தொழில் விளைகவே' என்றும், 'வேத நன்னெறி பரக்கவே' என்றுமே பாடுகிறார். இவற்றாலும் இவர் சைனரல்லர், சைவ சமயத்தினர் என்பது நன்கு தெளியப்படும்.

மற்றொரு குறிப்பும் இங்கு கருதத் தகுந்தது. சங்க காலந் தொடங்கி நூல் செய்த சைனர் எவருமே சோழர்களைப் புகழ்ந்து பாடியதில்லை. சூளாமணியுடையார் கார்வெட்டி விசயனைக் குறிப்பிடுகிறார். நன்னூலுடையார் சீயகங்கனைக் குறிப்பிடுகிறார். இவர்கள் காலத்திலும் சிறப்பு மிக்க சோழச் சக்கரவர்த்திகள் இருந்திருக்கின்றனர். எனினும், இவ்வாசிரியர் அவர்கள் யாரையும் குறிப்பிட்டதில்லை. இது சைன நூலாசிரியர் இயல்பு என்பது நன்கு தெரிகிறது. இந்த முறையில் பார்க்கும்போதும்,

சோழ மன்னன் வெற்றியைச் சிறப்பித்து இந்த நூலைப் பாட வந்த சயங்கொண்டார் சோழர் பரம்பரையை விரித்துப் புகழ்ந்து கூறியிருக்கும் வமிச பாரம்பரியம் முதலான அமைப்பைக் காணும்போதும், இவர் சைனரல்லர் என்பது நூலமைதியினாலேயே நன்கு புலப்படும். சோழர் வெற்றியைத் தமது வெற்றியாகக் கருதி பெருமிதம் பெற்ற ஓர் ஆசிரியர் இப்பரணி பாடினார். இவர் ஒருநாளும் சைனராயிருத்தல் இயல்வதன்று.

இந்தக் கண்ணோடு பார்க்கும்போது, 'செய்யும் வினையும்' என்ற பாடல் உண்மையில் சைன தோத்திரமாய் இருக்குமானால், அதனை உள்ளடக்கிய தீபங்குடிப் பத்து* பாடியவர் இக்கவிச்சக்கரவர்த்தியல்லாத வேறொரு புலவர். இதுபற்றித் தமிழ்நாவலர் சரிதையின் கூற்று கொள்ளத்தக்கதன்று என்றே முடிவு செய்யவேண்டும். அச்சரிதை கூறும் பிழைபட்ட கூற்றுக்களில் இதுவுமொன்று.

பின்னே நகைச்சுவை என்ற தலைப்பில், சயங்கொண்டார் சமணப் பேயையும் புத்தப் பேயையும் குறிப்பிட்டுப் பரிகசிப்பதைக் காட்டுகிறோம். 'உயிரைக் கொல்லாச் சமண்பேய்கள், ஒரு போழ்துண்ணும் துகிலால் வடித்துண்ணும் என்கிறார். இவர் சைனராயிருந்தால், சமணப் பேயைக் குறிப்பிட்டுப் பரிகசிக்க மாட்டார்; இதுகொண்டே இவர் சமணரல்லர் என்று திட்டமாய்க் கூற முடியும்.

"இவர் முதலில் சைனமதப் பற்றுடையவராயிருந்து சைவ சமயத்தினனாகிய அபயனை அடுத்த பின்னர்ச் சைவமதப் பற்றுடையவராயினார் என்பது பொருந்தும்" என்று கோபாலையர் எழுதியுள்ளார். இதுவும் கொள்ளத்தக்கதன்று சைவத்திலிருந்து மக்கள் பிற மதம் புகுந்தார்களேயன்றி, பிற மதத்திலிருந்து சைவத்துக்கு வந்தார்கள் என்று சொல்வது வரலாற்றுக்குப் பொருந்துவதன்று. தமிழ் நாவலர் சரிதை பொய்க் கதைகளையும் கொண்டிருப்பதால் சயங்கொண்டார் 'செய்யும்

* இப்பாட்டு தீபங்குடிப் பத்து என்ற பத்துப்பாட்டுக் கொண்ட ஒரு பதிகத்தில் மூன்றாம் பாடல் என்று குறிப்பிட்டு, பண்டித அ. கோபாலையர் தமது கலிங்கத்துப் பரணிப் பதிப்பில் (1923) ஏழு பாட்டுக்களைத் தந்திருக்கிறார். அப்பாடல்கள் அருக தோத்திரமாகவே உள்ளன. ஆனால் தீபங்குடித் தோத்திரம் பல சேர்ந்த 'பல ஜினதாசர் செய்த தோத்திரத் திரட்டு' என்ற தொகுப்பில் (1912) இப்பத்து காணப்படவில்லை.

வினையும்' என்ற பாடலைச் சொன்னார் என்ற கதையும் ஆதார மற்றது என்று தள்ளிவிட வேண்டும். இதுபோலவே, கவிஞர் அபயனிடம் முனிவு கொண்டு பாடினார் என்று அச்சரிதை கூறும் கதையும் தள்ளத்தக்கது. செய்யும் வினையும் என்ற பாடலை உள்ளடக்கிய தீபங்குடிப்பத்து, கவிஞர் காலத்தில் வழக்கில் இருந்தது என்ற அளவுக்கு உண்மையாயிருத்தல் கூடும்.

## கலிங்கத்துப் பரணி

### முன்னூல்கள்

பன்னிரு பாட்டியல் என்ற நூல் பரணி இலக்கணம் கூறு கின்றது. அதன் காலம் 10ஆம் நூற்றாண்டு. அதைச் சயங்கொண் டார் ஒருகால் பார்த்திருக்கலாம். இவர் பரணி பாடுவதற்கு வழிகாட்டிய இலக்கியமாக முன்னமே இருபரணி நூல்கள் இருந்தன போலும்.* ஒன்று கொப்பத்துப் பரணி. இரண்டாம் இராசேந்திர சோழன் (1051 - 1063) ஆகவ மல்லனைப் போரில் வெற்றி கொண்டதைப் புகழ்கின்ற நீண்ட பாடலொன்று வீர சோழிய உரையுள் காணப்படுகிறது.❖ அவனுடைய சாசனமும் இதைக் குறிப்பிடுகிறது. இராசராச சோழன் உலாவும் (கண்ணி 24).

– கொலையானை

பப்பத் தொருபசிப்பேய் பற்ற ஒருபரணி
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோன்

என்று கூறுகிறது. இதனால் கொப்பத்தில் இராசேந்திரன் பெற்ற வெற்றியைப் போற்றி அவன்மீது 'கொப்பத்துப் பரணி' என ஒரு நூல் பாடப் பெற்றிருந்தது என நாம் கருதலாம். இந்நூலும் கிடைக்கவில்லை; இந்நூல் பற்றிய வேறு செய்திகளும் தெரிய வில்லை. மற்றது, மேலைச்சாளுக்கிய அரசர்களுடன் அவ் இராசேந்திரன் தம்பியாகிய வீரராசேந்திர சோழன் (1063 - 1070) செய்த போரில், கூடல் சங்கமம் என்ற போர்க்களத்தில் ஆகவ மல்லனையும் அவன் படைத் தலைவரையும் முறியடித்த செய்தியைப் பொருளாக வைத்துப் பாடப்பெற்றிருந்த கூடல் சங்கமத்துப் பரணியாகும். இந்நூலும் இன்று கிடைக்கவில்லை; எனினும் ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழனுலாவில்,

---

* இவற்றின் வரலாற்றை எமது தமிழ் இலக்கிய வரலாறு 11ஆம் நூற்றாண்டில் காணலாம்.

❖ மேற்படி

– கூடலார்

சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும் –

என்றும், இராசராச சோழனுலாவில்,

பாட வரிய பரணி பகட்டணி வீழ்
கூடலார் சங்கமத்துக் கொண்டகோன் –

என்றும் பாடியிருப்பதால் இது தெரிகிறது. கூடல்சங்கமம் என்பது துங்கபத்திரையும் கிருஷ்ணா நதியும் கூடுகின்ற இடத்துள்ள பண்டைய நகரம். இப்பரணி கொண்ட வீரராசேந்திரனுடைய ஆதரவில் புத்த மித்திரனார் என்ற கவிஞர் வீரசோழியம் என்ற ஓர் இலக்கண நூல் செய்திருந்தார். அந்நூல் இன்று கிடைக்கின்றது. அதன் உரையாசிரியர் உரையினுள் அப்போரைப் பற்றிய பல தனிப்பாடல்களை எடுத்துத் தருகிறார். ஆனால் பரணி நூல் கிடைக்கவில்லை. செய்தார் யார் என்பது முதலான வரலாறும் தெரியவில்லை. ஒருகால் சயங்கொண்டார் காலத்தில் வழக்கில் இருந்திருக்கக் கூடும். இவற்றை நன்கு ஆராய்ந்து மிகவும் செம்மையாகத் தம்முடைய பரணி நூலைச் சயங்கொண்டார் அமைத்தார் என்று நாம் கருதலாம்.

முதலாம் இராசாதிராசனுடைய சாசனமொன்று (தென்னிந்திய சாசனங்கள் தொகுதி V, எண் 607, 50 - -1895) திருநெய்த்தானத்துக் கோயில் மண்டபத்தில் அமைந்தது; 'இலங்கையற்கரசையும் அலங்கல் வல்லவனையும், பொன்னணி முடித்தலை கடிந்து தன் கொடிப்படை ஏவி, கன்னாடகர் விடு கடகிரி புரளத், தன்னாடையிற் றமிழ்ப்பரணி கொண்டொன்னார் .... நேரலர்' என்று அபூர்த்தியாக முடிகிறது. இவ்விராசாதிராசன் 1018 - 1054 இல் ஆட்சி புரிந்தவன்; முதலாம் இராசராசனுடைய பேரன். இச்சாசனக் குறிப்பினால் இது கூறும் பரணியே இன்று பெயரளவிலேனும் அறியப்படும் பரணிகளுள் முதலாவதென்று கருத முடியும். இந்நூல் இல்லை, வேறு செய்திகளும் அறிவதற்கில்லை.

பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் (சூத்திரம் 149),

"உளையாழி யோரேழும் ஒருசெலுவின் ஒடுங்குதலான்
விளையாட நீர்பெறா மீனுருவம் பரவுதுமே.

என்றாற் போலப் பரணிச் செய்யுளுள் இரண்டடியான் வரும் தாழிசை பேரெண்ணாகப் பயின்றுவரும் என்பது" என்றெழுது கிறார். இத்தாழிசை ஒரு பரணிப்பிரபந்தத்தில் வரக்கூடிய திருமால் வணக்கப் பாடலாக அமைந்துள்ளது. அப்பரணி நூல் யாது என்பது தெரியவில்லை; ஒருகால் முன்காட்டிய இரு பரணிகளுள் ஒன்றாகவும் இருக்கலாம்.

ஒட்டக்கூத்தர், விக்கிரமசோழன் மீது ஒரு கலிங்கப்பரணி பாடினார் என்று அறிகிறோம். குலோத்துங்கன் அரசனாயிருந்த போது, விக்கிரமன் இளவரசாயிருந்து தென் கலிங்கப் போர் நடத்தி 1096இல் ஒரு பெருவெற்றி பெற்றான். அப்போது அவ னால் சிறப்புச் செய்யப்பெற்ற புலவராயிருந்த ஒட்டக் கூத்தர் அவன்மீது அவ்வெற்றி குறித்து ஒரு பரணி பாடினார். தக்க யாகப் பரணியில் இதை அவர் நன்கு குறிப்பிடுவதோடு, அதன் உரையாசிரியரும் இதை நன்கு விளக்கி எழுதுகிறார்.

**செருத்தந் தரித்துக் கலிங்க ரோடத்**
**தென்தமிழ்த் தெய்வப் பரணி கொண்டு**
**வருத்தந் தவிர்த்துல காண்ட பிரான்**
**மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே. 776**

"இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள். இப்பரணி பாட்டுண்டார் விக்கிரம சோழதேவர்" என்பது உரை. பிரான் - விக்கிரமன். மைந்தற்கு மைந்தன் - இராசராசன் (2). இப்பரணியைக் கூத்தர் தமது குலோத்துங்கன் உலாவிலும் இராசராசன் உலாவிலும் கூடக் குறிப்பிடுகிறார். ஆனால் அந்நூல் இன்று இல்லை. அது உண்மையில் சயங்கொண்டார் நூலுக் குக் காலத்தால் முற்பட்டதாகும்.

### பிரபந்தங்களும் பரணியும்

ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து போன்ற பிரபந்தங்கள் சங்க காலத்தில் வழங்கின. இவை பொதுவாக அரசரையும் தலைவ ரையும் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு செய்யப்பெறும். (திருமுருகாற்றுப்படை பரிபாடல் இந்த மரபுக்கு விலக்கு.) தேவாரகாலந் தொடங்கி, பொதுவாகப் பிரபந்தங்கள் யாவும் தெய்வத்தையே புகழ்வன. மூன்றாம் நூற்றாண்டின் பின் ஒன்ப தாம் நூற்றாண்டு வரை எழுந்த எல்லாப் பிரபந்தங்களும் இத் தன்மை உடையன. (விதிவிலக்கும் உண்டு: பாண்டிக்கோவை,

நந்திக் கலம்பகம்.) சோழர் பேரரசு ஓங்கிநின்ற காலத்தில் சோழர் போன்ற பேரரசரைப் புகழ்ந்து பிரபந்தங்கள் செய்யப்பட்டன. பரணி, உலா, கோவை, பிள்ளைத்தமிழ் என்பன. இவற்றுள் ஏற்றபெற்றி தெய்வப்புகழ்ச்சியும் அமைந்திருக்கும். மிகவும் பிற்காலத்தில், உயர்ந்த மக்களை விட்டுத் தாழ்ந்த மக்கள் வாழ்க்கையைச் சிறப்பித்துக் கூறும் பிரபந்தங்கள் எழலாயின. குறவஞ்சி, பள்ளுப்பாட்டு, நொண்டி நாடகம், குளுவ நாடகம் முதலாயின; இவை 17ஆம் நூற்றாண்டு தொடங்கிக் காணப்படும். இங்கும் பாட்டுடைத் தலைவனாக ஒரு தெய்வமோ அரசர் போன்ற வள்ளலோ கொள்ளப்படும்.

| பிரபந்தங்களின் பாட்டுடைத் தலைவர் | | |
|---|---|---|
| காலம் | பாட்டுடைத் தலைவர் | சிறப்பு |
| 1. சங்ககாலம் | தலைவர் அல்லது வள்ளல் | தெய்வத்தைச் சிறப்பித்தல் இல்லை. |
| 2. பாசுரகாலம் | தெய்வம் மட்டுமே | மனிதரைச் சிறப்பித்தல் இல்லை. |
| 3. சோழர்காலம், அடுத்த காலம் | சோழ அரசர் | தெய்வத்தைச் சிறப்பித்தலும் உண்டு. |
| 4. பிற்காலம் | தெய்வமும் தலைவரும் | தாழ்ந்தவரைச் சிறப்பித்தலும் உண்டு. |

### பாடியாடுதல்

இனி, பரணியை மட்டும் குறித்த சில கருத்துக்களை இங்கு கூறுவோம். வயது முதிர்ந்த பெண்டிர் பரணி நாளன்று நாட்காலே நீராடி உலர்ந்த ஆடையணிந்து அலங்கரித்துக்கொண்டு நகர வீதிகளிலுள்ள வீடுதோறும் சென்று அங்குள்ள மகளிரைத் துயில் உணர்த்தி, காளிகோயில் முற்றத்தில் தாம் குரவைக் கூத்தாடி, பாடப்போகும் பரணிப் பாட்டைக் கேட்டு மகிழும் பொருட்டு வாயிலைத் திறந்து வருமாறு அழைப்பார்கள். அவர்கள் முன்னிலையில் பாடியாடுவதாகப் பரணிப் பிரபந்தம் இயற்றப்பெறும். கலிங்கத்துப் பரணியில் வரும் வள்ளைப்பாட்டு (525 - 545)* இவ்வாறு பாடியாடும் மரபைப் புலப்படுத்தும்.

* எண்கள் எஸ். ராஜம் பதிப்பு 1960.

காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்
பெருநில மன்னன் இருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி –

*என்ற சிலப்பதிகார வரிகளாலும் (இந்திர விழவூர் எடுத்த காதை 67 - 73),*

புறநடஞ் சேர்குர வைப்பொருள் மேலிங் கிருவர்மன்னர்
திறனுளும் யானைப் படைசெற்று வென்ற ஒருவன் செய்கை
நெறிபடு நேரடி யேமுதல் நீண்டன ஈரடியாய்ப்
பெறுவன தாழிசை யாற்பர ணிப்பெயர் பேசுவரே.

*என்ற நவநீதப் பாட்டியல் இலக்கணமும், இந்த மரபை விளக்கும். இவ்வகைப் பிரபந்தங்களின் முகப்பில் கடைதிறப்பு வைத்திருப்பதும் இந்த மரபு பற்றியேயாம். இறுதியில் பரணிக் கூழ் அட்டு உண்டுமகிழ்தல் வழக்கம்.*

## பரணியும் போரும்

*தமிழிலக்கியங்களில் போர்க்கள வெற்றியைக் குறித்துப் பாடப்படும் பிரபந்தங்கள் மூன்று. அவை செருக்கள வஞ்சி, களவழி, பரணி என்பன. முதல் இரண்டும் காலத்தால் முற்பட்டவை. செருக்கள வஞ்சியானது மனிதருடலையும் போரில் வீழ்ந்த யானை முதலியவற்றின் உடலையும் பேய் கழுகு முதலியன தின்று களித்து ஆரவாரம் செய்ய, பூதமும் பேயும் பாடியாடும் போர்க்களத்தைப் பாடுவது. இப்பகுதியில் தனிப் பாடல்கள் உள்ளனவேயன்றித் தனிப் பிரபந்தம் இல்லை. களவழி என்பது போரில் மாண்ட யானை வீரர் முதலியோரின் உடல் உறுப்புக்கள் வெட்டுண்டு சிதறிக் கிடக்கும் தோற்றத்தை உவமம் முதலிய அணி பொருந்த வருணித்துப் பாடுவது. பொய்கையார் பாடிய களவழி நாற்பதொன்றே இவ்வகைக்குரிய தனி இலக்கியம். ஆனால் இவ்விரண்டும் வரலாற்றைக் கூறுகின்றன அல்ல; கதை நயமற்ற சிறு பிரபந்த வகைகள் ஆனால் பரணி இவற்றின் மாறுபட்டது. கதை நயமும் பொருள் நயமும் பல்வகை யாப்பு நயமும் தோன்ற இயற்றப்படுவது. இது வரலாற்றையும் விரித்துக் கூற இடம் அளிப்பது. கவிதைத்தன்மை முழுவதும் விளங்கு*

வதற்கு இடங்கொடுப்பது. கலிங்கத்துப் பரணி முதலான பல பரணிகள் இதற்கு எடுத்துக் காட்டாகும் எனவே, போர் வெற்றிப் பிரபந்தங்களில் பரணியே சிறப்பானது என்பது தெளிவு.

போர்த் தொடக்கத்தின் முன்னர், காளிக்குக் களப்பலி ஊட்டுதல் பண்டைய போர் மரபு.* இது பாரத வெண்பா விலும் வில்லி பாரதத்திலும் விளங்கக் காணலாம். இத்துறை கொற்றவை நிலை என்று புறத்திணை இலக்கியங்களில் சொல் லப்படும். காளிக்கு, காடுகிழவோள் கொற்றவை துர்க்கை எனப் பல பெயர்கள் வழங்கும். பரணி யானை பிறந்த நாள் என்பது வழக்கு. பரணியிற் பிறந்தவன் தரணியாள்வான் என்பதோடுகூட, அவன் யானை போலப் பகையை மதியான் என்பது சீவக சிந்தாமணி (1813). கிழவன் என்றே பரணி நாளுக்கு ஒரு பெயர் உண்டு. அன்றியும் பரணிக்கு அதிதேவதை யமன்; பகைவனுக்கு நாசம் என்பது இதன் பொருள். காளிதேவிக்கு உவந்த நாள் பரணி நாள். இக்காரணத்தால் இந்நாளுக்கே காடுகிழவோள் என்று காளியின் பெயரை வழங்குவதுண்டு:

காடு கிழவோள் பூதம் அடுப்பே
தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப்
பாகு பட்டது பரணிநாட் பெயரே.

என்பது திவாகரம். இங்கு ஏழு பெயர்கள் உள்ளன. (தருமன் - யமன். போதம் - யானை). இந்த ஏழும் பரணிப் பிரபந்தத்தில் தொடர்பு கொள்கின்றன.

### பரணிப்பாட்டின் பழமை

பரணி என்னும் நட்சத்திரம் காரணமாகப் பரணிப் பிரபந்தம் எழுந்தது. 'காடுகெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு' என்பது தொல்காப்பிய உரை. 'பண்டு மிகுமோர் பரணிக் கூழ் பாரதத்தில் அறியேமோ' என்பது கலிங்கத்துப் பரணி (556). போரில் தோற்று வீழ்ந்தவர் உடல் உறுப்புக்களாலும் தசை குருதி முதலியவற்றாலும் பேய்கள் கூழ் சமைத்துப் பரணி

* கண்ணப்பர், குலத்தலைமை பூண்டு வேடரைக் காக்கும் பொறுப்பும் ஏற்று, தந்தைக்கு மேலாக வேட்டைவினை வாய்த்து வேறு புலங் கவர் வென்றியும் மேவுமாறு காட்டிலுறை தெய்வங்களுக்குக் காடு பலியூட்டச் சொல்லுதலை, அடுத்த காலத்தில் தோன்றிய பெரிய புராணத்தில் பார்க்கிறோம்.

நாளில் காளிக்குப் பலியிட்டு வென்றோனை வாழ்த்தும் எனல் வழக்கு. இது மிகவும் பயங்கரமான செய்தி. ஆனால் இது முழு மையும் கற்பனையே.

புறத்திணையில் களவேள்வி முதலிய துறைகளுக்குப் பரணி இலக்கியமாகும். இதை விரித்து நச்சினார்க்கினியர் தொல் காப்பியப் புறத்திணை (21ஆம் நூற்பா) உரையில் பின்வருமாறு கூறுவர். "நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போர் அழித்து அதரிதிரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலி கொடுத்துப் பின்னர் பரிசிலாளர் முகந்து கொள்ள வரிசையின் அளிக்குமாறு போல, அரசனும் நாற்படையையும் கொன்று களத்திற் குவித்து எருது களிறாக வாள்மடலோச்சி அதரிதிரித்துப் பிணக்குவையை நிணச்சேற்றோடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனா வேண்மான் இடந்துழந்து அட்ட கூழ்ப் பலியைப் பலியாகக் கொடுத்து எஞ்சி நின்ற யானை குதிரைகளையும் ஆண்டுப் பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலாம்." அன்றியும் 'தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச்சுற்றம் ஆடும் குரவை' என்று அவர் 'பின் தேர்க்குரவை' என்னும் துறைக்குக் கூறும் விளக்கமும், மாணார்ச் சுட்டிய வாண்மங்கலம் என்னும் துறைக்குப் 'பகை வரைக் குறித்த வாள் வென்றியால் பசிப்பிணி தீர்ந்த பேய்ச் சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்தும் வாள்மங்கலம் ... இது பரணியில் வரும்' என்று அவர் எழுதுவதும் இங்கு அறியத்தக் கன. "பரணி யானை பிறந்த நாளாதலாலும், காளிக்கும் யம தருமனுக்கு; உரியதாதலாலும், தன் கட் பிறந்தானைப் பெரு வீரனாக்கும் தன்மையதாதலாலும், தலைவனொருவன் பல யானைகளைக் கொன்று, காலன் பல உயிரைக் கொள்ளச் செய்து, பெருவீரத்தைப் புலப்படுத்திய களவேள்வியில் காளிக்கு உவப்புண்டாகக் கூழ் சமைப்பதற்குரிய நாளாயிற்றென்று ஊகித்தறியப்படுகின்றது" என்பது ஐயரவர்கள் குறிப்பு.*

பொருநர் பலவகை: ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என, பரணி கலித்தாழிசையால் பாடப் படும். தொல்காப்பியம் கூறும் வனப்பு எட்டனுள் இது விருந்து ஆகும். புறத்திணைகளுள் இது பாடாண் திணையுள் அடங்கும்.

---

* பாசவதைப் பரணி 1933, முகவுரை. இதனுள் பரணி இலக்கணத்தையும் பரணி பற்றிய பழைய உரைக் குறிப்புக்களையும் விளங்கக் காணலாம்.

இது முழுமையும் தேவபாணி என்றும், இதன் தாழிசைகள் கொச்சக ஒருபோகு ஆகும் என்றும் தொல்காப்பிய உரை கூறும். பரணியில் சந்தப் பாடல் சிறப்பு. 'பரணிகளெல்லாம் இரண்டடியானே தாழம்பட்ட ஓசை விராய் வருதலும் முடுகி வருதலும் பெறும்' என்பர் பேராசிரியர். தாழம்பட்ட ஓசை யாவது தாழிசை; முடுகு சந்தப்பாடல்.

## பரணி இலக்கணம்

தமிழில் பழமையான பிரபந்தங்கள் சில - ஆற்றுப்படை, அந்தாதி, உலா, கோவை போல்வன. இவற்றுள் பரணியும் ஒன்று. இது ஒரு புறப்பொருள் இலக்கியம். கலிங்கத்துப் பரணி செய்யப் பெற்ற காலம் 12ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி. ஆனால், இதற்கு முன்னே 10ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றதாகிய பன்னிரு பாட்டியல் என்ற பாட்டியல் இலக்கண நூல், 22 அடி கொண்ட நான்கு சூத்திரங்களால் பரணி யிலக்கணம் கூறுகிறது. (அங்குள்ள பிரபந்த வரிசையில் இது ஒன்பதாவது.) இது எவ்வாறு சாத்தியம் என்பது விளங்கவில்லை. இலக்கியமில் லாமல் இப்பாட்டியலுடையார் ஓர் இலக்கணம் புனைந்தார் என்பது இயற்கைக்கு மாறாயிருக்கிறது. இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் இயம்பப்படும்; ஆதலால் பன்னிரு பாட்டியலுக்கு முன்னரே ஒரு பரணியேனும் எழுந்திருக்க வேண்டும். இது பற்றி எந்த விளக்கமும் இன்று இல்லை. தொல்காப்பியம் மெய்ப் பாட்டியல் 12ஆம் சூத்திர உரையில் பேராசிரியர் அரற்று என்ற மெய்ப்பாடு பற்றிக் கூறுமிடத்துத் தரும் விளக்கம் பரணிப் பாடலுக்குரியதேயாகும்: 'அரற்றென்பது, அழுகையின்றிப் பலவும் சொல்லித் தன்குறை கூறுதல். அது காடுகெழு செல்விக்குப் பேய்கூறும் அல்லல்போல வழக்கினுள்ளோர் சொல்வன'.

இனி இங்கு சொல்லப்பட்ட இலக்கணத்தைக் கீழே தருவோம்:

மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று
நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து
வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழன் மன்னனை
வெம்புசின மாற்றான் தானைவெங் களத்திற்
குருதிப் பேராறு பெருகும் செங்களத்து
ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே. 242

தேவர் வாழ்த்தே, கடைநிலை, பாலை,
மேவி யமரும் காளி கோயில்,
கன்னியை ஏத்தல், அலகை விநோதம்,
கனா நிலை, நிமித்தம் பசியே ஓகை
பெருந்தேவி பீடம் அழகுற இருக்க
சமர்நிலை நிமித்தம், அவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையு மளவு
மரபினி துரைத்தல், மறக்களங் காண்டல்,
செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்,
பரவுதல் மன்ன வருவன பிறவும்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே, 243

யானை சாய்த்த அடுகளத் தல்லது
யாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே. 244

ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத்து அட்டாற் பாடுதல் கடனே. 245

*கலிங்கத்துப் பரணி இவ்விலக்கணங்கள் முழுதும் அமையப் பாடப்பட்டது என்று சொல்ல முடியாது. அலகை விநோதம் - இந்திரசாலம்; இதுவரை கலிங்கத்துப் பரணி இந்த இலக்கணப் படி உள்ளது. இதன் பின்னர், 'கனா நிலை நிமித்தம் ....... அவர்தம் பழிச்சா மன்னவன்' என்பது வரையுள்ள பகுதிகள் இலக் கணத்தில் உள்ளபடி பரணியில் இல்லை. (பழிச்சா என்பது பழிச்சும் என்று இருத்தற்கு உரியது எனத் தோன்றுகிறது.)*

*யானை சாய்த்த அடுகளத்தல்லது யாவரும் பெறார் பரணிப்பாட்டே 'என்பதனால், பரணியானது போரை வைத்தே பாடப்படும் இலக்கியம்* என்பது மிகவும் தெளிவு. வச்சணந்தி மாலை, கலிங்கத்துப் பரணி பாடப்பெற்ற பிறகு எழுதப் பெற்ற இலக்கணம். அது கூறும் இலக்கணம்:*

---

* *பிற்காலத்தில் தத்துவராயர் தம் குருவின் புகழை அஞ்ஞவதைப் பரணி மோகவதைப் பரணி என்ற இரு நூல்களால் பாடியபோது, அவர் யானைகளைச் சாய்க்கவில்லையாதலால், பரணிபாடுதல் தகாது என்று சிலர் ஆட்சேபம் கூறியதாகவும், அவர்களைத் தத்துவராயர் தம் குருவின் சந்நிதியில் மூன்று நாள் இருக்கச் செய்தபோது, அவர்கள் எல்லா ஆன்ம போதமும் இழந்த சமாதி நிலையில் அடங்கி விட்டமை யால், அவர் அதைக்காட்டி, சமரிடை ஆயிரம் யானையைச் சாய்ப் பதைவிட இது பல மடங்கு மேலான வெற்றி என்று உணர்த்தினார் என்பதாகவும் வரலாறு சொல்லப்படும். எமது தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு காண்க.*

மூண்ட அமர்க்களத்து மூரிக் களிறட்ட
ஆண்தகை யைப்பரணி ஆய்ந்துரைக்க – ஈண்டிய
நேரடியே யாதியா நீண்டகலித் தாழிசை
ஈரடிகொண் டாதியுடன் ஈறு.

*இங்கு களிறு எத்தனை என்று குறிப்பிடவில்லை. யாப்பைக் கூறுமிடத்து இதன் உரையானது, 'வெண் கலிப்பாவாற் பாடினும் இழுக்காது' என்று கூறுகிறது.*

*பின்னால் ஆயிரம் யானை என்று இலக்கணங்கள் கூற லாயின. பிரபந்த மரபியல் என்ற ஒரு சிறு இலக்கண நூல் யானை ஆயிரம் என்றே சொல்லுகிறது (19); இதன் காலம் 16ஆம் நூற் றாண்டு:*

படைபுக்கு ஆயிரம் பகடற ஒன்னார்
போரில் எதிர்ந்து பொரும்அர சனுக்குக்
கடவுள் வாழ்த்துக் கடை திறப்புப் பாலை
நிலம்காளி கோட்டம் நிலையிய கழுது
காளிக்குப் பேய்சொலல் அப்பேய்க்குக் காளி
சொல்வது, அதனால் தலைவன் கீர்த்தி அருளுதல்
அவன்செல் லிரும்போர் ஊன்ற ஆர்ப்பரித்தல்
போராடல் பொருகளம் விரும்பல் இவற்றை
நாற்சீ ராதியில் நண்ணுமீ ரடியின்
ஏறாது பரணி இயம்புதல் நெறியே.

*(இப்பாட்டியலில் அடுதல் வார்த்தல் கொள்ளப்படவில்லை.)*

ஆயிரம் யானை அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி

*என்பது இலக்கண விளக்கச் சூத்திரம். பரணிப் பிரபந்தத்தின் உறுப்புக்களையும் இந்நூல் சுருங்கக் கூறுகிறது:*

கடவுள் வாழ்த்து, கடைதிறப் புரைத்தல்,
கடும்பாலை கூறல், கொடுங்காளி கோட்டம்,
கடிகண முரைத்தல், காளிக் கதுசொலல்,
அடுபேய்க் கவள்சொலல், அதனால் தலைவன்
வண்புகழ் உரைத்தல், எண்புறத் திணையுற
வீட்டல், அடுகளம் வேட்டல், இவைமேல்
அளவடி முதலா அடியிரண் டாக
உளமகிழ் பரணி உரைக்கப் படுமே.

இது வச்சணந்தி மாலையின் கூற்று முதலியவற்றைப் பெருக்கிய தென்பது தெளிவு.

ஈறில் வணக்கம் கடைநிலம்பேய் என்பனவும்
வீறுசால் ஐயைக்கு மெய்ப்பேய்கள் – கூறித்
திறம்படச் சொல்லினவும் செப்பிற் பிறவும்
புறப்பொருள் நூல் கொண்டு புகல்.

'பிறவும் என்றதனால் பாட்டுடைத் தலைவனைச் சிறப்பித்தலும், அவன் படையெடுத்துச் சென்ற முறையும், செரு முடித்தலும், கூழட்டல் முதலாயினவும் கொள்க' என்று உரைகாரர் எழுது கிறார்.

பரணியானது சந்தத் தாழிசையால் பாடப்பெறும். தாழிசைக் கொச்சகமாகிய பரணிச் செய்யுள் என்பர் பேராசிரியர். தோற்றார் பெயரைச் சார்த்தியே நூல் பெயர் பெறும். கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி போன்ற பெயர்களைக் காண்க. "பரணி யாவது காடுகெழு செல்விக்குப் பரணி நாட் கூழுந் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப் பற்றியது. அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று" என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் தொல்காப்பியம் செய்யுளியலுரையில் எழுதுகின்றனர். பரணி பாடுதலை மகா பாரதமும் குறிப்பிடுகிறது (கிருட்டினன் தூது, 134). "பரணியிற் பிறந்தவன் தரணி யாள்வான் என்ற பழமொழியும், பரணியான் பாரவன் என்ற மயிலைநாதர் மேற்கோளும் (நன்னூல் சூ. 150 உரை), பரணி நாட் பிறந்தான் (சிந்தாமணி 1813) என்பதற்கு, 'பரணி, யானை பிறந்த நாளாதலின், அதுபோலப் பகையை இவன் மதியான்' என்று நச்சினார்க்கினியர் எழுதிய விசேட உரையும், பரணி நாள் வெற்றியின் சம்பந்தமுடையதென்பதைத் தெரிவிக்கின்றன" என்பது ஐயரவர்கள் குறிப்பு - இதனால், கலிங்கத்துப் பரணி என்ற பெயர் பரணிப் பிரபந்தத்தைக் குறிப் பிடுவது அன்றியும், கலிங்கத்து வெற்றி என்றும் பொருள்படும் போலும். நூலிலுள் பயிலும் கலிங்கப் பரணி என்ற தொடர் கலிங்க வெற்றி என்றும் பொருள்படும்:

காட்டிய வேழ அணிவாரிக்
 கலிங்கப் பரணிநங் காவலன்மேல்
சூட்டிய தோன்றலைப் பாடீரே!
 தொண்டையர் வேந்தனைப் பாடீரே!

என்ற பாடலைக் காண்க (536).

பரணி பாடுவது மிகவும் கடினம் என்று பண்டைக் காலத்தில் புலவர்களிடையே ஒரு கருத்து நிலவிற்று. அது பற்றியே எம கண்டம் பாடுவதுபோல, பரணி பாடுவதற்கும் ஓராசிரியர் சில நிபந்தனைகள் அமைத்துக் கொடுக்கிறார்: "பரணி பாடுவதாவது, களப் போரில் வெற்றி கொண்ட அரசனது வெற்றி மேம்பாட்டைச் சிறப்பித்துப் பாடுகின்ற புலவன், அவ்வரசனது வேல் முதலான படைகளால் அமைத்த பரணின் மீது நின்று கொண்டு பிரபந்தம் பாடுவது மரபு என்றார். தொல்காப்பியத்தில் இதற்கு இலக்கணம் இன்மையால் இது பிற்காலத்தில் படைத்துக் கொண்ட ஒரு பிரபந்தம் போலும். பரணிப் பிரபந்தம் பாடுவது சற்றே கஷ்ட சாத்தியமான காரியம் என்று கவி வல்லோர் கூறுவர்"* வச்சணந்திமாலை சிறு பிரபந்த வகைகளை முதலில் சொல்லி விட்டு, இறுதியில் பரணியையும் பெருங்காப்பியத்தையும் சொல்வதால், பரணியிடத்து அது வைத்துள்ள பெருமதிப்புப் புலப்படும்.

காளமேகப் புலவர் தாம் இன்னார் என்று அதிமதுர கவிக்கு அறிவிக்கும் முகமாக ஓலையில் எழுதி அனுப்பிய பாடலில் பரணிப் பிரபந்தத்தைக் குறிப்பிடுகிறார்:

**தூதைந்து நாழிகையில், ஆறு நாழிகைதனிற்**
**சொற்சந்த மாலை சொல்ல,**
**துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனில்**
**தொகைபட விரித்து ரைக்க,**
**பாதஞ்செய் மடல்கோவை பத்து நாழிகைதனில்,**
**பரணியொரு நாள் முழுதுமே,**
**பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே –**
**பகரக் கொடி கட்டினேன்.**

ஓரிரு தினத்தில் பாரகாவியம் பாடவல்லவர் ஒரு நாள் முழுதும் பரணி பாடவேண்டுமென்றால், அது எத்துணைக் கடினமென்று அவர் கருதினார் என்பது நன்கு புலப்படும்.

## நூற்பொருள்

இந்நூல் கடவுள் வாழ்த்துத் தொடங்கி, கூழ் அடுதல் முடிய 13 பகுதிகள் உடையது. கடவுள் வாழ்த்தில் கூறப்பட்ட பொருளை முன்னர்க் கூறினோம். இனி கடைதிறப்பு: அதாவது, தலை நகரத்துள்ள பல்வேறு மகளிரும் நாட்காலையே எழுந்து, தம்

* தொண்டைமண்டல சதகம் 92ஆம் பாடல் உரைக் குறிப்பு.

தோழியர் வாயிற்கடை முன்னின்று, தம் அரசனும் அவன் தானைத் தலைவனும் பெற்று வந்திருக்கும் கலிங்க வெற்றியைப் பாடு தற்குத் தோழியரைத் துயிலெழுப்புவது. இவ்வாறு உயர்குல மகளிரும், அரசனும் பிற தலைவரும் விரும்பிய மகளிரும், சிறை யாகவும் திறையாகவும் பெற்ற மகளிரும், வீர மகளிர் பொது மகளிர் முதலியோரும், எழுப்பப் பெறுகின்றனர். பரணி விழாக் கொண்டாடும் பொருட்டு இவர்களை அழைப்பதே கருத்தென்க. காடு பாடியதில். காளி தேவி உறையும் காடு ஆகிய பாலை நிலம், அங்குள்ள மரங்கள் பிராணிகள், பாலையின் வெம்மை முதலியன கூறப்பெறும்.

கோயில் பாடியது: காளிதேவி வாழ்கின்ற கோயிலின் அமைப்பு, வழிபடுவோர் வந்து பலிகொடுக்கும் காட்சி, பேய்கள், சுடலை என்பன கூறும்.

தேவியைப் பாடியது: கொற்றவையின் திருவுருவ வருணனை.

பேய்களைப் பாடியது: தேவியைச் சூழ்ந்துள்ள பேய்களின் வருணனையும் செயலும் கூறும். உடல் ஊனமுள்ள பேய்களின் வருணனை.

இந்திரசாலம்: தேவி, பேய்கள் சூழ ஆசனத்தில் வீற்றிருக்க, ஒரு முதுபேய் வந்து தான் கற்ற இந்திரசால வித்தையைக் காட்டுகிறது. போர்க்காட்சியை அது காட்ட, மற்றப் பேய்கள் மெய்யென்று எண்ணி ஏமாந்து துன்புற, தேவி வித்தையை நிறுத்தச் செய்கிறாள்.

அடுத்த பகுதி இராச பாரம்பரியம்: குலோத்துங்கனுடைய முன்னோர் பெருமைகளை முறையாகப் பேய் சொல்லிக்கொண்டு வருகிறது. கரிகாலன் மேருவில் புலி பொறித்தது, அவனுக்கு நாரதர் பழைய வரலாறுகளை உரைத்தது - முசுகுந்தன், சிபி முதலியோர், தூங்கெயி லெறிந்தவன், களவழியுரை கேட்டு உதியன் தலையை வெட்டி விட்டவன் என்போர் வரலாறுகள்; பின்னர் பராந்தகன், முதலாம் இராசராசன், இராசேந்திரன், இராச மகேந்திரன் ஆகியோர் செயல்கள்; குலோத்துங்கன் நாரதர் உரைத்தபடி வரலாற்றை இமயத்தில் பொறித்தது - ஆகியவை சொல்ல, தேவி குலோத்துங்கனை வாழ்த்துகிறாள்.

பின் பேய் முறைப்பாடு: போரின்மையால் பசியால் மிகவும் துன்புற்றோம் என்று பேய்கள் தேவியிடம் முறையிடுதல், முது

பேய் கலிங்க நாட்டில் தான் கண்ட துர்நிமித்தங்களைக் கூறு தல், தேவி பரணிப்போர் தோன்றும் எனக் கூறிக் கலிங்கப் போரின் கொடுமையைக் கூறுதல்.

அவதாரம்: தேவி பேய்களுக்குக் குலோத்துங்கன் பிறப்பு, படைப்பயிற்சி, இளவரசப் பதவி, திக்கு விசயம், அச்சமயம் சோழ மன்னன் இறந்ததனால் நாட்டில் எழுந்த தீமை, இவன் சோழ நாடு திரும்பி முடி புனைதல், பொழுதுபோக்கு, பாலாற்றங் கரைக்கு வேட்டையாடச் செல்லவிரும்பல், படைதிரட்டிப் புறப்பட்டுத் தில்லை வணங்கித் திருவதிகை தங்கிக் காஞ்சி நகரடைதல் ஆகியவை கூறுதல். கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் போர் வந்ததெனல்.

அடுத்ததாகிய காளிக்குக் கூறியது என்ற பகுதியில், வந்த பேய் கலிங்கத்தில் நடந்த போரை வருணிக்கிறது. குலோத்துங் கன் காஞ்சியில் சித்திர மண்டபத்தில் இருந்தபோது, சிற்றரசர் வந்து திறையளித்தனர். வட கலிங்க மன்னன் இருமுறை திறை கொணரவில்லை என அறியவே, அவனுடைய களிறுகளோடு அவனையும் பற்றிக் கொணரவேண்டும் என்று அரசன் கூற, கருணாகரத் தொண்டைமான் தான் சென்று எழு கலிங்கத்தை யும் வென்று வருவதாகச் சொன்னான். படைகள் புறப்பட்டு, பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி, பெண்ணை, மண்ணாறு, குன்றி, கிருஷ்ணை, கோதாவரி, பம்பை, கோதமை கடந்து கலிங்க நாட்டுள் புகுந்து சூறையாடின. கலிங்கன் போருக் கெழுந்தபோது அவன் மந்திரி எங்கராயன் ‘இது போருக்குச் சமயமன்று’ எனத் தடுத்தும் கேளாது, கொடும்போர் புரிந்து தோற்றான். தோற்றோடி அவன் ஒளிந்திருந்த இடம் கண்டு அவனையும் பிடித்துச் சயத்தம்பம் நாட்டிக் கருணாகரன் தன் அரசனிடம் மீண்டான்.

களம் காட்டியது; இப்போர்க்களம் காணுமாறு கலிங்கப் பேய் தேவியை வேண்டி, தேவி சென்று கண்டு அதன் சிறப்பைப் பேய்களுக்கு எடுத்துரைக்கிறாள். கூழ் அடுதல்: பேய்கள் கூழ் அட்டுக் குலோத்துங்கனையும் தேவியையும் வாழ்த்திக் கூழ் வார்த்து உண்டு சோழனை வாழ்த்தி முடித்தல்.

### பரணியைச் சிறப்பித்தோர்

சயங்கொண்டார் பாடிய பரணியைப் போற்றி ஒட்டக்கூத்தர் பாடிய ஒரு பாடலை இங்கு குறிப்பிடலாம். பரணி பெற்ற

குலோத்துங்கனுடைய பேரனான இரண்டாம் குலோத்துங்கன் மீது அவர் ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். அதன் செங்கீரைப் பருவம் மூன்றாம் பாடலில், அரசனைப் பாராட்டுவதோடு, பரணி பாடிய சயங்கொண்டாரையும் உளமாரப் போற்றுகிறார்:

எஞ்சா அரண்பெரிய காலிங்கம் ஏழும்எழ
 முந்நீர்கள் ஏழும் எனவந்து
ஏறித் தடுப்பமுனை மாறிக் கலிங்கமேழ்
 பாழ்போக வென்ற ஒருதன்
பாஞ்சா யுதங்களில் இவன்சா துரங்கபல
 முற்றுந் தரைப் படஅடற்
பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி
 கவிச்சக்ர வர்த்தி பரவச்
செஞ்சேவ கஞ்செய்த சோழன் திருப்பெயர,
 செங்கீரை யாடி அருளே.

என்பது பாட்டின் பகுதி. சோழன், முதற் குலோத்துங்க சோழன். 'பாடல் பெரும் பரணி தேடற்கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவ' என்ற தொடர் சயங்கொண்டாருடைய கவித்திறனைப் பெரிதும் உருகிப் போற்றுவது. கூத்தரே ஒரு கவிச்சக்கரவர்த்தி; இவர் மற்றொரு கவிச்சக்கரவர்த்தியைத் 'தேடற்கருங்கவி' என்று போற்றுவது இருவரையுமே உயர்த்துகிறது.* அன்றியும் சயங் கொண்டார் நூலுக்கும் கூத்தர் நூல் செய்த காலத்துக்கும் உள்ள கால இடையீடும் மிகக் குறைவு. பரணியின் காலம் 1112; பிள்ளைத் தமிழின் காலம் சுமார் 1133க்கு முன்.❖ இருபது ஆண்டு களிலேயே நூலுக்கு இவ்வளவு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது; உடன் ஒன்று சொல்ல வேண்டும். ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் இளவரசனாயிருந்து இக்குலோத்துங்கன் காலத்தில் தென் கலிங்கப்போர் வென்றதைப் பாடிய செய்தியை முன் குறிப் பிட்டோம்; காலம் 1096. அவ்வெற்றி குறித்து அவரே ஒரு பரணி பாடினார். எனவே அவ்வொட்டக்கூத்தர், சயங்கொண்டாரை நன்கறிந்தவரென்றே கருத வேண்டும். அவர் இவ்வாறு போற் றுவது, சயங்கொண்டாருடைய பெரும் புலமையை அவர்

---

* ஒட்டக்கூத்தர் புலமைக் காய்ச்சலால் புகழேந்தியைப் பெரிதும் துன்புறுத்தினார் என்ற கதை எவ்வளவு கீழானது என்பதைக் காட்ட இச்சொற்களே போதும்.

❖ இதன் விளக்கத்தை ஒட்டக்கூத்தர் வரலாற்றில் காணலாம்.

உணர்ந்த நிலைமையையும், காய்ச்சலின்றி அதைப் பாராட்டும் தன்மையையும் நன்கு காட்டுகிறது.

அன்றியும், சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் இப்பரணியிலிருந்து மூன்று தாழிசைகளை மேற்கோளாக எடுத்துத் தருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் காலம் சுமார் 1150 - 75 என்று வரையறுக்கப் பெறும். ஆகவே இவருக்கும் சயங்கொண்டாருக்கும் கால இடையீடு அதிகமில்லை. முதிய சயங்கொண்டாருடன் சம காலத்தில் இளைய அடியார்க்கு நல்லார் வாழ்ந்திருக்கவும் கூடும். இவரும் பரணியை மிகவும் சிறப்பாகவே போற்றியிருக்கிறார்.

எல்லாச் சிறப்புணர்ச்சியும் ஒருங்கு திரண்டு, 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்ற பழஞ்சொல்லாகப் பின்னால் உருவெடுத்தது.

### தனிப்பாடல்கள்

குலோத்துங்க சோழன் வென்ற கலிங்க வெற்றி அக்காலத்தில் செயற்கரிய பெருஞ்சாதனையாக இருந்திருக்கிறது. பல புலவர்கள் தனியாகப் பாடிய பாடல்களில் அதை மிகவும் சிறப்பித்திருக்கிறார்கள். ஏடுகளிலும் வேறு நூல்களிலும் அத்தகைய பாடல்கள் பல காணப்படுகின்றன. கிடைக்கின்ற சில பின்வருவன. இவற்றுள் முதல் பாடல் ஏடுகளில் காணப்படுகிறது. மற்றவை தண்டியலங்கார மேற்கோள் பாடல்களாக இதே நூற்றாண்டில் எடுத்துத் தரப்பெற்றுள்ளன.

தடங்குலவு நாண்மாலைத் தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள் விதிர்ப்ப – நடுங்கியதே!
கோள்மேவு பாம்பின் கொடுமுடிய தல்லவோ,
வாள்மே வியகலிங்கர் மண்.

கரடத்தான் மாரியும், கண்ணால் வெயிலும்,
நிரைவயிரக் கோட்டால் நிலவும் – சொரியுமால்,
நீளார்த் தொடையதுவன் நேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்.

கோட்டந் திருப்புருவம் கொள்ளா, அவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி –நாட்டம்
சிவந்தன வில்லை, திருந்தலர் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற.

ஒருவர் ஒருவர்மேல் வீழ்ந்து, வடநாடர்,
அருவர் அருவர் என அஞ்சி, – வெருவந்து
தீத்தீத்தீ என்றயர்வர், சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது.

## முதற் குலோத்துங்க சோழன் (1070 – 1120)

*கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவனாகிய இவ்வரசனின் வரலாற்றை அறிந்துகொள்வது நூல் வரலாற்றை நன்குணரத் துணைபுரியும். இவன் தந்தை கீழைச் சளுக்கிய மன்னனான இராசராசேந்திரன்; தாய் முதல் இராசேந்திரன் மகளும் வீரராசேந்திரன் முதலியோர் சகோதரியுமான அம் மங்காதேவி. வீரராசேந்திரன் புதல்வன் அதிராசேந்திரன் சில மாதங்கள் ஆட்சி செய்து இறந்தபின், சோழர் மரபில் ஆண் சந்ததி இன்மையில், பெண் வழியில் உரிமை பெற்றுச் சோழ அரண்மனையிலேயே வளர்ந்த இவன் சோழ மரபு சளுக்கிய மரபு இரண்டுக்கும் அரசனாக வந்தமையால், உபய குலோத்தமன், குலோத்துங்கன் என்று பெயர் வைத்துக்கொண்டான். தோற்றத்தால் இவன் கங்கைகொண்ட சோழனாகிய இராசேந்திரன் போலவே இருந்தான் என்று அவன் தேவி கூறியதாகப் பரணி கூறும்: இவன் பிறந்தபோது,*

அலர் மழையும் பொழிந்தன, ஆங்கவை கண்டு
கங்கை கொண்ட சோழன்தேவி
குலமகள்தன் குலமகனைக் கோகனக
மலர்க்கையால் எடுத்துக்கொண்டே,

அவனிபர்க்குப் புரந்தரனாம் அடையாளம்
அவயவத்தின் அடைவே நோக்கி,
'இவன் எமக்கு மகனாகி இரவிகுலம்
பாலிக்கத் தகுவன்' என்றே. 237 – 8

*சிலர் ஒரு வரலாறு சொல்வதுண்டு: கங்கைகொண்ட சோழன் மனைவி குலோத்துங்கனைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டதாக. ஏட்டுச்சுவடிகளில் காணும் மிகைப் பாடலைக் கண்ட சில ஆராய்ச்சியாளர் இவ்வாறு கருதினார்கள் போலும்:*

தான் வேண்டிக் கொண்டருளித் தன்னுடைய
தேவியரில் தலைமைத் தேவி
தேன் வேண்டு மொழிச் சோதிக் குலமகட்குத்
திருமகனாய்க் கொடுத்த பின்னை.

இப்பாடல் 'அவனிபர்க்குப் புரந்தரனாம்' என்ற பாடலுக்குப் பின் ஏடுகளில் காணப்படுகிறது. ஆனால் இக்கருத்து பிழை. கங்கை கொண்ட சோழனுக்குப் புதல்வர் ஐவர். அவர்களுள் மூவர் பட்டம் எய்தினர். மூன்றாவது பட்டம் எய்திய வீரராசேந்திரன் மகனாகிய அதிராசேந்திரனும் பட்டம் எய்தினான்; ஆகவே சுவீகாரம் என்ற பேச்சுக்கு இங்கு இடமில்லை.

இம்மன்னனைக் குறித்துச் சுவையுடைய தனிப் பாடல்கள் சில கிடைக்கின்றன.* பின்வருவன சிறப்புடையவை:

வாட்டாறு கொங்கம் வடகலிங்கம் தென்மதுரை
கோட்டாறுங் கொண்ட குலதீபன் – ஏட்டில்
எழுத்திருபத் தெட்டிட்டான் என்றரசர் கேட்டுக்
கழுத்திருபத் தெட்டிட்டார் காண்.

இது அபயனுடைய ஆட்சியாண்டு இருபத்தெட்டு ஆனவுடனே இவன் கீழிருந்த சிற்றரசர் தங்கள் கழுத்தில் இருபத்தெட்டு மணிகள் பூண்டனர் என்று கூறுகிறது; இவ்வாறு செய்தல் அக்கால வழக்கம் என்று இதனால் அறிகிறோம். அபயனுடைய கருநடப் போரைக் குறித்த இரு பாடல்கள்.

உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்
குடருங் கொழுங்குருதி ஈர்ப்ப – மிடைபேய்
பெருநடஞ்சேர் பெற்றித்தே. கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்.

மலையின் அலைகடலில் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தால் – தலைமைசேர்
அம்மாதர் புல்லும் அபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்.

அபயன் பகைவர் நிலையைக் குறிப்பிடும் பாடல்,

மழையார் கொடைத்தடக்கை வாளபயன் எங்கோன்
விழையார் விழையார் மெல்லாடை – குழையார்
தழையாம், உணவும் கனியாம், இனமு
முழையாம், முழையா முறை.

இவன் பிறந்த நாள் பூசம். வேங்கி நாட்டில் இவனுக்கு இள வரசான நிலையில் விஷ்ணுவர்த்தனன் என்பது பெயர்; அங்கு

---

* பெருந்தொகை 807 - 810.

இளமையில் இராசேந்திரன் என்ற ஒரு பெயரும் இருந்தது. வீர ராசேந்திரன் காலத்தில் கடாரத்தில் (மலாயா) நடந்த போரில் இவனும் கடல் கடந்து சென்று கலந்து கொண்டிருந்தான். இராசகேசரி என்ற பட்டம் புனைந்து சோழநாட்டில் முடி புனைந்து கொண்டான். ஐம்பது ஆண்டு ஆட்சி புரிந்தான். மேலைச் சளுக்கியரால் விளைந்த போர்கள் நீங்கலாக, நாடு அமைதியாகவே இருந்தது. பாண்டியரையும் சேரரையும் வென்றான். தென்கலிங்கப் போரொன்று முதலில் நடந்தது. இவனுடைய மகன் விக்கிரமனே அதை முன்னின்று நடத்தி வெற்றி பெற்றான். (ஒட்டக்கூத்தர் இதைப் பாராட்டி விக்கிரமன் மீது ஒரு பரணி பாடினார் என்று முன் குறிப்பிட்டோம்.) பின்னர் நடந்த வட கலிங்கப் போரே கலிங்கத்துப் பரணியின் பொருள். வட கலிங்கத்தரசன் திறையிறுக்கவில்லை என்பதுணர்ந்து, வண்டைமன் கருணாகரத் தொண்டைமான் தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பிப் போர் செய்து வெற்றி பெறச் செய்தான். இவனாட்சியில் ஈழநாடு பிரிந்துவிட்டது. சுங்கம் தவிர்த்தமை யால் சுங்கம் தவிர்த்த சோழன் என்பது இவனுக்கு ஒரு பெயர். சோழநாடு முழுமையும் நிலம் அளக்க ஏற்பாடு செய்தான். சமயப் பொறையுடையவன். திருநீற்றுச் சோழன் என்ற பெயரும் இவனுக்கு உண்டு. மன்னார்குடியில் திருமால் ஆலயம் கட்டிக் கொடுத்தான். பல கலையும் பல மொழியும் வல்லவன். விருத ராசபயங்கரன் முதலான பெயர்கள் இவனுக்குக் உள்ளன. திரிபுவன சக்கரவர்த்தி என்றும் தன்னைச் சொல்லிக் கொண் டான். கங்கை கொண்ட சோழபுரமே தலைநகர். மனைவியர் பலர். கருணாகரத் தொண்டைமான் முதலான பலர் இவனுடைய படைத்தலைவர். புலவர்கள் கவிச்சக்கரவர்த்தி சயங்கொண் டார், நெற்குன்றத்துக்கிழார், கவி குமுதசந்திரன் திருநாராயண பட்டன், வீரைப் பரசமயகோளரி மாமுனி, மருதத்தூருடை யான் குன்றன் திருச்சிற்றம்பலமுடையான்* என்போர். இவர் களுள் திருநாராயண பட்டர் கி.பி. 1097இல் குலோத்துங்க சோழ சரிதை என்ற நூல் பாடிப் பரிசில் பெற்றவர்.* நெற்குன்றம் கிழார் புகலூரந்தாதி பாடியவர்.❖ பரசமயகோளரி மாமுனி❖ கன்னிவன புராணமும் பூம்புலியூர் நாடகமும் இயற்றியவர்.

---

* இவர் வரலாற்றை எமது 11ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு அத்தியாயம் 10இல் காண்க.

❖ இவர்கள் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்.

குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று அங்கு தனித்தனிப் பிரிவுகளாய் ஆட்சி செய்து கொண்டிருந்த பாண்டியர் ஐவரையும் வெற்றி கொண்டான் என்று கலிங்கத்துப் பரணி கூறுகிறது. கலிங்கமந்திரி எங்கராயன் தனது மன்னன் அனந்தபாலனை நோக்கிக் கூறும்போது சொல்லுகிறான் (382).

விட்ட தண்டினில் மீனவர் ஐவரும்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலும்நீ.*

இது அப்படியே குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியிலும் சொல்லப்பட்டுள்ளது.

தன்பெருஞ் சேனை ஏவிப் பஞ்சவர்
ஐவரும் பொருதஅப் போர்க்களத் தஞ்சி
வெரிந்அளித் தோடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து.

மந்திரி எங்கராயன் சாசனத்திலும் குறிப்பிடப்படுகிறான். குலோத்துங்கனுடைய புகழ் சூழ்ந்த புணரி என்று தொடங்குகின்ற மெய்க்கீர்த்தியில் கலிங்க மேழும் குலோத்துங்கன் வென்றான் என்று சொல்லும் போது, கலிங்கருடைய தளகர்த்தர் வரிசையில் இவன் முதல் படைத்தலைவனாகச் சொல்லப்படுகின்றான்.

**கருணாகரத் தொண்டைமான்**

குலோத்துங்க சோழனைச் சொல்லுவோர் கருணாகரத் தொண்டைமானைச் சொல்லாமல் இருக்க முடியாது. இவனே சோழர் படையை நடத்திச் சென்று வட கலிங்கப் போர் வென்றவன். இவன் சேனாபதியாயிருந்ததோடு சிறந்த அமைச்சனாயுமிருந்தான். 'அபயம் மந்திரி, முதல்வனே' என்றும், 'அரசர்கள் நாதன் மந்திரி' என்றும் பரணி குறிப்பிடும். வண்டைநகர் அரசன், அடல்தொண்டைமான், வண்டை வளம்பதி பாடீரே, பல்லவர் தோன்றலைப் பாடீரே, தொண்டையர் வேந்தனைப் பாடீரே என்றும்,

தொண்டையர்க்கு அரசு முன்வரும் சுரவி
துங்கவெள் விடை உயர்த்த கோன்,
வண்டையர்க்கு அரசு பல்லவர்க்கு அரசு
மால்க ளிற்றின்மிசை கொள்ளவே.

* தண்டு - படை. மீனவர் ஐவர் - பஞ்சவர்; பாண்டியர் ஐவர்.

என்றும் பாடியதனால், கருணாகரத் தொண்டைமான் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்தான் என்று தொண்டை மண்டல சதகம் (92) பாடுகிறது:

> பண்டையோர் நாளையி லோரேழ் கலிங்கப் பரணி கொண்டு
> செண்டையும்மேருவில் தீட்டுவித் தோன்கழற் செம்பியன்செய்
> தொண்டைநன்னாடு புரக்கின்ற கோன்நந்தி தொன்றலெங்கள்
> வண்டையர் கோன்நம் கருணாகரன்தொண்டை மண்டலமே.

நந்தி தோன்றல் என்று இப்பாடலில் வருவது பல்லவ மரபென்று காட்டும்.

பொதுவாக மண்டல சதகமுடையார் அனைவரும், அவர் களுள் தொண்டை மண்டல சதகமுடையாரும், சிறப்பான தலைவர் ஆசிரியர் தங்கள் மண்டலத்தார் என்று கூறிக் கொள் வதில் பெருமகிழ்ச்சியடைகிறார்கள், உண்மையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அந்த நெறிக்குரியதே இந்தப் பாட்டும். இதை நம்பி, அம்மண்டலத்தில் சென்னையருகே உள்ள வண் டலூரே கருணாகரனுடைய வண்டை என்று முடிவு கட்டிய ஆராய்ச்சியாளரும் உளர். ஆனால் உண்மை வேறு.

காஞ்சிப் பல்லவர் வீழ்ச்சியடைந்து, சோழராட்சி ஓங்கி யிருந்த காலத்தில், ஒடுங்கிய பல்லவ மரபில் வந்தோர் பலர் சோழரின் கீழ் படைத்தலைவராகவும் அமைச்சராகவும் அமர்ந் திருந்தார்கள். இவர்கள் தொண்டை நாட்டில் மட்டுமன்றிச் சோழ நாட்டில் பல இடங்களிலும் வாழ்ந்தார்கள்.

தங்கள் பெயர்களில் தொண்டைமான் பல்லவன் என்ற சொல்லைச் சேர்த்து வழங்குவது இவர்கள் இயல்பு. இவ்வாறு வாழ்ந்தவர்களில் கருணாகரத் தொண்டைமானும் ஒருவன். இவனும் பல தலைமுறைகளாகத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியில் வாழ்ந்தவுன். முதல் பராந்தக சோழன் காலத்தே இங்கு வாழ்ந்த மூவேந்த வேளான் சாத்தன் உலகன் என்பவன் ஒரு சோழ அதிகாரியாக விளங்கியவன். சில தலை முறைகள் கழித்து அந்த வழியில் தோன்றிய இக்கருணாகரன் குலோத்துங்க சோழனிடத்துச் சிறந்த படைத் தலைவனாக விளங்கினான். இவனையும் இவ்வூரையும் இவன் மனைவியையும் குறிப்பிட்டு 1113இல் எழுந்த ஒரு சாசனத்தை இங்கே குறிப்பிடு வோம். "ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு

நாற்பத்து மூன்று. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற் கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழ மண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளான் கருணாகரனார் ஆன தொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநந்தா விளக்கு." இது கருணாகரத் தொண்டைமான் ஊர் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி என்று கூறுகிறது. இவ்வூர் இன்று சோழநாட்டில் கும்பகோணம் தாலுக்காவில் திருநறையூருக்கும் திருச்சேறைக்கும் இடையே அமைந்து வண்டுவாஞ்சேரி எனப் பெயர் திரிந்து வழங்குகிறது. கருணாகரன் மனைவி அழகிய மணவாளனி மண்டையாழ்வார் என்று பெயர் பெற்றிருந்தாள். ஆழ்வார் என்பது அக்காலத்துப் பெருங்குலத்துப் பெண்டிரைக் குறிக்க வழங்கிய சொல். அழகிய மணவாளினி என்பது அழகிய மணவாளன் என்பதன் பெண் பாற் பெயர். அழகிய மணவாளன் திருவரங்கநாதன். எனவே கருணாகரத் தொண்டைமான் மரபினர் திருமால் அடியவர் என்பதும் தெரிகிறது. இச்சாசனம் அரசனுடைய ஆட்சி ஆண்டு நாற்பத்து மூன்று எனவே, கி.பி. 1113ஆகும். வண்டாழஞ்சேரி என்பது பரணியில் வண்டை என்று இலக்கணப்படி சுருக்கப் பட்டிருக்கிறது. கருணாகரன் - இராம பிரானுக்கு ஒரு திரு நாமம். இலங்கையெறிந்த கருணாகரன்.

முன்காட்டிய தொண்டையர்க்கு அரசு என்ற பாடலில் பல்லவர்க்கு அரசு குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் கருணாகர னுக்கு மூத்தவனான இராசேந்திர மூவேந்த வேளார் சேனாபதிப் பல்லவ அரசர் என்பர். இவர் வயதினால் கருணாகரனுக்கு மூத் தவராக இருப்பினும், பதவியால் அவனுக்கு அடுத்த நிலையில் தான் உள்ளார். இது உலகியல்பு இவ்விருவரோடு கூட வாண கோவரையன் என்ற மற்றொரு சேனாபதியும் கருணாகரன் தலைமையில் போருக்குச் சென்றான். இதை,

வாசி கொண்டு அரசர் வாரணம் கவர,
வாண கோ வரையன் வாள்முகத்
தூசி கொண்டு, முடிகொண்ட சோழன்ஒரு
சூழி வேழம்மிசை கொள்ளவே.

என்ற பாடலால் அறியலாம். இங்கு முடிகொண்ட சோழன் என்பது அப்பட்டம் பெற்ற மூவேந்த வேளார். எனவே கருணா கரனோடு கலிங்கப்போர் மேற்கொண்டு சென்ற பிற படைத்

தலைவர்கள் பல்லவர்க்கு அரசு என்ற இராசேந்திர மூவேந்த வேளார், சேனாபதிப் பல்லவ அரசர், வாணகோவரையர், பஞ்ச நதிவாணன், புதல்வனான முடி கொண்ட சோழ மூவேந்த வேளார் என்பது சாசனத்தாலும் பரணிப் பாடல்களாலும் தெரிய வரு கின்றது. விக்கிரம சோழன் காலத்திலும் கருணாகரத் தொண்டை மான் பதவியில் இருந்திருக்கிறான் என்று விக்கிரமசோழன் உலா வினால் அறிகிறோம். கருணாகரத் தொண்டைமானைப் பரணிப் பிரபந்தம் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடுகிறது.

கருணாகரத் தொண்டைமானுடைய கலிங்கப் போர்த் திறத்தைக் கூறும் தனிப்பாடலொன்று பரணி ஏட்டுப் பிரதி களிற் காணப்படுகிறது:*

---

* இப்பாடலை மேற்கோளாகக் காட்டிச் சதகம் பதிப்பித்த சி. கு. நாராயணசாமி முதலியார் பின்னும் இரு பாடல்களையும் முறையே சிலை எழுபது, கருணாகர வன்னியர் சதகம் என்ற பெயர்களால் காட்டி, கருணாகரன் வன்னிய மரபினன், பல்லவரும் வன்னியர் என்று எழுதியிருக்கிறார். அவர் காட்டிய பாடல்கள் பின்வருவன:

அவிக்கா தரங்கூர் புனிதர் மகிழ்ந்து
அருள் வன்னியரை யாம் புகழ்ச்
செவிக்கா ரமுத மெனக்கேட்டுச்
சிந்தை உவந்து சீர்தூக்கிப்
புவிக்கா யிரம்பொன் னிறைநீக்கிப்
பொற்றண் டிகைபூ டணத்தோடும்
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான்,
கருணாகரத் தொண்டை வன்னியனே.

எறிக்கும் புகழ்க் கச்சி ஏகாம்பரச் சம் பெனுந்தமிழால்
பொறிக்கும் புலிக்கொடியான் புகழ்பெற்ற புலமை எல்லாம்
தறைக்கும் அதனப் புறத்தும் தெரிந்திடும் தன்மைகண்டேன்
மறைக்குவா லோதும் கருணாகரத் தொண்டை வன்னியனே.

இவற்றுள் முதற்பாடல் 'கவிச் சக்கரவர்த்தி கம்பர் வன்னிய பூபதிகள் மேல் பாடிய செம் பொற் சிலை எழுபது' என்ற நூலில் 68ஆம் பாடலாகவுள்ளது. இதையடுத்து பரணியிறுதியில் 'வாழ்த்தினவே' என்று முடியும் தாழிசை யைத் தழுவி அதே யாப்பில் ஒரு விருத்தப் பாட்டும், அடுத்து பரணியிறுதிப் பாட்டை யொத்த சந்தத்தில் ஒரு விருத்தப் பாட்டும் உள்ளன. கருணாகர வன்னிய சதகம் வேறிடத்தில் கேட்கப்பட்டதில்லை. இவை யாவும், சாதி யுணர்வு மிகுந்து சாதியைப் புகழ்ந்து நூல்கள் செய்யும் முயற்சிகள் பெருகிய 17ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற பாடல்களும் நூல்களுமாகும்; உண்மை யில் கருணாகரத் தொண்டைமானுக்குத் தொடர்புடையவை அல்ல.

சரநிரைத்தா லன்ன தண்பனி தூங்கத் தலைமிசைச்செங்
கரநிரைத்தாரையும் காண்பன்கொ லோகலிங் கத்துவெம்போர்
பொரநிரைத் தார்விட்ட வேழமெலாம் பொன்னி நாட்டளவும்
வரநிரைத்தான் தொண்டைமான் வண்டைமாநகர் மன்னவனே.

## காவியப்பண்பும் நாட்டுப்பற்றும்

ஆங்கில இலக்கியப் பயிற்சி உள்ளவர்கள் கிரேக்க ரோம காவியங்களை மொழிபெயர்ப்பில் படித்து அவற்றை மிகவும் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். ஹோமர் எழுதிய ஆடிஸி, வர்ஜில் எழுதிய ஈலியட் முதலிய பெருங் காவியங்கள் இத்தகைய புகழுக்கு உரியவை என்பது உண்மை. இவற்றை ஒத்த வீர காவியங்கள் ஆங்கிலத்தில் எழுந்ததில்லை என்பதும் உண்மை. ஆனால் தமிழ் படித்தவர்களுக்கு, அந்த வீர காவியங்களிடத்தில் ஏற்படத்தக்க மதிப்பு சற்று அளவு பட்டுத்தான் இருக்கும். கலிங்கத்துப்பரணி ஒன்றே போதும், தமிழில் வீர காவியத்தின் நிலைமையை எடுத்துக் காட்டுவதற்கு. வீர காவியத்தன்மைக்குக் கம்பராமாயணம் போன்ற பெருங் காவியங்களைத் தேடிப் போக வேண்டியதில்லை: இச்சிறு நூலே போதும். காவியப் பெருமைக்குள்ள எல்லா அம்சங்களும் இதில் அடங்கியுள்ளன. பெருங்காவியத்தில் பாத்திரங்களின் படைப்பும் அவர்களின் குணச்சிறப்பும் ஒரு சிறப்பான அம்சம். இங்கு பாத்திரங்களே அனேகமாக இல்லை. சோழ மன்னன், அவனுடைய படைத் தலைவன் கருணாகரன், கலிங்க மன்னன் அனந்தபன்மன், அவனுடைய மந்திரி எங்கராயன், பேய்களின் செயல் இவ்வளவோடு கதை முடிந்து விடுகிறது. இப்படி பாத்திரமே இல்லாமல் பெருங் காவிய அமைப்பை நம் கவிஞர் செய்து காட்டுவது, இன்றைய கண்கொண்டு சொல்லும்போது, நாட்டுப்பற்று என்ற ஒரே பண்பினால் தான்.

நாட்டுப்பற்றைச் சிறப்பித்துப் பாடிய இலக்கியம் பாரதியாருக்கு முன் தமிழில் இருந்ததில்லை என்பது புதுமை மோகங் கொண்ட அறிவாளிகள் கூற்று. இக்கூற்றைப் பொய்ப்பிப்பதற்கு இப்பரணி காவியம் ஒன்று போதும். இவர் இராச பாரம்பரியம் கூறுவது, நாட்டுப்பற்றுணர்ச்சியின் விளைவு. புராணங்களில் தான் வமிசாவளி கூறப்படும். இவர் கூற்றில், புராண காலம் - வரலாற்றுக்காலம் இரண்டின் பாரம்பரியங்களும் சிறப்பிக்கப் பெறுகின்றன. தூங்கெயில் எறிந்த தொடித்

தோட் செம்பியன், பொய்கை களவழிக் கவிதை உரை செய்யக் கேட்டு உதியன் தளையை வெட்டிவிட்ட கோச்செங்கணான், பட்டினப்பாலை கொண்ட கரிகாலன், பராந்தகன், இராசராசன், கடாரங் கொண்ட இராசேந்திரன் என்று சொல்லிக் கொண்டே போகிறார். ஒரு சிறப்பு, பட்டத்து வராமலே இறந்து போன இராசமகேந்திரன் ஆற்றலை இவர் புகழ்ந்து பாடுவது. இவர் சொற்களால் அக்காலத்து மக்கள் மனத்தில் என்ன எழுச்சி விளைந்திருக்கும் என்பதை இன்று எண்ணிப் பார்க்க வேண்டும். உலகமாதாவான காளிதேவியே குலோத்துங்கன் மரபு கேட்ட பொழுது, பெற்ற அன்றினும் பெரிது உவந்தேன் என்று சொல்லு மாறு செய்கிறார் கவிஞர்:

**வையகமாம் குலமடந்தை, மன்னபயன்**
**தன்னுடைய மரபு கேட்டே,**
**ஐயனை யான் பெற்றெடுத்த அப்பொழுதும்**
**இப்பொழுது ஒத்து இருந்ததில்லை.**

கலிங்கப்படையை அற்பமெனக் கவிஞர் புறக்கணிக்கவில்லை. வலிமிக்கவனோடு போர் செய்தால்தான் சோழர் படைக்கும் பெருமை என்பதை நன்குணர்ந்து இவர் கலிங்கர் படையைப் பல பாடல்களில் மிகவும் சிறப்பாக வருணிக்கிறார்.

தொடக்கத்தில் சத்தமாதர் வாழ்த்துக் கூறுமிடத்து, பல கொடிகளும் தாழ்ந்து செம்பியர் கொடி உயர்ந்தது என்று இவர் கூறுவதும், சோழ நாட்டினிடத்துள்ள பற்றைக் காட்டுவதாகும்:

**கேழல் மேழி களிறு ஆளி வீணை சிலை**
**கெண்டை என்று இனைய பல்கொடி**
**தாழ, மேருவில் உயர்த்த செம்பியர்**
**தனிப்புலிக் கொடி தழைக்கவே.**

## நாடகத்தன்மை

பரணிக்காவியம் எடுத்த இடமெல்லாம் நாடகப் பண்பு பொருந்தியதாயுள்ளது. கடைதிறப்புப் பகுதி முழுமையும், அங்குள்ள பாடல்கள் ஒவ்வொன்றும், தனித்த ஒரு நாடகக் காட்சியாக அமைந்திருக்கிறது. வேறிடத்தில் காண்பதற்கரிய சொல்லோவியம் என்று கூறுதல் மிகையாகாது. "திரு அனந்த லினும் முகம் மலர்ந்து வரும் தெரிவை மாதர் கடை திறமின்" என்ற ஒரு தொடர் இக்கருத்தை மெய்ப்பிப்பதற்குப் போதுமானது.

இது போக, பல பாத்திரங்களை வைத்துக் காட்சி காட்சி யாக நாடகம் நடத்தும் திறத்தையும் இங்கு பார்க்கலாம்.

தேவியின் கோயிலில் ஒரு முதுபேய்வந்து நின்றது. அது முன்னமே தேவியினிடத்து அபசாரப்பட்ட பேய். அதைப் பார்த்த வாயில் காவலனாகிய, குடர்சூடி நிணச்சட்டை இட்டுநின்ற கோயில் நாயக நெடும்பேய், சந்நிதியில் சென்று கும்பிட்டுச் சொல் கிறது: "முன்னமே அபசாரப்பட்ட பேய்களைத் திருவுள்ளம் அறியும். அவற்றுள் ஒரு முதுபேய் அடியேனை விண்ணப்பம் செய்க என்றது. இப்பேய் இங்கு ஒரு தீங்கும் செய்ததில்லை. என் கொலோ திருவுள்ளம்?" எனக் கேட்கிறது. தேவி, 'அழைக்க' என்றலும் கோயில் நாயகப் பேய் அழைக்க, முதுபேய் வந்து அணுகி அஞ்சி நின்று. "உனது ஆணையில் பிழைக்க வந்தனம், பொறுத்து எமக்கு அருள்செய், பெண்ணணங்கு" என்று சொல் கிறது. 'உன் பிழையைப் பொறுத்தோம்' என்று தேவி சொல்கிறாள்.

கலிங்க அரசனுடைய அவையில் மக்கள் வந்து சோழர் படை வந்தமையைச் சொல்கிறார்கள். மன்னன் கேட்டு மிகவும் சினந்து கூறுவது கேட்ட மந்திரி எங்கராயன், மிகவும் பணிந்து, "நான் ஒன்று கூறுவன் கேட்க" என்று பணிவோடு கூறுகிறான். அவன் கூறுவதைக் கேட்டு அமைதிபெறாத கலிங்க மன்னன் படைதிரட்ட உத்தரவிடுகிறான். இந்த இடங்களெல்லாம் இன் றுள்ள நாடக உத்திகள் அனைத்தையும் தழுவி உள்ளன. அப்படியே எடுத்து நாடகமாக நடிக்கத்தக்க முறையில் அமைந்துள்ளன.

**நூல் நயம்: சுவைகள்**

சயங்கொண்டார் பெருங்காப்பியம் பாடுதற்கேற்ற புலமைத் திறன் படைத்தவர் என்பதில் ஐயமில்லை. பேரரசில் அரசவைப் புலவராக இருந்த காரணத்தால் பெருங்காப்பியம் பாடுவதற் கான தூண்டுதல் இவருக்கு இல்லாது போயிற்று, எனினும், இதனுள் பெருங்காப்பிய நிலைக்கான பல்வேறு சிறப்புக்களை யும் பார்க்க முடியும். சயங்கொண்டாரிடத்தில் தமிழ்மொழி சொன்னபடியெல்லாம் பேசுகின்றது. வருணனை, நகைச்சுவை, வீரம், பயங்கரம், கனிவு, சந்தச்சுவை போன்ற அனைத்தையும் இங்கு காணலாம். இது சிறுபிரபந்த மென்றாலும், வீர காவியமே. இதனுள் சந்தவகை 54 என்று சூரிய நாராயண சாஸ்திரி கணக் கிட்டு எழுதுகிறார்.

விண்ணை இடிக்கும் தலை இமயம் – எனும்
வெறியை இடிக்கும் திறனுடையவர் – சமர்
பண்ணிக் கலிங்கத்திருள் கெடுத்தார் – தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு.

என்று பாரதியும் கலிங்கப் போரைக் குறிப்பிடுகிறார்.

### அச்சச்சுவையும் வீரச்சுவையும்

பரணி போர்க் காவியமாதலால் இங்கு போரின் வருணனையும், போர்க்கள வருணனையும், பாலை நில வருணனையும். பேய்கள் அவற்றின் செயல்கள் ஆகியவற்றின் வருணனையுமே அதிகம் இருக்கும். பாலை நிலத்தில் கொற்றவையின் கோயில் இருக்கிறது. ஆதலின் பாலை நில வருணனை 22 பாடல்களால் சொல்லப்படுகின்றது. காட்டின் வெம்மை இங்கு சொல்லப் பட்டது போலப் பயங்கரமாகப் பெருங் காவியங்களிலும் பார்த்தல் அரிது. இரவி இரு பொழுதும் விசும்பில் இயங்காத காரணம், இந்தக் காட்டின் வெம்மை: ஒரு பொழுது தரித்தால் தான் மறுபொழுது ஊடு போக்கு முடிவது; கருமுகிலும் வெண்மதியும் இக்காட்டைக் கடந்து ஓடி இளைத்து உடல் வியர்த்த வியர்வைதான் மழையும் பனியும் - என்றெல்லாம் கவிஞர் கற்பனை விரிந்தோடுகிறது. காட்டிலுள்ள மரங்களைக் கவிஞர் மூன்று பாடல்களால் சொல்லுகிறார்:

பொரிந்த காரை, கரிந்த சூரை, புகைந்த வீரை எரிந்தவேய்,
உரிந்த பாரை, எறிந்த பாலை, உலர்ந்த ஓமை – கலந்தவே.

உதிர்ந்த வன்னி, ஒடுங்கு நெல்லி,
உணங்கு தும்பை, உலர்ந்தவேல்,
பிதிர்ந்த கள்ளி, சிதைந்த வெள்ளில்,
பிளந்த கள்ளி– பரந்தவே.

வற்றல் வாகை, வறந்த கூகை,
மடிந்ததேறு, பொடிந்தவேல்,
முற்றல் ஈகை, முளிந்த விண்டு,
முரிந்த புன்கு – நிரைந்தவே.

இவர் பாலைக்குரிய மரங்களையும் அவற்றின் நிலைமையைக் காட்டும் வினைச் சொற்களையும் எங்கு கற்றார் என்று அதிசயிக்க வேண்டியிருக்கிறது.

தேவி கோயிலில் சாதகர் பலிகொடுக்கிறார்கள். பாடல் களெல்லாம் பயங்கரமான நிலை. ஒரு பாட்டு மட்டும் காட்டு

*வோம். ஒரு சாதகர் தம் சிரத்தை அடிக்கழுத்தோடு அரிந்து கொற்றவையின் கையில் தருகிறார்; தந்த தலை வணங்குகிறது, குறை உடலும் கும்பிடுகிறது; என்ன பயங்கரம்! என்ன பக்தி!*

அடிக்கழுத்தி னுடன் சிரத்தை அரிவராலோ,
அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ,
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ,
குறை உடலம் கும்பிட்டு நிற்குமாலோ!

*பேய்களின் வருணனையில் உள்ள அச்சச்சுவை விளக்க வேண்டியதில்லை. தேவி திருமுன்பு ஒரு முது பேய் வந்து இந்திர சாலம் காட்டுகின்றது. காட்டுகின்ற ஒரு காட்சி இன்றைக்குக் கூட ஏழை மக்கள் வாழும் இடங்களில் 'பார் பார் பட்டணம் பார்' என்று சொல்லி ஒரு முக்காலியை நட்டு அதன் மேல் ஒரு படிகக் கண்ணாடியை வைத்துத் தெருவில் காட்டுவோர் செயல் போல் அமைந்துள்ளது;*

கடக்கம் அன்று அபயன் வென்று வென்றிகொள்
களப் பெரும் பரணி இன்று பார்!
துஞ்சி வீழ் துரக ராசி பார்! உடல்
துணிந்து வீழ் குறை துடிப்ப பார்!
அஞ்சி ஓடும் மத யானை பார்! உதிர
ஆறும் ஒடுவன நூறு பார்!

அற்ற தோள் இவை அலைப்ப பார்! உவை
அறாத நீள் குடர் மிதப்ப பார்!
இற்ற தாள் நரி இழுப்ப பார்! அடி
இழுக்கும் மூளையில் வழுக்கல் பார்!

*சாமானிய வருணனையே இப்படி இருக்கும் பொழுது போர் வருணனை சொல்லவா வேண்டும்? கலிங்க வீரர் தோற்று ஓடுகிறார்கள்:*

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்;
உடலின் நிழலினை, ஓட, அஞ்சினர்;
'அருவர்! அருவர்!' எனா இறைஞ்சினர்,
'அபயம்! அபயம்!' எனா நடுங்கியே.

மழைகள் அதிர்வனபோல் அதிர்ந்து எழும்,
வளவன் விடு படை வேழம் என்று, இருள்
முழைகள் நுழைவர்கள், போரில் இன்றுநம்
முதுகு செயும் உபகாரம் என்பரே.

*அனேகர் மாறுவேடம் பூண்டு பொய்க் காரணம் சொல்லித் தப்பி ஓடுகிறார்கள். சிலர் சிலை நாணை முந்நூலாக மடித்து இட்டுக்கொண்டு 'கங்கை ஆடப் போந்து அகப்பட்டோம், எம்மைக் காப்பாயாக' என்று கெஞ்சுகிறார்கள்:*

வேடத்தால் குறையாது, முந்நூல் ஆக
வெஞ்சிலை நாண் மடித்து இட்டு, 'விதியால் கங்கை
ஆடப்போந்து அகப்பட்டோம் காத்தோம்பு!' என்று என்று
அவிதாவிட்டு உயிர் பிழைத்தார் அனேகர், ஆங்கே.

*சில ஏடுகளில், காளிக்குக் காளி கூறியது என்ற பகுதியில் 93ஆம் பாடல் முதல் போர் பாடியது என்ற தனித் தலைப்புக் காணப்படுகிறது. இப்பகுதி போரை வருணிக்கும் பகுதி. முழுமையும் சந்தப் பாடல். பொருளோடு கூட, சொற்களின் மிடுக்கும் வேகமும், பயங்கர உணர்ச்சியைப் பின்னும் அதிகப்படுத்துகின்றன:*

எடும், எடும், எடும், என எடுத்ததோர்
இகல் ஒலி கடல் ஒலி இகக்கவே,
விடு, விடு, விடு பரி; கரிக்குழாம்
விடும் விடும் எனும் ஒலி மிகைக்கவே;

பொரு புலி புலியொடு சிலைத்த போல்,
பொரு படரொடு படர் சிலைக்கவே;
அரியினொடு அரிஇனம் அடர்ப்ப போல்,
அரசரும் அரசரும் அடர்க்கவே;

குருதியின் நதி வெளி பரக்கவே,
குடை இனம் நுரை என மிதக்கவே,
கரி துணி படும் உடல் அடுக்கியே,
கரை என இரு புடை கிடக்கவே.

*பயங்கர நிகழ்ச்சிக்கும் வீரச்சுவையின் வெளிப்பாட்டுக்கும் அதிக வேற்றுமையில்லை. இப்பாடல்களே வீரச் சுவையை எடுத்துக் காட்டுவனவாகும். நூல் முழுமையும் கலிங்கப்போர் நிகழ்ச்சியைக் கூறுவது ஆதலால், எடுத்த இடமெல்லாம் வீரச்சுவை ததும்பி நிற்கக் காணலாம். முன்னமே, சாதகரொருவர் தம் தலையை அறுத்து வைத்தார் என்று காட்டிய பாடலே வீரச் சுவைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். சோழ மன்னன் படைகளின் பரப்பு:*

அகில வெற்பும் இன்று ஆனை ஆனவோ?
அடைய மாருதம் புரவி ஆனவோ?
முகில் அனைத்தும் அத்தேர்கள் ஆனவோ?
மூரி வேலைபோர் வீரர் ஆனவோ?

பார் சிறுத்தலின் படைபெருத்ததோ?
படைபெருத்தலின் பார் சிறுத்ததோ?
நேர் செறுத்தவர்க்கு அரிது, நிற்பிடம்!?
நெடுவிசும்பலால், இடமும் இல்லையே!

உருத்திரச்சுவை

குலோத்துங்கன் அவையில், 'கலிங்கன் இரண்டு விசை திறை கொடு வருகிலன்' என்று கணக்கர் அறிவிக்கிறார்கள். கேட்ட மன்னனுடைய வதனம் முனிவு கொள்ளவில்லை: ஆனால் அவன் கூறும் சொற்கள் கோபத்தழலைக் கக்குகின்றன:

'உறுவதென் கொல்' என உடல்குலைந் தரசர்
உயிர் நடுங்க ஒளிர் பவளவாய்
முறுவல் கொண்ட பொருள் அறிகிலம்; சிறிதும்
முனிவு கொண்டதிலை வதனமே.

'எளியன் என்றிடினும், வலியகுன் றரணம்
இடிய நம்படைஞர் கடிது சென்று
அளிஅலம்பு மத மலைகள் கொண்டு அணைமின்,
அவனையும் கொணர்மின்' எனலுமே.

அவலச்சுவை

போரில் வீரர் படுவது, வீரத்தையும், அச்சத்தையும், பெரு மிதத்தையும் உருத்திரச் சுவையையும் காட்டலாம். ஆனால் அதே காட்சியை, பட்ட வீரருடைய பெண்டிர் கண்டு அரற்றும் போது, அது சோக நிலையின் உச்சத்தை எட்டுகிறது, கலிங்கப் போர்க்களத்தில் இறந்துபட்ட போர் வீரருடைய உடலைத் தேடி அவர்களுடைய பெண்டிர் அலைகிறார்கள். ஒருத்தி தன் நாயகன் உடலைக் காணமுடியவில்லை; போரின் கொடுமையினால் அவன் உடல் சின்னப்பட்டு உருத் தெரியாமல் குலைந்து போய் விட்டது:

தம் கணவருடன் தாமும் போக என்றே
சாதகரைக் கேட்பாரே, தடவிப் பார்ப்பார்,
"எம் கணவர் கிடந்த இடம் எங்கே?" என்று என்று
இடாகினியைக் கேட்பாரைக் காண்மின், காண்மின்!

மற்றொருத்தி தன் கணவன் உடலைக் கண்டாள். அவன் போரின் வேகத்தில் கையிலிருந்து வேல் எறிந்தான் போலும்: வாயை மடித்து உந்தி எறிவது இயல்பு. அந்த நேரம் அவன் மீது ஒரு வேல் தைக்க அவன் இறந்து விழுகிறான். மடித்தவாய் மடித்தபடி இருக்கிறது. இப்போது வந்து பார்ப்பவளுக்கு, மற்றொருத்தி மீது இவனுக்குக் காதல் ஏற்பட்டு அதரத்தில் வடு உண்டாகி அதை மறைக்க வேண்டி வாயை மடித்திருக்கிறான் என்ற நினைவு எழுகிறது:

வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி,
'மணி அதரத்து ஏதேனும் வடு உண்டாயோ,
நீ மடித்துக் கிடந்தது?' எனப் புலவி கூர்ந்து,
நின்று ஆவி சோர்வாளைக் காண்மின், காண்மின்!

மற்றொருத்தி வந்தாள். கணவன் கைவாளைக் காணவில்லை; மணிமார்போ பருத்த தோளோ காணவில்லை. தேடுகிறாள்:

பொரு தடக்கை வாள் எங்கே? மணி மார்பு எங்கே?
போர் முகத்தில் எவர் வரினும், புறங்கொடாத
பரு வயிரத் தோள் எங்கே, எங்கே?' என்று,
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்!

**நகைச் சுவை**

பயங்கரமான காட்சிகளே மலிந்த இந்த நூலில் நகைச் சுவையும் அதிகமாகவே காணப்படும். அச்சம் தோன்றுவது, இலக்கியத்திலும் நாடகத்திலும், சம்பந்தப்பட்ட பாத்திரங் களுக்கே; அன்றி, படிப்பவருக்கும் பார்ப்பவருக்கும் பல சமயம் நகைச்சுவை விளையும். இத்தகைய நிலைமைகள் பரணியில் பல. போரில்லையாதலினால் உணவின்றிப் பேய்கள் துயருறுவது படிக்க மிக்க நகைச்சுவை தருவது. அப்படியே தேவியின் சந்நி தியில் ஒரு முதுபேய் வந்து இந்திரசாலம் காட்டுவதும், அதன் வித் தையின் விளைவுகள் மெய்யென்று ஏமாந்து பசியால் வாடிய பேய்கள் தொந்தரவு படுவதும், சுவைபடச் சொல்லப்படு கின்றன. அப்படியே, அனந்தபன்மன் ஒளிந்திருந்த மலையைக் கருணாகரன் படைவீரர் சூழ்ந்துகொண்டு காலையில் போர் தொடங்கவும், அங்கு நின்ற கலிங்கர் பொய்யான காரணங்கள் காட்டித் தப்பி ஓட முயல்வதும் ஒரு சுவையுடைய பகுதி. அரைக் கலிங்கம் உரிப்புண்ட கலிங்கர், சமணர் என்று கூறிப் பிழைக் கிறார்கள். கங்கையாட வந்து அகப்பட்டோம் என்பாரும்,

குருதிநீர்க் கோடியாடை கொண்டுடுத்துக் குஞ்சி முண்டித்து, 'அறியீரோ சாக்கியரை உடைகண்டால்' என்று கூறி ஓடுபவரும், ஆனை மணியினைத் தாளம் பிடித்துப்பாடி 'அடிப்பாணர்' எனப் பிழைத்தாரும் அனேகர்.

பேய்களின் வருணனையில் பயங்கரம் ஒருபுறம், நகைச்சுவை ஒருபுறம்: பேயின் செவியில் ஆந்தை ஒதுங்கித் தங்குகிறது; வௌவால் பறக்கிறது. மூங்கிலைக் கண்ட குழவிப்பேய் அம்மா என்று கூத்தாடுகிறது. தாய்ப்பேய் ஒட்டகத்தைக் கண்டு குழந்தாய் என்று தூக்கி ஒக்கலில் வைத்துக் கொள்ளுகிறது. பல பேய்கள் அங்கவீனமாய் உள்ளன. அபயனுடைய முந்தைய போரில், பகைவனிடமிருந்து சிதறிய மூளைச் சேற்றில் வழுக்கி விழுந்து ஒரு பேய் கால் முடம், ஒன்று கை முடம். கூழட்டகாலத்து யானைக் கொம்பாகிய உலக்கையால் குற்றியபோது, ஒன்றின் வலக்கை போயிற்று. குருதியும் குடரும் கலந்து அட்ட சூடான கூழ் தெறித்து ஒன்றின் கண் குருடாயிற்று. அதிகச்சூடான கூழைக் குடித்து, நாச்சுருண்டு சில முழு ஊமைகளாயின. குருதி யாற்றிலே திளைத்து ஆடியதால் குரக்கு வலி ஏற்பட்டுச் சில கூன்முதுகாயின.

முதுபேயின் இந்திரசாலம் கண்டு, பிணந்தின்னலாம் என்று சில பேய்கள் ஒன்றின்மேல் ஒன்று,

> விழுந்து கொழுங்குரு திப்புனல் என்று
> வெறுங்கை முகந்து முகந்து
> எழுந்து விழுந்தசை என்று நிலத்தை
> இருந்து துழாவிடுமே.

பேய்மகளிரின் சிரிப்பொலி கேட்கிறது. அவர்கள் சிரிப்புத் தாங்க முடியாமல், முகம் கோணி, முதுகு திரும்பி, விலா இற்று விட்டது. எல்லாப் பேய்களும் இந்திரசாலத்தை நிறுத்துமாறு கூவுகின்றன.

அதிகமான நகைச்சுவைப் பாடல்களைக் காண்பது, கூழ் வார்க்குமிடத்தில். உணவுப் பந்தியில் மக்கள் இடித்துப் புடைத்து நெருக்குவதுபோல், சயங்கொண்டாருடைய பேய்களும் கூழைப் பெறுவதற்கு முந்துகின்றன. அங்கும் பனவ (பார்ப்பன)ப் பேய், சமணப்பேய், புத்தப்பேய் முதலிய பலவும் உள்ளன. பனவப் பேய், தன் இயல்புக்கு ஏற்றபடி பிச்சை கேட்டு உண்கிறது:

அவதி இல்லாச் சுவைக்கூழ் கண்டு
அங்காந்தங்காந்து அடிக்கடியும்
பவதி பிட்சாந் தேகி எனும்
பனவப் பேய்க்கு வாரீரே.

*உயிர்க்கொலை செய்யாதது சமண் பேய்: ஒரு போழ்தே உண்பது:*

உயிரைக் கொல்லாச் சமணபேய்கள்
ஒருபோழ் துண்ணும், அவை உண்ண,
மயிரைப் பார்த்து நிணத் துகிலால்
வடித்துப் போத வாரீரே.

*இரண்டு பேய்களையும் இவர் குறிப்பிடும் முறைசுவை யாக உள்ளது. பனவப் பேய் மனித உலகில் உள்ளமை போல, 'பவதி பிட்சாந்தேகி' என்கிறது. சமணர் உயிர்க் கொலை செய்யாதவர்கள்; இரவு உண்ணாதவர்கள்; துகிலால் வடித்துக் குடிப்பவர்கள்; இந்த இயல்பை ஆசிரியர் சமணப் பேய்க்கு ஏற்றிக் காட்டுகிறார். இத்தன்மை நமக்கு ஒரு சிந்தனையைத் தூண்டு கிறது. இவ்வாறு சமணப்பேயைப் பரிகசிப்பவர் சமணரல்லர். சமணர் இந்த ஏனனத்தில் புகாமலே பேய்களின் கூழ் உண்ணும் செயலை முடித்திருப்பர். எனவே, இதுவும் ஆசிரியர் சைவர் என்று தொடக்கத்தில் சொன்ன கருத்தை வலியுறுத்துகிறது. பிறகு புத்தப் பேய்:*

முழுத்தோல் போர்க்கும் புத்தப் பேய்,
மூளைக் கூழை நாக்குழற
கழத்தே கிட்ட மணம் திரியாக்
கஞ்சி ஆக வாரீரே.

*ஒரு குருட்டுப் பேயின் கலத்தைக் கள்ளப் பேயொன்று திருடி ஒளித்துக்கொண்டது. (பேயுலகிலும் திருடர் உண்டு போலும்!) குருடு கலம் காணாது அரற்றுகின்றது:*

ஊண் ஆதரிக்கும் கள்ளப்பேய்
ஒளித்துக் கொண்ட கலம் தடவி,
காணாது அரற்றும் குருட்டுப்பேய்
கைக்கே கூழை வாரீரே.

*ஊமைப் பேய் கையால் உரைக்கிறது:*

பையாப்போடு பசிகாட்டி, பதலை நிறைந்த கூழ்காட்டி,
கையால் உரைக்கும் ஊமைப்பேய் கலத்தை நிறைக்க வாரீரே.

ஒரு பேய் ஓட்டைக்கலத்தை வைத்திருக்கிறது:

> பொல்லா ஓட்டைக் கலத்துக் கூழ்
> புறத்தே ஒழுக, மறித்துப் பார்த்து,
> எல்லாம் கவிழ்த்துத் திகைத்திருக்கும்
> இழுதைப் பேய்க்கு வாரீரே.

ஒரு பேய் வேடிக்கை புரிகிறது. அது தாரை ஊதும் நோக்க வகுப்பு, ஆகவே தன் இயல்புக்குப் பொருந்த, தாரைபோல யானையின் துதிக்கையை வாயில் பற்றி, அதன் நுனியில் கூழ் வார்க்கக் கேட்கிறது:

> துதிக்கைத் துணியைப் பல்லின்மேல்
> செவ்வே நிறுத்தித் துதிக்கையின்
> நுதிக்கே கூழை வார் என்னும்
> நோக்கப் பேய்க்கு வாரீரே.

கணக்கன் எங்குமே தொந்தரவு தருபவன் என்று பெயர் வாங்கியவன்; ஆகவே அவனைத் திருப்தி செய்வது அவசியம். இந்த நிலை நம் கவிஞர் காலத்திலும் உண்டு:

> இணக்கம் இல்லா நமைஎல்லாம்
> எண்ணிக் கண்டேம் என்றுரைக்கும்
> கணக்கப் பேய்க்கும் அகங்களிக்கக்
> கையால் எடுத்து வாரீரே.

அகங்களிக்கக் கையால் எடுத்து வாரீர் என்பதிலுள்ள சிரத்தையை இன்றைய கணக்கன் தன்மையை மனத்தில் எண்ணிக் கருதுக.

சயங்கொண்டார் நகைச்சுவையை அதிகமாகப் படைத்துக் காட்டுவதிலும் ஒரு சிறப்புப் பொருள் இருக்கிறதென்பர்.* மக்கள் வாழ்க்கையில் எவ்வளவோ பொய்யும் போலியும், காமமும் வெகுளியும் பெருகிவிட்டன. இதை நேர்முகமாகச் சுட்டாமல், இங்கு பேய்களின் செயல் மூலம் ஆசிரியர் இவற்றின் சில தன்மைகளை எடுத்துக்காட்டி நம்மை நகைக்க வைக்கிறார். இங்கு கதைப்போக்கில் பேய்களைப் பார்த்து நாம் நகைத்தாலும், உண்மையில் நாம் பார்ப்பது பேய்கள் அல்ல. அப்பேய்கள் யாவும் மனித இயல்புகளைப் பெற்று மனிதராகவே நடந்து கொள்கின்றன. ஆகவே நகைப்புக்குப் பொருளாயுள்ளவை

* தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

மனிதரிடம் அமைந்த சில தாழ்ந்த இயல்புகள். பனவப்பேய் சமண்பேய், புத்தப்பேய், குருட்டுப்பேய், ஊமைப்பேய், சூல்பேய், இழுதைப்பேய், நோக்கப்பேய், கூத்திப்பேய், கணக்கப்பேய் முதலியன யாவும் மனிதர்களே. ஆசிரியர், இங்கு அமைப்பது ஒருவகை அங்கதப் பாட்டே. மனிதரிடமுள்ள கீழ்மையைச் சுட்டிக்காட்டிச் சிரிக்க வைத்து, அதைப்போக்கும் உணர்வைத் தூண்டுவது ஆசிரியருடைய நோக்கங்களில் ஒன்றாகும்.

**பக்திச் சுவை**

சயங்கொண்டார் நாட்டுப் பற்று நிரம்ப உடையவர் என்பதில் தடையில்லை; அதிலிருந்து விளைந்ததல்லவா இவ்வழகிய நூல்? அது போலவே இவருக்குத் தெய்வப் பற்றும் நிரம்ப உண்டு. பக்திச் சுவை ததும்பப் பாடிய பாடல்களும் பல. ஆசிரியரின் சமயம் என்ற தலைப்பில் இரண்டொன்றை எடுத்துக் காட்டினோம்.

விதி மறையவர் தொழில் விளைக, முனிவர் செய் தவப்பயன் விளைக, வேத நல்நெறி பரக்க, தருமம் எங்கும் என்றும் உளதாக, தேவர் இன் அருள் தழைக்க என்றே எப்போதும் பாடுகிறார்.

பரணி காவியம் தேவியைப் புகழ்வதாகையால், தேவியைப் பாடியது என்ற பகுதி முழுமையும் தேவியின் புகழையே விரிக்கும். இப்பகுதி 14 தாழிசை கொண்டது. தமிழ் மரபுப்படி, தேவியைப் பாதாதிகேசமாக வருணிக்கிறார். சந்தத்தோடு வருகின்ற வருணனை நயம் சொல்லால் எடுத்துக்காட்ட இயலாதது; எவ்வண்ணம் அவளைச் சொல்லுவோம் என்றே இவரும் சொல்லுகிறார்:

> **கைம்மலர்மேல் அம்மனையாம், கந்துகமாம், கழங்குமாம்,**
> **அம்மலைகள்; அவள் வேண்டின் ஆகாத தொன்றுண்டோ?**
> **ஓங்காரத் துட்பொருளாய் ஒருவாது நடந்தாளை**
> **நீங்காமல் நின்றாளை எவ்வண்ணம் நிகழ்த்துவாம்!**

தேவியைக் குறிப்பிட இவர் சொல்லும் சொற்களும் தொடர்களும் சில: மோடி, ஆறுடைய திருமுடியான் அருள் உடைய பெருந்தேவி, எவ்வணங்கும் அடிவணங்க இப்பெருமை படைத்துடைய அவ்வணங்கு, ஆலக்களம் உடையான் மகிழ்அமுது, செய்ய திருமேனி ஒருபாதி கரிதாக தெய்வமுதல் நாயகனை எய்த சிலை மாரன் கையின் மலர் பாத மலர் மீதும் அணுகா நம் கன்னி, அயில் திறலவனைத் தரும் அத்திரு உதரத்தினள், இருளும் மிடற்று இறைவற்கு இனிய தரத்து அமுதக்கனி அதரத்தினாள்.

குலோத்துங்கனுடைய செங்கோற் சிறப்பினால் அரசன் உறையும்படி மலைகள் அடைய விளங்கின, அவன் குடை நிழலில்; அரி துயிலும்படி கடல்கள் அடைய விளங்கின அவன் புகழ் நிலவில். நாரதனை, காலம் மும்மையும் உணர்ந்தருளும் நாரதன் எனும் கடவுள் வேதமுனி என்பார்.

கடவுள் வாழ்த்துப் பகுதி மிக்க சிறப்புடையது. உமாபதி, திருமால், பிரமன், சூரியன், கணபதி, முருகன், நாமகள், கொற்றவை, சத்த மாதருக்கு வணக்கம் சொல்லுகிறார். பிரமனுக்கு வணக்கம் பிற்கால நூல்களில் எங்குமே காணப்படாதது. சத்த மாதர் வணக்கம் இவர் குறிப்பிட்டது, பின்னர் பிள்ளைத்தமிழ் நூல்களில் இன்றியமையாத ஓர் அங்கமாக ஆகிவிட்டது.

பாலாற்றங்கரை செல்ல எண்ணிய குலோத்துங்கன் தென் திசையில் செல்ல நின்று வடதிக்கின் முகம் வைத்தருளுகிறான்: வடக்கே தில்லை இருப்பதனால்; முக்கணுடைய வெள்ளி மலையோன் மன்றில் நடமாடி அருள்கொண்டு, அதிகை மாநகர் சென்று அங்கு நின்று பின் பயணம் தொடங்கி வளம்கெழுவு கச்சி நகர் நண்ணினான்' என்று கவிஞர் பாடுகிறார். இங்கு தில்லை அதிகை ஆகிய தலங்களைக் குறிப்பிட்டது, சோழருடைய சிவ பக்தியைக் காட்டும்.

### அகப்பொருட் சுவை

போர்க்காவியத்தில் அச்சம் வீரம் அவலம் உருத்திரம் ஆகிய சுவைகளே மேலோங்கி நிற்கும்; இன்பச் சுவையாகிய அகப்பொருட் சுவை இங்கு எழுவதற்கான சந்தர்ப்பங்களே இல்லை. ஆயினும், பரணியாசிரியர் பரணிப் பொருளான போரைத் தோற்றுவாய் செய்யும் முகமாக, கடைதிறப்பு என்ற ஓர் உறுப்பைப் படைத்து, அங்கு தலைநகரத்துள்ள பலவகைப் பட்ட மகளிரும், கலிங்க வெற்றிச் செய்தியறிந்து அவ்வெற்றியைப் பாடும்பொருட்டுத் தம் தோழியர் வாயிலிற் சென்று பாடி அவர்களைத் துயிலெழுப்புவதாகப் பாடுமிடத்து, அகப்பொருட் செய்திகளையே நிரம்பப் பெய்து பாடுகிறார். துயிலெழுப்பப் படும் மகளிர் பலவகையினர்; அரசனுடைய காதல் மகளிரோ பொது மகளிரோ மட்டுமல்லர்; உயர் குல மகளிரும் உள்ளனர், அரசனும் தலைவரும் விரும்பிய காதல் மகளிரும் உள்ளனர், சிறையாகவும் திறையாகவும் பெற்று வேளம் புகுந்த மகளிர், வீரமகளிர், காதலர் பல காரணம் கொண்டு பிரிந்த மகளிர் பொது மகளிர் ஆகிய அனைவரும் இங்கு உள்ளனர். இவ்வாறு

பாடி எழுப்புவது, ஒருவகையில் திருப்பாவையில் கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியால், தேசமுடையாய் திற; பந்தார் விரலி நின் மைத்துனன் பேர் பாடச் செந்தாமரைக் கையால் சீரார்வளை யொலிப்ப வந்து திறவாய், தேற்றமாய் வந்து திற, நேச நிலைக் கதவம் நீக்கு என்று ஆண்டாள் பாடுவது போல் உள்ளது. அங்கு, கேசவனைப் பாட என்கிறார்கள்; இங்கு நம்மரசன் வெற்றியைப் பாட என்கிறார்கள்; அங்கு கேசவன் புகழைச் சொல்லத் தங்கள் தோழியையும் வருணிக்கிறார்கள். இங்கு தங்கள் தோழியின் காதல் நிலையைச் சொல்லி வருணிக்கிறார்கள்.

கலிங்கத்துப் பரணி கடைதிறப்புப் பகுதி 54 தாழிசை கொண்டது. பாடல்கள் கடைதிறமினோ, கடைதிறமின் திறமின், கபாடந் திறமினோ என்ற முடிபுகளையுடையன. எல்லாப் பாடல்களும் காதலையும் புலவியையும் கலவியையும் துயில் மயக்கத்தையும் புனைந்து கூறுவன. இவற்றின் பொருள் நயமும் கவிதை நயமும் சுவைத்து அனுபவிக்கத் தக்கனவேயன்றி, எடுத்து விமரிசனம் எவ்வளவு செய்தாலும் குறைவேயாகும். ஒரு பாடல்: வெறும் அடுக்குத் தொடர் மட்டுமே தருகிற ஓசை இன்பமும் ஓவியச் சுவையும்:

சுரிகுழல் அசைவுற அசைவுற,
துயிலெழும் மயிலென மயிலென,
பரிபுர ஒலிஎழ ஒலிஎழ,
பணிமொழி யவர்கடை திறமினோ.

'ஊடலில் தோற்றவர் வென்றார்' என்பது குறள். இதற்கு ஒரு வகையில் விளக்கவுரை போல அமைந்தது ஒரு பாடல்:

விடுமின், எங்கள் துகில் விடுமின் என்று முனி
வெகுளி மென் குதலை, 'துகிலினைப்
பிடிமின்' என்ற பொருள் விளைய நின்று, அருள்செய்
பெடை நலீர், கடைகள் திறமினோ!

பொதுவாக இவ் அகப்பொருட் பகுதி தமிழ் நாட்டில் அனைவரும் நன்கறிந்தது. இதை அதிகம் விளக்குவது மிகை. சில பாடல்களை மட்டும் கீழே தருகிறோம்.

கலவிக் களியின் மயக்கத்தே
கலை போய் அகல, கலை மதியின்
நிலவைத் துகில் என்று எடுத்து உடுப்பீர்!
நீள் பொற் கபாடம் திறமினோ!

மெய்யே கொழுநர் பிழை நலிய,
வேட்கை நலிய, விடியளவும்,
பொய்யே உறங்கும் மட நல்லீர்;!
புனை பொற் கபாடம் திறமினோ!

சொருகு கொந்தளகம் ஒரு கைமேல் அலைய,
ஒரு கை கீழ் அலைசெய் துகிலொடே,
திரு அனந்தலினும் முகம் மலர்ந்து வரு
தெரிவைமீர்! கடைகள் திறமினோ!

முலைமீது கொழுநர் கைந் நகம் மேவு குறியை,
முன் செல்வம் இல்லாத அவர் பெற்ற நிதிபோல்,
கலைமீது எடா, ஆரும் இல்லா இடத்தே
கண்ணுற்று, நெஞ்சம் களிப்பீர்கள்! திறமின்!

முருகின் சிவந்த கழுநீரும்,
முதிரா இளைஞர் ஆர் உயிரும்,
திருகிச் செருகும் குழல் மடவீர்!
செம் பொற் கபாடம் திறமினோ!

தங்கு கண் வேல் செய்த புண்களைத்
தட முலை வேது கொண்டு ஒற்றியே,
செங் கனி வாய் மருந்து ஊட்டுவீர்!
செம் பொன் நெடுங் கடை திறமினோ!

காணுங் கால் காணேன் தவறாய; காணாக்கால்
காணேன் தவறல்லவை

என்ற குறளை ஒரு பாடல் எடுத்துச் சொல்கிறது:

பேணும் கொழுநர் பிழைகள் எலாம்
பிரிந்த பொழுது நினைந்து, அவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்,
கனபொற் கபாடம் திறமினோ.

கோதையை மகள் கண்ணால் காணக்கூடாது என்று தாயர் கதவை அடைக்கவும், அவள் அப்பால் சென்ற நேரம் மகள் கதவைத் திறக்கவும், இப்படியே நிகழ, கதவு ஆடி ஆடி, கதவின் குடுமி தேய்ந்துவிட்டது என்று ஒரு முத்தொள்ளாயிரப் பாடல் கூறுகிறது:

தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே, – ஆய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு.

*இதைக் கருத்தில் வாங்கி, பிரிந்த தலைவன் வருவான் என்றும் வாரான் என்றும் தலைவி திறந்து திறந்து அடைத்தலால், கதவின் குடுமி தேய்ந்தது என்கிறார் கவிஞர்:*

வருவார் கொழுநர் எனத் திறந்தும்,
  வாரார் கொழுநர் என அடைத்தும்,
திருகும் குடுமி விடியளவும்
  தேயும் கபாடம் திறமினோ!

*இக்கடை திறப்புப் பகுதியில் துளுநாட்டுப் பெண்கள் கருநாடகப் பெண்கள் முதலியோர் இருக்கிறார்கள். அவர்களுள் கருநாடகப் பெண்கள் மொழி தமிழும் வடுகும் கலந்தது என்று நகைச்சுவை பொருந்தக் கூறுகிறார்:*

மழலைத் திரு மொழியில் சில வடுகும் சில தமிழும்
குழறித் தரு கருநாடியர்! குறுகிக் கடை திறமின்!

## வள்ளைப் பாட்டு

*கூழ் அடுமுன் பேய்கள் நெல்லைக் குற்றி அரிசி தீட்டு கிறார்கள். இங்கு வள்ளைப்பாட்டாக இருபது பாட்டுக்கள் உள்ளன. வள்ளைப்பாட்டைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். பின்னர் சிறப்பாக இந்த நூலில் பார்க்கிறோம். சுவையான சில கண்ணிகளைக் கீழே காணலாம்.*

இந்த உரற்கண் இவ் அரிசி எல்லாம் பெய்து, கொல்யானைத்
தந்த உலக்கைதனை ஒச்சி, சலுக்கு மொலுக்கு எனக் குற்றீரே!

பௌவம் அடங்க வளைந்த குடைப்
  பண்டிதசோழன் மலர்க் கழலில்
தெவ்வர் பணிந்தமை பாடீரே!
  சிலைவலி, வாள்வலி, பாடீரே!

எற்றைப் பகலினும், வெள்ளணிநாள்,
  இருநிலப்பாவை தனை நிழற்றும்
கொற்றக் குடையினைப் பாடீரே!
  குலோத்துங்க சோழனைப் பாடீரே!

வண்டை வளம் பதி பாடீரே! மல்லையும் கச்சியும் பாடீரே!
பண்டை மயிலையும் பாடீரே! பல்லவர் தோன்றலைப் பாடீரே!

முடி சூடும் முடி ஒன்றே; முதல் அபயன் எம் கோமான்
அடி சூடும் முடி எண்ணில், ஆயிரம் நூறாயிரமே.

*இவர் பாடிய வள்ளைப் பாட்டு பிற்காலத்தில் சும்மேலோ சும்முலக்காய் என்ற அனுகரண ஓசையோடு கூடிய உலக்கைப் பாட்டாக வளர்ந்தது. அதை இரணிய வதைப் பரணி மோக வதைப் பரணி முதலியவற்றில் காணலாம்.*

### அடுக்குக் கருத்துக்கள்

*பரணியானது முழுமையும் தாழம்பட்ட ஓசையும் முடுகிய ஓசையும் கொண்டதாதலினால், எடுத்த இடமெல்லாம் விரைந்து அடுக்கிய தொடர்களைக் காண்கிறோம். இவருடைய புலமைப் பெருக்கினால், அடுக்கு நமக்குத் தோற்றாதபடி, கருத்துக்கள் விரைந்து செல்லுகின்றன. குலோத்துங்கன் போர்களைக் காண் கிறான்:*

வருசெரு ஒன்றின்மையினால், மற்போரும்,
 சொற் புலவோர் வாதப் போரும்,
இருசிறை வாரணப்போரும், இகல்மத
 வாரணப் போரும், இனைய கண்டே,

*(சிறைவாரணம் - கோழி; மதவாரணம் - யானை.)*

*அரசன் பொழுது போக்குகிறான்: எவ்வாறு?*

கலையினொடும், கவிவாணர் கவியினொடும்,
 இசையினொடும், காதல் மாதர்
முலையினொடும், மனுநீதி முறையினொடும்,
 மறையினொடும், பொழுது போக்கி –.

*பாலை வருணனையில் மரங்களை அடுக்கியுரைத்தமை முன்னே காட்டப்பட்டது. பல தேசத்து மன்னர் வந்து குழுமித் திறையிடுகிறார்கள்:*

தென்னவர், வில்லவர், கூபகர், சாவகர், சேதிபர், யாதவரே,
கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், காரிபர், கோசலரே;

கங்கர், கராளர், கவிந்தர், துமிந்தர், கடம்பர், துளும்பர்களே,
வங்கர், இலாடர், மராடர், விராடர், மயிந்தர், சயிந்தர்களே;

சிங்களர், வங்களர், சேகுணர், சேவணர், சீயணர், ஐயணரே,
கொங்கணர், கொங்கர், குலிங்கர்அவந்தியர் குச்சரர், கச்சியரே*

வத்தவர், மத்திரர், மாளுவர், மாகதர், மச்சர், மிலேச்சர்களே,
குத்திரர், குத்தர், குடக்கர், பிடக்கர், குருக்கர், துருக்கர்களே;

*சேனை செல்லும் காட்சி முழுமையும் அடுக்கு. இவர் எவ்வளவு அடுக்கிச் சொன்னாலும் நமக்கு அலுப்பு ஏற்படுவதில்லை. என்னென்ன வெள்ளம்?*

"நீல மாமணிச் சிவிகை வெள்ளமும்,
நித்திலக் குலக் கவிகை வெள்ளமும், —
காலினால் வரும் யமுனை வெள்ளமும்,
கங்கை வெள்ளமும், காண்மின்!" என்னவே.

*என்னென்ன கொடிகள்?*

கெண்டை, மாசுணம், உவணம், வாரணம்,
கேழல், ஆளி, மா மேழி, கோழி, வில்
கொண்ட ஆயிரம் கொடி நுடங்கவே,
குமுறு வெம்புலிக் கொடி குலாவவே.

*பெண்களின் தொகை எங்கும் பரந்தது:*

தொடைகள், கந்தரம், புடைகொள் கொங்கைகள்,
சோதி வாள்முகம், கோதை ஓதி, மென்
நடைகள், மென் சொல் என்றுடைய ஒப்பிலா
நகைமணிக் கொடித் தொகை பரக்கவே.

எங்குமுள மென்கதலி, எங்குமுள தண்கமுகம்,
எங்குமுள பொங்கும் இளநீர்,
எங்குமுள பைங்குமிழ்கள், எங்குமுள செங்குமுதம்,
எங்குமுள செங்கயல்களே.

*பேய்கள் கூழ் அடுதற்காகப் பிற பேய்களை அழைக்கின்றன:*

குறு மோடீ! நெடு நிணமாலாய்! குடைகலதீ! கூர்எயிறீ! நீலீ!
மறி மாடீ! குதிர் வயிறீ! கூழ்அட, வாரீர்! கூழ்அட, வாரீரே!

*குலோத்துங்கன் மகுடாபிடேகம் செய்துகொண்டபோது:*

---

* துருக்கர் துலுக்கர் அல்லர்; மலையரணில் வாழ்வோர்.

நிழலில் அடைந்தன திசைகள்;
நெறியில் அடைந்தன மறைகள்;
கழலில் அடைந்தனர் உதியர்;
கடலில் அடைந்தனர் செழியர்.

பரிசில் சுமந்தன கவிகள்;
பகடு சுமந்தன திறைகள்;
அரசு சுமந்தன கழல்கள்;
அவனி சுமந்தன புயமும்.

*தானங்கள்:*

அனக தானம் மறைவாணர் பலர்நின்று பெறவே,
அபயதானம் அபயம் புகுதும் மன்னர் பெறவே,
கனக தானம் முறைநின்று கவிவாணர் பெறவே,
கரட தானம் மத வாரணமும் அன்று பெறவே.

*அரசர் வந்து நெருங்கித் திறையிடுகிறார்கள்:*

ஆரம் இவை; இவை பொற்கலம்;
ஆனை இவை; இவை ஒட்டகம்
ஆடல் அயம் இவை; மற்று இவை
ஆதி முடியொடு பெட்டகம்;
ஈரம் உடையன நித்திலம்;
ஏறு நவ மணி கட்டிய
ஏக வடம் இவை; மற்று இவை
யாதும் விலை இல் பதக்கமே.

இவையும் இவையும் மணித் திரள்;
இனைய இனைய தனக்குவை;
இருளும் வெயிலும் எறித்திட
இலகும் இவை மகரக் குழை;
உவையும் உவையும் இலக்கணம்
உடையபிடி; உவை புட்பகம்;
உயர் செய் கொடி இவை; மற்று இவை
உரிமை அரிவையர் பட்டமே.

*பல இடங்களில் சொல்லும் கருத்தானது பாடுகின்ற சொற்களின் கோவையான ஒலியிலே வெளிப்படுகிறது. முன்காட்டிய 'எடும் எடும் எடும் எனும் ஒலி இகக்கவே' இதற்குச் சிறந்த உதாரணமாகும்; சொற்கள் செய்யும் சப்த ஜாலமே விரைவுணர்ச்சியை ஊட்டுகிறது. மற்றோர் இடம். கலிங்கப் படையும்*

எளிதானதன்று, வலிமிக்க படையானமையால்தான் அதை வென்றதால் குலோத்துங்கனுக்குப் பெருமை. முடுகியலான சந்தத்தில் எட்டுப்பாடல் ஆசிரியர் பாடியிருக்கிறார். அவற்றுள் ஒன்று:

விடவிகள் மொடுமொடு விசைபட முறிபட,
எறிபட, நெறிபடவே;
அடவிகள் பொடிபட, அருவிகள் அனல்பட,
அரு வரை துகள் படவே.

## சொல் நயங்கள்

ஆங்காங்கு மடக்கு சிலேடை முதலிய சொல்லணிகளும் இவருக்கு ஏவல்புரிகின்றன.

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர், கழற் சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடக் கடைதிறமின்.

என்ற பாடலில் காஞ்சி ஓர் அணிகலன் நகரம் என்றும், கலிங்கம் ஆடை நாடு என்றும் இருபொருள் தருகின்றன.

இலங்கை எறிந்த கருணாகரன் தன்
இகல் வெஞ்சிலையின் வலி கேட்பீர்,
கலிங்கம் எறிந்த கருணாகரன் தன்
களப்போர் பாடக் கடை திறமின்.

என்ற இடத்து, முதல் கருணாகரன் இராமன்; இரண்டாம் கருணாகரன், தளபதி தொண்டைமான். அரசனோடு செல்லும் பரிவாரங்களைச் சொல்லும்போது மாதர் பிடி மீது வருதல் பிடிமீது பிடி எனவும், களிற்றின்மேல் வரும் அரசு ஆனைமீது வரும் ஆனை எனவும், யானை மேல் முரசதிர்வது முகில்மேல் முகில் எனவும் பலவாறு வருணிக்கிறார்.

பேய்களுக்குக் கூழ் வார்ப்பதைக் கூறுமிடத்து, ஒரு பேய் கூத்திப் பேய் தன் கணவன் பங்குக் கூழையும் தானே கேட்டு வாங்குகிறது:

தடியால் மடுத்துக் கூழெல்லாம்
தானே பருகித் தன் கணவன்
குடியான் என்னக் குலுங்கடிக்கும்
கூத்திப் பேய்க்கு வாரீரே.

குடியான் என்ற சொல்லை இங்கு, குடியில் ஆழ்ந்தவன் என்றும், இனிக் குடிக்க மாட்டான் ஆகவே தனக்கு அதைக் கொடுக்க வேண்டும் என்றும் இருபொருளை உணர்த்துகிறது.

## கம்பரும் சயங்கொண்டாரும்

கம்பராமாயணத்தின் எதிரொலிகள் இங்கு பலவிடத்தும் காணப்படுகின்றன என்று நாம் சொல்லும்போது, ஆராய்ச்சியாளர் முன் முடிபுகளை மனத்தில் கொண்டு தர்க்கத்தில் இறங்காது பொருளை மட்டும் சிந்திப்பார்களாக. குலோத்துங்கன் போரை நடத்தவில்லை, அவன் தண்டு தான் வந்தது என்று, அனந்தபன்மன் அலட்சியமாகப் போருக்கு எழுந்தவனைத் தடுத்து, அவன் மந்திரி எங்கராயன் பல அறிவுரையும் சொல்லி, முடிவில்,

> இன்று சீறினும் நாளை அச்சேனைமுன்
> நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால்.

என்கிறான். இராமாயணத்தில், கும்பகருணன் தன் தமையனான இராவணனுக்கு நீதி பலவும் சொல்லியும் அவன் கேட்காமல் வெகுண்டபோது, முடிவில் தான் போர்க்கோலம் பூண்கிறான். அப்போது கூறும் கடைசி உரை: "விதி செலுத்துகின்றது. நான் திரும்பி வரமாட்டேன். நான் பொன்றுவதைக் கண்டபோதாவது சீதையை விடு. பின்னை நின்று எண்ணுதல் பிழை" என்கிறான்.

> வென்றிவண் வருவன் என்று உரைக்கிலேன்; விதி
> நின்றது பிடர்பிடித் துந்துகின்றது;
> பொன்றுவென்; பொன்றினால், பொலன்கொள் தோளியை
> நன்றெண, நாயக, விடுதி; நன்றரோ!
>
> என்னை வென்றுளர் எனின், இலங்கை காவல!
> உன்னை வென்றுயருதல் உண்மை; ஆதலால்,
> பின்னை நின்று எண்ணுதல் பிழை; அப்பெய்வளை
> தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே.

இராமாயணத்தின் கருத்து, வரப்போவதைச் சொல்லிப் பிழைக்க வழி காட்டுவது. அது எங்கராயன் கூற்றிலும் தொனிக்கிறது.

அடுத்து, போர்க்களத்தில் கும்பகருணனுடைய வீரத்தைப் பார்க்கிறோம். சீதையை விட்டால் தான் உய்தி என்று அறிவுரை கூறியவன் எவ்வாறு போர் புரிகிறான்? இராமனே கண்டு அதிசயிக்கும் படியான தோற்றத்தோடு வந்து போர் புரிகிறான்.

*இராமன் போரில் அவன் கைகள் இரண்டையும் அறுத்துப் பின் வலக்காலைத் துணிக்கிறான். கும்பகருணன் ஒரு காலோடு தத்தித்தத்தி வட்டமிட்டு, நெருங்கி வந்தன யாவையும் பல்லால் கடித்து அழிக்கிறான். பரணியில் போரிடும் மறவர்கள், இரு காலும் வெட்டுண்டிருப்பவர்கள், எதிரே வந்து பொரும் களிற்றின் மீது ஒரு தொடையைச் சுழற்றி எறிகிறார்கள்; மீண்டும் எறிவதற் காக மற்றொரு தொடையை இட்டு வைக்கிறார்கள்:*

இரு தொடை அற்று இருக்கும் மறவர்கள்
எதிர்பொரு கைக் களிற்றின் வலி கெட
ஒரு தொடையைச் சுழற்றி எறிவர்கள்;
ஒரு தொடை இட்டு வைப்பர் எறியவே.

*இது கம்பர் கூற்றோடு வைத்து ஒப்பு நோக்கத்தக்கது.*

*இராமன் காட்டுக்குச் செல்கிறான், நகரமாந்தர் அனைவரும் அவன் பின்னே செல்கிறார்கள். செல்லாதோர் யார்? சுவரில் எழுதிய ஓவியங்களே - அவையும் உயிரில்லாமையால் செல்ல வில்லை:*

ஏவிய குரிசில்பின் யாவர் ஏகலார்?
மாவியல் தானைஅம் மன்னை நீங்கலாத்
தேவியர் ஒழிந்தனர்; தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன – உயிர் இலாமையால்!

*என்பது கம்பர் வாக்கு. கருணாகரன் படையானது பகையுடல் அனைத்தையும் பிடித்து வெட்டித் தள்ளிற்று. வெட்டாது விட்டது எது?*

இவர்கள் மேல் இனி ஒருவர் பிழைத்தாரில்லை;
எழுகலிங்கத்து ஓவியர்கள் எழுதிவைத்த
சுவர்கள்மேல் உடல்அன்றி, உடல்கள் எல்லாம்
தொடர்ந்து பிடித்து அறுத்தார் முன் அடைய ஆங்கே.

*விசுவாமித்திரர் இராமனுடைய வில் ஆற்றலை ஜனகனுடைய சபையில் பேசி முடித்தவுடன், ஜனகனது கட்டளைப்படி ஏவலர் வில்லை மண்டபத்துக்குக் கொண்டு வருகிறார்கள். வில்லானது,*

நெடு நிலமகள் முதுகு ஆற்ற, நின்று உயர்
தடநிமிர் வடவரை தானும் நாண் உற
'இடம் இலை உலகு' என வந்தது ....

கொண்டு வந்த ஏவலர் வில்லை 'நிலம் முதுகு உளுக்கிக் கீழுற வைத்தனர்' என்கிறார் கம்பர். பரணியில் பாரின் முதுகு இரிந்தது என்று கவிஞர் சொல்லுகிறார்:

> எழுந்தது சேனை, எழலும் இரிந்தது பாரின் முதுகு,
> விழுந்தன கானம் அடைய, வெறுந்தரை யான நதிகள்.

## கலிங்கத்துப் பரணியால் விளைந்த தமிழ் வளம்

கலிங்கத்துப் பரணிக்கு முன் கொப்பத்துப் பரணி கூடல் சங்கமத்துப் பரணி என்ற இரண்டு பரணிகள் இருந்தன. அவை இன்று இல்லை. இன்றுள்ள முதல் பரணி கலிங்கத்துப் பரணி யாகும். இதற்குப் பின் விளைந்த பரணி இலக்கிய வளத்தை இதன் பின்னே ஓர் அட்டவணையாகத் தொகுத்துக் காட்டியிருக் கிறோம். ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் இளவரசனாக இருந்த போது தென்கலிங்கப் போர் வென்றதைக் குறித்துப் பாடிய ஓர் கலிங்கத்துப் பரணியும் ஒருகால் சயங்கொண்டார் நூலுக்கு முற்பட்டதாயிருக்கலாம். பின்வந்த பரணிகளுள் இங்கு நாம் குறிப்பிடக் கருதுபவை தக்கயாகப் பரணி, இரணியன் வதைப் பரணி அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி, திருச்செந்தூர்ப் பரணி என்று தவறாக வழங்கும் சூரன்வதைப் பரணி என்பவை. இவற்றுள், மூன்று நிலைகளைப் பார்க்கிறோம்.

1. உண்மையாகவே நடந்த ஒரு போரை உடன் காலத்திருந்த ஒரு புலவர் வருணித்து வெற்றி பெற்ற தம் அரசனைச் சிறப்பித்து, தோற்றவர் பெயரைச் சுட்டிப் பாடுதல். இதற்கு எடுத்துக்காட்டு கொப்பத்துப் பரணி, கலிங்கத்துப் பரணி முதலானவை.

2. புராணக் கதையாகிய ஒரு போரைக் காவிய உணர்ச்சி யுடைய ஓர் ஆசிரியர் புராணத்தில் சொல்லப்பட்ட பாத்திரங் களை வைத்துக் கற்பனையாகப் பாடுதல். இதற்கு எடுத்துக் காட்டு* தக்கயாகப் பரணி, இரணியவதைப் பரணி, சூரன் வதைப் பரணி.

3. எந்தச் சரித்திரமும் இல்லாமல் தத்துவக் கருத்துக்களையே பாத்திரங்களாகப் படைத்து, ஆன்மாவைப் பிடிக்கின்ற

* ஐயரவர்கள் கஞ்சவதைப் பரணி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்: அதை யாம் பார்த்ததில்லை.

அஞ்ஞானத்தை ஞானம் வெற்றி கொண்டதாகப் பாடு கின்ற, முழுமையும் கற்பனையான, பரணிப் பிரபந்தம். இதற்கு எடுத்துக்காட்டு அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி.

வேறொரு வகையிலும் இவற்றைப் பாகுபடுத்திக் கொள்ளலாம். தம்மை ஆதரித்த அரசனுடைய உண்மையான போர் வெற்றி யைப் புகழ்வது கலிங்கத்துபரணி. புராணகதை எனப் பாடிய போதும் தம்மை யாதரித்த அரசனைப் புகழ்வதற்காகப் பாடியது: தக்கயாகப்பரணி. இவையிரண்டும் நன்றியுணர்வினால் தோன் றியவை என்று கூறலாம். புராணகதை பக்தியொன்றே கொண் டெழுந்தது இரணிய வதைப்பரணி. தத்துவப் பொருளைச் சொல்வதால் ஞானம் அடிப்படையாகக் கொண்டெழுந்தன, பாசவதைப் பரணி போன்றவை.

## முடிவுரை

கலிங்கத்துப் பரணி அளவால் சிறு நூலாயினும், பொரு ளாலும் வரலாற்றாலும் சிறப்புடைய பெரு நூலாகும். இது பற்றி முடிவாகச் சில சொற்கள் கூறுவது இன்றியமையாதது. சயங்கொண்டாருக்குக் கருத்தும் நடையும் சில இடங்களில் பெருங்காப்பிய நிலையில் அமைகின்றன. எங்குமே இவர் சீருக் காக வேண்டிச் சொற்களைத் சிதைப்பதில்லை. வீண் அடை மொழிகளை அடுக்குவதில்லை. சந்தப் பாடலானமையால் குறை வில்லாமல் எங்கும் இனிய ஓசையே அமைத்திருக்கிறார். ஓசை யோடு பொருள் நயமும் சிறந்து விளங்குகிறது. இரண்டு எடுத் துக் காட்டுக்கள் மட்டும் தரலாம். கலிங்கப்போரின் கொடு மையைக் காளிக்குச் சொல்லப் புகுந்த பேய் கூறுகிறது:

மா ஆயிரமும் பட, கலிங்கர் மடிந்த களப்போர் உரைப்போர்க்கு
நா ஆயிரமும், கேட்போர்க்கு நாள் ஆயிரமும் வேண்டுமால்!

நாவும் செவியுமல்ல இவர் சொல்வது, நாவும் நாளும். அடுத்துப் போர்க்களத்தின் தன்மையைக் கூறி, காணும்படி தேவியை வேண்டும்போது, அதே பேய் பொருகள வருணனையில் உரை ஓய்ந்து விடும் என்று கூறுகிறது:

தேவாசுர, ராமாயண, மாபாரதம், உள என்று
ஓவா உரை ஓயும்படி உளது, அப்பொரு களமே.

## பரணி இலக்கிய அட்டவணை

| எண் | நூல் | ஆசிரியர் | காலம் | பாடல் | பொருள் | வகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | கொப்பத்துப்பரணி* | - | 1054 | - | இராசேந்திரன் 2, மேலைச்சளுக்கிய வேந்தன் ஆகவமல்லனுடன் கொப்பம் என்ற இடத்தில் போர் செய்து பெற்ற வெற்றி. | உண்மைப் போர் நன்றி யுணர்வு. |
| 2. | கூடல் சங்கமத்துப் பரணி* | - | 1064 | - | வீரராசேந்திரன் மேலைச் சளுக்கிய வேந்தனான அதே ஆகவமல்லனுடன் கூடல் சங்கம்ம் என்ற இடத்தில் போர் செய்து பெற்ற வெற்றி. | உண்மைப் போர் நன்றி யுணர்வு |
| 3. | கலிங்கத்துப்பரணி | சயங்கொண்டார் | 1112 | 599 | குலோத்துங்கன் 1. வட கலிங்க வேந்தன் அனந்தபன்மனோடு போர் செய்து பெற்ற வெற்றி. | உண்மைப் போர் நன்றி யுணர்வு |
| 4. | கலிங்கத்துப்பரணி* | ஒட்டக்கூத்தர் | 1096 | - | விக்கிரமசோழன் இளவரசாயிருந்த போது தென் கலிங்கரோடு போரிட்டுப் பெற்ற வெற்றி. | உண்மைப் போர் நன்றி யுணர்வு |
| 5. | தக்கயாகப் பரணி | ஒட்டக்கூத்தர் | 1155 | 814 | வீரபத்திரர் தோன்றித் தக்க யாகத்தை அழித்த புராண வரலாறு சம்பந்தர் சரிதமும் சொல்லப்படுகிறது. | புராண கதை பக்தி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | இரணியவதைப் பரணி | - | 1210 | 693 | பிரகலாதனுக்காக நரசிம்மமூர்த்தி தூணினின்றும் வந்து இரணியனை வதைத்துப் பெற்ற வெற்றி. | புராண கதை பக்தி |
| 7. | அஞ்ஞவதைப் பரணி | தத்துவராயர் | 1450 | 493 | ஞானவேந்தன் தோன்றி அஞ்ஞானத்தை வதைத்துப் பெற்ற வெற்றி. | தத்துவ உணர்வு. ஞானம். |
| 8. | மோகவதைப் பரணி | தத்துவராயர் | 1450 | 349 | மோகனை விவேகன் வெற்றி பெறுதல். | தத்துவ உணர்வு ஞானம். |
| 9. | பாசவதைப் பரணி | வைத்தியநாத தேசிகர் | 1640 | 737 | பாசத்தை ஞானவினோதன் வெற்றி பெறுதல். | தத்துவ உணர்வு ஞானம். |
| 10. | திருச்செந்தூர்ப் பரணி | சீனிப்புலவர் | 18 நூ. | 174† | சூரபதுமனை முருகன் வெற்றி கொண்டது | புராண கதை பக்தி |
| 11. | கஞ்சவதைப் பரணி‡ | ? | ? | ? | கம்சனைக் கிருஷ்ணன் வதைத்தது. | புராண கதை பக்தி |
| | கலைசைச் சிதம்பரேசர் பரணி | சுப்பிரமணிய முனிவர் | 1800 | - | இது பரணிப் பிரபந்தமல்ல. | |

*இவை இன்று இல்லை   † பெரிதும் சிதிலமானது   ‡ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளது.

இங்ஙனம் சொல்வது, தேவாசுர யுத்தம் பதினெட்டு வருடத்திலும், ராமராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், மாபாரத யுத்தம் பதினெட்டு நாளிலும், குலோத்துங்கன் கலிங்கப்போர் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தன என்னும் பொருளது என்பர்.

பரணி, சிறு பிரபந்தம். பெருங்காப்பியத்தினுடைய நோக்கமும் சிறு பிரபந்தங்களின் நோக்கமும் வெவ்வேறு. முன்னது வாழ்க்கையின் உறுதிப் பொருள் நான்கையும் விளங்க அறிவுறுத்தி மக்கட்குலத்தை உயர்நோக்கமும், உயர் ஒழுக்கமும், உயர் எழுச்சியும் பெறச் செய்வது. ஆனால் பின்னது அத்தகைய நோக்கங் கொள்ள இயலாது. கவிதையில் விளையும் இன்பமே இதனுடைய நோக்கம். பக்திப் பெருக்கினால் இறைவனைத் துதிப்பதோ, நன்றியுணர்வினால் ஆசிரியரைப் புரந்த வள்ளலைப் புகழ்வதோ - இஃதொன்று தான் பிரபந்தத்தின் நோக்கம். எனினும், ஒரு வகையில் கலிங்கத்துப் பரணிக்கும் ஒரு சிறந்த நோக்கம் இருந்து, அதுவும் கைகூடியிருப்பது புலப்படும்.

குலோத்துங்கன் பட்டமேற்குமுன் சில மாதங்கள் அரசன் இன்றிச் சோழநாடு நிலைகுலைந்திருந்தது. இராசராசன் இராசேந்திரன் ஆட்சியில் சோழநாடு பெற்றிருந்த பெருமையை நினைவூட்டி மீண்டும் மக்களுக்கு எழுச்சி தந்து, நாட்டை உயர் நிலையில் வைத்தவன், உபயகுலோத்தமனாகிய முதலாம் குலோத்துங்கன். ஆதலால், இராசேந்திரனுக்குப் பின் சில ஆண்டுகள் குழப்பத்தால் நிலைகுலைந்திருந்த சோழ நாட்டை எடுத்து நிறுத்துவதே இப்பாட்டின் நோக்கமென்று சொல்வது ஒரு வகையில் தவறாகாது. கற்றோருக்கும் கேட்டோருக்கும் மக்கட் சமூகத்தில் ஒரு பெருங் கிளர்ச்சியையும் எழுச்சியையும் இது தந்தது. இது பக்திப் பிரவாகத்தைப் பெருக்கவில்லை; சாந்தி நிலவு பொழிவிக்கவில்லை; ஆனால் மக்களிடையே ஒரு புதிய விழிப்பையும் 'எமது நாடு' என்ற ஒரு பற்றையும் இது உதிப்பிக்கவில்லை யென்று யாரே சொல்ல முடியும்? காலத்தின் தேவைகள் மாறுபடும். இந்த எழுச்சிக்கான காப்பியமும் அந்த நூற்றாண்டில் தேவையே. அதன் பிறகு 170 ஆண்டுகள் சோழப் பேரரசு பேர் எழுச்சி பெற்று விளங்கியதல்லவா?

இத்தகைய சிறப்பையெல்லாம் நோக்கி, நன்றியறிதல் கொண்ட சோழநாட்டு மக்கள், ஒரு சிறு பிரபந்தமே பாடிய இக்கவிஞர் பெருமானைக் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றுவதல்லது, செய்யத்தக்க கைம்மாறு வேறு யாதுளது?

## பதிப்பு

1. மிகவும் சிறிய அளவில் கையடக்கமான ஒரு பதிப்பு பாடல் 580. 2. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி பதிப்பு 1898, பாடல் 593. 3. பண்டித அ. கோபாலையர் பதிப்பு 1923. பாடல் 585, மிகைப்பாடல்கள் 13; பின்னும் பல மிகைப்பாடல்களும் உள்ளன. 4. எஸ். ராஜம் பதிப்பு 1959, பாடல் 599; மிகவும் திருத்த மான பதிப்பு. இவையன்றி வேறு பழைய பதிப்பொன்றும், புதிதாக உரை எழுதி வெளிவந்த பல பதிப்புக்களும் உள்ளன. இவற்றுள் கோபால ஐயர் பதிப்பு பல குறிப்புக்கள் உடையது; இதில் வரவேண்டிய திருத்தங்களைக் குறிப்பிடும் ஒரு கட்டுரை மு. இராகவையங்காருடைய ஆராய்ச்சித் தொகுதியில் காணப் படும். இதுவும் எஸ். ராஜம் பதிப்புமே ஆராய்ச்சிக்குப் பயன் படுவன. எனினும், ஐயரவர்கள் பதிப்புப் போல, நூல் நயங்கள் அனைத்தையும் புலப்படுத்தி ஆராய்ச்சிக்கு உதவவல்ல பதிப்பு இனித்தான் வெளிவர வேண்டும்.

## பிற நூல்கள் – இசையாயிரம்

தமிழ் நாவலர் சரிதை பின்வரும் பாடலைத் தந்து, “செட்டிகள் மேல் இசையாயிரம் பாடியபோது செக்கார், புகார் தங்களுக்கு ஊர்’ என்று பாடச்சொல்ல, சயங்கொண்டார் பாடியது” என்று குறிப்பிடுகிறது.*

ஆடுவதும் செக்கே, அளப்பதுவும் எண்ணெயே,
கூடுவதும் சக்கிலியக் கோதையே – நீடு புகழ்க்
கச்சிச் செப்பேட்டிற் கணிக்குங்கால், செக்கார்தாம்
உச்சிக்குப் பின்புகார் ஊர்.

இவ்விசையாயிரம் இன்று கிடைக்கவில்லை. இப்பாடலிலிருந்து, ஒருகால் செட்டிகள் தங்கள் மீது பாடல் பாடும்படி எவரோ ஒரு புலவரை வற்புறுத்திய காரணத்தால், அவர் ஒரு வகையில் வசைபோல இப்பாடல் பாடினாரோ என்று கருதத் தோன்று கிறது. உச்சிக்குப் பின் ஊருக்குள் புகார் என்று அவர் பாடியிருக் கிறார். மற்றும், சொல்லிய செய்திகள் வாழ்த்தாகத் தோன் றாமல் வசையாகவே தோன்றுகின்றன. கவிச் சக்கரவர்த்தியானவர் இவ்வாறு பாடினாரா என்பது ஐயமே. பெருமிதத்தின் உச்சநிலை யில் பாடிய பெரும்புலவர் அவலத்தின் கீழ்த்தர நிலையில்

---

* தமிழ் நாவலர் சரிதை 110

இவ்வாறு பாடுதல் இயல்வதொன்றன்று. தமிழ் நாவலர் சரிதையின் செய்திகள் பல இவ்வாறு ஐயத்துக்கும் நிராகரிப்புக்கும் இடமாகவுள்ளன. கச்சிச் செப்பேடு என்பதுபற்றி மு. இராகவையங்கராவர்கள் எழுதியுள்ள குறிப்பு, இங்கு கருதத்தக்கது: "கச்சிச் செப்பேடு என்பது, செக்கார் ஒழுக வேண்டிய விதிகள் பற்றி அரசாணையோடு பிறந்த சாசனமாம். 'திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு ஐந்தாவது ..... நாடும் நகரமும் கூடியிருந்து ஸ்ரீ காஞ்சிமா நகரில் செப்பேட்டுப்படி செய்யக் கடவ முறைமை' என்று தொடங்கிச் செக்கார் செய்யக் கடவனவும் அல்லாதனவுமான விதிகளைக் கூறும் சாசனமொன்று இச்செப்பேட்டைக் குறிப்பிடுதல் அறியத்தக்கது.*"

தொள்ளாயிரம் பாடும் வழக்கம் முத்தொள்ளாயிரம், வச்சத் தொள்ளாயிரம் போன்றவற்றால் அறிகிறோம். தமிழ் நாவலர் சரிதை தோன்றிய பிற்காலத்தில் 17 நூற்றாண்டின் பின், சாதிகள் பற்றிய பாடலும் நூலும் செய்யும் வழக்கம் வந்தமை வேறிடங்களில் குறிப்பிட்டிருக்கிறோம். இசையாயிரம் ஒரு கால் செக்காரைக் குறித்துத் தொள்ளாயிரத்தை முழு ஆயிரமாக்கிய அப்படிப்பட்ட ஒரு நூலாகலாம். இங்கு காட்டிய வெண்பா, சுவையற்ற பாடல், கவிச்சக்கரவர்த்தி சயங்கொண்டார் இதையோ இந்நூலையோ பாடியிருக்கமாட்டார் என்பது உறுதி.

**குறிப்பு: தீபங்குடி**

சயங்கொண்டார் ஊர் என்று சொல்லப்படும் தீபங்குடி. திருவாரூரிலிருந்து கும்பகோணம் நோக்கிவரும் பெருஞ் சாலையில் சுமார் ஏழு மைல் தூரத்தில் சாலைக்கு வடபால் இரண்டு பர்லாங் தூரத்தில் உள்ள சிற்றூர். இங்கு இன்றும் ஐந்தாறு சைனர் குடும்பங்கள் உள்ளன. தீபநாயகர் என்ற பெயரில் ஒரு பெரிய விருஷப தீர்த்தங்கரர் கோயில் இருக்கிறது. செங்கற்கோயில், சிவாலயம் போல, கோபுரம், விமானம், விசாலமான பிரகாரம், பெரிய மூலவர், உற்சவர், துவார பாலகர், தருமதேவி கோயில், பிரமதேவர் கோயில், வர்த்தமான தீர்த்தங்கரர் கோயில், ஜ்வாலினி, க்ஷேத்ர பாலர் கோயில்கள் முதலிய பரிவாரக் கோயில்கள் ஆகிய எல்லா அமைப்புகளையும் இது பெற்றிருக்கிறது. நல்ல நிலையில் உள்ளது. விமானத்தின் கோட்டத்தில் ஒவ்வொரு நிலையிலும் ஒரு தீர்த்தங்கரர் வடிவம்.

---

* ஆராய்ச்சித் தொகுதி, பக்கம் 407.

தூரத்திலிருந்து இதைப் பார்த்தே இது அருகன் கோயில் என்று தெரிந்து கொள்ளலாம். பெரியமதில், தோட்டம் அடுத்து உள்மதில், விசாலமான செங்கல் பரப்பிய பிரகாரம், கிழக்கு நோக்கிய கோயில், விசாலமான நீண்ட முன் மண்டபம். இதன் கோடியில் கருவறை, அமர்ந்த கோலத்தில் தீபநாதர். இவர் வாயிலில் துவார பாலகர். இதற்கு முன்னால் திருமால் ஆலயங் களில் உள்ளதுபோல உற்சவர் செப்பு வடிவங்கள். தீபநாயகர் நின்ற வடிவம், இரண்டடி உயரம் திகம்பரக்கோலம். இருபுற மும் இரு மேரு பள்ளிவாசலில் உள்ள ஸ்தூபிபோல, அடுத்து ஒவ்வொரு புறத்திலும் வரவரக் குறைவான உயரத்தில் தீர்த்தங் கரர் வடிவங்கள். தீபநாயகருக்கு வலப்பால் பார்சுவநாதர், பாகுபலிநாதர், வர்த்தமானவர், மற்றொருவர், இடப்பால் மல்லிசேனர், நேமிநாதர், விருஷபர், மற்றொருவர், சரசுவதி; இவர் அனைவரும் உலோகம். எதிரில் சிறிய வடிவில் தீபநாயகர் கற்சிலை. அனைவரும் கிழக்கு நோக்கிய நிலை. சைனர் இரவு உண்ணாதவர் ஆதலால், இரவு பூசை இல்லை; மத்தியானம் ஒருகாலப் பூசை மட்டும். அருங்கலான்வயம் பற்றிய செய்தி களை அறிந்தவர் யாரும் இங்கு காணப்படவில்லை.

அடுத்து, பள்ளியறையிருக்கும் இடத்து ஒரு சிறுகோயில். இலை கிளைகளோடு அரசமரம் போல - வேதாகமங்களின் வடிவம் என்பர். அம்பாள் கோயில் இருக்கும் இடத்தில் இங்கு (அம்பிகை அல்ல) தருமதேவி கோயில்; அமர்ந்தகோலம், நடுத்தர வடிவம். அடுத்து ஒரு சிறுதருமதேவி இருந்த கோயில். இத்தேவியின் கற்சிலை டில்லி பொருள்காட்சிக்குக் கொண்டு போய் விட்டதாகச் சொல்லினர். அடுத்து சந்நிதி முன்புறமாக ஒரு தனிக்கோயிலில் வர்த்தமான தீர்த்தங்கரர் வடிவம் பெரிய சிலை, முக்குடையோடு: மண்ணை அகழ்ந்தபோது கிடைத்தது என்றனர். பிரகாரத்தின் தென்கிழக்குப் பகுதியில் ஐயனார் என்று நாம் சொல்லுகின்ற வடிவு, பூரணை புஷ்கரணையோடு, பிரமன்கோயில் என்கிறார்கள். வடகிழக்கு மூலையில் ஜ்வாலினி கோயில் துர்க்கைபோல, தெற்கு நோக்கியது. அடுத்து நம் பைரவர் போல மேற்கு நோக்கி நாயோடு கூடிய க்ஷேத்திர பாலர். பின்னர் சூரியன் கோயில்; இதை ஆதித்தன் என்கிறார்கள். திருக் கலம்பகம் 74ஆம் பாடலில் தீபங்குடி குறிப்பிடப்பட்டுள்ளது.

ooo

அத்தியாயம் 2

# இலக்கியம் – 2

## சேக்கிழார்

### முன்னுரை

கருங்கடலைக் கைநீத்துக் கொளஎளிது; முந்நீர்க்
        கடற்கரையின் நொய்மணலை எண்ணிஅள விடலாம்;
பெருங்கடல்மேல் வரும்திரையை ஒன்று இரண்டுஎன்று எண்ணிப்
        பிரித்துஎழுதிக் கடைஇலக்கம் பிரித்துவிடல் ஆகும்;
தருங்கடலின் மீனைஅள விடலாகும்; வானத்
        தாரகையை அளவிடலாம்; சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டபுரா ணத்தைஅள விடநம்
        சேக்கிழார்க்கு எளிது; அலது தேவர்க்கும் அரிதே. – உமாபதி சிவம்.

*தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று திட்டமாய்க் குறிப்பிடத்தக்க காலங்கள் பல இருந்தன என்று வரலாற்றால் அறிகிறோம். சங்க இலக்கிய காலம் அத்தகைய தொருகாலம் என்று ஆராய்ச்சியாளர் சொல்லுவதுண்டு. சங்க நூல்கள் அனைத்திலும், தமிழ் மூவேந்தரும் தமக்குள் எந்த நேரமும் பூசலிட்டுக் கொண்டிருந்த நிலையைக் காண்கிறோம். ஆதலால் அக்காலத்தைச் சிறப்பு மிக்க காலமென்று கருதுவதில் கருத்து வேற்றுமை யுண்டு. அடுத்து, ஆழ்வார் நாயன்மார் அருட்பாசுரம் பாடிய காலத்தை, இவர்கள் செய்ததெல்லாம் சமய இலக்கியமே என்ற கருத்தினால், தமிழின் பொற்காலம் என்று சொல்ல ஆராய்ச்சியாளர் தயங்குவதைக் காண்கிறோம். அதைவிட்டு அடுத்துள்ள காலத்தைப் பார்த்தால், கம்பர் இராமாயணம் செய்த காலம்*

தமிழின் பொற்காலம் என்று சொல்ல அறிஞர் யாரும் தயங்க மாட்டார்* அக்காலத்தில் சிறப்பான சோழ முடி மன்னர் விளங்க வில்லை. அடுத்துச் சில நூற்றாண்டுகளில் சோழப்பேரரசு பேராற்றலோடு வளர்ந்து வந்து உச்சநிலையடைந்த காலத்தில் சேக்கிழார் பெருமான் தோன்றிப் பெரியபுராணம் பாடினார். இது சைவத்தில் மட்டுமின்றிப் பொதுவாகத் தமிழிலும் மிகச் சிறந்ததொரு பொற்காலம் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மொழியில் மிகவும் அதிகமாகப் பயின்று ஆராய்ந்து வரப்பெற்ற நூல்கள் திருக்குறள், கம்பராமாயணம், பெரிய புராணம் என்ற மூன்றே. தொல்காப்பியப் பயிற்சியும் ஆராய்ச்சி யும் மிகவும் சமீப காலத்தில் எழுந்தது. திருவாசகம், நாலாயிரம் போன்ற அருட்பாசுரங்கள் அதிகமாகப் பயிலப்பெற்று வந்த போதிலும், சமீபகாலம் வரையில் அவற்றில் யாரும் ஆராய்ச்சி செய்யத் துணிந்ததில்லை. ஆனால் முன் குறித்த மூன்று நூல் களிலும் ஆராய்ச்சி மிகவும் அதிகம். பெரிய புராணத்தைப் பொறுத்தவரையில், அது பற்றிய ஆய்வுகள் மிகவும் அதிகம். முதுபெரும் தொண்டராய் இருந்த சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரியபுராண ஆராய்ச்சிக்குத் தம் வாழ்நாளை அர்ப்பணித்திருந்தார். சேக்கிழார் காலம், அவர் வரலாறு, நூல், திருத்தொண்டர் வரலாறு, சேக்கிழார் புராணம் என்பன பற்றிய ஆராய்ச்சிகள் எண்ணிறந்தன. இவ்வாராய்ச்சிக்கு நூற்றுக்கணக் கான கல்வெட்டுக்களும் சான்று கூறுகின்றன. இதுவரை ஆராய்ந்து சொல்லப்பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்துச் சொல்வதுகூட ஒரு கடினமான சாதனையாய் இருக்கும். எனினும், இங்கு பலர் கருத்தையும் ஆராய்ந்து, எமது ஆராய்ச்சியின் பயனையும் சேர்த்து ஒரு தொகுப்பாகச் சொல்லுகிறோம். இத் தொகுப்பு, ஆசிரியர் வரலாறு, காலம், புராண அமைப்பு என்ற தொடக்க உரையோடு, வரலாறு. ஆசிரியத்தன்மை, சமயம், காப் பியம், கவிதை, கலை, பொருள், சமூகம் என்ற இயல்களையும், முடிவுரையையும் கொண்டு அமைந்திருக்கும். புராணத்தை, வாழ்க்கை அனைத்தும் தழுவிய ஒரு விரிந்த கண்கொண்டு இங்கு பார்க்க முற்பட்டிருக்கிறோம். இது வெறும் சமய நூல் அல்ல. புராணம் என்று பெயர் இருந்தபோதிலும், புராணம் அல்ல. இது சுந்தரர் வாழ்க்கை குறித்த ஒரு தனிக்காப்பியமா,

* இதுபற்றி வையாபுரிப்பிள்ளை எழுதிய 'கம்பர் திருநாள்' என்ற கட்டுரை படித்தறிதல் சுவையுடையதாயிருக்கும்.

பெருங்காப்பியமா என்பது பற்றி இங்கு முடிவு காணும் அவசியம் இல்லை; நூல் அனுபவம் மட்டுமே போதும்; எந்தத் தலைப்பிலும்-சேக்கிழார் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தையும் கூறி முடித்துவிடவில்லை; சிலவற்றை மட்டுமே சுட்டிச் செல்கிறோம். வாழ்க்கையின் உயரிய குறிக்கோள்களைச் சென்ற காலத்தில் மட்டுமல்லாமல் எதிர்காலம் முழுமைக்குமே உயர்த்திக் காட்டுகின்ற பெருநூலாக இதைக் காண்கிறோம்.

## சேக்கிழார்

**வரலாறு**

பெரியபுராணம் பாடிய அருண்மொழித் தேவரான சேக்கிழாருக்கு முன், சேக்கிழார் என்ற பெயருடையார் பலர் இருந்திருக்கிறார்களென்று சாசனங்களால் அறிகிறோம். உதாரணமாக, முதல் குலோத்துங்கன் சாசனம் ஆட்சியாண்டு 23 (கி.பி. 1093 திருக்கழுக்குன்றம்) - "ஊர்களெல்லை செப்பியிருந்த செப்பேட்டுச் சாசனம் திருக்கழுக்குன்றம் நாற்பாலெல்லையும் பார்க்க புரவுவரித் திணைக்களம் சேக்கிழார் சொற்படி இவ்வூர் சபைக்கு.... ஸ்ரீ மாஹேச்வரக் கண்காணி நமிநந்தியடிகளும் பூஜிக்கும் சிவருத்ரபண்டிதரும்" - என்று தொடர்வது காண்க. குலோத்துங்க சோழர் பலர் ஆட்சிபுரிந்த வரலாறு தெரியாதிருந்த காலத்தில், இப்படிப்பட்ட குறிப்புக்களால் சேக்கிழார் முதற்குலோத்துங்கன் காலம் என்றும் சொல்ல நேர்ந்திருந்தது. (தென் இந்திய சாசனங்களின் தொகுதி 5, பக்கம் 68).

நம்பியாண்டார் நம்பி மறைந்து கிடந்த தேவாரப் பதிகங்களைப் பொல்லாப்பிள்ளையார் அருளினாலே வெளிப்படுத்தித் திருமுறைகளை வகுத்து அமைத்துச் சிலகாலம் சென்ற பிறகு, தமிழ்நாடு செய்த தவப்பயனாகப் பரமசிவனுடைய திருவருளினாலே தொண்டை மண்டலத்திலுள்ள குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் மரபில் ஒரு பெரியார் அவதாரம் செய்தார். அருண்மொழித்தேவர் என்பது இவருக்கு இடப்பெற்ற பெயர். இவருடைய தம்பியாகிய மற்றொரு பிள்ளை பாலறாவாயர் என்ற பெயரோடு பிறந்திருந்தார். (அருண்மொழித் தேவர் என்பது முதலாம் இராசராச சோழமன்னனது இயற்பெயர். பாலறாவாயர், திருஞானசம்பந்தர். இப்பெயர்கள் சேக்கிழார் மரபினருக்குச் சோழமன்னனிடத்தும் சைவத்தினிடத்தும் இருந்த

'ஈடுபாட்டை நன்கு புலப்படுத்தும்.) இக்குன்றத்தூர் என்பது, தொண்டைநாட்டுப் புலியூர்க் கோட்டத்தின் குன்றைவன நாட்டின் தலைநகராக உள்ளது. அருண்மொழித் தேவர் தம்முடைய பெருமையினால் தாம் பிறந்த மரபை விளக்கியமையினால், சேக்கிழார் என்ற குடிப்பெயரே இவருடைய பெயராக நிலைத்தது. முறையாகக் கல்வி பயின்று, கல்வி கேள்விகளிலும், ஒழுக்கத்திலும், ஆட்சித் திறத்திலும் இவர் மிகவும் சிறப்புடையவராக விளங்கினார்.

அக்காலத்து சோழ நாட்டை ஆண்ட அனபாய சோழ மன்னன் இவருடைய பெருந்தகுதியைக் கேட்டறிந்து இவரைத் தன் தலைநகருக்கு வருவித்துத் தனது முதலமைச்சராக ஆக்கினான். இவரும் அமைச்சர் பதவியில் பெருஞ்சிறப்பு வாய்ந்து விளங்கியபோது, அரசன் இவருடைய திறமை பற்றியும் இவர் தொண்டை நாட்டிலிருந்து வந்தமை பற்றியும், இவருக்கு ('உத்தம சோழப் பல்லவன்') என்ற சிறப்புப் பட்டத்தைத் தந்தான். சேக்கிழாரும் அவ்வாறு மந்திரியாக ஒழுகிவரும் காலத்து, சோழ நாட்டில் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருநாகேசுவரம்* என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானிடத்து மிக்க ஈடுபாடு கொண்டு, அப்பெருமானையே தமது வழிபடு கடவுளாகக் கொண்டு ஒழுகினார். உரிய காலத்தில் தமது சொந்த ஊராகிய குன்றத்தூரிலும் திருநாகேசுவரம் போன்ற ஒரு புதிய ஆலயத்தை எடுப்பித்து, அங்கும் நித்திய நைமித்திய பூசைகள் வழுவாது நடத்தி வந்தார்.

இப்படி சேக்கிழார் அமைச்சராகச் சிறப்புற்று வந்த காலத்தில், இங்கிருந்த சைவ மக்கள் பாற்கடலுள் பிறந்த மீன்கள் அப்பாலை உண்ணாது வேறுபொருளை உண்டல் போல, தங்களது அனாதியான சைவசமய நூல்களைக் கற்பதை விட்டு, புறச்சமயமாகிய சைன சமயத்தைப் போற்றுகின்ற நூலான சீவகசிந்தாமணி என்ற சமணக் காப்பியத்தை விரும்பிக் கற்றுவந்தார்கள். அனபாய சோழனும் அந்த நூலையே போற்றி வந்தான். பெருஞ்சைவ சீலர்களாகப் பல தலைமுறை ஆண்ட

---

* திருநாகேசுவரம் சோழநாட்டில் காவிரித் தென்கரைத் தலங்களில் முப்பதாவது. சுவாமி திருநாகேசுவரர், சண்பகாரணியேசுவரர். அம்பிகை குன்றமுலைநாயகி, மூவர் பதிகமும் கொண்டது. இது நாகம் வழிபட்ட திருநாகேசுவரம், திருக்குடந்தைக் காரோணம். திருப்பாம்புரம், திருநாகைக்காரோணம் என்ற நான்கு தலங்களில் ஒன்று.

சோழ மன்னர் மரபில் வந்த இச்சோழ மன்னர் சமணச் சார்பு கொள்ளாமல் இலக்கிய உணர்வு கொண்டே அந்நூலைப் பாராட்டி வந்திருத்தல் கூடும் எனினும், இது தகுதி அன்று என்று சேக்கிழார் கருதினார்; அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் ஆதலால்; சைனக் காப்பியங்களையே விரும்பிக் கற்பதால் சைவ ஈடுபாடு குன்றிவிடும் என்று அவர் கருதினார். ஆகவே அவர் அரசனுக்குத் தாம் அமைச்சராய் இருந்த முறைமை பற்றி, நல்லறிவுச் சுடர் கொளுத்தினார்.

“அரசே! தாங்கள் சிறந்த சைவ மரபில் வந்தும் கூடச் சமண நூல்களை விரும்பிக் கற்பது தகுதி அன்று. சிவ சரித்திரமானது இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றையும் அளிப்பது. சமணர் சைவ சமயத்தை நிந்திப்பவர். அவர்கள் நூலைப் பாராட்டிக் கேட்பதனால் வாழ்நாள் வீழ்நாளாகக் கழியும். இதை இன்றே விடுக” என்றார்.

கேட்ட அரசன், “அப்படியானால் சிவ புண்ணியம் பயக்கத் தக்க சிவ சரித்திரம் யாது? அதை எமக்குத் தெளிவாக உணர்த்துவீராக” என்று கேட்டான்.

அதற்குச் சேக்கிழார் “அரசே, திருவாரூரில் நம் சமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத்” தியாகராசப் பெருமான் ‘தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்’ என்று அடியெடுத்துக் கொடுத்துச் சிவனடியார்களுடைய புகழைப் பாடும்படி உணர்த்தினார். சுவாமிகள் திருத்தொண்டத் தொகை என்று பெயர் தந்து பதினொரு பாடல் கொண்டு ஒரு திருப்பதிகம் பாடியருளினார். அப்பாடல்களை விரித்து, திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பி என்பவர் ஓர் அந்தாதியாகத் தொண்ணூறு பாடல் செய்தார்: அபயகுல சேகர மன்னர் சிவாலயதேவர் முதலிய ஆன்றோர் அதை எடுத்துப் பாராட்டியிருக்கிறார்கள் என்று கூறினார்.

பின்னர் அரசன் விரும்பியபடி திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் விரித்துச் சொன்னபோது, அரசன் மகிழ்ந்து, “அமைச்சரே, இச்சிறப்புடைய சரித்திரங்களைப் பலருக்கும் பக்திச்சுவை உண்டாகும்படி தாங்களே ஒரு பெருங்காப்பிய

மாகப்* பாடித் தருதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். சேக்கிழாரும் அதற்கு இசைந்து, "இப்புராணத்தைத் தில்லைத் தலத்தில் சென்று அங்கு பாடி முடிப்பேன்" என்று சொல்லி, அரசனிடம் விடைபெற்று, பொருளும் பெற்றுத் தில்லையை அடைந்தார்.

அங்கு முறைப்படி நடராசப்பெருமானை வணங்கி, "உன்னுடைய அடியார் பெருமையை அடியேன் உரை செய்ய நீயே அடியெடுத்துத் தருதல் வேண்டும்" என்று வேண்டினார். அப்போது சபாநாயகருடைய திருவருளால் 'உலகெலாம்' என்ற அசரீரி வாக்கின் ஒலி எல்லோரும் கேட்கும்படி எழுந்தது. கேட்டோர் நடராசப்பெருமான் திருவருள் என்பதுணர்ந்து, சேக்கிழாருக்குச் சிறப்புச் செய்து போற்றினர். சேக்கிழார், பெருமானையும் சமயாசாரியர் மூவரையும் வணங்கி, ஆயிரக்கால் மண்டபத்தில் அமர்ந்து, 'உலகெலாம்' என்ற தொடரையே முதலாக வைத்துப் புராணம் பாடத் தொடங்கினார்.

சோழ மன்னன், புராணம் நடந்துகொண்டு வருகின்ற செய்தி அடிக்கடி விசாரித்து, முற்றுப் பெற்றவுடன் சிதம்பரத்தை அடைந்து, சேக்கிழாரை வணங்கி, நடராசப் பெருமானையும் வணங்கினான். அப்போது, "அரசனே, சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தை நீ கேட்பாயாக" என்று ஒரு திருவாக்கு எழுந்தது. அரசனும் மகிழ்ந்து நாடு முழுமையும் ஓலை அனுப்பிப் பெரியசபை கூட்டச் செய்தான். நாடெங்கும் உள்ள சிவபத்தர் வந்து குழுமினார்கள். தில்லைவாழ் அந்தணர் ஒருவர் சித்திரைத் திருவாதிரையில் புராண ஏட்டைப் பூசித்து வணங்கினார். எல்லோரும் வேண்டியவாறு சேக்கிழார் புராணத்தை வாசித்துப் பொருள் சொல்லத் தொடங்கி, அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரையில் புராணப் பிரசங்கத்தை முடித்தார். அரசன் சிறப்பாகப் பூசைகளையெல்லாம் செய்வித்து, உரிய மரியாதையோடு புராணத்தை யானைமேல் இருத்தி, சேக்கிழாரையும் யானைமேல் அமரச் செய்து தன் இரு கைகளாலும் யானை மீதிருந்து சாமரம் வீசி நகர்வலம் செய்வித்தான். அவருக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்று சிறப்பான பட்டம் அளித்தான். பின்னர் கூடியிருந்த அனைவரும், முன்னமே நம்பியாண்டார் நம்பி வகுத்திருந்த பதினொரு திருமுறைகளின்

---

* பெருங்காப்பியம் என்று அரசன் கேட்டுக் கொண்டதற்கேற்ப நூலும் பெரியபுராணமாயிற்று என்பது ஒரு சுவையுடைய குறிப்பு.

பின் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறை என்று வகுத்துச் செப்பேடு செய்து நடராசப் பெருமான் சந்நிதியில் வைத்தார்கள்.

அப்போது சேக்கிழார் தம்பியாகிய பாலறாவாயர் குன்றத்தூரில் ஒரு திருக்குளம் அமைத்து நாகேச்சுரத் திருப்பணி செய்து கொண்டிருந்தார் என்று அறிந்து, அரசன் அவரை அழைப்பித்து அவருக்குத் 'தொண்டைமான்' என்ற பட்டமும் சூட்டித் தனக்கு மந்திரியாக ஆக்கினான். அப்பால் பாலறாவாயர், தொண்டை மண்டலத்தில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தில் வந்தடைந்தவரைக் காத்த பெருமையால், 'தொண்டைமண்டலம் நின்று காத்த பெருமாள்' என்ற பெயரும் பெற்றார். சேக்கிழார், பின்னர் தில்லையில் அறுபத்து மூவர் வரலாறுகளை மனத்தில் சிந்தித்து, அந்தச் சிந்தனையோடு வாழ்ந்து, உரிய காலத்தில் அங்கு சிவ பெருமானுடைய குஞ்சிதபாத நிழலை அடைந்தார்.

இதுவே சம்பிரதாயமாகச் சொல்லுகின்ற சேக்கிழார் வரலாறு. இதை 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், சைவ சித்தாந்த சமய சந்தான ஆசாரியருள் ஒருவராய் விளங்கிய உமாபதி சிவாசாரியர் 103 விருத்தங்கள் கொண்ட சிறப்பான ஒரு புராணமாகப் பாடியிருக்கிறார். அந்நூலுக்குரிய பின்வரும் சிறப்புப் பாயிரம் இதைக் குறிப்பிடுகிறது:

திருக்கிளரும் கயிலைமலைக் காவல் பூண்ட
　　செல்வமலி திருநந்தி மரபில் வந்து
கருக்குழியில் எமைவீழா தெடுத்தாட் கொள்ளும்
　　கருணைமிகும் மெய்கண்ட தேவர் தூய
மருக்கிளர்தாள் பரவும் அருணந்தி தேவர்
　　மகிழுமறை ஞானதே வருக்கன் பாகி
இருக்கும்உமா பதிதேவர் சேக்கி ழார்தம்
　　இசைப்புரா ணமுரைத்தார் என்ப மாதோ.

சேக்கிழார் வரலாற்றைக் கூறியவிடத்து, அதைப் புராண மாகப் பாடிய உமாபதியாரின் சொற் சிறப்புக்களையும் சிறிது உணர்ந்தால்தான் வரலாற்றின் சிறப்பை நன்கு உணர்ந்தவர்கள் ஆவோம். புராணத் தொடக்கத்தில் வேளாண் குடிப்பெருமையை மிகவும் விரிவாகக் கூறுகிறார். உலகத்தார் பொய்க்கதையாகிய சிந்தாமணிக் கதையைக் கற்றனர் என்று கூறுமிடத்து, உவமைகள் பல சுவைபடக் காட்டுகிறார்:

கலக மிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே
    கட்டி நடத்திய சிந்தா மணியை மெய்யென்று
உலகிலுள்ளோர் சிலர்கற்று, நெற்குத் துண்ணாது
    உமிக்குத்திக் கைவருந்தி, கறவை நிற்க
மலடுகறந்து உளந்தளர்ந்து, குளிர்பூஞ் சோலை
    வழியிருக்கக் குழியில்விழுந்து அளறுபாய்ந்து,
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று,
    விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து, நொந்தார்.

*இது அவகதை என்று அமைச்சர் சொன்னவுடன் அரசன் கேட்கிறான்; அரசனை இளஅரசன் என்று உமாபதி குறிப்பிட்டிருக்கிறார்:*

அவகதையாய்ப் பயனற்ற கதைஈ தாகில்
    அம்மையும் இம்மையும் உறுதி பயக்கத் தக்க
சிவகதை ஏது, அதுகற்ற திறமைப் பேர்ஆர்,
    சீவகசிந் தாமணிபோல் இடையில் வந்த
நவகதையோ, புராதனமோ, முன்னூல் வகையோ,
    நானிலத்துச் சொன்னவர்ஆர், கேட்ட பேர்ஆர்,
தவகதையோ, தவம்பண்ணிப் பேறுபெற்ற
    தனிக் கதையோ, அடைவுபடச் சாற்றும் என்றான்.

*நம்பியாண்டார்நம்பி செய்த திருத்தொண்டர் அந்தாதியைத் திருமுறை கண்ட இராசராசதேவர் பாராட்டியதாகச் சொல்லுகிறார். திருத்தொண்டர் வகையை உரைக்கும்போது, நாடு, மரபு, ஊர், தொண்டு, காலத்தின் முற்பிற்பாடு, பரமுத்தி பெற்றோர், சீவன்முத்தர், சேர்ந்து அருள் பெற்றோர், பகைத்துப் பெற்றோர், பகையாய் நரகடைந்தோர், இல்லறம், துறவறம், பிரமசாரிகள், குருவருள், சிவபூசை செய்தோர், சிவவேடமே பொருளெனக் கொண்டோர் - இப்படிப் பிரித்து அரசன் கேட்கிறான். புராணத்தைச் சேக்கிழார் செய்தபோது, யார் யார் என்ன மரபு, தொகையடியார் யார், இல்லறத்தார் துறவறத்தார், பிரமசாரி, முத்தியடைந்த வகை, நரகடைந்தோர், தொண்டர் காலம் என்று பெயர்களைச் சொல்லி அடைவுபடுத்திக் காட்டுகிறார்:*

ஒருலகோ, ஒருதிசையோ, ஒருபதியோ, தம்மில்
    ஒருமரபோ, ஒருபெயரோ, ஒருகாலந் தானோ,
பேருலகில் ஒருமைநெறி தருங்கதையோ, பன்மைப்
    பெருங்கதையோ பேரொன்றோ, அல்லவோ, இதனை

ஏருலகெ லாமுணர்ந்தோ தற்கரி யவனென்று
இறைவன் முதல் எடுத்துக் கொடுத்தருளக் கொண்டு
பாருலகில் நாமகள் நின்றெடுத்துக் கை நீட்டப்
பாடிமுடித் தனர், தொண்டர் சீர்பரவ வல்லார்.

*புராணத்தின் காண்டம் இரண்டும், சருக்கம் பதின்மூன்று, பாடல் 4253; பெயர் திருத்தொண்டர் புராணம். சேக்கிழார் புராணத்தை 'ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும் அவர் திருஞானம் அமுது செய்த நாளும், ஆளுடை ஆதிரை நாளாம் சித்திரை ஆதிரை நாள் தொடங்கி எதிராமாண்டு சித்திரையின், நாளுடைய கதை முடித்தார்.' சேக்கிழார் புராணம் பாடி வரு கின்றார். புராணம் பாடுதல் எப்படி நடந்தது?*

சிறப்புடைய மூவர்முதலிகள் திருவாய் மலர்ந்த
திருநெறிய தமிழ்மூலர் திருமந்திர மாலை
அறப்பயனாம் காரைக்கால் பேயிரட்டை மாலை
அந்தாதி மூத்த பதிகம் கழறிற் றறிவார்
மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி திருமும்–
மணிக்கோவை தெய்வஉலா ஐயடிகள் வெண்பா
உறுப்பாகத் திருவிருத்தம் உடலாகப் பொருட்கோள்
உயிராக நாலடியால் நடந்ததுல கெல்லாம்.

*திருத்தொண்டர் புராணம் எழுதிய முறையை மறையோர் சிவமூல மந்திரத்தால் அருச்சனை செய்து இறைஞ்சி, இருக்கு முதல் மறைநான்கில் இன்றுமுதலாக இதுவுமொரு தமிழ் வேதம் ஐந்தாவதென்று கருத்திருத்தினார்கள். சேக்கிழாருக்குச் சிறப்புச் செய்து புராணத்தோடு யானைமீது நகர்வலம் செய்வித்த போது அன்பர் கூறுகிறார்கள்:*

மதுர இராமா யணகதை உரை செய்த
வான்மிக பகவனும் ஒப்பல்ல,
விதிவழி பாரத முறைசெய்து கரைசெய்த
வேத வியாதனும் ஒப்பல்ல,
சிதைவற ஆயிரம் நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்ல,
பொதிய மலைக்குறு முனிவனும் ஒப்பல –
புகழ்புனை குன்றை முனிக்கு என்பார்.

*சேக்கிழார் புராணம் பாடிய காலத்து, நாமகள் தனக்கு விருப்பமானவை அனைத்தையும் துறந்து அவருடைய நாவில் குடிகொண்டாள்:*

பூவை மறந்தனள் வெண்தா மரைமயில்,
புகல்தரு சங்கப் புலவோர்சொல்
பாவை மறந்தனள், தேச சுபாடித
பயனை மறந்தனள், பதுமத்தோன்
நாவை மறந்தனள், பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனும்
கோவை மறந்தனள் – சேவையர் காவல –
னார்திரு நாவிற் குடிகொண்டாள்.

(சேவையர் காவலர் - வேளாளர் மரபில் வந்த சேக்கிழார்) இவ்வாறு சேக்கிழார் புராணத்தைச் சிறப்பாகப் பாடி முடித்து, ஒரு வாழ்த்தும் சேக்கிழார்துதியும் பாடி உமாபதி சிவம் வரலாற்றை முடிக்கிறார்:

வாழி தில்லைமணி மன்றுள் என்றும் நடம்
ஆடும் அங்கணர் மலர்ப்பாதம்;
வாழி காழிநகர் வாழ வந்ததிரு
நெறிய ராதிபதி வள்ளல்தாள்;
வாழி அன்பர்திரு நீரு மிட்ட திரு
முண்டமும் துவய கவசமும்;
வாழி குன்றை முனி, சேவையாதி திரு
வாய்மலர்ந்தருள் புராணமே.

அண்டவாணர் தொழு தில்லை யம்பலவர்
அடிஎடுத்து உலகெ லாம்எனத்
தொண்டர் சீர்பரவு சேக்கிழான் வரிசை
துன்று குன்றைநக ராதிபன்
தண்டகாதிபதி திருநெறித் தலைமை
தங்கு செங்கைமுகில் பைங்கழல்
புண்டரீகமலர் தெண்டனிட்டு வினை
போக்கு வார்பிறவி நீக்குவார்.

பொதுவாக உமாபதியார் கூறும் வரலாற்றைத் தவிர, சேக்கிழாரைக் குறித்த வேறு செய்திகள் கிடைக்கவில்லை. எனினும், இவருடைய இளம் பருவத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று செவி வாயிலாக எங்கும் வழங்கி வருகிறது. சேக்கிழாரின் இளம் பருவத்தில் இவரது தந்தையார் அரசவைக்குச் சென்றபோது, அரசன் அன்று அரசவையில், ‘மலையிற் பெரிது எது? மண்ணிற் பெரிது எது? கடலிற் பெரிது எது?’ என்று ஒரு வினா விடுத்து

அவையிலுள்ளார் யாவரும் இதற்கு மறுநாள் விடை கூற வேண்டும் என விதித்திருந்தான். மறுநாள் எவரும் இவ்வினாக் களுக்கு விடை கூற முடியவில்லை. கவலை தோய்ந்திருந்த தம் தந்தையாரிடம் இவர் எளிதாக மூன்று குறட்பாக்களைச் சொல்லி விடையை விளக்கினார்:

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்,
மலையினும் மாணப் பெரிது. 124

காலத்தினாற் செய்த நன்றி, சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

பயன்தூக்கார் செய்த உதவி, நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 103

தந்தையார் இப்பாடலை அரசவையில் சொல்ல, அரசனும் அவையினரும் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். இவ் விடையே இவருடைய புகழ் நாடெங்கும் பரவி, பின்னர் இவர் அனபாய சோழனால் பெருஞ்சிறப்புப் பெறுவதற்குத் தோற் றுவாயாக இருந்தது. இச்செய்தி, வேளாளர் பெருமை கூறும் திருக்கை வழக்கம் என்ற பிற்கால நூலில்,

– காவலன்
மண்ணிற் கடலின் மலையிற் பெரிதென்? என
எண்ணியெழு திக்கொடுத்த ஏற்றக்கை.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நம்பியாண்டார் நம்பி தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்ததோடு அமையாது, திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம், அம்மை பதிகங்கள் முதலான பல்வேறு சைவப் பாசுரங்களையும் திரட்டி உரியவற்றுக்குப் பண்ணடைவு வகுத்துப் பதினொரு திருமுறைகளாக அமைத் திருந்தார். நம்பியாண்டார் நம்பி, தம்காலத்து அரசன் முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலையும் அவன் மகன் இராசேந்திரன் கட்டிய கங்கைகொண்ட சோழ புரக் கோயிலையும் கருவூர்த் தேவர் பாடித் துதித்த திருவிசைப் பாப் பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறைக்குள் அடக்கினார். சேக்கிழார் தமது புராணத்தைப் பாடி அரங்கேற்றிய பிறகு அக்காலத்திருந்த பெரியோர் இப்புராணத்தினிடத்துத் தங்க ளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் ஈடுபாடு காரணமாக, இதையும் ஒரு திருமுறையாக்கி, திருமுறை பன்னிரண்டு என்று இதைத்

தொகுத்து முடித்தனர். இத்திரு முறைக்கு முன்புள்ள திருமுறைகள் யாவும் தோத்திரங்களாயிருக்க, இது தோத்திரமும் தொண்டும் புரிந்த அடியாருடைய வரலாறாகச் சிறந்த முறையில் சரித்திரமாக அமைந்தது.

சேக்கிழார் தில்லையிலேயே தம் புராணத்தைப் பாடி அரங்கேற்றினார் என்பது உமாபதியார் கூறும் வரலாறு. 'உலகெலாம்' என்று பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார் என்பதை ஒப்புக் கொண்டால், இதை ஒப்புக் கொள்வதில் தடையெழ நியாயமில்லை. அன்றியும், தில்லையைக் குறிப்பிடுமிடத்து இவர் காட்டும் ஈடுபாடும், சொல்லும் பொருள் பொதிந்த அடைமொழிகளும், தில்லையில் அரங்கேற்றம் நடைபெற்றதென்று ஒப்புக்கொள்ளச் செய்யும். தில்லையை நூற்றுக்கணக்கான முறைகள் சொல்லுகிறார்.

(சேக்கிழார் வரலாற்றை இன்று நாம் அறிந்து ஆராய்வதற்கு ஆதாரமாயிருப்பது, உமாபதி சிவாசாரியர் பாடிய 'திருத்தொண்டர் புராண வரலாறு' என்னும் சேக்கிழார் புராணம். இதுவே, "சேக்கிழார் அனபாய சோழனிடம் அமைச்சரானார், அரசன் இவருக்கு உத்தமசோழப் பல்லவராயன் என்ற பட்டத்தை அளித்தான், அரசன் விருப்பப்படி இவர் திருத்தொண்டர் புராணம் பாடினார், இவர் இளவல் பாலறாவாயர் அரசனால் பதவியில் அமர்த்திப் பெருஞ்சிறப்புச் செய்யப் பெற்றார்" என்ற செய்திகளைக் கூறுகிறது. இச்செய்திகள் பலவற்றுக்குக் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைக்கின்றன.)

இந்நிலையில் ஓர் ஆராய்ச்சியாளர் "உமாபதியார் சேக்கிழார் புராணம் பாடவில்லை, வேறு பெயர் தெரியாத புலவரொருவர் பாடியிருக்க வேண்டும். காரணம் இப்புராணத்துள் சிறந்த பிழைகள் பல உள்ளன. சிந்தாமணியைச் செவ்வையாகப் படித்த புலவரான சேக்கிழார் அரசனை மட்டும் படிக்கலாகாது, படிக்கக் கேட்கலாகாது என்று தடுத்தார் என்பது நம்பத் தக்கதன்று. இத்தகைய சமய வெறுப்புக் குற்றத்தைச் சேக்கிழார் மீது ஏற்றிக் கூறுதல் பெருந்தவறு, அக்குற்றம் சேக்கிழார் புராணம் பாடிய ஆசிரியரையே சாரும். மேலும் சோழர்தம் சைவ நன் மரபில் வந்த அனபாயன் நாயன்மார் வரலாறுகளை அறியாத முழு மூடனாயிருந்தான் எனல் உண்மைக்குமாறு" என்று கூறுகிறார்.*

---

* மா. இராசமாணிக்கம், சேக்கிழார் 1945.

ஆராய்ச்சி, உண்மையைக் காணவேண்டுமே தவிர உண்மைக்கு மாறான வகையில் புத்தியைச் செலுத்தக்கூடாது. இதுபற்றி உண்மையைக் காண இங்கு இரண்டு கருத்துக்களைக் கூறமுடியும். சேக்கிழார் வரலாறு கூறிவருகின்ற உமாபதி சிவா சாரியர், அவருக்கு நூற்றைம்பது ஆண்டுகளே பிற்பட்டு வாழ்ந் தார். சேக்கிழார் இணையற்றதொரு சைவப்பெருங் காப்பியம் பாடியுள்ளார். உமாபதியும், சைவ சமயத்தின் தத்துவத்தை எடுத்துக் கூறுகின்ற அரும்பெரும் நூல்களைப் பயின்று, சித்தாந்த நூல்களைச் செய்த சந்தான பரம்பரையில் ஞானோபதேசம் பெற்றுத் தாமும் சந்தானாசாரியராயிருந்து அரிய நூல்களைச் செய்தார். அதுமாத்திரம் அல்ல; பண்டை நூல்கள் எல்லாம் நல்லவை அல்ல, இன்றைய நூல்கள் எல்லாமும் தீயவை அல்ல, நடுநிலைமையே வேண்டுவது என்ற உயர்வான இலக்கிய விமரி சன தத்துவத்தை 650 ஆண்டுகளுக்கு முன்னமே அறிவித்தார்.

தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினார், நலங்கொள்மணி பொதியும் அதன் களங்கம்
நவையாகா தென உண்மை நயந்திடுவர்; நடுவாம்.

தன்மையினார் பழமை அழ காராய்ந்து தரிப்பர்;
தவறு நலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்
இன்மையினார், பலர் புகழில் ஏத்துவர், ஏதிலருற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர், தமக்கென ஒன்றிலரே.

இத்தகைய ஒரு பெரு ஞானி தாம் சொல்வதை நன்கு ஆராய்ந்து சிந்தித்தே சொல்வார் என்பது உறுதி, ஆராய்வதற்கு அவருக்கு அன்று கருவிகள் இருந்தன, கிடைத்தன. மேலும், சேக்கிழார் சமய உணர்வு பெற்று அற்புதமான காரியம் செய்தார் என்றால், அதையொத்த சமய உணர்ச்சி மேலிட்டு இந்த ஞானி அவர் வரலாற்றைப் பாடினார். ஆகவே, தாம்உணர்ந்த உண்மையைப் பாடியதில் குற்றம் அவருடையதன்று; குற்றம் கற்பிக்க முயல்வார் மேலாகும்.

மேலும், அவ்வாராய்ச்சியாளர், திருத்தொண்டர் புராண சாரமும் திருப்பதிக் கோவையும் திருப்பதிகக் கோவையும் உமாபதி பாடியிருக்கலாம், திருத்தொண்டர் புராண வரலாறும் திருமுறை கண்ட புராண வரலாறும் உமாபதிக்குப் பின்வந்த வேறொருவர் பாடியிருக்கலாம் என்றே எழுதுகிறார். இது சரியன்று, பிழை.

மேலும், அனபாயன் நாயன்மார் வரலாறு அறியாதவன் என்பது இங்கு விவாதமன்று; அவன் சிந்தாமணியில் பொழுது போக்கினான். அரசனே இப்படியிருந்தால், சைவந் தழைத்த நாட்டு மக்கள் எந்நிலையிலிருப்பார்கள் என்பது பக்தருடைய மனக்கவலை. ஆகவே சேக்கிழார் அரசனுக்கு அறிவு கொளுத்து கிறார். மேலும் நாயன்மார் வரலாறுகள், சேக்கிழார் சொன்ன பிறகுதான் விளக்கமடைகின்றனவேயொழிய, முன்னமே விளக்க மில்லை, ஆங்காங்கு சில வரலாறுகள் மட்டும் தெரிந்திருந்தன. ஆகவே, அரசன் அவற்றை விளங்க அறியாதவன் என்பதும் பிழையாகாது. சிந்தாமணியை அவன் இலக்கியமாகப் பயின் றான்; அதையே இவர் தடுத்தார்; அவன் கருத்துக்கேற்ற வேறு இலக்கியம் அப்போது இல்லை; சேக்கிழாரே செய்து தருகிறார்; ஆதலால், வரலாறு பிழையல்ல.

அடுத்துச் சமய வாழ்க்கையை ஆராயும்போது, வெறும் பகுத்தறிவு என்னும் அளவுகோல் செல்லாது. பக்குவமும் வேண் டும். எதையும் அவரவர் கண்கொண்டு பார்த்தால் அன்றி, நம் கண்கொண்டு பார்த்தால் உண்மை விளங்காது.

**கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை**
**உண்மையான் உண்டிவ் வுலகு.**

என்று குறளாசிரியர் பாடினார் அல்லவா?

இவ்வாராய்ச்சியாளருக்கு விடை 1961இல் எழுதப்பெற்ற தமிழ் இலக்கிய வரலாறு என்ற ஓர் ஆங்கிலப் புத்தகத்தில் காணப்படுகிறது: "சிந்தாமணி சமயநூல் என்று சொல்வர். இது பொருந்தாது. இது காமச்சுவை மிகுதியாய் உடையது. இச்சுவை யும் வரம்பு கடந்துபோய் வெறுப்பூட்டுகிறது. இதைப் படித்த சோழ மன்னனைச் சேக்கிழார் இவ்வாறு அவ்வப்பொழுது போக்குவது சரியன்று என்று எச்சரித்து, சைவ நாயன்மார் வரலாறு கூறுகின்ற பெரியபுராணம் பாடிக் கொடுத்தார் என்ற கதை நம்பத்தகுந்ததே. இளைஞர் தொடக்கூடாது என்று தமி ழிலுள்ள ஏதேனும் ஒரு நூலுக்குத் தடைவிதிக்கவேண்டும் என் றால், அது சிந்தாமணியே. காமச்சுவையில் ஆசை கொண்டவர் களுக்கு இது நல்ல பொழுதுபோக்கு; ஆனால் புலன்களுக்கு ஆபத்தான தூண்டுகோல் அளிக்கிறது.*"

---

* தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்), சி. ஜேசுதாசன், ஹெப்சிபா ஜேசுதாசன், திருவனந்தபுரம் 1961.

இதை எழுதினோர் சைவர் அல்லர்: இரு கிறித்தவர்கள். 20ஆம் நூற்றாண்டில் கிறித்தவர் இந்த நூலைப் படித்து இக் கருத்தைக் கொள்ளும்போது, பன்னிரண்டாம் நூற்றாண்டில் சைவத்தில் தோய்ந்த ஒரு பக்திமான், சகல ஆடம்பரங்களும் பொருந்திய போக வாழ்க்கையில் தோய்ந்தவனும் பேரரசின் தலைவனும் சைவ மரபில் வந்த பெருவீரனுமான அரசன் தன் வாழ்க்கையை வீண்போக்க வேண்டாம் என்று அவனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தினார் என்பது பொருந்தாது என்று நாம் இன்று சொல்லமுடியுமா? இதை நன்கு உணர்ந்தே உமா பதியார் சேக்கிழார் புராணத்தைப் பாடியிருக்க முடியும். அக் காலத்திலே சேக்கிழார் புராணத்திற்கு ஒரு சிறப்புப்பாயிரமும் ஏற்பட்டுள்ளது. எனவே, இத்தனையும் நன்கு சிந்தித்து உணர்ந்து சேக்கிழார் புராணத்தை உமாபதியார் பாடவில்லை என்ற கூற்றுப் பொருந்தாது என்று எடுத்துக்காட்ட நாம் கடமைப் பட்டுள்ளோம்.*

## சேக்கிழார் புகழ்

பிற்காலத்தார் சேக்கிழாரை எவ்வாறு போற்றியுள்ளனர் என்பதைச் சில சொற்களால் கூறி இவ்வரலாற்றுப் பகுதியை முடிப்போம். உமாபதிசிவம் சேக்கிழார் புராணம் பாடினார் என்று குறிப்பிட்டோம். அடுத்து முதலாவது, பல பெரிய கோயில்களில் சேக்கிழாருக்குக் கோயில் அமைத்தமை. பெருங் கோயில்கள் பலவற்றில் அறுபத்து மூவருக்குச் சிலை வைத்து வழிபட்டமை போலவே, சேக்கிழாருக்கும் சிலை வைத்து வழிபாடு செய்கிறார்கள். சேக்கிழாருக்கு ஆன்மார்த்தத் தலமான திருநாகேசுவரத்தில் அவருடைய தாயாருக்குச் சிலை வைக்கப் பெற்றுள்ளது; அவர் தம்பி பாலறாவாயர் சிலையும் அங்கு இருக்கிறது. இதன் பொருளாவது, சேக்கிழார் பெரியபுராணம் செய்த காலத்தில் அவருடைய தாயார் உயிரோடிருந்தார், உடன் இருந்தார் என்பதாகும். ஒருகால் புராணத்துக்கு அவருடைய தூண்டுதலும் ஈடுபாடும் அதிகமாய் இருந்திருக்கலாம்; அது பற்றியே நன்றியுள்ள மன்னனாலும் மக்களாலும் அத்தாயார் சிலை வைக்கப்பெற்றது. பின்வந்த புராணங்கள் பலவற்றில் சேக்கிழாருக்கும் தனியாகத்துதி பாடப்பெற்றிருக்கிறது: காஞ்சி, ஆனைக்கா, அம்பர், பெருந்துறை முதலியன. 18ஆம் நூற்

* இதன் விரிவை வெள்ளைவாரணனார் எழுதிய பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி 1969, பக்கம் 798 - 800இல் காணலாம்.

*றாண்டின் பிற்பாதியில் வாழ்ந்த சிவஞானசுவாமிகள் கச்சியப்பர் போன்றார், பாடலில் இவரை நன்கு போற்றுகின்றனர். 19ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள், சேக்கிழார் மீது ஒரு பிள்ளைத் தமிழே பாடினார். இது தமிழில் தோன்றிய சிறப்பான பிள்ளைத் தமிழ் நூல்களில் ஒன்றாகும். இதனுள் அவர் சேக்கிழாருடைய பக்தித்திறத்தை மிகவும் வியந்து பாராட்டுகிறார். பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ, புலஞ்சார்பத்தின் விளை நிலமே என்றெல்லாம் கூறுவது காண்க. இதன் காப்புப் பருவத்தில் பிற தெய்வங்களைப் பரவிக் காக்க என்று கூறாது, திருத்தொண்டத்தொகைப் பாடல்கள் பதினொன்றின் முதல் குறிப்பாகிய 'தில்லை வாழந்தணர்' முதல் 'மன்னிய நீர் மறை நாவன்' வரையுள்ள பதினொன்றினாலும் குறிப்பிடப்பட்ட அடியவர்களையே அதே போன்ற பதினொரு பாடல்களால் காக்கவென்று பாடியிருப்பது தனிச்சிறப்பு. அவரது பக்திச் சிறப்பினாலும் பத்தராய்ப் பணிந்தார் புராணத்தைப் பாடிய அருமையினாலும், சேக்கிழார் நாயனார் எனக் கூறப்பெற்று, தலங்களில் சிலையும் வழிபாடும் அமைக்கப்பெற்றது எல்லா விதத்திலும் பொருத்தமே. பிற்காலத்தில் எழுந்த ஒரு வெண்பா, தமிழிலுள்ள மேலான ஆறு நூல்களில் திருத்தொண்டர் புராணமும் ஒன்றென்று கூறுகிறது:*

வள்ளுவர், சீர் அன்பர்மொழி வாசகம், தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை – ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம், தொகுசித்தி – ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்.

*பின்னூலாகிய தொண்டை மண்டல சதகம் (1700) ஒரு பாடலில் பெரியபுராணத்தைத் துதிக்கிறது.*

விண்ணிற் பிறக்கும் புகழ்க்குன்ற நாடன் விளங்குதமிழ்ப்
பண்ணிற் பிறக்கும் பெரிய புராணம் பகர்ந்தபிரான்
எண்ணிற் பிறக்கும் பததூளி என்தலை எய்தவந்த
மண்ணிற் பிறக்கவும் வைக்குங் கொலோ தொண்டை மண்டலமே.

*சேக்கிழார் சரிதம் கீர்த்தனமாகவும் பாடப் பெற்றிருக்கிறது.*

*சோழமண்டல சதகம் இரண்டு பாடல்களில் சேக்கிழாரை யும் பெரிய புராணத்தையும் குறிப்பிடுவதும் இங்கு அறியத் தக்கது (76, 83):*

காக்கும் நீதி இரவிகுரை கழற்கால் வளவன் கனிந்தேவ
சேக்கிழார்தம் திருவாயில் தெளிந்தமுதனூற் செழுங்கதையின்
மேக்குலாவுந் திருவேடம் மெய்யே பொருளா வீடு பெற்றோர்
வாய்க்கு லாவும் புகழ்வேளாண் மரபோர் சோழ மண்டலமே.

குலத்திற் பெரியோர் பேர்படைத்த குணத்திற்பெரியோர் கொடைப் பெரியோர்
தலத்திற் பெரிய அனபாயன் தழைத்த சமுகந் தனிலேறிப்
பலத்திற் பெறுபஞ் சாக்கரநீள் படியிற் பெரிய புராணத்தை
வலத்திற் குலவ அரங்கேற்றி வைத்தார் சோழமண்டலமே.

## சேக்கிழார் காலம்

*தமிழில் ஏதேனும் ஒரு பேரிலக்கியத்தின் காலம் மிகவும் திட்டமாய்த் தெரியுமென்றால் அது திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரின் காலம். இவர் நூலகத்துள்ள அகச்சான்று களாலும் பிற இலக்கிய வரலாறுகளாலும் கல்வெட்டு ஆராய்ச்சி வரலாற்றாலும், சேக்கிழார் காலம், 1133 - 50 வரை ஆண்ட இரண்டாம் குலோத்துங்க சோழன் காலமே என்பது மிகவும் திட்டமாய்த் தெரிந்த செய்தி ஆயினும், வரலாற்றை ஆராய்ந்த பெரும்புலவர்கள் மிக வேறுபாடான காலங்களைச் சேக்கிழா ருக்குப் பொருத்துகிறார்கள். ஆகையால் முக்கியமான கருத்துக் களையேனும் இங்கு எடுத்துக்காட்டி, அவற்றுக்குள்ள தடை விடைகளையும் சொல்லி உண்மையைக் காட்டுவது அவசிய மாகிறது. காலம் பற்றி எழுதுவோர் பலருள் சிலருடைய கருத்துக் களை மட்டும், அவை குறிப்பிடுகின்ற காலமுறைப்படி கீழே தருகிறோம். சேக்கிழார் பற்றி மட்டும் எத்துணைக் கருத்து வேறுபாடு என்று, கற்போருக்கு வியப்பு எழுதலும் கூடும்.*

1. **முதல் இராசேந்திர சோழன்** *காலம் 1012 - 1044: சோமசுந்தர தேசிகர் (சைவ சிகாமணிகள் இருவர், 1929).*

2. *அவனுடைய பேரன்* **முதற் குலோத்துங்க சோழன்** *காலம் 1070 - 1120: து.அ. கோபிநாத ராவ் (செந்தமிழ் 1905, சோழ வமிச சரித்திரச் சுருக்கம் 1910), பூரணலிங்கம் பிள்ளை (தமிழிலக்கிய வரலாறு ஆங்கிலம் 1929).*

3. *அவனுடைய பேரன்* **இரண்டாம் குலோத்துங்கன்** *1133 - 50 காலம்: ரா. இராகவையங்கார் (செந்தமிழ் 1905), சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு (1934). கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி (சோழர் வரலாறு, ஆங்கிலம் 1937), மு. இராக வையங்கார் (சாசனத் தமிழ்க்கவி சரிதம் 1937), மா. இராச*

*மாணிக்கம் (சேக்கிழார் 1945), சி.கே. சுப்பிரமணிய முதலியார். (சேக்கிழார் 1952), ச. வையாபுரிப்பிள்ளை (காவிய காலம் 1957).*

4. *அவனுடைய மகன்* **இரண்டாம் இராசராசன்** *1146 - 63 காலம்: (தெ.பொ. மீனாட்சிசுந்தரம், தமிழ் இலக்கிய வரலாறு ஆங்கிலம் 1965).*

5. **மூன்றாம் குலோத்துங்க சோழன்** *1178 - 1218 காலம்: தி.வை. சதாசிவ பண்டாரத்தார் (பிற்காலச் சோழர் வரலாறு, இரண்டாம் பாகம் 1951).*

*இவ்வாசிரியர்கள் கூற்றை ஆராய்வதற்கு முன், நூலிலுள்ள அகச் சான்றுகளைக் காணவேண்டும். சேக்கிழார் பெரிய புராணத்துள் பத்திடங்களில் தம் அரசனாகிய அனபாயனைக் குறிப்பிடுகின்றார். அப்பத்தையும் ஒரு தொகுப்பாகக் காண்பது மேல்வரும் கருத்துக்களை உணர்வதற்கு உதவியாயிருக்கும். அவ்விடங்கள் பின்வருவன:*

1. மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம்ப லம்செய்ய
தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
ஆய சீர்அன பாயன் அரசவை. 8

2. கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிரிளம் பிறை நறுங்கண்ணி
ஐயர் வீற்றிருக்குந் தன்மையினாலும்
அளப்பரும் பெருமையினாலும்
மெய்யொளி தழைக்குந் தூய்மையினாலும்
வென்றி வெண்குடை அனபாயன்
செய்யகோல் அபயன் திருமனத்தோங்கும்
திருக்கயிலாய நீள் சிலம்பு. 22

3. நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநாடென்றும்
பொற்றடந் தோளால்வையம் பொதுக்கடிந் தினிதுகாக்கும்
கொற்றவன் அனபாயன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்பலாமோ. 85

4. அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அன பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே. 98

5. சென்னி வெண்குடை நீடனபாயன்
திருக்குலம் புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல் வளந்தர இயல்பினில் அளித்துப்
பொன்னி நல்நதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம். 404

6. பொன்மலைப் புலிநின்றோங்கப் புதுமலை இடித்துப்போற்றும்
அந்நெறி வழியே யாக அயல்வழி அடைத்த சோழன்
மன்னிய அனபா யன்சீர் மரபின்மா நகர மாகும்
தொன்னெடுங் கருவூர்என்னுஞ் சுடர்மணி வீதிமூதூர். 552

7. சென்னி அபயன் குலோத்துங்கச்
சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கிய வளவர்
போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அனபாயன்
வருந்தொல் மரபின் முடிசூடுந்
தன்மை நிலவு பதிஐந்தின்
ஒன்றாய் நீடும் தகைத்தவ்வூர். 1218

8. எம்பிரான் சிவனே எல்லாப்
பொருளும் என் றெழுதும் ஏட்டில்
தம்பிரான் அருளால் வேந்தன்
தன்னைமுன் ஓங்கப் பாட
அம்புய மலராள் மார்பன்
அனபாயன் என்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத்
தென்னன்கூன் நிமிர்ந்த தன்றே. 2720

9. அந்நகரில் பாரளிக்கும் அடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும்
சென்னிநீ டனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழர் எனப் பொலிவார். 3954

10. மந்திரிகள் தமைஏவி வள்ளல்கொடை அனபாயன்
முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்
அந்தமில்சீர்ச் சோணாட்டில் அகநாடு தொறுமணியார்
சந்திரசே கரன்அமருந் தானங்கள் பலசமைத்தார். 4215

(இவற்றுள் இரண்டாவதாகிய 'கையில் மான் மழுவர்' என்ற பாடல் இடைச்செருகல் என்றும் சொல்வர்.)

5, 7ஆம் பாடல்களில் சென்னி என்ற பெயர் வருகிறது. இது சோழரைக் குறிக்கும் பொதுச்சொல்: கிள்ளி, வளவன் என்பனபோல. 2, 7ஆம் பாடல்களில் அபயன் என்ற சொல் வருகிறது: இச்சொல் பிற்காலச் சோழரைக் குறிப்பிடும் பொதுச் சொல். அனபாயன் என்ற சொல்லே, குறித்த ஒரு சோழ மன்னனைக் காட்டும் சிறப்புப்பெயராக அமைந்துள்ளது. அன்றியும், 7ஆம் பாடலில் 'சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன்' என்னும் அரசன் யாவன் என்பதையும் சேக்கிழார் தெளிவாய்க் குறிப்பிட்டிருக்கிறார். இங்கு காட்டிய பாடல்கள் பத்திலும் அனபாயன் என்ற பெயர் தவறாமல் பயில்கின்றது. இவை சோழருடைய பழம்பதிகள் ஐந்தை அவதாரத் தலமாகக் கொண்ட நாயன்மார் வரலாற்றிலும், சோழ மன்னரே நாயன் மாராக வரும் இடத்திலும், சோழநாட்டு நகரச் சிறப்புக்களிலும், அவையடக்கத்திலும் வருகின்றன. இத்தன்மையைப் பார்க்கும் போது, சேக்கிழார் அனபாயனைக் குறிப்பிடும்போது சிறந்த ஒரு பொருத்தத்தை வைத்தே குறிப்பிடுகின்றார் என்று தெரிகிறது.

இவ்வனபாயன், குலோத்துங்க சோழன்; அனபாயன் என்ற பெயரைத் தனது சிறப்புப்பெயராகக் கொண்டவன். குலோத் துங்கன் என்ற பெயரோடு மூன்று மன்னர் அரசாண்டனர்: காலம் I 1070 - 1020; II 1133 - 50; III 1178 - 1218. இம்மூவருள் சேக் கிழார் காலத்துக்குரியவன் யாவன் என்பது ஆராயத்தக்கது.

மற்றொரு குறிப்பும் இங்கு கருதவேண்டும். அனபாயன் பேரம்பலம் பொன்வேய்ந்தான் என்று முதலாம் பாடலும், தில்லைத் திருவெல்லையைப் பொன்மயமாக்கினான் என்று ஏழாம் பாடலும் கூறுகின்றன. தில்லையில் சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம் என்ற மூன்றும் வெவ்வேறானவை என்பதையும் நினைவில் வைக்க வேண்டும்.

### 1. முதலாம் இராசேந்திரன் என்ற கருத்து

இலக்கண விளக்க பரம்பரைச் சோமசுந்தர தேசிகர் தாம் எழுதிய 'சைவ சிகாமணிகள் இருவர்' என்ற நூலில் சேக்கிழார் காலம், முதற்குலோத்துங்க சோழன் காலம் அல்ல என்றும் அதற்கு முற்பட்டதென்றும் முடிவு கட்டுகிறார். முதற்குலோத்துங்கன்

அரும்பாக்கம் என்ற ஊரின் பழம்பெயரை நீக்கி அனபாய நல்லூர் என்று பெயரிட்டான். இவனுடைய திருமந்திர ஓலை நாயகன் பெயர் அனபாய மூவேந்த வேளான். எனவே சேக்கிழார் முதற்குலோத்துங்கன் காலம் என்பர் சிலர்; இரண்டாம் குலோத்துங்கனுடைய திருவாரூர் வடமொழிக் கல்வெட்டு அனபாயனாகிய வண்டு நடராசப் பெருமானுடைய பாதத் தாமரையில் மொய்க்கின்றது என்று கூறும். இதனால் சேக்கிழார் இவ்விரண்டாம் குலோத்துங்க சோழன் காலம் என்பர்; இரண்டும் பொருந்தமாட்டா; முதற்குலோத்துங்கன் மீது பரணி பாடிய சயங்கொண்டார் பெரியபுராணத்தைக் குறிப்பிடவில்லை. முதற்குலோத்துங்கனது 46ஆம் ஆண்டில் நீடூர்க் கல்வெட்டு, 'தில்லையம்பலத்தே வடகீழ்பால் சொன்னவாறறிவார் கோயி லும் புராணநூல் விரிக்கும் புரிசைமாளிகையும் வரிசையால் விளங்கப் பொருப்பினால் விருப்புறச் செய்தான்'* என்று காணப் படுவதால், இவன் காலத்துக்கு முன்னமேயே சொன்னவாறறிவார் வரலாறும் புராணநூலும் ஏற்பட்டிருந்தன, ஆகவே, முதற் குலோத்துங்கனுக்கு முன், முதல் இராசேந்திரன் காலத்தில் சேக்கிழார் வாழ்ந்தார் என்று கருதவேண்டும்; இவன் பொன் னம்பலம் பொன்வேய்ந்ததாகக் காணப்படாவிட்டாலும், திருவாரூர்த் தியாகராசப் பெருமான் கோயிலைப் பொன் வேய்ந்தான்; ஒருகால், தில்லையம்பலத்தையும் இவன் பொன் வேய்ந்தான் என்ற செய்தி இனிவரும் கல்வெட்டாராய்ச்சியால் விளங்கக்கூடும். இவன் ஆட்சியாண்டு மூன்றில் பொய்ப்பொருள் நாயனார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், சிறுத்தொண்டர், திரு வெண்காட்டு நங்கை, சீராளதேவர் முதலாயினார் செப்புத் திரு மேனிகள் தஞ்சை இராசராசேச்சுரத்தில் எழுந்தருளுவிக்கப் பெற்றன; இதனால் இவ்வரசன் பெரியபுராணம் கேட்ட பிறகே அது நடந்து இருக்கவேண்டும் என்று யூகிக்கலாம்; மேலும், கடாரம் முதலான நாடுகளை இவன் வென்றபோது அங்கு முடிசூடும் காலத்துத்தேவாரப் பதிகங்களை ஓதுவிக்கச் செய் திருந்தான்; இதுவும் பெரியபுராணத் தொடர்பைக் காட்டும்; இக்குறிப்புகளால் பெரிய புராணம் செய்த காலம் முதல் குலோத்துங்கன் காலமல்லாது, அதற்கு முந்திய காலமாகிய முதல் இராசேந்திரன் காலமாகும் - என்பன அவருடைய கருத்துக்கள்.

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 11ஆம் நூற்றாண்டு காண்க.

இக்கருத்துக்களை விரிவாகக் கருத வேண்டுவதில்லை. பேரம்பலம் பொன் வேய்ந்தான் என்பது திட்டமான குறிப்பு. பொன்வேய்ந்தவன் பின் வந்த சோழனே; அன்றி, திருமேனிகளை எழுந்தருளச் செய்தமை, கோயில் கட்டியமை, பதிகம் பாடச் செய்தமை போன்ற செயல்கள் தேவாரத்தினிடமுள்ள ஈடுபாடு காரணமாக நிகழ்ந்தனவேயன்றி, இவற்றுக்குப் பெரியபுராணத் தொடர்பு வேண்டுவதில்லை. ஏழாம் பாடலில் குலோத்துங்கன் என்பது தெளிவான குறிப்பு. கோயமுத்தூர் ஜில்லா முத்தூர்ச் சிவாலயத்தில் முதற்குலோத்துங்க சோழனுடைய முன்னோனும், முதல் இராசேந்திரனுடைய மகனுமாகிய வீரராசேந்திர சோழனது நாலாம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் உத்தம சோழப் பல்லவராயன் என்பவருடைய மைந்தன் திருநந்தா விளக்கு வைத்த செய்தி கூறப்படுகிறதென்றும், அவ்வுத்தம சோழப் பல்லவராயனே பெரியபுராணம் பாடியவர் என்றும் நெடுங் காலத்துக்கு முன் சிலர் எழுதினர்.* இது பொருந்தாத கருத்து. இந்தச் சாசனத்தில் கூறப்பட்ட வீரராசேந்திர தேவன் என்பான் கொங்குச் சேரவேந்தன். இவன் ஆட்சிக் காலம் (1207 - 52). இவனுடைய முன்னோன் குலோத்துங்க சோழதேவன் என்பான் (கி.பி. 1149 - 63) தன் பெயரால் அமைத்த கோயிலுக்கு இவன் நிபந்தங்கள் அளித்த செய்தி அம்முத்தூர்ச் சாசனங்களால் தெரியவருகிறது. ஆதலால் பிற்காலத்தில் ஆண்ட கொங்கு அரசனான இவ்வீரராசேந்திரன் சோழ மரபினரோடு பெயர் ஒற்றுமை கொண்டிருக்கிறானே அன்றி, இவன் சோழ சக்கர வர்த்தியான முதற்குலோத்துங்கனுக்கு முன்னோன் அல்லன் என்று கருதவேண்டும். அன்றியும், உத்தமசோழப் பல்லவதரையர் என்ற பட்டப்பெயர் வழக்கு, சோழ மன்னர் காலத்தில் வேறு சிலருக்கு வழங்கியதாகும். கல்வெட்டில் குன்றத்தூர்ச் சேக்கிழார் என்றோ அவர் சிவபக்தர் என்றோ சொல்லப்படவில்லை. ஆதலால் பெயர் ஒற்றுமையை மட்டும் கொண்டு வீரராசேந்திரனுக்கு முற்பட்ட இராசேந்திரன் காலம் என்று ஒருதலையாகத் துணிவது பொருந்தாது.❖

## 2. முதலாம் குலோத்துங்க சோழன் என்ற கருத்து

சாசன ஆராய்ச்சி வல்லவராயிருந்த கோபிநாதராயரவர்கள் முதன்முதலாக, செந்தமிழ் மூன்றாம் தொகுதியில், அனபாயன்

---

* செந்தமிழ் தொகுதி 2, பக்கம் 273, 386.

❖ சாசனத் தமிழ்க்கவி சரிதம், மு. இராகவையங்கார் 1937, பக்கம் 75 - 76.

காலத்தில் முந்தியதாய், தமிழில் மிகவும் பிரசித்தி பெற்றுள்ள காவியமாக இருக்கமுடியாது. இரண்டாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் வாதீபசிம்மன் என்பவர் தமிழ்ச் சிந்தாமணியின் கதையை வடமொழியில் 'க்ஷத்ர சூடாமணி' என்ற பெயரில் புதிதாக எழுதினார். இவர் தாம் கூறியகதையில் பல பகுதிகளைப் புகுத்தி, நல்லொழுக்கத்தையே இன்னும் அதிகம் வற்புறுத்தும் நூலாகத் தம் காவியத்தைச் செய்தார். இந்த ஒழுக்கபோதனை இராசராசனுடைய மனத்தைக் கவர்ந்ததுபோலும். சைவம் தருமத்தை எவ்வளவு சிறப்பாகக் கருதிற்று என்று அவனுக்குக் காட்டவே சேக்கிழார் தமது புராணத்தைப் பாடினார் என்று கருதவேண்டும். புதிய காவியத்தில் இராசராசன் அதிகமாக ஈடுபட்டதன் விளைவாய், தான்கட்டிய புதிய தாராசுரக் கோயிலில் நாயன்மார்கள் வரலாறுகளைப் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கச் செய்தான். இவற்றில் சிற்பிகள் சிலமாறுதல்களையும் செய்துவிட்டனர். நாயன்மாரின் வரலாறுகள் மிகவும் பிரசித்தி அடைந்து, கன்னட நாடெங்கும் பிரசாரம் எய்தின. பன்னிரண்டாம் நூற்றாண்டில் அங்கிருந்த சிறந்த வீரசைவக் கன்னடப் புலவரான ஹரிஹரர் என்பவர் தம் நாட்டை விட்டுப் புறப்பட்டு யாத்திரையாக வந்து நாயன்மாருக்குரிய தலங்களை யெல்லாம் தரிசித்தார். தம்நாடு திரும்பி நாயன்மார் வரலாறுகளைக் கூறுகின்ற எளிய பாடல்களைப் பாடிப் பிரசாரம் செய்தார்."

இவர் குறிப்பிடுகின்ற இரண்டாம் இராசராசன் இரண்டாம் குலோத்துங்க சோழதேவருடைய புதல்வன் இவனுடைய ஆட்சிக் காலம் 1148 - 63. இவன் காலத்தில் சேக்கிழார் வாழ்ந்தார் என்று இவ்வாசிரியர் கூறுவதற்கு நியாயமெதுவும் காட்டவில்லை. தாராசுரம் கோயிலில் இவன் அறுபத்து மூவர் சரிதச் சிற்பங்களை அமைத்தான், ஆதலால் இவனே அவர்களுடைய புராணத்தையும் பாடுவித்தான் என்று கருதுவது பொருந்தாது. முன்னமே காட்டிய 'சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு' என்றும், 'புவி காக்கும் மன்னர் பெருமான் அனபாயன்' என்றும் சேக்கிழார் பாடுகிறார். குலோத்துங்கன் அனபாயன் என்று பெயரே வருகிறது. அனபாயன் என்பது இரண்டாம் குலோத்துங்கனுக்குரிய சிறப்புப் பெயர். இராசராசன் அனபாயனாக மாட்டான். அவனுக்கு இச்சிறப்புப் பெயர் உள்ளதாகக் கூறப்படவில்லை. அவனுக்குரிய சிறப்புப் பெயர்கள் கண்டன்,

இராச கம்பீரன் என்பவை.* அவன் தன் செல்வத்தையெல்லாம் தாராசுரம் கோயில் கட்டுவதில் செலவிட்டான். அவன் தில்லையைப் பொன்வேய்ந்ததாகத் தெரியவில்லை. அன்றியும், புவி காக்கும் மன்னர் பெருமான் என்று சேக்கிழார் கூறுவது அரசன் அவருக்கு உடன்காலத்து அரசன் என்பதைத் தெளிவாக்குகிறது.

இனி, இவ்வாசிரியர் "சேக்கிழாரைப் போற்றிய அனபாயன் சிந்தாமணிச் சுவையில் ஈடுபட்டிருந்தான்" என்பதை ஒப்புக் கொண்டு, "புராணம் கூறுகின்ற சேக்கிழார் வரலாற்றில் குறிப்பிட்ட நூல் திருத்தக்க தேவருடைய சிந்தாமணி அன்று 'ஷத்திர சூடாமணி' என்ற பெயருடைய வாதீபசிம்மன் நூலாகும்" என்று கூறுகின்றார். இது ஒரு புதிய கருத்து. இதற்கு ஆதாரம் காணப் படவில்லை. அனபாயன் மனத்தைக் கவர்ந்தது தமிழ் நூலே அன்றி வடநூலன்று; எனவே, இக்காரணங்களால் இராசராசனுடைய காலம் என்பது சிறிதும் பொருந்தாமை விளங்கும்.

**5. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம்** என்ற கருத்து:

சதாசிவ பண்டாரத்தார் எழுதிய சோழர் வரலாறு இரண்டாம் புத்தகத்தில் சேக்கிழார் மூன்றாம் குலோத்துங்க சோழனால் ஆதரிக்கப் பெற்ற புலவர் பெருமக்களில் ஒருவர் என்று விரிவாக இரண்டு பக்கம் எழுதியிருக்கிறார். அப்பகுதி பின்வருமாறு: "சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் இவன் தன் ஆட்சியின் தொடக்கத்தில் நிகழ்த்திய அரும்பெரும் தொண்டு, அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகளைக் கொண்டு பெரிய புராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணம் பாடுவித்தமையேயாம். இக்கவிஞர் பெருமான் குலோத்துங்கனுக்கு அமைச்சராயமர்ந்து உத்தமசோழப் பல்லவராயர் என்ற பட்டமும் பெற்று உயரிய நிலையிலிருந்து வரும் நாட்களில், இவரது ஒப்பற்ற சிவபக்தியையும் புலமைத் திறத்தையும் கண்ட இம் மன்னர்பிரான் இவரைத் திருத்தொண்டர் புராணம் பாடித் தருமாறு வேண்டிக் கொள்ளவே, இவர் தில்லை மாநகரில் தங்கி அம்பலவாணரது திருவருள் துணைகொண்டு அப்பெருநூலைப்

* ஓர் உண்மையை மனத்தில் கொள்ளவேண்டும். சோழர் வலராற்றில் பொதுப் பெயர்கள் சிறப்புப் பெயர்களான நிலையும் உண்டு. அபயன் - முதற்குலோத்துங்கன்; அகளங்கன் - விக்கிரமன்; அனபாயன் - இரண்டாம் குலோத்துங்கன்; கண்டன் - இரண்டாம் இராசராசன். அபயன் என்று முதலாம் இராசராசன் முதலாக வழங்கிய பொதுப்பெயர், பின்னால் முதல் குலோத்துங்கனுக்கே உரிய சிறப்புப் பெயராகி விட்டது.

பாடி முடித்து இவ்வேந்தனது அவைக்களத்தில் அதனை அரங்கேற்றிப் பெறற்கரும் புகழெய்தினர். இவ்வரசர் பெருமானைச் சேக்கிழாரடிகள் தம் திருத்தொண்டர் புராணத்தில் பத்திடங்களில் புகழ்ந்து கூறியிருப்பது அறியற்பாலதாகும். இவ்வடிகள், இரண்டாம் குலோத்துங்க சோழன் விரும்பியவாறு திருத்தொண்டர் புராணம் இயற்றினார் என்பது சில ஆராய்ச்சியாளரின் கொள்கை. அஃது எவ்வாற்றானும் ஏற்புடைத்தன்று. இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும் அவைக்களப் புலவராகவும் அவன் ஆட்சிக் காலம் முழுதும் நிலவிய ஒட்டக்கூத்தரை அன்றி வேறு எப்புலவரையும் எந்நூலும் இயற்றும்படி வேண்டிக்கொள்ள மாட்டான் என்பது ஒருதலை. அன்றியும், இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பிறகு அவன் புதல்வன் இரண்டாம் இராசராசன் ஆட்சிக்காலத்தும் உயிர் வாழ்ந்திருந்து இராசராசன் உலாவும் தக்கயாகப் பரணியும் இயற்றியவரும், தம் நூல்களில் இறையனாரகப்பொருள், களவழிநாற்பது கலிங்கத்துப் பரணி ஆகிய தொன்னூல்களை மனமாரப் பாராட்டும் இயல்புடையவரும், சிவபத்திச் செல்வம் வாய்த்தவரும் ஆகிய ஒட்டக்கூத்தர், தம் காலத்தில் திருத்தொண்டர் புராணம் பாடப்பெற்றிருப்பின் பத்திச்சுவையொழுகும் அவ்வரிய நூலையும் அதனைப் பாடிய ஆசிரியரையும் தாம் இயற்றிய நூல்களிலும் புகழ்ந்திருப்பார் என்பது திண்ணம். அப்புலவர் பெருமான் தம் நூல்களில் திருத்தொண்டர் புராணத்தைக் குறிப்பிடாமையின் அந்நூல் அவர் காலத்துக்குப் பின்னரே இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது நன்கு துணியப்படும். சேக்கிழாரடிகள் கூறியுள்ள பேரம்பலம் பொன் வேய்ந்த அனபாயன் மூன்றாம் குலோத்துங்கனே யாவன். இவன் எதிரம்பலம் பொன் வேய்ந்தான் என்று இவன் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எதிரம்பலமே பேரம்பலம் என்று வழங்கியது என்பது அறியற்பாலது. எனவே, எதிரம்பலம் பொன்வேய்ந்த மூன்றாம் குலோத்துங்கனே பேரம்பலம் பொன்வேய்ந்த அனபாயன் என்பதும் இவன் காலத்தில் விளங்கியவரே சேக்கிழாரடிகள் என்பதும் தெள்ளிதிற் புலனாதல் காண்க. ஒட்டக்கூத்தர் தம் தக்கயாகப் பரணியில் கூறியுள்ள திருஞான சம்பந்தர் வரலாற்றிற்கும் சேக்கிழார் கூறும் அவ்வடிகள் வரலாற்றிற்கும் வேறுபாடுகளிருப்பது ஒன்றே அவ்விருவரும் ஒரே காலத்தினர் அல்லர் என்பதை உணர்த்துவதாகும்."*

---

* பிற்காலச் சோழர் சரித்திரம் இரண்டாம் பகுதி, 1957, பக்கம் 167 - 8.

இங்கு குறிப்பிட்ட சில கருத்துக்கள் ஆராயத்தக்கன. முதலாவது, ஒட்டக்கூத்தர் பெரியபுராணத்தைக் குறிப்பிடவில்லையென்பது. ஒட்டக்கூத்தர் குறிப்பிடாதன வெல்லாம் அவருக்கு முன்னோ உடனோ நிகழவில்லை என்று கருதமுடியாது. இரண்டாம் குலோத்துங்கன் தனக்கு ஆசிரியராகவும் அவைக்களப் புலவராகவும் தன் பெருமதிப்புக்கு உரியவர் ஆகவும் இருந்த ஒட்டக்கூத்தரை அன்றி வேறு எப்புலவரையும் எந்நூலும் இயற்றும்படி வேண்டிக் கொள்ளமாட்டான் என்று சொல்வது சிறிதும் பொருந்தாது, இவன் ஒட்டக்கூத்தரை இளமை முதல் அறிந்தபோது, பேராசிரியராகவும், பெரும்புலவராகவும் கண்டான்; பக்திமானாகக் கண்டதில்லை; அல்லது காணும் சூழல் அமையவில்லை என்று நாம் சொல்லலாம். பக்திக் காவியம் இவரிடம் விளையும் என்றும் அவன் எண்ணியதில்லை. ஆகவே, பக்தித்துறைக்கு ஏற்ற வேறு ஒரு பெருந்தகுதியாளரைக் கொண்டு அதற்கான பெருங்காப்பியம் செய்வித்தது வியப்பன்று. தனி மனிதன் வாழ்க்கையிலேயே உலகியல், தொழிலியல், கல்வி இயல், ஆன்ம இயல் போன்ற பல்வேறு துறைகளைக் காண்கிறோம். ஒன்று மற்றொன்றோடு உறழாமல் வாழ்க்கை செவ்வனே நடைபெற்று வருகிறது. அரசனாயிருப்பவனிடத்திலோ இவற்றோடு கூட, அரசியல், போரியல் போன்ற பின்னும் பல துறைகள் ஒருங்கு விளக்கம்பெற வேண்டியிருக்கும். இவை ஒன்றோடொன்று உறழ்ச்சி கொள்ளாமல் தம் வயம் இயங்கும்படி அவன் நடத்த வேண்டியவன். ஒட்டக்கூத்தர் எத்தகைய பேராசிரியர் என்பதை அவர் பாடிய உலாக்கள் தக்கயாகப் பரணி பிள்ளைத்தமிழ் போன்றவற்றில் நன்கு காண்கிறோம். அவருடைய செய்யுள் நடையும் அங்கு தெளிவாகத் தெரிகிறது. ஆனால் திருத்தொண்டர் புராணத்துட் காணப்படுவதுபோல பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடுகின்ற கவிவல்லவராக அவர் ஒருகாலும் ஆகியிருக்கமாட்டார்; நாம் இன்று சொல்லவும் மாட்டோம். இதை நன்குணர்ந்தவன் குலோத்துங்கன் ஆதலால், அவன் “இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்” என்று திருவள்ளுவர் கூறியவாறு, சேக்கிழாரைக் கொண்டே திருத்தொண்டர் புராணம் கேட்க வேண்டும் என்ற முடிவு கொண்டான். இஃது இயல்பே. இதில் முரண் எதுவுமில்லை. ஒருவர் எத்தனைப் பெரியவராயினும், அவரே எல்லாக் காரியங்களையும் முற்றுவிப்பது என்பது இயலாது. நெற்குன்றவாணர் “கோக்கண்ட

மன்னர்" என்ற பாடலைச் சொல்லி ஒட்டக்கூத்தருக்கு அமைதி புகட்டும் நிலையும் இருந்தது. ஆதலால் சிறந்த அறிவாளியாய் இருந்த குலோத்துங்கன் ஆன்மார்த்த நெறியில் சேக்கிழாரைக் குருவாகக் கொண்டானென்பது மிக்க அறிவுடைய செயல்.

முக்கியமான ஒரு கருத்தைச் சொன்னால் ஒட்டக்கூத்தரும் சேக்கிழாரும் குலோத்துங்கன் வாழ்க்கையில் வெவ்வேறு நிலைகளில் இடம் பெற்றவர்கள் என்பது நன்கு விளங்கும். கூத்தர் குலோத்துங்கன்மீது உலாவும், பிள்ளைத்தமிழும் பாடியிருக்கிறார். 'பாடிய, வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன், பிள்ளைத்தமிழ் மாலை பெற்றோனும்' என்பது பின்வந்த சங்கர சோழன் உலா (13நூற்றாண்டு) தரும் குறிப்பு. இதன்படி முதலில் உலா பாடினார், பின்பு பிள்ளைத்தமிழ் பாடினார். அடுத்து, அரசர்களுக்கு முடிசூடும் முன்னமேதான் பிள்ளைத்தமிழ் பாடலாம், முடிசூடிய பின்னர் பாடல் ஆகாது என்பது இலக்கண மரபு. கூத்தர் மரபு நன்கறிந்தவர். ஆதலால் அவர் பிள்ளைத் தமிழ் பாடியது குலோத்துங்கன் அரசனாகும் முன், அவன் இளவரசாய் இருந்தபோது; உலாப்பாடியது இதற்கும் முன்னதாக ஆனால் சேக்கிழார் குலோத்துங்கனால் தான் மன்னன் ஆனபின் அமைச்சராக்கப்பெற்று, பின்னும் சில காலம் கழிந்து திருத்தொண்டர் புராணம் பாடினார் என்பது வரலாறு. ஆதலால் உலாவும், பிள்ளைத்தமிழும் பாடிய காலத்து, அதாவது குலோத்துங்கன் இளவரசாய் இருந்தபோது, விக்கிரமசோழன் ஆட்சிக்காலம். சேக்கிழார் இளைஞராய்க் குன்றத்தூரில் இருந்தார். அப்போது திருத்தொண்டர் புராணம் பிறக்கவில்லை, கூத்தர் சேக்கிழாரையும் புராணத்தையும் அறியவில்லை, அப்போது குறிப்பிடவில்லை என்பது உண்மையல்லவா? சேக்கிழார் தம் நூலில் அனபாயனைத் தவிர யாரையுமே குறிப்பிடவில்லை.

இனி இரண்டாம் குலோத்துங்கனைக் கூறுமிடத்து (சோழர் வரலாறு, பக்கம் 93) அவனே தில்லையைப் பெருஞ்சிறப்புச் செய்தான் என்கிறார். பின்வரும் கூற்றுக் காண்க. "இவன் தில்லையம்பதியில், தேவர்கோன் மூதூரிலுள்ள பெருவீதிகள் கண்டு நாணுமாறு நாற்பெருந் தெருக்கள் அமைத்தும் பற்பல மண்டபங்கள் கட்டுவித்தும் அந்நகரைச் சிறப்பித்தான்; சிற்றம்பலத்தைப் பொன்னாலும் பல்வகை மணிகளாலும் அலங்

* இப்பொருள்களே ஒட்டக்கூத்தர் பற்றிய எமது கட்டுரையில் பின்னும் விரிவாகச் சொல்லியிருக்கிறோம்.

கரித்துப் பணிபுரிந்தான்; பேரம்பலத்தையும் உட்கோபுரத்தை யும் திருச்சுற்று மாளிகையையும் மாமேரு போலப் பொன் மயமாக்கினான். எழுநிலைக் கோபுரங்கள் எடுப்பித்தான்; உமா தேவியார் தாம் பிறந்த இமயவெற்பை மறக்கும்படி சிவகாம கோட்டம் மிகப்பெரிதாக அமைத்தான். அவ்வம்மையார் விழாநாளில் உலாவருதற்குப் பொன்னாலும் மணியாலும் அழகுறுத்தப் பெற்ற தேரொன்று செய்தளித்தான்; திருக்கோயி லில் பொன்னாலாகிய கற்பகத் தருக்களை அமைத்தான்; நாற் புறமும் கூடங்களோடு திகழும் திருக்குளம் ஒன்று கட்டினான். ஆனிரைகளும், களிற்றினங்களும் மிகுதியாக வழங்கினான்." இவ்வாறு இவ்வேந்தன் தில்லைத் திருக்கோயிலில் நிகழ்த்திய திருப்பணிகள் அளவற்றன எனலாம். இச்சிறப்பான திருப்பணி களையே சேக்கிழார் "தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு" என்று பாடுகிறார். மூன்றாம் குலோத்துங்கனைப் பற்றிப் பண்டாரத்தார் இவ்வாறு எழுத வில்லை. ஆகவே, சேக்கிழார் கூறும் குலோத்துங்கன் இவ்விரண் டாம் குலோத்துங்கனென்று கொள்ளுவதே நேரானது. மற்றப்படி எதிரம்பலம் என்பது பேரம்பலம், எதிரம்பலம் பொன்வேய்ந்த மூன்றாம் குலோத்துங்கனே பேரம்பலம் பொன்வேய்ந்த அன பாயன் என்று பண்டாரத்தார் எழுதியிருப்பது, சிறிதும் பொருந் தாத கூற்று என்பது அவர் சொல்லாலேயே தெளிவாகிறது.

மேலும், மூன்றாம் குலோத்துங்கன் செய்த பல திருப்பணி களையும் (காஞ்சி, மதுரை, இடைமருது, தாராசுரம், ஆரூர்) குறிப்பிடுகிற அவனுடைய வடமொழிச் சாசனம், அவன் தில்லை யில் முகமண்டபம், கோபுரம், அம்பிகை கோயில் திருச்சுற்று ஆகியவற்றைப் பொன்மயமாக்கினான் என்று கூறுகிறதேயன்றிப் பேரம்பலம் பொன்வேய்ந்தான் என்று சொல்லவில்லை.*

ஒட்டக்கூத்தர் பெரியபுராணத்தைக் குறிப்பிடாமையால் பெரியபுராணம் அவருக்குச் சம கால நூலன்று என்ற கொள்கை யும் ஏற்கக் கூடியதாகாது. ஒட்டக்கூத்தர் மனப்போக்கு வேறு. சயங்கொண்டாரை அவர் போற்றியிருப்பது உண்மை. ஆனால் தம்நூல் எதிலும் சேக்கிழார் நூலைக் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படாமையால் அவர் அதைச் சொல்ல நினைக்க வில்லை என்றுதான் நாம் கொள்ளவேண்டும். "இறையனாரகப்

---

* மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி 1948 பக்கம் 21.

பொருள், களவழி நாற்பது, கலிங்கத்துப்பரணி என்பவற்றைக் குறிப்பிட்டிருக்க அவர் பெரியபுரணத்தைக் குறிப்பிடாதது ஏன்?" என்பது இப்பேராசிரியர் கேள்வி. பாடவேண்டும் என்ற நியதி இல்லை. சோழர் மரபு கூறவேண்டிய இடத்துப் பிந்திய இரு நூல்களைக் கூறுவது பொருத்தமாயிற்று. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் இறைவன் காக்க என்றவிடத்து, அவ்விறைவன் அருளிய அறுபது சூத்திரமும் குறிப்பிட்டார். ஒன்றைச் சொல்லாமை மட்டும் ஒரு முடிவு கொள்வதற்கு ஆதாரமாகாது.

திருஞான சம்பந்தர் வரலாற்றுக்கும் இது பொருந்தும். சமயாசாரியர் செய்த யாத்திரைகளினால் அவருடைய வரலாறு தமிழ்நாடு நன்கறிந்தது. பதிகம் பாடிய காரணத்தால் இன்னும் நன்கு பிரசித்தம். கற்றோர் இவற்றை நன்கு அறிந்திருப்பர். விவரங்களில் வேறுபாடு இருப்பது இயல்பு. செவிவாயிலாக மட்டும் கேட்டுவரும் செய்திகளில் மாறுபாடுகள் தோன்றுவது உண்டு. கேட்ட செய்திகளை வைத்து ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் திருஞானசம்பந்தர் பற்றிக் கூறினர். ஆனால் சேக்கிழாரோ மதிப்பு வாய்ந்த அமைச்சராயிருந்த காரணத்தால், கேட்ட செய்திகள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்தே நூல் செய்தார் ஆராய்ச்சி காரணமாக செய்திகளில் மாறுதல் வேண்டியிருக்கும். எனவேதான் இருவர் கூற்றிலும் வேறுபாடுகள் ஏற்பட்டன. இருவரும் வெவ்வேறு காலத்தினர். ஒரே காலத்தினரல்லர் என்பதற்கு இது காரணமாகாது. ஒருவர் பின் ஒருவராக அதிகக் கால இடையீடு கொண்டு வாழ்ந்திருந்தால் ஒருகால் ஒருவரைப் பார்த்து மற்றவர் ஒரே தன்மையில் வரலாற்றைக் கூற முடியும். ஒரே காலத்தில் வாழ்ந்தமையால்தான் இருவரும் வெவ்வேறாகச் சொல்லுகின்றனர் என்று துணிந்து சொல்லவேண்டும்.

இனி மூன்றாவது, இரண்டு குலோத்துங்கசோழர் காலத்திலும் தமிழ்நாட்டின் அரசியல்நிலை முற்றும் வெவ்வேறு. இரண்டாம் குலோத்துங்கசோழன் காலத்தில் சோழநாடு முன்னும் பின்னும் கண்டறியாத பூரண அமைதியைப் பெற்றிருந்தது. பூசல் இல்லை, குழப்பம் இல்லை; சாந்தமான சூழ்நிலையில் அரசன் புராணச் சரித்திரங்களைச் செய்விக்கப் பெரும்வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலமோ எந்நேரமும் போர் மலிந்தகாலம். இவன் மிகச் சிறந்த தமிழ் வள்ளல்; இவனே சிறந்த தமிழ்ப் புலவன்;

எனினும் சோழநாட்டின் விதி இவனைச் சும்மா விடவில்லை எந்த நேரமும் போர்கள். 9ஆம் நூற்றாண்டு தொடங்கி 12ஆம் நூற்றாண்டு முடிய விரிந்து வளர்ந்து சிறப்புற்றிருந்த சோழர் பேரரசு சீர்குலைந்து முடிவெய்துவதற்கான அறிகுறிகள் இவன் காலத்தில் தோன்றலாயின. பாண்டி மன்னனோடு பலமுறை போர் புரிந்தான்; கொங்குநாட்டுப் போர், ஈழநாட்டுப் போர், வடநாட்டுப் போர் முதலிய போர்கள். இவன் ஆட்சியின் தொடக்கத்தில் தொண்டை நாட்டில் வெள்ளச் சேதத்தால் வந்த பெரும்பஞ்சம்; ஆட்சியின் இடைக்காலத்தில் 'குகை இடி கலகம்'; அடுத்து மழையின்மையால் ஏற்பட்ட பெரும்பஞ்சம்: இவ்வாறாக உண்மையிலேயே பெரும்வீரனும், பெரும் புலவனு மாகிய இவன் ஆட்சி, மிகுந்த துன்பத்துக்கு இடமான காலம். இவனுடைய புயவலி ஒன்றே நாடு அப்போது சீர்குலை யாமல் காத்தது. இவனுடைய மகன் மூன்றாம் இராசராசன் காலத்தில் நாடு சீர்குலைந்தது என்று வரலாறு கூறுகின்றது. (அவனைக் கோப்பெருஞ்சிங்கன் என்ற சாமானிய படைத்தலைவன் சிறைப் படுத்திவிட்டான்!) எனவே, அமைதியாக ஆன்மார்த்த நெறியில் மனம் செல்லுதற்கு ஏற்ற சூழ்நிலை இவன் காலத்தில் அறவே இல்லை என்பதை நாம் நன்குணரலாம். இதனாலும் சேக்கிழார் காலம் இவனது காலமாயிருக்க முடியாது என்பது தெளிவு.

"தில்லைநகர் நம் குலோத்துங்கன் (2) ஆட்சிக்காலத்தில் தான் எல்லா வளங்களும் நிறைந்த பெருநகராக அமைக்கப் பெற்றதாதல் வேண்டும் என்பது நன்கு புலனாகின்றது. அன்றி யும் அம்மாநகரில் இவ்வரசர்பெருமான் முடிசூடிக் கொண் டமைக்குரிய குறிப்பும் இக்கல்வெட்டுத் தொடரில் (திருமாணி குழிக் கல்வெட்டு) இருத்தல் அறியத்தக்கது. எனவே இவன் காலத்தில்தான் தில்லையம்பதியிலும் அங்குள்ள அம்பலவா ணரது திருக்கோயிலிலும் பலப்பல திருப்பணிகள் நிகழ்த்தப் பெற்றன என்பது ஒருதலை" என்று பண்டாரத்தாரே எழுதி யிருக்கிறார். இச்சிறப்புக்கள் முழுமையும் பெரியபுராணத்தில் காணலாம். பெரியபுராணத்தில் தில்லை சிறப்பிக்கப்பெற்ற அளவு வேறெந்த நூலிலும் சிறப்பிக்கப் பெறவில்லை. ஆதலால் இவ்வளவு சிறப்புக்களைச் சொல்லுகின்ற சேக்கிழார் அச்சிறப்புக் களைச் செய்த சோழன் காலத்தில் வாழ்ந்து கண்டு சொல்கிறார் என்று கருதுவதே நேரியது.

**இரண்டாம் குலோத்துங்கன்:**

இனி சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்து வாழ்ந்தார் என்ற செய்தியையும் அதுபற்றிய பிற செய்திகளையும் தொகுத்துக் கூறலாம். அனபாயனுக்கு இவன் முன்னவனாகிய முதற்குலோத்துங்க சோழனுக்கு வழங்கிய திருநீற்றுச் சோழன் என்ற பெயரும் வழங்கிற்று என்பதை உமாபதி சிவாசாரியரே தாம் செய்த கோயிற்புராணப் பாயிரத்தில் அனபாய, சோழச் சக்கரவர்த்தி துதியாக ஒரு பாடலில் கூறுகிறார்:

ஒன்றியசீர் இரவிகுலம் உவந்தருளி உலகுய்யத்
துன்றுபுகழ் திருநீற்றுச் சோழனென முடிசூடி
மன்றினிடம் தொழுதெல்லை வளர்கனக மயமாக்கி
வென்றிபுனை அனபாயன் விளங்கியபூங் கழல்போற்றி.

இத்திருநீற்றுச் சோழர் (குலோத்துங்கன்) துதியாக 16ஆம் நூற்றாண்டில் புராணத் திருமலைநாதர் பாடிய சிதம்பர புராணத்திலும் (பாயிரம் 11) ஒரு பாடல் உள்ளது:

பருதிகுலம் தனிலுதித்துப் பரசமய இருளகற்றிப்
பரமன் ஆடும்
பொருவருபே ரம்பலமும் கோபுரமும் ஆலயமும்
பொன்வேய்ந் துண்மைச்
சுருதியுடன் சைவநெறி தழைத்தோங்கத் திருநீற்றுச்
சோழன் என்னும்
குருமணிமா முடிபுனைந்த குலோத்துங்க வளவனருள்
குறித்து வாழ்வாம்.

சாசன இலாகாவால் படியெடுக்கப்பட்ட 1901ஆம் வருஷத்து 269ஆம் எண் கொண்ட திருவாரூர்க் கல்வெட்டு குலோத்துங்கனே அனபாயன் என்று தெரிவிப்பது. அக்கல்வெட்டின் சுருக்கம் பின்வருவது: "பூமன்னு பதுமம் பூத்த.....கோவிராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலத்தானமுடையர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியார்க்கும் அற்சனாபோக இறையிலியாகப் பழம்பெயரும் முன்னிறைகட்டின படியுந் தவிர்ந்து கொண்டு எ-வது முதல் அனபாய நல்லூரென்னுந் திருநாமத்தால் ... இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசு தேவர்க்கும் வேண்டும்

அர்ச்சனைகளுக்கு ....” இதில் குலோத்துங்க சோழரே அனபாயன் என்று கல்வெட்டினால் தெளிவாகிறது. அக்காலத்தில் இரண்டாம் குலோத்துங்கனையோ அவன் மகன் இரண்டாம் இராச ராசனையோ பற்றி ஒன்றும் தெரியாது அடுத்து திருமாகாளத்துக் கல்வெட்டை ஆராய்ந்த ராபர்ட் சூவல் என்ற கல்வெட்டுத் துறையார் இது முதற்குலோத்துங்கனுக்கு உரியதாகாது, இரண்டாம் குலோத்துங்க சோழதேவருக்கே உரியது என்று முடிவு செய்தார். இரண்டும் பூமன்னு பதுமம் என்று தொடங்குகின்ற இரண்டாம் குலோத்துங்க சோழதேவருக்கு உரிய மெய்க்கீர்த்தி யாகும். பல சாசனங்களில் பழம்பேர் தவிர்த்து அனபாய நல்லூர் என்றும், திருநீற்றுச் சோழ நல்லூர் என்றும் பெயர்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.

சிற்றம்பலத்தை ஆதித்தன், பராந்தகன், முதற் குலோத்துங் கன் விக்கிரமசோழன் முதலியோர் பொன்வேய்ந்தனர். ஆனால் பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தவர் இரண்டாம் குலோத்துங் கனும் பின்னர் மூன்றாம் குலோத்துங்கனுமே ஆவர். மேலும் கோகரணக் கல்வெட்டொன்று “பேரம்பலம் பொன்வேய்ந்த கோ ராசகேசரி வன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு பன்னிரண்டாவது பூமன்னுபதுமம்” என்று குறிப்பிட்டுச் சொல்கிறது. இரண்டாம் குலோத்துங்கன் இராசகேசரிப் பட்டமும் மூன்றாம் குலோத் துங்கன் பரகேசரிப் பட்டமும் உடையோர். இக்கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கனைக் குறிப்பது தெளிவு. எனவே, இத்தகைய தொடர்புகளால் சேக்கிழாரை ஆதரித்து அமைச்ச ராகக் கொண்டு அனபாயன் என்ற பட்டமும் பூண்டு பேரம்பலம் பொன்வேய்ந்து அரசு புரிந்த குலோத்துங்க சோழர் இரண்டாம் குலோத்துங்கரே என்பது தெளிவாகிறது.

இரண்டாம் குலோத்துங்க சோழர் நடராசப் பெரு மானிடத்தும் சமயாசாரியரிடத்தும் அன்பு பூண்டிருந்தமை முன்னம் காட்டிய திருவாரூர்க் கல்வெட்டினால் நன்கு தெரிய வருகிறது. மேலும், களத்தூர்ச் சாசனம் ஒன்று அவ்வூரைத் திருத் தொண்டத்தொகை நல்லூர் என்று வேறு பிரித்துப் புதுப் பெயரிட்டார் என்று கூறுகிறது. அன்றியும், உடல் ஊனமுடை யார்க்கு வாழ்க்கைக்கு வழிசெய்ய வேண்டுமென்று இன்று உலகெங்கும் முன்னேற்றம் பெற்றுள்ள நாடுகளில் பெரும்

இயக்கங்கள் எழுந்துள்ளன; இக்கருத்தை நம் அரசர் செயலில் காட்டினார் என்று திருவாமாத்தூக் கல்வெட்டினால் அறிகிறோம். அங்கு கோயிலில் 'திருப்பதிகம் பாடிவரும் குருடர்கள் பதினெழுவரும் இவர்களுக்குக் கண்காட்டுவார் இருவரும் ஆகப் பதினெண்மர் மூன்று சந்தியும் வந்து விண்ணப்பம் செய்து' என்று காணப்படுகிறது. இவ்வாறு மிகுந்ததோர் அமைதியான சூழ்நிலையில் ஆட்சி நடைபெற்ற காரணத்தினால்தான் வாழ்வின் புனரமைப்புத் திட்டங்கள் நடத்தி வைப்பது அரசருக்குச் சாத்தியமாயிருந்தது.

எனவே, இதுவரையில் கூறிவந்த விளக்கங்களால் சேக்கிழார் காலம் இரண்டாம் குலோத்துங்க சோழதேவர் காலமே என்பது தெளிவாகிறது.

இதுவுமன்றி, சோழமன்னன் சேக்கிழாருக்கு 'உத்தம சோழப் பல்லவன்' என்ற சிறந்த பட்டம் அளித்தான் என்றும், 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பட்டமளித்தான் என்றும், இவரது இளவல் பாலறாவாயருக்குத் தொண்டைமான், தொண்டை மண்டலம் நின்றுகாத்த பெருமாள் என்ற பட்டங்கள் வழங்கினான் என்றும், சேக்கிழார் புராணம் 18, 100, 99 பாடல்களால் தெளிவாகின்றது. இவர் வரலாற்றைச் சாசனச் சான்றும் நன்கு வலியுறுத்துகின்றது.

சோழநாட்டில் திருமழபாடிச் சிவாலயத்து இரண்டாம் பிராகரத்துத் தெற்குத் திருமதிலில் திரிபுவனச் சக்ரவர்த்தி இராசராச தேவனுடைய 17ஆம் ஆட்சியாண்டில் அமைந்த ஒரு கல்வெட்டு, "செயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் சேக்கிழான் தேவடிகள் ராம தேவனான உத்தமச் சோழப் பல்லவராயன்" என்பவர் கோயிலுக்குத் திருநந்தா விளக்கின் பொருட்டு 90 ஆடுகள் உதவிய செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. (இக்கல்வெட்டின் ஆண்டு கி.பி. 1163.) இங்கு குறிப்பிடப்பட்ட இராசராசன் (திரிபுவனச்சக்கரவர்த்தி) இரண்டாம் குலோத்துங்கனுடைய மகன் என்பது தெளிவு. இக்காலத்திலும் சேக்கிழார் வாழ்ந்திருந்து மேற்குறித்த சிவ தருமம் செய்தார் என்றறிகிறோம். அக்காலத்துப் பெரியார் தங்களைப் பணிவோடு தாழ்த்திக் குறிப்பிட்டுக் கொள்ளும் இயல்பினால், சாசனத்தில் சேக்கிழான், இராமதேவன், பல்லவராயன் என்று பெயர் ஒருமையில் வந்துள்ளது. இவரைச் சாசனம்

மாதேவடிகள் என்று சிறப்பித்துச் சொல்கிறது. குன்றை முனி என்றும், அருந்தவந்தனிலிருந்தவர் என்றும் புராணம் குறிப்பிடு வதனால், இவர் அமைச்சர் பதவியின்றும் நீங்கிய பிறகு முனிவ ராக வாழ்ந்தார் என்று அறிதல் வேண்டும். மாதேவடிகள் என்பது மகாதேவருக்கு அடியவரான பெரியவர் என்று பொருள்தரும். இவர் இயற்பெயர் இராமதேவன் என்றறிகிறோம், இது குன்றத்தூரில் மட்டும் இவரது இளமையில் வழங்கிய பெயர் போலும். சேக்கிழார் என்பது குடிப்பெயர், இப்பெயரோடு பலர் சாசனத்துள் வழங்கப் பெறுகிறார்கள். இவர் காலத்துக்கு முன் னும் பின்னும் இப்பெயர் கொண்டோர் பலர் சாசனத்தால் அறி யப்படுகின்றனர். அருண்மொழித்தேவர் என்பது இவருக்கு அளிக்கப்பெற்ற ஒரு சிறப்புப் பெயரேயாகும். அருண்மொழித் தேவன் என்பது முதல் இராசராசனுக்குரிய இயற்பெயர். அப் பெயர் ஊர்ப்பெயராகக் கூட இக்காலத்தில் வழங்கி வருகிறது. (நீடூர் அருகே அப்பெயர் உடைய சிற்றூர் ஒன்று உண்டு.) இப் பெயர் சேக்கிழாருக்கு அமைந்தது சிறப்பினாலேயாகும். ஆதலால், இராமதேவன் என்பது இவருடைய இயற்பெயராக இருந்திருக்க வேண்டும் என்று கொள்வதில் தடையிருக்க முடி யாது. இராமதேவன் என்பது வைணவப் பெயர். சைவ சமயத்தில் வைணவப் பெயர் தரிக்கக்கூடாது என்ற தடை இல்லை. நம் சேக்கிழார் இவ்விராம தேவராயிருக்க முடியுமா என்ற ஐயம் வேண்டுவதில்லை. திருமால் பெயரைக் கொண்ட நரசிங்கமுனை யரையர் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர்; புருடோத்தம நம்பி திருவிசைப்பாப் பாடியவர்; அச்சுதகளப்பாளர் பிற்காலத் தில் சிவஞானபோதம் பாடிய மெய்கண்டாரின் தந்தை. இம் மூவர் பெயர்களும் திருமால் பெயர்களே.

சேக்கிழார் மரபில் பலர் சோழமன்னரால் ஆதரிக்கப் பெற்று வாழ்ந்தார்கள் என்று கல்வெட்டு வாயிலாய் அறிகிறோம். முதற்குலோத்துங்கனுக்கு முன் ஆண்ட வீரராசேந்திர தேவன் காலத்து 4ஆம் ஆண்டுக் கல்வெட்டு முத்தூர்ச் சிவாலயத்தில் உத்தமச்சோழ பல்லவராயர் என்பவருடைய புதல்வர் நந்தா விளக்கு வைத்தாரென்று குறிப்பிடுகிறது என்றும், அவரே பெரிய புராண ஆசிரியர் என்றும் ஒரு கருத்துண்டு. இது பொருந்தாத கூற்று என்பதை மு. ராகவையங்கார் நன்கு விளக்கியுள்ளார்.*

---

* மு. ராகவையங்கார், சாசனத் தமிழ்க்கவி சரிதம் ப. 70 - 78.

இவ்வீரராசேந்திரன் என்பவன் கொங்குச் சேரவேந்தன், இவன் சேரர் மரபில் உள்ள சிற்றரசனாகி, தலைமை வேந்த ரான சோழர் பெயரைத் தரித்து அரசாளும் சோழர் மரபில் வந்தவன். ஆனால் குன்றத்தூர்ச் சேக்கிழார் என்ற பெயரில் பல சாசனங்கள் உள்ளன. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் மேற்கூறியவாறு சேக்கிழாரும் அவர் தம்பி பாலறாவாயரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் சேக்கிழான், பாலறாவாயன், சேக்கிழான் அம்மை யப்பன், சேக்கிழான் புவனப்பெருமாள் என்ற தொண்டக நாடுடையான், மூன்றாம் இராசராசன் காலத்தில் சேக்கிழான் பட்டிய தேவனாட் கொண்டான், சேக்கிழான் அரையன் ஆட் கொண்ட தேவன், சேக்கிழான் வரந்தரும்பெருமாள் என்ற திரு வூரகப் பெருமாள் என்போரைக் காண்கிறோம்; அன்றியும் 1270 - 1305இல் அரசுபுரிந்த மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சியில் சேக்கிழான் ஆடவல்லான் குறிப்பிடப்பட்டுள்ளான். இவர் அனைவர் பெயரிலும் குன்றத்தூர் சேர்ந்திருக்கிறது. இராம தேவன் என்றமைபோல, வரந்தரும் பெருமாள் என்ற வைணவப் பெயரும் பயின்றுள்ளது. இந்த வரலாறுகளை நன்குணர்ந்தே உமாபதியார் பின்வரும் பாட்டில் சேக்கிழார் மரபு சிறந்ததன்றே என்று தோற்றுவாய் செய்யுமிடத்துப் பாடுகிறார்:

பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும்
　　பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
காலாறு கோலியிசை பாட நீடும்
　　களிமயில்நின் றாடும்இயல் தொண்டை நாட்டுள்
நாலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம்
　　நன்றிபுனை குன்றைவள நாட்டு மிக்க
சேலாறு கின்றவயற் குன்றத் தூரில்
　　சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே.

சேக்கிழார் காலம் பன்னிருதிருமுறை வரலாற்றில் விரிவாக ஆராயப் பெற்றுள்ளது. அந்நூலாசிரியரின் கருத்தும் நாம் இதுவரை கூறியதையே ஆதரிப்பதாக உள்ளது; "இரண்டாம் இராசராசனது ஆட்சியின் இறுதி ஆண்டாகிய பதினேழாம் ஆண்டில் திருமழபாடிக் கோயிலுக்கு நிபந்தம் வழங்கிய சேக்கிழான் மாதேவடிகள் எனக் கருதப்படும் சேக்கிழார் நாய னார், அம்மன்னனது தந்தையாகிய இரண்டாம் குலோத்துங்க

சோழனது ஆட்சியின் பிற்பகுதியிலும் இரண்டாம் இராசராசனது மைந்தனாகிய (?) மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்திருந்தவர் எனக் கொள்ளுதல் பெரிதும் பொருத்த முடையதாகும்."*

மற்றுமொரு செய்தி குறிப்பிடத்தக்கது. இரண்டாம் இராசாதிராசனுடைய (1163 - 1178) ஒன்பதாம் ஆட்சியாண்டில் (1172) எழுந்த ஒரு திருஒற்றியூர்க் கல்வெட்டு, "திருப்பங்குனி உத்தரத்து ஆறாம் திருநாளான புதன்கிழமை ஏகாதசியும் கூடிய ஆயில்ய தினத்தன்று, மடத்துத் தலைவரான சதுரானன பண்டிதர் காபாலிகரது சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசபண்டிதர் இராசாதிராசன் முதலியவர்கள் முன்னிலையில் படம்பக்க நாததேவர் திருமகிழின் கீழ்த் திருவோலக்கம் செய்து எழுந்தருளியிருந்து ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் கேட்டருளா நிற்க ....." என்று கூறுகிறது. ஆளுடைய நம்பியாவார் சுந்தரமூர்த்தி. அவர் புராணமாவது பெரியபுராணத்தின் பகுதி. 1172இல் சொல்லுகின்ற புராணம் என்றமையால் புராணத்தின் காலம் இதற்கு முற்பட்டது. மூன்றாம் குலோத்துங்கன் காலம் 1178 - 1218. ஆகவே, இது புராணத்தின் காலமாக முடியாது. புராணம் குலோத்துங்கன் காலத்தில் செய்யப்பட்டது என்றமையால், இவனுக்கு முந்திய இரண்டாம் குலோத்துங்கன் காலம் (1133 - 1150) என்பது தெளிவு.

கம்பர், சேக்கிழார், கந்தபுராண ஆசிரியர் என்ற மூவர் காலங்கள் குறித்த குழப்பமான நிலை முன்னமே இருந்தது. கம்பர் சேக்கிழாரைப் பார்த்தே நூல் செய்தார் என்று எழுதினோரும் உளர். கந்தபுராணம் எட்டாம் நூற்றாண்டில் எழுதப் பட்டது என்று பாட்டும் புனையப்பட்டிருந்தது. இவற்றை ஒரு

---

* வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு இரண்டாம் பகுதி பக்கம் 825. இரண்டாம் குலோத்துங்கன் 1133 - 1150, இரண்டாம் இராசராசன் 1146 - 63, இராசாதிராசன் 1163 - 1178, மூன்றாம் குலோத்துங்கன் 1178 - 1218. சுமார் 1140 - 45இல் பெரியபுராணம் செய்த சேக்கிழார், மூன்று அரசர் ஆட்சிக்காலம் கடந்து நான்காம் அரசன் காலத்திலும் இருந்தார் என்பது ஐயத்துக்கிடமானது. 1145 லிருந்து 1178க்கு 33 ஆண்டுகளே; இவ்வளவு காலம் சேக்கிழார் வாழ்ந்திருக்க முடியாதென்பதில்லை. இரண்டாம் இராசராசனுடைய மைந்தன் மூன்றாம் குலோத்துங்கன் என்பது நிறுவப்படாத செய்தி சேக்கிழார் எவ்வளவு காலம் வாழ்ந்திருந்தார் என்று இவர்கள் கருதிய போதிலுங்கூட, இரண்டாம் குலோத்துங்கன் காலத்தே பெரியபுராணம் செய்யப்பட்டது என்ற செய்தி நிறுவப்பட்டுள்ளது.

வகையாக ஆராய்ந்து, கந்தபுராண ஆசிரியர் காலம் 14ஆம் நூற்றாண்டின் இறுதி என்று ஒருவகையாக நிறுவியிருக்கிறோம். இங்கு, கம்பரைப் பற்றியோ அவர் சேக்கிழாரைப் பார்த்துச் செய்தார் என்பது பற்றியோ பேசவில்லை. இது சைவ வைணவ அபிமானங்கள் மோதும் இடம். கம்பர் காலம் குறித்த விளக்கம் எமது 9ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் விரிவாக வெளி வரும். ஆதலால் யாருக்கு யார் முந்தி என்பது பற்றி இங்கு சொல்லும் அவசியமில்லை.

## சுந்தரர் காலமும் நம்பியாண்டார் நம்பி காலமும்

சேக்கிழார் காலத்தை ஆராய்ந்த இடத்து, இவ்விருவர் காலத்தையும் குறித்துச் சிலசொற்கள் கூறுவது பயனுடையதா யிருக்கும். சுந்தரர் திருத்தொண்டர் தொகையில், 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் கழற்சிங்கன் அடியார்க் கும் அடியேன்' என்று பாடுகிறார். காக்கின்ற என்று நிகழ் காலத்தில் குறிப்பிடுவதால், அக்கழற்சிங்கன் காலத்திலேயே அவர் வாழ்ந்தார் என்பது பெறப்படுகிறது. அப்பர் சம்பந்தர் காலத்திற்குப் பின் சிங்கன் என்ற பெயருடைய பல்லவ அரசன், பரஞ்சோதியாரைக் கொண்டு வாதாபிப்போர் வென்ற, நர சிம்மனுக்குச் சிறிதுகாலம் பின் வந்த இரண்டாம் நரசிம்மன் என்னும் இராசசிம்மன் ஆவான். இவனே பூசலார் வரலாற்றில் சொல்லப்பட்டவனும் அசரீரி கேட்டவனும் ஆகிய காஞ்சி மன்னன், இவனே காஞ்சிக் கயிலாயநாதர் கோயிலைக் கட்டிய வன். ஆனால் இக்கோயிலுக்குச் சுந்தரர் பதிகம் இல்லை. இதன் எதிரில் உள்ள மிகச் சிறு கோயிலாகிய கச்சி அனேகதங்காவதத் துக்கு அவர் பதிகம் பாடியிருக்கிறார். ஆதலால் சுந்தரர் காலம் இவன் காலம் அல்ல என்பர். சுந்தரர் பதிகங்களில் பல இறந்து போயின. சம்பந்தர் பதிகம் பாடினார் என்று சேக்கிழாரால் சொல்லப்பட்ட பல தலங்களுக்கு இன்று பதிகம் இல்லை. அது போல, கயிலாயநாதர் கோயிலுக்கும் சுந்தரர் பதிகம் இருந்து இறந்து போயிருக்கலாம். கழற்சிங்கனது அரசி கோயிலில் பூவை எடுத்து மோந்தாள்; அதனால் கழற்சிங்கர் அவள் மூக்கை அரிந்தார் என்பது வரலாறு. மூன்றாம் நந்திவர்மன் (840 - 865) காலத்தில் தான் சுந்தரர் வாழ்ந்தார், அவன் மனைவி சமண சமயப்பெண். அவளே இவ்வாறு மோந்திருக்கக்கூடும் என்பது ஒரு கருத்து. ஆனால் இராசசிம்மனுடைய மனைவியர் பலர், அவருள் ஒருத்தி இவ்வாறு மலரை மோந்தாள் என்று கொள்

வதில் இழுக்கு இல்லை. மேலும், சுந்தரர் காலத்திலும் சிறிதளவு சமண வாடை வீசிக் கொண்டிருந்தது என்பதை "ஞமண ஞாஞண ஞாண ஞோணமென் றோதி யாரையும் நாணிலா அமணர்" என்று இவர் பாடியதையும் காண்க (7562) பிற்காலத்தில் சமணம் வீழ்ச்சி அடைந்தது. ஆகவே சம்பந்தருக்கு உடன் அடுத்த காலத்தில் சுந்தரர் வாழ்ந்தார் என்பது எல்லா வகையிலும் பொருத்தம். பல தலமுறைகள் சென்று, இரண்டு நூற்றாண்டு கழித்து, பல்லவ மரபில் வருகின்ற மூன்றாம் நந்திவர்மன் ஒருவனே சைவன் என்ற ஒரு காரணம் பற்றி, அவனே சுந்தரர் காலத்தவன் என்று சொல்வதைவிட, அப்பர் சம்பந்தர் காலத்தில் இருந்த மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோர் காலத்தின் பின் வந்தவனாய், அசரீரி கேட்டவனாய், சிவாலயம் கட்டியவனாய் உள்ள இராசசிம்மன் காலத்தில் சுந்தரர் வாழ்ந்தார் என்று கருதுவது எல்லாவிதத்திலும் பொருத்தமானது. அதாவது, அவர் காலம் கி.பி. 700ஐ ஒட்டியிருக்கலாம்.*

நம்பியாண்டார் நம்பி வரலாற்றையும் காலத்தையும் எமது பிற வரலாற்று நூல்களில் (10, 11) தெளிவுபடுத்தியிருக்கிறோம். நம்பியாண்டார் சொல்லும் கதையைச் சேக்கிழார் பெரும்பான்மையான இடங்களில் அப்படியே பின்பற்றுகிறார். இராசேந்திரன் காலத்தில் கட்டிய கங்கைகொண்ட சோழ புரக் கோயிலுக்குக் கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாவை ஒன்பதாம் திருமுறையில் சேர்த்த காரணத்தாலே 8 - 11 திருமுறைகள் நம்பியால் வகுக்கப்பெறவில்லை, அவர் தொகுத்தவை முதல் ஏழு திருமுறைகளே என்று கூறுதல் பொருத்தம் ஆகாது. இராசராசன் காலத்தில் நம்பி திருமுறைகளைத் தொகுத்தார். அப்போது கருவூர்த்தேவர் பாடிய தஞ்சைத் திருவிசைப்பாவைச் சேர்த்துக் கொண்டார் என்பதே முறை. இதில் கவனிக்க வேண்டியது, திருமுறை வகுப்பு பதினொரு திருமுறைவரையில் நம்பியோடு முடிவு பெற்றது என்பதேயன்றி, இராசராசனோடு முடிந்தது என்பது அல்ல.❖

சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் திருமூலரைக் குறிப்பிடுகிறார்; பின்வந்த மாணிக்கவாசகரைத் திருமுறை தொகுத்த

---

* சுந்தரர் காலத்தை எமது எட்டாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் விரிவாக ஆராய்கிறோம்.

❖ நம்பியின் காலத்தை எமது பத்தாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றிலும் பதினொராம் நூற்றாண்டிலும் விரிவாகக் காணலாம்.

நம்பி அறிவாரேயன்றிச் சுந்தரர் அறியமாட்டார்; அப்படியிருக்க, மாணிக்கவாசகருடைய திருவாசகத்தை எட்டாந் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பிற்பட்ட பத்தாந் திருமுறையாகவும் நம்பி வைத்தார் எனல், அவருடைய பெருந்தகைமைக்கு ஏற்றதாகாது; ஆதலால் நம்பி ஏழு திருமுறைகளே தொகுத்தார், பிந்தியவை அவர் தொகுக்கவில்லை என்றெல்லாம் ஆராய்ச்சி செல்கிறது.* பதினொரு திருமுறைகளின் தொகுப்பும் பாகுபாடும் இசை இயல் என்ற அடிப்படையில் வந்தன என்பதை உணர்ந்தால், இத்தகைய பிழையான கருத்துக்களுக்கு இடமிராது. (எமது 10ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில், காட்டிய பன்னிரு திருமுறை இயல் இசை அட்டவணையைக் காண்க.)

## திருத்தொண்டர் புராணம்

### நூற்பெயர்

சேக்கிழார் தம் நூலுக்கு வைத்த பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது:

> இங்கிதன் நாமம் கூறின், இவ்வுல கத்து முன்னாள்
> தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
> பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்கு கின்ற
> செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்.

வழங்குகின்ற பெயர் பெரியபுராணம்; பெரியது என்பது அளவால் அன்று; அளவால் அதாவது செய்யுள் தொகையால், இதனினும் பெரியவை கந்தபுராணம் போன்ற பல உள்ளன; ஆனால் இது பொருளால் பெரியது; பெரியது யாது என்றுகேட்ட வேலோனுக்கு அவ்வைப்பிராட்டி 'பெரிது பெரிது புவனம் பெரிது' என்று தொடங்கிப் பலவும் சொல்லி இறுதியில் "இறைவனோ தொண்டருள்ளத் தடக்கம், தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று பாடினார். அத்தொண்டருடைய தொண்டின் பெருமையைப் பாடுதலால் இந்நூல் பெரியபுராணமெனப்பெயர் பெற்றது. சிவபெருமானே 'தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தமையால், இத்தனை அடிமைத்திறத்துக்கும் மூலமான தொண்டர் பெரியவராவார்; அவர் வரலாறே பெரியபுராணம். நூலின்

* பெரிய புராண ஆராய்ச்சி 1948, பக்கம் 70 - 78.

விநாயகர் வணக்கத்தில் 'எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளால் நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட' என்கிறார்; மாக்கதை - பெரியகதை பெரிய புராணம்.

பெயர் அமைப்புக்கு மற்றோர் பொருளும் சொல்வார் உளர். பெரியபுராணமானது, சுந்தரமூர்த்தி நாயனாரைக் கதா நாயகராகக் கொண்ட பெருங்காப்பியம் என்று கருதுவோர், திருத்தொண்டர் புராணம் என்ற பெயரில் குறிப்பிட்ட திருத்தொண்டர், சுந்தரரே என்றும் கூறுவார்கள்; சுந்தரர் வரலாற்றைக் கூறுவதால் திருத்தொண்டர் புராணம் என்பது அவர்கள் கருத்து. இது பொருந்தாமை வெளிப்படை. பாயிரத்துள் சேக்கிழார், மாக்கதை, அடியார் புகழ், தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர். திருத்தொண்டர் புராணம் என்று மட்டும் கூறுகிறாரேயன்றி, ஓரிடத்திலேனும் இங்கு சுந்தரர் பெயரைக் குறிப்பிடவில்லை. சுந்தரர் புராணம் என்பது அவர் கருத்தன்று என்பது நன்கு தெளியப்படும்.

## தொண்டர் காலம்

தில்லையம்பலத்தில் இறைவன் உலகெலாம் என்று அடி எடுத்துக்கொடுக்க, சேக்கிழார் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்று நடராசப் பெருமான் துதியாகத் தொடங்கித் தம் நூலைப் பாடினார். திருவாரூரில் தியாகேசப் பெருமான் தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று அடியெடுத்துக் கொடுக்க, அதையே தொடக்கமாக வைத்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதினொரு பாடல்களால் திருத்தொண்டத்தொகை பாடினார். இது சிவபெருமானுடைய சேவடித் தொண்டர்களாகச் சுந்தரமூர்த்தி நாயனார் அன்று அறிந்திருந்த தனியடியார் அறுபதின்மரையும் தொகையடியார் ஒன்பதின்மரையும் பெயர் குறிப்பிட்டு, அவர்களுடைய அடியார்க்கும் அடியனாகிய நான் ஆரூரில் அம்மானுக்கு ஆளாவேன் என்று பாடிப் பரவுவதாக உள்ளது. சுந்தரமூர்த்தியின் காலம் கி.பி. 700ஐ ஒட்டிய காலமாகும். இதனால் இவர் குறிப்பிட்டுள்ள நாயன்மார் அனைவரும் இந்த ஆண்டுக்கு முற்பட்டு வாழ்ந்தவர்கள் என்று காலத்தால் வரையறை பெறுகிறார்கள்.

## தொகை வகை விரி

பின்னர் இராசராச சோழ மன்னன் காலத்தில் கி.பி. 1000க்குச் சற்றுப்பிற்பட்டு வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி திருத்

தொண்டத்தொகையில் குறிப்பிட்ட தனியடியார் தொகை யடியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாடல் வீதம் கட்ட ளைக் கலித்துறையால் 89 பாடல் கொண்ட ஓர் அந்தாதி பாடி னார். இங்கு இவர் அறுபத்து மூவர் பதி, தேசம், மரபு, செய்த தொண்டு ஆகியவற்றை அத்திருத்தொண்டத் தொகையின் வழியே பாடியமைத்தார் என்று அந்தாதியின் பாயிரப் பாடல் கூறுகிறது. இது திருத்தொண்டத் தொகையின் வகை என்று சொல்லப்படுகிறது. சுந்தரர் பாடிய நாயனார் தொகை அறு பது; நம்பி, சுந்தரரையும், சடைப்பன் இசைஞானி காதலன் திரு நாவலூர்க்கோன் ஆரூரன் என்றவிடத்துக் குறிப்பிடப்பட்டுள்ள அவர்தம் தந்தை தாயராகிய சடைய நாயனாரையும் இசை ஞானியாரையும் சேர்த்து அறுபத்து மூவர் ஆக்கினார். இதுவே நாயனார் அறுபத்து மூவர் என்ற எண் அமைந்ததற்கு வரலாறு.

சேக்கிழார் தொகை வகை விரி என்ற முறையில் திருத் தொண்டைத் தொகையைத் தொண்டர் வரலாறு குறிப்பிடும் தொகையாகவும், நம்பியின் அந்தாதியை வகையாகவும் அமைத்துக்கொண்டு தம்முடைய நூலை இவற்றின் விரிவான புராணமாகப் பாடுகிறார். இதை ஓர் எடுத்துக்காட்டால் விளக் கலாம். 'ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்' என்பது சுந்தரர் வாக்கு; இது தொகை.

தனமா வதுதிரு நாவுக் கரசின் சரணமென்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல் திங்கள் ஊரினில் வேதியன் அப்பூதியே. 29

இது நம்பின் அந்தாதி. இது வகை. இங்கு நம்பி, வேதியர் சோழ நாட்டில் திங்களூரினர், செய்தசெயல் புனற்பந்தர் முதலியன திருநாவுக்கரசின் சரணம் என்று வாழ்த்திப் பெயரிட்டது என் கிறார். இவற்றைச் சேக்கிழார் 45 பாடல்களுடைய புராணமாக விரித்தார். இதுவே விரி. இந்தத் தொகை வகை விரி என்பதனைச் சேக்கிழாரே திருமலைச் சிறப்பு என்ற பகுதியில்,

– அடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதர வாலிங் கியம்புகேன்.

மற்றிதற்குப் பதிகம்வன் தொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருத் தொண்டத் தொகை எனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்ற தாம்.

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்.

என்று பாடுகிறார். இவ்வாறு பாடிய இவர் தம் நூலை இரண்டு காண்டங்களாகப் பிரித்துக்கொண்டார். இந்தக் காண்டப் பகுப்புக்குப் பொருத்தம் எதுவும் விளங்கவில்லை. திருத் தொண்டத் தொகையில் முதல் நான்கு பாடல்களில் சொல்லப் பட்ட வரலாறுகள் முதற்காண்டம். இங்கு 27 தொண்டர் வர லாறுகள் சொல்லப்படுகின்றன. ஏனைய 7 பாடல்களில் சொல் லப்பட்ட தனியடியார் தொகையடியார் வரலாறுகள் இரண் டாங் காண்டத்தில் புராணமாகச் சொல்லப்படுகின்றன. புரா ணங்களின் முறையும் திருத்தொண்டத்தொகை வரிசை முறை யின்படி அமைந்துள்ளது. அந்தாதியும் இவ்விதமே அமைந்திருப் பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரருடைய பதிகத்தை விரித்து நம்பி அந்தாதியாகச் செய்தபோது அவருக்குக் கிடைத்த வரலாற்று ஆதாரங்கள் மிகவும் குறைவு.

ஆக்கியபின் திருத்தொண்டத்
    தொகையடைவை அருளாலே
நோக்கியபின் நாயன்மார்
    நுடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தால் இபமுகத்தோன்
    அருள்செய்த பகுதியினால்
வாக்கியல்சேர் அந்தாதி
    நம்பிஅடை வேவகுத்தார்.

என்ற திருமுறைகண்ட புராணப் பாடல், விநாயகருடைய அருளை ஒட்டி நம்பி அந்தாதி பாடினார் என்று கூறுகிறது. அதாவது, தாம் அறிந்திருந்த அளவு வரலாற்றுக் குறிப்புக்களை அவர் தமது அந்தாதியில் அடக்கினார். ஆனால் சேக்கிழார் தொண்டை நாட்டிலிருந்து சோழநாட்டுக்கு வந்து அமைச்சர்

பதவி பெற்றமையால், பின்னும் ஆராய்ச்சி அதிகம் உடையவர். விரிந்த நூல் பாடும்போது இவ்வாராய்ச்சி வேண்டுவதே. நம்பியின் கூற்றுக்களையும் சேக்கிழார் கூற்றுக்களையும் வைத்து ஒப்பு.நோக்கும்போது மொத்தம் உள்ள 72 வரலாறுகளில் வேறுபாடுகள் மிகக்குறைவு. குறிப்பான ஒரே வேறுபாடு, பொய்யடிமை இல்லாத புலவர் என்ற தொகையடியார் வரலாறு. இங்கு நம்பி, 'தரணியில் பொய்ம்மை இலாத் தமிழ்ச்சங்கம் அதில் கபிலர், பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்' என்று பாடியிருக்க, சேக்கிழார் 'இவர்கள் சிவபெருமான் மலர் அடிக்கு ஆளானார், அவரை அல்லால் சொற்பதங்கள் வாய் திறவாத் தொண்டு நெறி தலைநின்ற மெய்யடியார்' என்று மட்டுமே சொன்னார். சங்கம் என்றோ கபிலர் பரணர் நக்கீரர் என்றோ, நாற்பத்தொன்பது புலவர் என்றோ சொல்லவில்லை. கபிலர் பரணர் நக்கீரர் என்றமையால் நம்பிக்குக் குறைவில்லை; அவர் காலத்தில் இருந்த வரலாற்று விளக்கம் கொண்டு அவர் அனைவரையும் சிவனடியாராகக் கண்டார். மேலும், கபிலர் பரணர் நக்கீரர் ஆகிய புலவர் பெயரால் தாம் அறிந்த பல பிரபந்தங்களை 11ஆம் திருமுறையில் தொகுத்தார். நக்கீரர் பிரபந்தங்கள் சில திருவாலவாய் அரன் சேவடிக்குத் தொடர்புடையவை. நக்கீரருக்கு இவ்வாறு தொடர்பு அமையவே, சங்கத்துப் புலவர் என்று வழங்கிய நாற்பத்தொன்பதின்மரும் அரன் சேவடிக்கு ஆட்பட்டவர்கள் என்றே அவர் பாடிவிட்டார். ஆனால், வரலாற்று உணர்வுகொண்ட சேக்கிழார், சங்கப்புலவர் அனைவரும் அரன் சேவடிக்கு அட்பட்டவர் அல்லர் என்பதை உணர்ந்ததோடு, பொய்யடிமை இல்லாத புலவர் என்பதற்கு விரிவான பொருளும் கூறினார்:

"செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே" எனத்துணிந்து விளங்கி ஒளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ் மிக்கார்.

எனவே, சங்கப் புலவர் என்றமையால் நம்பியின் நிலை தவறுடையதன்று; ஒரு புலவர் பழித்துக் குறிப்பிட்டது போல, அவருடைய நிலை இரங்கத்தக்கதும் அன்று.

## புராண அமைப்பு

சேக்கிழார் திருத்தொண்டத் தொகையின் பதினொரு பாட்டல்களில் சொல்லப்பட்ட வரலாறுகளை அந்த வரிசை

யிலேயே 11 சருங்கங்களாக அமைத்துக் கொண்டார். நூல் முகப்பில் திருமலைச் சருக்கம் என்ற ஒரு பகுதியை அமைத்து மொத்தம் பன்னிரு சருக்கங்களாக ஆக்கினார். சருக்கத்தின் பெயர், திருத்தொண்டத் தொகைப் பாடல்களின் தொடக்கத் தொடர்களாகும். இவை முறையே: தில்லைவாழ் அந்தணர், இலை மலிந்த, மும்மையால் உலகாண்ட, திரு நின்ற, வம்பறா வரிவண்டு, வார்கொண்ட வனமுலையாள், பொய்யடிமை இல்லாத புலவர், கடல் சூழ்ந்த, கறைக்கண்டன், பத்தராய்ப் பணிவார், மன்னியசீர் என்ற பெயரில் அமைந்தவை. நூல் இறுதியில் சேக்கிழார், சடைய நாயனார் இசைஞானியார் (சுந்தரரின் பெற்றோர்) புராணங்களை ஒவ்வொரு பாடலால், பாடி பின்னர் 53 பாடல்களால் வெள்ளாணைச் சருக்கம் என்ற ஒருபகுதி சேர்த்து, அதனுள் சுந்தரர் வெள்ளானையின் மீது இவர்ந்து கயிலை சென்ற வரலாறும், அவர் இறுதியில் பாடிய திரு நொடித்தான் மலைத் திருப்பதிகத்தை வருணன் திருவஞ் சைக் களத்தில் சேர்ப்பித்த வரலாறும், சேரர் காவலர் பாடிய திருக்கயிலாய ஞானஉலாவைச் சாத்தனார் கேட்டுப் பிடவூரில் வெளிப்படப் பகர்ந்த வரலாறும் கூறி, நூலை முடிக்கிறார்.

'உலகெலாம்' என்ற நடராசப் பெருமான் அடியெடுத்துக் கொடுத்த தொடரோடு நூல் தொடங்குகிறது. நூலின் பாயிரப் பகுதி 10 பாடல். இது அம்பலத்தாடுவார் வணக்கம், திருக்கூட்ட வணக்கம், அவையடக்கம், களன், பொருள், நூற்பெயர் ஆகியவை கூறுகின்றது. அடுத்தது திருமலைச் சருக்கம் என்ற பகுதி. இது அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றை அறிமுகப் படுத்தும் பொருட்டுச் சேக்கிழாரால் புராண முகப்பில் அமைக்கப்பட்டுள்ள ஒரு வாயில்போன்றது. இதனுள் திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திரு நகரச் சிறப்பு, திருக் கூட்டச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம் என்ற ஐந்து பகுதிகள் உள்ளன. உண்மையில், தடுத்தாட்கொண்ட புராணமே நூலின் தொடக்கப் பகுதியாகும். முந்திய பகுதிகளை ஆசிரியர் காப்பிய அமைப்புக்கென்றே பெய்திருக்கிறார் என்று தெரிகிறது.

முதலாவது திருமலைச் சிறப்பு: இங்கு, உபமன்னிய முனிவர் வரலாறு, கயிலையிலிருந்த ஆலால சுந்தரர் நிலவுலகுக்கு வரவேண்டி நேர்ந்த வரலாறு, அவர் திருவாரூரில் திருத்தொண்டத் தொகை பாட, நம்பியாண்டார் நம்பி அடியார்களை விரித்துக்

குறிப்பிட்ட செய்திகள் ஆகியவை இங்கு சொல்லப்பட்டுள்ளன. இரண்டாவது திருநாட்டுச் சிறப்பு. இங்கு சோழருடைய காவிரி நாட்டியல்பைப் பாடுகிறார்.

அடுத்தது திருநகரச் சிறப்பு: பெருங்காவியத்துக்கு நாட்டுப் படலம் கூறுதல் முறையாதலால் திருத்தொண்டத் தொகை பிறந்த தலமாகிய திருவாரூரை நகரமாகக் கொண்டு இதன்கண் மனுநீதிச் சோழன் வரலாற்றைப் பாடுகிறார். எவ்வளவு சிவ பக்தியும் சோழர் மாட்டு அன்பும் கொண்டு இவர் பாடுகிறார் என்பதை இங்கு காணலாம். குலோத்துங்க சோழனுடைய அமைச்சராயிருந்த சேக்கிழார் பெருமான் பேரார்வத்தோடு இப்படலம் பாடியிருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

அடுத்தது திருக்கூட்டச் சிறப்பு: இப்பகுதி புதுமையாயினும் அளவற்ற சிறப்புடையது. இத்திருக்கூட்டம் தங்கிய தேவாசிரியன் என்னும் திருக்காவணத்துள் சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடினார். திருக்கூட்டத்தை ஆசிரியர் சொல்லும்போது அறுபத்துமூவர் புராணங்களின் சாரமாயுள்ள தத்துவங்களைத் தொகுத்துக் கூறிவிட்டார்:

அந்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்த ழைந்து விதிர்ப்புறு சிந்தையார்,
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்,
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார்.

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்,
தேசி னால்எத் திசையும் விளக்கினார்,
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்,
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்,
கோதி லாத குணப்பெருங் குன்றனார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்,
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி,
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

ஆரங் கண்டிகை, ஆடையுங் கந்தையே,
பாரம் ஈசன் பணி அல தொன்றிலார்,
ஈர அன்பினர், யாதுங் குறைவிலார்:
வீரம் என்றால் விளம்புந் தகையதோ?

இங்கு சேக்கிழார் கூறுகின்ற சமயக்கருத்துக்கள் எல்லாச் சமயத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்துகின்ற பேருண்மைகளாகும்.

அடுத்த பகுதி, தடுத்தாட்கொண்ட புராணம் என்பது. இங்கு, திருநாவலூரில் சுந்தரர் வந்து பிறந்து, இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றுத் தலங்கள் வழிபட்டுத் திருவாரூர் சென்று பரவையை மணந்து பின் இறைவன் உலகுய்ய மறையளித்த திருவாக்கால் 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தபடி திருத்தொண்டத் தொகை பாடி முடித்தவரையில், வரலாறு சொல்லப்பட்டுள்ளது. அடுத்து, தில்லைவாழ் அந்தணர் சருக்கம் தொடங்கி, முன்னமே சொல்லியபடி வெள்ளானைச் சருக்கத்தோடு முடிகிறது.

ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சேக்கிழார் சுந்தரர் துதி ஒன்று பாடியிருக்கிறார். இது, சுந்தரர் திருத்தொண்டத் தொகைப் பாடல் ஒவ்வொன்றிலும் மகுடமாக 'ஆருரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்று பாடியதைத் தழுவி அமைத்தாகும். இவ்வாறு பாடிய துதிப்பாடல்கள் அனைத்திலும் முதலிலிருந்து இறுதிவரை, சுந்தரருடைய வாழ்க்கை சுருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் சொல்லப்படுகிறது. இது தனிச் சிறப்புடையது.

### இடைச்செருகல்

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை 4253 விருத்தங்களால் பாடிவைத்தார் என்று சேக்கிழார் புராணம் கூறுகிறது. ஆனால், மிகவும் திருத்தமாக அமைந்த சைவசித்தாந்த மகா சமாசப் பதிப்பில் (1950) அமைந்த பாடல் தொகை 4286. இங்கு 33 பாடல்கள் இடைச்செருகல். இவற்றுள் ஐந்து பாடல்கள் (திருமலைச்சிறப்பு) இடைச்செருகல் என்று அப்பதிப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. வேறு எவை எவை இடைச்செருகலாயிருத்தல் கூடும் என்று சி.கே. சுப்பிரமணிய முதலியார் நன்கு ஆராய்ந்துள்ளார்.* செந்தமிழ் தொகுதி 17 பக்கம் 345 - 353;

---

* சேக்கிழார், 1952 பக்கம் 206 - 224.

தொகுதி 20, பக்கம் 321 - 332இல் சோமசுந்தர தேசிகர் இடைச் செருகல்களை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். இவைபோக, மேலும் 100 பாடல்களுக்குக் குறையாமல் ஏடுகளில் காணப் படுகின்றன. இவை யாவும், ஆங்காங்கு புராணம் பயின்றோருள் புலவராயுள்ளோர், இந்த இடத்தில் இக்கருத்து இருந்தால் நல்லதுதானே என்று தாமே எழுதிச் சேர்த்தனவாகும். சீவக சிந்தாமணியில் இடைச்செருகலான பாடல்களைக் கந்தியார் இடையில் எழுதிச் சேர்த்தமைபோல, பெரியபுராணத்திலும் வெள்ளியார் சேர்த்தார் என்ற வரலாறு உண்டு. இவ்வெள்ளி, தருமபுர ஆதீனத்து அடியவருள் ஒருவரான வெள்ளியம்பல வாணத் தம்பிரான் என்று சிலர் சொல்வர். இவ்வாறு சொல் வதிலும், கந்தியார்* சைனப் பெண்பாலார் என்றமைபோல, வெள்ளியார் ஒரு சைவப் பெண்பாலாராக இருத்தலுங் கூடும் என்பது பொருத்தம். வெள்ளிவீதியார் என்ற பெயருடைய ஒரு பெண்பாற் புலவர் சங்க காலத்தில் இருந்தாரென்று அறி கிறோம். மற்றும், இவ்வெள்ளி அத்தம்பிரான் தானா என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. வேதாந்தம் படித்த கைம்மைக் கோலமுடைய பார்ப்பனப் பெண்மணிகள் எளிய வேதாந்த நூல்கள் பல பாடியிருந்தார்கள். அப்படியே சைவ இலக்கியம் படித்து, கைம்மைக்கோலம் தாங்கியிருந்த சைவப்பெண் மணிகள் இப்பாடல்களைப் பாடியிருக்கலாம். இவர்கள் வெள்ளியார் எனப்பட்டனர்.

ஏடுகளில், அச்சிட்ட பதிப்புக்களில் இல்லாத அதிகமான பாடல்கள் காணப்படுகின்றன. ஓர் எடுத்துக்காட்டுத் தரலாம். தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் தேவாசிரியனில் ‘எண்ணிலா அடியர் கூடி இருந்தபோது இவருக்கும் யாம் அடியனாகப் - பண்ணுநாள் எந்நாள் அடியவர்க்கு அடியன் ஆவேன் என்னும் ஆதரவு கூறப்பணிந்து பாடினார்’ என்று பாடல் உள்ளது. இடையில் (336ஆம் பாடலின் பின்) ஏட்டில் 16 பாடல்கள் காணப்படுகின்றன. இங்கு விறன்மிண்டர் வரலாறு சொல்லப்படுகிறது. பின்னால் விறன்மிண்டர் புராணத்தில் விறன்மிண்டர், தேவாசிரியனிடைச் சிவனடியார் தம்மைத் தொழாது ஏகும் ஊரனும் புறகு, அவனுடைய பிரானும் புறகு என்று உரைத்தார் என்று சேக்கிழார் பாடுகிறார்; இதற்குமேல்

* கந்தியார் பற்றிய விளக்கத்தை எமது தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டில் காண்க.

அங்கு விளக்கம் இல்லை. பிற்காலத்தில் ஒரு பெரியவர் இதை விளக்கினால் நல்லது என்று எண்ணினார் போலும். அது பற்றியே இங்கு சில விளக்கத்தைப் புனைந்து சேர்த்திருக்கிறார். அவற்றின் சாரம் பின்வருவது.

சுந்தரர் ஆரூர்ப் பெருமானைத் தரிசிக்கச் சென்றபோது, விறன்மிண்டர் 'தவறுடை வேடம் இவன் ஆர்கொல்' என்று செயிர்த்து நின்று கேட்டார். அவருடைய கடுமொழியைக் கேட்டு அங்கிருந்த தொண்டர் ஒருவர் 'இவர், ஓலை காட்டி ஆட்கொண்டருள் நம்பி; இவரை இவ்வாறு கூறலாமோ?' என்றார். அவர் மீண்டும் 'பண்பில்லாத இத்தூர்த்தன் புறகு' எனலும், தொண்டர் மறுபடியும் 'இவர் தம்பிரான் தோழர்' என்றார். மீண்டும் அவர் கடுமொழி கூறக்கேட்ட ஆரூரர் அஞ்சி, பூங்கோயில் சென்றபோது இறைவன் காட்சி அளிக்கவில்லை. வருந்திச் சுந்தரர் பாடுகிறார்:

> என்னையாட் கொண்ட ஈசனு மாயெனக்கு
> அன்னை யாயறி வாயமு தாயினாய்,
> பொன்னை யார்ந்த புரிசடைப் புண்ணியா,
> உன்னை யானிங்குக் காணேன் ஒளித்தியோ?
>
> வெள்ள நீர்பரந் தோங்கும் விரிசடை
> வள்ள லே, மலை யாள்மண வாளனே,
> தெள்ளுமாமறை யின்தெளி வாகியென்
> உள்ள மேபுகுந் தாயிங் கொளித்தியோ?

என்று பாடவும் இறைவன் காட்சி கொடுத்தார். பின்னால் சுந்தரர் புராணத்தில் உள்ளபடி துதிக்கிறார்.

இது ஓர் எடுத்துக்காட்டு.* இவ்வாறு பல.

ஏடுகளில் காணப்படும் மிகைப் பாடல்கள் ஒருபுறம் இருக்க, அச்சிட்ட பாடல்களில் சிலவற்றைக்கூட முதலியார் அவர்கள் விலக்க வேண்டும் என்கிறார்கள். அதற்கு அவர் கூறும் கருத்துக்கள் ஏற்கத்தக்கன. ஒன்று மட்டும் காட்டுவோம். அச்சிட்ட புத்தகங்களில் உள்ள பாடல்கள் 4286, இவற்றில் 33 பாடல்கள் மிகை. முழு நீறுபூசிய முனிவர் புராணத்தில் 5 பாடல்கள் திருநீற்றின் பேதங்கள், அதனைச் செய்யும் முறை,

* சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரியபுராண உரைப் பதிப்பு முதல் தொகுதி 1937, பக்கம் 428.

அணியும் முறை என்பன சொல்லுகின்றன. இவை இடைச்செருகல் என்பது முதலியார் கருத்து. காரணம், பிற தொகையடியார் வரலாறுகளில் அதிக விளக்கம் கூறும் பாட்டுக்கள் இன்மை. பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூரில் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆகிய வரலாறுகளில் அவ்வப்பொருள் களை விரித்துரைக்கவில்லை. இங்கு மட்டும் சேக்கிழார் திருநீற்றை விரித்துரைத்தார் என்பது பொருந்தாது என்பது அவர் கருத்து.

இடைச்செருகல் மலிந்த காலத்தில், பாடல் தொகையைப் பெருக்கிக் கூறும் பாடல்களையும் பிற்காலத்தார் அமைத்துக் கொண்டனர் என்று தெரிகிறது. ஒருவர் 4283 பாடல் என்று குறிப்பிட்டு ஒரு பாடல் செய்து ஏட்டில் எழுதிவைத்தார்:

> **கொண்டலணி தண்டலைசூழ் குன்றைநகர்ச் சேக்கிழார்**
> **ஒண்தரணி யோர்உய்ய ஓதினார் – தொண்டர்புகழ்**
> **ஏன்றதொரு நாலா யிரத்திருநூற் றெண்பத்து**
> **மூன்று திருவிருத்த மும்.***

இவ்வகைப் பாடல்கள் ஆதாரம் பொருந்தியனவாகா.

**வடமொழி நூல்**

சேக்கிழார் செய்த பெரியபுராணம் தமிழ் முதல் நூலே யாகும். இதற்குமுன் தோன்றிய காப்பியங்கள் யாவும் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ, வடமொழி மூலநூல் பெற்றிருக் கின்றன. ஆனால் இந்நூலுக்கு வடமொழி மூலநூல் இல்லை; இதுவே மூலநூல், முதல் நூல். எனினும், சமீப காலத்தில் இதற்கு இரு மொழிபெயர்ப்புக்கள் வடமொழியில் செய்யப்பட்டன. ஒன்று, அகத்திய முனிவர் செய்த அகத்திய பக்தவிலாசம் என்ற பெயருடையது. பக்தவிலாசம் என்பது நாயன்மார் வரலாறு என்று பொருள்படும். இதுபற்றி ஒன்றும் தெரியவில்லை. மற்றது உபமன்னியு பக்தவிலாசம் என்ற பெயருடையது. இது இரண்டு பாகமாக 1915இலும் முறையே (இரண்டாம் பதிப்புப் போலும்) 1913இலும் முறையே அச்சிடப்பட்டது. வரகூர் சுந்தரேச சாஸ்திரி என்பவர் இதைப் பல ஏடுகளின் துணைகொண்டு நன்கு பரி சோதித்துப் பாடபேதங்களோடு 'அரு அரு' என்ற விலாச முடையவர்களும் ஆகம ஜீர்ணோத்தாரகர் என்ற சிறப்புடை யவர்களுமாகிய நகரத்தார் உதவியால் அச்சிட்டார். புத்தகம்

* பெருந்தொகை 1882.

மிகவும் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. பார்க்கும்போது, வட மொழிவாணர், நூல்கள் விஷயத்தில் எவ்வளவு அதிகமான சிரத்தை காட்டுகிறார்கள் என்பது புலப்படுகிறது. இந்நூற் பதிப்பில் தேவாரம் பாடினோர் வரலாற்றில் அடிக்குறிப்பாக ஆங்காங்கு, தலப்பதிகங்களின் முதலும் கடையும் முதற் பாடலும் இறுதிப் பாடலும் தரப்பட்டுள்ளன. சில இடங்களில், திருமாணி குழிப்பதிகம் கிடைக்கவில்லை, திருக்கோலக்காப் பதிகம் கிடைக்கவில்லை என்பனபோன்ற குறிப்புக்களும் உள்ளன. செட்டியாருடைய பக்தியையும் சாஸ்திரிகளுடைய சிரத்தையையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருமலைச் சிறப்பு என்ற பகுதியில் சேக்கிழார் கயிலையின் தாழ்வரையில் சுந்தரமூர்த்தியின் சரித்திரம் சொல்லப்பட்டது என்று தோற்றுவாய் செய்கிறார். சிவபெருமான் திருவருளால் பாற்கடலை உண்டு வளர்ந்தவரும், கண்ணனுக்குத் திருவடி தீட்சை செய்தவருமாகிய உபமன்னிய முனிவர் கயிலைத் தாழ் வரையில் பல்லாயிரம் முனிவரும் யோகியரும் இருந்த சமயம், அங்கு ஓர் பேரொளி தோன்றிற்று. ‘இது என்ன ஒளி?’ என்று கேட்ட அவர்களுக்கு, இது நாவலர்கோன் வன்றொண்டன் திருவருளால் கயிலையை அடைகின்றதாகிய சிவசோதி’ என்று இவர் கூறினார். அதன்மேல் அவர்கள், ‘அந்த அடியவருடைய வரலாற்றை எங்களுக்கு உணர்த்துக’ என்று வேண்ட, முனிவர் ஆலால சுந்தரராகிய நம்பியாரூரர் வரலாற்றைக் கூறத் தொடங்கி, சுந்தரர் வரலாற்றையும் திருத்தொண்டர் வரலாற்றையும் விரித்துரைத்தார்.

இத்தோற்றுவாயைக் கொண்டு, உபமன்னிய முனிவர் சொல்லிய புராணமே முன் குறிப்பிட்ட உபமன்னிய பக்த விலாசம், இதன் மொழிபெயர்ப்பே சேக்கிழார் பாடிய திருத் தொண்டர் புராணம் என்று கூறும் வடமொழி அன்பரும் உளர். இது நகைப்புக்கிடமான பொருளே அன்றி, ஆராய்ச்சிக் கிடமான பொருளன்று. சில ஆண்டுகளுக்கு முன், இந்த நூற் றாண்டின் பிற்பாதியில், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களை வடமொழியில் பெயர்த்து அமைத்தார்கள். இது நம் கண்முன் நிகழ்ந்தது. பின் ஒரு காலத்தில் இவ்வடமொழிப் பெயர்ப்புக்களே மூலம், தமிழ் நூல்கள் இவற்றிலிருந்து பிறந் தவை என்று சொல்வதையே ஒக்கும், பக்த விலாசத்திலிருந்து தொண்டர் புராணம் பெயர்க்கப்பட்டது என்பது.

வடமொழியில் எல்லா இலக்கியமும் அமையவேண்டும் என்று தொண்டர் புராணத்தை மொழிபெயர்த்து அமைத்தவர்களுடைய ஆர்வத்தை நாம் பாராட்ட வேண்டும். இந்நூல் ஒருகால் 19ஆம் நூற்றாண்டில் அல்லது சற்றுமுன் செய்யப் பெற்றிருக்கலாம். இது மூன்று பாகமாகவுள்ளது. முதல்பாகம் திருநீலநக்கர் சரித்திரம் வரையில் 4683 பாடல். இரண்டாம் பாகம் சம்பந்தர் சரித்திரம் மட்டும்; 1720 பாடல். மூன்றாம் பாகம் இசைஞானியார்வரை, 593 பாடல். நூலின் இடையிலே அனபாய சோழர் செய்த தோத்திரம் போன்ற பல துதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப்பெயர்கள் இதனுள் அப்படியப்படியே வடமொழியாக்கப் பெற்றிருப்பது விசித்திரம் போலவும் தோன்றும். இயற்பகை - ஸ்வபாவரிபு; முருகர் - ஸ்கந்தநாதன்; மெய்ப்பொருள் - சத்தியார்த்த நாதர்; நாவுக்கரசர் - ஜிஹ்வாராஜர்; காரைக்காலம்மை - பூதவதி; அப்பூதி - தத்பூதி; ஞானசம்பந்தர் - போதசம்பந்தர்; சடையர் - கபர்த்தி; சிறுகுடி - கனிஷ்ட குடி; வைகல் - நித்திய வாசம்; பனந்தாள் - தாள மூலம் என்பன. மொழிபெயர்த்தவருக்குப் பெயர்களின் பொருள் விளங்காதபோது, அவை அப்படியே வடமொழியில் அமைக்கப்பட்டுள்ளன: ஆப்பனூர், மீயச்சூர், கஞ்சனூர் என்பன காண்க. கஞ்சனூர் - கம்சன் ஊர், ஆகவே கம்சபுரம் என்று வடமொழியில் இன்று வழங்குவதுண்டு. ஆனால் இச்சொல் வரலாறு அறியாத மொழிபெயர்ப்பாளர், அப்படியே கஞ்சனூர் என்று வடமொழியில் வைத்திருப்பது விசித்திரமாகவுள்ளது. தமிழில் கஞ்சம் - தாமரை; பிரமனூர்.

### அறுபத்து மூவரும் சைனப் புராதன புருஷரும்

பல ஆண்டுகளுக்கு முன், சரித்திரப் பேராசிரியராயிருந்த நீலகண்ட சாஸ்திரியார் சேக்கிழார் அறுபத்துமூவர் வரலாறு எழுதியதற்கு மூலநூல், சைனர்களிடையே அறுபத்துமூவர் பற்றி வழங்கும் ஒரு சரித்திரமாக இருக்கலாம் என்ற ஒரு குறிப்பு எழுதினார். இது மிகவும் பொருத்தமற்றது மாத்திரமன்று, பயனற்ற ஆராய்ச்சி என்றும் கருதவேண்டும். சைனர் நூலைப் பற்றி யாருக்கும் அன்றும் தெரிந்திராது, இன்றும் தெரியாது. ஆசிரியர் முயன்று கண்டுபிடித்தது என்று சொல்வதன் நோக்கம், உண்மை காணுவது என்று நாம் கொள்ளமுடியாது. உண்மை வேறு; இது தமிழின் சமய சரித்திர இலக்கிய வரலாற்றில் உள்ளது. திருவாரூர் வழிபடச் சென்ற சுந்தரர் விறன்மிண்டர் தூண்டுத

லால், சிவபிரானால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று, திருத்தொண்டத்தொகை பாடினார். அதில் தனியடியார் 60 பேர் தொகையடியார் 9 பேர் சொல்லப்பட்டனர். இது பாடியது கி.பி. 700 ஆகலாம். பின்னர் கி.பி. 1000ஐ ஒட்டி வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி, சுந்தரர் கூறிய 60 பேரையும், சுந்தரர், அவர்தம் தாய் தந்தையர் ஆகிய மூவரையும் கூட்டி, அறுபத்து மூவர் என்று கணக்கிட்டுத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். இத்தொடர்களை ஆதாரமாக வைத்து, சேக்கிழார் சுமார் 1140இல் இப்பெரியபுராணம் பாடினார். எனவே, அறுபத்து மூவர் சிவனடியார் என்ற கருத்து இவ்வாறு தமிழில் முறையாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. அன்றியும், தேவாரம் முதலிய இலக்கியங்களும் பல்லவர் பாண்டியராகிய மன்னவர் வரலாறுகளும் இவ்வடியார்களின் வரலாற்று உண்மைக்குக் கல்வெட்டுச் சான்று பகர்கின்றன. எனவே, முற்குறிப்பிட்ட ஆசிரியர் கூற்றைக் ‘கற்றறிந்தோர் செய்யும் குறும்பு’ என்றே நாம் கருதவேண்டும்.

இவ்வாறு தாம் ஒரு செய்தியைக் கண்டதாகச் சொல்வது வெறுங்கற்பனை; உண்மையன்று, இதற்குப் பயனும் இல்லை. தமிழ்ப் பண்பாட்டின் கேட்டுக்குக் காரணமாயிருந்த களப்பிரர் வழிவந்த ஒரு சைனச் செய்தியே சேக்கிழாருக்கு மூலம் என்று சொல்வது ஆராய்ச்சியாகாது. இதை நல். முருகேச முதலியார் அவர்கள் ஒரு கட்டுரையில் நன்கு ஆராய்ந்திருக்கிறார். அவர் கருத்தின் சுருக்கம் பின்வருவது. “கங்க அரசனான இராசமல்லன் கீழ்த் தலைவனாய் இருந்த சாவுந்தராயன் சிரவண பெள்குளத்தில் கோமடேசுவரர் சிலை அமைத்தான். அவன் சாவுந்தராய புராணம் என்றும் திரிசஷ்டி லக்ஷண மகாபுராணம் என்றும் பெயர் வழங்கிய ஒரு கன்னட புராணத்தைக் கன்னடமொழியில் பாடினான், அது 24 தீர்த்தங்கரர், 12 சக்கரவர்த்திகள், 9 பலபத்திரர், 9 வாசுதேவர், 9 பிரதிவாசுதேவர் ஆக 63 பேர் வரலாறு கூறுவது, இதைச் சேக்கிழாரின் பெரியபுராணம் நினைவூட்டுகிறது. சேக்கிழார் தாம் சமண புராணத்தை ஆதாரமாய்க் கொண்டதைக் குறிப்பிடவில்லை என்பதே சாஸ்திரியார் கூற்று. சாவுந்தராய புராணம் அல்லது ஆதிபுராணம் என்பது; 120 பக்கம் கொண்ட சிறு கன்னட நூல். இது சம்பு நடை. இவனுக்கு மூல நூல் குணபத்திரன் பாடிய ஒரு புராணம். இது 24 தீர்த்தங்கரர் சரிதம் மட்டுமே கூறுகிறது. கன்னடபுராணத்தைப் பதிப்பித்த ரகுநாத ராவ் அதில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன என்று கூறுகிறார். சேக்கிழாருக்கு மூலநூல் திருத்தொண்டத் தொகை;

இவர் முன் வந்தவாறு வழாமல் இயம்புகின்றார். அரசியல் காரணங்களாலும் இந்து சமயத்தின் பல்வகை எழுச்சிகளாலும் சமணம் குன்றியது. சம்பிரதாயக்கதை கூட பெரியபுராணம் சிந்தாமணிக்கு மாறாக எழுந்தது என்றே கூறும். சாவுந்தராயன் காலத்தால் சுந்தரருக்குப் பின்வந்தவன், அவரைப் பார்த்தே தனது மகாபுருஷர்களை அவன் பெருக்கிக் கொண்டான். அற்புதச் செய்திகள் இருந்தபோதிலும்கூட சேக்கிழார் கூறும் நாயன்மார் அம்மகாபுருஷர் போல, பலயோசனை உயரம் பல யுகங்கள் நீண்ட ஆயுள் உடையவர்கள் அல்லர். மகாபுருஷர் ஐந்து வகைத் தகுதியுடையோர், ஆனால் நாயன்மார் அடியார் என்ற ஒரே தகுதி கொண்டவர். அன்றியும், சேக்கிழார் கூறும் சரித்திரங்கள் இயன்றவரை உண்மை வரலாற்றை அடிப்படையாக கொண்டவை. மேலும் திருத்தொண்டர் என்ற சொல்லுக்குச் சுந்தரர் என்ற கருத்தும் உண்டு. சுந்தரர் கூறிய அடியவர் 60 பேர், அவர் தம் பெற்றோர் அவர் ஆகிய மூவரையும் கூட்டியே 63; தவிர சேக்கிழார், அனபாய சோழருடைய அமைச்சராய் இருந்த காரணத்தால் நாடெங்கும் கோயில்கள், தோறும் இருந்த தொண்டர் சிலைகள், வழிபாடுகள், தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார் என்ற வழக்கு ஆகிய பல்வகைக் கருத்துக் களையும் தொகுத்தே புராணம் பாடினார். அன்றியும் மைசூர் கெசட்டியர் தொகுத்த ஆசிரியர் நஞ்சங்கோட்டிலுள்ள ஸ்ரீ கண்டேசுவரர் ஆலயத்தில் காணப்படும் சைவஅடியார் சிலைகள் 66 என்று குறிப்பிடுகிறார். சேக்கிழார் 63 என்று எண்ணைத் தொகுத்துச் சொல்லவில்லை. ஆகவே சமணத்தைக் கண்டு சேக்கிழார் 63 ஆக்கினார் என்பது பிழை. திருத்தொண்டத் தொகையின் எண்ணிக்கையைக் கண்டு சைன புராணமுடையார் 24 தீர்த்தங்கரரோடு பிறரையும் சேர்த்து 63 ஆக்கிக் கொண்டார் என்பதே முறை. இது முதலியார் அவர்கள் கருத்து.*

ஆராய்ச்சி என்ற வறண்ட கண்கொண்டு பார்ப்பவர் எதையும் சொல்ல முடிகிறது; ஆனால் உண்மையும் பக்தியில் தோய்ந்த உண்மையும் வேறு. பெரும்பக்திக் காவியமாகிய இலக்கியம் அவ்வறட்சியுடையதன்று.

### வரலாற்றியல்

சேக்கிழாருடைய நூல் ஒரு சிறந்த வரலாற்று இலக்கியம் என்று ஆன்றோர் சொல்வர். ஒருமுறை நூலைப் படித்தாலும்

* சித்தாந்தம் இதழ் 1961, பக்கம் 229 - 36.

இதன் உண்மை நன்கு புலப்படும். நாட்டின் வரலாற்றையும் மக்களின் வரலாற்றையும் (பழைய பாஷையில் சொல்வதனால் பூகோளச் சரித்திரம்) இவர் நன்கு ஆய்ந்து நுட்பமாகச் சொல்கிறார். நகரங்கள், தமிழ் வழங்கிய பல நாடுகள், சிறப்புமிக்க தலங்கள், நதிகள் போன்றவற்றை ஆசிரியர் எடுத்துக்காட்டும் அருமை படித்தும் சிந்தித்தும் அனுபவித்தற்குரியது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னுள்ள நாட்டின் நிலையைப் பல காட்சிகளின் மூலம் ஆசிரியர் நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார். மக்கள் வரலாறும் அது போலவே விளக்கமாகிறது. பல வேந்தர் பரம்பரைகள், அவர்கள் பண்புகள், போர்கள், பக்தி நிலை முதலியவற்றை விளக்கமாகக் காண்கிறோம். இவற்றோடு, இந்நூலில் பிற சமயங்களையும் ஓரளவு வரலாற்றுக் கண்ணோடு பார்க்க முடிகிறது.

## நாட்டியல்பு

சேரநாட்டின் இளங்கோவான அடிகள், சோழர் தலைநகரில் பிறந்து பாண்டியர் தலைநகரில் புகுந்து பாண்டியர் தலைநகரில் கொலையுண்ட கோவலன் வரலாற்றைக் காவியமாகப் புனையப் புகுந்து, மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டின் சிறப்புக்களை நன்கு போற்றிக் கூறினார். அதுபோல, தொண்டை நாட்டில் பிறந்து சோழ மன்னனிடம் அமைச்சராயிருந்த சேக்கிழார், சோழமன்னன் தமிழ்நாடு முழுமையும் ஆட்சி புரிந்தவனானமையால், தாமும் சேர சோழ பாண்டிய பல்லவ நாடுகளில் வாழ்ந்த அரசரைப் பற்றியும் எளிதாகக் கூற முடிகிறது. சேரமன்னர் - சேரமான் பெருமாளான கழற்றறிவார் நாயனார்; சோழமன்னர் - கோச்செங்கட் சோழர், புகழ்ச்சோழர்; பாண்டிய மன்னர் - நெல்வேலிவென்ற நின்றசீர் நெடுமாறர், அவர் மனைவியார் மங்கையர்க்கரசி; பல்லவர் - ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர் (பூசலார் வரலாற்றில் கோயில் எடுத்தவனாகக் குறிப்பிடப்படும் பல்லவ மன்னன் இராசசிம்மன்).

குன்றத்தூரிலிருந்து சோழ நாட்டமைச்சராகத் தாம் விளங்கியமைபோலவே, சேக்கிழார் தம் நூலில் சிலர் வரலாறுகளில் பிறநாடுகளின் தொடர்பையே அடிப்படையாக வைக்கிறார். சோழன் மகளாகப் பிறந்த மங்கையர்க்கரசியார் பாண்டிமாதேவியாக வாழ்கிறார்: அதுபற்றியே போலும், சோழநாட்டுப் பாலறாவாயரான சம்பந்தரைப் பாண்டிய நாட்டுக்கு எளிதில் அழைத்துக் கொள்ள முடிந்தது. சேர நாட்டரசரான சேரமான்

சோழநாட்டு ஆரூரில் வாழ்ந்த சுந்தரரோடு தோழமை பூண்டார்; இத்தோழமை சுந்தரரைச் சேரநாடு சென்று அங்கிருந்தே கயிலைக்குச் செல்லுமாறும் செய்கிறது. நடுநாட்டில் பிறந்த சுந்தரர் சோழநாட்டில் பரவையை மணந்து பின் தொண்டை நாட்டில் சங்கிலியை மணந்து, சேரநாட்டில் கயிலாயம் நோக்கினார். சோழநாட்டுத் தலைநகரில் வாழ்ந்த புனிதவதியார், பாண்டிநாட்டுத் தலைநகரம் சென்று அம்மையார் ஆகிறார். பல்லவ மன்னன் படைத்தலைவனாகத் தமிழுக்கும் அப்பாலுள்ள நாடு சென்று வாதாபித் தொன்னகரம் துகளாக்கிய பரஞ்சோதி சோழநாட்டில் சிறுத்தொண்டராகிறார். தொண்டை நாட்டுத் திருவேற்காட்டு மூர்க்க நாயனார் சோழநாட்டுக் குடந்தைக்குச் செல்கிறார். அப்பாலும் அடிச்சார்ந்தார் என்ற கருத்தை உள்ளடக்கிச் சேக்கிழார், தம் நாயன்மார் பலரைத் தம் தம் நாட்டுக்கு அப்பாலும் சென்று பெருமான் அடிச்சாரும்படியும் செய்கிறார்.

இனி, நாட்டியல் என்று மட்டும் கருதும்போது, சேக்கிழார் இரு நாட்டுச் சிறப்புக்களை மிகவும் பெருக்கிச் சொல்கிறார். தொடக்கத்தில் அமைந்தது சோழநாட்டுச் சிறப்பு; இடையில் அமைந்தது, திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில், தொண்டை நாட்டின் சிறப்பு. சோழநாட்டைத் தொடங்கும்போது, 'சோழர் காவிரி நாட்டியல்பு' என்று தொடங்குகின்றார். நாட்டுச் சிறப்பு முழுமையும் காவிரியின் சிறப்பே. காவிரியின் இருமருங்கும், மேல்கடல் முதல் கீழ்கடல் வரை, மலை போன்ற கோயில்களாகவே அமைந்தான் என்பது ஆதித்த சோழனது வடமொழிக் கல்வெட்டு. காவிரியாறு நீரோடு பூவும் சுமந்து வருவதை இளங்கோவடிகள் 'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப் பூவாடை யதுபோர்த்துக் கருங்கயற் கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி' என்றுபாடி மகிழக் காண்கிறோம். அங்கு காவிரியை ஒரு மங்கையாக அவர் காட்ட, இங்கு சேக்கிழார் தம் பக்குவத்துக்கு ஏற்பப் பூவும் நீரும் கொண்டு வழிபடும் ஓர் அடியவர் போலக் காண்கிறார்:

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
எம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்.

காவிரியை இறைவியின் கருணையோடு ஒப்பிட்டுச் சொல்வது மிக்க சுவையுடையது:

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்,
எண்ணில் பேரறங்களும் வளர்க்கும் ஈகையால்,
அண்ணல் பாகத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

*காவிரி நாட்டு வருணனை முழுமையும் மருத நில வருணனையே. எட்டுப் பாடல்கள் எங்கும் எங்கும் என்றே அமைந்துள்ளன.*

*தொண்டைநாடு சேக்கிழார் பிறந்தநாடு, திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் முதல் ஐந்து பாடல்களில், 'பெருந் தொண்டை நாடு' என்றே குறிப்பிடுகிறார். இங்கு குறிஞ்சி வளத்தை அதிகமாய்ப் பாடுகிறார். ஐந்து பாடல்களில் நான்கு, வரிகள்தோறும் முறையே குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற பொருள்களைக் கூறுவது சுவையுடையது. பாலியாற்றின் சிறப்பை இரண்டு பாடல்களில் தனியே புகழ்ந்து பாடுகிறார்:*

துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
அங்கண் நித்திலம் சந்தனம் அகிலொடு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பவந் திழிவது பாலி.

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்து கைவருட
வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ளநீள் வயல் பருமடை உடைப்பது பாலி.

*பாலாற்றில் எப்போதுமே நீர் குறைவு - ஆனால் மக்கள் முயற்சி எடுத்து ஆழத் தோண்டினால் ஊற்றுநீர் கிடைத்துப் பயன் தருகிறது. இத்தன்மை இன்றும் உண்டு; இது பாலாற்றை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். இத்தன்மையையே ஆசிரியர் பிள்ளை தைவர என்ற இப்பாடலில் மிக்க நயமாகச் சொல்லு கிறார்.*

*திருநகரச் சிறப்பு என்ற ஒரு தனிப்படலத்தில் திருவாரூர் நகரத்தையும் மனுநீதிச் சோழன் வரலாற்றையும் சொல்கிறார். இதில் இருவகைப் பொருத்தம். ஒன்று, தாம் அமைச்சராயிருந்த சோழ மன்னருக்குரிய தலைநகரங்களில் திருவாரூர் ஒன்று, பழமையானது என்பது. மற்றது, அந்நகரமே பெரியபுராணத் துக்கு மூலமான திருத்தொண்டர் தொகை பிறந்த இடம் என்பது. அதுபோல, தொண்டைநாட்டில் காஞ்சி நகரை மிகவும்*

விரிவாகப் பேசுகிறார். காரணம் இங்கு உமாதேவியார் ஏகாம்பர நாதரைப் பூசித்தார் என்பது; இது பற்றியுள்ள பாடல்கள் 110; திருக்குறிப்புத் தொண்டர் வரலாறு 18 பாடல்களே. காஞ்சி நகரின் சிறப்புக்களைக் கூறுமிடத்து, இப்புராணத்தின் 72ஆம் பாடல் தொடங்கி 85ஆம் பாடல் வரையுள்ள 14 பாடல்கள் இடைச்செருகல் என்று தோன்றுகின்றன. இவை ஐதிகமான சில அற்புதச் செய்திகளை உரைக்கும்; இவற்றைச் சேக்கிழார் பாடினார் என்று கருத முடியவில்லை. தவிர 61ஆம் பாடல், நல்லறம் மன்னவே மன்னும் என்று முடிந்து, பின் 86ஆம் பாடலில் கருணைக் கடலுலகம் சூழ்ந்தால் மானும் என்று தொடர்வதே தொடர்பாயுள்ளது.

இவையன்றி, எந்த நிலையிலுள்ள மக்களையோ நாட்டையோ எடுத்தாலும் இவர் அதுவதுவாய் நின்று வருணிக்கும் திறன் வியத்தற்குரியது. கண்ணப்பர் வரலாறெங்கும் மலைவாழ் மக்கள் செய்திகளைப் பிழையாமலும் சுவைபடவும் தருகிறார். மூர்த்தி நாயனார் புராணத்தில் பாண்டிநாடு; அப்பர் புராணத்தில் திருமுனைப்பாடி நாடு; சேரமான் வரலாற்றில் சேரநாடு' புகழ்ச்சோழர் சம்பந்தர் வரலாறுகளில் சோழநாடு; ஆனாயர் வரலாற்றில் மழநாடு - என்று வருணிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். அமைச்சராயிருந்த இவர் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள மக்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பதும் உண்மைக்குப் பொருந்தவே உள்ளது. அதிபத்தர் வரலாற்றில் நுளைப்பாடியையும் திருநாளைப் போவார் வரலாற்றில் புலைப்பாடியையும் அப்படி வருணிக்கிறார். இவ்வாறு இவர் பாடியிருப்பதைக் கூர்ந்து நோக்கும்போது, சேக்கிழார் உயர்ந்தோர் வாழ்க்கையையும் நன்கு கண்டு சொல்லவல்லவர் என்பது விளங்கும்.

இனி, சேக்கிழார் பல சமயம் சமயாசாரியர் செய்த தல யாத்திரைகளையும் சொல்லவேண்டி வருகிறது. அப்போதெல்லாம் அவர், தலங்கள் அமைந்துள்ள முறை, இடைப்பட்ட தூரம், அங்குள்ள தல அமைப்பு, நாட்டு இயல்பு, சென்ற வழி, செல்வதற்காகக் கூடிய காலம் முதலியவற்றை நன்கு விளக்கிப் பாடுகிறார். இவர் தாம் நேரில் சென்று பார்த்தே பாடுகிறார் என்பது தெரிகிறது. தொண்டை நாட்டைக் கூறும்போது, அங்குள்ள பதிகள் பதின்மூன்றை அவற்றின் தன்மைக்குப் பொருந்த விளக்கியுரைக்கிறார். அப்பர் யாத்திரையையும் சம்பந்தர் யாத்திரையையும் இவர் கூறும்போது, பல புதிய செய்திகள் தெரியவருகின்றன. காரிகரை என்ற ஒரு தலம்

இவ்வாறு தெரியவருவது. இங்கு இப்போது பதிகம் இல்லை; அப்பர் பாடினார் என்பது சேக்கிழார் கூற்றால் தெரிகிறது. இப்படியே சம்பந்தர் வரலாற்றிலும் பல செய்திகள், இன்ன இடம் தொடங்கி இன்ன தலங்களை வணங்கி இன்ன வழியே சென்று இன்ன இடங்களில் பதிகம் பாடினார் என்று கூறியிருப்பது, இன்றும் உள்ள நிலைமைக்கு ஒத்திருக்கிறது. சில இடங்களில் பணிந்து பதிகம் பாடிச்சென்றார் என்று கூறுகிறார்; பதிகம் கிடைக்கவில்லை; இதற்கு எடுத்துக்காட்டு, காவிரி வடகரைத் திருமாந்துறை.

சில சமயம் நாடு ஊர் இரண்டையும் குறிப்பிட்டுச் சொல்கிறார். பெருமிழலைக் குறும்பரைக் கூறும்போது, மிழலை நாட்டு மிழலை என்றமையால், இது வெண்ணி நாட்டு மிழலையினும் வேறானது என்று அறிகிறோம். செருத்துணை நாயனாரின் ஊர் மருகல் நாட்டுத் தஞ்சை எனக் கூறும்போது, இது சோழரது தஞ்சையினும் வேறானது என்று அறிகிறோம். ஏயர்கோன் கலிக்காமர் ஊர் பெருமங்கலம் என்றும், மானக் கஞ்சாறர் ஊர் கஞ்சாறூர் என்றும் எடுத்துக்காட்டுகிறார்.

சேக்கிழார் தலங்களைக் குறிப்பிடும்போது, அவ்வவற்றின் சிறப்பான செய்திகளையும் தவறாது தொகுத்துச் சொல்வது பெருவிளக்கமாயும் பெருவியப்பாயும் உள்ளது. 'தென்திசை திசை எட்டிலும் மேற்படவந்த புண்ணியம் யாது' என்று கேட்ட அந்தணாளர்க்கு உபமன்னிய முனிவர், ஆறு தலங்களையும் அவற்றின் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறார் புலிக்கால் முனிவன் அருச்சித்தது பெரும்பற்றப் புலியூர், நமை ஆளுடை மெய்த் தவக்கொடி காண ஆடும் அம்பலம், மேதினியின் இதய கமலமாம் ஆரூர், எம்பிராட்டி கம்பையாற்றில் வழிபட்ட காஞ்சி, நந்தி தவம் செய்து அருள் பெற்ற ஐயாறு, தேசமெல்லாம் விளங்கிய தென்திசைத் தோணிபுரம், ஆரூரைச் சொல்லும் போது மீண்டும் மாமலராள் வழிபட்டது, பரவை அவதாரம் செய்த மாளிகையுடையது, தொண்டர்க்குத் தூதுபோய் நடந்த செந்தாமரையடி நாறுவது என்பார்.

வரலாற்றுக் கண்ணோடு பார்க்கும்போது, பெரியபுராணத்தில் ஒரு நயம் புலப்படுகிறது. இது தமிழ்நாடு முழுமைக்குமுரிய பொதுக்காப்பியம் என்று இதன் பொருளமைதியினாலேயே நாம் சொல்லலாம். 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது, அடிகள் நீரே அருளுக' என்றுகேட்டு, இளங்கோவடிகள்

தமிழ்நாடு முழுமைக்குமுரிய நூலாகச் சிலப்பதிகாரத்தைச் செய்தார் என்பர். அதே கருத்தோடு பெரியபுராணத்தை நாம் கருதுவோமேயானால், இது தமிழ்நாட்டின் நான்கு பிரிவுகளுக்கும் உரிய பொதுநூலாயிருப்பது விளங்கும் - பல்லவ சோழ பாண்டிய சேர நாடுகள். ஆசிரியரான சேக்கிழார் பிறந்தது பல்லவநாடு, அமைச்சராய் விளங்கி நூல் செய்தது சோழநாட்டில். அப்பர் சுவாமிகள் வரலாறு பல்லவர் ஆட்சியில் தொடங்கிச் சோழ நாட்டில் புகலூரில் முடிவு பெறுகிறது. திருஞான சம்பந்தருடைய அவதாரமும், மறைவும் சோழநாட்டில். ஆனால் அவருடைய பெரும்சாதனை பாண்டிநாட்டுள் சென்று சமணத்தை அகற்றிப் பாண்டியனைச் சைவனாக்கி நாட்டில் சைவத்தை நிலைபெறச் செய்தமையாகும். அன்றியும், அவர் தொண்டை நாட்டு மயிலை வரை சென்று இறை அருளால் அற்புதங்கள் நிகழ்த்தியிருக்கிறார். சேரநாட்டில் சேரமான் பெருமாள் தோன்றி ஆரூரில் சுந்தரரோடு நட்புக் கொண்டார்; அதுமட்டுமின்றி, சுந்தரர் முத்தி பெற்றது சேரநாட்டில். சோழ நாட்டில் பிறந்த காரைக்கால் அம்மையார் தொண்டை நாட்டுத் திருவாலங்காட்டில் முத்தியடைந்தார். நான்கு அரசபரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் சிலர் நாயன்மாராய் இருந்திருக்கின்றனர்.

இது ஒரு தேசியப் பொதுக்காப்பியம் என்றும் வேறு இடத்தில் சொல்லுவோம். கயிலையில் இருந்த திருமூலர் திருவாவடுதுறைக்கு வந்தார். அப்பர் கயிலைக்குச் செல்ல முயன்று திருவையாற்றில் கயிலாயக் காட்சி கண்டார், சுந்தரரும் சேரமானும் கயிலாயத்திலேயே சென்று பாடல் பாடினார்கள். காரைக்கால் அம்மையார் கயிலாயம் சென்று சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பெற்றார். ஆகவே இத்தகைய தொடர்புகளால் பெரியபுராணம் தமிழ்நாடு மட்டுமன்றி, இந்தியா முழுமைக்கும் உரிய பொதுக்காப்பியம் என்று சொல்லுவதும் கூடப் பொருத்தமாகும்.

### வரலாற்றறிவு

சேக்கிழாருடைய நூல் தமிழ்நாடு, தமிழிலக்கியம் ஆகிய இரண்டின் வரலாற்றறிவுக்குப் பெரும்தொண்டு செய்கிறது. இவர் சோழ மன்னனுடைய அமைச்சராய் இருந்தவர். அவனுடைய ஆட்சி, போர்கள் எவையுமின்றி நாட்டில் பொதுவான அமைதி நிலவிய காலம். ஆதலால், இவர் தமிழ்நாடு முழுமையும் வாழ்ந்த

திருத்தொண்டர் வரலாறுகளைப் பாடுவதற்கு நாடு முழுமையும் சுற்றித் தலங்களையும் கோயில்களையும் நாயன்மார் வாழ்ந்த இடங்களையும் நேர்முகமாக அறிந்து ஆராய்ந்து பாடுவதற்கு நிரம்ப வசதி பெற்றிருந்தார்; அவ்வாறே கண்டு பாடினார் என்று கூறுவதற்கு அவருடைய நூலில் எண்ணற்ற ஆதாரங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

அவற்றுள் தலையானது பின்னால் சிறுத்தொண்டரான பரஞ்சோதியார் பல்லவ மன்னனது படைத்தலைமை வகித்துப் படையை நடத்திச் சென்று சாளுக்கியர் தலைநகரமான வாதாபி நகரத்தைத் துகளாக்கிய செய்தி ஆகும். பரஞ்சோதியார் மாமாத்திரர் என்ற மருத்துவர் மரபில் வந்தவர். மருத்துவத் திறனும் வடநூற் புலமையும் படைக்கலப் பயிற்சியும் உடையவர். இவர் மன்னவனுக்கு அணுக்கராய்ப் பல போர்களில் யானைப்படையை நடத்திச் சென்று வெற்றி பெற்றவர். ஒருமுறை வாதாபி நகரத்தின் மீது படையெடுத்துச் சென்று சாளுக்கியரை வென்று அந்நகரை அழித்து அங்கிருந்த எண்ணில்லாத பொருட் குவியலையும், யானைகளையும், குதிரைகளையும் அரசனிடத்தில் கொண்டுவந்து சேர்த்தார்.

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்.

வாதாபியை அழித்த சரித்திரச் செய்தி காஞ்சியில் ஆட்சி புரிந்த நரசிம்மவர்மன் என்ற பல்லவ மன்னனுக்கு உரியதாகும். இவனது ஆட்சிக்காலம் கி.பி. 642 - 55. பல்லவ மன்னனால் சாளுக்கிய நகரம் பாழாகி அவர்களுக்கு இழுக்கு ஏற்பட்டது என்று புலிகேசி என்ற சாளுக்கிய மன்னனது பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. எனவே இது உண்மை நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை. இப்பரஞ்சோதியாரே பின்னால் சிறுத்தொண்டர் என்று புகழ்வாய்ந்த நாயனார் ஆகின்றார்.

இவருடைய ஊர் திருச்செங்காட்டங்குடி. கோயிலின் பெயர் கணபதீச்சுரம். அங்கு எழுந்தருளியுள்ள கணபதியின் பெயர் வாதாபி கணபதி. வாதாபியிலிருந்து கொண்டுவந்த கணபதியை இங்கு எழுந்தருளச் செய்த சிறப்பால் இவர் இப்பெயர் பெற்றார். இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தரும் அப்பரும் தேவாரம்

பாடி இருக்கிறார்கள். சம்பந்தர் தலயாத்திரையாக இங்கு வந்த போது சிறுத்தொண்டர் அவரை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தார். சம்பந்தர் சிறுத்தொண்டரைச் சிறப்பித்து இத் தலத்தில் பதிகம் பாடி இருக்கிறார். சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கை. மகன் பெயர் சீராளன். இப்பெயர் கள் பலவும் சம்பந்தர் தேவாரத்தில் கூறப்பட்டுள்ளன.

கூராரல் இரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே, மடநாராய், தமியேற்கொன் றுரையீரே!
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்தன் அருளொருநாட் பெறலாமே.

செடிநுகரும் சமணர்களும் சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க் கருளாத பண்பினான்,
பொடிநுகரும் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான், கணபதீச் சரத்தானே.

இவற்றால் நாம் பெறுவது சம்பந்தர் சிறுத்தொண்டர் காலத்து வாழ்ந்தார் என்பது. ஆகவே இவர் காலமும் கி.பி. 642 - 55க்கு உட்பட்ட காலமாகும்; 640 - 56 எனல் இவர் வரலாற்றுக் குப் பொருந்துவது.

திருச்செங்காட்டங்குடிக் கோயில் பிற்காலத்தில் இராச ராசனால் கட்டப்பட்டது. அங்கு சித்திரை விழாவில் சிறுத் தொண்டர் நம்பி மடம் கட்டப்பட்டது. சிவபிரான் பெயர் சீராள தேவர் உத்திராபதி ஈசுவரர் என்றும், கோயில் உத்திராபதி ஈசுவரர் கோயில் என்றும் அங்கு காணும் கல்வெட்டில் குறிப் பிடப்பட்டுள்ளன.

சம்பந்தர் காலத்தில் உடன் வாழ்ந்தவர் அப்பர் சுவாமிகள். அவர் குழந்தையாய் இருந்தபோது இவர் மூத்தவர். நரசிம்ம னுடைய தந்தையான மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தார். மகேந்திரவர்மனுக்குக் குணபரன் என்று ஒரு பெயர் உண்டு. சமணர் கோயிலை அழித்துக் குணபரேச்சுரம் கட்டினான் என்று சேக்கிழார் கூறுவது இவனையே ஆகும்.

கோச்செங்கட் சோழர் ஒரு நாயனாராகப் புராணத்தில் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். இவரை அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் திருவானைக்காத் தல வரலாற்று அடிப்படையில் வைத்து மிகவும் போற்றுகிறார்கள். இம்மன்னர் மாடக் கோயில்கள் கட்டிப் புகழ் வாய்ந்தவர். கணக்கற்ற கோயில்

களைக் கற்றளிகளாக இவர் கட்டினார். திருமங்கையாழ்வார் இவர் சிவாலயம் எழுபது கட்டினார் என்று கூறுவது காணத் தக்கது: "இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட, திருக்குலத்து வளச்சோழன்." அப்பர் சுவாமிகள் குறிப்பால் இவர் 78 மாடக் கோயில் கட்டினார் என்று தெரிகிறது. இவர் சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் போரில் வென்று சிறை யிட்டுப், பின்னர் பொய்கையார் என்ற புலவர் பாடிய களவழி நாற்பது கேட்டுச் சிறை வீடு செய்தார் என்றும் வரலாறு கூறும். திருவாலங்காட்டுச் செப்பேடு முதலியவற்றில் சிறப்பித்துச் சொல்லப்படும் இம்மன்னர், வரலாறு கண்ட மன்னரேயாவர். இக்கதைகளின் பொருத்தம் எவ்வாறு நாம் கொண்ட போதி லும், இவ்வரசர் ஒருவர் இருந்து பல கோயில்களைப் பெருங் கோவில்களாகக் கட்டிய செய்தி உண்மையே. சம்பந்தரும் அப்பரும் இவரை அதிகமும் போற்றுவதால், இவர் காலம் அவர்கள் காலமாகிய ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முற்பட்டது என்பதில் ஐயமில்லை. இவர் வரலாற்றுச் சோழரே. காலம் ஐந்தாம் நூற்றாண்டாயிருக்கலாமென்று ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவதை நாம் ஏற்கிறோம். புகழ்ச்சோழ நாயனாரும், இவர்க்குப் பின்வந்த வரலாறு கண்ட ஒரு சோழமன்னரேயாவர்.

பூசலார் வரலாற்றில் ஒரு மன்னன் காஞ்சியில் பெருங் கோயில் கட்டிக் கும்பாபிஷேகத்துக்கு நாள் குறிப்பிட்டான் என்றும், சிவபெருமான் அவன் கனவில் தோன்றி, பூசலாரும் அதேநாளில் கும்பாபிஷேகம் வைத்திருக்கிறார் என்று அறி வுறுத்தினார் என்றும் புராணத்தினால் அறிகிறோம்.

இந்த மன்னன் அசரீரி கேட்டான் என்று கல்வெட்டில் சொல்லப்படுகின்ற இராசசிம்மவர்மன் (660 - 705) ஆவான். இவன் கட்டிய கோயில் இன்று காஞ்சியிலுள்ள கயிலாயநாதர் கோயில். பூசலார் மனக்கோயிலுக்கு அடையாளமாகிய திருநின்றவூரில் (இன்றைய திண்ணனூர்) ஒரு பழங்காலத்துப் பல்லவர் கோயில் உள்ளது. சுவாமிக்கு அங்கு பெயர் மனக்கோயில் கொண்டார்; அங்கு பூசலார் சிலையும் இராசசிம்மன் சிலையும் உள்ளன.

நெல்வேலி வென்றசீர் நெடுமாறன், வரலாறு கண்ட ஒரு பாண்டி மன்னன். அவனுடைய புகழைப் பாண்டிக்கோவை விரித்துப் பாடுகிறது. அவன் (640 - 670) ஆண்டுகளில் ஆட்சி

செய்தவன். ஆதலால், சம்பந்தர் காலத்தவன் என்பது வரலாற்றினாலும் பொருத்தமே. பாண்டிநாட்டின் வடஎல்லையில் நெல்வேலி என்ற ஊரில் இவன் சாளுக்கியப்படையை வென்றான், இந்த இடம் இன்று நிம்மேலி என்று வழங்குகிறது என்பர்.

ஐயடிகள் காடவர்கோன் பரமேசுவரவர்மன் (670 - 85) என்ற பல்லவ மன்னராகக் கருதப்படுகிறார். சிறந்த புலமை பெற்றிருந்த இவர் அரசைத் தம் புதல்வனிடம் ஒப்புவித்துத் தல யாத்திரை செய்தார் என்று அறிகிறோம்.

நெடுமாறனுடைய மனைவி மங்கையர்க்கரசியார். இவர் சோழநாட்டிலிருந்த மணிமுடிச் சோழன் என்பவன் மகளார். அக்காலத்தில் சோழர் முடிமன்னராக ஆட்சி புரியவில்லை. பழையாறையில் இருந்து மிகவும் குறுகிய நிலப்பரப்பில் ஒரு தலைவனாக இச்சோழன் ஆட்சி புரிந்திருந்தான் போலும். சம்பந்தர் காலத்தில் குங்கிலியக் கலையனார் வாழ்ந்தார். அவர் திருப்பனந்தாள் சென்று தாடகை என்ற பெண்ணுக்காக முடி சாய்ந்திருந்த சிவலிங்கத்தை நிமிர்த்து வைத்தார் என்பது வரலாறு. அவர் நிமிர்க்கு முன் அங்கு ஆட்சி புரிந்த சோழமன்னன் தன் படைகளைக் கொண்டு நிமிர்க்க முயன்று முடியாது போயிற்று என்பதும் வரலாறு. இம்மன்னன், கால ஒற்றுமையைக் கருதி இம் மணிமுடிச் சோழனாகவே நாம் கொள்ளலாம். அன்றியும், அப்பர் சுவாமிகள் பழையாறை வடதளிக்குச் சென்ற போது அங்கிருந்த சிவாலயம் சமணர்களுடைய கொடுமையினால் மண்மூடி மறைக்கப் பெற்றிருந்தமை உணர்ந்து, அவர் 'வண்ணங் கண்டு நான் உம்மை வணங்கியன்றிப் போகேன் என்று அமுதுண்ணாது விரதமிருந்தார்'.* இந்த நிகழ்ச்சியை அங்கு ஆட்சிபுரிந்த சோழ மன்னன் இறைவனால் கனவில் உணர்த்தப்பெற்று அமணரை அடக்கிக் கோயிலையும் சிவலிங்கத்தையும் வெளிப்படுத்தி அப்பர் தரிசிக்குமாறு செய்தான் என்று புராணம் கூறுகிறது. இந்த மன்னன் மணிமுடிச் சோழனாகவே இருத்தல் கூடும்.

சேக்கிழார் கரிகாற் பெருவளத்தானையும் அவன் மேருவில் புலி பொறித்ததையும் பல இடங்களில் கூறுகிறார். இது, சிலப்பதிகாரம் கலிங்கத்துப் பரணி முதலிய பண்டை நூல்களில் சொல்லப் பட்ட வரலாறுகளுக்கும் ஒத்திருப்பது அறியத்தக்கது.

---

* இதை அப்பர் செய்த சத்தியாக்கிரகம் என்று இன்றைய அரசியல் பரிபாஷையில் சொல்லலாம்.

கூற்றுவ நாயனார் களப்பிரர் என்று பலரும் கூறுகிறார்கள். இது கொள்ளத்தக்க கருத்தல்ல. சேக்கிழார், அவர் களந்தை என்ற ஊரில் ஆட்சி செய்தார் என்று சொல்கிறாரேயன்றி களப்பிரர் என்று சொல்லவில்லை. 'கோதை நெடுவேல் களப் பாளனாகிய கூற்றுவன்' என்பது நம்பியாண்டார் நம்பியின் அந்தாதி. களப்பாளன் களப்பிரன் அல்ல. களப்பிரர் அயல் மொழிக்குரிய நாட்டிலிருந்து வந்து தமிழ்நாட்டில் கேடு விளை வித்த அன்னிய சமயத்தினர்; காலம் 200 - 550. கூற்றுவர் பழுத்த சிவனடியார். இவரைக் களப்பிரர் என்று கூறுவது பெரிய புரா ணத்துக்கு முரணாகும்.

## பிற சமயங்கள்

பெரியபுராணம் பாடிய காலத்தில் சைவம் தவிர வேறு எந்தச் சமயமேனும் நிலவிற்று என்ற பேச்சே இல்லை. தமிழ் நாட்டின் சமயம் பொதுவாகச் சைவமாகவே இருந்தது. வேதாந்தமோ வைணவமோ அக்காலத்தில் ஆதிக்கம் பெற வில்லை. சைனம் பௌத்தம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு எதுவுமில்லை. ஆனால், சேக்கிழார் பாடுகின்ற நாயன்மார் சில ருடைய காலங்களில் சமணம் பௌத்தம் பற்றிய குறிப்பைப் பெறுகிறோம். பௌத்தத்தை இரண்டு இடங்களில் சந்திக் கிறோம். ஒன்று சாக்கிய நாயனார் வாழ்க்கை. சங்கமங்கையில் பிறந்த இவர், காஞ்சி நகரம் அடைந்து சாக்கியர் அறத்தின் வழிச் சார்ந்தும், பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்தறிந்தார். 'எந்நிலையில் இருந்தாலும் எக்கோலம் கொண்டாலும், மன்னிய சீர்ச்சங்கரன் தாள் மறவாமை பொருள்' என்று உணர்ந்து, தூய சிவம் தன்னை அன்பினால் மறவாதிருந்தார். பௌத்த சமயத்தாரின் வேடம் தாங்கியிருந்த போதிலும், இவர் சிவலிங்கத்தைக் கண்டு உண்ணும் வாழ்க்கையைக் கொண் டிருந்தார். ஒருநாள் அவ்வாறு சிவலிங்க தரிசனம் செய்யாது உண்ணப் புகுந்தவர், நினைவு வந்து விரைந்து சென்று வழக்கம் போல் ஒரு கல்லெடுத்து மலராக எறிந்தார். சிவலிங்கத் திருமேனி கொண்டிருந்த பெருமான், இளம் புதல்வர் இகழ்வனவே செய் தாலும் பெற்றோர் இன்பமே அமைவதுபோல, மகிழ்ந்து அவ ருக்குக் காட்சிதந்தார்.

மற்றோர் இடம் திருஞானசம்பந்தர் மதுரையில் சமணை ஒடுக்கிச் சைவத்தைப் பரப்பி மீண்டுவருங்காலத்து, வழியில் போதிமங்கை என்ற ஊரில் புத்த சமயத்தார் கண்டு இவரைத்

தடுத்த போது, மெய்ப்பொருள் பற்றிச் சாக்கியரோடு வாதம் செய்து சைவம் அல்லாது மற்றொன்றும் இல்லை என்று நிலை நாட்டினார். இப்பகுதி 23 நீண்ட ஆசிரியவிருத்தம் கொண்டது. இதைச் சேக்கிழார் விரிவாகவே அமைத்திருக்கிறார். போதி மங்கையை நெருங்கியபோது இவருடைய சின்னங்கள் பரசமய கோளரி வந்தான் என்று ஊத, அங்கிருந்த சாக்கியர் புத்தநந்தி என்பவன் தலைமையில் திரண்டுவந்து, 'ஏம்மைவென்ற பிற கல்லவா சின்னங்கள் ஊதலாம்?' என்று தடுத்தனர். இத்தடையைக் கண்டு பொறாத திருப்பதிகம் எழுதும் அன்பர், பிள்ளையார் திருவாக்கலே 'அத்திரமாவன அஞ்செழுத்துமே' என்ற பாசுரத்தைப் பாடவும், அது வாதப்போர் ஏற்றுவந்த புத்தன் மேனியையும், தலையினையும் வெவ்வேறாகக் கூறுபட நூறியிட்டது. அஞ்சிய புத்தர் மீண்டும் வந்து எம்மொடு வாதம் செய்ய வருக எனலும், முன்னம் பதிகம் படித்த அன்பர், புத்தர் தலைவனாகிய சாரிபுத்தனோடு வாதம் மேற்கொண்டார். 'உங்கள் தலைவனும் பொருளும் உரைக்க' என்றார். அவன் தங்கள் சமயம் கணபங்கம் என்னும் நிலையாமையை உணர்த்துவது, தானம், தவம், யோகம் மூன்றையும் உணர்த்தி, அவற்றின் பயனாக உதிக்கும் ஞானத்தால் பேரின்ப முத்தி பெற்றவன். தங்கள் பரமன், உரு, வேதனை, குறிப்பு, செய்கை, ஞானம் என்ற ஐந்து கந்தமும் அழிதலே வீடுபேறு, பஞ்சகந்தம் கெட, பரமன் முத்தியில் கலந்துளன், அவனுக்குத்தான் வழிபாடு, பரமன் பொருள்களைப் பொதுவும் சிறப்புமாக உணர்கிறான், மற்றவருக்கும் தெரிக்கிறான் என்று கூறியபோது அன்பர், 'நீ கூறிய தலைவனும் பொருளும் குறை உடையன' என்று எடுத்துக் காட்டி, அவனை வெல்கிறார். தோற்ற புத்தர் சண்பைத் திருமறையோர் சேவடிக்குச் சென்று தாழ்ந்தார். இப்பகுதியானது சமய வரலாற்றில் சிறப்புடையது. சேக்கிழார் புத்த சமயக் கொள்கைகளை எடுத்துக் கூறி மறுத்தலினால், அடுத்த நூற்றாண்டில் அருணந்தி சிவாசாரியர் சித்தி பரபக்கம் செய்து பௌத்தம் நான்குவகை என்று கூறி, அவருள் சௌத்திராந்திகத்தை மறுக்கும்போது, சேக்கிழார் கருத்தைத் தழுவிக் கூறுவது ஒப்புநோக்கத்தக்கது.

ஆனால் சமணத்தின் நிலைமை இவ்வளவு சுருங்கியதன்று. இன்னும் விரிந்த நிலையில் பல இடங்களில் இதைப் பேசக் காண்கிறோம். சிறப்பாக அறிந்த செய்திகள் இரண்டு. ஒன்று

அப்பர் சுவாமிகள் சமண் சமயம் சென்று திலகவதியார் இடை யீட்டால் சூலைநோய் மடுத்துத் தடுத்தாட் கொள்ளப்பட்ட செய்தி. மற்றொன்று, மதுரையில் சம்பந்தர் சைனத்தை வென்று சைவ ஒளி விளங்கச் செய்தது. ஆனால் பெரிய புராணத்தில் அவையன்றிப் பின்னும் பல செய்திகள் உள்ளன. கருநாட மன்னனாகிய களப்பிரர் ஆட்சியில் துன்புற்ற தண்டியடிகள் வரலாறு, நமிநந்தி அடிகள் நீரால் விளக்கெரிக்க நேர்ந்த வரலாறு, பழையாறையில் சமணர் சிவாலயத்தை மூடிவைத்த வரலாறு, திருவோத்தூரில் காய்க்காத ஆண்பனைகளைக் கண்டு சமணர் சிவனடியாரைப் பழித்த செய்தி என்பன குறிப்பிடலாம். சேதி நாட்டில் மெய்ப்பொருள் நாயனாரிடத்து வஞ்சத்தால் தன் கருத்தே முற்றுவித்த முத்தநாதனும் களப்பிரர் வழி வந்தவனா யிருத்தல் கூடும். இந்நிகழ்ச்சிகளைக் குறித்து முறையே சில சொற்கள் சொல்லுவோம்.

அப்பர் சுவாமிகளின் இளமைப் பருவத்தில் காஞ்சியில் அரசு புரிந்த மன்னன் மகேந்திரவர்மன். அவன் சைனனாய் இருந்த அப்போது அப்பருக்குத் தீங்கு விளைத்தமை, பிறகு சைவம் தழுவிச் சிவாலயங்கள் அமைத்தமை முதலியன வரலாற்றுச் செய்திகள். அவன் காலத்தில் அப்பர் சமணம் புகுந்து அதில் பெரும் பதவி வகித்தார். அப்போது புத்தரில் ஒரு பிரிவினரான தேரரையும் வென்றார். பின்னர் தமக்கையின் இடையீட்டால் சைவத்தில் புகுந்து திருநாவுக்கரசராகித் தேவாரப் பதிகங்கள் பாடி முத்தி அடைந்தார். இவர் சைவ சமயத்துக்குத் திரும்பிய பிறகு சமணர் செய்த துன்பங்களைச் சேக்கிழார் விரித்துச் சொல்கிறார். 'நின்றுண்பார் என்னை நினையச் சொன்ன வாச கமெல்லாம் மறந்தோமன்றே' என்பது முதலான சொற்களால் அப்பர் தாம் சமண் சமயம் புகுந்து மீண்ட செய்தியைக் குறிக் கிறார். அவருடைய வாழ்க்கையில் மற்றொரு செய்தி குறிப்பிடத் தக்கது. ஆவடுதுறை பணிந்து பழையாறை எய்தினார். அங்கு வடதளியில் மன்னும் சிவபெருமானைக் கண்டுவணங்க வேண்டும் என்று போனசமயம், கோயிலைச் சமணர் மூடியிருந்தார்கள். பெருமானை வெளிப்படுத்தி வணங்கியன்றிப் போகேன் என்று அங்கு அமுது செய்யாது (உண்ணாவிரதம்) இருந்தார். சிவ பெருமானுடைய அருளால் அரசன் நிலைமையை உணர்ந்து சமணரைப்போக்கி விட்டுக் கோயிலை வெளிப்படுத்தி அப்பர் தரிசிக்குமாறு செய்தான்.

சம்பந்தர் மதுரையில் சைனரோடு வாதிட்டு வென்றதும், அனல்வாதம் புனல்வாதங்களில் வென்றதும் நன்கறிந்த செய்திகள். அவற்றை இங்கு விரிக்கவில்லை. அவர் பின்னர் தொண்டை நாடு சென்றபோது திருவோத்தூர் பணிந்தார். அவ்வூரில் ஓர் அடியவர் வளர்த்த பனைகளெல்லாம் ஆண்பனைகளாகிக் காய் இல்லாதிருந்தன. அதைக்கண்ட அயலுள்ள சமணர் அவரைப் பொங்குநகை செய்து இழித்துரைத்தார். அவர் சம்பந்தரிடம் முறையிட, சம்பந்தர் 'குரும்பை ஆண்பனை ஈன் குலை ஓத்தூர்' என்று தம் பதிகத்தில் பாடிய மாத்திரத்திலே, பனைகள் எல்லாம் காய்த்தன என்பது வரலாறு.

காலத்தால் இவர்களுக்கு முந்திய நாயன்மார் செய்திகள் பல உள்ளன. மூர்த்தி நாயனார் வரலாற்றை முதலில் குறிப்பிடுவோம். இவர் பாண்டி நாட்டில் களப்பிரர் காலத்தில் வாழ்ந்திருந்தார் என்று தெரிகிறது. இவர் ஆலவாயில் எந்தைக்குச் சந்தனக்காப்புத் திருப்பணி செய்து வந்த நாளில் களப்பிரர் மதுரைமீது படையெடுத்து வந்து கைப்பற்றினர். வடுகக் கருநாடர் மன்னன் என்று குறிப்பிடுகிறார். அவன் வந்து வலிந்து நிலம் கொண்டான் என்கிறார்:

கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்
மானப் படைமன் னன்வலிந்து நிலங்கொள் வானாய்
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திரண்ட
சேனைக் கடலுங் கொடுதென்திசை நோக்கி வந்தான்.

தாழுஞ் சமண்கை யர்தவத்தைமெய் யென்று சார்ந்து
வீழுங் கொடியோ னதுவன்றியும் வெய்ய முன்னைச்
சூழும் வினையா லரவஞ்சுடர்த் திங்க ளோடும்
வாழுஞ் சடையா னடியாரையும் வன்மை செய்வான்.

இவன் மூர்த்தி நாயனாருக்குச் சந்தனக்காப்புத் தேடிக் கொள்ளும் துறையும் அடைத்தான். மூர்த்தியார் சிந்தை நொந்து தம் முழங்கையால் சந்தனக்கல்லில் தேய்த்தபோது, இறைவன் தோன்றி அருள் செய்தான் என்று புராணம் சொல்லுகிறது. இது மதுரையில் களப்பிரர் ஆட்சிக் காலத்தே நிகழ்ந்திருத்தல் கூடும்; எனில் கி.பி. 550க்கு முற்பட்ட உண்மைச் சம்பவமாகலாம்.

அக்காலத்தில் சோழநாட்டில் சோழர் வலி குன்றியிருந்தார்கள். சைனர் ஆதிக்கம் வலிமை பெற்றிருந்தது. தண்டிஅடிகள் அப்போது திருவாரூரில் பிறந்து திருக்குளம் தோண்டும்

தொண்டு செய்தார். இவர் குருடர். அங்கிருந்த சமணர் இவர் தொண்டைத் தடுத்து இவருக்கு ஊறு செய்தார்கள் என்று அறிகிறோம். அரசன் திருவருளால் இது உணர்த்தப்பெற்று இவருக்கு வந்த இடையூற்றையெல்லாம் நீக்கினான் என்பது புராணம்.

நமிநந்தி அடிகள் என்பவர் முன்குறிப்பிட்ட காலங்களில் வாழ்ந்தவர் போலும். இவர் ஆரூர்ப்பெருமான் சந்நிதியில் நெய்த் தீபம் இட்டு வந்தார். ஒருநாள் நெய்பெறும் நோக்குடன் ஒரு மனையில் புக அது அமணர் மனை ஆகவும், அங்கிருந்தார், 'கையில் விளங்கக் கனலுடையார் தமக்கு விளக்கு மிகை காணும், நெய் இங்கு இல்லை, விளக்கெரிப்பீராயில் நீரை முகந்து எரித் தல் செய்யும்' என்று பழித்தார்கள். திருவருள் துணை கொண்டு இவர் நீரால் திருவிளக்கு எரித்தார் என்பது புராணம்.

இவை யாவும் சேக்கிழார் காலத்துச் செய்திகளல்ல, அவருக்கு நெடுங்காலம் முற்பட்ட செய்திகள்.

## ஆசிரிய இயல்: சேக்கிழாரின் ஆசிரியத்தன்மை

மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழின் ஒரு பாடல் இங்கு கருதத்தக்கது.

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால் நன்னூ லாசிரியன்,
நகுபா சுரமுத லுரைசெய்தலினால் நவிலுரை யாசிரியன்,
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரியன், இவை நிகழ்தொறும் நிகழ்தோறும்
ஆடிய ஞானத் திறனுறலான் ஞானா சிரியனும் நீஎன்று
ஆன்றோர் பலரும் புகழ்ப்படுபவ, அகிலமெலாஞ் சென்று
கூடிய புகழ்சால் குன்றத்தூரன், கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல, நாவல, கொட்டுக சப்பாணி.

இங்கு, புலவர் சேக்கிழாரை நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர் ஞானாசிரியர் என்ற நான்கு நிலைகளில் வைத்துக் காட்டுகிறார். இவற்றை விளக்கி உரைப்பதே இப்பகுதியின் நோக்கம்.

### நூலாசிரியர்

நூலாசிரியர் என்பது நன்கு அறிந்தது. திருத்தொண்டத் தொகையில் சுருக்கமாய்க் குறிப்பிட்ட பெயரையும் திருத்

தொண்டர் திருவந்தாதியில் சொல்லிய அறுபத்து மூவருடைய பதி தேசம் மரபு செயல் ஆகியவற்றையும் மட்டும் துணையாகக் கொண்டு, சேக்கிழார் தம்முடைய விரிவான வரலாற்றறிவினாலும் தல யாத்திரைகளினாலும் நாலாயிரத்துக்கு மேற்பட்ட பாடல் கொண்ட புராணமாகப் பாடினார். தேவாரம் பாடிய மூவர் வரலாறுகளில் அவர்களுடைய தேவாரப் பதிகங்களை நன்கு பயின்று, அவர்கள் செய்த தல யாத்திரையை மனத்தில் நன்கு வரையறை செய்துகொண்டு, ஒவ்வொரு தலமாக, யாத்திரையில் பிடிக்கும் தூரம் நேரம் முதலியவற்றையும் திட்டம் செய்து இவர் பாடியிருப்பது விரிநூல் என்ற நூலுக்கு எவ்வளவு பொருத்த மானது என்பதைக் காட்டும். போக்குவரத்துச் சாதனங்களும் நெறிகளும் குறைவாயிருந்த 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், இவர் இச்செய்திகளைச் சிறிதும் பிறழ்ச்சியில்லாது கூறியிருப்பது ஓர் அரிய சாதனை. இது மட்டுமல்ல; அடியவர் ஒவ்வொருவரும் ஒரே தலத்துக்குப் பலமுறை சென்று பல பதிகம் பாடியிருக்கிறார்கள். அவற்றை நம் ஆசிரியர் முரணில்லாமல் பதிகங்களின் முதற்குறிப்பைத் தந்து, அவசியமானபோது முக்கிய மான பாடலையும் வரலாற்றுப் பொருத்தமுடைய பாடலையும் எடுத்துக் குறிப்பிட்டு வரலாற்றையும் கூறி, சில இடங்களில் இறைவன் இறைவி திருப்பெயரையும் சொல்லி, புராணம் செய்திருப்பது மிகவும் அரிய சாதனை. அன்றியும், முன்னே வர லாற்றறிவு என்ற தலைப்பில் நாம் காட்டியுள்ளபடி, அக்கால சரித்திர முழுமையும், முன்வந்த சரித்திரச் செய்திகளையும், விடாமல் கூறியிருக்கிறார். இது இன்றுவரை கிடைத்துள்ள கல்வெட்டுச் சான்றுகளோடு ஒப்புநோக்கி ஆராய்கையில் பொருத்தமுடையதாகவே காண்கிறது. மேலும், ஒரு நாயனா ரைக் கூறும்போது அவருக்கு உடன்காலத்தில் இருந்த மற்றவர் களையும் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் குறிப்பிட்டிருப்பது ஆராய்ச்சியாளருக்குப் பெருவிருந்தாயும் பெருந்துணையாயும் பயன்படுகிறது. தவிர, காப்பியத்தன்மை என்ற தலைப்பின் கீழ் பலபடியாகத் தந்துள்ள குறிப்புக்களால், இவர் ஒரு பெருங் காப்பியம் பாடிய பெருநூலாசிரியர் என்பது எளிதில் விளங்கும்.

அம்பலவாணர் 'உலகெலாம்' என்று எடுத்துக்கொடுத்த தொடரில் தொடங்கி, அதே தொடரைக் கொண்டு நூலை முடிக்கிறார் என்று ஆன்றோர் எடுத்துக்காட்டுவர்:

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

என்பது நூல் இறுதிப்பாட்டு. அச்சிட்ட பெரியபுராணப் பதிப்புக் களின் இறுதியில் காணப்படும் 'வையம் நீடுக மாமழை மன்னுக' என்ற பாடல் பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்ததாகும். அன்றியும் சேக்கிழார் தம் நூலில் உலகெலாம் என்ற தொடரை மொத்தம் 15 முறை குறிப்பிடுகிறார் என்றும் எண்ணிச் சொல்லப்பட் டுள்ளது.

இனி, சேக்கிழார் பாடிய பாடல் 4253 என்று உமாபதி செய்த புராணத்தில் எண்ணிச் சொல்லப்பட்டுள்ளது. அதன்படி, நூலின் மத்தி என்று சொல்லத்தக்கது, 2126; 2119ஆம் பாடலில் சேக்கிழார் அதே உலகெலாம் என்ற தொடரை வைத்துப் பாடி யிருக்கிறார் (திருஞானசம்பந்தர் புராணம் 216):

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்று
ஆதி யார்அரு ளாதலில் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்.

என்ற பாடலில் உலகெலாம் என்ற தொடரை இறுதியில் அமைத்து, இறைவன் தந்த தொடரை நூலின் ஆதியும் நடுவும் அந்தமுமாக வைத்துப் பாடினார் என்று சொல்வர். பன்னிரண்டு திருமுறைகளும் ஓம் என்ற பிரணவத்தின் சொரூபம் என்பது சைவர் மதம். இதற்கு ஆதாரமாகத் திருமுறைகளின் முதலும் கடையும் குறிப்பிடப்படும். முதல் திருமுறையின் முதல் தொடர் 'தோடுடைய'; இதன் முதலெழுத்து தோ; அதாவது ஓகாரம் ஏறிய தகரமெய்; பன்னிரண்டாம் திருமுறையின் இறுதித் தொடர் உலகெலாம். இதன் முடிவெழுத்து ம். எனவே, திருமுறைத் தொடக்கமும் ஈறும் ஓம் என்று ஆதல் காணத்தக்கது.

**உரையாசிரியர்**

அடுத்து உரையாசிரியர் என்ற தன்மை. இதை விரித்துச் சொன்னால் நூல் இடம் போதாது. சமயாசாரியருடைய அருட்பாக்கள் யாவும் பாசுரம் எனக் கூறுதல் சைவத்திலும் வைணவத்திலும் ஒரு மரபு. திருமுகப்பாசுரம், மதிமலிபுரிசை என்னும் பாசுரம் என்ற வழக்குக்களையும் இங்கு கருதுக. வேறு

பொருளிலும் இச்சொல் வழங்கும். (எல்லாப் பாசுரத்தானும் தலைமகளை ஆற்றுவிக்கும்-இறையனார் அகப்பொருள் உரை.) சிறப்பாகச் சைவமரபில் இது, திருஞானசம்பந்தர் சமண ரொடு மதுரையில் வாதிட்டபோது பாடிய 'வாழ்க அந்தணர்' என்ற தொடக்கமுடைய பாடலுக்கு மட்டும் உரிய சிறப்புப் பெயராகும். இந்தத் தொடக்கமுடைய பதிகம் முழுமைக்கும் சேக்கிழார் சம்பந்தர் புராணத்தில் விரிவுரை பாடியிருக்கிறார். இவ்வுரை 24 பாடல் கொண்டது. முதல் பாடலில் உள்ள ஒவ் வொரு தொடராக எடுத்து 4 பாடல்களில் உரை கூறுகிறார். இதுபோலவே மற்றவையும். இவர் உரையால் அந்தத் தொடர் களை எப்படியெப்படிப் பிரிக்கவேண்டும் என்பது நன்கு தெளியப்படும். வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் ஒரு தொடர்; வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக; ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே சூழ்க; வையகமும் துயர் தீர்க. இவற்றின் பொருளையும் இவர் தொடர்புபடுத்திக் காட்டுவது அறியத் தக்கது. முதல் தொடரின் பொருள் உலகம் இன்புறச் சங்கரர்க்கு வேள்விகளும் அர்ச்சனை வழிபாடும் செய்யத்தக்கவை; வேள்வி யின் பயனாவது வீழ்புனல்; அர்ச்சனை நல்லுறுப்பு ஆதலால் ஆளும் மன்னனை வாழ்த்தியது; ஆழ்க தீயது என்றது அயல் நெறி வீழ்க என்றவாறு; எல்லாம் அரன் நாமமே சூழ்க என்றது உயிர் யாவையும் அஞ்செழுத்தோதி வளர்க என்றவாறு; வைய கமும் துயர் தீர்க என்பது இகபரத்தில் உலகத்தவருடைய துயர் நீங்க வேண்டும் என்று ஞானசம்பந்தர் மொழிந்தார் - என்று சேக்கிழார் முடிக்கிறார்.

அன்றியும், இத்தனை உரையையும் இவர் செய்யுளாலேயே சொல்லிக் காட்டுகிறார். சொல்லி முடித்து இவர் பணிவோடு கூறும் சொற்கள் நெஞ்சை உருக்குவன:

வெறியார் பொழிற்சண் பையர்வேந்தர்மெய்ப் பாசு ரத்தைக்
குறிஏ றியஎல்லை அறிந்துகும் பிட்டேன் அல்லேன்
சிறியேன் அறிவுக் கவர்தந்திருப் பாதந் தந்த
நெறியே சிறிதுயான் அறிநீர்மைகும் பிட்டேன் அன்பால்.

இங்கு, பாசுரம் உரை செய்தேன் என்று இவர் சொல்லவில்லை, கும்பிட்டேன் என்று சொல்கிறார் என்பது காணத்தக்கது.

இந்த நிலையையே 'பாசுரம் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்' என்று பிள்ளைத்தமிழ்ப் பாடல் குறிப்பிடு

கிறது. ஆனால் திருப்பாசுரம் மட்டும் அல்ல; வேறு பல பாடல்களுக்குக் குறிப்புரையும் சேக்கிழார் தருகிறார். சம்பந்தர் பாடிய முதல் பாடலான 'தோடுடைய செவியன்' என்ற பாடலைக் குறிப்பிடும்போது, "மல்லல் நெடுந்தமிழால்... தம் பாடல் பரமர்பால்... செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து.... தோடுடைய செவியன் எனும் திருப்பதிகம் சாற்றி எம்மையிது செய்தபிரான் இவனன்றே என இசைத்தார்" என்கிறார். அடுத்த பாடலில், பதிகத்தின் எட்டாம் பாடலில் சம்பந்தர் இராவணனுக்குச் செய்த மறக்கருணையை விளக்கி,

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட,
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்.

என்று, மறமும் கருணை என்று காட்டுகிறார்.

மற்றும் ஓர் இடம். சம்பந்தர் பாண்டியனைச் சைவனாக்கி, மதுரையில் தங்கியிருக்கிறார். அச்சமயம் இவருடைய தந்தை சீகாழியிலிருந்து இவரைக் காண எண்ணி மதுரையடைந்து சம்பந்தரைக் கண்டதும், இவர் அவரை எதிர் தொழுகிறார். அப்போது பாடிய பாடல், மிகவும் பிரசித்தமான பாடல்:

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை;
கண்ணில் நல்லஃதுறும், கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

என்பது. இதனுடைய குறிப்பு இன்னது என்பதைச் சேக்கிழாரே நமக்கு உணர்த்துகிறார். இது சம்பந்தர் கழுமலத்தில் (சீகாழியில்) உள்ள பெருமானை அங்கிருந்து பாடியதன்று; மதுரையிலிருந்து நினைந்து பாடியது; 'திருத்தோணி அமர்ந்தருளிப் பவபாசம் அறுத்தவர் தம் பாதங்கள் நினைவுற்றார்'; 'என்னை அறியாப் பருவத்தே எடுத்து அருள்செய்த பெருந்தகை ஞானப் பாலூட்டின பிராட்டியுடன் இருந்ததே!' என்று வினாவாகச் சொல்கிறார்.

இருந்தவத்தோர் அவர்முன்னே இணைமலர்க்கை குவித்தருளி
"அருந்தவத்தீர்! எனையறியாப் பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை எம் பெருமாட்டி யுடன் இருந்த தே" என்று
பொருந்துபுகழ் புகலியின்மேல் திருப்பதிகம் போற்றிசைத்தார்.

இசைத்த பதிகமே 'மண்ணில் நல்ல வண்ணம்' என்பது. 'எனை அறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை' என்று சேக்கிழார் கூறுவது, இதே பதிகத்தின் இரண்டாம் பாடலையும் தழுவி என்பதும் இங்கு உணரத்தக்கது:

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே.

நிகழ்ச்சிகளைக் காரண காரியத் தொடர்புகளோடு விளக்குதல் உரையாசிரியருடைய திறன்களில் ஒன்று. இதையும் சேக்கிழாரிடம் காண்கிறோம். திருமூலர், தம் தவத்துக்குப் பல இடங்கள் இருக்க காவிரிக் கரையை நாடித் திருவாவடுதுறை அடைவானேன் என்ற கேள்வியைக் கேட்டுச் சேக்கிழார் அதற்கு விடையும் சொல்கிறார்: காவிரியாறு தன் நீர் முழுமையும் கடலுக்குக் கொண்டு செல்ல எண்ணவில்லை: காரணம், அக்கடலானது பரமேசுவரன் உண்பதற்கு நஞ்சு அளித்தது. ஆகவே காவிரி தன் நீரால் மேதினிக்கு வளம் நிறைக்கிறது, கடல் வயிறு நிறைக்கவில்லை. இந்தப் பக்தியை உணர்ந்தே திருமூலர் காவிரியின் கரையைத் தேர்ந்துகொண்டார்:

தடநிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்,
'அடல்விடையின் மேல்வருவார் அமுதுசெய அஞ்சாதே
விடமளித்தது' எனக்கருதி, மேதினிக்கு வளம்நிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரைஅணைந்தார்.

சம்பந்தர் முதலாவது பாடத் தொடங்கியபோது, தோடுடைய செவியன் என்று தொடங்கினார்; இதை 'எல்லையிலா மறை முதல் மெய்யுடனெடுத்த எழுதுமறை மல்லல் நெடுந்தமிழ்' என்று, தோ என்ற ஒலியில் அடங்கிய தகரமெய்யும் பிரணவ முதலும் கூடிய ஒலி என்று சேக்கிழார் எடுத்துக்காட்டுகிறார். இதே போலவே, சம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் பலவும், எவை எந்தவிடத்தில் பாடப்பட்டன என்பதைச் சேக்கிழார் கூறாவிட்டால் அறிய முடியாது. நமசிவாயத் திருப்பதிகம் (துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்) முந்நூல் அணிவித்தபோது; மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே - முயலகன் நோய் தீர்த்தபோது; அவ்வினைக்கிவ்வினை - குளிர் சுரம் நீக்கிய போது; இவளுண் மெலிவே - மருகலில் வணிகப் பெண்ணைக்

குறித்தது - என்பன முதலான பலவும் சேக்கிழார் திருமுறைக்குத் தரும் விளக்கங்களாம். இப்படியே அப்பர் பதிகங்களிலும் சுந்தரர் பதிகங்களிலும், சந்தர்ப்ப விளக்கம் சேக்கிழார் தரா விட்டால் அறிய வழியில்லை.

'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்பது எல்லோரும் நன்கறிந்த பாடல்; நீற்றறை அப்பருக்குக் குளிர்ந்திருந்த தன்மையை அவரே சொல்லிப் பாடியது. இதற்குச் சேக்கிழார் பொழிப்புரை கூறுகிறார்:

> வெய்யநீற் றறையதுதான் வீங்கிள வேனிற்பருவம்
> தைவருதண் தென்றலணை தன்கழுநீர்த் தடம்போன்று
> மெய்யொளிவெண் நிலவலர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
> ஐயர்திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே.

மதுரையில் தாம் சென்று தங்கிய மடத்தில் சமணர் இட்ட தீயை, 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று சம்பந்தர் பாடினார். 'பையவே சென்று' என்ற சொற்களைச் சேக்கிழார் காரணத்தோடு விளக்கியுரைக்கிறார்.

> பாண்டிமா தேவியார் தமது பொற்பில்
> பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்,
> ஆண்தகையார் குலச்சிறையார் அன்பினாலும்,
> அரசன்பால் அபராதம் உறுதலாலும்,
>
> மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்,
> வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
> தீண்டியிடப் பேறுடைய னாதலாலும்,
> தீப்பிணியைப் 'பையவே செல்க' என்றார். 2608

இன்று திருநாவுக்கரசரை நாடெல்லாம் அப்பர் சுவாமிகள் என்றே கொண்டாடுகிறது. அப்பர் என்ற ஆட்சி, தேவாரத்தில் யாரும் சொல்லவில்லை. சேக்கிழாரே இப்பெயர் தோன்றிய வரலாறு சொல்கிறார். ஆண்ட அரசு எழுந்தருளக் கேட்டருளி ஆளுடைய பிள்ளையாரும் "தம்மைப் பணிந்தவர் தம் கரங்கள் பற்றி ...... 'அப்பரே' என அவரும் 'அடியேன்' என்றார்." இதுமுதல் திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பெயர் நிலைத்தது. தம் தந்தையான சிவபாத இருதயரைச் சம்பந்தர் அப்பரே என்று எங்கேனும் விளித்ததாகக் குறிப்பு இல்லை; அருந்தவத்தீர் என்றே ஒருமுறை சொல்கிறார்.

மறைக்காட்டில் சென்று சுந்தரரும் சேரமானும் வழிபடுகிறார்கள். சுந்தரர் 'யாழைப் பழித்து' என்ற பதிகம் பாடினார். சேரமான் 'சிறந்த அந்தாதியிற் சிறப்பித்தனவேயோதித் திளைத்தெழுந்தார்'. இதனால் அருட்சேரர், பொன்வண்ணத்தந்தாதியில் இரண்டிடங்களில் திருமறைக்காட்டைச் சிறப்பித்துப் பாடியிருக்கும் காரணம் புலப்படுகிறது (37, 47)*.

நமிநந்தியடிகள் புராணத்தில், சேக்கிழார், 'தொண்டர்க் காணி எனும் பேறு திருநாவுக்கரசரால் விளம்பப்பெற்ற பெருமையினார்' என்று கூறுகிறார். இது அப்பர் தேவாரத்தில் ஆராய்ந்து அடித்தொண்டர் ஆணிப்பொன் என்று நமிநந்தியைக் குறிப்பிட்டதை உள்ளத்துக்கொண்டது.

சேக்கிழாருடைய சோழநாட்டுப் பற்றையும் உரையாசிரியர் தன்மையையும் எடுத்துக்காட்டவல்ல ஒரு நயம் மிக்க குறிப்பை இங்கு காணலாம். மங்கையர்க்கரசியார் புராணத்தின் முதல் பாடலில், சம்பந்தருடைய திருவாலவாய்த் தேவாரம் 'மங்கையர்க்கரசி' என்று தொடங்கும், முதல் பாட்டின் தொடர்களைத் தம்முடைய சோழர் பக்தி தோன்ற, விரித்துக் கொண்டே போகிறார். மங்கையர்க்கரசி என்பது சம்பந்தர் தேவாரம்; மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம் என்று சேக்கிழார் வாக்கு. வளவர்கோன் பாவை - சம்பந்தர்; வளவர் திருக்குலக் கொழுந்து - சேக்கிழார். வரி வளைக்கை மட மானி - வளைக்கை மானி. பங்கயச் செல்வி - செங்கமலத் திருமடந்தை. பாண்டிமா தேவி - கன்னிநாடாள் தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை - என்பன காணத்தக்கன.

### போதகாசிரியர்

'நீடிய பரசமயக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய் நிலையாற் போதகாசிரியன்' என்பது பாட்டு. பரசமயத்திலிருந்து மீட்ட நிலையைப் பல இடங்களில் காண்கிறோம். தம் தாளில் விழுந்த தம்பியாரைத் திலகவதியார், 'கோளில் பரசமயநெறிக் குழியில் விழுந்தறியாது, மூளும் அருந்துயருழந்தீர் எழுந்திரீர்' என்று கூற, 'கற்றை வேணியர் அருளே காணுமிது கழலடைந்தோர், பற்றறுப்பார் தமைப் பணிந்து பணிசெய்வீர்' என்று

* 'மறைந்த தமிழ் நூல்கள்' என்ற நூலில் சேரமான் மறைக்காட்டந்தாதியொன்று பாடினார், அது இறந்துபோயிற்று என்று அதன் ஆசிரியர் எழுதியிருப்பதன் பொருந்தாமை இதனால் நன்கு விளங்கும்.

உரைத்துத் திருநீற்றை அஞ்செழுந்தோதிக் கொடுத்தார். பின் வரலாறு நாம் அறிவோம். அடுத்து, சம்பந்தர் சமணரை வாதில் வென்று, பாண்டிய மன்னனையும் நாட்டுமக்கள் அனைவரை யும் சைவம் சாருமாறு செய்த செய்தியும் நன்கறிந்தது.

பரசமயத்தாரோடு விரிவான தர்க்கவாதம் செய்தநிலை, புத்த மங்கையில் புத்த சமயத்தாரோடு செய்த வாதம். சம்பந்த சரணாலயர் பாடிய சம்பந்தர் பதிகத்தால் புத்த நந்தியின்மீது இடி வீழ்ந்து அவன் இறந்தான். மற்றைப் புத்தர்கள் 'எம்மோ டெதிர்ந்து பொருள் பேசுவதற்கிசைவது' என்று கேட்கவும், சரணாலயர் அவர்கள் தலைவனோடு வாது செய்கிறார். செய்து அவர்களை வெல்கிறார். சைவசமய உண்மைப் பொருளைச் சம்பந்தர் உபதேசிக்க அவர்கள் கேட்டுச் சைவசமயம் தழுவு கிறார்கள்.

பின்னர், குருடரான தண்டியடிகள் வரலாற்றில், அவருக்குத் துன்பம் இழைத்த சமணர் ஓட்டமெடுக்கும்படி இறையருளால் அவருக்குக் கண் தெரியவும், அரசன் உண்மையுணர்ந்து அவர் களை வெருட்டிவிடுகிறான். நமிநந்தி சமணர் கொடுமையால் நீரால் விளக்கெரிக்கிறார். சாக்கியர் புத்தர் கொடுமையால் கல்லை மலராக எறிந்து வழிபடுகிறார். இவ்வாறு காணும் செய்திகள் பல. இவற்றுள், (புத்தரோடு வாதம் செய்த இடத்துச் சேக்கிழார் சம்பந்தர் கூற்றாகக் கூறியுள்ள கருத்துக்களே சேக்கிழாரைப் போதகாசிரியர் என்று நிலை நாட்டப் போதியன.)

### ஞானாசிரியர்

சமய தத்துவங்கள் என்ற தலைப்பில் இவர் போதிக்கும் ஞானம் முழுமையும் ஓரளவு தொகுத்துச் சொல்லப்பட்டது. ஞானாசாரியரான மூவருடைய வாழ்க்கையையும் ஏனைய திருமூலர் அம்மையார் போன்றோர் வாழ்க்கையையும் விரித் துரைக்கும் புராணமும் ஒரு சிறந்த ஞானநூலே. ஞான உப தேசத்தை நூலெங்குமே காணலாம். அட்டாங்க பஞ்சாங்க மாக முன்பு முறைமையினால் வணங்கி; திருஅடையாள மாலை எவ்வுலகோரும் ஏத்தத் தொழுது தாம் பூண்டார்; அண்டர் பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதிப் புகழ்ச்சோழர் மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்; ஆலவாயில் எந்தைக்கணி சந்தனக் காப்பிடை என்றும் முட்டா அந்தச் செயல்; காண்டலும் தொழுது வீழ்ந்து உடன்எழுந்து கரை

யிலன்பு என்பினை உருகக் ஆய்ந்தமெய்ப்பொருள் நீறென வளர்க்கும் அக்காப்பு; மாலையாமம் புலர்வுறும் வைகறை வேலை செய்வினை முற்றி வெண்ணீறணி கோலமேனியராய்க் கைம்மலர் குவித்து ஏல அஞ்செழுத்து ஓதி எழுந்தனர்; வேணித் திருமுடிமேல் திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும்; கங்கைமுதற் புனிதமாய பெருந்தீர்த்தம் மாமகந்தானாடுகற்கு வந்து வழிபடும் கோயில்; மனத்தின் செய்கை அரனடிப் போதுக்காக்கி ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக்காக்கித் தாங்கு கைத்தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்காக - என்பது முதலான குறிப்புக்கள் சரியையைத் தெரிவிக்கும். திருநீற்றின் வகைகள், செய்யும் முறை முதலியன, முழு நீறு பூசிய முனிவர் புராணத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருத்தலும் காண்க.

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டுகாதலின் ஆசனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையில் அமுதுசெய்ய அளித்துளார்.

என்ற பாடல் முதலான அடியார் வழிபாட்டு முறைகளும் இங்கு குறிப்பிடத்தக்கன.

கொய்த பன்மலர், கம்பை மாநதியில்
குலவு மஞ்சனம், நிலவுமெய்ப் பூச்சு,
நெய்த ருங்கொழுந் தூப தீபங்கள்,
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய் தரும்படி வேண்டின எல்லாம்
வேண்டும் போதினில் உதவ,மெய்ப் பூசை
எய்த ஆகம விதியெலாம் செய்தாள் –
உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி. 1142

வாயிலார் வரலாறு, முப்போதுந் திருமேனி தீண்டுவார் வரலாறு முதலான இடங்களில் குறிப்பிடுவன - யாவையும் கிரியைப் பகுதியாகும்.

திருமூலர் வரலாற்றிலும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணத்திலும் யோக நெறியைக் குறிப்பிடுகிறார்.

அன்றியும் நூலெங்கும் சிவனடியார் வரலாறுகளைச் சொல்லுமிடத்து, சரியை முதலான நெறிகளில் நின்றார் அனை வரும் முடிவான பொருள் சிவன்கழலே எனத் துணிந்து பிற

பற்றுக்களைக் களைந்து வாழ்ந்து சிவபெருமான் அடி நிழல் அடைந்தார்கள் என்றே உபதேசிக்கிறார். இவ்வாறு சொல்லு மிடமெங்கும் பொருள் ஞானமே.

மனிதப் பிறவியின் பயன், இறைவனை உள்ளம் உருகி வழி படுதல்; அவனடியாருக்குத் தொண்டு புரிதல் - என்ற பேருண்மை களைப் பெரியபுராணம் உணர்த்தும் முடிவான பொருள். 'மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்' என்ற பாடல் இதைச் சுட்டுவது. இக்கருத்தைக் கூறவும் என்பிலிருந்து பூம்பாவை உயிர் பெற்றுவந்தாள் என்று ஆசிரியர் கூறுகிறார். அமர்நீதி நாயனார், இளையான் குடிமாறர் ஆகியோர் புராணங்களிலும் இதுவே பயன் என்பதைச் சேக்கிழார் பெரிதும் வலியுறுத்திச் சொல்கிறார். மனிதப் பிறவியின் பயன், இறைவன் ஒருவன் உளன் என்பதை உணர்ந்து, அவன் தாள்களில் சரண்புகுந்து, அடியார் பணியை அரன் பணியாகவே செய்தல் என்பதே பெரியபுராணம் போதிக்கும் முடிவான பொருள். ஒவ்வொரு வரலாறும் வெவ் வேறு கோணங்களிலிருந்து இந்த ஒரே உணர்வை - பக்தியினால் முதிர்ந்த ஞானத்தை - போதிக்கின்றது.

## திருமுறைச் செய்திகள்

நாயன்மார் வரலாறுகளைத் திருத்தொண்டர் புராண மாகப் பாடிய சேக்கிழார் தேவார அடங்கன் முறையை நன்கு கற்றறிந்து, அதன் மூலம் விளக்கமாகும் அடியார் வரலாறு களையும், தலச் செய்திகளையும், தலப்பதிகங்களையும் நன்கு உணர்ந்திருந்தார். அடியவர்களில் எழுவர் திருமுறைப்பாடல் பாடியிருக்கிறார்கள். காலமுறைப்படி சொல்வதானால், அவர் களைத் திருமூலர், காரைக்காலம்மையார், சம்பந்தர், அப்பர், ஐயடிகள் காடவர்கோன், சுந்தரர், சேரமான் பெருமாள் என்ற வரிசையில் சொல்லலாம்.

திருமூலரைக் கூறும்போது, 'ஒன்றவன்தான்' என எடுத்துத் திருமந்திரமாலை தமிழ் மூவாயிரம் சாத்தினர் என்று சொல் வது, திருமந்திர நூலுக்கு ஒத்துள்ளது. அச்சில் உள்ள 'ஐந்து கரத்தனை' என்ற விநாயகர் காப்பு, பிற்காலப் பாடலாகும்.

காரைக்காலம்மையார் வரலாற்றில், நாட்டில் வழங்கும் வரலாற்றையொட்டியே அம்மை என்ற பெயர்க்காரணம் சொல் லியிருக்கிறார். அம்மையார் தம் பாடல்களில் மூன்று முறை

தம்மைக் காரைக்காற் பேய் என்று சொல்லியதைத் தழுவியே ஆசிரியரும் அவர் பேய் வடிவம் பூண்ட வரலாற்றை அமைக் கிறார். அம்மையார் நூல்களை இரட்டைமாலை, அந்தாதி, கொங்கை திரங்கி என்ற மூத்த திருப்பதிகம், எட்டியிலவம் ஈகை என்ற திருப்பதிகம் என்று இவர் கூறியுள்ளபடியே நூல் களும் உள்ளன. 'அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பனிடம்' என்று அம்மையார் பாடியதை அப்படியே எடுத்து, அண்டமுற நிமிர்ந்தாடும் கோலம்' என்று சேக்கிழார் புராணத்தில் கூறுகிறார்.

ஐயடிகள் வண்தமிழின் மொழி வெண்பா ஓரொன்றா வழுத்துவார் என்கிறார்; அவர் பாடிய நூல் க்ஷேத்திரத் திரு வெண்பா; சில பாடல்களே உள்ளன.

சேரமான் சுந்தரருடைய தோழர். கழற்றிற்றறிவார் என்ற பெயரால் இவர் புராணம் சொல்லப்படும். இவர் தில்லைத் திருக்கூத்தைத் தரிசித்துப் பொன்வண்ணத்தந்தாதி பாடினார். சுந்தரரைக் கண்டு உறவுபூண்டு ஆரூர் வழிபட்டுத் திருவாரூர் மும்மணிக்கோவை பாடினார், பின்னர் திருக்கயிலாய ஞான உலா பாடி, கயிலாயத்தில் பெருமான் திருமுன்பு அதை உரைத் தார்; இம்மூன்று நூல்களும் உள்ளன; வரலாற்றோடு பொருந் தியே உள்ளன.

இனி தேவாரம் பாடிய மூவரை நாம் ஆராய்வோம். இம் மூவர் பற்றியும் செய்திகள் மிக அதிகம்; செய்த தலயாத்திரை அதிகம்; நிகழ்த்திய அற்புதங்கள் அதிகம். உடன்பாடிய பதிகங் களும் பல. இத்தனையும் சேக்கிழார் மனத்துள் தொகுத்துக் கொண்டு, அமைவுபடுத்தித் தம் நூலைச் செய்கிறார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில், பித்தன் என்றே பாடுவாய் என்று இறைவன் சொல்கிறார். பித்தா பிறை சூடி பாடுகிறார். திருத்துறையூரில் தவநெறி வேண்டுகிறார், அதிகையில் பதியை மிதிக்காமல் படுத்துறங்கி, பெருமான் தாள் சூட்டப்பெற்று, தம்மானை அறியாத சாதியார் உளரே எனப்பாடுகிறார். பிறகு முறையாகத் தலயாத்திரை செய்து, தில்லை வழிபட்டு, சீகாழி வருகிறார். அங்கிருந்து சோழ நாட்டுத் தலங்கள் தரிசித்து, அவர் ஆரூரில் எந்தை இருப்பதும் ஆரூர் எம்மையும் ஆள்வரோ கேளீர் என்று கேட்டு, இறைவனைத் தோழமை பெறுகிறார். பரவையாரைக் காணுதல், பரவையார் திருமணம், பின்னர்

இறைவன் அடியெடுத்துக் கொடுக்க, தில்லை வாழந்தணர் என்ற பதிகம், இவ்வளவோடு தடுத்தாட்கொண்ட பகுதி முடிகிறது. இங்கு, சுந்தரர் வரலாறும், பதிகங்களின் அமைப்பும் தலமுறையும் ஒத்தியல்வது காணலாம்.

ஏயர்கோன் வரலாற்றில் சுந்தரர் சரிதம் தொடர்கிறது. குண்டையூர் நெல் பெறுதல், கோளிலியில் 'வாளன கண்மட வாள் வருந்தாமே' என்று பதிகம் பாடுதல், திருநாட்டியத்தான் குடியில் கோட்புலியைச் சிறப்பித்துப் பாடுதல், தம்மைச் சிங்கடி வனப்பகையப்பன் எனக்கூறிக் கொள்ளுதல், வலிவலப் பதிகத்தில் சம்பந்தர் அப்பர் பாடல்பெற்ற செய்தி, திருப் புகலூரில் பொன் பெற்றுத் தம்மையே புகழ்ந்திச்சை என்ற பதிகம் பாடுதல், பனையூர் முதலான தலங்களும் அங்கெல்லாம் பாடிய முறையும், திருப்பாச்சிலாச்சிரமம் சென்று பொன் வேண்டித் தாராமையால் இவர் அலாதில்லையோ பிரானார் என்று பாடி முடிவில் 'ஏசின அல்ல' என்று பாடவும் பொன் பெறுதல், திருப்பாண்டிக் கொடுமுடியில் நமசிவாயப் பதிகம்; பின்பு காஞ்சிவாய்ப் பேரூரில் நடனத் திருக்கோலம் தரிசித்துப் பாடுதல்: இது புராணத்தில் மட்டுமே உள்ளது; பதிகம் இறந்து போனவற்றுள் ஒன்று. பிறகு பல தலங்கள் பாடி, சிவபிரான் உடன்வந்து மறைந்தமை கண்டு கூடலையாற்றூரில் பாடி, முதுகுன்று வணங்கிப் பொன் பெற்று ஆற்றிலிட்டு, கோயில் வணங்கி, திருக்கருப்பறியலூரில் சிம்மாந்து என்ற பதிகம் பாடி, பல தலம் வழிபட்டு ஆரூரில் குளத்தில் பொன்னைப் பெற 'இட்டளத்தை இவளெதிரே கெடுத்தருளும்' என்று பாடி, பல தலங்கள் பணிந்து, திருநின்றியூரில் அப்பர் ஏழெழுநூறு பதிகம் பாடியமை குறிப்பித்தார். கோலக்காவில் சம்பந்தருக்குத் தாளம் கொடுத்த செய்தியைப் பாடினார். குருகாவூரில் தமக்குப் பசி தீர்த்த செய்தியைக் கூறிப் பாடினார். கச்சூரில் தமக்கு இறைவன் மனைதோறும் சென்று தமக்காகப் பிச்சை ஏற்றதைக் குறிப்பிட்டார். பின் ஒற்றியூர் அடைந்தார். சங்கிலியார் மணம், திருவாரூர் நினைவு வந்து பாடுதல். ஒற்றியூரை நீங்கியதும் கண்ணொளி மறைந்தது. அழுக்குமெய்கொடு என்ற பதிகம் பாடியும் கண் கிடைக்கவில்லை. முல்லை வாயிலில் வேண்டி, பின் வெண்பாக்கத்தில் வேண்டி, ஊன்றுகோல் பெற்றார். காஞ்சியடைந்து இடக்கண் பெற்று 'காணக் கண் அடியேன் பெற்றவாறே' என்று பாடினார். கண்ணில்லாமையைக் குறிப்

பிட்டுத் திருவாவடுதுறையிலும் பாடினார். திருத்துருத்திக் குளத்தில் உடற்பிணியொன்று நீங்கப் பெற்றார். திருவாரூரில் அடிமை பாடி மற்றைக்கண்ணும் பெற்றார். பரவைக்குத் தூது, பின் திருப்புன்கூர் வழிபாடு, ஏயர்கோன் நட்பு. பின் கழறிற்றறி வார் புராணத்தில் சேரமான் நட்பு, ஐயாறுடைய அடிகளோ என்று ஓலமிடவும் காவிரி வழிவிடல். கொடுங்கோளூர் சென்று தங்கி, திரும்பி வரும்போது, தம்பொருளையெல்லாம் திரு முருகன் பூண்டியில் பறிகொடுத்து, இறைவனைப் பாடிப் பெற் றார். அவிநாசியில் முதலை பிள்ளைதரச் சொல்லு என்று பாடி, அஞ்சைக் களத்தில் 'தானெனை முன் படைத்தான்' பாடிக் கயிலையடைந்தார்.

இந்த நீண்ட சுந்தரர் வரலாற்றில் சேக்கிழார், அவருடைய பதிகம் ஒவ்வொன்றையும் அவருடைய வரலாற்று முறையோடும், தலங்களோடும், பதிகத்தில் சொல்லப்பட்ட பொருளோடும் பொருத்திப் புராணம் பாடியிருப்பது பெரிதும் வியக்கத்தக்கது. இக்காலத்தில் வாழ்க்கைச் சரிதம் (பயாக்ரபி) என்று சொன்னால், குறிப்புக்களிலிருந்து எவ்வாறு புதிதாய்த் தொகுப்பார்களோ அவ்வாறு இவர் தொகுத்திருப்பது சிறப்பு என்பதோடு, பின் வருவோர் யாருக்கும் வழிகாட்டியாகவும் இருக்கிறது. ஓர் உதாரணம் காட்டுவோம். கண்பார்வை இழந்த சுந்தரர் வெண் பாக்கத்தில் முறையிட்டு ஊன்றுகோல் பெற்று, பல தலங்கள் வழிபட்டுக் காஞ்சியில் குறையிரந்து இடக்கண் பெற்று, பின் நீண்ட நாள் சென்று திருவாரூரில் வலக்கண் பெற்றது, நுணுகி ஆராய்ந்தெழுதிய வரலாற்று முறையாகும்.

அப்பர் வரலாறு இன்னும் விரிந்தது. சுந்தரர் பதிகம் 100; அப்பர் பதிகம் 312. இவற்றை ஆய்ந்து செய்திகளைத் தொகுப்பது பின்னும் கடினம்; அன்றியும், சுந்தரர் போல அப்பர் தம் வர லாற்றுக் குறிப்புக்களைத் தம் நூலில் பெரும்பாலும் தரவில்லை. இந்த நிலையில் சேக்கிழார் எழுதியிருக்கும் வரலாறு ஓர் அரிய சாதனை. மேலும், சேக்கிழார் பல பதிகங்களைக் குறிப்பிடும் போது, தமது விருத்தப்பாவைப் பதிகத்தின் சந்தத்திலேயே அமைக்கிறார். இது இவர் கடைப்பிடிக்கும் பொதுவான நியதி. முதல் பாடலான கூற்றாயினவாறு இதற்குச் சிறந்த சான்று. சுண்ணவெண் சந்தனச்சாந்து முதலியனவும் அப்படியே. 'ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்' என்ற பாடல் கட்டளைக்

கலித்துறை; பொதுவாக, காப்பியங்களில் கட்டளைக்கலித்துறை அமைத்தல் அபூர்வம்; இருப்பினும், இங்கு சேக்கிழார் இந்த இடத்தில் அப்பர் இவ்வாறு பாடினார் என்று சொல்லும்போது, கட்டளைக் கலித்துறையை அமைத்திருக்கிறார்.

அப்பர் வரலாற்றில், அவர் திருப்பூந்துருத்தியில் தங்கிப் பல வகைத் தாண்டகங்களையும் திருஅங்க மாலையையும் பாடினார் என்று சிறப்பாய்க் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்:

பல்வகைத் தாண்டகத்தோடும் பரவுந்தனித் தாண்டகமும்
அல்லலறுப் பவர்தானத் தடைவுதிருத் தாண்டகமும்
செல்கதிகாட் டிடப்போற்றும் திருஅங்கமாலையும் உள்ளிட்டு
எல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினர் ஏத்திஇருந்தார்.

அப்பர் தில்லையில் சென்று பெருமானைக் கண்டபோது, 'என்று வந்தாய்' என்னும் எம்பெருமான் திருக்குறிப்பை உணர்ந்து பதிகத்துள் அமைத்துப் பாடினார். இதையும் சேக்கிழார் எடுத்து,

இத்தன்மையர் பல முறையுந் தொழுதெழ
'என்றெய்தினை' என மன்றாடும்
அத்தன் திருவருள் பொழியுங் கருணையின்
அருள் பெற்றிட வரும் ஆனந்தம்
மெய்த்தன்மையினில் விருத்தத் திருமொழி
பாடிப் பின்னையும் மேன்மேலும்
சித்தம் பெருகிய பரிவால் இன்புறு
திருநே ரிசைமொழி பகர்கின்றார்.

என்று குறிப்பிட்டுப் பாடுவது காணத்தக்கது. எனினும் ஒன்று சொல்லத்தகும். திருவிருத்தம் குறுந்தொகை திருநேரிசை தாண்டகம் முதலியன பாடினார் என்று சேக்கிழார் குறிப்பிட்ட போதிலும்கூட, சுந்தரர் வரலாற்றில் 100 பதிகங்களுக்கு 97க்கு இடங்காட்டி அவர் வரலாற்றை நடத்திக்கொண்டு போகிறார். ஆனால், இவ்வரலாற்றில் இடம் குறிப்பிட்ட பதிகங்கள் 312இல் 41 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரலாற்றில், அப்பருடைய தொண்டின் சிறப்பையும் பக்தியின் சிறப்பையும் மட்டுமே பாடுகிறார்.

அடுத்ததான திருஞானசம்பந்தர் வரலாறு, பெரியபுராணத்தில் மிகவும் விரிவானது; நூலின் நாலில் ஒரு பங்கினும் நீண்டது.

இங்கும் சேக்கிழார் சம்பந்தரின் பதிகங்கள் பலவற்றையும், அவற்றின் சிறப்புப் பகுதிகளையும் குறிப்பிட்டு வரலாற்றைச் சொல்லிக்கொண்டு போவது அறியத்தக்கது. நனிபள்ளிப் பதிகத்தில் 'ஆணை நமது' என்ற சம்பந்தர் கூற்றைக் குறிப்பிடு கிறார். சம்பந்தர் பாடிய சித்திரக்கவிகள் அனைத்தையும் ஓரிடத் தில் (2179 - 80) சேக்கிழார் தொகுத்துக் கூறுகிறார். வடகுரங்காடு துறையில் வாலி செய்தி, அஞ்சேல் என்பார் தம் ஐயாறு, திரு மாந்துறையில் பரிதியும் மதியும் மருத்துக்களும் தொழுது வழிபாடு செய்த நிலை (2212), நெடுங்களத்தில், இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய் என வேண்டல், புகலூர்ப் பதிகத்தில் முருகனார் தொண்டைச் சிறப்பித்த நிலை, கோச்செங்கணா னைச் சிறப்பித்தல், திருவீழிமிழலையில் புகலிக்கோலத்தைச் சம்பந்தர் கண்டு பாடியமை - போன்ற பலவற்றைப் பாடலி லிருந்து எடுத்துத் தமது புராணத்துள் அமைத்திருக்கிறார். மங்கையர்க்கரசியார் சம்பந்தருடைய இளமைப் பருவத்தை நோக்கியும் சமணரது முதுமையையும் பெருந்தொகையை யும் நோக்கியும் அஞ்சியபோது, சம்பந்தர் அவரைத் தேற்றி 'மானினேர் விழி மாதராய்' என்ற பதிகம் பாடினார்; மானிடம் பாடாத சம்பந்தர் மங்கையர்க்கரசிக்கென்றே ஒரு தனிப்பதிகம் இங்கு பாடினார். இதைச் சேக்கிழார் அப்படியே எடுத்துச் சொல்லக் காணலாம்.

சம்பந்தர் 'ஆணை நமதே' என்று நான்கிடங்க்ளில் பாடி யிருக்கிறார்: நனிபள்ளி, வேதிகுடி, கழுமலம், கோளறு பதிகம் என்ற பதிகங்களில், இத்தன்மையை நம்பியாண்டார் நம்பி, 'ஆணை நமது என்னவலான்' என்று ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையுள் போற்றுகிறார். இவற்றை நன்கு ஆராய்ந்த சேக்கிழார், தொடக்கத்தில் சம்பந்தர் திருநனி பள்ளி வழிபட்டுப் பாடியதை மட்டும், 'நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளி உய் குவார்தம் - பேரிடர் கெடுதற்காணை நமது என்னும் பெருமை வைத்தார்' என்று குறிப்பிட்டுப் பாடுகிறார்.

அப்பர் சுவாமிகள் கழுமல ஊரற்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் என்று திருவாவடுதுறையில் சம்பந்தர் பொற்கிழி பெற்ற செய்தியைக் குறிப்பிட்டுப் பாடியதை அப் படியே சேக்கிழார் எடுத்தமைக்கிறார். சுந்தரர் கோடிக்குழகர் கோயிலில் சென்று பணிந்தபோது, கோயில் இன்று உள்ளது

போல அன்றும், குடிகள் ஒன்றும் புறத்து இல்லாது தனியே இருந்தது. இதை அப்படியே சுந்தரர், "குடிதான் அயலே இருந் தாற் குற்றமாமோ, கோடிக்குழகீர், உமக்கார் துணையாக இருந் தீரே?" என்று பாடினார். சேக்கிழார் இதைப் புராணத்தில் குறிப் பிட்டுப் பாடியிருப்பது காணத்தக்கது.

## சமய இயல்

சமய தத்துவங்களைக் குறித்துச் சொல்லுமுன் ஒரு நிலையை நினைவூட்டிக் கொள்வது நலமாகும். பிராமணர் வேறு சிவா சாரியர் வேறு. சோழ மன்னருக்குக் குலகுருவாய் இருந்தோர் சிவாசாரியர்; பிராமணர் இருந்ததில்லை. சைவத்தில் சிவாசாரி யருடைய நிலை மிகவும் உயர்வானது. அவர்களுடைய இன்றைய தகுதிக் குறைவான நிலையை வைத்துப் பெரியபுராணச் செய்தி களை மதிப்பிடக் கூடாது. சைவர்களில் ஏற்றம் பெற்றோர் ஆதி சைவர். தங்கள் ஆசாரத்தாலும் சிவபூசைத் தொண்டினாலும் அதனால் விளைந்த பக்தி முதிர்வினாலும் அவர்கள் உயர்ந்தவர் களாய்க் கருதப்பட்டனர். சுந்தரருடைய திருத்தொண்டத் தொகையில் தியாகராசப் பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற தொடருக்குரிய தில்லைவாழ் அந்தணர் சிவாசாரியர் ஆவர். அவர்கள் போலவே முப்போதும் திருமேனி தீண்டுவார் என்ற தொகை அடியாரும் சிவாசாரியரே. இவர்கள் ஆகம வழியிலே சிவபூசை செய்து வந்தனர். இவர்களுடைய பூசை பரார்த்த பூசை எனப்படும். இது பிறருக்காகச் செய்கின்ற பூசை; ஆகவே இது ஒரு வகையில் சமூக சேவை என்று சொல்வது மிகையாகாது. இக்காரணம் பற்றியே இவர்கள் உயர்ந்தவர்கள்.

பெரியபுராணத்தில் நாம் பார்க்கின்ற சிவாசாரியர் சுந்தர மூர்த்தியும் அவர் பெற்றோரும். சுந்தரருக்குப் பெண் கொடுக்க வந்த சடங்கவி சிவாசாரியரும் மற்றொருவர். பிற நாயன்மாருள் புகழ்த்துணை நாயனார் என்பவர் சிவாசாரியர். பஞ்சத்தால் உணவுக்கு இல்லாமல், பசிப்பிணியால் வருந்திய நிலையிலும் இவர் தம் பூசையை நிறைவேற்றி வந்தார்; தளர்ந்துபோய் ஒரு நாள் அபிடேக நீர்க்குடத்தைத் தாங்கமாட்டாமல் பெருமான் மீது போட்டு விட்டமை கண்டு பெருமான் இவருக்கு இரங்கிப் படிக்காசு அளித்தார் என்பது வரலாறு. சிவாசாரியர் இத்தகைய சிறப்புடையோர் என்பதை நினைவுகூர வேண்டும். திருமுறை களைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியும் சிவாசாரியரே.

**சமய தத்துவம்**

சேக்கிழார் திருமூலர் புராணத்தையும் தேவாரம் பாடிய மூவர் புராணங்களையும் விரித்துப் பாடுகிறார்; திருமுறைகள் பதினொன்று வகுத்த நம்பியாண்டார் காலத்துக்குப் பின் இவர் வாழ்ந்தார். ஆதலால் இவர்கள் நூல்கள் அனைத்திலும் தோய்வுடையவர். இவர்கள் சொல்லியிருந்த சமயக் கருத்துக்களே பிற்காலத்தில் சைவசித்தாந்தம் என்ற பெயரில் சிறந்த தனிச் சமயக் கொள்கையாக நிறுவப்பெற்றன. இப்பெயரும், திருமூலர் திருமந்திரத்தில் ஆளப்பட்டுள்ளது. சிறந்த சிவனடியார் வரலாறுகளை விரிந்த புராணமாகப் பாடிய சேக்கிழார் தம் நூலில் இச் சமயக் கருத்துக்களை ஆங்காங்கே அமைத்திருத்தல் இயல்பு. சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டுவோம்.

வேதத்தில் சாரமாயுள்ளது சைவம் என்பது ஆசிரியர் கருத்து. சீருத்திரத்தின் நடுப்பகுதியில் நமசிவாய மந்திரம் இடம் பெற்றுள்ளது. உருத்திர பசுபதி நாயனார் என்பவர் உருத்திரம் செபித்தே இறைவன் அடிநிழல் அடைந்தார். சண்டேசர் வரலாற்றில், அவர் பிறந்த சேய்ஞலூரின் பெருமை கூறுகிறார்:

**பண்ணின் பயனாம் நல்லிசையும்**
**பாலின் பயனாம் இன்சுவையும்**
**கண்ணின் பயனாம் பெருகொளியும்**
**கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்**
**விண்ணின் பயனாம் பொழிமழையும்**
**வேதப்பயனாம் சைவமும்போல்**
**மண்ணின் பயனாம் அப்பதியின்**
**வளத்தின் பெருமை வரம்புடைத்தோ.**

சிவலிங்க வழிபாடு சைவத்தில் முதன்மையானது. சிவலிங்கமானது, அருவும் உருவும் அல்லாததாயுள்ள அருவுரு நிலை என்று சாத்திரம் கூறும். ‘காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் - நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்’ என்பது சேக்கிழார் வாக்கு. பாசம், இருவினையொப்பு, மலங்கள் என்பவற்றைக் குறிப்பிடுகிறார்; தொழுவார்கள் தம் மும்மை மாமலங்களற வீடருள் தில்லை மல்லலம்பதி, தொல்லை வினை ஆசுடைய மல மூன்றும் அணையவரும் பெரும்பிறவி, மருள்பொழி மும்மலம் சிதைக்கும் வடிச்சூலம்; தன் பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றும் அற, அன்பு பிழம்பாய்த் திரிவார்; இருவினைப் பாச மும்மலக்கல் ஆர்த்தலின் வருபவக்

கடல்; நிலவிய இருவினை வலையிடை நிலை சுழல்பவர்; முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை அறியும் தன்மை துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்றலாலே. சைவம் கூறும் சோபான முறையைப் பல இடத்தும் கூறுவார்: பேறு தத்துவங்களென்னும் பெருகு சோபானம் ஏறி ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர்போல; ஞானம் முதல் நான்கும் மலர் நற்றிருமந்திர மாலை; ஞானயோகக் கிரியா சரியையெ லாம் மலர்ந்த மொழித் திருமூலதேவர்.

சைவத்தில் விதித்த பொருள் நான்கு என்பார் - செய் வினையும் செய்வானும். அதன் பயனும் கொடுப்பானும் - மெய் வகையால் நான்காகும்விதித்த பொருள். இக்கருத்து அப்படியே உமாபதியாருடைய திருவருட் பயனில் ஒரு பாடலாக அமைக்கப் பட்டுள்ளது:

**செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்**
**உய்வான் உளன்என்று உணர்.**

இதன் கருத்தானது, வினையைச் செய்வது ஆன்மா; அதன் பயன் தவிராது; ஆனால் வினை சடமாகையால் செய்தவனை நாட அறியாது; ஆதலால் முதல்வன் ஒருவன் இருந்து வினையின் பயனை உயிருக்குக் கூட்டுவிக்கிறான் என்பதாகும். ‘வேதப் பயனாம் சைவம்’ என்பது சேக்கிழார் கூற்று; இதை உமாபதி யார் ‘வேதாந்தத் தெளிவாம் சைவ சிந்தாந்தம்’ என்று, உபநிட தப் பொருளே சித்தாந்தம் என மிகவும் அருமையாக எடுத் துரைக்கிறார்.

ஆன்மாக்கள் மூவகை: அவர்களுக்கு இறைவன் உணர்த்தும் வகையும் மூன்று. அவர்களுள் இடைப்பட்ட பிரளயாகலருக்கு இறைவன் இடபாரூடராய்க் காட்சியளித்து உணர்த்துகிறான் என்பது சாத்திரக் கருத்து. பெரியபுராணத்தில் அதிபத்தர் முதல் மானக்கஞ்சாறர் வரை பதினைவர் நாயன்மார்களுக்குச் சிவபெருமான் இடபாரூடராய்க் காட்சியளித்து ஆட்கொண்டார் என்பதில் இவ்வுண்மை அமைக்கப் பெற்றுள்ளது. பரம்பொருள் ஒன்றே. அதுவே சிவபெருமான் என்பது இப்புராணம் முழுமை யும் உணர்த்தப் பெறுகின்றது. உறுவது நீற்றின் செல்வம், பெறு வது சிவன்பாலன்பாம் பேறு. ஆய்ந்த மெய்ப்பொருள் நீறென வளர்க்கும் அக்காப்பு, தூய்மை திருநீற்றடைவே மெய்ப்பொருள், மாறன் .... திருநீறு பூசப்பெற்று முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை அறியும் தன்மை துன்னினான் என்ற தொடர்கள்

திருநீற்றின் பெருமையை விளக்கும். அவ்விதமே அடியவர்கள் எச்செயலையும் அஞ்செழுத்தோதியே செய்கிறார்கள். ஆனாயர் குழலில் அஞ்செழுத்தை இசைத்தார் என்பது வேறிடத்தில் சொல்லப்பட்டது. அமர்நீதி தராசில் ஏறுதல், திலகவதியார் தம் தம்பியாருக்குத் திருநீறு தருதல், அப்பர் கல்லே தெப்ப மாய்ச் சொற்றுணை ஓதி மிதத்தல், சம்பந்தர் முத்துச் சிவிகை யில் ஏறுதல், பாண்டி நாட்டுக்குப் புறப்படுதல், தண்டியடிகள் சபதம் கூறிக் குளத்தில் முழுகுதல், புகழ்ச்சோழர் தீக்குளித்தல், சேரமான் வெள்ளானையின் பின்னே குதிரையை ஆகாய வீதியிற் செலுத்துதல் முதலிய செயல்கள் அஞ்செழுத்தோதியே நிகழ் கின்றன. திருக்கோலக்காவில் சிவபெருமான் சம்பந்தருக்கு அளித்த பொற்றாளங்கள், அஞ்செழுத்தும் எழுதிய செம் பொற்றாளங்கள். 'ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுப்பிணி வரத் தாம் அஞ்சும்' 'ஆதிமந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும் - மாதிரத்திலும் மற்றை மந்திர விதி வருமே' என்பன பின்னும் சில கருத்துக்கள்.

இதுபோலவே, நூலெங்கும் உருத்திராக்கத்தைப் பெரிதும் சிறப்பித்துக் கூறியுள்ளார்: ஆரம் கண்டிகை. உருத்திர பசுபதி நாயனார் வரலாற்றில் அவர் அருமறைப் பயனாகிய உருத்திரம் செபித்து முத்திபெற்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. தில்லை யைக் குறிப்பிடும்போது, பல இடத்தும் திருச்சிற்றம்பலம் என்றே அழகமையக் கூறுகிறார்.

அடியவர் பெருமை எல்லா இடத்தும் சொல்லப்படுவது புராணத்து இயல்பு. அடியவரிடத்துக் குற்றம் காணலாகாது என்பது ஒரு சிறப்புக் கருத்து. அடியவராக வந்த ஊனம் நிறைந்த மேனியரொருவரை நரசிங்க முனையரையர் வழிபட்டு அனுப்பினார் என்றவிடத்துக் கூறுவது காணத்தக்கது:

> சீலமிலரே எனினும், திருநீறு சேர்ந்தாரை
> ஞாலமிகழ்ந் தருநகரம் நண்ணாம லெண்ணுவார்
> பாலணைந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
> மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார்.

அடியவர் பெயரை உச்சரிப்பதே நாமமந்திரம் என்கிறார்: மீனவன் செவியினூடு ஞானசம்பந்தர் என்னும் நாம மந்திரமும் செல்ல; அரசின் நாமம் ஏத்தி எப்பொருளும் நாளும் அவ்வருந்தவர் பொற்றாளே என உணர்ந்தடைவார் அப்பூதி; நம்பியாரூரர்

நாமம் நவின்ற நலத்தாலே ஆளும்படியால் அணிமாச் சித்தி அணைந்ததற்பின் (பெருமிழலைக் குறும்பர்) என இம்மூன்று இடங்களிலும் சமயாசாரியர் மூவர் பெயரும் மந்திரமாக அமைந்தன என்று கூறுவது காணத்தக்கது. பாண்டியன் நெடுமாறன், அப்பூதி அடிகள், பெருமிழலைக் குறும்பர் என்ற இம் மூவருமே நாயன்மார்.

தீட்சை என்று சொல்வதையும் ஒரு பாடல் குறிப்பிடுகிறது: அந்தணர் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் எய்தத் தங்கிய பலத்தில் முன்னைச் சார்பு விட்டகல நீங்க என்று கண்ணப்பர் புராணத்தில் காண்கிறோம். பிராரத்தம் சஞ்சிதம் ஆகாமியம் என்ற வினையின் முப்பகுதிகளுள், சஞ்சிதம் என்ற பண்டை வினையின் தொகுதி ஆசாரியனுடைய தீட்சையினால் எரிந்துபடும் என்பது சாத்திரப் பொருள்; இங்கு அருள்திரு நோக்கம் என்பது நயன தீட்சையாகும்; தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு என்பது சஞ்சித வினை.

சைவ சமயத்தில் தாவரமும் உயிருடையன என்பது முக்கிய கருத்து; அதுவும் ஆன்மாவின் பிறவிகளின் ஒன்று. சம்பந்தர் திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய பின்னர், அவையும் உரிய காலத்தில் பிறவியொழித்துச் சிவமே கூடின என்கிறார்:

> பிள்ளையார்தந் திருவாக்கிற் பிறத்தலால் அத்தாலமும்முன்
> புள்ள பாசம் விட்டகல ஒழியாப் பிறவி தனையொழித்துக்
> கொள்ளு நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்
> வள்ளலார் மற்றவரருளின் வாய்மை கூறின் வரம்பென்னாம்?

பிற்காலத்தில் உமாபதிசிவம் தம்முடைய நயன தீட்சையால் முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தார் என்பதும் இக்கருத்தின் வளர்ச்சியேயாகும். பெரியபுராணத்தில் திருவாதிரை மிகவும் சிறப்பான இடம்பெறுகிறது.

> மன்னிய நாண்மீன் மதிகனலி என்றிவற்றை
> முன்னம் படைத்த முதல்வனைப் – பின்னரும்
> ஆதிரையான் ஆதிரையான் என்றென் றயருமால்:
> ஊர்திரைநீர் வேலி யுலகு.

என்பது பண்டைய முத்தொள்ளாயிரப் பாட்டு. அதற்கிணங்கச் சேக்கிழார், ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும் அவர்

திருஞானம் அமுதுசெய்த நாளும் ஆகிய சித்திரை ஆதிரை நாள் தொடங்கி எதிராம் ஆண்டு சித்திரை நாளில் தமது பெரிய புராணக் கதையை முடிக்கின்றார். புராணத்தில் நரசிங்க முனை யரையர் ஆறணிந்த சடைமுடியார்க்கு ஆதிரை நாள்தோறும் வழிபாடு விளங்கிய பூசனை மேவுவிக்கின்றார். புராணத்தில் இரண்டே நிகழ்ச்சிகள் நாள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள் ளன. ஒன்று சம்பந்தர் பிறந்த நாளான ஆதிரைநாள்:

> **அருக்கன்முதற் கோள் அனைத்தும் அழகிய உச்சங்களிலே**
> **பெருக்க வலிவுடன் நிற்க, பேணியநல் லோரைஎழ,**
> **திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்க, பரசமயத்**
> **தருக்கொழிய, சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க.**

சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார். மற்றோர் இடம் திருநாவுக்கரசர் முத்திபெற்ற நாள். 'சித்திரையில் சதய மாம் திருநாளில் எண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்.'

பெரியபுராணத்தில் காணப்படும் முக்கியமான ஒரு செய்தி, சிவபூசை அன்று ஆகம முறைப்படி நடைப்பெற்றது என்பது. இராசராச மன்னன் தஞ்சைக் கோயில் கட்டிய பிறகு திருக்கோ யில் வழிபாடு ஒழுங்குபடுத்தப்பட்டது. அக்காலத்தில் சோழ மன்னருக்குக் குலகுருவாய் இருந்தோர் சிவாசாரியர். அவர்கள் ஆகமம் வல்லவர்கள். ஆகமம் என்பது சைவர்களுக்கே உரியது. 'வேதம் பொது' அதன்பால் மெய் ஆகமம்' என்று பிற்காலப் பாடல் கூறும். சேக்கிழார் 'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க' என்று கூறுமிடத்து, சைவத்துறை என்பது ஆகம நெறியாகிய சித்தாந்த நெறி என்று பொருளாகும். 'வேத நூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்' என்று சித்தியார் கூறுமிடத்துச் சைவநூல் என்பது ஆகம நூலாகும். ஆகமங்கள் திருமூலராலும் நால்வராலும் சிறப்பித்துச் சொல்லப்பட்டாலும் கூட, அவற்றுக்குப் பெரும் ஆட்சி ஏற்பட்ட காலம் சோழர் ஆட்சிக்காலமே ஆகும். சேக்கிழார், ஆகம வழியேதான் சிவா லயங்களில் பூசை நடந்தது என்பதை அதிகமான இடங் களில் குறிப்பிட்டுப் பாடுகிறார். முக்கியமாகத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில், உமாதேவியார் கயிலை நீத்துக் காஞ்சி அடைந்து அங்கு ஏகம்பரைப் பூசை செய்தது இறைவனார் வகுத்த ஆகம நெறிப்படி நடந்தது என்று சேக்கிழார் பலமுறை

கூறுகிறார். வேணியார் அருள் செய்த ஆகமத் திறன் எலாம் தெரியக் கேட்டருளினாள், எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை, மெய்ப் பூசை எய்த ஆகம விதியெலாம் செய்தாள் என்ற தொடர்களைக் காண்க. திருமூலர் ஆகமப் பொருளை மண்ணில் மிசைத்தமிழ் வகுத்தார் என்றும் சொல்கிறார். அக்காலத்தில் சிவாலய அமைப்பு, சிற்பங்களின் உருவ அமைப்பு, பூசனை, விழாக்கள் ஆகிய யாவும் ஆகம வழியே நடந்தன என்று அறிகிறோம்.

வாயிலார் என்னும் தபோதனர் மனக் கோயிலிலே சிவ பெருமானை அருச்சனை செய்கிறார்:

மறவாமை யாலமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்சனை செய்வார்.

'அருச்சனை பாட்டேயாகும்' என்று சுந்தரருக்கு அறிவித்த சேக்கிழார் இவ்வாறு பல இடங்களிலும் ஆகம பூசையை வலி யுறுத்தியிருப்பதும், அவர் காலத்து ஓங்கி வந்த சமயவுணர் வைப் புலப்படுத்துகிறது.

சைவ சமயத்தில் அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரும் சரியை கிரியை யோகம் ஆகிய மூன்று பாதங்களையும் - படி வழிகளையும் - நடத்திக் காட்டியவர்கள் என்று சொல்வது மரபு. இவை தாசமார்க்கம் (அடிமை) சற்புத்திர மார்க்கம் (புதல்வன்) சக மார்க்கம் (தோழன்) என்றும் சொல்லப்படும். இந்த நிலைகள் நன்கு விளக்கியே சேக்கிழார் நூல் செய்திருக்கிறார். விரிவஞ்சி இத்தன்மைகளை இங்கு விளக்கியுரைக்கவில்லை.

### தில்லைத் திருநடனம்

தில்லைப் பெருமானிடத்து மிக்க ஈடுபாடு கொண்ட சேக்கிழார், தேவார முதலிகள் தில்லையைத் தரிசித்த நிலை யைக் கூறும் பாடல் மிக்க சுவையுடையன. முதலாவதாக அப்பர் சுவாமிகள் திருநடம் காண்கிறார்:

கையும் தலைமிசை புனைஅஞ் சலியன,
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன, கரணங் களுமுடன்
உருகும் பரிவின, பேறெய்தும்

மெய்யும் தரைமிசை விழுமுன் பெழுதரு
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்.

*கண்டபோது, 'என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே' என்று அப்பர் பாடுகிறார்; இதையே சேக்கிழார் அடுத்த பாடலில் 'என்றெய்தினை என மன்றாடும் அத்தன்' என்று பாடுகிறார். அடுத்து, சம்பந்தர் சென்று தரிசித்துப் பாடு கிறார். சேக்கிழார் அதைக் கூறுகிறார்:*

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
　　யான,அம் பலமும்தம்
உள்நி றைந்தஞா னத்தெழும் ஆனந்த
　　ஒருபெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழும்
　　களிப்பொடும் கடற்காழிப்
புண்ணியக்கொழுந் தனையவர் போற்றுவார்
　　புனிதர்ஆ டியபொற்பு.

*இதே ஆனந்தக் கூத்தைப் பின்னால் சுந்தரரும் சென்று தரிசிக் கிறார்:*

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள,
　　அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாக, குணமொரு மூன்றும்
　　திருந்து சாத்துவிகமே யாக,
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
　　எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்தில் திளைத்து
　　மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

*இப்பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது.* அடுத்து, சுந்தரரின் தோழரான சேரமான் பெருமாளும், உலகில் அண்டமளித் தவர் நின்றாடும் திருச்சிற்றம்பலம் முன்சென்று பணிகின்றார்:*

---

* *குமரகுருபரர் தருமைக் குருவைச் சென்று கண்டபோது, இப்பாடலின் அனுபவப் பொருள் கேட்கவும் தெரியாமையால், இவரிடம் பணிந்து இவரைக் குருவாகக் கொண்டு உபதேசம் பெற்றார் என்பது வரலாறு.*

அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆட எடுத்த கழல் காட்டி,
உளமும் புலமும் ஒருவழிச்சென் றுருகப் போற்றி உய்கின்றார்;
களனில் விடம்வைத் தளித்தஅமு தன்றி மன்றில் கழல்வைத்து
வளருந் திருக்கூத் தமுதுலகுக் களித்த கருணை வழுத்தினார்.

இந்நான்கு நிலைகளிலும், கண்டவர் நால்வரும் கூத்தப் பெருமானைப் பாடியவர்கள்: முதல் மூவர் பதிகம் பாடினார், சேரமான் பொன்வண்ணத்தந்தாதி பாடினார். இந்நான்கிலும் ஒரு பேரின்ப வெள்ளத்தில் தோய்ந்த நிலையைக் காண்கிறோம். அன்றியும் ஆழ்ந்து பார்க்கும்போது, முதல் பாடல் ஒரு சரியை நிலையைக் காட்டுவது போலவும், இரண்டாம் பாடல் ஞானக் கிரியையைக் காட்டுவதாகவும், மூன்றாம் பாடல் கருவி கரணங்கள் யாவும் ஒடுங்கி ஒன்றிய யோகநிலையைச் சுட்டுவது போலவும் புலப்படுகின்றன. சேக்கிழாரைக் குறித்துக் கவிஞர் 'தெய்வ மணக்கும் செய்யுளெலாம்' என்று கூறியது எத்துணைப் பொருத்தமானது என்று எண்ணி நாம் அதிசயிக்கிறோம்.

### பக்திச் சுவை

உலகெலாம் என்று தொடங்கியது முதல் உலகெலாம் என்று முடித்தது வரையில், சேக்கிழார் தம் நூலில் பக்திச் சுவையே அடிப்படையாயிருந்து இன்புறுத்துகிறது. சுந்தரர் இன்ன அடியாரின் அடியவர்களுக்கு யான் அடியேன் என்று பாட, அவர்களின் அடிமைத் தன்மையை விளக்க வந்த புராணத்தில் பக்திச்சுவையே பொங்கித் ததும்புகிறது என்று கூறுவது மிகை. நூல் முழுமையும் கடவுளையும், அவர் ஆட்கொள்ளும் தன்மையையும், அவர் எளிவந்த பெருங்கருணையையுமே பேசுகிறது. கடவுளின் இலக்கணத்தைத் தர்க்கவாதம் செய்து காட்டவில்லை. ஆனால் அடியவரை இலக்கணம் சொல்லிக் காட்டுகிறது. தில்லைத் திருக்கூத்தைப் பாடாத இடமில்லை. திருக்கூத்து உயிர்களின் உய்திக்காக. உயிர்களின் உய்திக்காகவே இறைவனும் எளியவனாக வருகிறான். பலரைச் சோதிக்கிறான்; சிலரைக் கடுமையாகவும் சோதிக்கிறான்; சோதனையின் முடிவில் அனைவரும் வெற்றிபெற்று அருள் பெறுகிறார்கள். சோதனையில் தோற்றவர் யாருமில்லை. தவத்தாலும் தியாகத்தாலும், அடியாரிடத்தும் சிவ சின்னங்களிடத்தும் கொண்ட அன்பாலும், அனைவரும் சுடச்சுடரும் பொன் போல் ஒளி விடுகிறார்கள். இத்தகையதொரு பக்தி வரலாற்றுக்

*காப்பியம், பிற சமயங்களிலோ, மொழிகளிலோ என்றுமே தோன்றியதில்லை. 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்றும் தெய்வ மணக்கும் செய்யுளெலாம் என்றும் கவிஞர் சேக்கிழாரைப் போற்றியிருப்பது எழுத்துக் கெழுத்து உண்மையானது. எடுத்துக்காட்டாகச் சில காட்சி களை மட்டும் இனிப் பார்ப்போம்.*

*திருவாரூரைக் கூறுகின்றார்; எங்கும் திருப்பதிக ஓசை:*

**உள்ளம் ஆர் உரு காதவர், ஊர் விடை**
**வள்ளலார் திரு வாரூர் மருங்கெலாம்?**
**தெள்ளு மோசைத் திருப்பதிகங்கள், பைங்**
**கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்.**

*அரனுக்கன்பர் ஆவின சிந்தைபோல, அலர்ந்தன கதிர்களெல் லாம். 'சாலியெல்லாம், பத்தியின் பாலராகிப் பரமனுக்காளாம் அன்பர் - தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்குமா போல், விளைந்தன.'*

*பக்தி முதலானது, பணைத்தோங்கி, வினையின் களை கட்டெழுத்து சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்த செய்தியை வெள்ளானைச் சருக்கத்தில் சேக்கிழார் ஓர் அரிய பாடலால் உணர்த்துகிறார்; சுந்தரர் ஆரூரில் இருக்கும் காலத்து மனத்தில் எழுந்த பக்தியின் முதிர்வு:*

**படியில் நீடும் பத்திமுதல் அன்பு நீரிற் பணைத்தோங்கி**
**வடிவு நம்பி ஆரூரர் செம்பொன் மேனி வனப்பாக,**
**கடியவெய்ய இருவினையின் களைகட்டெழுந்து கதிர்பரப்பி,**
**முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால்.**

*சேக்கிழாருடைய பக்திச் சிறப்பு அவர் கூறும் வருணனை களில் காணப்படும். அப்பர் சுவாமிகளுடைய வரலாறு மிக்க உருக்கமான பகுதிகளில் ஒன்று. திருப்பாதிரிப் புலியூரில் அப்பர் கரை ஏறியபோது கடல் ஆர்க்கிறது. எப்படி? "எத்திசையினும் அர என்னும் ஓசைபோல் - தத்துநீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே." அப்பர் வீதியோடு வருகின்றார். அவருடைய திரு வடிவத்தைக் கண்டு அங்கிருந்தோர் தலைமேல் கை குவித்து, "இந்த வடிவத்தைக் கண்ட அமண்கையர் தீங்கு விளைக்கச் செற்றம் எவ்வண்ணம் உண்டாயினர்?" என்று வியக்கிறார்கள்.*

அவருடைய வடிவத்தையும், சிந்தையையும், சொல்லையும் படத்திலும் காணமுடியாத உருக்கத்தோடு சேக்கிழார் நமக்குக் காட்டுகிறார்:

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும், தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவரு சிந்தையும், நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும், பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதி யுள்ளே.

அப்பர் தில்லை அடைந்து பெருமானுடைய நடனத் திருக் கோலத்தைக் கண்டு உருகி நிற்கின்ற நிலையை வேறு இடத்தில் காட்டியிருக்கிறோம். அப்பர் திருப்புகலி அடைந்து சம்பந்தரைக் கண்டு, மகிழ்ச்சி பொங்க உள்ள நிறை காதலினால் ஒருவர் ஒரு வரில் கலந்த அன்போடு சென்று கோயிலில் வணங்குகிறார்கள்:

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும், ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும், புவனம் உய்ய
இருட்கடுவுண் டவர் அருளும் அகிலம் எல்லாம்
ஈன்றாள் தன் திருவருளும் எனவும், கூடித்
தெருட்கலை ஞானக் கன்றும் அரசும் சென்று
செஞ்சடைவா னவர் கோயில் சேர்ந்தார் அன்றே.

இவ்வாறு அப்பர் புராணத்தில் சொல்லியதோடு சேக்கிழார் மன அமைதி பெறாமல், மீண்டும் திருஞானசம்பந்தர் புராணத் தில் அப்பரைச் சம்பந்தர் எதிர்கொள்ளும் காட்சியை உருக்க மாக வருணிக்கிறார்:

சிந்தையிடை யறாஅன்பும், திருமேனி தனிலசைவும்,
கந்தைமிகை யாங்கருத்தும், கையுழவா ரப்படையும்,
வந்திழிகண் ணீர்மழையும், வடிவிற்பொலி திருநீறும்,
அந்தமிலாத் திருவேடத் தரசும்எதிர் வந்தணைய.

கண்டபோது, கவுணியக்கன்று, 'கருத்திற் பரவு மெய்க்காதல் தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது' என்று தொழுகின் றார். அவர் மனத்தில், அடியவர் இப்படி இருப்பார் என்ற ஒரு கற்பனை, வடிவங்கொண்டு உயிரும் கொண்டு வந்தது போலத் தெரிகிறது அவருக்கு. இப்படி பல இடங்கள். ஆரூரில் அப்பர் திருவீதிப் பணி செய்கின்றார். அப்போதும் சேக்கிழார் அவர் திருவுருவத்தை உருக்கமாக வருணிக்கிறார்:

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும்,
 மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்,
 செம்பொற் றாளே
சார்வான திருமனமும், உழவாரத் தனிப்படையும்,
 தாமு மாகி –
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப்
 பரவிச் செல்வார்.

*சேக்கிழாரது நூல் ஒரு பக்திக் காவியம் என்று சொல்வதற்கு அப்பர் வரலாறு முழுமையும் காட்ட முடியும்: ஆயினும் மற்றும் ஓர் இடம் மட்டும் காட்டி இங்கு நிறுத்திக் கொள்வோம். அப்பர் பொய்கையில் மூழ்கி ஐயாற்றில் வாவியின் கரையில் வந்து ஏறுகின்றார்; ஏறியபோது யாவற்றையும் சக்தி சிவமாகக் காணுகின்றார்; கண்டு, கோயிலை அடைந்து பெருமானைப் பணிகின்றார் என்ற செய்தியைச் சேக்கிழார் வாக்கிலே காணலாம்:*

அடைய அப்பதி நிற்பவுஞ் சரிப்பவு மான
புடைஅ மர்ந்ததந் துணையொடும் பொலிவன கண்டார்.

பொன்ம லைக்கொடியுட னமர் வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாம் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில்முன் வந்தார்.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்பென, இடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர், வாக்கின்மன் னவனார்.

*அப்பர் புராணம் மட்டும் அல்ல: தொட்ட தொட்ட இடம் எல்லாம் பக்திச்சுவை நூலெங்கும் மேலோங்கி நிற்கக் காணலாம். இளையான் குடிமாற நாயனார் வாழ்க்கை இந்த பக்தியின் வெளிப்பாடே. கண்ணப்பர் நிலையைக் குறித்து யாம் யாது சொல்ல முடியும்? சிவகோசரியார் - சடங்கு, கண்ணப்பர் - அன்பு இம்முரண் கண்ணப்பரை உயர்த்த வேண்டி. அவரது பக்தியைச் சொல்லும்போது, சொற்கள் செயலற்று நிற்கும்; அவருடைய பக்தி முதிர்வால் இறைவனே தோன்றி,*

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்,
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்,
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும் –
அவனுடைய நிலை இவ்வா றறிநீ என்றருள் செய்தார்.

*என்றால், கண்ணப்பர் பக்தி குறித்து நாம் என்ன சொல்ல முடியும்? பயிரவர் திருச்செங்காட்டங்குடி வருகிறார்:*

அருள் பொழியும் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள் பொழிமும் மலம் சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்பப்
பொருள் பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவிஏத்தத்
தெருள் பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டங்குடிச் சேர்ந்தார்.

*உத்தராபதி என்று பிற்காலத்தார் போற்றுகின்ற கோலத்தின் பொலிவை இப்பாடல் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. சேரமானும் சுந்தரரும் சந்திக்கிறார்கள். இருவருள்ளமும் ஒன்று கின்றன, பக்தியாலும் தோழமையாலும்:*

முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து, முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவ, விரைந் தவரும் ஆர்வத் தொடுதழுவ,
இன்ப வெள்ளத் திடை நீந்தி ஏறமாட்டா தலைவார் போல்,
என்பும்உருக உயிரொன்றி உடம்பும் ஒன்றாமென இசைந்தார்.

*யார் யார் எந்த எந்த நிலையிலிருந்தாலும், மனம் வாக்கு செய்கை மூன்றையும் தம்பிரானடியார்க்கு ஆக்குவதே பக்தி மார்க்கம் என்பதை நேசநாயனார் வரலாற்றில் ஒரு பாட்டால் உணர்த்துகிறார்:*

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக் காக்கித்
தாக்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க்காகப்
பாங்குடை உடையும் கீளும் பழுதில் கோவணமும் நெய்வார்.

*பத்தராய்ப் பணிவார் என்ற பெயரிலேயே சுந்தரர் தொகையடியார் ஒரு பிரிவினரைக் குறிப்பிட்டிருக்கிறார். அப்புராணத்துள் இரு பாடல்களில் சேக்கிழார் பத்தருக்கு இலக்கணம் உரைக்கிறார் என்றே கருதத்தக்கது:*

ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார்மெய்க் குணமிக்கார்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்.

சேக்கிழாருடைய பக்தியின் பக்குவத்தைக் காட்ட ஒரு குறிப்பைச் சொல்வது பொருத்தமாக இருக்கும். சுந்தரர் நம்பி இருவரின் கூற்றுக்களை இவர் மாற்றாது அமைத்துப் பாடு கிறார். ஓர் இடத்தில் மாற்றுகிறார். சண்டேசர் வரலாற்றைக் கூறும்போது, அவர் தாம் பிடித்து வைத்து வழிபட்ட மணலா லான சிவலிங்கத்தின் மீது சென்ற தாதையின் தாளை எறிந்தார் என்பது சுந்தரர் கூற்று; 'மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க வெகுண்டெழுந்த தாதையை மழுவினால் எறிந்த - அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியன்' என்பது அவருடைய திருத் தொண்டத் தொகை. "கோதனங்களின் பால் கறந்து ஆட்டக் கோல வெண்மணற் சிவன்மேற் சென்ற - தாதை தாளற எறிந்த சண்டி" என்பது அவருடைய திருப்புன்கூர்த்தேவாரம். ஆனால் இலிங்கத்தை எச்சதத்தன் காலால் இடறினான் என்று சொல லச் சேக்கிழாருக்கு மனமில்லை; ஆகவே பாற்குடத்தை இடறி னான் என்று இவர் பாடியிருப்பது அறிந்து உணரத்தக்கது: "மறையோன் மிகச் செயித்து வைத்த திருமஞ்சனக் குடப்பால் - காலால் இடறிச் சிந்தினான் கையாற் கடைமைத் தலை நின்றான்" என்பது சண்டேசர் புராணம் (1260).

சண்டேசர் வரலாற்றில் சேக்கிழார் செய்த மாறுதலைக் குறிப்பிட்ட இவ்விடத்தில் மற்றுமொரு செய்தியும் சொல்லத் தக்கது. திருநனி பள்ளிக்குச் சம்பந்தர் சென்றபோது, 'காரைகள் கூகை முல்லை' என்ற தொடக்கமுடைய பதிகம் பாடினார். தொடக்க வரிகள், இவ்வூர் பாலைநிலம் என்று கருதுதற்கு இடம் கொடுப்பன. ஆனால் பிற பகுதிகள், பெரிதும் மருத நிலத் தன்மையையே குறிப்பிடுவன. இப்பதிகம் இவ்வாறிருக்க, நம்பி யாண்டார் நம்பி 'நாதன் நனி பள்ளி சூழ் நகர் கானகமாக்கி அஃதே போதின் மலி வயல் ஆக்கிய கோன்' என்றும், 'கள்ளம் பொழில் நனி பள்ளித் தடங்கடம் ஆக்கி அஃதே கொன்றைப் பணி நெய்தல் ஆக்கிய வித்தகன்' என்றும், 'ஞாலத்தினர் அறிய மன்னு நனி பள்ளியது - பாலை தனை நெய்தல் ஆக்கியும்' என்றும் பலமுறை பாடியிருக்கிறார். நம்பியின் கூற்றுக்கள் பல வற்றை விளக்கியுரைத்திருக்கும் சேக்கிழார் இச்செய்தியைச்

சொல்லவில்லை. 'பானல் வயல் திரு நனிபள்ளி.... ஞான போனகர் தொழுது, காரைகள் கூகை முல்லை என ...... பதிகம் பாடி' என்று கூறுகிறார். சம்பந்தர் பதிகத்தில் இச்செய்திக்கு ஆதாரம் காணப்படாமையால் சேக்கிழார் இதைச் சொல்லவில்லை போலும். இருப்பினும் இக்கருத்து, நாட்டில் வழங்கி வந்தது என்பதை, 'பாலைநெய்தல் பாடியதும்' என்ற திருக்களிற்றுப் படிப் பாடலாலும் அறியலாம்.

சேக்கிழாருடைய உவமைகள் யாவும் கூட, தெய்வ நலங் கனிந்தனவாகவே விளங்கும். எடுத்துக்காட்டாக, திருநாட்டுச் சிறப்பு என்ற பகுதியில், பொன்னி நதியை வருணிக்குமிடத்து, தொடர்ந்த பல பாடல்களில் அவ்வாறு வருணனை அமைந் திருக்கக் காணலாம். பொன்னி நதி நான்முகனை ஒத்தது, கங்கையை ஒத்தது, ஆளுடைய நாயகி கருணையின் ஒழுக்கம் போன்றது, உம்பர் நாயகருக்கு அன்பரும் ஒக்கும் (4, 5, 6, 7) என்ற தொடர்ந்த பாடல்கள் காண்க. அரனுக்கன்பர் ஆலின சிந்தைபோல அலர்ந்தன கதிர்கள், பத்திமிக்க வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி (21, 22) பொன்னின் வெண் திருநீறு புனைந்தெனப் பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது; திருக் கூட்டமானது நீற்றொளியால், ஆயிரம் பாற்கடல் போல்வது; வெண்நீற்றின் ஒளிபோன்றது நீள்நிலா என்பதையும் காண்க.

## அன்பும் ஆய்வும்

நாயன்மார் சரிதங்களைக் கற்கும்போது, சரிதமெல்லாம் ஆராய்ச்சிக்கன்று, உணர்தற்கே என்று நாம் அறிய வேண்டும். இங்கு முதலிடம் பெறுவது உணர்வு, இறையுணர்வு. இன்றைய வாழ்க்கையிலும்கூட உணர்ச்சிப் பெருக்கால் நிகழ்கின்றன வெல்லாம் பகுத்தறிவின் கூர்மையால் ஆராய்ந்து பார்த்தற்கிய லாது. மெய்ப்பொருள் நாயனார், தம்மைக் கொன்றவன் பகை வன் என்றறிந்தும், அவனை உயிரோடு தம்நாட்டு எல்லைக்கு அப்பால் விடச்செய்து, விட்ட செய்தி அறிந்த பின்னரே தாம் உயிரைத் துறந்தார். ஏனாதிநாதர் பகைவன் தம்மைக் கொல்ல இடங்கொடுத்து, கொல்லும்போதும் நிராயுதபாணியைக் கொன்றான் என்ற கெட்டபெயர் சிவனடியார் வேடந்தாங்கி யவனுக்கு வரக் கூடாதென்பதற்காகக் கையில் வாளேந்திப் பொய்ப்போர் புரிபவராக நின்றார். தாயர் அரிவாளால் தம் கழுத்தைத் தாமே அரிந்துகொண்டார். கலிக்காமர் தம் வயிற்றைத் தாமே கீறினார். கலிக்கம்பர் சிவனடியானாக வந்த

வேலையாளை வழிபடத் தயங்கிய மனைவியின் கையை வெட்டினார். இவர்கள் அனைவரும் ஒரே பக்தி வெறியில் நின்ற வர்கள். தங்கள் செயலுக்கு இவர்கள் பொறுப்பல்லர்.

இக்காலத்திலும் நலந்தீங்கு ஒன்றும் அறியாத இளம் பிள்ளைகள் - வெறிகொண்ட மாணாக்கர் - தம்மீதே எண்ணெயை ஊற்றிக்கொண்டு தம்மை எரித்துக் கொள்ளவில்லையா? சத்தியம் ஒன்றே உறுதி என்ற கொள்கையோடு அரிச்சந்திர மன்னன் நாடும் நகருமிழந்து, மனைவியையும் மகனையும் விற்றுத் தன்னையும் புலையனுக்கு அடிமைப்படுத்திக் கொள்ள வில்லையா? இவ்வாறு உணர்ச்சி வசப்பட்டுத் தம்மையே அழித்துக் கொள்வோர் பிறரை அழிக்கவும் தயங்கமாட்டார்கள் என்பதை நாம் அவ்வுணர்ச்சிக் கண்கொண்டே உணர வேண்டும். கோட்புலி சுற்றத்தாரைக் கொன்று சிறுமகவு என்றும் பாராமல் வெட்டி எறிந்தார், சிறுத்தொண்டர் தம் பிள்ளையை அறுத்துக் கறி சமைத்தார் என்பதையும் இவ்வாறு காணும்போது, பொருத்தமின்மை மறையும். அடிமைத்திறம் என்ற உணர்ச்சி வெறியாக மாறி மறச்செயல் எதையும் செய்விக்கிறது. செயலுக்கு, செய்வோர் பொறுப்பல்லர். சிறுத்தொண்டர், பரஞ்சோதி என்ற பெருந்தளபதியாக இருந்தவர். போரும் வெட்டும் அவருக்குப் புதிதில்லை; போர்க்களத்தில் வெட்டி எறிந்து வெற்றி கண்டவர், இங்கு பக்திக் களத்தில் வெட்டுகிறார்; வேறுபாடு அவ்வளவே.

இக்கருத்தை விட்டு, அக்காலத்தில் பெரும் காபாலிக சமயம் இங்கு பரவியிருந்தது, அதன் சின்னமே சிறுத்தொண்டர் வரலாறு என்று கூறுவதெல்லாம், உணர்ச்சியால் உணர வேண்டியதனுள் பகுத்தறிவால் பொருத்தம்காண முற்படும் முயற்சியாகும். இது பொருந்துவதாகாது; இரண்டுக்கும் அளவுகோல் வெவ்வேறு.

### ஞான நெறி

சேக்கிழார் நூலின் பொதுவான ஒரு பண்பு பக்தியும் ஞானமும். ஞான நெறியைப் புராணம் தோறும் குறிப்பிடு கின்றார். தில்லைவாழ் அந்தணர் ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார், மெய்யுணர்வு உண்டானபோது முக்குற்றங்களும் தாமே அழிந்துபடும் என்பதை ஏனாதிநாதர் புராணத்தில் "நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில் அலைப்பட்ட ஆர்வம் முதல் குற்றம் போல் ஆயினார்" என்கிறார். திருக்குறிப்புத் தொண்டர் துணி வெளுப்பவர்; அவர் மனமுத

லான மூன்றும் அண்ணலார் சேவடியின் சார்பாக அணைவித்தார். அவர் செய்த தொண்டு அடியார் துணிகளை வெளுத்துக் கொடுத்தல் அடியார் தம் - தூசுடைய துகள் மாசு கழிப்பார் போல் தொல்லைவினை - ஆசுடைய மலம் மூன்றும் அணைய வரும் பெரும் பிறவி - மாசுதனை விடக் கழித்தார்' சிறிய பெருந் தகையான சண்டேசருக்கு 'முந்தை அறிவின் தொடர்ச்சியினால் முகைக்கு மலரின் வாசம்போல் - சிந்தை மலர உடன் மலரும் செவ்வி உணர்வு சிறந்தது.' அப்பர் சுவாமிகள் திருப்புகலூரில் பணி செய்தபோது சிவன் தாள்களை எப்போதும் சிந்தையில் தழுவி இருந்தமையால், 'புல்லோடும் கல்லோடும்' பொன்னோடும் மணியோடும் சொல்லோடும் வேறுபாடு இல்லா நிலைமை துணிந்து இருந்தார். அரம்பையர் அவர் முன்னே வேட்கை மீதூர ஆடல் புரிகின்றார்கள். ஆனால் அவரோ,

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமுஞ் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்.

திருஞான சம்பந்தர் அவதாரத்தை, 'பரசமயப் பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்பட, சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார் என்று பாடுகிறார். அவருக்கு அம்மையார் சிவஞானத்தைக் குழைத்தருளி இன்னமுதம் ஊட்டுகிறார். ஊட்டவே அவர் ஆளுடைய பிள்ளை யாராய்ச் சிவஞானசம்பந்தரும் ஆயினார்.

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

இங்கு, சம்பந்தர் கலைஞானம் மெய்ஞ்ஞானம் என்ற இரண்டையும் சக்தி அருளாலே உணர்ந்தார் என்று காட்டுகிறார். இது போலவே, திருஞானசம்பந்தரை அழைக்குமாறு அரசன் ஏவுதலும், பாண்டிமாதேவியாரும் அமைச்சரும் சம்பந்தரைச் சென்று காண்கிறார்கள். காண்பதைச் சேக்கிழார் கூறுகின்ற பாடலில் இரண்டு கருத்துக்கள் மிகவும் சிறப்பாக குறிப்பிடத் தக்கன. ஒன்று, சம்பந்தர் ஞானத்தின் திருவுரு என்பது; மற்றொன்று கானத்தின் எழுபிறப்பு என்பது:

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை,
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை,
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

ஞானத்தின் திருவுரு என்பதை இங்கு விளக்க வேண்டுவதில்லை. ஞானப்பால் உண்ட செல்வராதலால் அவருடைய இளமைத் திருக்கோலம் என்பது ஞானத்தின் திருவடிவம் என்பது எல்லோரும் நன்கு உணரத்தக்கது. பிற்காலத்தில் இவர் தமது திருமணங் காணவந்த அனைவரையும் நயன தீட்சையாலும், ‘காதலாகிக் கசிந்து’ என்ற நமசிவாயத் திருப்பதிகத்தைப் பாடிய வாசக தீட்சையாலும் (ஞானமெய்நெறிதான் யார்க்கும் நமசிவா யச் சொலாம் என்று ஆன பதிகம்) தூய்மை செய்து சோதியுட் புகுந்து முத்திபெறச் செய்கிறார்.

வேதநெறி தழைத்தோங்க வந்தவராதலால், நான்மறையின் தனித்துணை. கானத்தின் எழுபிறப்பு என்பது இங்கு சரித்திரக் கண்ணோடு காண்பதற்குரியது. இடமோ பாண்டி நாடு, மதுரை நகரம். இங்குதான் சரியாக நூறு ஆண்டுக்கு முன் வரையில் இசைத்தமிழை அடியோடு ஒடுக்கிவிட்ட களப்பிரருடைய ஆட்சி நிகழ்ந்திருந்தது. ஆகவே, இங்கு சம்பந்தர் இப்போது தோன்றி, முழுமையும் ஒடுக்கப்பட்ட இசைக்கு உயிர் கொடுத்துப் பாண்டி நாடெங்கும் (சைவம் மணக்குமாறு செய்ததோடுகூட) இசை ஒலிக்குமாறு செய்தார். பாண்டிநாட்டில் சம்பந்தர் செய்த அற்புதங்கள் இரண்டு. ஒன்று வீழ்ந்த சைவசமயத்தை எடுத்து உயர்த்தியது; இரண்டு, அடியோடு ஒடுக்கப்பட்டு மறைந்து போன இசைத்தமிழை எடுத்து உயர்த்தி நிறுத்தியது. முந்தியது எல்லோருக்கும் நன்கு தெரிந்தது; பிந்தியது வரலாற்றுக் கண் கொண்டு பார்ப்போருக்கு மட்டுமே புலப்படும்.

### அருள்

பெரியபுராணத்தில் சிறப்பான ஒரு தன்மை, அது அருளின் திறத்தை எடுத்துப் பேசுவது. அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறும் அருளின் வெளிப்பாடே. அருளைப் பல கோணங் களில் இருந்து அனுபவிப்பதற்கு இப்புராணத்தில் எண்ணற்ற வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அப்பர் சமண சமயம் சேர்ந் ததைக் கூறும்போது, நம்பர் அருளாமையினால் அமண் சமயம் குறுகினார் என்று கூறுகிறார். அவர் தூய சிவ நன்னெறியைச்

சேர்வதற்குத் திலகவதியார் நாதன் அருளை எண்ணுகின்றார். சிவபிரான் சூலை வேதனையை அருளுகின்றார். இங்கு மறக் கருணையைக் காணுகின்றோம். துன்புற்ற மருள்நீக்கியார் பல வகை முயற்சிகள் செய்து சூலைநோய் நீங்காதபோது, ஈசர் அருள் கூடுதலால் திலகவதியார் தாள் சேர்வாம் என்று துணி கிறார். நீற்றறையானது ஐயர் திருவடிநீழல் அருளாகிக் குளிர் கின்றது. அருளே, கயிலை செல்ல விரும்பிய அப்பருக்கு, ஐயாற் றில் சத்திசிவமான காட்சி தருகிறது.

திருஞான சம்பந்தர் மதுரை செல்கின்றார். குலச்சிறையார் கண்டு வணங்கி, பாண்டி நாட்டுக்குத் திருவருள் பேறு உண்டு என்பதைச் சம்பந்தருடைய வரவே உணர்த்துகிறது என்பது ஓர் அரிய பாடலில் புகழ்ச்சியாகக் கூறுகிறார்:

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்;
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றி கொள்திருநீற் றொளியினால் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்" என்பார்.

மதுரை சென்ற சம்பந்தர் சமணரோடு வாது செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டவுடனே, நாம் செய்வோம் என்று துணிந்து விடவில்லை. இறைவன் திருவருளைப் பெறவேண்டும் என்று கருதி அவ்வருள் பெற விரைகிறார். "நான் வாது செய்யத் தீக்கனல் மேனியானே திருவுளமே" என்று கேட்டுத் துதித்து. நாதர் தம் அருள் முன் பெற்று நாடிய மகிழ்ச்சி பொங்க வருகிறார் என்று சேக்கிழார் கூறுகிறார். அவர் ஞானபோதகராயினும், ஒவ்வொரு நிலையிலும், இறைவன் திருவுள்ளத்தை நாடி நிற்பது நோக்கத் தக்கது; அவரே பல சமயம் 'ஆணை நமதே' என்ற வீறு மிக்க வர் எனதுரை தனதுரையாக' என்றும் சொன்னவர்.

நல்லூர்ப் பெருமணத்தில் வந்தவர் அனைவரையும் சம்பந்தர் சோதியுட் புகுந்து முத்திபெறச் செய்தார். ஆனால் மணங்கான வந்தவர் அனைவரும், திருவருளினால் வீடுபெற வந்தார்கள் என்ற கருத்துப்படச் சேக்கிழார் சொல்வதும் கருதத் தக்கது.

# காப்பியல் இயல்

## காப்பியம் – ஒரு பொது நோக்கு

பொதுவாக இலக்கியங்களை நோக்கும்போது, நூலாசிரியர் என்ன நோக்கத்தோடு நூல் செய்தார் என்பதை உணர்ந்து அதன் பின்னரே நூலினுள் புகவேண்டும். எல்லாக் காவியங்களையும் ஒரே நோக்கோடு பார்த்தல் பொருத்தமாகாது. பொதுவான கருத்துக்கள் எல்லாவற்றுக்கும் பொருந்துமேயன்றி, ஒவ்வொரு நூலும் தனிச்சிறப்பு உடையதென்பதை நாம் உணர வேண்டும். நாமாக ஓர் அளவுகோலை அமைத்துக்கொண்டு, அந்த அளவு கோலைக் கொண்டே எல்லாக் காப்பியங்களையும் அளந்து, இது வெற்றி பெறுகிறது, இது வெற்றி பெறவில்லை, இது நிறைவு இது குறைவு என்று சொல்வது, நம் அளவிலும் அளவுகோல் அளவிலும் சரியாகலாம்: ஆனால் நூல் அளவில் சரியாகாது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, கம்பராமாயணம், சூளாமணி, பெரியபுராணம் என்ற ஏழு நூல்களையும் பின்வந்த கந்தபுராணத்தையும் நாம் ஒரு சேரப் பார்க்கும்போது, ஒன்றின் அளவுகோல் மற்றொன்றுக்குப் பொருந்தாமையை நன்கு உணரலாம். சிலப்பதிகாரம், முத்தமிழை யும் தமிழ்நாட்டு மூவேந்தரின் பண்பையும் போற்றுவதற் கென்றே வந்தது. அதனுள் கண்ணகி நீங்க, வேறு பாத்திரப் படைப்பைப் பார்ப்பது பயனுடையதாகாது. மணிமேகலை பௌத்த சமய விளக்கமாக வந்த நூல். பெருங்கதை, தமிழரின் வாழ்க்கை வளத்தை மிகவும் சிறப்பித்துக் காட்டவந்த நூல்; தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் வாழ்ந்த கொங்குவேளிர் ஒரு சமயம் நாடு முழுமையும் சுற்றிப்பார்க்க நேர்ந்தபொழுது, மக்களின் வாழ்க்கை வளத்தையும் செல்வப் பெருக்கையும், மகிழ்ச்சி, துன்பம், கோபம், வீரம் முதலிய பண்பு நலன்களையும் நன்கு அனுபவித்து, தம் மகிழ்ச்சி மிகுதியால் இவற்றை எடுத்து விளக்குவதற்கென்றே நூல் செய்தார்; இங்கு சிறப்பான கதைப் போக்கு உண்டு; ஆனால் பாத்திரப்படைப்பு இல்லை; இந்த நூலினுள் பாத்திரம் என்றால் யூகி, வாசவதத்தை என்ற இரு வரைச் சொல்லலாமே யன்றிக் கதாநாயகனான உதயணனைக் குறித்துச் சொல்லுவதற்கு ஒன்றுமேயில்லை. அடுத்து, சீவக சிந்தாமணியைப் பார்க்கும்போது பாத்திரப் படைப்பு இல்லை, கதைப்போக்கு இல்லை; சைனத்தின் பெயரால் சிற்றின்பத்தைப்

பெருக்கிச் சொல்லும் நூல் என்றே இதைச் சொல்லவேண்டி யிருக்கிறது; ஆங்காங்கு கவிதைப் பண்பு சிறந்து காணப்படுவது மட்டும் உண்மை. சூளாமணி இதற்கு எல்லா அம்சங்களிலும் வாரிசாக வந்தது; அதனுள் கண்ட சைனசமய விளக்கம்கூட இதனுள் இல்லை.

இவற்றின் பின்னர்த் தோன்றிய பெரியபுராணத்தில் முற்றும் வேறான நிலையைக் காண்கிறோம். இங்கு, துண்டு துண்டான கதைப்போக்குத்தான் உண்டு; பெருங்காப்பியம் என்று பலரும் சொல்லிய போதிலுங்கூட, ஒருமைப்பாடுடைய கதைப்போக்கு இதில் முழுமையாக உண்டென்று சொல்லவியலாது. ஆதலால் பாத்திரப் படைப்பும் இதில் இல்லை. இதில் குற்றமும் இல்லை. ஏனெனில், இது முன்னமே உள்ள பாத்திரங்களையும் வரலாறு களையும் கூறுகிறது. புனைந்துரையும் கவிதைச் சுவையும் இங்கு சிறந்து காணப்பட்ட போதிலுங்கூட, அனைத்திலும் மேலாக, அனைத்தையும் ஊடுருவி நிற்பது பக்திச்சுவை என்ற சுவை ஒன்றே. இந்தச் சுவையை உணராதோர் இந்த நூலை ஆராய்ந்து பயனில்லை.

எனவே, இத்தனை வேறுபாடு அமைந்த அடிப்படைகள் இந்த நூல்களுக்கு இருக்கும்போது, இவை அனைத்தையும் காப்பியம் என்ற ஒரே அளவுகோலால் அளந்து பார்க்க முற் படுவது பொருத்தமாகாது. கம்பராமாயணமானது உண்மை யான காப்பியச் சுவைக்கென்றே செய்யப்பட்டது. காப்பியச் சுவைக்கென்றே கதையை அதன் ஆசிரியர் மாற்றிக்கொள்வார். பரம்பொருளின் தன்மையை விளக்க வந்தார் என்று சொன் னாலும், காப்பியப் பண்புக்காகப் பரம்பொருளையே சில சமயம் கைவிட்டு விடுவார். அவர் நூலிலுள்ள ஒவ்வொரு பாத்திரமும் உயிர் பெற்று வந்து பேசும்; அரசனும் பேசுவான் வேடனும் பேசுவான், கூனியும் பேசுவாள், குரங்கும் பேசும், கழுகும் பேசும், இவை மட்டுமா? கங்கையும் பேசும் கடலும் பேசும். ஆதலால் கம்பராமாயணத்தோடு பிற எந்த நூலையும் காப்பியத்துறையில் ஒப்பிட்டுப் பேசுதல் தக்கதன்று.

பிற்காலத்தில் தோன்றிய கந்தபுராணத்தையும் இந்தப் பெருநூல் வரிசையில் சேர்த்துப் பேசுதல் முறை. இது முருகப் பெருமானுடைய பராக்கிரமச் செயல்களைப் பாடுவதற்கென்றே வந்தது. இதைநோக்கும்போது, முருகனுடைய பரத்துவம், அவ னுடைய அருட்செல்வம் என்ற ஒரே கண்ணோடு பார்க்க

வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, இவற்றோடு சைவ சித்தாந்தக் கருத்து வளர்ச்சியும் இங்கு புலப்படும். அந்த அந்த நூல்தரும் சுவையை அந்த அந்த நிலையில் நின்று ஆராய்ந்து காண்பதே ஆராய்ச்சியாளர் செய்யத்தக்கது. போலியான மேலை நாட்டு முறையான வறட்டு ஒப்பீட்டு ஆராய்ச்சியிலிருந்து நாம் விலகக் கற்பது எந்நாளோ!

மற்றும் ஒரு கருத்து இங்கு சொல்லத்தகும். காலத்தின் வேகம் எல்லா நூல்களிலும் புலப்படும். சிலப்பதிகாரம், தமிழில் முத்தமிழும் வளம்பெற்று ஓங்கிய காலத்தில் செய்யப்பட்ட நூல். ஆகவே அங்கே முத்தமிழின் மேம்பாட்டைக் கண்ணுறு கிறோம். இது களப்பிரர் காலத்திற்கு முற்பட்ட காலமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. வையாபுரிப்பிள்ளை ஆராய்ந்து காணுகின்ற பிற்கால எல்லையைவிட மற்றையோர் ஆராய்ந்து சொல்லுகின்ற கி.பி. 2 - 3 நூற்றாண்டுகளே இதற்குப் பொருத்தமாய் இருக்கும் என்று தோன்றுகிறது. மணிமேகலை யானது களப்பிரர் இசைத்தமிழையும் நாடகத்தமிழையும் அகப்பொருளையும் ஒடுக்கிய காலத்தே தோன்றியது ஆதலால் அதனுள் இசையும் இல்லை, நாடகமும் இல்லை, அகப் பொருளும் இல்லை. கதாநாயகியான மணிமேகலை துறவு பூணுகிறாள். இதன் காலம் ஒருகால் களப்பிரரின் இறுதிக் கால மாகிய 6ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதி ஆகலாமோ என்பது சிந்திக்கத்தக்கது. பெருங்கதையைப் பற்றி முன்னமே கூறினோம். சிந்தாமணியும் சூளாமணியும் சைனர் ஒடுக்க காலத்தில் தோன்றிய நூலாதலால், ஆசிரியர் இருவரும் வெறுங் கற்பனைச் செய்திகளையும் கலியாணங்களையும் வளர்த்துக் கொண்டு போகிறார்கள். கம்பராமாயணமானது சோழநாட்டில் சோழர் ஆதிக்கம் குன்றிஇருந்த காலத்தில் செய்த பெருநூல்; புத்தெழுச்சி தலையெடுக்கத் தொடங்குகிறது. ஆகவே கம்பர், வரலாற்றுச் செய்திகள் ஒன்றையும் அமைக்காமல் நாடறிந்த ஒரு பெருங்கதையை எடுத்துகொண்டு அதை ஒரு பேரிலக்கிய மாகச் செய்கிறார். தமக்கு முன் தோன்றியிருந்த சைவ வைணவ அருள் நூல்களை அவர் நன்கறிந்தவராதலால், அவர் தம் நூலைச் சைவ வைணவம் தழுவிய, ஆனால் சைவ வைணவ பேதங் கடந்த, நூலாகச் செய்கிறார்.

ஆனால் பெரியபுராணமோ சோழர் ஆதிக்கம் விரிந்து சிறந்திருந்த காலத்தில் தோன்றியது. நாடெங்கும் கணக்கற்ற

பெருங்கோயில்கள் தோன்றின. அவற்றில் ஆகம வழிபாட்டு நெறிகள் வளர்ந்தன. இறைவன் சந்நிதியில் அருட்பாசுரங்கள் ஒலித்தன. சைவ அடியவர் வாழ்ந்த மடங்கள் பல விளங்கியிருந் தன. கோயில்களில் நாயன்மார் உருவங்கள் பூசிக்கப் பெற்றன. இல்லங்களில் மாகேசுர பூசைகள் நடைபெற்றன. சில நாயன்மார் விழாக்கள் நிகழ்ந்தன. அருங்கலைகளான ஓவியம், சிற்பம், கட்டிடச் சிற்பம், நடனம், இசை என்பன கோயிலின் ஆதரவிலும் சோழர் ஆதரவிலும், வளர்ந்தன. மக்களுக்கு உதவும் கல்வி நிலையங்களும் ஆதுலர் சாலைகளும் கோயில்களையொட்டி வளர்ந்தன. இத்தனையும் கண்ட சேக்கிழார் பக்திப் பெருநூல் பாடினார். பக்தி ஒன்றே அவரை ஆட்கொண்ட பெருந்தத்துவம். அவருக்கு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு கச்சியப்ப சிவா சாரியர் கந்தபுராணம் பாடினார். இவர் மெய்கண்ட சந்தான பரம்பரை தோன்றி, சைவ சித்தாந்த அருள் நூல்கள் தோன்றிய காலத்தை அடுத்து வந்தவர். ஆதலால் இவர் நூலில் முருகப் பெருமானுடைய திருவருள் விலாசத்தோடு கூட, முறையான சைவ சித்தாந்தப் பொருள் மணமும் கமழ்ந்து கொண்டிருக்கும்.

இந்த நினைவு சேக்கிழாரின் பெரியபுராணத்தை ஆராயும் போது நமக்கு இருக்கவேண்டும். மேற்குறித்த எல்லாத் தன்மை யையும் இவர் நூலில் பார்க்க முடியாது: எந்த நூலிலுமே பார்க்க முடியாது.

## நூலின் காப்பியத் தன்மை

சேக்கிழார் தம்நூலைப் பெருங்காப்பியமாகப் பாடினார் என்பது வரலாறு. சேக்கிழாருக்கு முன் காப்பியங்கள் பல - சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி, பாரதவெண்பா, கம்பராமாயணம் - தமிழில் செய்யப்பெற் றிருந்தன. முன்வந்த இலக்கணங்களில் காப்பிய இலக்கணம் சொல்லப்படவில்லை. இன்று கிடைக்கும் பாட்டியல் இலக்கணங் களுள் மிகவும் பழமையானது பன்னிரு பாட்டியல். அதிலும் இது சொல்லப்பெறவில்லை. ஓரளவு சேக்கிழாருடன் சம காலத்து வாழ்ந்து, இதே சோழனது அவைக்களத்தில் அரங் கேறிய தண்டியலங்காரமே காப்பிய இலக்கணத்தைக் கூறுகின் றது. (சேக்கிழார் சுமார் 1140இல் பெரியபுராணம் பாடியிருப்பார் என்றால், தண்டியாசிரியர் சுமார் 1145இல் தம் அலங்காரத்தைச் செய்திருப்பார் என்று முடிவு செய்கிறோம்.) இதுகூறும் பெருங் காப்பிய இலக்கணம் பின்வருவது:

பெருங்காப் பியநிலை பேசுங் காலை,
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி, முன்வரவு இயன்று,
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி,
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்,
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென்று இனையன புனைந்து,
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்த லென்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி,
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து, சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி,
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

தன்னிகரில்லாத் தலைவன் என்று கூறியதற்கேற்ப, இக் காப்பியத்துக்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலைவராகிறார். உபமன்னிய முனிவர், முனிவரும் யோகியரும் வேண்டச் சுந்தரர் சரிதத்தைச் சொல்லத் தொடங்கினார் என்று தொடக்கத்திலேயே குறிப்பிட்டு, இச்சரித்திரம் தடுத்தாட்கொண்ட புராணத்தில் தொடங்கி, இடையே விறன்மிண்டர், பெருமிழலைக் குறும்பர், கலிக்காமர், சோமாசிமாறர், கழறிற்றறிவார் ஆகியோர் புராணங்களின் வழியாக சுந்தரர் கயிலை செல்வதைக் கூறும் இறுதிப் பகுதியாகிய வெள்ளானைச் சருக்கத்தில் முடிகிறது. 4286 பாடல் கொண்ட இப்புராணத்தில் 1062க்கு மேற்பட்ட பாடல்கள் சுந்தரர் வரலாற்றைக் கூறுகின்றன. ஆனால் சம்பந்தர் புராணம் தனியே 1256 பாடல் கொண்டது; திருநாவுக்கரசர் மங்கையர்க் கரசியார் ஆகியோர் வரலாற்றில் சம்பந்தர் வரலாறு கலந்துள் ளமையால் அப்புராணப் பகுதிகளையும் சேர்க்க, பாடல் தொகை இன்னும் அதிகமாகும். எனினும், சம்பந்தர் வரலாறே, எவ்வளவு பெரியதாயினும் ஒரு தனி வரலாறே. பெரியபுராணத்துள் சம்பந்தர் புராண விரிவை நோக்கி, ‘பிள்ளைபாதி புராணம் பாதி’ என்ற ஒரு பழமொழியும் எழுந்துள்ளது. ஆனால் சுந்தரர் வரலாறே முதலும் நடுவும் முடிவுமாக இருப்பதால், நூலே சுந்தரர் சரிதம் என்பது ஓரளவு பொருத்தமேயாகும்.

தனித்தனியான தொண்டர் தம் வரலாறுகளைத் தொகுத்துரைக்கும் நூலுக்கு நாட்டுப் படலம் நகரப் படலம் முதலியன தேவையில்லை. இவ்வுறுப்புக்களைக் காப்பியங்களில் அமைத்துப் பாடியிருப்பதைச் சிந்தாமணி கம்பராமாயணம் சூளாமணி போன்ற காப்பியங்களில் காணலாம். பெரியபுராணத்தில் திருமலைச் சிறப்பு திருநாட்டுச்சிறப்பு திருநகரச்சிறப்பு முதலியன அமைத்திருப்பது, சேக்கிழார் தம் நூலை ஒரு காப்பியமாகவே கருதிப் பாடினார் என்று நம்மை எண்ணச் செய்கிறது. திருக்கூட்டச் சிறப்பு என்ற பகுதி பின்னால் சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடும் நிலைக்குத் தோற்றுவாயாக அமைத்துக் கொள்ளப்பட்டது.

தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம் இதனுள் நன்கு பொருந்தி இருக்கக் காணலாம். இந்த நூலைத் தனிப் பெருங்காப்பியம் என்று கருதாவிட்டாலுங் கூட, காப்பியத் தன்மை முழுவதும் அமைந்த நூல் என்று கருதுவதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. சேக்கிழார் இந்த நூலை எடுக்கு மாக்கதை (3) என்று தொடங்குகிறார். இது பெரியபுராணம் என்று நாம் கருதுகிறோம். சுப்பிரமணிய முதலியார் இதையே பெருங்காப்பியம் என்று பொருள் செய்கிறார். திருக்கயிலாயத்தினின்றும் திருவாணையின்படி ஒரு குறித்த காரியத்தின் பொருட்டு நிலவுலகிலே அவதரித்தருளிய சுந்தரமூர்த்திகள் இரு தேவியர்களை மணந்தும், உலகமுய்யும்படி திருத்தொண்டத் தொகையை அருளியும், பல பதிகளிற் சென்று வழிபட்டும், உலக உபகாரமாகப் பல அற்புதச் செயல்கள் நிகழ்த்தியும், மீளக் கயிலை சென்று சேர்கின்றார் என்ற சரிதமே இதனுட் பேசப் பெறுகின்றது. இது ஒரு பெருங்காப்பியமேயாகும்.* காப்பியத்தினுள் ஒருமை என்ற கருத்து நூல் போலத் தொடர்ந்து வரவேண்டும். இதற்குச் சான்றாக இக்காப்பியத்துள் திருமலைச் சிறப்புப் பகுதியை அறிஞர் குறிப்பிடுகிறார். இங்கு கயிலாயத்தின் தாழ்வரையில் உபமன்னிய முனிவர் பத்தராய முனிவர் பல்லாயிரர் சுத்தயோகிகள் சூழ இருந்தபோது அங்கு ஆயிரம் ஞாயிறு போன்ற ஒரு பேரொளி தோன்றிற்று. இது என்ன அதிசயம் என்று அவர்கள் கேட்க, ‘தென்திசை வந்த வன் தொண்டன் எந்தையார் அருளால் கயிலாயம் அணைகின்றான்’ என்று உபமன்னியர் சொல்லி எழுந்து அத்திசை நோக்கிக்

---

* சி.கே. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார் 1962, பக்கம் 151 - 172.

கைகூப்பித் தொழுதார். முனிவர்கள், 'சிவபிரானை அன்றி வணங்காத நீர் இப்போது வணங்குவதென்?' என்று கேட்க, முனிவர்,

தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்.

என்றார். கேட்ட முனிவர்கள், 'அவர் வரலாற்றை எங்களுக்கு உணர்த்த வேண்டும்' என்று வேண்ட, அவர் அவ்வாறே கூறத் தொடங்கி, சுந்தரர் முன்னமே கயிலாயத்தில் ஆலால சுந்தரராய் இருந்து இருமாதர் மேல் மனம் வைத்தமையால் பூலோகத்தில் வந்து பிறந்து மீண்டும் கயிலாயம் அடைந்த வரலாற்றை உரைத்தார். இவ்வாறு வன்தொண்டர் செய்கையை உபமன்னியர் கூறியதையும், அவ்வன்தொண்டர் பாடிய சரித்திரங்களையும் குறிப்பிடுகின்றமையால் இப்பெரியபுராணம் ஒரு காப்பியம் என்று கருதப்படும்.

தண்டியலங்காரம் கூறும் இலக்கணங்களை மேலும் பார்க்கும்போது, இந்நூலுள் வாழ்த்தும் வணக்கமும் எங்குமே பேசப்படுகின்றன. உலகெலாம் என்ற முதற் பாடல் அம்பலத் தாடுவான் மலர்சிலம்படியை வாழ்த்தி வணங்குகின்றது. இதனுள் கூறப்படும் பொருள் அடியார்களுடைய செயற்கரும் செய்கையைக்கூறி அவர்களை வாழ்த்தி வணங்குதலேயாகும். மேலும், புராணம் தோறும் ஆசிரியர் இறுதிப்பாட்டின் முதல் இருவரிகளால் அந்த அடியவரை வணங்கி அப்பால் செல்கிறார். இலக்கணப்படி பார்க்கும்போது, 'மேய இவ்வுரை' (8) என்பது அரங்கேற்றத்தையும், அடுத்தது 'அருளின் நீர்மை' என்பது நூற்பொருளையும், அடுத்து 'இங்கிதன் நாமம் கூறின்' என்பது நூற்பெயரையும் கூறுவனவாகும்.

இனி, இப்புராணம் காப்பிய இலக்கணப்படி அறம் பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் பயப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. அறத்தில் இல்லறம் துறவறம் என்ற இரண்டுமே இங்கு விளக்கப்படுகின்றன. அறம், இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றையும் தருவது. பொதுவான அறத்தை விளக்குவதற்கு ஆசிரியர் இங்கு மனுநீதிச் சோழன் வரலாற்றை அடிப்படையாகக் கொள்கிறார். அறமாவது இங்கு நீதி. இதை ஒரு தனித் தலைப்பாக விளக்கியிருக்கிறோம். இச்சோழன் பெயரிலேயே நீதி என்ற சொல் அமைந்துள்ளது. இனி வேறு

கண்ணோடு பார்க்கும்போது, அறமாவது இல்லறம் துறவறம் என இரண்டு. இல்லறச்சிறப்பு சிறுத்தொண்டர் இளையான் குடி மாறர் போன்றார் வரலாற்றாலும், துறவறச் சிறப்பு அப்பர் வரலாற்றாலும் நன்கு உணர்த்தப்படுகின்றன.

வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய பொருளானது நாயன்மார் அறம் செய்ததைக் கூறிய இடங்களில் எல்லாம் சிறப்புறச் சொல்லப்பட்டுள்ளது. நாயன்மார் பலர் மேலான பொருள் இறை வழிபாடே என்றுணர்ந்து, பொருட்செல்வம் முழுமையும் அவ்வழிபாட்டிற்கே ஆக்கி, அதன் பயனாய்ச் சோதனையாகக் கொடிய வறுமை உற்ற இடத்தும் தம் கடப் பாட்டில் வழுவாது துன்பத்தை ஏற்று வந்தனர் என்று ஆசிரியர் கூறுகின்றார். அரிவாள், தாயர், இளையான்குடி மாறர், கணம் புல்லர், குங்குலியக் கலையர், மூர்த்தி நாயனார் முதலியோர் வரலாறுகள் குறிப்பிடத்தக்கன. இனி அகப்பொருள் புறப் பொருள் என்று கூறுமிடத்து, அகப்பொருளின் விரிவு முழுமை யும் சுந்தரமூர்த்தியின் மணவாழ்க்கை வாயிலாகக் கூறியுள்ளார். புறப் பொருளான போர்த்திறம் போன்றவற்றை இயற்பகை, புகழ்ச் சோழர், ஏனாதிநாதர் முதலியோர் வரலாறுகளில் விரித்துக் கூறியிருக்கிறார்.

இன்பத்தைக் கற்பியலிலே வைத்து மனையறம் காத்த செய்தியாகப் பலர் வரலாற்றிலும் காட்டியுள்ளார். இளையான் குடி மாறனார், அரிவாள் தாயர், சிறுத்தொண்டர், குங்குலியக் கலையர், திருநீல நக்கர் ஆகியோர் மனைவியரைக் குறிப்பிடும் போதும், எவ்வாறு தங்கள் நாயகரின் சிவப்பணிக்கு இவர்கள் உதவினார்கள் என்பதைக் கூறும்போதும், இன்பத்தால் விளையும் மனையறத்தின் சிறப்பை மிக நன்றாக உணர்த்தியிருக்கிறார். மனையறத்தைக் குறித்து இவர் குறிப்பிடும் தொடர்கள் சொல்லழகில் இணையில்லாதவை. பொய்கடிந்து அறத்தின் வாழ்வார் .... மெய்யடியார்கட்கான பணிசெய்யும் விருப்பில் நின்றார், வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார், விருந்து எதிர் கொள்ளும் பீடு தங்கிய பெருங்குடி மனையறம் என்பன காண்க.

ஆனால் சேக்கிழாரின் நோக்கம், அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் முடிவான பொருள்கள் அல்ல, வீடு ஒன்றே முடிவான பொருள். மற்ற மூன்றும் அவ்வீடுபேற்றை நோக்கிச் செலுத்த வேண்டுவன என்று வலியுறுத்துவதே என்பதை மறுக்க

இயலாது. புராணம் முழுமையும் இதைக்கூற எழுந்ததே; இதை நூலகத்து ஒவ்வொரு புராணத்தும் காணமுடியும். 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங் கினார்' என்று திருக்கூட்டத்தைச் சிறப்பித்து ஆசிரியர் பாடுவது, வீட்டிலும் மேலான நிலையைக் காட்டுகிறது.

தன்னிகரில்லாத் தலைவன் இந்நூலுக்குச் சுந்தரர் ஆவர். மலை - திருமலைச் சிறப்பில் பேசப்படும் கயிலைமலை. கடல் - அதிபத்த நாயனார் வரலாறு. நாடு - சோழநாடு, திருநாட்டுச் சிறப்பு. வளநகர் - திருவாரூர், திருநகரச்சிறப்பு. ஐந்திணையும் ஆங்காங்கு உணர்த்தப்பெறுகின்றன. பருவம், இருசுடர்த் தோற்றம் முதலியன பலவிடங்களிலும் புனைந்துரைக்கப் படு கின்றன. நன்மணம் புணர்தல் - அதுவே பொருளாய்ச் சுந்தரர் வரலாற்றில் விரித்துரைக்கப்படுகிறது; சம்பந்தர் புராண இறுதி யிலும் உள்ளது. பொழில் விளையாட்டு முதலாயின. சேரமான் புராணத்தில்; முடி கவித்தல் சேரமான், கூற்றுவர், மூர்த்தி நாயனார் புராணங்களில். புலவி முதலியன சுந்தரர், திருநீல கண்டத்துக் குயவனார் புராணத்தில். மந்திரம் - மனுநீதிச் சோழன் வரலாற்றில் தூது - சுந்தரர் வரலாற்றில். இகல் வென்றி என்பன புகழ்ச்சோழர் வரலாறு போன்றவற்றில். காப்பியப் பகுதிகள் சருக்கம் புராணம் என்ற பாகுபாட்டை உடையன. இவ்வாறு இப்புராணம் பெருங்காப்பியத்துக்குக் கூறப்படும் இலக்கணம் முழுமையும் பொருந்தியுள்ளது என்பது ஆன்றோர் கருத்து. மேலைநாட்டார் பலர் காப்பியத்தின் தன்மைக்கு இலக்கணம் கூறும்போது சில கருத்துக்களைக் கூறுவார்கள். தொடர்ந்த வரலாற்றைக் கூறும் கவிதையுள், காப்பியமானது பெருமித நடையும் விரிந்த அமைப்பும் கொண்டது. கிரேக்க மொழியில் காவியம் பொதுவாக அறுசீர் நடையில் அமைந்தது. இவ்வகைக் காவியங்கள், போரையும் சொந்தக் காதல் வீரம் போன்றவற்றையும் புனைந்துரைப்பதோடு அமையாது, ஒழுக்கத் தையும் சமய உணர்வையும் பெருக்குவதற்கென்றே ஏற்பட்டன. இவற்றின் போக்கு கதைப்போக்கு. நூல் பெருநூல். கால எல்லை மிக நீண்டது. சம்பவங்கள் குறைவாகவும் இருக்கலாம். மேலை நாட்டில் கிரேக்க மொழியிலிருந்தே காவியங்கள் தோன்றின என்று பொதுவாய்க் கருதப்பட்டு வந்தபோதிலுங் கூட, காப்பியத் துக்கு வித்து இந்திய வேதத்திலும் இராமாயண பாரதத்திலும் உள்ளன என்று மேலை நாட்டார் சிலர் கூறியிருக்கின்றனர்.

## தமிழ்ப் பற்று

சோழர் ஆட்சி ஓங்கியிருந்த காலத்தில் சோழ அமைச்சராயிருந்த சேக்கிழாரிடம் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஓங்கியிருந்தமை சொல்வது மிகை. செந்தமிழ் நாடு என்பது சோழநாடே என்றும், நாடு எனப்படுவது சோழநாடு என்றும் 11ஆம் நூற்றாண்டில் யாப்பருங்கலக் காரிகை உரைசெய்த குணசாகரர் எழுதினார். அடுத்து வந்த சேக்கிழாருக்கு அந்த நினைவு இருத்தல் இயல்பே. மேலும் புராணத்தில் சோழர் வரலாறுகள் பல. சோழநாட்டில் ஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்தார் என்று சொல்லவந்தவர் ஏழு பாடல்களில் அதைச் சிறப்பிக்கிறார். பல கருத்துக்களுள், வண்தமிழ் செய்தவம் நிரம்ப, திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற, அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல ... ... பிள்ளையார் திரு அவதாரம் செய்தார் என்கிறார்; திருமறையும் தீந்தமிழும் சிறக்கவரு நாயகனைத் தாய்மார் தாலாட்டுகிறார்கள். சம்பந்தர் வரலாறு முழுமையிலும் தமிழும் இசையும் விதந்து ஓதப்படுகின்றன. இதுபோல, நூலின் தொடக்கத்தில், திருமலைச் சிறப்புப் பகுதியில், ஆலால சுந்தரர் கயிலையில் மலர் கொய்த மாதர் மேல் மனம் போக்கினார் என்பதை, மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட மனம் போக்கினார் என்கிறார்.

சேக்கிழாருடைய பற்று குறுகிய சோழநாட்டுப் பற்றன்று; விரிந்த தமிழ்நாட்டுப் பற்று. மதுரையையும் பாண்டிநாட்டையும் பலவகையாலும் பாராட்டிப் பாடுகிறார். 'காப்பிய மும்மைத் தமிழ் தாங்கிய அங்கண் மூதூர் மதுரை' என்பார். அந்நாட்டில் 'மலயந்தரவந்த மந்த - மெய்வைத்த காலும் தருஞாலம் அளந்த மேன்மைத் -தெய்வத் தமிழும் தருஞ் செவ்வி மணஞ்செய் ஈரம்' என்பார். மதுரையில் அகப்பொருள் தந்த இறையனார் உள்ளார் என்பதை,

> மும்மைப் புவனங் களின்மிக்கதன் றேஅம் மூதூர்
> மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின்வி ளங்கு வாய்மைச்
> செம்மைப் பொருளும் தருவார்திரு ஆல வாயில்
> எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம்இ ருந்த தென்றால்.

என்று குறிப்பிடுகிறார்.

தென்றற் காற்றுக்கூட இவருக்குத் தமிழ் மாருதமாகவும் செந்தமிழ் மாருதமாகவும் வீசுகிறது. அதிகையில் சித்தவட மடத்தில் நம்பியாரூரர் உறங்க, அவர் தலைமீது கால் நீட்டிய பெருமான் தம் மூப்பினால் அறியவில்லை என்றபோது, 'தன்முடி யப்பால் வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன்' என்று சுந்தரரைக் குறிப்பிடுவார். சுந்தரரைத் தம்மைப் பாடச்சொன்னபோது, 'சொற்றமிழ் பாடுகென்றார். தூமறை பாடும் வாயார்' என்பார். சம்பந்தரைக் குறிப்பிடும்போது எல்லா இடங்களிலும் தமிழை யும் இசையையும் தொடர்புபடுத்தியே குறிப்பிடுவார்; புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார், திருமறையும் தீந் தமிழும் சிறக்க வருநாயகன், இயலிசைத் தலைவனார், சந்த முத்தமிழ் விரகர், ஏழிசையும் பல கலையும் எவ்வுலகுந் தனித் தனியே வாழவருபவர், மதுர முத்தமிழ் வாசகர் என்ற தொடர்கள் காண்க.

### பிற நூல் ஒப்புமை

மண்ணிற் கடலில் மலையிற் பெரிது எது என்ற கேள்விக்கு விடையாகச் சேக்கிழார் திருக்குறளை எடுத்துத்தந்தவர் ஆதலால், அவருக்குத் திருக்குறள் மிகவும் எளிதாகப் பயன்பட்டிருக்கும், 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' என்ற குறளை,

> அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
> பரவரும் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
> விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
> வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்.

என்பதில் அமைத்துள்ளார். காரைக்கால் அம்மையார் புராணத் தில், 'இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார், பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும், மறவாமை வேண்டும்' என்று பாடியிருப்பது,

> வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
> வேண்டாமை வேண்ட வரும்.

என்ற குறளைக் கொண்டது. 'காண தகைமை யின்றியுமுன் கலந்த பெருங் கேண்மையினார்' (1437) என்று அப்பூதியடிகளைக் குறித்துச் சொல்லியிருப்பது, 'புணர்ச்சி பழகுதல் வேண்டா' என்ற குறளைக் கொண்டது. 'புண்டரிகத்தவள் வனப்பைப் புறங்கண்ட

தூநலத்தைக் கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றமர்ந்திருந்தார் காதலினால்' (3426) என்ற ஏயர்கோன் புராணப்பாடல், 'கண்டு கேட்டுண்டுயிர்த்து' என்ற குறளை அமைத்தது. பின்னும் பல.

'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணை' என்ற திருவாசகக் கருத்து, சண்டேசர் புராணத்தில் 'ஈறிலாதார் தமக்கன்பு தந்த அடியார் செய்தனவே தவமா மன்றோ' என்று வருகிறது. தொல்காப்பியக் கருத்தையும் சேக்கிழார் சுட்டிப் பாடுகிறார். 'மாயோன் மேய காடுறை உலகம்' என்பது தொல்காப்பியம்; இதை 'முல்லையின் தெய்வ மென்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண் மால்' (1100) என்ற வரியில் காணலாம்.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (312) பொன்முடியார் என்ற அம்மையார் ஒரு காளையின் கடமைகளைக் குறிப்பிடுகின்றார்; அங்கு 'நன்னடை நல்கல்* வேந்தற்குக் கடனே' என்று சொல் கிறார். இது சங்ககாலக் கருத்து. சேக்கிழார் காலம் ஆயிரம் ஆண்டுக்குப் பிற்பட்டது. இக்காலத்தில் சோழ அரசு மேலோங்கிச் சிற்றூர் தோறும் ஊர்ப் பொதுச்சபைக்குப் பெரும்பொறுப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இக்காலத்து வாழ்ந்த சேக்கிழார் இதை நன்குணர்ந்து அரசன் செய்யவேண்டிய கடமையை ஊருக்கு ஏற்றிச் சொல்லுகிறார். மேலும் இங்கு கருதத்தக்கது, சோழர் பேரரசின் விரிவு. தமிழ் வழங்கிய நிலமெங்கும் இக் காலத்தில் சோழர்ஆட்சி நிலவிற்று. சங்ககாலத்தில் இப்படி இல்லை: சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவர் ஆட்சி. ஒவ்வொருவர் ஆட்சியும், குறுகிய நிலப்பரப்பில் மட்டுமே. அங்கு நன்னடை நல்குவது வேந்தர்க்கு எளிதாய் இருந்திருக் கலாம். ஆனால் கன்னியாகுமரி முதல் வேங்கடம் வரையிலும் ஆட்சிபுரிந்த சோழருக்கு நேர்முகமான பரிபாலனம் முழுமையும் இயல்வதன்று, ஆதலால் ஆட்சிப்பொறுப்பு ஊர்ச்சபைக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு இருந்தது. இதை நன்குணர்ந்தே சேக்கிழார் உருத்திர பசுபதிநாயனார் புராணத்தில் திருத்தலையூர் என்ற ஊரைக் குறித்துச் சொல்லும்போது, புறநானூற்றில் சொன்ன நன்னடை என்ற கருத்தை விளக்கி, "அவ்வூர் தான் அளிப்பன தருமமும் நீதியும் சால்பும்" என்று அமைத்திருக்கிறார்.

---

* நன்னடை நல்கல் என்று ஐயர் அவர்கள் கொண்ட பாடத்தைத் தண்ணடை நல்கல் என்று எஸ். ராஜம் பதிப்பு கொண்டிருக்கிறது.

*திருச்சேய்ஞலூரில் வாழ்கின்ற அந்தணருடைய ஒழுக்கத்தை மிகவும் சிறப்பித்து ஒரு பாடலால் சேக்கிழார் உரைக்கின்றார்:*

செம்மை வெண்ணீற் றொருமையினார்,
இரண்டு பிறப்பின் சிறப்பினார்,
மும்மைத் தழலோம் பியநெறியார்
நான்கு வேதம் முறைபயின்றார்,
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார், அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது. 1212

*இங்கு சேக்கிழார் ஒன்று முதல் ஏழு வரை உள்ள எண்கள் நிரலே வருமாறு மறையோர் ஒழுக்கத்தைக் குறிப்பிடுகின்றார். இது பெரும்பான்மை அப்படியே சிலப்பதிகாரத்தில் பயின்றிருப்பது இங்கு காணத்தகும். பராசரன் என்ற பார்ப்பான் சேரனுடைய கொடைத்திறன் கேட்டு அவனைக் காணவந்த இடத்து அவனுக்கு உரியமுறைகளை வகுத்துக் கொடுக்கின்றார்கள் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்:*

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெருமுறை வகுக்க.

*பெரியபுராணப் பாடல் ஒன்றுக்கும், அவ்வையார் பாடல் ஒன்றுக்கும் உள்ள ஓர் ஒற்றுமையைக் குறிப்பிடுவது பொருத்த மாகும். 'வேழமுடைத்து மலைநாடு' என்ற தனிப்பாடலில், 'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று அவ்வையார் பாடியிருக்கிறார். இவர் பாடியது தனிப் பாட்டு. பெரியபுராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் வரலாறு கூறும் அவதாரிகையில் சேக்கிழார் தொண்டை நாட்டின் பெருமையை மிகவும் விரிவாகக் குறிப்பிடுகிறார். சேக்கிழார் தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் பிறந்தவராதலால், தாம் பிறந்த நாட்டைப் பெருமைப்படுத்தி விரித்துரைப்பது இயல்பே யாகும். அவர் அமைச்சர் பதவி பெற்றிருந்தது சோழநாடு. சோழ நாட்டின் சிறப்பைப் பெரியபுராணத்தின் முகப்பில் திருநாட்டுச் சிறப்பு என்ற படலத்தில் விரித்துப் பாடியிருக்கிறார். பின்னர் சந்தர்ப்பம் கிடைத்தபொழுது, தொண்டை நாட்டின் சிறப்பைப் பாடியிருக்கிறார். ஒரு பாட்டு பின்வருவது:*

ஆய நானிலத் தமைதியில் தத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களில் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட்டியல் சொல்வரைத்தோ.

இங்கு, 'தீயவை என்பது கனவிலும் நினைக்காத தூய சிந்தை உள்ள மாந்தர் வாழ் தொண்டைநாடு' என்று குறிப்பிடுகிறார். இக்கருத்து 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று அவ்வையார் பாடியதற்கு விளக்கவுரைபோல் அமைந்திருப்பது நன்கு புலப்படும். அவ்வையார் பாடிய பாடலின் கருத்து சோழரவையில் நன்கு தெரிந்திருக்கிறது. அரசர் அவையில் அமைச்சராயிருந்த சேக்கிழார், அவ்வை பாடலில் தொண்டை நாடு பற்றிக் கூறிய ஒரு கருத்தை மட்டும் எடுத்துச் சொல்லிப் பயன்படுத்திக் கொண்டார் என்று நாம் சொல்லலாம். இதனால் சேக்கிழார் பெருமைக்குக் குறைவில்லை. சேக்கிழார் நூலை அவ்வையார் பார்த்துப் பாடினார் என்று சிலர் கருதுதலும் கூடும். ஒரு கருத்தை எடுத்து அதனோடு பலவற்றைச் சேர்த்து அவ்வையார் ஒரு பாடல் பாடினார் என்பதைவிட, பல கருத்துக் களை உள்ளடக்கிய ஒரு தனிப் பாடலிலிருந்து சேக்கிழார் தமக்கேற்ற ஒரு பகுதியை எடுத்துக்கொண்டார் என்று கருது வதே இலக்கிய மரபுக்குப் பொருந்துவதாகும். இவர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் (1133 - 50) வாழ்ந்து சுமார் 1140இல் தம்முடைய பெருநூலைப் பாடினார் என்று நாம் கருதும்போது, இவருக்கு முந்தியவரான அவ்வையார் சுமார் 1120 ஆகிய கால எல்லையில் இப்பாடலைப் பாடினார் என்று கொள்ளலாம். அவர் நீண்ட ஆயுளோடு வாழ்ந்தார் என்பதில் ஐயமில்லை; ஆகவே, பல சோழர் காலத்தில் வாழ்ந்திருக்கக் கூடும். சேக்கிழார் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும்கூட அவர் வாழ்ந்திருந் தார் என்பது ஒப்புக்கொள்ளத் தக்கதே.

இப்படி இவ்வம்மையார் வாழ்ந்திருந்தாரெனில், ஏன் இப் புலவர்கள் ஒருவரை ஒருவர் தங்கள் நூல்களில் குறிப்பிடவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இதற்குப் பல காரணங்கள். ஒன்று, எல்லா ஆசிரியர்களும் செய்த எல்லா நூல்களும், பாடிய எல்லாத் தனிப் பாடல்களும் நமக்குப் பூரணமாகக் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் கிடைத்த சிற்சில பாடல்களை வைத்துக்கொண்டு நம் காலத்திற்கு நெருங்கி வாழ்ந்த பெருமக்கள் பல கதை

களைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். இவற்றுக்கிடையே நாம் உண்மையைக் காண வழியில்லை. மற்றொன்று, இப்புலவர்களெல்லாம் வெவ்வேறு விதமான வாழ்க்கை உடையவர்கள். அவ்வையார் வயது மிக்க மூதாட்டி. ஓரிடத்தில் இல்லாமல் எல்லா இடங்களிலும் சுற்றிக் கொண்டிருந்தவர். (ஓர் அவ்வையார் மட்டுமல்ல; எல்லா அவ்வையாருமே இப்படியிருந்தார்கள். இந்த இயல்பு பற்றித்தான் போலும் ஒருவருக்கேனும் இயற்பெயர் விளங்காதபடி, அவ்வை என்ற பலரறி சுட்டாக அவர்கள் பெயர் இருந்து வருகிறது.) ஒட்டக்கூத்தர் அரசவையில் ஆடம்பரத்தோடு வாழ்ந்த முதிய பெரும்புலவர். சேக்கிழாரோ அவரினும் இளைஞர், சிறந்த பக்திமான்; கவிஞராயினும், வழிபாட்டிலும் சிவநெறியிலுமே நின்றவர். எனவே, இவர்கள் வாழ்க்கை ஒன்றோடொன்று குறுக்கிடவில்லை. இதுவே ஒருவரையொருவர் பாடாமைக்கும் தம் நூல்களில் குறிப்பிடாமைக்கும் காரணங்களாகும் என்று முடிவு செய்யவேண்டும்.

19ஆம் நூற்றாண்டில், சிவஞான சுவாமிகள் சரிதம் பாட வந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், மெய்கண்டாரில் தொடங்கிய இடத்து, அவர் பிறந்த நாட்டைச் சொல்லத் தொடங்கியபோது, சேக்கிழார் பாடலின் கருத்தையே அமைத்துப் பாடுகிறார்:

மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால், நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு?

இது பெரியபுராணம்; இங்கு அப்பர் சுந்தரர் சொல்லப்பட்டனர்; பிள்ளையவர்கள் இவ்விருவரோடு, இதே நாட்டில் பின்னர்ப் பிறந்த மெய்கண்டாரையும் அருள்நந்தி சிவத்தையும் சேர்த்துக் குறிப்பிட்டார்:

மருவுலகம் களிதூங்க வண்சமயா சாரியராம்
இருவருமே சந்தானத் திருவர்களும் அவதரிக்கப்
பெருகுதவம் செய்ததெனில் பிறங்குவள நடுநாட்டின்
அருகுதவிர் சிறப்புரைக்க அடியேனால் ஆகுவதோ?

(பின்னால் ஆகாமலே போய்விட்டது; இவர் இவ்வரலாற்றில் இதற்குமேல் பாடாமலே பிள்ளை இறந்து விட்டார்.)

## நாடகப் பண்பு

சிறந்த கவிதையின் இலக்கணங்களில் ஒன்று, சிறந்த வரலாற்றில் தொடர்ந்துவரும் செய்தி நாடகப்பாங்கில் அமைதல் வேண்டும் என்பது, பண்டைய கவிதைகளில் பல, நான்கு வரியில் ஒரு பெருநாடகம் நடத்திக்காட்டும். திருக்குறள்கூட இரண்டே வரிகளில் ஒரு சிறுநாடகம் நடத்திக் காட்டுகிறது. கம்பராமாயணமானது தொடர்ந்த செய்யுட்களால் மிக நீண்ட ஒரு இதிகாசக் கதையைத் தனித்தனிக் காட்சிகளாக, மதிப்புயர்ந்த அணி கலத்தில் அழுத்தப்பெற்ற தனி மணிபோல நாடகக் காட்சிகளாகக் காட்டுகிறது. இத்தன்மையைச் சிறிதும் குறைவின்றிச் சேக்கிழாரும் தமது புராணத்தில் அமைத்திருக்கிறார். இந்த நாடகப்பாங்கு கவிதைக்கு ஏற்றமளிக்கிறது.

இதற்கு எல்லோரும் எளிதில் குறிப்பிடுகிற எடுத்துக்காட்டு தடுத்தாட்கொண்ட புராணப் பகுதி. மூத்த வேதியர் வருகிறார். முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான், மணத்தொழில் தொடங்கும் பந்தரிடையே வந்து, நம்பியாரூரர் முன்னே நின்று இந்த மொழி கேண்மின்எதிர் என்று கூறுவது தொடங்கி திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்துக்குள் புகுந்து மறைந்தது வரையில், 41 பாடல்களில் சேக்கிழார் ஒரு சிறு ஒற்றை அங்க நாடகம் நடத்திக் காட்டுகிறார்; நூலைப் படிக்கின்றவர்களுக்கும் நாடகமாக மனத்தில் எண்ணிக் காணுகின்றவர்களுக்கும் இது நாடகம் என்பது தெரியும் நம்பிக்குத் தெரியாது; ஆகவேதான் சுவை விளைகிறது. இந்த நிகழ்ச்சியைப் பிறிதோர் இடத்தில் விளக்கி இருக்கிறோம்.

இதை ஒத்ததே பெருமான் தொண்டரிடம் வந்து வல்வழக்குப் பேசும் ஒவ்வோர் இடமும். நீலகண்டத்துக் குயவனார் வைத்த ஓடு மறைந்துவிட்டது. தாம் வைத்த ஓடே வேண்டுமென்று தொண்டர் அடம் பண்ணுகிறார்:

'ஆவதென், உன்பால் வைத்த அடைக்கலப்
பொருளை வௌவிப்
பாவகம் பலவும் செய்து பழிக்கு நீ
ஒன்றும் நாணாய்,
யாவரும் காண உன்னை வளைத்து நான்
கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன்' என்றான், புண்ணியப்
பொருளாய் நின்றான்.

இங்கு இறைவனே பழிக்கு நாணாது பலவும் செய்கிறான் என்பதை நாம் காண்கிறோம். மகனைப் பற்றி மூழ்கு, மனைவியைப் பற்றி மூழ்கு, பேரவைக்கு வா என்று சொல்லி, பிறகு அவர் மனைவியோடு தண்டு இருதலையைப் பற்றி மூழ்கி இளமைக் கோலத்தோடு எழுகின்ற வரையில் நாடகம் நடக்கிறது. அடுத்து, மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் முத்தநாதன் நீறு பூசி நாடகமே நடிக்கிறான். பயங்கரமான ஒரு துயர நாடகம் அங்கு நடக்கிறது. எறிபத்தநாயனார் வரலாறும் இத்தகையது. காரைக்கால் அம்மையார் மாங்கனி வரவழைத்துக் காட்டுவது மற்றொரு நாடகம். அப்பர் சுவாமிகள் அப்பூதி அடிகளை நோக்கி 'நீர் செய்த தண்ணீர்ப்பந்தர் முதலியவற்றில் உம்பெயர் எழுதாமல் வேறொரு பெயர் எழுத வேண்டியதன் காரணம் என்ன?' என்று கேட்கிறார். அப்போது அப்பூதியடிகளுக்கு வருகிற சீற்றத்தைச் சேக்கிழார் வாய்மொழியாகவே காண்போம். முதலில் வருத்தமாகத் தொடங்கி முடிவில் பெருங் கோபமாய்ப் போய் நிற்கிறது:

"நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்,
நன்றருளிச் செய்திலீர்: நாணில் அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ, வேறொரு பேர்?" எனவெகுள்வார்.

"நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர் எழுத,
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்!" எனவிளம்பி.

"பொங்குகடற் கல்மிதப்பில் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர் தம் புவனத்தில் அறியாதார் யாருளரே?
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகை மொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர் தாம்யார்? இயம்பும்" என இயம்பினார்.

சேக்கிழார் வாக்கிலுள்ள சிறந்த நாடகப் பண்பையும் அதன் மூலம் காவியப் பண்பையும் இவை நன்கு தெரிவிக்கின்றன. வேறு எடுத்துக்காட்டுக்கள் மிகை.

### கவிதை இயல்

பெரியபுராணம் ஒரு பெருங்காப்பியம் என்று பலர் எவ்வளவுதான் முயன்று சாதித்த போதிலும்கூட, பின்னும் பலருக்கு அதை ஏற்றுக் கொள்ளவியலாத நிலை இருப்பது

இயல்பே. அது சைவப் பெருநூல் என்றமையினாலே, பெருங் காப்பியம் என்று சாதிப்பது அவசியமில்லை. பெருங்காப்பியத் துக்கு மேலைநாட்டுத் திறனாய்வு முறையின்படி அமைய வேண்டியதாகிய பாத்திரப் படைப்பு என்பது இங்கு அமைய வில்லை. இக்கருத்தை வேறிடத்திலும் சொல்லியிருக்கிறோம். ஆனால், இந்நூலின் பெருந்தத்துவம், பக்திப் பண்போடு கவிதைப் பண்புமாகும்.* எல்லாச் சரிதங்களிலுமே கவிதைப் பண்பு மேலோங்கி நிற்பதை உணரமுடியும். பக்திகூட, பொருளில் ஓரளவுதான் இருக்கிறது. பொருளை வெளியிடும் முறையில் அதிக அளவு இருக்கிறது; இதுவே கவிதை.

சேக்கிழார் பற்றிய இக்கட்டுரையில் வெவ்வேறு தலைப்புக் களில் மேற்கோளாகத் தந்துள்ள பாடல்கள் யாவுமே அவருடைய கவிதைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இருப் பினும், இங்கு தனியே இரண்டொன்றைக் காட்டுகிறோம். சேக்கிழார் வாக்கில் அகப்பொருளும் பக்திப் பொருளாகவே மலர்கிறது.

ஆரூர்ப் பூங்கோயிலில் வழிபடச் சென்ற நம்பியாரூரர் கோயிலில் பரவையாரைக் கண்டார். எப்படி கண்டார்?

கற்பகத்தின் பூங்கொம்போ, காமன்தன் பெருவாழ்வோ,
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ, புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ,
அற்புதமோ, சிவனருளோ, அறியேன்என் றதிசயித்தார்.

இவரைப் பரவையாரும் கண்டார். அவருடைய மணம், அயல் அறியா மனம், சுந்தரரை விரும்புமாறு பண்டை விதி

* சி. கே. சுப்பிரமணிய முதலியார், 'இவரது செய்யுள் நடை உரைநடை யாகவே உள்ளது, இது சிறப்பு' என்ற பொருள்பட ஓரிடத்தில் எழுது கிறார். "இந்தப் பாட்டுக்களை அடிதொடைப் பிரிவின்றித் தொடர்ந்து எழுதினாலே செம்பாகமான உரைநடை வசனமாய்ப் பொருள் எளி தில் விளங்குவது காணலாம்" என்று எழுதி எடுத்துக்காட்டுக்களும் தரு கிறார். அவருடைய கருத்திலிருந்து நாம் முழுமையும் மாறுபட வேண்டி யிருக்கிறது. கவிதை உரைநடையாகுமானால், அது நிச்சயம் கவிதை யல்ல. கவிதைக்கு ஓர் உருவ அழகு உண்டு. உரைநடைக்கு அழகு இருக்க லாம், உருவம் இல்லை. உரையாக அமையுமாறு ஒருவன் பாட்டு எழுதி னால் அது யாப்பிலக்கணத்துக்கு ஒத்திருக்கலாம்; அது கவிதையன்று, எழுதியவனும் கவிஞன் அல்லன். பிற்காலத்துப் போலிப் புலவர்கள் பாட்டெழுதி அதை வசனமாகவும் பிரித்துக் காட்டுவதைச் சேக் கிழாருக்குப் பொருத்தக்கூடாது. முதலியார் காட்டியுள்ள புராணப் பாடல்கள் உண்மையில் இப்படியில்லை.

கூட்டிற்று. ஆதலால் அவர் மனத்தில் ஒரு வேட்கை எழுந்தது என்கிறார். ஆசிரியர்:

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கும் மெல்லியலுக்கு
எண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடம் அச்சம் பயிர்ப்பை வலிந்தெழலும்.

நோக்கியபோது என்ன நினைத்தார்?

முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ, பெருகொளியால்
தன்நேரில் மாரனோ, தார்மார்பின் விஞ்சையனோ,
மின்நேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே, என் மனந்திரித்த இவன்யாரோ? என நினைத்தார்.

இங்கு சேக்கிழார் ஓரளவு அகப்பொருள் மரபையொட்டி இருவரையும் சந்திக்கச் செய்தபோதிலும் அனைத்தையும் அருள்விளையாட்டாகவே தோற்றுவிக்கிறார். அடுத்து, அவரே பரவையை நினைந்து அரற்றுகின்றபோது, ‘என் சிந்தை மயக்குற ஈசனருள் எந்நெறிச் சென்றதோ’ என்கிறார்:

பந்தம் வீடு தரும் பர மன்கழல்
சிந்தை ஆரவும் உள்ளும் என்சிந்தையில்
வந்து மால்செய்து மானெனவே விழித்து
எந்தையார் அருள் எவ்வழிச் சென்றதே!

இதையொத்த மற்றொரு சந்திப்பையும் சேக்கிழார் நமக்கு அறிமுகப்படுத்துகிறார். மயிலையில் பூம்பாவையின் என்புசேர் குடத்தினை நோக்கிச் சம்பந்தர் பூம்பாவைப் பதிகம் பாடினார். அவர் பாடல் உருவமாய்த் தொக்கது இக்குடத்துள்; “பூம்பாவை குடம் உடைந்தெழுவாள் போன்று தாமரைப் போதவிழ்ந்தனள் போன்றாள்”. அழகினுக்கணியாய் நின்ற அம்மங்கையின் புகழைக் கவிஞர் பதினான்கு பாடல்களால் வருணிக்கிறார். அடுத்து அப்பெண்ணைச் சம்பந்தர் எவ்வாறு கண்டார் என்பதைக் கூறு கிறார். எத்தனையோ யுகங்களாய் வாழ்ந்த பிரமன் அழகெல்லாம் திரண்டு ஒருருக் கொண்டதெனத் தான் படைத்த திலோத்தமை எழிலின் வெள்ளம் நான்கு முகத்தாலும் கண்டான். ஆனால் பதினாறாண்டே நிரம்பும் புகலிவேந்தர் தம் பாடலால் உருப் பெற்றுப் பிறந்த பெண்ணைக் கண்ணுதல் கருணை வெள்ள மாகக் கண்டார்:

எண்ணிலாண் டெய்தும் வேதாப்
    படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான்,
    அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு
    பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
    ஆயிரம் முகத்தாற் கண்டார்.

இங்ஙனம் கவிதைச்சுவை ததும்பும் பாடல்கள் புராணமெங்கும் காணலாம். கவிதைச் சுவையோடு பக்திச்சுவையும் அருட் சுவையும் கலந்து இவர் ஊட்டுவார்.

தனித்தனியான பலர் சரிதங்கள் கோத்த இப்பெரு நூலில் கவிதை எவ்வாறு விளைந்தது என்று ஆராயப்புகுந்த வையாபுரிப் பிள்ளை பின்வருமாறு கூறுகிறார்: "முதலாவது சேக்கிழார் ஊட்டும் தமிழின்பம் தனிச்சுவையுடையது. இரண்டாவது தொடர்களின் இன்பம்: இது பலவிடங்களிலும் தோன்றி நம்மைப் பரவசப்படுத்துகிறது. மூன்றாவது வருணனையின்பம் உயர்ந்த தரத்ததாய் அமைந்துள்ளது. நான்காவது தமிழாட்சியில் ஆசிரியர் காட்டும் தன்னடக்கம் கரைகடவாது செல்லும் தெளிந்த ஆற்றொழுக்குப் போலச் செய்யுட்கள் இனிதொழுகி நம்மையும் மன அமைதியுடையவராய்ச் செய்து சாந்தச் சுவையையூட்டுகிறது. இதற்கு உதாரணம் புராணத்திற் பல இடங்களிலும் காணலாம். இவைபோன்ற நெறிகளிற் சேக்கிழார் காட்டும் இலக்கியச் சுவை பெரிதும் வியக்கற்பாலதேயாம்."

நேசம் நிறைந்த உள்ளத்தால்
    நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
    எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
    தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
    வந்த பிறப்பை வணங்குவாம்.

என்று தமது பிறவியையே சேக்கிழார் வணங்குகிறார். இது பக்தி வெறியில் தோன்றிய ஓர் அரிய உணர்ச்சி வெளிப்பாடு. 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற அப்பர் கருத்தையும் இது கடந்து நெடுந்தூரம் சென்றுவிட்டது.

கம்பராமாயணத்தில் ஓர் இடம்: காட்டுக்குச் சென்ற இராமன் திரும்பி வரும் நேரம் வந்துவிட்டது. அவனும் வருகின்றான் என்ற செய்தியை அனுமன் வந்து பரதனுக்குத் தெரிவித்தான். வரவில்லையே என்று ஏங்கியிருந்த பரதனுக்கு இப்போதுண்டான மகிழ்ச்சி, பகுத்தறிவின் எல்லையையும் கடந்து போய்விட்டது. இன்னது தான் செய்கிறோம் என்பதே தெரியாமலே பெரியோரையும் தொழுகிறான்; அதுமட்டுமா? தன்னையே தொழுகிறான்:

வேதியர் தமைத்தொழும், வேந்தரைத் தொழும்,
தாதியர் தமைத்தொழும், தன்னையே தொழும்;
ஏதும் ஒன்றறிகிலான், இருக்கும் நிற்குமால்;
காதல்என் றீதுமோர் கள்ளின் தோற்றிற்றே.

சேக்கிழார் துதி இதனோடு ஒப்புநோக்கத்தக்கது.

அமங்கலச் சொல் புணர்த்தாது நூல் பாடினார் என்று பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது. இதை மிகவும் அருமை பொருந்தக் காணும் இடங்களில் சில இங்கு குறிப்பிடலாம். ஒன்று மெய்ப்பொருள் நாயனார் சரிதம். சிவ வேடத்தோடு வந்த பகைவனை ஆசனத்திலிருத்தி அவனிடம் உபதேசம் பெறுவதற் காக, நாயனார் கீழிருந்து குனிந்து வணங்க, அவன் அவரைத் தன் படைக்கலத்தால் குருதி சோர்ந்து வீழும்படி குத்தினான். இதைச் சேக்கிழார் "தான் முன் நினைந்த அப்பரிசே செய்தான்" (481) என்றார்; குத்திக்கொன்றான் என்ற சொற்களைக் கூறவில்லை.

ஏனாதிநாதர் புராணத்தில், தன்னைக் கொல்லவந்த பகை வனைக் களத்தில் வென்ற நாயனார், அவனுடைய திருநீற்றின் பொலிவு கண்டு, "இவன் குறிவழி நான் நிற்பேன், இவன் என்னைக் கொல்லட்டும். எனினும் நிராயுதரைக் கொன்றான் என்னும் பழியும் இவனுக்கு வர வேண்டாம்" என்று கருதி, போர் செய்வார் போலப் பொய்யாக வாளேந்தி நின்றார். அப்போது பகைவன் இவரை வெட்டினான் என்பதைச் சேக்கிழார், "முன்நின்ற பாத கனும் தன் கருத்தே முற்றுவித்தான்" (647) என்று கூறுகிறார்.

சைன சமயத்தை விட்டுச் சைவம் சார்ந்த அப்பர் சுவாமி களைப் பலவகையில் துன்புறுத்தியும் அவர் துயர்உறாது இருந்தமை கண்டு, அரசன் முடிவில் அவரை 'ஒரு கல்லில் பிணித்துப் படகில் கொண்டுபோய்க் கடலில் வீழ்த்துமின்' என்று கட்டளையிடுகிறான். 'அருகந்த வெவ்வினையாளரும் ....

மன்னன் சொன்னபடி முடித்தார் அப்பதகர்' என்று சேக்கிழார் கூறுகிறார்; கடலில் வீழ்த்தினார்கள் என்று சொல்லவில்லை. மற்றும் சம்பந்தர் போய் மதுரையில் ஒரு மடத்தில் தங்கியிருந்த போது அருகர் தங்கள் மந்திரத்தால் அவருடைய மடத்தில் செந்தீ சேரச் செய்தனர்; ஆனால் மந்திரத்தால் தீ பற்றவில்லை; அதன் மேல் அவர்கள் துணிந்து 'தழல் கொடு மறைத்துவந்து திருமடத்துப் புறத்து இட்டார்கள்'; இதைச் சேக்கிழார் 'வந்து தந்தொழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர்' என்று மட்டுமே கூறுகிறார். இவ்வாறு அடியவருக்கு நிகழ்ந்த கொடுமையைச் சொல்லாலும் சொல்ல அஞ்சுகிறார் சேக்கிழார்.

இப்படியே குழந்தைகளை அழைக்குமிடங்கள் இரண்டு. அப்பூதியடிகள் வீட்டில் மூத்த திருநாவுக்கரசு என்ற பிள்ளையை அரவந் தீண்டிவிடவும், அவன் உடலை மறைத்து, அடிகள் அப்பரை அமுது செய்விக்கிறார். அப்பர் மகனை அழைக்கு மாறு சொல்ல, அப்பூதி உண்மையைச் சொல்ல விருப்பமின்றி மறைத்து, 'இப்போது இங்கு அவன் உதவான்' என்று பக்குவ மாய் உணர்த்துகிறார். இந்த இடத்தில் அப்பருக்கு, பிள்ளையை அரவு தீண்டின செய்தி உண்மையிலேயே தெரியாது. மற்றோ ரிடம் இப்படியல்ல. அமுதுண்ண வந்த பயிரவருக்காகச் சிறுத் தொண்டர் வீட்டில் பிள்ளைக்கறி சமைத்திருக்கிறது; ஒரு வீட்டுக்கொரு பிள்ளை. ஆகவே இப்போது பிள்ளை இல்லை. இது பயிரவருக்கு நன்கு தெரிந்திருந்தும், பிள்ளை எங்கே என்று கேட்கிறார். சிறுத்தொண்டரும் இங்கு பக்குவமாக, அப்பூதி போல 'இப்போது உதவான் அவன்' என்கிறார்: அவன் இறந்த செய்தியைத் தெரிவிக்கக்கூடாது என்ற எண்ணம்.

## துதிப் பாடல்கள்

இனி, பெரியபுராணத்தில் காணும் துதிப்பாடல்கள், சந்தம், மடக்கு, சிறப்பான சில சொல்லாட்சிகள் என்பவற்றை மட்டும் இங்கு சுட்டிச் செல்வோம்.

வரிப்பாடல் அமைப்பில் துதிப்பாடல்கள் சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி ஆகிய காப்பியங்களில் காணப் படுகின்றன; பெருங்கதை மணிமேகலையில் இவை இல்லை; ஆயினும் மிகவும் பிற்கால நூல்களான பரஞ்சோதி திருவிளை யாடல், மீனாட்சிசுந்தரம் பிள்ளை செய்த திருநாகைக் காரோணப் புராணம் என்பவற்றிலும் காணப்படுகின்றன. ஆனால் கம்ப

ராமாயணம் பெரியபுராணம் இரண்டிலும், வரிப்பாடல்கள் இல்லை; தனித் துதிப்பாடல்கள் உள்ளன.

சேக்கிழார் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சுந்தரருக்குத் தனியான துதிப்பாடல் அமைத்திருக்கிறார். இது வேறிடத்தில் விளக்கிச் சொல்லப்பட்டது. இவையன்றியுள்ள பிற துதிப்பாடல்களை இங்கு குறிப்பிடுவோம். நூலின் முதல் நான்கு பாடல்கள் துதிப் பாடல்கள். இவை நடராசப் பெருமானையும், விநாயகரையும் திருக்கூட்டத்தையும் வழிபடும் பாடல்கள். அடுத்து, தில்லைவாழ் அந்தணர் புராணத்தின் தொடக்கத்தில் இரண்டு பாடல்கள் தில்லைப் பெருமானைத் துதிப்பனவாய் உள்ளன. பின்னர் திருநாவுக்கரசு புராணத்தில் முதற் பாடலையும் திருஞான சம்பந்தர் புராணத்தில் முதற் பாடலையும் அந்தந்த நாயனார் துதியாக அமைத்திருக்கிறார். இவையன்றி வேறு துதிப்பாடல்கள் நூலில் இல்லை.

எறிபத்த நாயனார் வரலாற்றில் சிவகாமி ஆண்டார் பூங்கூடையோடு வரும்போது, மன்னருடைய வென்றிமால் யானை அத்தொண்டருடைய பூங்கூடையைப் பறித்துச் சிந்தியது. அப்போது சிவகாமி ஆண்டார் சிவதா சிவதா என்று சொல்லி அரற்றுகிறார். இந்த அரற்று மூன்று பாடல்களைக் கொண்டது. இவை வரிப்பாடல் என்று கருதத்தக்கவை:

களியா னையின் ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா.

**வருணனை**

காவியத்திலும் கவிதையிலும் ஒரு சிறப்பான பகுதி வருணனை. அகலக்கவி செய்வானுக்கு இத்திறம் விளங்கித் தோன்ற வேண்டும். சேக்கிழாரிடத்தில் இத்திறம் மிகவும் விளங்கிக் காணப்படுகிறது. சில எடுத்துக்காட்டுக்களைக் கீழே தருகிறோம். தனித்தனியான சிறு வருணனைப் பகுதிகள் நூல் எங்கும் காணப்படும். இருளின் வருணனை:

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்,
வஞ்ச மாக்கள் வல்வினை யும், பரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும், என்ன இருண்டது நீண்டவான்.

*எந்த வருணனையிலும் இறையுணர்வைத் தொட்டுச் செல்வது இவருடைய இயல்பு. இனி, கார்ப் பருவத்தை வருணிக்கிறார்:*

நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலம் நீடரங் கிலாடக் காரெனும் பருவ நல்லாள்.

*கார் என்ற பருவத்தை ஒரு பெண்ணாக முற்றுருவகமாகவே கூறுகிறார். இதுபோலவே மருதத்தின் வருணனையும் நோக்கத் தக்கது:*

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகம்காட்ட,
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகம்காட்ட,
பெருஞ்சகடு தேர்காட்ட, வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க,
நெருங்கிய சாதுரங்கபலம் நிகர்ப்பனவாம் நிறைமருதம்.

*செங்குன்றூரில் பனிப்பருவம் எய்தவும், அங்கு குளிர் இருந்த நிலைமை:*

அளிக்குலங்கள் சுளித்தகல, அரவிந்தம் முகம்புலர,
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மைஎன,
துளித்தலைமெல் அறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்.

*குன்றுகளில் பனி மூடியிருப்பது, குளிருக்குப் பயந்து குன்றுகள் வெண்போர்வை போர்த்ததுபோல என்கிறார். இவையாவும் இயற்கைப் பொருள்கள். இது, அப்பூதியடிகள் அமைத்த தண்ணீர்ப் பந்தல்:*

அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய், உறுவேனிற் பரிவகற்றிக்
குளம் நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்,
வளமருவும் நிழல்தரு தண்ணீர்ப்பந்தர் வந்தடைந்தார்.

*இனி மக்கள் வருணனை சில குறிப்பிடலாம். விருத்த வேதியராகச் சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள எழுந்தருளுகிறார். நான்கு பாடல்களால் அவரை வருணிக்கிறார். அப்படியே கிழவரைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் இவை உள்ளன. இதற்கென்று எளிதான ஒரு சந்தமும் பாடல்களில் அமைந்துள்ளது:*

கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ்
புண்ணிய நுதல்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க.

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடமென ஐயமுற எய்தி.

*சிறுத்தொண்டர் புராணத்தில் சிவபெருமான் பயிரவக் கோலத்தில் வருகிறார். பத்துப்பாடல்களால் அவருடைய உருவத்தை வருணிக்கிறார். இவ்வளவு அதிகமான பாடல்களால் வருணிப்பது அருமை. இறுதிப் பாடல் பின்வருவது:*

அருள்பொழியும் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழிமும் மலம்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப,
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கப் புவிஏத்த,
தெருள்பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டங்குடிச் சேர்ந்தார்.

*திருஞான சம்பந்தர் வரலாற்றில் இரண்டிடங்களில் வருணனையைக் காணுகிறோம். ஒன்று அவருடைய பிறப்பு; இதைச் 'சிவம்பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்' என்றே சேக்கிழார் பாடுவது நோக்கத்தக்கது. பிற்காலத்தில் சம்பந்தர் இளைய பிள்ளையாரின் திரு அவதாரம் என்று கருத்து எழுந்து* பலமாக ஊன்றிவிட்டது; ஆனால் இவர் எங்கும் அவ்வாறு சொல்லவில்லை. மற்றோரிடம் சம்பந்தர் தமது திருமணத்துக்காக நல்லூர்ப் பெருமணத்தில் அலங்கரித்துக் கொள்ளுதல்: எட்டுப்பாடல்; இங்கு அலங்கார முடிவில், 'திருவடையாள மாலை எவ்வுலகோரும் ஏத்தத் தொழுது தாமும் எடுத்துப் பூண்டார்' என்றும், அழகினுக்கணியாம் வெண்ணீறு அஞ்செழுத்தோதிச் சாத்தினார்' என்றும் இரு சிவ சின்னங்களைச் சொல்கிறார்.*

*மற்றுமோரிடம் பூம்பாவையின் வருணனை, திருஞான சம்பந்தருடைய அருள்நோக்கம்பட்டு, என்பிருந்த கடம் உடைந்து, அதிலிருந்து பூம்பாவை உயிர் பெற்று உரிய வளர்ச்சி*

---

* *ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப்பரணியே இதற்கு மூலம் என்று சொல்லலாம்.*

யும் பெற்று வருகிறாள். மட்டிட்ட என எடுத்த முதற்பாட்டில் போதியோ என்னும் மெய்த்திருவாக்கெனும் அமுதம் உருவ மாய்த் தொக்கது அக்குடத்துள்; இருநான்கு திருப்பாட்டில் வடிவம்பெற்று வளர்ந்து, அவர் பாட்டு முடிந்து திருக்கடைக் காப்பும் மேல்விரித்தவுடன் பன்னிரண்டாண்டுடைய பெண் ணாகப் பூம்பாவை வருகிறாள். அவள் உருவத்தை மட்டும் சேக்கிழார் பதினைந்து பாடல்கள் காட்டுகிறார். புராணம் முழு மையிலும் வேறெங்கும் இவ்வளவு விரிவாக ஒரு பெண்ணை இவர் வருணித்ததில்லை: அற்புதம் எய்தத் தோன்றி அழகினுக் கணியாய் நின்றாள்' என்று முடிப்பதும், அடுத்த பாட்டில் இவள், கண்ணுதல் கருணை வெள்ளம் என்று காட்டுவதற்கேயன்றி, வெறும் உருவ வருணனையைச் சொல்லி நிறுத்துவது இவருடைய நோக்கமன்று. இறைவன் அருளால் வந்த வடிவம் எனும்போது, அவருக்கு இதை இவ்வளவு விரிவாகச் சொல்லத் தோன்று கிறது; அழகை வருணிப்பதாயிருந்தால் மிகவும் சுருக்கமாகவே முடித்து விடுவார். காரைக்கால் அம்மையைக் குறிப்பிடுகிறார்; மயிலைப்புறங்கொள் மென்சாயல் மகளிர் கிளவி யாழினொடும், குயிலைப் பொருவும் காரைக்காலம்மை.

இறுதியாக, பண்டுநிகழ் பான்மையினாலும் பசுபதி தன் அருளாலும், சங்கிலியாரை மணம்புரிந்த சுந்தரருடைய புலவி யனுபவத்தை வருணிப்பது ஒரு பாடல்:

யாழின்மொழி எழில் முறுவல் இருகுழைமேற் கடைபிறழும்
மாழைவிழி வனமுலையார் மணியல்குல் துறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி மிகும்புலவி புணர்ச்சிக்கண்
ஊழியாம் ஒருகணந்தான், அவ்வூழி ஒருகணமாம்.

பண்டைத் தமிழின் அகப்பொருள் இலக்கிய மரபையும் இடைக் காலக் கற்புநெறியையும் ஒரு பாடலில் அழகாகச் சுட்டிப் பாடுகிறார்:

கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளிர் உள்ளம்
சீர்கெழு கணவன் தன்பால் விரைவுறச் செல்லு மாபோல்
நீர்கெழு பௌவம் நோக்கி நிரைதிரை இரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகை யாறு.

**சந்தம்**

பொருட்பொலிவை மிகுதிப்படுத்துவதற்குச் சந்தம் பெருங் கவிஞர்கட்கு ஒரு கருவியாக அமைகிறது. சேக்கிழாரும் பல

முறை சந்தங்களைப் பயன்படுத்துகிறார். பொதுவாகப் போர்ச் செய்திகளுக்குச் சந்தம் நன்கு பயன்படும். சில எடுத்துக் காட்டுக்கள் தருகிறோம். அப்பர் சுவாமிகள் மீது ஏவிவிட்ட போர் யானை மதத்தோடு வருகிறது. யானை ஒரு வெறியோடு வருவது போல் பாடலே அமைகிறது.

பாசத்தொடை நிகளத்தொடர் பறியத்தறி முறியா
மீசுற்றிய பறவைக்குலம் வெருவத்துணி விலகா
ஊசற்கரம் எதிர்சுற்றிட உரறிப்பறி உழறா
வாசக்கட மழைமுற்பட மதவெற்பெதிர் வருமால்.

இடியுற் றெழும் ஒலியில்திசை இடமுட்கிட அடியில்
படிபுக்குற நெளியப்படர் பவனக்கதி விசையில்
கடிதுற்றடு செயலிற்கிளர் கடலிற்படு கடையின்
முடிவிற்கனல் எனமுற்சினம் முடுகிக்கடு கியதே.

உண்மையான போர்ச்செய்திகள் வருகின்றன. புகழ்ச்சோழருடைய படை செய்கின்ற போர்:

கயமொடு கயமெதிர் குத்தின
அயமுடன் அயமுனை முட்டின
வயவரும் வயவரும் உற்றனர்
வியனமர் வியலிடம் மிக்கதே.

வரிவிற் கதைசக்கரமுற் கரம்வாள்
சுரிகைப் படைசத்திகழுக் கடைவேல்
எரிமுத் தலைகப் பணமெற் பயில்கோல்
முரிவுற்றன துற்றன மொய்க்களமே.

கண்ணப்பர் காட்டுட் சென்று கன்னிவேட்டை யாடுகிறார்:

ஏனமோடு மானினங்கள் எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானை வெம்புலிக் கணங்கள் கான்மரை
ஆனமா அனேகமா வெருண்டெழுந்து பாயமுன்
சேனை வேடர் மேலமடர்ந்து சீறி அம்பில் நூறினார்.

தாளறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமான்
வாளிகளொடு குடல்சொரிதர மறிவன சிலமரைமா
நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வன மிடைகடமா
மீளிகொள்கணை படுமுடலெழ விழுவனபல உழையே.

இவையெல்லாம் முடுகு. இவைபோக மற்றோரிடத்தில் நடராசப் பெருமானுடைய திருநடனத்தைத் தரிசிக்க வேண்டி

*அப்பர் சுவாமிகள் தில்லைக்குச் செல்கிறார். அங்கும் சந்தம் அமைந்திருந்தாலும் அது நின்று தயங்கி மெல்லச் செல்லுகிறது:*

அல்லற் பவமற அருளுந் தவமுதல்
அடியார் எதிர்கொள அவரோடும்
மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின்
வழிப்புக் கெதிர்தொழு தணைவுற்றார்
கல்வித் துறைபல வருமா மறைமுதல்
கரைகண் டுடையவர் கழல்பேணும்
செல்வக் குடிநிறை நல்வைப் பிடைவளர்
சிவமே நிலவிய திருவீதி.

நீடுந் திருவுடன் நிகழும் பெருகொளி
நிறைஅம் பலம்நினை வுறநேரே
கூடும் படிவரும் அன்பால் இன்புறு
குணமுன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனும் மாலுந் தேவரும்
முதலா யோனிகள் தெளிவொன்றா
ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம்
ஆரா வகைதொழு தார்கின்றார்.

### சில மடக்கு நயங்கள்

*கவிதைப் பண்பு குறித்து இந்நூலில் வேறு பல இடங்களிலும் காட்டப்பட்டுள்ள பாடல்களில் மடக்கு நயத்தை நன்கு காண லாம். தொடர்களை மடக்கிச்சொல்வதில் சேக்கிழாருக்கு விருப்பம் அதிகம். புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல் வாயும்; இளம் என்ற சொல்லை மானிளம் பிணையோ என்ற பாடலில் எட்டுமுறை மடக்கிச் சொல்கிறார். சூழும், ஆடும் எங்கும் என்ற தொடர்கள் இதுபோலவே அமைந்தன. அப்பர் சுவாமிகள் பிறந்த ஊர் 'தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமுர் திருவாமூர்' சுந்தரர் ஆரூரில் கண்ட மங்கையின் பெயர் பரவை என்று சொன்னார்கள்; சுந்தரர் நினைக்கிறார்:*

பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்னாசை எழுபரவை.

நாட்டுச்சிறப்பில் ஒரு பாடல்:

பண்தரு விபஞ்சி எங்கும் பாதசெம் பஞ்சி எங்கும்
வண்டறை குழல்கள் எங்கும் வளரிசைக் குழல்கள் எங்கும்
தொண்டர்தம் இருக்கை எங்கும் சொல்லுவ திருக்கை எங்கும்
தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும்.

வருணனையுள் சொல்மடக்காகச் சொல்வது எளிது, வருணனை யில்லாதவிடத்து இவ்வாறு சொல்வது எளிதன்று. அமரர் காணுதற் கரியார் தம்மைக் கண்ணப்பர் அன்பினிற் கண்டு கொண்டே, நேர் பெற நோக்கி நின்றார், நீளிருள் நீங்க நின்றார்; மூளும் பெருகன்பெனும் மூர்த்தியார் மூர்த்தியார்தாம்; பற்றை எறியும் பற்றுவரச் சார்பாயுள்ள சண்டேசர் தாய்; பத்தி முதிர்ந்த பாலகனார்.

தூசொலித்தல் தொழிலுடைய திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில், அவர் துணியொலிக்கும் தொழில் செய்வதைக் குறிப்பிடுவது, ஒலித்தல் என்ற செயலைச் சுழன்று சுழன்று வரச் செய்கிறது; (1195)

தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணார் எனஒண்ணா உண்மையினார்
நீரொலிக்க அரா இரைக்க நிலாமுகிழ்க்கும் திருமுடியார்
பேரொலிக்க உருகுமவர்க் கொலிப்பர்பெரு விருப்பினொடும்.

## சொல்லாட்சி

பொருள்பொதிந்த சொற்றொடர்களைப் படைத்துத் தரு வதைச் சேக்கிழார் நூலெங்கும் பரக்கக் காணலாம். தமிழாளி, உழவாரப் படையாளி, சிறிய பெருந்தகை, தாண்டகச் சதுரர், தாயினும் இனிய தங்கள் தம்பிரானார்; பிள்ளையார், பாலறா வாயர், பரசமயகோளரி, வைதிகசூளாமணி என்பன போன்ற அழகிய சுவைமிகுந்த தொடர்கள் இவருடைய படைப்புக்கள். ஆண்ட அரசு என்பதும் ஒன்று; மக்கள் குலம் அனைத்தையும் அருளுக்கு ஆளாக்கிவிட்ட அரசு என்பது இதன் பொருள், வைணவத்தில் ஆண்டாள் என்பது இதனோடொத்த தொடர்.*

---

* வைணவ அடியார் பெயராகிய ஆழ்வார் என்றசொல் ஆள்வார் என்றே இருத்தற்குரியது என்று டி.கே.சி. அவர்கள் சொல்லியுள்ள கருத்தும் இங்கு சிந்திக்கத்தக்கது.

இவர் படைத்துள்ள பல தொடர்கள் பழமொழி போன்ற செறிவும் அனுபவமும் சொல்லின்பமும் வாய்ந்தவை. முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ; வித்தகம் பேச வேண்டாம் பணி செயல்வேண்டும்; இன்பத்துறையினில் எளிய ரானார்; சொல்லுவதறியேன் வாழி; அடியார்க்கு நஞ்சமுதம் ஆவது தான் அற்புதமோ; கையால் தொழுது வாயால் வாழ்த்தி மனத்தால் நினைக்கும் கடப்பாடு; மாதவம் செய்ததென்திசை வாழ்ந்திட; சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர் காலத்தின் சிறப்பும்; ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடுவீர்; ஊழி யாம் ஒருகணந்தான், அவ்வூழி ஒரு கணமாம்; பிழையுள்ளன பொறுத்திடுவர்.

## ஐயர் – நாயனார் – வள்ளல்

சேக்கிழார் சில சொற்களைச் சிறப்பாக அடிக்கடி வழங்கு கிறார். அவற்றுள் மூன்று சொற்களை இங்கே கருதுவோம். முதலாவது ஐயர் என்ற சொல்வழக்கு. இது பொதுவாக இறைவனைக் குறிக்கப் பயன்படும் சொல். மன்றுளே மாலயன் தேட ஐயர்தாம் வெளியே ஆடுகின்றார், ஆறு சூடிய ஐயர், ஐயர் திருவடி நிழல், ஆறுலவு செய்ய சடை ஐயர் என்ற தொடர்கள் காண்க. ஆனால் சேக்கிழார் ஐயர் என்ற சொல்லைச் சிறப்பாகத் தாழ்ந்த குலத்தில் பிறந்த நாயன்மாரை மேற்குலத்தார் விளிக்கப் பயன்படுத்தும் சொல்லாகத் தருகின்றார். இதை வேறிடத்தில் விளக்கியிருக்கிறோம். இவ்வாறு விளிக்கப்படும் நாயன்மார் கண்ணப்பர், திருநாளைப் போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகியோர். இது பெருவியப்பு.

அடுத்து நாயனார் என்ற சொல்வழக்கு. நாயன் என்பது நாயகன், கடவுள். இதுவே ஆர் விகுதி சேர்ந்து நாயனார் என்று ஆயிற்று. இச்சொல்லைக் கல்வெட்டுக்களிலும் காணலாம். சிந்தாமணியில் தந்தை என்ற பொருளிலும் இது வருகின்றது. பெரியபுராணத்தில் கடவுளைக் குறிப்பிடுவதாக இச்சொல்லுக்கு அதிகமான ஆட்சி உள்ளது. அதுபோலவே நாயனார், நாயன் மார் என்ற வடிவில் அடியவரைக் குறிப்பிடவும் இச்சொல் இங்கு வழங்குகின்றது. ஞானசம்பந்தர் இந்த நாயனார் காணும், கண்ணப்ப நாயனார் என்ற தொடர்களும் நாயன்மார் என்ற பன்மையும் பலமுறை வழங்குகின்றன. இக்காலத்தில் நாயனார்

என்பது அறுபத்திமூவரை மட்டும் குறிப்பிடும் சொல்லாக இருந்து, உய்யவந்த தேவநாயனார் என்ற பெயர்கள்போல, சிறந்த அடியாரையும் குறிக்க வழங்குகின்றது.

சேக்கிழாருக்கு மிகவும் விருப்பமான சொல் வள்ளலார் என்பது. பெரியபுராணத்தில் இச்சொல் சில இடங்களில் இறைவனைக் குறிக்க வழங்குகின்றது. அயனும் மாலும் காணுதற் கரிய வள்ளல், வள்ளலைத் தொழுது போந்தார், திருத்தோணி வள்ளலார், அறத்துறை வள்ளலார் என்பன போன்றவை இறைவனைக் குறிப்பிடுபவை. ஆனால் அடியவரைக் குறிப்பிடு வதற்கு இச்சொல்லைப் பெரியபுராணத்தில் அதிகமான இடங் களில் சேக்கிழார் பயன்படுத்துகிறார். அதிகமான இடங்கள் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுவன. பிற்காலத்தில் திருஞான சம்பந்தரை வழிபடு தெய்வமாகக் கொண்ட கண்ணுடைய வள்ளல் என்பவர் வள்ளல் ஆதீனம் என்ற ஒரு ஆதீனத்தையே தோற்றுவித்தார். அப்பெயருடைய பிறவள்ளல் ஆதீனமும் இருந்தமை அறிகிறோம். மிகப்பழைய காலத்தில் வள்ளல் என்ற சொல்பொருட் கொடைக்கு மட்டுமே பயன்பட்டது. பிற்காலத்தில் அருளை வழங்குபவனாகிய இறைவனுக்கும் அவ்வருள் பெற்று வாழ்ந்து உலகத்துக்கு வழிகாட்டும் அடிய வருக்கும் வள்ளல் என்ற பெயர் அருள் காரணமாகப் பொருந்தி வந்தது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் வள்ளலார் என்றே வழங்கப்பெற்றார்.

## திருக்களிற்றுப்படி

ஒத்த மற்றொரு கருத்தையும் குறிப்பிடத் தோன்றுகிறது. தில்லையில் பெருமான் நடனம் ஆடுமிடம் சிற்சபை (சிற்றம் பலம்); வெளியே நின்று சேவிக்கும் மேடை கனகசபை (பொன் னம்பலம்). கனகசபையிலிருந்து சிற்சபைக்கு ஏறும்படிகள் பஞ்சாக்கரப் படிகள் எனப்படும். இப்படிகளிடத்து அடியவ ருக்கு மிக்க ஈடுபாடு என்பதைச் சேக்கிழார் ‘தொண்டர் மனம் பிரியாத திருப்படியைத் தொழுதிறைஞ்சிச் சம்பந்தர் சென்றார் என்று கூறுகிறார் (3043). இவற்றின் இருபுறமுள்ள சிறு கைப் பிடிச் சுவர்கள் களிற்றின் துதிக்கை வடிவமாயிருக்கும்; ஆகவே களிற்றுப்படி என்று சொல்லும் மரபும் உண்டு. சேக்கிழார் இதை இரண்டு முறை குறிப்பிடுகிறார். - 251, 2076. முதல் இடம் சுந்தரர் வணங்கிய இடம்:

வையகம் பொலிய, மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட,
ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை –
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த, கண்களோ அந்தக்
கரணமோ கலந்தஅன் புந்த,
செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்தெழுந்தான் –
திருக்களிற் றுப்படி மருங்கு.

ஒன்று கவனித்தற்குரியது: நாயன்மார் அனைவரையுமே எங்கும் படர்க்கைப் பன்மையில் கூறுகின்றவர் சேக்கிழார். இப்பாடலுக்கு முந்திய பாடலிலும் பிந்திய பாடலிலும், சுந்தரரைப் படர்க்கைப் பன்மையிலேயே குறிப்பிட்ட சேக்கிழார், இப் பாடலில் மட்டும் சுந்தரரை ஒருமையில் குறிப்பிடுகிறார். அடுத்த பாட்டு, 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' என்பது; மாறிலா மலர்ச்சியில் மலர்ந்தார் என்ற பன்மையை இங்கு பார்க்கிறோம்.

இரண்டாவது, சம்பந்தர் 'மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தரெதிர் சென்றணைந்து தாழ்ந்தார் திருக் களிற்றுப் படிக்கீழ்' என்பது.

திருக்களிற்றுப்படியார் என்பது 12ஆம் நூற்றாண்டிலேயே எழுந்த ஒரு சைவசித்தாந்த சாத்திரம். திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் இதைச்செய்து, சிற்சபைமுன் படியில் வைக்க, யானை துதிக்கையால் எடுத்து, நடராசப் பெருமான் பாதத்தில் வைத்தமையால் திருக்களிற்றுப்படி என்று பெயர்பெற்றது. பார்க்கும்போது, பெரியபுராணத்துக்கும் (செய்த காலம் கி.பி. 1145) திருக்களிற்றுப்படியாருக்கும் (1178) வேறு தொடர்புகள் இருக்குமோ என்ற ஐயம் எழுகின்றது. களிற்றுப்படியில் பெரிய புராண வரலாற்றுச் செய்திகள் பல சொல்லப்பட்டு உள்ளன. இதனால் யாம் கருதுவது, சேக்கிழாருக்கும் இவ்உய்யவந்தாருக்கும் நேர்முகத் தொடர்பு இருந்திருத்தலும் கூடும் என்பது. திருவியலூர் உய்யவந்தாரின் மாணாக்கரான ஆளுடையதேவ நாயனாரின் மாணாக்கர் திருக்கடவூர் உய்யவந்த தேவர் (திருக் களிற்றுப்படியார் செய்தவர்) என்ற தொடர்புக்கு இதனால் ஒன்றும் இழுக்கில்லை.

### திருவாசகம்

மருணீக்கியார் கூற்றாயினவாறு பாடி இறைவனால் 'நாவுக்கர சென்று உலகேழினும் நின் நாமம் நயப்புற மன்னுக' என்று அருளப்பெற்று, மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் வந்தபோது, 'தியானம் அறாவுணர்வும் ஈறின்றி எழுந்திருவாச கமும் கையில் திகழும் உழுவாரமுடன்' விளங்கினார்.

**அவதாரம்:** சேக்கிழார் அவதாரம் என்ற சொல்லை மிக்க அருமையாகத்தான் உபயோகிக்கிறார். சமயாசாரியர் ஆன சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருடைய பிறப்பைக் கூறும் போது அவதாரம் செய்தார் என்று குறிப்பிடுகிறார். இவர்கள் முற் பிறவியிலேயே இறைவன் திருவருளைப் பூரணமாய்ப் பெற்று எஞ்சிய வினைத்தொடர்பு காரணமாக இப்பிறவி எடுத்து, வினைமுடியவும் அருளைக் கூடியவர்கள் என்பது அவரது கருத்துப்போலும். இவர்கள் தவிர, கயிலாயத்தில் உமாதேவி யின் சேடியராக இருந்து மண்ணுலகில் வந்து பரவையாகவும், சங்கிலியாகவும் பிறந்த இருவர் பிறப்பைப் பற்றியும் அவதாரம் என்று சொல்லுகிறார். வேறு யாரையும் அவதாரம் என்று சொல்லவில்லை. மற்றவரைப் பிறந்தார் என்றும் தோன்றினார் என்றுமே குறிப்பிடுகிறார்.

## கலையியல்

### உள்ளத்தின் அழகு

பெரியபுராணம் முழுவதுமே கலைக்கென்று எடுத்த தனிப் பெருங்கோயில் ஆகும். இந்நூலில் போற்றிப் பேசப்படுகின்ற சைவ சமயமானது வெறும் வறண்ட சமயம் அன்று: இது வாழ்க்கை அனைத்தையும் தழுவிய ஒரு சமயம். எல்லா நிலை களிலும் அகத்தில் ஒரு பேரானந்தத்தைத் தேக்கிக் காட்டும் சமயம். ஆனந்தம் பொங்குமிடம் அழகு குடிகொள்ளும் இட மாக இருக்கும். ஆகவே, சைவப் பெருங்காப்பியம் என்பது ஆனந்தத்தின் புகழ்ச்சி, அழகுக்கு ஒரு சாசனம். 'அழகுடைய பொருள் எல்லாம் நிலைத்த பேரானந்தப் பொருள்' என்று பாடிய ஆங்கிலக் கவிஞன் பெரியபுராணத்தைக் கண்டான் இல்லை.

அழகு என்பது வாழ்க்கையில் அமைகிறது, வாழ்க்கையின் அபின்னமான சமயத்தில் அமைகிறது. சமயத்தில் அமைந்த அழகின் வெளிப்பாடே கோயிலும் பூசனையும். சிவபெரு

மானுக்குச் சோழர் கட்டிய பல்லாயிரக் கோயில்களும் கலைத் தெய்வத்துக்கு எடுத்த கோயில்கள். கோயிலைக் கண்டு உள்ளம் உருகுவதற்குச் சமய உணர்வு வேண்டும் என்பதில்லை: கலை உணர்வு இருந்தாலே போதும். கோயிலின் அமைப்பைக் கண்டு அனுவிப்பதற்குச் சாத்திரம் அறிய வேண்டுவதில்லை: அமைப் பின் அழகே உள்ளத்தைப் பரவசப்படுத்திவிடும். அதுபோலவே, பூசனையும் அழகு. சிவபூசையின் விரிவுகள் புராணத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளன. பூசைக்கு இடம் தயாரித்தல், உரிய பொருள்களைச் சேகரித்தல், மூர்த்தியை ஆவாகித்தல், பூசித்தல், தோத்திரித்தல், நிவேதித்தல் ஆகிய முறைகளை மனத் தினால் எண்ணும்போதும், உள்ளம் அப்படியே பூசிக்கும் பொருள் வடிவாய் நின்றுவிடுகிறது; உள்ளத்தில் ஒரு கலையுணர்வு ஊற்றெடுத்துப் பெருகும். இத்தகைய நிலையைப் புராணம் நமக் குக் காட்டுகிறது. கோயிலானது கலைக்குக் கல்லால் கொடுத்த உருவம் என்பதுபோல, நடராசர் வடிவத்தைக் காணும்போது அது கலைக்கு அசைவால், ஆட்டத்தால், நிருமித்த வடிவம் என்பது புலப்படும். இங்கு எத்தனை பேர்தான் அந்த வடிவத்தில் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்துள்ளனர்!

இந்தக் கண்ணோடு பார்க்கும்போது பெரியபுராணமே கலைக்கு எடுத்த ஒரு சொற்கோயில் என்பது விளங்கும். சேக்கிழாருடைய பண்பட்ட உள்ளமானது தெய்வபக்தி என்ற ஓர் அடிப்படை உணர்வில் மற்றெல்லா உணர்வுகளையும் குழைத்து, வரலாறு ஆகிய வண்ண ஓவியத்தைத் தீட்டுகிறது. இந்தக் கலைப்பண்பு அனுபவத்திலும் காண்கிறோம். அறிவிலும் காண்கிறோம். கண்ணில்லாத தண்டியடிகள் அகநோக்கத்தில் ஆடும் செம்பொற் கழலை மனத்துள் கொண்டிருக்கிறார். அவர் நாவில் நமச்சிவாயப் பதம்; பூங்கோயிலை வலம்செய்து வருகிறார். 'குருடா என்று பெண்டுகள் சொல்வார்கள்' என்று அழகே வடிவமான சுந்தரர் அஞ்சுகின்ற நிலை பிறவியில் அமையப் பெற்ற தண்டிக்கு அந்நிலை இல்லை.

சேக்கிழாருக்குப் பெண்ணை வருணிப்பதில் மனம் செல்வ தில்லை. ஆனால் குடத்திலிருந்து எழுந்த பூம்பாவையைச் சொல் லும்போது பதினான்கு பாடல்களால் அவளுடைய ஓவியர்க்கு எழுத ஒண்ணாத அழகை வருணிக்கிறார். அவள் அழகினுக்கு அணியாய் நின்றாள். காரணம், அப்பெண் கண்ணுதலின் கருணை வெள்ளமாகப் புகலிவேந்தர் காண்கிறார் என்பதால்.

காரைக்கால் அம்மையார் வரலாற்றில் பார்க்கிறோம். கலைபொருந்திய அடைகளால் புனிதவதியைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். திருமடந்தை அவதரித்தாள், பொங்கிய பேர் அழகு மிகப் புனிதவதியார் பிறந்தார், அழகின் கொழுந்து, சேயிழை, பைந்தொடி, தளிர் அடிமென் நகை மயில், பூப்பயில் மென்குழல் மடவார், அன்னமலனையார், தாமரைத் தவிசில் வைகும் தனித் திரு, மானிளம் பிணை, காமர் பூங்கொடியனார் என்றெல்லாம் குறிப்பிடுகிறார். ஆனால் இவ்வளவு அழகுடைய புனிதவதியார் 'மெய்யில் ஊனடைவனப்பையெல்லாம் உதறி எற்புடம் பேயான போது' அதைச் சேக்கிழார் 'வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய் வடிவம்' என்கிறார். இங்கு அழகு புறத்தில் இல்லை, அகத்தில் உள்ளது என்பதை நன்கு உணர்த்துகிறார்.

மானக்கஞ்சாறர் தமது மகளின் திருமணத்தில் வந்த விரதியரைக் கண்டு, தம் மகளைப் பணியச் செய்தபோது, அவர் 'மஞ்சு தழைத்தென வளர்ந்த மலர்க் கூந்தலை' நோக்கி, 'இது நமக்குப் பஞ்சவடிக்காம்' என்றார். உடனே நாயனார் அவளுடைய கூந்தலை அடியில் அரிந்து எதிர் நீட்டுகிறார். பின்வந்த மணமகனான கலிக்காமனாரும் அப்பெண்ணைத் தயங்காது மணம் புரிகிறார். இங்கும் சம்பந்தப்பட்ட மூவர் இடத்திலும் கலை உள்ளத்தைக் காண்கிறோம். புறஅழகை யாரும் நினைக்கவில்லை; அகம் ஆண்டவன்பால் சென்றவுடன் புற அழகின் மீது உள்ள பற்றும் நீங்குகிறது; அக அழகே வெல்லுகிறது.

இவைபோன்ற சந்தர்ப்பங்கள் புராணம் முழுமையிலும் காண்கிறோம். எனவேதான் பெரியபுராணமே ஒரு கலைக் கோயில் என்று கூறினோம். இது அழகுத்தெய்வத்துக்கு எடுத்த ஒரு கோயில். இனி சம்பிரதாயப்படி, கலைபற்றி இந்நூலில் காணும் சில செய்திகளைத் தொகுத்துக் கூறுவோம்.

**ஓவியம்**

அருங்கலைகள் வரிசையில் முதல் நிலையில் உள்ளது ஓவியம். நகர் அலங்காரம் செய்தார்கள் என்று சேக்கிழார் சொல்லுமிடங்களிலெல்லாம் ஓவியக்கலையின் வெளிப்பாட்டைக் காண்கிறோம். மணம்வந்த புத்தூர் அலங்காரம், அப்பூதியடிகள் இல்லத்தில் அப்பர் திருவமுது கொள்வதற்காகச் செய்யப்பெற்ற அலங்காரம், சம்பந்தர் அவதாரம் செய்த போது திருக்கழுமலத்தவர் செய்த அலங்காரங்கள், அவரை

எதிர்கொண்ட தில்லையின் அலங்காரம், மயிலையின் அலங் காரம் முதலியன குறிப்பிடத்தக்கவை. சிறப்பாக, சம்பந்தர் திரு மணத்துக்காக, திருநல்லூர்ப் பெருமணத்தை அலங்கரிக் கிறார்கள்; சம்பந்தர் தம்மை அலங்கரித்துக் கொள்கிறார். இவை யெல்லாம் சிறந்த ஓவியக் காட்சிகள். அப்படியே சுந்தரரை வர வேற்கும் பொருட்டுக் கொடுங்கோளூரில் சேரர் செய்யும் அலங்காரங்களும் சிறப்பானவை.

சுந்தரர் பரவையை முதன்முதல் கண்டபோது, பரவை யாரை வருணிக்கும் இடத்து, நான்முகனே ஓவியத்தில் பரவையின் உருவத்தை எழுதமுடியாது அயர்ந்ததொரு வடிவம் என்று நினைக்கின்றார். இங்கு நேரே ஓவியக் கலையையே குறிப்பிடு கிறார். 'ஓவியம் நான்முகன் எழுத ஒண்ணாமை உள்ளத்தால் - மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ?'

## சிற்பம்

சேக்கிழார் காலம் தமிழ்நாட்டில் கோயிற் சிற்பங்கள் மிகுதி யாக விளக்கம்பெற்ற காலம். சோழர் ஆட்சியில் ஆகமங்கள் ஆட்சிக்கு வந்தன. ஆகமப்படி சிவாலயங்கள், திருவுருவங்கள், பூசைமுறைகள், திருவிழாக்கள் ஆகிய எல்லாம் வகுக்கப்பட்டன. காஞ்சியில் உமாதேவியார் சிவபூசை செய்தார் என்ற இடத்து ஆகமத்தின் ஆட்சியை மிகவும் அதிகமாகச் சேக்கிழார் காட்டு கிறார். சிவாகமங்களிலிருந்து தொகுத்த சிற்ப சாத்திரங்களும் ஆட்சிக்கு வரலாயின. விசயாலயன் சில கோயில்களே கட்டி னான். அவன்பின் வந்தோர் கோயில் கட்டுவதிலும், அங்கு கல்லாலும், செம்பாலும் மூர்த்திகளின் வடிவங்களை எழுந் தருளுவிப்பதிலும், ஒருவரை ஒருவர் போட்டிபோட்டுக் கொண்டு ஈடுபட்டார்கள். இதன் பயனாய் எங்கும் சிற்பக்கலை வளர்ந்தது. இவ்வளர்ச்சி பெற்ற நிலையைச் சேக்கிழாரின் நூலா லும் நன்கு காணலாம். நடராசப் பெருமானுடைய அருள் உருவத்தில் எல்லோரும் ஈடுபட்டுப் பாடியிருக்கிறார்கள். காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டு நடராசமூர்த்தி யிடம் ஈடுபட்டவர். தமது பதிகத்தில் "எடுத்த பாதம் அண்டம் உறநிமிர்ந்தாடும் எங்கள் அப்பன் இடந்திரு ஆலங்காடே" என்று பாடினார். எடுத்த பாதம் அண்டமுற நிமிர்ந்தாடுத லாவது, ஊர்த்துவ தாண்டவம். இந்த மூர்த்தியின் வடிவம் திருவாலங்காட்டு வரலாற்றை ஒட்டிப் பிற்காலத்தில் இராச சிம்மன் கட்டிய காஞ்சிக் கயிலாயநாதர் கோயிலிலும், பிற

கோயில்களிலும் அமைக்கப் பெற்றிருக்கிறது. இதைச் சேக்கிழார் நன்குணர்ந்து, 'அண்டமுற நிமிர்ந்து ஆடுகின்ற கோலம் காண் பொழுது' என்று குறிப்பிட்டு அம்மையார் புராணத்தில் கூறு கிறார். இப்படி எத்தனையோ செய்திகள். ஒன்று திருப்புன்கூரில் நந்தனாருக்காக நந்தி விலகிய செய்தி. இடபாரூடராக இறைவன் அருள்செய்தான் என்றசெய்தி பெரியபுராணத்தில் பல சமயங் களில் சொல்லப்படுகிறது (பதினைந்து முறைக்கு மேலும்). சிவ மூர்த்தங்களில் இதுவும் சிறப்பான மூர்த்தமாய்க் கோயில் களில் எழுந்தருள்விக்கப் பெற்றிருப்பதும் இன்றும் வீதி உலா வருவதும் இங்கே கருதத்தக்கன. வாதாபியிலிருந்து பரஞ்சோதி யார் எடுத்து வந்த கணபதியின் திருவுருவம் செங்காட்டங் குடியில் அமைத்து வழிபடப்பெற்றது. பிற தலங்கள் பலவற்றில் வாதாபி கணபதி என்ற உருவம் அமைக்கப்பெற்று வழிபாடு நடைபெறுகிறது. சிவலிங்கத்தைப் பெரியபுராணம் பல இடங் களில் குறிப்பிடுகிறது. அப்படியே சோமாஸ்கந்த மூர்த்தத்தை யும் சேக்கிழார் பாடுகிறார்: 'மறைந்த அவர்தாம் மலை பயந்த தையலோடுஞ் சரவணத்துத் தனயரோடுந் தாமணைவார்.' பிற்காலத்துக் கட்டிய எல்லாப் பெரியகோயில்களிலும், நடுத் தரக் கோயில்களிலும், உமையும் கந்தரும் கூடிய இந்த மூர்த் திக்குத் தனியான ஒரு சபை (கோயில்) அமைக்கப் பெற்றுள் ளது. சிறு கோயில்களில் கூட சோமாஸ்கந்த மூர்த்தி செப்புப் படிவம் எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளது. இவைபோலவே வரலாற்றுச் சிறப்புடைய கோயில்களில் அவற்றுக்குரிய சிறப்பு மூர்த்திகளும் தொண்டர்களும், கல்லிலும் செம்பிலும் அமைக் கப் பெற்றுள்ளனர். இவையாவும் பெரியபுராணத்தால் வந்த சிற்பக்கலை வளங்கள்.

### கட்டிடக் கலை

சோழப் பேரரசர் காலத்தில் எண்ணற்ற பெருங்கற்கோயில் கள் எழும்பின. அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரும் ஐந் தாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று கருதப்பெறுபவருமான கோச்செங்கட் சோழர் எழுபதுக்கு மேற்பட்ட பெருங்கற் கோயில்களை மாடக் கோயில்களாகக் கட்டினார் என்பது அப்பர் வாக்காலும் திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் அறி கிறோம். தூங்கானை மாடம், தான்தோன்றி மாடம் என்பன மாடக்கோயிலின் விசேடங்கள் போலும். அவருக்குப் பின்னரே சம்பந்தர், அப்பர், சுந்தரர் தோன்றித் தேவாரம் பாடினார்கள்.

தேவாரப் பாசுரங்கள் தந்த பக்தியுணர்வே சோழர்களைச் சிவாலயம் எடுக்கும் பெரும்பணியில் செலுத்திற்று. ஆதித்த சோழன் காலத்திலேயே கோயில் கட்டிடக்கலை முழுவளர்ச்சி பெற்றுவிட்டது. நாம் கருதும் குலோத்துங்க சோழன் காலத்தில், இருந்த கோயில்கள் மிக்க விரிவுபெற்றன. தொடக்கத்தில் இருந்த கோயில்களில் அம்பிகைக்குத் தனியான கோயில் அமைப்பு இல்லை. குலோத்துங்கசோழன் தில்லையில் சிவகாமசுந்தரி அம்பிகைக்குத் தனியான பெருங்கோயில் ஒன்றை எடுத்தான். இது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பு நிகழ்ச்சி. இதன் பின்னர்ப் பல பெருங்கோயில்களில் சோழ மன்னர்களால் அம்பிகை கோயில்கள் கட்டப்பெற்றன. அம்பிகையின் கோயிலானது திருக்காமக்கோட்டம் என்று பெயர்பெறும். காஞ்சியில் இருந்த காமாட்சி கோயிலைச் சேக்கிழார் திருக்காமக் கோட்டம் என்று குறிப்பிடுகிறார்.

அன்றியும், அக்காலத்தில் மிகச் சில கோயில்களுக்கே கோபுர அமைப்பு இருந்தது. பிற்காலத்தில்தான் எல்லாக் கோயில்களிலும் கோபுரம் அமைக்கும் கலையானது வளர்ந்தது. சேக்கிழார் சிலவற்றையே சொல்லுகிறார். மதுரை, திருமுது குன்றம், காஞ்சி, தில்லை ஆகியவற்றை அவர் குறிப்பிடுகிறார். பிறவற்றைக் குறிப்பிடவில்லை. இதனால் அவர் காலத்தில் பல தலங்களுக்குக் கோபுரம் இல்லை என்பது தெரிகிறது. காமக் கோட்டம் என்றும் கோபுரம் என்றும் அவர் குறிப்பிட்டிருப்பது அக்காலக்கட்டிடக் கலையை நாம் உணரச் சிறுதுணையாக உள்ளது.

அட்டானம், ஈச்சுரம், காரோணம், மயானம் என்றெல்லாம் தலப்பெயர்களும் கோயிற்பெயர்களும் பல வேறுபாடுடையனவாயிருந்தன. கோயில்களிலும் மாடக் கோயிலையன்றி, கரக்கோயில், கொகுடிக் கோயில், ஆலக்கோயில், பூங்கோயில் முதலிய விசேஷங்களும், பாலாலயம் என்னும் இளங்கோயிலும் இருந்தன. சேக்கிழார் காலத்தில் அரசனுடைய அரசாட்சித் தொழிலைவிட, கோயில்கட்டுந் தொழிலே மிகச் சிறப்பாய் நடைபெற்றதென்றும் கருதலாம்.

### இசைக்கலையும் கூத்தும்

சேக்கிழார் காலம் இசையால் மிக்க எழுச்சி பெற்றிருந்த காலம். பல சிவாலயங்களில் சோழமன்னர் நிபந்தங்கள்

அமைத்துத் திருப்பதிகங்களை இசையோடு ஓதச் செய்திருந் தார்கள். தேவரடியார் என்ற குலத்துப் பெண்டிரும் பிராமணரும் திருப்பதிகம் ஓதிவந்தார்கள். காலத்தில் நூற்றைம்பது ஆண்டு களுக்கு முன்னமே இராசராசசோழன் மூவர் தேவாரத்தையும் தேடித் தொகுத்துப் பண்வகுத்துச் செப்பேடுகளில் எழுதி வைத்திருந்தான். முதற்குலோத்துங்க சோழன் ஓர் இசைநூல் செய்தான் என்றும் அவன் மனைவி ஏழிசைவல்லபி அந்நூலில் வல்லவள் என்றும் சாசனம் கூறும். சேக்கிழாருக்கு அமைச்சர் பதவி தந்த அரசனாகிய இரண்டாம் குலோத்துங்கனுக்கு நித்திய கீதப் பிரமோகன் என்ற ஒரு பட்டம் இருந்தமை அவனுக்கு இசையின்பால் இருந்த விருப்பைக் காட்டும். இத்தகையதொரு சூழ்நிலையில் வாழ்ந்தவர் சேக்கிழார். அன்றியும், பண்ணால் தேவாரம் பாடிய சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும், திருவாலங் காட்டுப் பதிகம் பாடிய காரைக்காலம்மையாரும், யாழ்வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவர் பாடிய புராணத்தில் வரும் நாயன்மார்கள். எனவே, அவருடைய புராணத்தில் இசைக்குச் சிறப்பான இடம் இருப்பதில் வியப்பில்லை.

இசைபாடியே முத்தியடைந்த நாயனார் ஆனாயர். இடையர் மரபிலுதித்த ஆனாயர் வரலாற்றில் செய்தி எதுவும் இல்லாது போயினும், அதை 42 பாடல்களால் இசைத்திறமும் விளங்கச் சேக்கிழார் பாடுகிறார்.

குழல் செய்யும்போது நூல் மரபின்படி வேய் தேர்ந்து அரிந்து துளை நிரையாக்கி இடையீட்டின் அங்குலி எண்களின் அமைத்து, ஆனாயர், எம்பிரான் எழுத்தஞ்சும் ஏழிசையின் சுருதிபெற வாசித்தார் என்று சேக்கிழார் சொல்லும்போது, அவருடைய இசை நுட்பத்தோடு, அதற்கான கருவித்தொழில் நுட்பமும் புலனாகின்றன:

முந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை எழுந்தவேய்
அந்தமுதல் நாலிரண்டில் அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீர் இடையீட்டின் அங்குலிஎண் களினமைத்து.

இவ்வாறு அவர் வாசித்து வருவராயினார்.

ஒருநாள் அவர் வாசித்த தன்மையில் உள்ள இசை இயல்பைச் சில பாடல்களில் விரிவுபடக் கூறுகிறார்:

முத்திரையே முதலனைத்தும் முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி வக்காணை வழிபோக்கி
ஒத்தநிலை உணர்ந்ததற்பின் ஒன்றுமுதல் படிமுறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசை களினமைத்தார்.

மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணாக்கி
ஏறிய தாரமும் உழையும் கிழமைகொள இடுந்தானம்
ஆறுலவும் சடைமுடியார் அஞ்செழுத்தின் இசை பெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலை யினில் நிறுத்தி.

ஆயஇசைப் புகல்நான்கின் அமைந்தபுகல் வகையெடுத்து
மேயதுளை பற்றுவன விடுப்பனவாம் விரல் நிரையிற்
சேயவொளி யிடையலையத் திருவாளன் எழுத்தஞ்சும்
தூயஇசைக் கிளைகொள்ளுந் துறையஞ்சின் முறைவிளைத்தார்.

மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன் முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரற்றொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண.

எண்ணியநூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணஇசை வகையெல்லாம் மாதுரிய நாதத்தில்
நண்ணிய பாணியுயமியலும் தூக்குநடை முதற்கதியில்
பண்ணமைய எழுமோசை எம்மருங்கும் பரப்பினார்.

*இசையின் உருக்கத்தைச் சொல்லி, அதைக்கேட்க விலங்கினமும் புள்ளினமும் அசையாப் பொருள்களும் கூட வருகின்றன என்று கூறுகிறார்:*

வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறைஅஞ் செழுத்தாக ஒழுகியெழு மதுரவொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கும் மேலமரர் தருவிளைதேன்
தெள்ளமுதின் உடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க.

ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில் பற்றும் இளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய.

ஆடுமயில் இனங்களும்அங் கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவன் கோவலரும் குறைவினையின் துறைநின்றார்.

நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்,
மலிவாய்வெள் எயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்,
சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்,
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.

மருவியகால் விசைத்தசையா, மரங்கள்மலர்ச் சினைசலியா,
கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் கலித்தோடா,
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்வேரா,
இருவிசும்பி னிடைமுழங்கா, எழுகடலும் இடைதுளும்பா.

இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரணம் மேவியவொன் றாயினவால்:
*மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் அடித்தொண்டர்*
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனையுருக்க.

மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை
வையந்தன்னையும் நிறைந்து வானம்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால்.

*இப்படியே திருநீலகண்டப் பாணரும் அவர் மனைவியாரும் இசை வாசித்ததைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.*

தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத் தகுதியினால்
ஆனவிசை யாராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோனகர் மகிழ்ந்தார்; நான்மறையோ ரதிசயித்தார்.

யாழிலெழும் ஓசையுடன் இருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணியுளார் மருங்கணையும் மாட்சியினைத்
தாழுமிரு சிறைப்பறவை படிந்ததனி விசும்பிடை நின்று
ஏழிசைநூற் கந்தருவர் விஞ்சையரும் எடுத்திசைத்தார்.

*இது சம்பந்தர் புராணத்தில். இதுபோலவே திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணத்திலும். சுந்தரமூர்த்தி முதலாவதாகப் பாடத் தொடங்கிய 'பித்தா பிறைசூடி' என்ற பதிகம் இந்தளப் பண்ணில் அமைந்தது. அதன் நுட்பத்தை இசை நுட்பங்கள் விளங்கச் சேக்கிழார் எடுத்து உணர்த்துகிறார்:*

முறையால்வரு மதுரத்துடன் மொழிஇந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடும்கிழ மையினால்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிகர் இல்லான்

என்று அதே இந்தளப் பண்ணில் தம் பாடலையும் அமைத்திருக் கிறார். அப்பர் முன்னே தேவமகளிர் வந்து பாடியாடினார் என்னுமிடத்து, அவர் புராணத்தும் இசையை விரித்துரைக் கிறார், கருத்தையும் ஓரளவு குறிப்பிடுகிறார் (1960):

கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடுவார்.

இறைவனுடைய ஆனந்தத் தாண்டவத்தையும் ஊர்த்துவ தாண்டவத்தையும் கண்ட பக்தர் நிலையை வேறிடங்களில் விளக்கமாகக் காட்டியிருக்கிறோம். பலவகையான கூத்துக் களையும் ஆங்காங்கு சேக்கிழார் சுட்டிச் சொல்வதும் இங்கு கருதத்தக்கது.

## பூத்தொடுத்தல்

தமிழ்நாட்டில் இருந்த சில பழங்கலைகளில் பூத்தொடுத் தலும் ஒன்று. 'எண்ணல் எழுதல் இலை கிள்ளல் பூத்தொடுத்தல்' என்ற பழம்பாட்டில் இது பெண்டிர் கைவினைத்திறன் அமை யச் செய்யும் ஓர் அருந்தொழிலாகச் சொல்லப்பட்டுள்ளது. சமயாசாரியர் காலத்தின்பின், நந்தவனப் பராமரிப்பும் பூத் தொடுத்தலும் சரியைத் தொண்டாகக் கருதப்பட்டது. இத் தொண்டில் ஈடுபட்ட சிவனடியார் பலர். மலர்கள் கோட்டு மலர், நிலமலர், நீர்மலர், கொடிமலர் என்று பாகுபாடு செய்யப்பட்டிருந்தன. மலரால் அழகுபொருந்திய மாலைகள் பல வகையாகப் புனையப்பட்டன. இவை அமைப்புக்கும் அலங்கரிக்கும் உறுப்புக்கும் ஏற்ப கோவை, இண்டை, தாமம், வாசமாலை, கண்ணி, பிணையல், தொடையல், ஓவியல் எனப் பலவகைப் பெயர்கள். இவையன்றி வேறுபலவும் இருந்தன. பதினாறாம் நூற்றாண்டு நூலாகிய புட்பவிதி போன்றவை மலருக்கும் மாலைக்கும் விதி வகுக்கும். சேக்கிழார் காலத்தில் விதிகள் ஏற்படாதபோதிலும், அவர் மலர்களையும் மாலை களையும் விளக்கமாகக் குறிப்பிடுகிறார்:

கோட்டு மலரும், நிலமலரும்,
குளிர்நீர் மலரும், கொழுங்கொடியின்
தோட்டு மலரும், மாமலரும்
சுருதி மலருந் திருவாயில்

காட்டு முறுவல் நிலவலரக்
கனக வரையின் பன்னக நாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல்
புனைய லாகும் மலர்தெரிந்து.

கொண்டு வந்து தனியிடத்தின்
இருந்து கோக்கும் கோவைகளும்,
இண்டைச் சுருக்கும், தாமமுடன்
இணைக்கும் வாச மாலைகளும்,
தண்டில் கட்டும் கண்ணிகளும்,
தளிரிற் பிணைக்கும் பிணையல்களும்,
நுண்தா திரைக்கும் தொடையல்களும்,
சமைத்து நுடங்கும் நூல்மார்பர்.

பூத்தொடுத்தலுக்கு முன்னதாக, நந்தவனம் வைத்துப் பராமரித்தலும் பூ எடுத்தலும் கருதத்தக்கவை. நந்தவனம் வைத்தலில் கணநாதர் பயிற்சி தருகிறார். பூ எடுக்கும்போது, அதற்கும் முறைகள் உள்ளன: 'வைகறை உணர்ந்து போந்து, புனல் மூழ்கி, வாயுங் கட்டி' என்றவிடத்து, வாயைத் துணியால் கட்டி, மூச்சுத் தானும் பூவில் படாமல் எடுக்கவேண்டும் என்ற கருத்து உணர்தற்பாலது. இதுசொன்ன சேக்கிழாரே பின்னர் கண்ணப்பர், 'தூநறும் பள்ளித்தாமம் குஞ்சிமேல் துதையக்கொண்டார்' என்று சொல்லுகிறார்.

## கலைப்பண்பு

அரச வாழ்வில் அமைச்சராக இருந்து, நாடு முழுதும் சென்று சிவாலயங்கள் யாவும் கண்டு வழிபட்டு; பெருமானுடைய அருள்வெள்ளத்தில் திகழ்ந்த அடியவர்களின் தொண்டு வாழ்க்கையையும் அருள் வாழ்க்கையையும் பாடிய சேக்கிழாரின் நூல், அழகுக்கொரு சாசனம் என்று கூறுவது முழுமையும் பொருத்தமாகும்.

பெண்களின் உருவ அழகை இவர் அதிகம் வருணிப்பது இல்லை; திருவனையார் என்ற ஒரே கருத்துத்தான் நூலெங்கும் காணப்படும். சிறப்பான அடியார் மனைவியர் திலகவதியார், மங்கையர்க்கரசியார் புனிதவதியார் ஆகியோரைக் குறிப்பிடும் இடங்கள் அனைத்திலும் இத்தொடரையே கூறுவார்; திருவினும் உருவம் மிக்கார், திருவினும் பெரியாள், திருமகள் என்ன நின்ற தேவி திருமகட்குமேல் விளங்கும் செம்மணியின் தீபம், செம்மலர்

மேல் திருவனைய திலகவதியார், செங்கமலத் திருமடந்தை தாமரைத் தவிசில்வைகும் தனித்திரு என்பன சில தொடர்கள். புனிதவதியார் பிறந்து வளர்கின்றார்: திருமடந்தை அவதரித்தா ளென வந்து பொங்கிய பேரழகு மிகப் புனிதவதியார் பிறந்தார்; விடையவர்பால் பொங்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழு வதென வளர்வார்: என்று புற அழகில் நாட்டம் செலுத்தாமல் அருள் அழகில் நாட்டம் செலுத்திப் பாடுவார். அழகை வருணிப்பது எளிது. அழகையே துறந்து கைம்மைக்கோலம் பூண்டு நிற்கும் நிலையைச் சொல்வது எளிதன்று. சேக்கிழார் சொல்கிறார்; 'உயிர்தாங்கி அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி இம்பர் மனைத்தவம் புரிந்து திலகவதியார் இருந்தார்': இங்கும் அழகு சொல்லப்பெறுகிறது: உடலழகன்று, உயிரின் அழகு; தூண்டுதவ விளக்கனையார் என்று அவரையே மறுபடியும் குறிப்பிடுகிறார். மங்கையர்க் கரசியாரைக் குறிப்பிடும்போது, 'எங்கள் தெய்வம்' என்று சேக்கிழார் சொல்வதானால், இவர் உள்ளம் எவ்வளவு தூரம் அவருடைய தொண்டில் ஈடுபட்டுக் கரைந்திருக்கிறதென்று காணலாம்.

ஒரு சொல்மரபை இங்கு குறிப்பிடலாம். தமிழ்மரபின் படி தெய்வத்தைக் குறிப்பிடும்போது, படர்க்கையில் அஃறிணை ஒருமையில் அமைத்துச் சொல்வதுதான் பெருவாரியான ஆட்சி. தெய்வம் வந்தது, அருள் செய்தது என்பதுதான் முறை; இதுவே வாய்மொழி வழக்கு. இறைவன் அருள் செய்தான் என்று சொல் வதும் வழக்கு.* இறைவனைப் போலவே குருவையும் பெற்றோரை யும் கூட முன்னிலைப்படுத்திப் பேசாமல் முன்னிலையில் இருந்தும் படர்க்கையில் பேசுவதே சிறந்த தமிழ் மரபு. இந்த மரபைச் சமீப காலத்தில் சைவ மடங்களிலும் ஐயர் அவர்கள் போன்ற பெரியவர்களிடத்திலும் இருந்துவரக் கண்டிருக்கிறோம். சேக்கிழார் இதைத் தம்காலத்தில் நன்கு கண்டவர். பேரரச ரிடத்தில் மந்திரியாக இருந்தமையால் அரசரை முன்னிலைப்

* இதைவிட்டு, சிவனார் வந்தார் என்று மரியாதை கொடுத்துச் சொல்வ தெல்லாம், உள்ளத்தில் இல்லாது சொல்லில் மட்டும் வருவிக்கின்ற போலி மரியாதை; இது தெய்வ நம்பிக்கை அற்றவர் சொல்லும் சொல். கடவுளே குருவாக வருகிறார் என்பது சைவக்கொள்கை. ஆகவே, குருவையும் அஃறிணையில் சொல்வதே மரபு. சுவாமி வந்தது, மகாசந்நிதானம் எழுந்தருளிற்று என்பதே மரபு. இவற்றை விட்டு, இன்று மகாசந்நிதானம் அவர்கள் வந்தார்கள் என்று சொல்வதையும் காண்கிறோம், இது மொழிமரபைச் சிதைக்கும் பெரும்பிழையாகும்.

படுத்திப் பேசாமல் படர்க்கையில் வைத்துக் காட்டு கிறார். மதுரையில் சம்பந்தர் இருக்கும்போது அவருடைய தந்தை சிவபாத இருதயர் புதல்வரைப் பார்க்க மதுரை வருகிறார். அவருடைய வரவுகேட்ட சம்பந்தர் எதிரே சென்று நலன் விசாரிக்கிறார்.

அப்பர்எழுந் தருளினார் எனக்கண்டோர் அடிவணங்கி
ஒப்பில்புகழ்ப் பிள்ளையார் தமக்கோகை உரைசெய்ய
'எப்பொழுது வந்தருளிற்று?' என்றெதிரே எழுந்தருள.

(அப்பர் சிவபாத இருதயர்.) 'எப்பொழுது வந்தருளிற்று' என்ற சொல்லாட்சி காணத்தக்கது.

இங்ஙனமாக, கலை என்று எத்தனைத் துறைகளை நாம் கருதமுடியுமோ அத்தனையும், பல்வேறு வாழ்க்கை நிலைகளை யுடைய நாயன்மார் வரலாற்றில் சேக்கிழார் புனைந்து பாடி யிருக்கக் காணலாம்.

## பொருளியல்

பெரியபுராணமானது வாழ்க்கையில் பல துறைகளையும் ஆராய்ந்து விளக்கம் தருகின்ற ஒரு வாழ்க்கைப் பெருங்காப் பியம். (காப்பியம் என்பதை இங்கு இலக்கணத் துறையில் கருதிச் சொல்லவில்லை.) கலைகள், சமயங்கள், சைவம், பக்தி, உடல் உழைப்பு, பெண்களின் நிலை, சாதியுணர்வு, தீண்டாமை, பொதுமை முதலிய பொருள்கள் பற்றி வேறு தலைப்புகளில் ஆராய்ந்திருக்கிறோம். சிலகருத்துக்களை இங்கு குறிப்பிடுவோம்.

காப்பியம் என்ற தகுதிக்கு ஏற்பப் பருவங்களைக் குறித்துப் பல கருத்துக்களை ஆங்காங்கு சேக்கிழார் சொல்லி இருக் கிறார். அவருடைய வானநூல் புலமையும் விளங்குகிறது.

அமைச்சராகவும், அரசைச்சார்ந்த பெருவாழ்வு உடைய வராகவும் இவர் வாழ்ந்தமையால் அரசியல் செய்திகள் பல இவர் நூலால் நன்கு விளங்குகின்றன. அரசருக்கு முடி சூட்டுதல் பற்றிய செய்திகள் பல. அரசன் குடிகளை ஓம்புதல் பிராணி களின் மொழியை அறிதல், ஆராய்ச்சி மணியின் பணி, வேளாளர் போரில் தலைமை வகித்தல், சிறுவர் செய்யும் குற்றத்துக்குப் பெற்றோர் பொறுப்பேற்றல் (சண்டேசர் வரலாறு), இல்லற நிலை, திருமண நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், கற்பின் திறம்

முதலான பல செய்திகளை இந்நூல் விளக்கமாகக் காட்டு கிறது. இவற்றுள் சிலவற்றைத் தொகுத்து இதன்பின்னே அரசியல், போர், நீதி போன்ற சில தலைப்புக்களில் தருகிறோம். திலகவதியார், காரைக்காலம்மையார் வரலாற்றிலும், திருஞான சம்பந்தர் திருமண நிகழ்ச்சிகளாலும், இக்கால அகப்பொருள் இலக்கியம் கூறியவாறு, மணமகனுக்கு மணவயது பதினாறு என்றும், மணமகளுக்கு வயது பன்னிரண்டு என்றும் தெரிவ தோடு, இக்கால மணமுறை நிகழ்ச்சிகள், சடங்குகள் முதலியன வும் விளக்கமாக அறிகிறோம். இல்லறம் நடத்தும் முறை, விருந் தோம்பல் என்பன நூலில் பல இடங்களில் அழகுபெறக் காட்டப் பட்டுள்ளன. பரவையார் வளர்ந்து வந்தார் என்று கூறுமிடத்து, ‘ஆடும் மென்கழங்கும் பந்தும் அம்மனை ஊசல் இன்ன பாடும்’ என்று சொல்கிறார் (201). இந்நான்கும் பிற்காலப் பெண்பாற் பிள்ளைத்தமிழின் பருவங்களாயிருப்பது அறியற்பாலது.

**அரசியல்**

புராணத்துள் தமிழ்நாட்டின் எல்லா அரசர்களும் சொல்லப் படுகின்றனர். அரசன் சந்ததி இன்றி இறந்து போகும்போது, அரசயானை வீதியில் சென்று யாரேனும் ஒருவரைத் துதிக்கை யினால் எடுத்து அவரைத் தாங்கிவர அவரே அரசராகிறார் என்ற வழக்காற்றுக் கதை இங்கு மூர்த்திநாயனார் புராணத்தில் கொள்ளப்பட்டு இருக்கிறது. தில்லை மூவாயிரவர் சோழ மன்னருக்கு முடிசூட்டும் அருகதை உள்ளவர் என்று அறிகி றோம். இது இயல்பே. தில்லைக்கும் மூவாயிரவருக்கும் உள்ள சகல சிறப்பும் சோழர்களால் விளைந்தன அல்லவா? மூவாயிரவர் கூற்றுவ நாயனாருக்கு முடிசூட்ட மறுத்தமையால் இச்செய்தி தெரியவருகிறது.

சேக்கிழார் அமைச்சராக இருந்தவர். மனுநீதிச் சோழன் அவையில் பசுவினால் வந்த வழக்கை முடிவு செய்யும் வகையில் அமைச்சர் பண்பைச் சிறிது காண்கிறோம். ஆனால் அங்கு அரசனுடைய பண்பு, அமைச்சர் கூறும் அரசியல் தருமத்தைக் கடந்து இன்னும் மேலான ஒரு தெய்வதருமத்தைக் கடைப் பிடிக்கிறது. அடுத்து, அமைச்சராய் உள்ள குலச்சிறையார், சமணம் சார்ந்த பாண்டியனுக்கு மந்திரியாய் இருந்தும்கூட, சமயத்துறையில் தம் சொந்தக் கொள்கையையே கடைப்பிடித்து அரசியின் முயற்சிக்குத் துணையாய் இருக்கிறார். இது இலக்கிய உலகில் மிகவும் சிறப்பான ஒரு நிலை.

அரச தருமம் மிகப் பெரியதாகக் கருதப்பட்டது. எல்லா உயிர்களுக்கும் தீங்கு வாராது காப்பது அரசனது பொறுப்பு. இதை மனுநீதிச் சோழன் வரலாற்றாலும், மதுரையில் ஆட்சி புரிந்த நெடுமாறன் வரலாற்றாலும் அறிகிறோம்.

'மனுநீதிச் சோழன்' என்ற பெயரே அறத்தின் நேர் சொல் லாகிய நீதி என்பதைக் கொண்டிருக்கிறது. இக்கதை தமிழ் நாட்டின் பழங்கதைகளுள் ஒன்று என்பதில் ஐயமில்லை. பின் வரும் பழமொழி நானூற்றுப் பாடலைக் காண்க:

> சால மறைத்துஓம்பிச் சான்றவர் கைகரப்ப
> காலை கழிந்ததன் பின்றையும் – மேலைக்
> கறவைக் கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்;
> முறைமைக்கு மூப்புஇளமை இல்.

ஒரு பசுவின் கன்றுக்காகச் சோழமன்னன் தன் ஒரே மகனை தேர்க்காலிலிட்டு ஊர்ந்தான் என்ற அற்புதமான சரித்திரம் சிலப்பதிகாரத்தில் 'நீ யார்' என்று கேட்ட பாண்டியனுக்கு, 'தேரா மன்னா' என்று தொடங்கி,

> வாயிற் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
> தான்தன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
> பெரும் பெயர்ப் புகார் என் பதியே.

என்று கண்ணகி வாய்மொழியாக மிகுந்த வலிமைபெற்று வெளி வருகிறது. புராணத்தின் தொடக்கத்திலேயே இவ்வரலாற்றை நகரச் சிறப்பாகச் சேக்கிழார் கூறுமிடத்தில் எல்லா நீதிகளையும், அரசவையில் நீதி வழங்கும் முறையையும், மிக நன்கு பொருத்திக் கூறுகின்றார். கன்றை இழந்த பசுவுக்கு முறை செய்யுமிடத்தில் மந்திரிகள் கூற்றை மறுத்து மனுச்சோழன் கூறும் கருத்துக்கள் அறநெறியின் ஆணி வேராயுள்ளன. நூலாசிரியர் பேரமைச்ச ராயிருந்து அறங்களை நன்குணர்ந்து கடைப்பிடித்தவர் என் பதை இவை பாடல்தோறும் உணர்த்துகின்றன.

அரசநீதியைக் கூறும் சிலவரிகள் இங்கு கருதத்தக்கன. 'மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட் கெலாம் - கண்ணும் ஆவியு மாம் பெருங்காவலான்' என்பது ஒன்று.

மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு – தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்தம்மால் –
ஆனபயம் ஐந்துந் தீர்த்து அறங்காப்பன் அல்லனோ.

என்பது நன்கறிந்த பாடல். இவ்வாறு உயிர்களுக்கு வரும் துன்ப மானது பிற நூல்களில் சிறிது மாற்றிச் சொல்லி இருப்பதையும் காணலாம். மதுரையில் சம்பந்தர் சென்று தங்கிய திருமடத்தில் சமணர் தீயிட்டமை அறிந்த சம்பந்தர் "மாதவர் துயிலும் இத் திருமடப் புறம்பு பழுது செய்வதோ - பாவிகாள் எனப் பரிந் தருளி" - இது அரசன் ஆட்சியில் அமைந்த வழு. ஆகவே இத் தீங்கு வேந்தன் மேற்று என்று கருதுகிறார். சேரமான் வரலா றும் இதையே உணர்த்துகிறது. அவர் பெருமானிடம் வேண்டி உயிர்கள் யாவும் கழறியவற்றை அறியும் உணர்வு வரப்பெற்றார். எவ்வுயிரும் சாற்றும் மாற்றங்கள் உணரப்பெறும் தலைவர் ஆகிய சேரமான் கழறிற்று அறிவார் என்று இதுகொண்டு பெயர் பெற்றார்.

## போரும் வீரமும்

பொதுவாகப் பெரியபுராணத்தில் நாம் பார்க்கும் போர்கள் அறவழியில் செய்கின்ற போர்கள். மக்கள் அனைவரும் போர்த் தொழில் பயிற்சி பெற்றிருந்தார்கள் என்று தெரிகிறது. போர் என்று அரசன் அழைத்த செய்தி கேட்ட உடனே கலிப்பகையார் போருக்குச் சென்று விடுகிறார். போரில் உயிர் கொடுத்துத் தம்முடைய கடன் கழித்தார் என்று அறிகிறோம். நெடுமாறனும் நெல்வேலி வென்ற பெருவீரன். அப்படியே செங்காட்டங்குடி யில் பிறந்த பரஞ்சோதியார் மன்னவன் அழைப்பை ஏற்று வட புலத்து வாதாபித் தொன்னகரம் துகளாக்கிப் பெருவீரராகத் திரும்பிப் பின்னர் சிறுத்தொண்டர் ஆனார் என அறிகிறோம். முடிமன்னராய் இருந்த புகழ்ச்சோழரும் பெருவீரராய் இருந் தவர். அவருடைய போரைச் சேக்கிழார் பல பாடல்களால் வருணிக்கிறார். ஆனால் அவருடைய சிவபக்தியானது போரில் இறந்துபட்ட ஒரு வீரனுடைய சடைத்தலையைக் கண்டு தம் முடைய உயிரைத் துறக்குமாறு செய்கிறது. நிராயுதபாணி யைக் கொல்லக்கூடாது என்பது ஒரு யுத்ததருமம். இதை ஏனாதிநாயனார் வாழ்க்கையில் காண்கிறோம்.

புராணத்தைப் பார்க்கும்போது இரண்டு நிலைகள் நன்கு தெரிகின்றன. ஒன்று போரில் ஈடுபட்ட சாமானிய வீரர்கள்.

மற்றொன்று சேனைத் தலைவராயும் தளபதியாயும் இருந்தவர்கள். சாமானிய நிலையில் போர்வீரராய் இருந்தவர்கள் முனையடுவார், கோட்புலியார் முதலியோர். ஆனால் பெரு வீரராய்த் தலைவராய் விளங்கியவர்கள் கலிப்பகையார், ஏயர் கோன் கலிக்காமர், மானக்கஞ்சாறர் முதலியோர். பெரிய புராணத்தில் நாயன்மார் வகையில் பதின்மூவர் வேளாளராய் உள்ளனர். இவர்களுள் மேற்கூறியவாறு பலர் போர்வீரராயும், தலைவராயும் இருந்தமை அவருடைய பெரும்தகுதியைக் காட்டும். இத்தகுதியைக் கூர்ந்து நோக்கும்போது ஆசிரியர் கூறும் வருணங்கள் தமிழ்நாட்டில் ஒருகாலும் நிலைபெற்றதில்லை என்று விளங்குகிறது.

## நீதி

ஆரூரில் மனுநீதிச்சோழன் ஆட்சி செய்தபோது அரச முற்றத்தில் ஒரு மணி தொங்குகிறது. ஆராய்ச்சிமணி என்பது அதன் பெயர். ஆட்சியில் குறை உடையவர்கள் அம்மணியை அடித்தால் அரசனே நேரில் வந்து அடித்தவருடைய குறையைக் கேட்டறிந்து முறை செய்வான். இவ்வழக்கம் இருந்ததென்பதை நாடோடிக் கதைகளில் கேள்வியுறுகிறோமேயன்றி, நூல்களில் பெரியபுராணம் கூறும் வரலாற்றில்தான் இடம்பெறுகிறது. இதற்கு முன்னதாகச் சிலப்பதிகாரத்தில் பாண்டியன் நெடுஞ் செழியனுக்குத் தான் எந்த ஊரினள் என்று சொல்ல வந்த கண்ணகி கூறும் செய்திகள் பலவற்றுள் இம்மனுச்சோழன் வரலாறும் ஒன்று.

> வாயிற் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
> தான் தன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
> பெரும் பெயர்ப் புகார் என்பதியே.

என்ற சொற்களால் கண்ணகி சோழன் மணியின் ஓசைகேட்டு ஆவின் துயர் உணர்ந்து அதற்கு கழுவாயாகத் தன் ஒரே புதல்வனைத் தேர்க்காலில் மடித்தான் என்று சொல்கிறாள். இது ஒரு பழமையான சோழநாட்டு வரலாறு. இதில் சிறப்பாய்க் கருதத்தக்கது, ஆராய்ச்சிமணி என்பது ஒன்று நடைமுறையில் இருந்துவந்தது என்பது.

மற்றோர் அரசநீதியையும் குறிப்பிடலாம். பொற்கொல்லன் சொல் கேட்டுத் தன் செங்கோல் பிழைத்தது என்று உணர்ந்த பாண்டி மன்னன் சிலப்பதிகாரத்தில் அக்கணமே உயிர் துறக்கிறான். இப்படியெல்லாம் உண்மையில் நடக்குமா என்று ஆராய்ச்சி செய்து பயனில்லை. நீதி உணர்வுக்கு எவ்வளவு உயர்ந்த இடத்தை நம்முடைய மேன்மக்கள் அளித்திருந்தார்கள் என்பதையே இவை காட்டுகின்றன. இது ஒப்பற்ற ஒரு லட்சிய நிலை.

காந்தியடிகள் ஒருவன் குண்டுபட்டு இறந்தார் என்ற செய்தியை வானொலி மூலமாகக் கேட்டவர்களில் தமிழ்நாட்டில் அக்கணமே இருவர் உயிர் விட்டார்கள் என்று 1948இல் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறோம். இவர்கள் காந்தியைக் கண்ணால் கண்டவர்கள் கூட அல்லர். பின் ஏன் உயிர் துறக்க வேண்டும்? அத்தகைய கொடுமையை, கண்முன்னே அல்ல, உலகத்தில் எங்கோ நடந்த கொடுமையைத் தாங்காமல் அவர்கள் நெஞ்சு வெடித்துவிட்டது. இதை நாம் நன்கு உணர வேண்டும். இவர்கள் எக்காலத்திலும் எச்சமயத்திலும் எந்நாட்டிலும் இருப்பார்கள். இப்படியிருந்தவர்களே மனுநீதிச்சோழனும், பாண்டியன் நெடுஞ்செழியனும்.

நீதி வழங்குவது பற்றி மூன்று தன்மைகளைப் பெரிய புராணத்துள் காணலாம். ஒன்று அமைச்சர் கூறும் உலக நீதியை அரசன் ஏற்க மறுத்துத் தெய்வநீதி வழங்குவது. இரண்டாவது நீதிமன்றத்தின் செயல்முறைகள். மூன்றாவது இறைவனே நீதி வழங்குவது. பிந்திய இரண்டையும் இனிக் காண்போம். இறைவனே முதிய வேதியனாக வந்து சுந்தரருடைய மணத்தைத் தடுக்கிறார். அங்கு நடக்கின்ற நிகழ்ச்சிகள் முழுமையும் ஒரு நல்ல நீதி மன்றத்தில் நிகழும் வழக்கு விசாரணையை ஒத்திருக்கக் காணலாம். வேதியர் பொதுமன்றத்தில் தமது வழக்கை வாய்மொழியாக வெளியிடுகிறார். இங்கு மூவகைச் சாட்சியங்கள் பேசப்படுகின்றன. ஆட்சி என்பது முதலாவது. அந்தணனுக்கு அந்தணன் அடிமையாதல் உலக வழக்கில் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்போது வேதியர் தமக்குச் சுந்தரருடைய முன்னோர் எழுதித் தந்த ஓலையைக் காட்டுகிறார். இது இரண்டாவதாகிய ஆவணம் என்ற சாட்சியாகும். வேதியர் காட்டுகின்ற ஓலையில் உலக வழக்குக்கு மாறாகியிருப்பினும், மூலவோலை காட்டுகிறேன் என்று வேதியர் ஓலை காட்டுகிறார். அங்கு "நாவலூர் ஆதிசைவன் ஆரூரன் வெண்ணெய் நல்லூர்ப்

பித்தனுக்கு யானும் என்பால் வருமுறை மரபிலோரும் வழித் தொண்டு செய்தற்கு ஓலை இருமையால் எழுதி நேர்ந்தேன். இதற்கு இவை என் எழுத்து." இவ்வாறு ஓலையில் இசைவைக் காணவே, சபையார் இது ஆட்சிக்கு மாறாயிருப்பினும் ஏற்க வேண்டியிருக்கிறது. வேறு கையெழுத்தைக் கொண்டுவரச் சொல்லி, கையெழுத்தை ஒப்பு நோக்குகிறார்கள். சரியாயிருப் பது கண்டு 'நம்பி ஆரூரர் வேதியர்க்கு ஏவல் செய்தல் கடன்' என்று முடிவு கூறுகிறார்கள். மற்றொன்று, முதலில் வேதியர் காட்டிய ஓலையை நம்பி ஆரூரர் கிழித்து எறிந்துவிட, வேதியர் சளைக்காமல், "இது படியோலை, மூலவோலை வேறு, அதைக் காட்டுகிறேன்" என்று வேறு ஓலை காட்டுகிறார். இங்கு இன்றைய நீதிமன்ற நடைமுறைகள் யாவும் அப்படியே அன்று செயல் பட்டிருக்கக் காண்கிறோம்.* இந்த முறையிலேயே அடியவர் திருநீலகண்டத்துக் குயவனாரிடம் ஓடு காணாமற்போதலும், அங்கும் சபையோர் இருவரையும் அழைத்து, காணாமற் போக்கிய குற்றத்தினால் அடியவர் சொற்படி திருநீலகண்டர் பிரமாணம் செய்யவேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். இப்பகுதிகள் மூலத்தில் வாசிக்கும்போது மிக்க சுவை தருவன வாய் இருக்கும்.

இறைவன் நீதி வழங்கிய வரலாறு, சுந்தரர் வாழ்க்கையில். சுந்தரர் தம்பிரான் தோழர். 'தோழனுமாய் யான்செய்யும் துரிசு களுக்கு உடனாகி' என்று சுந்தரர் அவரைக் குறித்துப் பாடுகிறார். இருந்தும் அத்தோழர் நீதியை விட்டு வழுவத் தயாராய் இல்லை. சுந்தரர் சங்கிலியை மணக்கிறார். இறைவன்முன் தம்மைப் பிரிவதில்லை என்று சபதம் செய்து கொடுக்கும்படி சங்கிலி கேட்கும்போது, சுந்தரர் ஆலயத்தை விட்டு மகிழின் கீழ் இருக்கும்படி பெருமானை வேண்டுகிறார். பெருமான் அதற்கு இசைந்த போதிலும், சங்கிலியிடம் பக்குவமாகச் சொல்லி மகிழின் கீழ்ச் சபதம் செய்விக்கச் செய்கிறார். இதனால் அவ ருடைய சபதம் உண்மைச் சபதம் ஆகிறது, பின்னால் சுந்தரர் சங்கிலியைப் பிரிந்தவுடன் இறைவனது அருளால் அவருடைய கண்பார்வை நீங்கிவிடுகிறது. சுந்தரர் எவ்வளவோ வேண்டியும் பயனில்லை. சபதத்தை மீறியதற்காக அவரைத் தண்டித்தே

* இதன் விரிவை சி.கே. சுப்பிரமணிய முதலியாருடைய சேக்கிழார் என்ற நூலிலும் அவருடைய பெரியபுராண விரிவுரைப் பதிப்பிலும் விளங்கக் காணலாம்.

விடுகிறார். எவ்வளவோ முறையிட்டும் கண் கிடைக்கவில்லை. பின் காஞ்சியில் ஓர் இடக்கண் கிடைக்கிறது. பிறகு திருவாரூரில் தான் வலக்கண் பெறுகிறார். இங்ஙனமாக சுந்தரர் வாழ்க்கையின் மூலம், இறைவன் நீதிவடிவினன் என்ற பெருந்தத்துவம் உணர்த்தப் பெறுகிறது.

## பிற செய்திகள்

நோயையும் மருந்தையும் விரிவாகப் பலமுறை குறிப்பிடுகிறார். அப்பருக்குச் சூலைநோய் அருளியது நன்கு தெரியப் பட்ட வரலாறு. அதுபோலவே சம்பந்தர் தீர்த்த முயலகன் நோய், நெடுமாறனுக்குச் சம்பந்தர் ஏவலால் விளைந்த கொடிய வெப்புநோய், அப்பூதியடிகளின் மகனையும் பூம்பாவையையும் அரவு தீண்டியதால் விளைந்த விடத்தின் செய்கை, கண்ணப்பர் கண்ணப்பிய இடத்துக் கண்ணோயின் தன்மை முதலியவை அவ்வவற்றுக்குரிய விளக்கங்களோடு பொருந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளன.

சேக்கிழார் பக்திச்சுவை ததும்பத் தம் புராணத்தைப் பாடியபோதும் கூட நாயன்மாருடைய அடிமைத் திறத்தையும் தொண்டின் பெருமையையும் நினைக்கும்போது, தமக்குச் சொல்லும் தகுதி இல்லை என்று அவையடக்கமாக ஒவ்வொரு புராணத்திலும் சொல்லுகிறார்: சேதிநாதனார் பெருமைதன்னில் என் உரை செய்தேனாக, எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால் சொல்லலாம் படித்தன்றேனும் ஆசையால் கூறலுற்றேன், வாகீசர் சீர் பரவலுறுகின்றேன் ஒரு நாவுக்கு உரை செய்ய வொண்ணாமை உணராதேன், விறன்மிண்டரின் பெருமை கூறும் அளவு என் அளவிற்றே - என்பன போன்ற தொடர்களைக் காண்க.

பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது பழமொழி. அப்பர் திருப்பைஞ்ஞீலி சென்றபோது ‘அழிவாம் பசிவந்திட அணைந்து’ என்ற சொற்களால் சேக்கிழார் பசியின் கொடுமையை உணர்த்துகிறார். அப்பர் சுவாமிகள் திருப்பைஞ்ஞீலி அணுகவும், ‘வழிபோம் பொழுது மிக இளைத்து வருத்தம் உற நீர்வேட்கையொடும் - அழிவாம் பசி வந்தணைந்திடவும், ... தொண்டர் வருத்தம் மீட்பாராய், சிவபெருமான் காவும் குளமும் முன் சமைத்து, பொதி சோறுங்கொண்டு எதிரே நண்ணியிருந்தார்’ என்கிறார் சேக்கிழார். நிகழ்ந்த காலம் ஏழாம் நூற்றாண்டு. இவர் பாடும் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு. இன்று

இருபதாம் நூற்றாண்டிலும் கூட, திரிசிராப்பள்ளி துறையூர்ச் சாலையில் பிரிந்து திருப்பைஞ்ஞீலிச் சாலையில் சென்றால் சுற்றிலும் வறட்சியைக் காண்கிறோம்; ஒரே பாலைவனம். இரண்டு மைல் தூரமும் கடும்பாலை. பிற இடங்கள் யாவும் வளமாயிருக்க. இது மட்டும் பாலை. தலதரிசனம் செய்யச் செல்வோருக்கு, யாரேனும் நீரும் பொதிசோறும் தரமாட்டார்களா என்ற எண்ணம் நிச்சயம் ஏற்படும்; அப்பர் - சேக்கிழார் நினைவு வரும்.

### சமூக இயல்

இருபதாம் நூற்றாண்டில் உலகமெங்கும் மக்கள் மனத்தை ஆட்கொண்டுள்ள புரட்சிகரமான கருத்துக்கள் என்று சொல்லப் படுபவை, உழைப்பே உயர்வானது. மக்கள் எல்லோரும் ஓர் குலம், பெண்களுக்கு எல்லா உரிமையும் உண்டு என்பன போன்ற சில. ‘பண்டைக் காப்பியம் ஒன்று பேரிலக்கியமாக வேண்டு மானால் அது பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றிய தாய் இலங்கவேண்டும்’ என்று ஆங்கில நூல் வல்லார் சொல்லி யிருக்கிறார்கள். இந்த இலக்கணத்துக்குப் பெரியபுராணம் ஒத்து வருகிறதா என்பதை இங்கு பார்க்கலாம்.

### உழைப்பே உயர்வு

சேக்கிழார். ‘என் கடன் பணிசெய்து கிடப்பதே’ என்று சொல்லுகின்ற அப்பர் சுவாமி வழியில் வந்தவர். இவர் நூலில், தாழ்ந்த குலத்தவராக வாழ்ந்த நாயன்மார் பலர். அவர்கள் அனைவரும் உடலை வருத்தி உழைத்தவர்கள். திருக்குறிப்புத் தொண்டர் துணி வெளுத்துக் கொடுத்தலாகிய தொண்டு செய் தவர். குயவர் ஒருவர் தாம் உழைத்துத் திருவோடு செய்து கொடுக் கிறார். சாலியர் ஒருவர் தாம் உழைத்துத் துணி நெய்து தானம் செய்கிறார். ஒருவர் கோவணம் நெய்து கொடுக்கிறார். குருட ரான தண்டி அடிகள்கூட உடலை வருத்தி உழைத்துத் திருக் குளப்பணி செய்கிறார். திருநாளைப் போவாரும் போர்வைத் தோல் விசி வார் தந்திரி கோரோசனை என்பன ஆலயத்துக்கு அளிக்கும் தொண்டு உடையவர். இங்கெல்லாம் உடல் உழைப்பு பெருந்தொண்டாகக் கொள்ளப்படுகிறது.

உடல் உழைப்பின் உயர்வை அப்பர் சுவாமிகள் வரலாற்றி லிருந்தே நன்கு அறிய முடியும். திருவீழிமிழலைப் பஞ்சத்தின் போது அங்கு அப்பரும் சம்பந்தரும் சென்றிருந்தார்கள். பஞ்சத் தைத் தீர்க்க வேண்டி இருவரும் படிக்காசு பெற்றார்கள். அப்பர்

வாசி இல்லாக் காசுபெற, சம்பந்தர் பெற்ற காசுக்கு வாசி தர வேண்டியிருந்தது. இதைக்குறித்து அடியவர் சம்பந்தரிடம் கூறியபோது, சம்பந்தர் கூறுகின்றார்; "திருநாவுக்கரசர் பெற்ற காசு, உடல் உழைப்பினால் பெற்ற காசு ஆதலினால் அந்தக் காசுக்கு வாசி இல்லை" எனவே, அப்பர் சுவாமிகள் செய்த கைத்தொண்டு, அதாவது உழவாரப்பணி, சிவபெருமானால் மதிக்கப்பெற்றது, அதன் பொருட்டு அவர் கொடுத்த காசுக்கு வாசி தரவேண்டியதில்லை என்று சம்பந்தரே கருதிக் கூறிய தாக சேக்கிழார் எடுத்துக்காட்டுகிறார். உழைப்பின் சிறப்புக்கு இதனினும் சிறந்த சான்று வேண்டுவதில்லை. அப்பர் சுவாமிகள் சரீரத் தொண்டில் நின்றவர், அதாவது உழவாரப் பணியில் இன்றுங்கூட, தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் அவர் கையில் உழவாரப் படையைக் காணலாம். கந்தை மிகை யாம் கருத்தும் கை உழவாரப் படையும்' என்று சேக்கிழார் தவறாது பாடுகிறார். அப்பர் தாம்சென்ற கோயில்களில் எல்லாம், கையில் உழவாரம் ஏந்தி ஆங்காங்கிருந்த குப்பை களையும் புல்பூண்டு முதலியவற்றையும் களைந்து அப்புறப் படுத்தி வந்தார்.* இந்நிலை பற்றியே, அவர் செய்துவந்த அத் தொண்டு சரியை என்று பெயர்பெற்றது.

ஒரு நிலையை இங்கு சொல்லாமல் இருக்க முடியவில்லை. திருப்புகலூரில் அப்பர் உழவாரப்பணி செய்துவந்த நிலையில், இறைவன் அவருடைய உழவாரம் நுழைந்த இடமெங்கும் பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க அருள் செய்த போது, அவற்றையெல்லாம் உழவாரத்தில் ஏந்திப் பருக்கை யுடன் ஒக்கக் கருதிக் குளத்தில் போட்டார் என்று பாடுகின்றார்:

அந்நிலைமை யினிலாண்ட அரசுபணி செய்யஅவர்
நன்னிலைமை காட்டுவார் நம்பர்திரு மணிமுன்றில்
தன்னில்வரும் உழவாரம் நுழைந்தவிடந் தானெங்கும்
பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க அருள்செய்தார்.

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெனவும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினிலேந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகஎறிந்தார்.

---

* அப்பருக்கு நீண்ட வயது - 81; உடலை வருத்தி உழைப்பவர் நீண்ட ஆயுள் பெற்றிருப்பர் என்ற கருத்தையும் இது உணர்த்துகிறது.

எல்லாவற்றையும் துறந்து இறைவன் திருவடியே சேரும் எண்ணத்தோடு திருப்புகலூரில் வந்து, 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்ற திருத்தாண்டகம் பாடப்போகின்ற அப்பர் சுவாமிகளுக்கு இத்தகைய ஒரு சோதனை அமைத்தல் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. அப்படியே இங்கு விசும்பிலிருந்து தேவ மாதர் வந்து அப்பர் சுவாமிகள் முன் இசைபாடி நடமாடுகின்றார்கள். அவற்றைக் கண்டும் சுவாமிகள், தம்முடைய உழவாரப் பணியைத் தொடர்ந்து செய்கிறார்; 'பொய்ம் மாயப் பெருங்கடலுள்' என்ற தாண்டகம் பாடுகிறார். அம்மாதர் இவருடைய மனத்தைப் பேதிக்கச் செய்ய இயலாது சென்று விடுகிறார்கள். இந்த நிலையைச் சேக்கிழார் ஏழு பாடல்களால் பாடுகின்றார்.

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதல்மடவார் விசும்பூடு வந்திழிந்தார்.

வானகமின் னுக்கொடிகள் வந்திழிந்தால் எனவந்து
தானநிறை சுருதிகளில் தகுமலங்கா ரத்தன்மை
கானஅமு தம்பரக்குங் கனிவாயில் ஒளிபரப்பப்
பானல்நெடுங் கண்கள்வெளி பரப்பிஇசை பாடுவார்.

கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடுவார்.

ஆடுவார் பாடுவார் அலர்மாரி மேற்பொழிவார்
கூடுவார் போன்றணைவார் குழலவிழ இடைநுடங்க
ஓடுவார் மாரவே ளுடன்மீள்வர் ஒளிபெருக
நீடுவார் துகிலசைய நிற்பாரும் ஆயினார்.

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமுஞ் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்.

இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி
'உம்மாலிங் கென்னகுறை உடையேன் யான், திருவாரூர்

அம்மானுக் காளானேன், அலையேன்மின் நீர்' என்று
பொய்ம்மாயப் பெருங்கடலுள் எனுந்திருத்தாண் டகம்புகன்றார்.

மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா ஒருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க
யாதுமொரு செயலில்லா மையிலிறைஞ்சி எதிர்நின்றார்.

*இவற்றைப் பார்க்கும்போது நம் மனத்தில் பெரும் சிந்தனை எழுகின்றது. மிகமுதிர்ந்த வயதில் அப்பர் சுவாமிகள் திருப் புகலூருக்கு வருகின்றார். உடனே முத்தியும் அடைகின்றார். அப்போது அவருக்கு வயது 81 என்று தனிப்பாடல் கூறுகின்றது. முதிர்ந்த பிராயம் என்பதைப் பெரியபுராணமே நன்கு உணர்த்து கின்றது. இந்த நிலையில் விசும்போடு வந்த மடவார், இசை யாலும் நடனத்தாலும், கைதவச் செய்கையாலும், அவருடைய தன்மையைத் திரிக்க எண்ணுகிறார்கள் என்பது அவருடைய வயது நிலைக்குப் பொருத்தமில்லாமல் இருக்கிறது. இந்த நிலை அவருக்கு 30 அல்லது 40 வயதில் ஏற்பட்டிருந்தால் நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் 80 வயதில் ஒரு சமயாசாரியருக்கு இந்தச் சோதனை ஏற்பட்டு அவர் சித்தம் கலங்காமல் இருந்தார் என்பது, பொதுவாக உலகியலுக்குப் பொருந்தாத சிறப்பற்ற சோதனை என்று எண்ணுகிறோம்.*

*இந்த நிகழ்ச்சி ஒருகால் 'பொய்ம்மாயப் பெருங்கடலுள்' என்ற பதிகத்திற்கு அமைதி காட்டுவதற்காகப் படைக்கப் பட்டதோ என்ற ஐயம் எழுகின்றது. இப்பதிகம் புண்ணியபாவம், ஐம்பூதம், தன்மாத்திரைகள், இன்பதுன்பம் அறுவகைக் குற்றங்கள், விருப்பு வெறுப்பு, நல்குரவு செல்வம், வெகுட்சி மகிழ்ச்சி, பஞ்சேந்திரியம் முதலாகியவற்றைச் சுட்டி அப்பர் சுவாமிகள் பாடிய பதிகம். இது 'ஆரூர்ப்பெருமானை அடைய நான் விரைகின்றேன்; உங்கள் செயல் என்னிடத்தில் பயன் தராது' என்று அவர் கூறும் கூற்றாக உள்ளது; திருப்புகலூரில் இந்த நிலை பொருந்துமா என்பதைச் சிந்திக்க வேண்டும். இதனுள் ஒரு பாடலை எடுத்துக்காட்டாகக் கீழே தருகிறோம்.*

விரைந்தாளும் நல்குரவே, செல்வே, பொல்லா
வெகுட்சியே, மகிழ்ச்சியே, வெறுப்பே, நீங்கள்
நிரைந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்கு
இல்லையே நுகர்போகம்; யானேல், வானோர்

கரைந்தோட வருநஞ்சை அமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன், படேன்நும் பண்பில்:
பரிந்தோடி யோட்டந்து பகட்டன் மின்னே.

இங்கு, தம்முடைய மனத்தைத் திரிக்க வந்த அரம்பையரைக் குறித்து அப்பர் ஒரு சொல் சொல்லவில்லை, ஆதலால் இந்தப் பதிகம் இந்த நிலையில் திருப்புகலூரில் பாடப் பெற்றிருக்குமா என்ற ஐயம் நிச்சயமாக யாருக்கும் எழும். பதிகம் திருவாரூர் செல்ல எண்ணிப் பாடப்பெற்றது. திருப்புகலூரில் பாடப் பெறவில்லை. இங்கு, திருவாரூர் செல்லும் எண்ணம் அவருக்கு இல்லை. இந்தச் சோதனையும் அப்பருக்கு நடைபெறுவதில் பொருள் இல்லை என்று தான் நாம் முடிவு செய்ய நேரும். ஆனால் எப்படியோ நம்பியாண்டார் நம்பி இப்படி ஒரு நிகழ்ச்சியைப் பாடி வைக்க, சேக்கிழார் சுவாமிகள் இந்த நிகழ்ச்சியை உளப்படுத்தி அப்பர் புராணத்தை மேற்கூறியவாறு நடத்திச் செல்கிறார் என்றுதான் கருத வேண்டும்.

திருநாவுக் கரசடி யவர்நாடற் கதிநிதி
தெளிதேனொத் தினியசெய் மடவாரூர்ப் பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருஞானத் திரள்மன முருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான்வைத் தனதமிழ்
குருவாகக் கொடுசிவன் அடிசூடித் திரிபவர்
குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே.

நாம் இங்கு கூறியவற்றுள் சமய அபசாரம் இருக்குமாயின் சைவ அன்பர்கள் பொறுக்க வேண்டுகின்றோம். சிறந்த ஆராய்ச்சி அறிஞரொருவர்,* இந்த முரணுக்குக் கூறிய சமாதானமும் இங்கு அறியத்தக்கது. முதலாவது சேக்கிழார், புராணம் பாடுகிறார். வரலாற்றுச் செய்திகள் இதன்கண் இருக்கலாம். கவிதை இருக் கலாம். காப்பியச் சுவை இருக்கலாம். சீர்திருத்தம் இருக்கலாம். ஆனால் சிறப்புத்தன்மை புராணம் என்பதை மறந்துவிடக் கூடாது. புராணமானது பகுத்தறிவுக்காக மட்டும் ஏற்பட்ட தன்று; நயம்படச் செய்திகளையும் கதைகளையும் சொல்லிக் கொண்டு போவது; பொருத்தமா பொருத்தமில்லையா என்று

1. கே. எம். வேங்கடராமையா அவர்கள்.

ஆராய இடமன்று. ஆகவே புராணக் கண்ணோடு பார்க்கும் போது அப்பருக்கு எந்த வயதிலும் எந்தச் சோதனையும் ஏற்படக் கூடும்; இது புராண இயல்பு. இரண்டாவது, சிவபிரான் சோதனை செய்தார் என்ற செய்தியின் பயன், அப்பர் சோதனை உலகத் தாருக்குப் படிப்பினை உண்டு பண்ணுவதற்காக; சோதனை யில் அப்பர் வெற்றி பெறுகிறார் என்றால், உலக மக்களாகிய நாமும் அப்பர் வரலாற்றைப் பயிலும்போது, உலக மாயையில் மயங்கிவிடாமல் வெற்றி பெறவேண்டும் என்று உணர்த்தி இதற்கான பக்குவத்தை நம்மிடம் வளர்ப்பதே இந்த வரலாறு களின் நோக்கமாகும். 'இந்நிலைமை உலகேழும் எய்த அறிந் தியல் பேத்த, மன்னிய அன்புறுபத்தி வடிவான வாகீசர்' என்று சேக்கிழார் அடுத்த பாடலில் (1695) கூறுவதும் காண்க.

கணநாத நாயனார் வரலாற்றில் ஒரு சுவையான செய்தி யைக் காண்கிறோம். இவர் ஞானசம்பந்தர் காலத்தின் பின் காழிமா நகரத்தில் மறையவர் குலத்தில் தோன்றியவர். சரியைத் தொண்டு செய்வார்க்கு இவர் பயிற்சி கொடுத்து அவர்களைச் சிறந்த தொண்டர் ஆக்கினார்:

மேய அத்திருத் தொண்டினில் விளங்குவார்
    விரும்பிவந் தணைவார்க்குத்
தூய கைத்திருத் தொண்டினில் அவர்தமைத்
    துறைதொறும் பயில்விப்பார்.

நல்ல நந்தன வனப்பணி செய்பவர்
    நறுந்துணர் மலர் கொய்வோர்
பல்பணித் தொடை புனைபவர் கொணர்திரு
    மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லும்நண் பகலும்திரு அலகிட்டுத்
    திருமெழுக் கமைப்போர்கள்
எல்லையில் விளக்கெரிப்பவர் திருமுறை
    எழுதுவோர் வாசிப்போர்.

என்று இவ்வாறு இவர் தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுத்த செய்தி வரலாற்றிலேயே மிகவும் புதியசெய்தி. இவர் சுந்தரர் காலத்துக்கு முற்பட்டவர். திருமுறை எழுதுவோருக்கும் வாசிப் போருக்கும் பயிற்சி கொடுக்கிறார். (தேவாரத் திருமுறைகள் நம்பியாண்டார் நம்பியால் சுந்தரருக்குப் பின்னரே தொகுக்கப் பட்டன. ஆதலால் சேக்கிழார் கூறும் திருமுறை என்பது

தேவாரம் என்றே பொருள் செய்யத்தக்கது; திருமுறை என்ற சொல்லாட்சி பிற்பட்டது.) இருபதாம் நூற்றாண்டு அரசாங்க முயற்சியில் எல்லாத் துறைகளிலும் பயிற்சிகள் மலிந்த காலம். இருப்பினும், உடல் தொண்டு செய்வதற்குச் சுமார் 1300 ஆண்டு களுக்கு முன் கணநாதர் ஒரு பயிற்சிச்சாலை நடத்தினார் என்பது, என்றைக்குமே வியப்பளிக்கும் அரிய நிகழ்ச்சி.

## பெண்களின் உயர்வு

சமூக இயல் என்ற துறை பற்றிப் பெரிய புராணத்தைப் பல கோணங்களிலிருந்து ஆராய முடியும். அவற்றுள் முக்கியமான ஒன்று பெண்களுக்குத் தம் காப்பியத்துள் ஆசிரியர் என்ன இடம் கொடுக்கிறார் என்பது. உலகத்தில் பல நாடுகளில் இந்த நூற்றாண்டின் தொடக்க காலம் வரையில், பெண்களை ஓர் உடைமை போலக் கருதி வைத்திருந்தார்களேயன்றி, சுதந்திர முடையவர்களாகக் கருதியதில்லை. இருபதாம் நூற்றாண்டில் கூட, பெண்களுக்கு இந்தியநாடு அளித்துள்ள வாக்குரிமை உலகெங்குமே இல்லாத முற்போக்குச் செய்தி. ஆதலால், நம் தமிழ்நாட்டில் முற்காலத்தில் பெண்கள் எவ்வாறு கருதப் பெற் றார்கள், சேக்கிழார் என்ன சொல்லுகின்றார் என்று அறிவதில் நமக்கு ஆர்வம் எழுதல் இயல்பே.

சங்க நூல்களில் அவர்கள் சுதந்திரமுடையவர்களாகவும் வீராங்கனைகளாகவும், புலமை வாய்ந்தவர்களாகவும், கலை வல்லவர்களாகவும், உயர்ந்த மனித ஒழுக்கத்தைப் பேணிக் காப் பவர்களாகவும் இருக்கக் காண்கிறோம். கைம்மை வாழ்க்கை யைக் கடிந்து பேசும் பூதப்பாண்டியன் தேவியையும் அங்கு காண்கிறோம். காப்பியத்துறையில் பார்த்தால், சிலப்பதிகாரம் என்ற ஒரு கற்பனைப் பெருங்காவியம், கண்ணகியின் சிறப்புரைத் தற்கென்றே எழுந்தது. அவள் கற்பின் மிக்காள், வீரத்திலும் மிக்காள். தன் சுதந்திரத்தையும் கணவன் நற்பெயரையும் காப்பாற்றும் பொருட்டு உலகத்தையே எதிர்க்கும் ஆற்றல் பெற்றிருக்கிறாள். அதே காவியத்தில், பாண்டியன் நெடுஞ்செழி யனுடைய தேவி, 'கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவதில்' லென்று சொல்லி, கணவன் இறந்த மறுகணமே உயிர்நீக்கிறாள். ஆனால், மணிமேகலை சமய ஆராய்ச்சியில் புகுந்து, நாடு முழுதும் சஞ்சரிக்கிறாள். பெருங்கதையின் கதாநாயகியான வாசவதத்தை தன்னினைவு மிக்க ஓர் அரசகுமாரியாக இருக் கிறாளேயன்றி, பாத்திரப் படைப்பாக இல்லை. சிந்தாமணி

சூளாமணியில் வரும் பெண்கள், சுகபோகத்துக்கென்று அமைந்த பொம்மைகள்; பாத்திரங்கள் அல்ல. கம்பரில்தான் பாத்திரப் படைப்பைப் பார்க்கிறோம். அங்கு தசரதன் மனைவியர் மூவரும் ஆகட்டும், சீதையே யாகட்டும், மண்டோதரி, சூர்ப்பனகை கூனி - போன்றவர்கள் ஆகட்டும். ஒவ்வொருவரும் தனித்தனி உயிரும் உணர்வும் படைத்த மிக்க சிறப்பான பாத்திரங்களாக அமைந்து இருக்கிறார்கள். இது நன்கு அறியப்பட்ட பொரு ளாதலின் இங்கு விரிக்கவில்லை.

பெரியபுராணப் பெண்டிரை அடுத்துப் பார்க்கிறோம். முக்கியமானவர் மூவர். புனிதவதியார், திலகவதியார், மங்கையர்க் கரசியார். புனிதவதியார் கணவனுக்கு உறுதுணையாய் நின்று இல்லறம் நடத்தி வந்தபோது, அவன் அவரிடம் விளக்கம் பெற்றிருந்த தெய்வஅருள் நிலையைக் கண்டு அஞ்சி அவரைத் தெய்வமாக வழிபடுகிறான். கணவனுக்கு என்று ஏற்பட்ட அழகு பொருந்திய உடலை அவன் விரும்பாதபோது வெறுத்து, புனிதவதி என்று பெயர் பூண்டிருந்த இளம்பெண், பேய் வடிவம் வேண்டிப் பெறுகிறார்.* இறைவனிடமே அடிமை பூண்டு எல் லோருக்கும் தந்தையான பரம்பொருளாலேயே 'அம்மையே' என அழைக்கப்பெற்று, பெருமானது திரு நடனத்தைத் தரிசித்துக் கொண்டே இருக்கும் பெருவாழ்வு பெறுகிறார். ஞானசம்பந்த ராதியோராலும் போற்றப்பெற்ற செய்தியையும் காண்கிறோம். இறைவன்மீது சுவைமிகுந்த பாடல்கள் பாடுகிறார். காலத்தை யும் பக்குவமுதிர்வையும் ஒட்டி, தம் பாசுரங்களை 'மூத்த திருப் பதிகங்கள்' என்று கூறவும் பெறுகிறார்; சம்பந்தராதியோர் பதிகங்கள் இளைய திருப்பதிகங்களாகின்றன. இவருடைய அந்தாதி ஒன்று மட்டும் 'அற்புதத் திருவந்தாதி.' இங்ஙனமாக எல்லா விதத்திலும் இவருடைய பக்குவமும் ஒப்பற்ற தனி நிலையும் சைவ சமயத்திலே கூட வேறு யாருக்கும் கிட்டாத பெருநிலையாகும். மூத்த திருப்பதிகங்கள் என்ற பெயருக்கேற்ப மிகவும் பழமையான அடங்கன்முறை ஏடுகளில் முதலில்

---

* காரைக்கால் அம்மையார் வாழ்க்கை ஒரு பேரருள் நிலையை விளக்குமாறு சேக்கிழாரால் சொல்லப்படுகிறது. இதில் சிந்திக்கத்தக்க ஓர் இடமும் உண்டு. காலம் களப்பிரர் மதுரையைக் கைப்பற்றி ஆட்சி செய்தகாலம்; பெண்களுக்குத் தாழ்மை ஏற்பட்டிருந்த காலம். புனித வதியார் தம் கணவனைக் காணவேண்டி அம்மதுரை அடைகிறார்; களப்பிரர் தலைநகர் சென்றவர் தம் உடலை வைத்திருக்க விரும்பாமல் பேய் வடிவம் பூணுகிறார். இதுவே சிந்திக்கத்தக்க பொருள்.

அம்மையார் திருப்பதிகங்கள் இரண்டையும் எழுதிப் பின்னரே 'தோடுடைய செவியன்' என்ற முதல் திருப்பாசுரம் தொடங்கப் பெற்றிருப்பதைக் காணலாம்.

திலகவதியாரின் நிலை ஒரு தியாகமும் வைராக்கியமும் பொருந்திய நிலையாகும். மணமாகாதிருந்தும் கூட, தாய் தந்தையரால் மணம் பேசப்பட்டார் என்ற ஒரு காரணத்தால், தமக்கு நிச்சயித்த கலிப்பகை போரில் இறந்தார் என்ற செய்தி அறிந்தவுடன், உயிர்துறக்கத் துணிந்தார். பின் தம் தம்பியார் உளராக வேண்டும் என்ற தயாவினால், 'அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி'யிருந்தார். அத் தம்பியார் புறச்சமயம் சார்ந்தபோது இறைவனை வேண்டி ஆட்கொள்ளச் செய்தார். புறச்சமயத்தில் இருந்துகொண்டு 'கொடிய சூலை நோயால் துன்புற்றேன்' என்று தமது தம்பியார் செய்திவிடுத்தபோது, புறச்சமயத்தார் வாழுமிடம் சென்று அவர் தம்பியைப் பார்க்க மறுத்துவிடுகிறார். சமயபக்தி சகோதர பாசத் தினும் பெரிதாய்க் காண்கிறது. இவர் சைவத்துக்குக் கொடுத்த கொடையே அப்பர் சுவாமிகள்.

மூன்றாவது, மங்கையர்க்கரசியார். இவர் சோழர் குலப் பெண், மணிமுடிச் சோழன் தன் மகளார் என்பர்; பாண்டிமா தேவி. இவருடைய வாழ்க்கையில்தான் பெண்களின் பெருமை யும், சிறந்த சீலமும், உயர்ந்த குறிக்கோளும், தீரம்மிக்க இயல்பும் எல்லை கடந்த சுதந்திரமும் வெளிப்படுகின்றன. இவர் சைவமே பூண்டொழுகிய சோழநாட்டில் பிறந்த அரசகுமாரியாதலால், சிவ வழிபாடு மேற்கொண்டவர். நாயகனும் நாடு முழுமையும் புறச்சமயமாகிய சைன ஒழுக்கம். இவர் மதுரைக்கு வந்த காலத் தில் ஆலய வழிபாடு கூடச் சைனரால் தடைப்பட்டிருந்தது. இவர் மனம் எவ்வளவு துயரமுற்றிருக்கும் என்று நாம் சிந்தித்து உணரலாம். மன்னனைச் சைவத்துக்குத் திருப்பவேண்டுமே என்ற ஒரே சிந்தனையோடிருந்த இவருக்கு, அன்று புறச்சமயத்தி னிடையேயும் தமது சைவ சமயத்தை மேற்கொண்டொழுகும் சுதந்திரம் இருந்தமை பெருவியப்பு. சமயநெறியில் மந்திரி குலச்சிறையார் ஒருவரே இவருக்குத் துணை. இவ்வாறு நாடு முழுமையும் அரசனும் சமண சமயம் புக்கு உழன்றபோது, இவர் மட்டும் தாம் பிறந்த சைவ சமயத்தில் சிறிதும் பிறழாமல், தம் நாயகனிடத்தும் மாறுகொள்ளாமல், பெண்மைக்குரிய குணங் களில் சிறிதும் மாசு அடையாமல், நாயகனையும் தம் வழிக்கு

*மாற்ற வழி தேடிக்கொண்டிருந்து, ஒற்றர் மூலமாகச் சம்பந்தர் பெருமையையும் அவர் சோழ நாட்டின் தென் கோடியான வேதாரணியத்துக்கு வந்தமையும் அறிந்து, அவரைத் தம் நாட்டுக்கு அழைத்து வரவேற்கிறார்.*

*பெண்ணானமையாலும் அரசியானமையாலும், அரசன் வேற்றுச் சமயம் சார்ந்திருந்தமையாலும், இவர் நேரே சென்று வரவேற்பது பெண்மைக்கு மாறாகும்; ஆதலால், கோயிலுக்கு எப்போதும் செல்லும் சுதந்திரம் இருந்தமையால், அங்கு சம்பந்தர் வரும் நேரம் அறிந்து சென்று அவரை வரவேற்றுப் போற்றுகிறார். இதிலேயே இவருடைய இராசதந்திரம் விளங்குகிறது. சம்பந்தருடைய பாலப் பருவம் கண்டு இவருக்கு மனம் தளர்கின்றது. பின்னர் அவரைக்கொண்டு சமணரை வெல்லச் செய்து அரசரையும் தம்வழிக்கு மாற்றின இவருடைய பெருமையைச் சேக்கிழாரே 'எம்மால் பேசலாமோ' என்கிறார். நாடு முழுமையும் சமணக் குருமார் கூட்டம்; அரசனும் சமண சமயம்; சைவத்தில் நின்றோர் மந்திரி குலச்சிறையாரும் அரசியாருமே. அரசனுடைய ஒற்றர் சமணர். இவருக்குச் செய்தி அறிந்து சொல்லமாட்டார். ஆகவே தமது சமய ஒற்றரால் செய்தி அறிந்தமை இவருடைய ஆட்சித் திறமையும், கணவனையும் பொறுமையாகத் தானாய் மாறும்படி செய்ததில் இவருடைய இல்லற நயமும், சம்பந்தரைக் கோயிலில் சென்று வரவேற்றமையால் இவருடைய பெண்மையின் அடக்கமும், எவ்வளவோ பகைமைக்கிடையில் தம் சமயத்தை விடாது கடைப்பிடித்து ஒழுகியதில் இவருடைய வீரமும், சம்பந்தரின் இளமை கண்டு இரங்கியவிடத்து இவருடைய தாயுள்ளமும், சிறக்கப் புலப்படுகின்றன. சிவபெருமானையன்றி வேறு எந்தத் தெய்வத்தையும் பாடாத ஞானசம்பந்தர் ஒரு பதிகம் முழுமையிலும் இவருடைய பெருமையையே பாடுகிறார் என்றால் வேறு சொல்வது மிகை:*

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
    வரிவளைக் கைம் மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
    பணி செய்து நாள் தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
    வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
    ஆலவா யாவதும் இதுவே.

சம்பந்தர் தமது இளமைப்பருவங் கண்டு இரங்கிய இவரைத் தேற்றும் பொருட்டு, மற்றுமொரு முழுப் பதிகமே பாடியிருக்கிறார்:

மானினேர்விழி மாதராய், வழுதிக்கு மாபெருந்தேவி, கேள்:
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்,
ஆனை மாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன், திரு ஆலவாய்அரன் நிற்கவே

அறுபத்துமூன்று நாயன்மார் வரிசையில் கணவனும் மனைவியுமாக நாயனாராகக் கணக்கிடப்பட்ட பெருமை மங்கையர்க்கரசியாருக்கும் இவர் நாயகர் நெடுமாறருக்குமே உரியது. இவருடைய புராணத்தைத் தொடங்கும்போது,

மங்கையர்க்குத் தனியரசி, எங்கள் தெய்வம்,
வளவர்திருக் குலக் கொழுந்து, வளைக்கை மானி,
செங்கமலத் திருமடந்தை, கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை,
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே.

இப்பாடலில் சேக்கிழார் தமது இதயத்தையே பிழிந்து காட்டுவதுபோல் பாடுகிறார். முதலில் 'வளவத் திருக்குலக் கொழுந்து' என்று கூறுவது அவருடைய நாட்டுப்பற்றைக் காட்டுகிறது. 'தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை' என்பது பாண்டி நாட்டுக்கு வந்த பழிகண்டு பிறந்த இரக்கத்தையும், அதை மங்கையர்க்கரசியார் நீக்கியமை கண்டு எழுந்த பெருமிதத்தையும் ஒருங்கே உணர்த்துகின்றது. இவ்வாறு அன்பினால் மங்கையர்க்கரசியார் பெற்ற வெற்றி உலகச் சரித்திரத்தில் காண்பதற்கில்லாத ஒரு புதுமை. வட இந்திய சரித்திரத்தில் மீராபாயின் வரலாறு, சிறிதளவுக்கு இவர் வரலாற்றையும் சிறிதளவு ஆண்டாள் வரலாற்றையும் தழுவி எழுந்தது. அவர் காலம் மிகவும் பிற்பட்டது.

பாண்டிமாதேவியின் அன்பைச் சைவசித்தாந்த சாத்திரமாகிய திருக்களிற்றுப் படியார் உருக்கமான சொற்களால் சொல்கிறது;

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானம்
சுரந்துண்டார் பிள்ளைஎனச் சொல்லச் – சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.

*இதையே 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள், ஞானசம்பந்தருக்குப் பொய்கைக் கரையில் ஞானப்பாலூட்டிய பராசக்தியினும், இவருடைய பருவம் கண்டு மனம் தளர்ந்த பாண்டிமாதேவியே உயர்ந்தவர் என்ற கருத்துப்படப் பாடியிருப்பது வியப்பில்லை:*

இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ, முன்நின் – நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ, சம்பந்தா!
இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு.

*இத்தனைபேர் ஈடுபாட்டுக்கும் கதை வகுத்துக் கொடுத்தவர் சேக்கிழார்.*

*பெண்களின் வீரத்துக்கும், அன்புக்கும், இல்லறவொழுக் கத்துக்கும், சுதந்திரத்துக்கும் எடுத்துக்காட்டத்தக்கவர்கள் இவர் மூவர் மட்டுமல்லர்; நீலகண்டம் என்று ஆணையிட்ட திருநீல கண்டத்துக் குயவனாரின் மனைவி, பிள்ளையைக் கறிசமைத் துத் தந்த சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டுநங்கை, இளையான் குடிமாறநாயனார் மனைவி, குங்கிலியக்கலையரின் மனைவி முதலான பெண்குலத்தார் அனைவருமே பக்தியிலும் ஒழுக்கத்திலும் தீரத்திலும் சுதந்திரத்திலும் மேம்பட்டவர்களா கச் சேக்கிழார் காட்டுகிறார். மனைவி இட்ட ஆணைக்குப் பணிந்தே நீலகண்டர், மனைவியைத் தீண்டாது ஆயுள் முழுமை யும் வாழ்கிறார். இவர்கள் அனைவருடைய வாழ்க்கையும் ஒப்பற்ற தியாக வாழ்க்கை; அடிமை வாழ்க்கையல்ல; இவர்கள் தங்களை மறந்து கணவனுடைய பணியில் தாங்கள் பூரணமாய் ஒன்றி, அதற்கு எல்லா வகையாலும் தங்களை அர்ப்பணித்திருக் கிறார்கள். மேலும், துணைபிரிந்தால் உயிர்தரிக்காத அன்றில் பறவைபோல, நாயகனைப் பிரிந்தால் உயிர் துறப்பது, அன்பு முதிர்வின் சாதாரண இயல்பாய் அக்காலம் இருந்திருக்கிறது. நாவுக்கரசருடைய தந்தை புகழனார் இறந்தவுடன், தாய் தன் மக்கள் இருவரையும் எண்ணிப் பார்க்காமல், உடனே உயிர் துறக்கிறார்.*

புறச்செயலைப் பார்க்கிலும் உள்ளத்தில் விளையும் அன்பையே இறைவன் சிறப்பாய்க் கருதுகிறான் என்பதைப் பெண்கள் வரலாற்றுள் நீலநக்கர் மனைவியின் வரலாற்றில் பொருத்திக் காட்டுகிறார். நீலநக்கர் பூசை செய்தபோது ஒரு சிலந்தி சிவலிங்கத்தின்மேல் விழ, கண்ட அம்மையார் 'விரைவுற்று எழுந்த அச்சமோடு, இளங்குழவியில் விழுஞ் சிலம்பி ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப், பொழிந்த அன்பினால் ஊதிமேல் துமிந்தனர்போக.' இச்செயலைப் பூசுரரான நீலநக்கர் கண்டித்தார். ஆனால் இறைவன் அவர் கனவில், ஊதிய இடம் போக மற்ற இடம் எங்கும் சிலம்பி விடத்தால் கொப்புளித்திருக்கக் காட்டினான் என்பது வரலாறு. இங்கும் இவ்வம்மையார் காட்டிய தாய்மை அன்பின் ஏற்றத்தைக் காண்கிறோம்.

### சீர்திருத்தக் கருத்துக்கள்

பல்வேறு முரண்பட்ட நாகரிகங்களின் கலப்பால் இந்த இருபதாம் நூற்றாண்டில் பழமைக்கு மாறான அனேகக் கருத்துக்கள் சமுதாயத்துறையில் நிலைபெற்றுள்ளன. இவை புரட்சிகரமானவை, சீர்திருத்தக் கருத்துக்கள் என்று இக் காலத்தில் நாம் கருதுகிறோம். ஊன்றி ஆய்ந்து பார்த்தால், இவற்றுட்பல சேக்கிழார் கொண்டிருப்பதைக் காணலாம். முதலாவது பெண்கள் முன்னேற்றம் என்பது. இதை முன் ஆராய்ந்தோம். பெண்களை இல்லற ஒழுக்கத்தில் சிறந்தவர்களாய், வீரமும் சுதந்திரமும் நிரம்பியவர்களாய், புலமையும் ஆற்றலும் மிக்கவர்களாய் அவர் காட்டுகிறார்; இக்காலச் சுதந்திரத்தை விட அவர் காட்டும் சுதந்திரம் பலவகையிலும் மேம்பாடுடையதாகவே இருக்கிறது.

### சாதிப் பாகுபாடு

இன்றுபோலத்தான் அன்றும் இருந்தது. ஆனால் அடியார் இடையிலும் சிவ வழிபாட்டிலும் சாதி இடம்பெறவில்லை. அந்தண நம்பூதியும் வேளாள நாவுக்கரசும் ஒருங்கிருந்து உண்கிறார்கள். வேளாளரான திருநாவுக்கரசு சுவாமிகளை, அந்தணரான சம்பந்தர் 'அப்பரே' என்று அழைக்கிறார்; இப் பெயர் நாவுக்கரசின் சிறப்புப் பெயராக நிலைத்துவிட்டது. அந்தணச் சம்பந்தர் குழாத்தில் அரிசன நீலகண்ட யாழ்ப்பாணர் குடும்பத்தோடு இடம்பெற்றிருக்கிறார்; இவருக்கு அந்தண

நீலநக்கர் தம் இல்லத்தில் வேதிகையின் அருகில் தங்க இடம் அமைத்துக்கொடுக்கிறார். சிவவேதியர் மரபில்வந்த சுந்தரர் நரசிங்க முனையரையர் என்ற குறுநில மன்னரின் அரண்மனையில் வளர்கிறார். சிவாசாரிய மரபில் வந்த சுந்தரர் வேளாளரான கோட்புலி நாயனாரின் பெண்கள் சிங்கடிக்கும் வனப்பகைக்கும் தந்தையாகிறார். அரசராகிய சேரமான் பெருமாள், திருநீற்று நினைவினால் அடிவண்ணானை வணங்குகிறார். சுந்தரர் உருத்திரகணிகையர் மரபில் தோன்றிய பரவையை மணந்ததும், வேளாண் குலத்துப் பெண் சங்கிலியாரை மணந்ததும், இன்றைய கண்ணோடு பார்த்தாலும் மிகவும் முற்போக்கான கருத்துக்கள்.

மயிலையில் வணிகரான சிவநேசர் தம் பெண்ணான பூம்பாவையை, காழிநாடுடைய வள்ளலான சம்பந்தப்பிள்ளையாகிய அந்தணருக்கென்றே வைத்து வளர்ப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது:

> "சுற்றம் நீடிய கிளையெலாம் சூழ்ந்துடன் கேட்ப,
> கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
> பெற்றெடுத்த பூம் பாவையும் பிறங்கிய நிதியும்
> முற்றும் என்னையும் கொடுத்தனன் யான்." 2956

என்று மொழிந்தார்.

காலத்தின் வேகத்தால் சில கருத்துக்கள் பொருளற்றுப் போகின்றன. நாம் இப்போது வாழ்வது காந்தியுகம். இந்த யுகத்தில் அரசியல் துறையின் நிலைமை எப்படியிருந்த போதிலும் கூட, சமூகத்துறையில் பெரும் புரட்சிகள் சர்வ சாமானிய நிலையில் அமைந்துள்ளன. இதில் ஒரு கருத்து, உணவு கொள்ளும் போது சாதி வேற்றுமை பார்க்க வேண்டாம் என்பது. காந்தியடிகள் பரப்பிய ஆதாரக்கல்வி முறையால் சாதி வேற்றுமை என்பது மிக்க விரைவில் மறைந்து வந்திருக்கிறது. ஆனால் காந்தி யுகத்தின் ஆரம்ப காலத்தில் நிலைமை வேறு. 1930ஆம் ஆண்டு வரையில்கூட 'சமபந்தி போஜனம்' என்பது நடைபெறுதற்கரிய ஓர் அருஞ்செயலாகக் கருதப்பட்டது. அப்போது இது நடந்தால் இதற்குப் பெரிய பிரசாரமும் செய்யப்பட்டது. ஆனால், பெரியபுராணத்தில் சேக்கிழார் முயன்று இப்படிப்பட்ட ஒரு நிலையை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். ஆதி சைவப் பிராமணர் ஆகிய சுந்தரர் உருத்திர கணிகையர் வகுப்பில் பிறந்த

பரவையை மணந்து அவர் வீட்டில் வாழ்கிறார். அப்போது ஆரூர் வந்த சேர மன்னரான சேரமான் பெருமாளைச் சுந்தரர் தம் இல்லத்தில் அமுது செய்விக்க எண்ணிப் பரவையிடம் சொல்லுகிறார். அவரும் இரண்டு பரிகலங்கள் திருத்தி வைத்தார். நம்பி பெருமாளை நோக்கி 'உடன் அமுது செய்தருள வேண்டும்' எனவும், பெருமாள் அது முறையன்று என்று மனத்தில் எண்ணி வெருளுகிறார். அப்போது சுந்தரர் அவருடைய கையைப் பிடித்து அமர்த்தி உடனே இருக்கச் செய்தார். அதன்மேல்தான் அவரும் உடன் உண்ணலானார் (3826 - 8). இங்கு நாம் அறிவது, அக்காலத்தில் சிவாசாரியரும் மன்னரும் உடன் உண்ணும் வழக்கம் இல்லை; ஆனால் இறைவன் அருள் வெள்ளத்தில் மூழ்கியவர்களுக்குச் சாதி வேற்றுமை இல்லாத நிலைபற்றி, மேல் நிலையரான சுந்தரர் வற்புறுத்தலுக்கு இணங்கி அரசர் உடன் உண்கிறார். படைப்பவரோ உருத்திர கணிகை. சேக்கிழார் திட்ட மிட்டு அன்றைய ஒரு சம்பந்தி போஜன நிலையை இவ்வாறு நமக்குத் தெளிவாக அறிவுறுத்துகிறார்.

திருக்கூட்டத்தாரை வழிபடாமைக்காக விறன்மிண்டரும், இறைவனைப் பரவைபால் தூதனுப்பியதற்காகக் கலிக்காமரும், இறைவன் அருள்பெற்ற சுந்தரரைக் கடிந்து பேசுகிறார்கள்; இது இன்றுகூட நினைத்துப் பார்க்க ஒண்ணாத நிலை. இறைவன் அருள்பெற்றவரை எவரும் கண்டிக்கத் துணிவார்களா?

சேக்கிழார் வாக்கில் வரும் மற்றொரு சிறப்பான சொல் லாட்சியை இங்கு எடுத்துக்காட்டத் தோன்றுகிறது. ஐயர் என்ற சொல் பிற்காலத்தில் பிராமணர் என்ற பொருளுடையதாக ஆகியிருக்கிறது. ஆனால் முற்காலத்தில் ஆன்றவிந்தடங்கிய பெரியோரைக் குறிக்கும் சொல்லாக இருந்திருக்கிறது (தொல் காப்பியம்). ஆனால் சேக்கிழார் இச்சொல்லை இரண்டு தன்மை யில் ஆளுகிறார். ஒன்று இறைவனைக் குறிப்பிடுவதற்கு: மன்றுளே மாலயன் தேட ஐயர் தாம் வெளியே ஆடுகின்றார்; புவனங்கள் உய்ய ஐயர் பொங்கு நஞ்சு உண்ண; ஆறு சூடிய ஐயர்; ஆரம் என்பு புனைந்த ஐயர்; கண்ணப்பர் ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார்; கண்ணப்பர் கையை ஐயர் உற்று முன் பிடிக்கும்போது; ஐயர் பெருங்கருணைத் திறம்; ஆட்கொளும் ஐயர்; ஐயர் திருவடி நிழல் அருளாகிக் குளிர்ந்தது; ஆறுலவு செய்ய சடை ஐயரருளாலே - இவை ஒரு தன்மை. இத்தொடர் களில் ஐயர் என்பது சிவபெருமானைக் குறிக்கிறது. மற்றொரு

தன்மை, ஐயர் என்ற சொல்லை வேடரான கண்ணப்பரையும், தீண்டாத குலத்தினரான திருநாளைப் போவாரையும், திருநீல கண்ட யாழ்ப்பாணரையும் குறிக்க உபயோகித்தல். கண்ணப் பரைக் குறிப்பிடும்போது, 'அச்சார்வலைத் தொடக்கறுக்க ஏகும் ஐயர்' என்றும்,

> நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
> பேணு தத்துவங்க ளென்னும் பெருகு சோபானம் ஏறி
> ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல, ஐயர்
> நீள்நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்.

என்றும் கூறுகிறார். இரண்டிடங்களிலும் ஐயர் என்ற சொல் லின் பொருள் வேடரான கண்ணப்பர் ஆகும். இனி, தில்லை வாழ்ந்தணர்கள் திருநாளைப்போவார் முன்பு சென்று, 'ஐயரே, அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்' என்கிறார் கள்: இங்கு சொல்வோர் அந்தணர், ஐயர்; சொல்லப்பட்டவர் தீண்டாத வகுப்பினர். அடுத்து மூன்றாவதாக, திருநீலகண்ட யாழ்ப்பாணனாரை நோக்கிச் சம்பந்தர், 'ஐயர், நீர் உளமகிழ இங்கணைந்த உறுதியுடையோம்' என்றும், 'ஐயர் நீர் அவதரித் திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறு' என்றும், 'ஐயரே, உள்ள இசை அளவினால் நீர் ஆக்கிய இக்கருவியினைத் தாரும்' என்றும், 'ஐயர் நீர் யாழ் இதனை முரிக்குமதென்?' என்றும் சொல்கிறார்; இங்கும் சொல்பவர் ஐயர், சொல்லப் பட்டவர் தீண்டாத வகுப்பினர். சேக்கிழார் வேறு குலத்தில் உதித்த தொண்டர்களை ஐயர் என்று குறிப்பிட்டதாகத் தெரிய வில்லை. இங்கு இம்மூன்று தாழ்ந்த குலத்தாரையும் ஐயர் என்ற சொல்லால் அவர் நினைந்தே குறிப்பிடுகிறார். இதன்கருத்து என்ன? இவர்கள் குலத்தால் தாழ்ந்தவராயினும், இறையன்பால் பெரியவர், ஆதலால் ஐயர் என்பதாகும். ஆகவேதான் பிராமண ரைக் கொண்டே ஐயர் என்று சொல்விக்கிறார்.

நமிநந்தியடிகள் வரலாற்றில், தீட்டு என்னும் தீண்டாமை பற்றிய ஒரு விளக்கம் தருகிறார். ஆரூரில் பெருமான் திரு மணலிக்கு எழுந்தருளியபோது, 'யாவர் என்னாது எல்லாக் குலத்திலுள்ளோரும்' உடன் சேவித்தார்கள். இவரும் சேவித்தார். இல்லம் சேர்ந்தபின் பூசை செய்க என்று மனைவியார் சொல் லவும், இவர் தம்மை இழிவு (தீட்டு) தொடர்ந்தது என்றும், ஆதலால் நீராடியே பூசனை செய்யவேண்டும் என்றும் சொன் னார். மனைவியார் நன்னீர் கொணரச் சென்றபோது, இவர்

அயர்ச்சியால் கண்மூட, கனவில் ஆரூர்ப் பெருமான் 'மறையோய் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள் ஆன பரிசு காண்பாய்' என்று காட்டினார். பிறகுதான் நீலநக்கர் நல்லுணர்ச்சி பெற்று, அவர்களிடையே சாதி வேற்றுமையில்லை என்று உணர்கிறார்.

இவ்வுதாரணங்களால், சேக்கிழார் பெருமான் தீண்டாமையைச் சிவஞானிகள் வாழ்க்கையிலிருந்தும் தம் உள்ளத்திலிருந்தும் சொல்லிலிருந்தும் எவ்வளவு தூரம் விலக்கிவைத்தார் என்பது நன்கு விளங்கும்.

### சமூக சேவை

செல்வத்துப் பயனே ஈதல் என்ற சமதர்மக் கருத்தையும் சேக்கிழார் ஓரிடத்தில் நடத்திக் காட்டுகிறார். சுந்தரர் வேண்டியதன்மேல், இறைவன் ஆணையால் பூதகணங்கள் குண்டையூர்க் கிழார் தந்த நெல் மலையைத் தம்மிடம் சேர்ப்பித்தமை கண்ட பரவையார், அதை எடுத்து அடக்கம் செய்வதற்கு தமக்கு இடம் இல்லாமையை உணர்ந்து, நகரிலுள்ளார் தங்கள் மனை எல்லைக்குட்படும் நெல்லை அவரவர் எடுத்துக்கொள்ளலாம் என்று அறிவிக்கிறார். 'இன்று உங்கள் மனை எல்லைக்குட்படும் நெற்குன்றெல்லாம், பொன்தங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க' என முரசறைவித்தார்.

அப்படியே இறைவன் சுந்தரருக்குப் பொதிசோறு அளிக்கிறார். அவருடைய பசி நீங்குகிறது. இது சேக்கிழாருக்குப் போதவில்லை; பசித்து அங்கு வந்தவர் அனைவருடைய பசிப்பிணியும் நீங்குகிறது என்கிறார்:

எண்ணிறந்த பரிசனங்கள் எல்லாரும் இனிதருந்தப்
பண்ணியபின் அம்மருங்கு பசித்தணைந்தார் களும் அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால்.

இவ்வாறு சேக்கிழார் உலகனைத்தையும் இன்புறுத்துவதையே நோக்கமாய்க் கொண்டு பாடுகிறார்.

இங்கு ஒரு நுட்பம் சொல்லத் தோன்றுகிறது. இறைவன் சேவையும் அடியவர் சேவையுமே பெரியபுராணத்தின் உயிர் நாடி. எனினும், சேக்கிழார் அடியவர் சேவை என்பதை மக்கட்குச் சேவை என்பதாக விரிப்பதையும் காண்கிறோம். புராணம் முழுமையுமே இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாமாயினும்,

சம்பந்தர் வாழ்க்கை யொன்றைமட்டும் இங்கு குறிப்பிட்டால் போதும். அவர் தமக்கென்று இறைவனை யாதும் வேண்ட வில்லை. ஆனால் உலகத்துள்ள உயிர்களின் இடர் நீங்க இறை வன் அருளை வேண்டுகிறார். அவர் குழந்தை பருவமாதலால், பரோபகார உணர்ச்சி ஓங்கி நிற்பது இயல்பேயாகும். கொல்லி மழவன் மகளுக்குற்ற முயலகன் நோய் தீர்த்தல், செங்குன்றூரில் அடியவருக்குற்ற குளிர் நோய் நீக்குதல், மருகலில் வணிகனுடைய விடத்தைப் போக்கல், வீழிமிழலையில் வாசிதீரக் காசு பெறு தல், பாண்டியநாட்டில் சமண சமயம் போக்குதல், கொள்ளம் பூதூரில் ஓடம் செலுத்துதல், ஒத்தூரில் ஆண்பனை பெண் பனையாக்குதல், மயிலையில் எலும்பைப் பெண்ணாக்குதல், நல்லூர்ப் பெருமணத்தில் பதிகத்தால் அனைவருக்கும் தீக்கை புரிந்து சோதியுட் செலுத்துதல் - ஆகிய எல்லா நிகழ்ச்சிகளும் பிறர் நலம் கருதிச் சம்பந்தரால் செய்யப்பெற்றவையாகும். விரி வஞ்சி இவற்றுக்குரிய பாசுரங்களை இங்கு சொல்லவில்லை. இறைவனிடம் பொற்றாளம், முத்துச் சிவிகை, முத்துப் பந்தர், முத்துச் சின்னங்கள் முதலிய பலவும் இவர் பெற்றார் என்பது உண்மையே. இவற்றை இவர் கேட்கவில்லை; இவையாவும், இளம் பிள்ளையாகிய இவர் துயர் உறாதிருக்கவேண்டி இறைவன் தாமாக இவருக்கு அளித்தவை.

ஒன்று கேட்கலாம்: சம்பந்தர் ஆவடுதுறையில், தம் தந்தை யார் யாகம் செய்யவேண்டிப் பொன்கேட்டுப் பெறவில்லையா என்று உண்மை. இதைச் சேக்கிழார் சொல்கின்றபாணியே வேறு. நாவுக்கரசரை முதல்முறை சந்தித்தபின், சம்பந்தர் தல யாத்திரை செய்யத் துணிகிறார். அப்போது தந்தையார், "நான் யாகம் செய்யவேண்டும். எனினும், சிலநாள் உடன் வருகிறேன்." என்று கூறுகிறார்.

பெருகுவிருப் புடன்நோக்கிப் பெற்றகுலத் தாதையாரும்
அருமையால் உமைப்பயந்த அதனால்பிரிந் துரைவாற்றேன்
இருமைக்கும் இன்பம் அளிக்கும் யாகமும்யான் செயவேண்டும்
ஒருமையில் இன்னம் சிலநாள் உடன்எய்துவேன் என்றுரைத்தார்.

நாள் பல கடந்து இவர் ஆவடுதுறை பணிந்தேத்தியிருந்தபோது, வேள்வி செய்தற்குரிய காலம் நெருங்கி வந்தமையுணர்ந்து தந்தையார் தாம் மீள்வதன் பொருட்டு, 'அரும்பொருள் பெற எதிர்நின்று' பொருள் கேட்கிறார். அப்போது சம்பந்தர் முந்தை

நாளிலே தந்தையார் தம்மிடம் யாகம் பற்றி மொழிந்தமை நினைவுபடுத்திக் கொள்கின்றார். தாம் பொருள்கொடுக்க வேண்டும் என்ற கடமையையும் உணர்கின்றார். (இவ்வாறு சேக்கிழார் பழைய நிகழ்ச்சி யொன்றைச் சிருட்டித்து அதனோடு இன்றைய நிலையைத் தொடர்பு படுத்திக்காட்டுவது மிக்க நயமானது.) 'அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள் எந் தையார் அடித்தலங்களன்றோ?' எனத் துணிந்து, கோயிலை அடைந்து பதிகம் பாடுகிறார்.

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.

இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே.

இப்பாடலில் வரும் 'ஈவதொன்று எமக்கில்லையேல் அதுவோ உனது இன்னருள்' என்ற தொடருக்குச் சேக்கிழார் கூறும் பொருள் நாம் பொதுவாக நினைப்பதினும் வேறானது. "எனக்கு நீ பொருள் தராவிட்டால் அதுவோ உன்னுடைய அருள்?" என்றுதான் சாமானியமாக நாம் எண்ணுவோம். சேக்கிழார் புராணத்துள் சொல்லும் பொருள் வேறு. 'என்னை வந்து வேண்டியவருக்குக் கொடுப்பதற்கான பொருள் என்னிடம் இல்லை. உனது திருவடியன்றி எனக்கு வேறு பற்றில்லை' என்பது சேக்கிழார் சம்பந்தர் பாடலில் வரும் தொடருக்குத் தரும் விளக்கம். பாடல் பின்வருவது:

சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில் முன்பெய்தி
நின்றும் போற்றுவார், 'நீள்நிதி வேண்டினர்க் கீவது
ஒன்றும் மற்றிலேன், உன்னடி அல்லதொன் றறியேன்'
என்று பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்.

இவற்றால் நாம் பெறுவது, சம்பந்தர் தம்மிடம் கேட்டவருக்குக் கொடுக்கப் பொருள் இல்லை என்று குறைபட்டார் என்பதே; தமக்குப் பொருள் வேண்டும் என்று இறைவனை இவர் வேண்ட வில்லை. சம்பந்தர் திருவாவடுதுறைப் பெருமானிடம் பொருள் பெற்றுத் தந்தையிடம் கொடுக்கிறார். கொடுக்குமிடத்து, 'நல்வேள்வி தீது நீங்க நீர் செய்க' என்று சொல்கிறார்.

ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன்னாகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து
வேத வேதியர் அனைவருஞ் செய்யவும் மிகுமால்.

நல்வேள்வி தீதுநீங்க என்ற கருத்துக்கு அடிப்படை மூவர் தேவாரத்திலும் உள்ளது. சம்பந்தர் 'கற்றாங்கு எரியோம் பிக் கலியை வாராமே-செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பலம்' என்று பாடுகிறார் (864). அப்பர் 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்' என்று பாடுகிறார் (4281). சுந்தரர் 'அரிசிலின் தென்கரைமேல் கலை அடைந்து கலிகடி அந்தணர் ஓமப் புகையால் கணமுகில் போன்று அணிகிளரும் கலயநல்லூர்' (7383) என்று பாடுகிறார். இத்தகைய திருமுறைக் கருத்துக்களே தீதுநீங்க நல்வேள்வி செய்வீராக' என்று சேக்கிழாரைச் சொல்லுமாறு செய்வித் திருக்கின்றன.*

சமூகசேவை என்று கருதத்தக்க சம்பந்தருடைய செயல் களைத் தொடக்கத்தில் குறிப்பிட்டோம். அவற்றை மூன்றாகப் பாகுபடுத்தலாம். தனிப்பட்டவருக்குத் தொண்டு, ஒரு சமூகத் திற்குத் தொண்டு, நாட்டுக்கு அல்லது உலகத்துக்குத் தொண்டு என. முயலகன் நோய் தீர்த்தல், விடம் போக்குதல், ஆண்பனை பெண்பனையாக்குதல், எலும்பைப் பெண்ணாக்குதல் - இவை தனியொருவருக்குச் செய்த சேவையாகும். செங்குன்றூரில் குளிர் சுரம் நீக்குதல், வீழிமிழலையில் பஞ்சம்தீரக் காசு பெறுதல், ஓடம் செலுத்துதல் - இவை அடியவர் கூட்டத்துக்குச் செய்த சேவை. மதுரையில் சமணக்குறும்படக்கியது நாட்டுக்கும் உல கத்துக்கும் செய்த சேவையாகும்.

## சேக்கிழார் காட்டும் பொதுமை

உலகெலாம் என்று தொடங்கி உலகெலாம் என்றே சேக்கிழார் முடித்த இந்நூலின் கருத்தென்ன? தமிழ் என்றோ, தமிழ் நாட்டில் ஓரிடமான தில்லை என்றோ, இறைவன் அடி எடுத்துக் கொடுக்கவில்லை. எனவே, இது உலகெலாம் ஆட்சி புரியத்தக்க நூலென்று பொருளாகாதா? கண்ணப்பரை அன்புப் பிழம்பாய்த் திரிவார் என்று சேக்கிழாரே பாடியதுபோல இந்நூல், அன்பு பிழம்பாகிற நூல்; அன்பே சிவம் என்ற தன்

---

* இக்குறிப்பைத் தருமபுரம் மகாசந்நிதானம் அருளிற்று.

வாரிசு. வரலாறுகளைச் சொன்னதனால் இது முற்றும் வரலாற்று நூலல்ல. வரலாற்றுக்கும் ஆழத்தில் உள்ள அடிப்படை மனித இதய நெகிழ்ச்சியை உருக்கமாய்ச் சொல்வது: சொல்வதில் வர லாற்றுண்மையும் உண்டு, செய்யுளின்பமும் உண்டு, காப்பிய நயமும் உண்டு, சமய தத்துவமும் உண்டு. இத்தனையும் கடந்த, இத்தனையும் உள்ளடக்கிய, ஒரு நிலையே இந்தப்புராணம். வாக்கு மனங்கடந்த வான் கருணையாளன் என்று கூறியது போல, இது வாக்கு மனங்கடந்த ஓர் அனுபவத்தை வாக்கால் காட்டுகிறது. இந்த அனுபவம் மனிதகுலம் முழுமைக்கும் பொது அல்லவா?

திருத்தொண்டர் புராணம் ஒரு தமிழ்த் தேசியக்காப்பியம் என்று சொல்வர்.* சொல்லப்பட்ட தொண்டர் அனைவரும் தமிழ்நாட்டினரே. சுந்தரருக்குப் பிறகு நம்பியும் சேக்கிழாரும் தாங்கள் அறிந்த வரையில் வரலாறுகளைத் தெரிந்து சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இளம்பருவத்தில் குறிக்கோள் இல் லாது கெட்டேன் என்று அப்பர் பாடினார் அல்லவா? இவர்கள் அனைவரும் குறிக்கோள் கொண்டு வாழ்ந்தவர்கள். ஆண்டவனை வேண்டிய அன்பு ஒன்றே இத்தனைப் பேரையும் ஆட்கொண்டது. இவர்கள், நெஞ்சத்தில் அன்பைத் தேக்கினவர்கள். தொண்டு வாழ்க்கையே அன்றி, வீடு வேண்டா விறல் உடையவர்கள். தங்கள் குறிக்கோளுக்கு இவர்கள் அனைத்தையும் அர்ப்பணித் தார்கள். செய்தசெயல் பெரியதன்று! செயலின் அடிப்படை யான தொண்டுமனமே பெரிது. செய்தபணி கோவணமாயினும், மண்ணோடாயினும், துணி வெளுப்பதாயினும், சோறளிப்ப தாயினும், அந்தத் தொண்டில் இவர்கள் சித்தத்தைச் சிவமாக்கி விட்டார்கள். எல்லோருக்கும் முடிவு வெற்றி; உயிரைக் கொடுத் தவருக்கும் வெற்றி.❖ தொண்டில் உயர்வு தாழ்வு இல்லை. தொண்டு செய்ய முடியாதவர்கள் உள்ளத்தாலேயே தொண்டு

---

* பார்க்க: பெரியபுராணம் - 'உலகப் பொது நூல்': தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

❖ மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள்; மாயாது
ஏந்திய கைகொடு இரந்தவர், எந்தாய்!
வீந்தவர் என்பவர்; வீந்தவ ரேனும்,
ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே?

என்ற கம்பர் வாக்கை இங்கு நினைவுபடுத்திக் கொள்க.

செய்தார்கள். வாயிலார் உள்ளத்தால் பூசை செய்தார். பூசலார் உள்ளத்தால் கோயில் கட்டினார். இவர் கட்டிய கோயிலே பெருமானுக்குப் பெருங்கற்கோயிலைவிட உவப்பாயிருந்து என்று புராணத்தாலும் கல்வெட்டினாலும் அறிகிறோம்.

இத்தகைய ஒரு கருத்து இவர்கள் வாழ்ந்த காலத்தின் பின்னர்கூட, ஒரு படிப்பினைபோல உலகத்தில் உலவி வந்திருக்கின்றது. பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் அந்த இடத்தில் அருள் செய்து முத்தி கொடுத்தது, ஏழை வந்திக்கு என்பதை நினைக்க வேண்டும். இராசராசன் பெருங்கோயில் கட்டியபோது, பெருமான் அவன் கனவில் தோன்றி 'நாம் நீர் மோர் வார்த்த கிழவியின் நிழலில் இருக்கிறோம்' என்று சொன்னகதையையும் நினைக்க வேண்டும்.

புராணக்கதை புறச்செய்திகளைப் புனைகின்றது. ஆனால் நாம் அவற்றினூடே நுழைந்து அகச் செய்திகளை உணர வேண்டும். பெரியபுராணத்தில் விரிவாகச் சொல்லிய வரலாறுகளை, சேக்கிழாருக்குச் சிலகாலமே பின்வந்த திருக்கடவூர் உய்யவந்த தேவர், 'இவர்கள் வாதனையை அகமார்க்கத்தால் மாற்றினர் காண்' என்று சொல்லுகிறார்.

மெல்வினை, வல்வினை என வினை இருவகை என்றும், இரண்டும் சிவதர்மம் என்றும் அவர் கூறுகின்றார். ஆனால் பெரியபுராணமானது. இந்த இரண்டு வகையும் எவ்விதப் பாகுபாடுமில்லாமல் கூறுகின்றது.

சேக்கிழார் நடப்பதை மட்டும் சொல்ல வரவில்லை. நடக்க வேண்டியதையும் நடந்ததாகச் சொல்லுகிறார். இன்று நாம் பேச்சில் வீராவேசமாகப் பல சொல்லிவிடுகிறோம். ஆனால் அவற்றை ஒருபோதும் நடத்திக்காட்ட நினைத்ததில்லை. சேக்கிழார் காட்டும் தொண்டர்கள், நினைப்பதையெல்லாம் அந்தக்கணமே செய்து காட்டுகிறார்கள். சிவனடியார் வேடத்தோடு வந்த வேலைக்காரனை அடையாளம் கண்டுகொண்டு கரகநீர் வார்க்கத் தயங்கிய மனைவியின் கரத்தை வாளால் வெட்டிவிட்டுக் கலிக்கம்பர் மேலே ஆக வேண்டியவற்றைத் தாமே செய்கின்றார். இது ஓர் உதாரணம். எடுத்த காரியம் ஒன்று தான் பொருள்; மற்றவையெல்லாம் புறம்பு. புறம்பை நீக்கிப் பொருளைப் பற்றி மனம் நடத்திக்கொண்டு போகின்றது.

சேக்கிழார் பாடிய பெரியபுராணமானது, நடந்தவற்றை மட்டும் சொல்லிக் கொண்டு போகிற ஒரு பழங்கதையோ, வரலாறோ அல்ல; நடந்து கொண்டிருப்பனவற்றை மட்டும் கூறிவரும் தினக்குறிப்பல்ல; இனி நடக்க வேண்டியவற்றைச் சொல்லும் வெறும் சட்ட புத்தகம் அல்ல; இவை மூன்றும் மட்டும் அல்ல: முன்னோருடைய பண்பாட்டையும் அருளையும் குழைத்து ஊட்டுகின்ற அமுதம். இந்த அமுதம் எல்லாருக்கும் வேண்டுவது, எல்லாக் காலத்தும் வேண்டுவது.

சேக்கிழார் புராணப் பாடல் ஒன்று இங்கு கருதத்தக்கது:

செப்பரிய பொய்யடிமை இல்லாதார், மெய்யில்
  திருநீறு பூசுமுனி வரர், உலகு தன்னில்
அப்பாலும் அடிச்சார்ந்தார் – இவர்கள்தமிற் சிலபேர்
  ஆய்ந்ததமிழ்ப் பேர், சிலபேர் மலையாளர், சிலபேர்
தப்பாத தெலுங்கர், சிலர் மற்றுளதே சத்தோர்,
  தவஞ்செய்து பரகதியை அடைந்தவர்கள் சிலபேர்,
இப்போதும் இருந்தரனை வழிபடுவோர் சிலபேர்,
  இனிமேலுந் திருமேனி கொடுவருவோர் சிலரே.

உமாபதி சிவம் இவ்வாறு பாடியிருப்பது இன்றுகூட நமக்கு மிகவும் வியப்பாயிருக்கும். அறுநூறு ஆண்டுகளுக்குமுன் அவர் எப்படி இவ்விதம் பாடமுடிந்தது என்பதே வியப்பு. நம் கண் முன்னே நடக்கின்ற அற்புதங்கள் சிலவற்றை நாம் மறந்து விடுகின்றோம். நம்மிடையே வாழ்ந்து பல அற்புதங்களை மக்கள் உள்ளத்தில் நிகழ்த்திக் காட்டினார் காந்தி. அவரைக் குறித்து, பெருவிஞ்ஞானியான ஐன்ஸ்டின் பின்வருமாறு எழுதினார். “இத்தகைய ஒரு மனிதர் ஊனும் உடம்பும் பெற்று நிலவுலகில் நடமாடினார் என்பதை, பின்வரும் தலைமுறையார் ஒருநாளும் நம்பமாட்டார்கள்.” நமக்கு நன்றாகத் தெரிந்த ஒரு செய்தியைக் குறித்து ஒரு விஞ்ஞானி இன்று உடன் காலத்தில் இவ்வாறு சொல்லுகின்றார் என்றால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நிகழ்ந்தவற்றை நாம் நம்பத் தயங்குவதில் வியப்பில்லை.

உமாபதிசிவம் கூறியதை ஒரு வகையில் தழுவிப் பெரிய புராணக் கதைகள் கன்னடத்திலும் தெலுங்கிலும் பரவியிருக்கக் காண்கிறோம். வசவண்ணர் காலத்தில் ஹரிஹரர் என்ற கன்னட வீரர் சைவப்புலவர் தமிழ்நாடு முழுமையும் சுற்றி நாயன்மார்

செய்திகளை நேரில் அறிந்து பின்னர்க் கன்னட மொழியில் பாடினார். தெலுங்கில் பாவாணர் பலர் நாயன்மார்களைச் சிவ பெருமானுடைய திருவோலக்கத்தில் பல பதவிகளில் அமர்த்திப் பாடுகிறார்கள். வட மொழியிலும் கூட உபமன்னியு பக்த விலாசம், அகத்திய பக்தவிலாசம் என்றெல்லாம் மொழி பெயர்க்கப் பெற்ற நூல் பெரிய புராணத்தின் கதைகளே.

இத்தனையும் பார்க்கும்போது, இக்கதைகள் பலநாட்டு மக்கள் உள்ளத்தில் இடங்கொண்டிருப்பதை நோக்க, இவை உலகப் பொதுநூலாகவே சேக்கிழாரால் கருதிப் பாடப்பட்டன என்று திட்டமாகச் சொல்ல முடியும்.

### முடிவுரை

இதுவரை பெரிய புராணத்தைப் பல கருத்துக்களோடு ஆய்ந்து, காணும் செய்திகளைத் தொகுத்துக் கூறினோம். தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தலைவன் தாளைத் தலைப்பட்ட பெரியபொருளைக் கூறியதால் இது பெரியபுராணம். எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாப்பொருள் ஒன்று இல்லையால். காவியச்சுவை விரும்புவோருக்கு இது ஒரு பெருங்காவியம். பக்தி கொண்டவர்களுக்கு இது பக்தி சுரக்கும் சுனை. ஞான நாட்டம் கொண்டவர்களுக்கு ஞானாசாரியன். தன்னை மறந்த அடிமைத் திறத்தில் நிற்போருக்குப் பயிற்சிச் சாலை. தமிழை விரும்புவோருக்குச் சிறந்த தமிழிலக்கியம். சீர் திருத்தம் விரும்புவோருக்குப் புத்துலகம் நாட்டும் கண்ணாடி. அல்லல் பட்டோருக்கு அமைதி தரும் அருள் நிழல். வாழ்க்கையில் துன்புற்றோருக்கு மனத்தைத் தூக்கி நிறுத்திப் பெரு நம்பிக்கையூட்டும் ஊன்றுகோல். ஆட்சி செய்வோருக்குக் கடமைகளையும் செய்யும் முறைமையும் உணர்த்தவல்ல அரசியற் சாசனம். நீதியாளருக்குச் சட்ட வரம்பு. இல்லறம் நடத்தும் இரு பாலாருக்கும் காதலையும் அறத்தையும் ஒருங்கே புகட்டும் நல்லறநூல். துறவிகளுக்கு ஒரு தியாக நிலையம். பொதுமை விழைவோருக்குச் சர்வஉலக சமரசம் காட்டும் சாத்திரம். மறு மலர்ச்சி விழைவோருக்குப் பின்னும் சென்று எட்டுதற்கரிய பெருங்குறிக்கோள். சுருங்கச் சொன்னால், இது தமிழ் மக்களின் வாழ்க்கைப் பெருங்காப்பியம். யாரும் எதையும் இதிலிருந்து பெறலாம். தீயவனும் திருந்தலாம். கடையருக்கும் இங்கு கடைத் தேற்றம் உண்டு. கடவுளின் பெயர் வேண்டும் என்பதற்காக இங்கு சிவம் சொல்லப்பட்டதேயன்றி, இச்சிவம் ஒரு நாமம்

ஒருருவம் ஒன்றுமில்லாத, வாக்கு மனங்கடந்த, வான் கருணை யாளனாகிய பரமாகிய, மெய்ப்பொருள்.

## சிவஞான ஜனநாயகம்

சேக்கிழாருடைய காவியம் ஒரு பக்திப் பெருங்காப்பியம் என்று சொன்னோம். இறையன்பும் இறையடியாரன்புமே உயிர் நாடியாயுள்ள பெருஞ்சரிதம். இவர் இங்கு சிருட்டிப்பது ஒரு புது ஜனநாயக உலகம். இவ்வுலகில் அனைவரும் சமமே. இன்று இந்தியக் குடியரசின் வாக்காளராயிருக்க இரு தகுதிகள் - இந்தியக் குடிமகன் அல்லது குடிமகளாயிருத்தலும், பதினெட்டு* வயது கடந்திருத்தலும் வேண்டுமென்பர். அதுபோல, சேக்கிழாரின் ஜனநாயக அரசில் உரிமைபெற்றவர் இரண்டே தகுதியுடையவர் ஒன்று தமிழ்மகன் அல்லது மகளாய்ப் பிறந்திருத்தல்; இரண்டு சிவபிரானிடத்து, சிவனடியாரிடத்து, சிவ சின்னங்களிடத்து, மாறாத அன்பு பூண்டிருத்தல். அறுபத்து மூன்று நாயன்மார் சரிதத்தில் இவ்விரு தகுதிகளையும் காண்கிறோம்.

இந்த நாயன்மாருள் ஆடவரும் உள்ளனர், முன்குறிப் பிட்டவாறு பெண்களும் உள்ளனர். குழந்தைகளும் உள்ளனர்; சிறுத்தொண்டரின் மகனான சீராளதேவன், அப்பூதியின் பிள்ளைகளான திருநாவுக்கரசு பலர், அமர் நீதியோடு துலாக் கோல் தட்டில் ஏறிய அவர் புதல்வர், பூம்பாவை, சுந்தரர் முதலை வாயிலிருந்து மீட்ட பிள்ளை, சுந்தரர் தமது மக்களாக ஏற்றுக் கொண்ட கோட்புலி நாயனாரின் புதல்விகளான சிங்கடி வனப் பகை முதலியோர். சண்டேசரைக் கோயிலில் நாம் வழிபடும் கடமையுடையவர்களாதலால், அவரும் பெரியபுராணத்தில் ஒரு குழந்தை என்பதை மறந்து விடுகிறோம்; சிறிய பெருந்தகை யார் என்றும், சிறிய பெருந்தோன்றலார் என்றும் சேக்கிழார் அவரைக் குறிப்பிடுகிறார். சம்பந்தரே குழந்தையல்லவா? மூன்று வயதில் சிவஞானப்பாலுண்டு 16இல் முத்தியடைந்த திருஞான சம்பந்தரும், 81 வயதில் பூம்புகலூர்ப் “புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்” என்று சென்று மறைந்த அப்பரும் இருக்கின் றார்கள். அந்தணர் பன்னிருவர், ஆதி சைவர் நால்வர், வேளாளர் 13, முடியரசர் 6, குறுநில மன்னர் 5, வணிகர் 5, இடையர் 2, ஏகாலியர், குயவர், சாலியர், சான்றார், செக்கார், நுளையர், பாணர், புலையர், வேடர், மாமத்திரர் - ஆகியோர் ஒவ்வொருவர். மரபறியாதவர் அறுவர்; இனி இவர்களில் சோழநாட்டினர் 31,

* முதல் பதிப்பின்போது இருபத்தொரு வயது.

நடுநாடு 8, தொண்டைநாடு 7, பாண்டிநாடு 4, மலைநாடு 2, கோனாடு, மழநாடு 1; நாடு குறிக்கப்படாதவர் 9 பேர். இவர் அனைவரும் தமிழ் நாட்டினரே. இது குலத்தாலும், வயதாலும், பால் பிரிவால், இடத்தால் பெறும் ஜனநாயகத்தைக் காட்டும்.

வழிபாட்டு முறையாலும் இவர்கள் எவ்வளவோ வேறு பட்டவர்கள். அப்பூதி, கணநாதர், சோமாசி மாறர் போன்ற பன்னிருவர் குருவருளால் முத்தி பெற்றோர். சிவனடியார் வழி பாட்டால் முத்தி பெற்றோர் காரைக்காலம்மை, அமர்நீதி மெய்ப்பொருள் முதலான பத்தொன்பதின்மர். சிவலிங்க வழி பாட்டால் முத்தியடைந்தோர் ஏனைய முப்பத்திருவர். திரு முறைப் பாடல் பாடினோர் திருமூலர், அம்மை, சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேரமான், ஐயடிகள் காடவர் கோன் ஆகிய எழுவர். கொள்கைக்காக உயிரைத் துறந்தவர் ஏனாதிநாதர், புகழ்ச்சோழர், மெய்ப்பொருள் ஆகிய மூவர். வல்வினை செய்து உயர்ந்தோர் ஏயர்கோன் எறிபத்தர், மூர்த்தி கண்ணப்பர் முதலான பதினெழுவர். காலத்தால் மிகவும் பழமையான வரலாறுகள் கண்ணப்பர், சண்டேசர் என்ற இருவர் வரலாறுகள்; இவ்விரு வரலாறுகளும் சம்பந்தருக்கு ஆயிரம் ஆண்டு முற்பட்டிருத்தலும் கூடும்; பின்னும் எழுவர் சம்பந்தருக்கு முற்பட்டவர். அவர் காலத்தோர் அப்பர், அப்பூதி, முருகர், சிறுத்தொண்டர் போன்ற பன்னிருவர்; அவர்க்குப் பின்னர் சுந்தரமூர்த்தி காலத்திலும் இருந்தவர் சேரமான், கோட்புலி, நரசிங்கமுனையரையர் போன்ற பதின்மூவர். காலம் தெரியாதோர் ஏனைய இருபத்தொன் பதின்மர். எனவே இவர்கள் அனைவரும் காலத்தால் எவ்வாறு வேறுபட்டவர் என்பதை நன்குணரலாம். கூட்டமாக உள்ள அடியாரைப் (தொகையடியார்) பார்க்கும்போது, முப்போதும் திருமேனி தீண்டுவாரும் தில்லைவாழ்ந்தணரும் சிவாசாரியர். ஏனைய ஏழு கூட்டத்தாரில் எல்லாக் குலத்தாரும் அடங்குவர்.

எனினும், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்ற ஒரு தொகை யடியார் புராணத்தைக் கூறுமிடத்தில், இவர்கள் யாவர் என்று சேக்கிழார் ஒரு பாடலால் விளக்குகின்றார். இதுபற்றி நம்பி யந்தாதியில் விளக்கமில்லை:

மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்,
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்,

பூவேய்ந்த செஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதிஇதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல் கொடியான் அடிச்சார்ந் தாரும் –
செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார் தாமே.

இங்கு, சேக்கிழார் சொல்வது, 'தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால் முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோர் என்பதும், காலத்தால் திருத்தொண்டத் தொகையில் கூறும் தொண்டர் காலத்துக்கு முன்னிருந்தாரும் பின்னிருந்தாரும் என்பதும்; இவர்கள் அனைவரும் அப்பாலும் அடிச்சார்ந்தார் என்பது கருத்து.

இங்கு சேக்கிழார் உபயோகிக்கும் சொற்களை நன்கு கருத வேண்டும். அப்பாலும் அடிச்சார்ந்தார் இருவகை. முதல்வகை தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால் உள்ளவர்கள். இவர்கள் 'முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோராவர்' இங்கு நம்மாசிரியர் சிவபெருமான் அடிச்சார்ந்தார் என்று இறைவனுடைய சிறப்புப் பெயரைச் சொல்லவில்லை. ஆகவே, இவர்கள் எந்தச் சமயத்தாராய் இருந்தாலும், இவர்கள் அனைவரும், சைவர்களைப் பொறுத்தவரையில், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்று சுந்தரரால் போற்றப்பெற்ற தொண்டர் இனத்தைச் சேர்ந்தவர்கள். உதாரணமாக நாம் சொல்லக்கூடியவர்கள், இருபத்துநாலு மணி நேரமும் இறை உணர்வே கொண்டு வாழ்ந்த காந்தியடிகள்; காளிதேவியின் அடிமையாக இருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர்; ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டு என்று சொன்ன ஏசுநாதர்; எல்லா உயிர்களையும் இறைவன் வடிவாய்க் கருதி அன்பு செய்த அஸ்ஸிஸி நகரத்து பிரான்ஸிஸ் முனிவர் - ஆகிய அனைவரும் சைவர் வணங்கத்தக்க நாயன்மாரே. 15ஆம் நூற்றாண்டில் தென்காசிக் கோயில் கட்டிய பராக்கிரம பாண்டியன் பிற்காலத்தில் எப்போதேனும் திருப்பணி செய்பவர்களுக்கும் சேர்த்து, 'வாராததோர் குற்றம் வந்தால் அப்போதே வந்தங்கு அதனை ஒழித்துப் புரப்பார்களைப் பாரோர் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே' என்று பாடி வைத்தமை போல, நம் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் என்று பாட, சேக்கிழார் பெருமான் இத்தொடருக்கு இவ்வளவு அருமையான விளக்கம் கொடுத்திருக்கிறார்.

இனி, பாடலின் இரண்டாம் பகுதி. சுந்தரர் காலத்துக்கு முன்னும் பின்னும் 'சேவேந்து வெல்கொடி யான் அடிச் சார்ந் தாரும் அப்பாலும் அடிச் சார்ந்தார்' என்பது இக்கருத்து. சங்க காலம் முதலிய காலங்களில் நாம் காண்கின்ற சைவப் புலவர் களும் சைவ அரசர் அடியவர் போன்ற பெருமக்களும், சைவர் களாகவே வாழ்ந்து நாடெங்கும் மலைமலைகளான சிவாலயங் களைக் கட்டி நாடெங்கும் சிவமணம் கமழச்செய்த சோழ மன்னர்களும், செம்பியன்மாதேவி போன்ற அரசியரும், சைவ நாயன்மாரே ஆவர். செம்பியன்மாதேவியார் வரலாற்றை அறிந் தவர்கள் தங்கள் இல்லத்தில் அவர் திருவுருவம் வைத்துப் பூசிப் பர் என்பது உறுதி. அவர் சேக்கிழாருக்கு நெடுங்காலத்துக்கு முன் வாழ்ந்தும் கூட, அவரை நாயன்மார் வரிசையில் இவர் சேர்க்காத காரணம், அவர் திருத்தொண்டத் தொகையில் கூறப் பெறாததொன்றே.

இனி, பிற்காலத்தவராய உய்யவந்த தேவர், ஒட்டக்கூத்தர், மெய்கண்டார், அருள்நந்தி, அவ்வையார், அருணகிரி, கச்சி யப்பர், தாயுமானவர், பரஞ்சோதியார் போன்ற எண்ணற்ற பெருமக்கள் இந்த வரிசையில் சேரத்தக்கார்.

அப்பாலும் என்பதைச் சைவசமயத்துக்கு அப்பாலும் இருந்து கடவுளை வழிபட்டவர் என்று நாம் பொருள் கொண் டால், உலக முழுமையும் உள்ள இறையடியார்களை ஒரு குலமாகத் தழுவிக் கொண்டவர்கள் ஆவோம். ஆன்மார்த்தத் துறையில் ஒரே குலம் என்ற கொள்கையும் இதுவே. இதற்குச் சமயாசாரியர் இருவர் சம்மதமும் உள்ளது என்பதை, 'புத்தன் மறவாதோடி எறி சல்லி புது மலர்கள் ஆக்கினார் காண்' என்ற திருத்தாண்டகத்தாலும், 'உமைபங்கன் கழலே மறவாது கல் லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்' என்ற திருத்தொண்டத் தொகையினாலும் அறியலாம்.

தொடக்கத்தில், சேக்கிழார் காட்டுகின்ற சிவஞான ஜன நாயகத்தில் இடம்பெற இரு தகுதிகளை யாம் குறிப்பிட்டோம் - தமிழ்நாட்டில் பிறக்கவேண்டும், சிவபிரான் சிவனடியாரிடத்து அன்பு பூண்டொழுக வேண்டும் என்பன அவை. இரண்டி லிருந்துமே சேக்கிழார் விதிவிலக்குத் தருகிறார்; எந்த நாட்டிலும் பிறந்திருக்கலாம், எந்தத் தெய்வத்தையும் வழிபடலாம்; ஆனால் வழிபடுவதே முக்கியம்.

இதுவே சேக்கிழார் செய்த பெரியபுராணம் என்ற பக்திக் காவியம் காட்டுகின்ற சிவஞான ஜனநாயகம். இத்தகையதொரு ஜனநாயகம். தமிழ் இலக்கியத்தில் மட்டுமன்றி, உலக இலக்கியங் களிலும் வேறு எங்குமே காண்பதற்கியலாது.

## பெரியபுராணமும் பிற்காலமும் – மாகேசுர பூசை

சேக்கிழார் பெரியபுராணம் பாடியபின், தமிழ் நாடெங்கும் மாகேசுர பூசை என்ற அடியவர் வழிபாடு மிகவும் விரிவாக நடைபெறலாயிற்று. முதலாவதாக, பெரிய சிவாலயங்களில் அறுபத்து மூவர் சிலைகள் அமைக்கப் பெற்றன. இதற்கு முந்திய நிலையில், நால்வர் சிலைகள் கோயில்களில் பிரதிட்டை செய் யப்பட்டிருந்தன. இவற்றோடு அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் சிலைகளும் எழுந்தருளிக்கப் பெற்றிருந்தன - அம்பர் மாகாளத்தில் சோமாசி மாறர், திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் என்போரைக் குறிப்பிடலாம். சேக்கிழாருக்குப் பின்னரே அறுபத்துமூவர் சிலைகள், கல்லிலும் செம்பிலும் வழங்கப் பெறலாயின. அடியவர் வழிபாடு ஆலயத்திலும் வீட்டிலும் நடைபெற்றன. அடியவர் முத்தியடைந்த தினங் களில் அவர் பொருட்டு அடியவர்களை அழைத்து அவர்களுக்கு முறையாக வழிபாடாற்றி விருந்துணவு அளித்தல் மாகேசுவர பூசை எனப்படும்; மகேசுவரன் அடியார் மாகேசுவரர். மாகேசுவர பூசை செய்யும் முறை முதலியன ஆறுமுக நாவலர் உரைநடைப் பதிப்பில் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. பூசையின் போது, அடியார்களுக்கு நாயன்மார் உணவளித்தார்கள் என்ற செய்தியைச் சொல்லுகின்ற பெரிய புராணப் பாடல்களை, வந்திருக்கின்ற அடியார் ஓதுவது சம்பிரதாயம். இவ்வாறு சொல்லப்பெறும் பாடல்கள் சுமார் பதினைந்து உள்ளன.

இவற்றினும் சிறப்பாக, நாட்டுப்புறங்களில் அதிகம் கல்வி யறிவு இல்லாத மக்கள், பொருள் யாசித்துப் பெற்றுச் சிறுத் தொண்டர் முத்தியடைந்த நாளன்று சிறப்பாகச் சிறுத்தொண்டர் பூசையும் ஏழைகளுக்கு உணவளித்தலும் செய்கிறார்கள். இது நடப்பது சித்திரை மாதம் பரணி நட்சத்திரம். அம்மாதம் உழவுத் தொழில் செய்கின்ற மக்களுக்கு வேலையில்லாத காலம். தெருக் களில் இந்த விழா நடத்துபவர் பலர் கூட்டமாகச் சேர்ந்து சிறுத்தொண்டர் வரலாற்றைக் கீர்த்தனமாகப் பாடிக்கொண்டும்

நாடகமாக ஆடிக்கொண்டும் வருவார்கள்.* இந்நிகழ்ச்சி சிறுத் தொண்டர் அமுதுபடையல் என்று பெயர்பெறும். இதைச் சோழ நாட்டில் ஊர்தோறும் இன்றும் காணலாம்.

## வீரசைவ வரலாறுகள்

சேக்கிழார் கூறும் பெயர்களையும் பொருள்களையும் அப்படியே வைத்தும் தழுவியும் மாற்றியும் கதைகள் புனைந்து நூல் செய்யப்பட்டிருப்பதை வீரசைவ மரபில் காண்கிறோம். குரு லிங்க சங்கமம் என்ற மூன்று நிலைகளும் வீரசைவத்தில் பெருஞ்சிறப்புடன் கொள்ளப் பெறுபவை.

தமிழில் உள்ள, ஆசிரியரும் காலமும் அறியப்படாத, விரிந்த நூலாகிய சைவபுராணம் என்பது, சேக்கிழாருக்குச் சமகாலத்தில் வாழ்ந்த பசவேசர் என்னும் வசவண்ணர் வரலாற்றைக் கூறுவது. இதை முதலில் தெலுங்கு மொழியில் சோமநாத பண்டிதர் செய்தார் என்றும், பின்னர் பீமகவி என்பவர் கன்னடமொழியில் செய்தார் என்றும், சங்கராரியர் வடமொழியில் செய்தார் என்றும் சொல்லுவர். இவற்றைத் தழுவித் தமிழில் இந்த நூல் செய்யப்பெற்றது. இதனுள் சில பெரியபுராணக் கதைகள் காணப்படுகின்றன. சுந்தரமூர்த்தி திருக்கூட்டத்தை வழிபடாது ஆரூரில் தரிசிக்கச் சென்றார் என்ற செய்தி மட்டும் சுந்தரப்பெருமாள் நாயனார் என்ற பகுதியில் மடிவால மாச்சையர் என்பவர் வசவண்ணருக்குச் சொன்னதாக 36 பாடல்களில் சொல்லப்படுகின்றது. இது தில்லைவாழ் அந்தணர் தொடங்கி இசைஞானி இறுதியாக உள்ள தனியடியாரும் தொகையடியாரும் அவரவர் செய்த திருத்தொண்டின் விளக்கத்தோடு முறையாகச் சொல்லப்பட்டுள்ளனர். இவர்களன்றி, சொல்லப்பட்டுள்ள பிற செய்திகள் பின்வருவன: கரிகாலசோழன் தந்த திருஅமுதுப் பொருள்களைச் சிவ பெருமான் அமுது செய்தார் என்பது; கலிய நாயனார் என்பவர்

* எமது உறவினரான முதியவரொருவர் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் வரை எமது வீதியில் சிறப்பாகச் சிறுத்தொண்டர் குருபூசை நிகழ்த்தி வந்தார்.

அரகர சிவசிவ சம்போ – இங்கு
அரனடி யார்க்கன்னம் அளிப்பாரும் உண்டோ.

என்று அவருடைய பஜனைக்கூட்டத்தார் வீதியில் 50 ஆண்டுகளுக்கு முன் பாடி வந்தது இன்னும் எம் காதில் ஒலிக்கிறது.

காட்டில் இருந்த சிவலிங்கத்தைக் கண்டு வழிபட்டு அங்கு திருக்கோயில் கட்டிக் காவல் புரிந்து வந்த செய்தி (ஒரு பகுதி கண்ணப்பர் வரலாற்றை ஒத்தது); நமித்தண்டி நாயனார் சிவ பெருமானுடைய நடனக்கோலத்தைக் கண்டு வாதரோகம் என்று அஞ்சி பெருமானால் நடனத்தின் சிறப்பு உணர்த்தப் பெற்றது; பசுபதி நாயனார் என்பவர் சிவபெருமான் ஆலகால விடம் உண்டமை கண்டு பயந்து அவ்விடம் அவருக்குத் துன்பம் செய்யுமே என்று அஞ்சி மருந்து தடவியபோது, பெருமான் அவ்விடம் தமக்கு ஊறு செய்யாது என்பதைத் தம்மடியில் இருந்தே பசுபதியார் பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்தது; பாவூர்ப் பொம்மையர் என்பவர் அரசனுடைய மதங்கொண்ட யானையை அதட்டியபோது யானையும் பாகனும் இறந்து வீழ்தலும் பின்னர் அனைவரும் உயிர்த்தெழுதலும் (கருவூரில் சிவகாமி யாண்டார் என்ற பக்தர் வைத்திருந்த பூவை அரசனு டைய பட்டவர்த்தன யானை மதங்கொண்டு பிடுங்கி எறிதலும், எறிபத்தர் அந்த யானையை வீழ்த்தலும்).

### சிற்பங்கள்

சேக்கிழார் காலத்துக்கு முன்னமேயே, அதாவது நம்பி யாண்டார் நம்பி திருமுறைகளை வெளிப்படுத்தித் தொகுப் பதற்கு முன்னமேயே, பல தலங்களில் அவ்வத்தலத்துப் பதிகங்கள் ஓதப்பட்டு வந்தன. இதுபோலவே பலகோயில் களில் சமயாசாரியர் சிலைகளும் நாயன்மார் சிலைகளும் அமைக்கப்பட்டிருந்தன. அப்படியே தஞ்சைக் கோயிலில் நாயன்மார் வரலாற்றை விளக்கும் சித்திரங்கள் காணப்படு கின்றன. கடம்பூர்க் கோயில் முதலிய பல கோயில்களில் நாயன் மாருட் பலர் சிலைகள் அறுபத்துமூவர் வரலாற்று நிகழ்ச்சி களைக் காட்டுவனவாக அமைந்திருந்தன. இவை யாவுமே சேக்கிழாருக்கு வரலாற்று ஆதாரங்களாக உதவியிருந்தன.

ஆனால் சேக்கிழார் காலத்தில் பின் அறுபத்துமூவர் வாழ்க்கைக்குச் சிற்பத்தில் ஒரு பெறும் விளக்கம் ஏற்பட்டது. அனபாய சோழனுடைய மகன் இரண்டாம் இராசராசன் இப் பொழுது தாராசுரம் என்று வழங்குகின்ற பெருங்கோயிலைத் தன் பெயராலேயே இராசராசேச்சுரம் என்று மிகவும் பெரிதாக அமைத்தான். இவன் காலம் 1146 - 63. இக்கோயில் இப்பொழுது பழுதடைந்திருந்தபோதிலும்கூட, இதன் விமானத்தின் புறச்

சுவரில் அடித்தளத்தின் மேலும் மாடப்புரையின் கீழும் உள்ள பட்டியலாகிய நடுப்பத்தியில் ஆறங்குல அளவில் தொடர்ச்சியாக அறுபத்துமூன்று நாயன்மார் தொகையடியார் ஆகிய அனைவருடைய வரலாற்று நிகழ்ச்சிகள் புடைப்புச் சித்திரங்களாக அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் சில சிதைந்து போய் உள்ளன. உருவத்துக்கு நேரே பெயரும் அக்காலத்தில் தமிழ் எழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. இந்த அமைப்பு நாயன்மார் வரலாற்றுச் செய்திகளுக்குத் துணை போவதாக உள்ளது. இவையாவும் படமெடுக்கப்பட்டு வெள்ளை வாரணனார் - பன்னிருதிருமுறை வரலாற்றில் வெளியிடப்பட்டிருக்கக் காணலாம். இவையேயன்றி, திருப்பனந்தாள் தாடகேச்சுரத்திலும் சிவனடியார் வரலாற்றுச் சிற்பங்கள் சில படைப்புச் சிற்பங்களாக இருக்கின்றன. இவை தாராசுரத்தைப் பார்த்துப் பழங்காலத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளன.

**நூல்கள்**

அடியார் வரலாற்றைச் சேக்கிழார் விரித்துப் பெரியபுராணமாகப் பாடியது பின்வந்தோர் பலருக்கு ஓர் அரிய முன்மாதிரியாக அமைந்திருப்பதை இலக்கிய வரலாற்றில் அறிகிறோம். 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த சைவ சந்தான ஆசாரியரான உமாபதிசிவம் சேக்கிழாருடைய சரித்திரத்தையும் நம்பி திருமுறை கண்ட வரலாற்றையும் இரு புராணங்களாகப் பாடியிருக்கிறார் என்று தொடக்கத்தில் பார்த்தோம். பின்னர் அடுத்த நூற்றாண்டில், கடவுள் மாமுனிவர் சமயாசாரியர் நால்வருள் முதல் மூவர் சரித்திரம் பெரியபுராணத்தில் அடங்கியிருக்க, நான்காமவராகிய மாணிக்கவாசகருக்குப் புராணமில்லாமையை எண்ணி, புதிதாகத் திருவாதவூர் அடிகள் புராணம் என்ற சுவை மிக்க நூல் செய்தார். அளவில் சிறியதாயினும் (545 பாடல்) இது பெரியபுராணத்தைப் போலப் பக்திச்சுவை நிரம்பியது. இதன் பிறகு சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சாமிநாத தேசிகர் என்பவர் மெய்கண்டார் முதலான நான்கு சந்தான ஆசாரியரின் வரலாற்றைச் சுருக்கமாகச் சந்தான ஆசாரியர் சரித்திர சங்கிரகம் என்ற சிறு நூலாகப் பாடியிருக்கிறார். இதன் பின்னர்த் தோன்றியவை, கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியர் வரலாறு ஆகிய புராணம் (வாமதேவமுருகபட்டாரகர், பதிப்பு 1917, பாடல் 173), தண்டபாணி சுவாமிகள் பாடிய புலவர் புராணம் (இரண்டாம் பதிப்பு 1908,

*2993 பாடல்) முருகன் தொண்டர் வரலாற்றைப் பெரியபுராண அமைப்பின்படியே கூறுகின்ற சேய்த்தொண்டர் புராணம் (வானூர் சொக்கலிங்கம் பிள்ளை, 1960, பாடல் 3333) என்பன.**

*பெரியபுராணம் முழுமையும் பலரால் நாடகக் கீர்த்தன மாகப் பாடப்பெற்றுள்ளது. இவ்வாறு பாடப்பெற்ற தனியடி யார் சரித்திரக் கீர்த்தனங்கள் கணக்கிலடங்கா.*

### தனிப்பாடல்கள்

*ஏட்டுச் சுவடிகளில் சேக்கிழாரையும் பெரியபுராணத்தை யும் பற்றித் தனிப்பாடல்கள் பல காணப்படுகின்றன. பின்வருவன எம்மிடமுள்ள ஓர் ஏட்டில் உள்ளவை (சேக்கிழார் புராணம்).*

திருமடங் குன்றத்தூர்ச் சேக்கிழார் செல்வ
அருண்மொழித் தேவன்புரா ணம்சீர் – வருதற்கு
மைம்மா மழைபோல் மதத்தான் திரண்டபுகழ்க்
கைம்மா வதனத்தான் காப்பு.

நன்றி புரிசெம் பியன்மனுநூல்
  நயக்க விலக்கிக் கனகமணி
மன்றி லுறைவார் அடியெடுத்து
  வழங்கும் தமிழ்நூல் முழுதுலகும்
சென்று நிலவ இனிதுரைத்த
  சேக்கி ழார்தம் திருமடத்து
முன்றில் இருந்த கரிமுகவன்
  முளரி மலர்த்தாள் சிரம்சேர்ப்பாம்.

சேக்கிழார் அருண்மொழித் தேவர் சேவடி
வாக்கினால் துதிப்பவர் மனத்தின் நாடுவோர்
நோக்கினால் காண்பவர் நுணங்கு கேள்வியர்
ஆக்கினோர் இவர்மலர் அடிகள் போற்றுவாம்.

நீலறா மிடறுடை நிமலர் சேவடி
மேலறா விளைவினால் மேன்மை பூண்டுளார்
சேலறா வளவயல் சேவை காவலர்
பாலறா வாயர்பொற் பாதம் போற்றுவாம்.

---

* *காந்தியடிகள் புராணம், திலகர் புராணம் என்றும் பாடப்பட்டன. ஆறுமுக நாவலர் சரித்திரமும் செய்யுளாகப் பாடப்பட்டுள்ளது*

அண்ட வாணர்பொன் னம்பலத் திறைவர்தம்
அடிஎடுத்து உலகெ லாம் எனத்
தொண்ட ரானஅறு பத்து மூவருட
காதையும் சுருதி மொழியதாய்ப்
பண்டு பாடியுரை செய்த குன்றைமுனி
பாலி சூழ்திரு நாடன்மேற்
றண்ட மிழ்புரி முந்நூ லிலங்கியகொற்
றங்குடிப் புனிதர் செய்ததே

## பதிப்பு

*திருத்தொண்டர் புராணம் எண்ணற்ற முறைகள் பலரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அவற்றுள், வரலாற்றுக்கும் ஆராய்ச்சிக்கும் பயன்படத்தக்க சிலவற்றை மட்டுமே பின்னே குறிப்பிடுகிறோம்.*

*மூலப்பதிப்புகளில் மிகவும் சிறப்பாகச் சொல்லத்தக்கன பின்வருபவை. காஞ்சி சபாபதி முதலியார் பதிப்பு 1859, 1870. ஆறுமுக நாவலர் பதிப்பு 1854 முதல் பலமுறை. திரு.வி. கலியாண சுந்தரனார் அரும்பதக் குறிப்போடு கூடிய பதிப்பு 1910. சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் மூலப்பதிப்பு 1934; இதன் மூன்றாம் பதிப்பு 1950. இது ஆராய்ச்சிக்குப் பேருதவி செய்யும் வகையில் அமைந்து ம. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய அரிய குறிப்புக்களையுடையது.*

*உரைப் பதிப்புக்கள் ஐந்து, முதலாவது மகாலிங்கையர் பொழிப்புரை; திருக்குறிப்புத் தொண்டர் புராணம் வரை 1847. ஆறுமுகத் தம்பிரான் உரை, சுப்பராயலு நாயகர் உரை இவை இரண்டும் நூல் முழுமைக்கும் எழுதப்பட்டன. பின்னர் ஆலால சுந்தரம்பிள்ளை உரை, முதல் மூன்று சருக்கங்கள் மட்டும். கடைசியில் கோவை வழக்கறிஞர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் பேருரை 1937 முதல் பல ஆண்டுகளில் பல தொகுதிகளாக வெளிவந்து நிறைவேறியது.*

*உரைநடையில் எழுதப்பட்ட பெரியபுராண வரலாறுகளும் குறிப்பிடத்தக்கன. முதலாவது ஆறுமுக நாவலர் எழுதிய வசனம், பின் புஷ்பரதச் செட்டியாரது கலாரத்நாகர அச்சுக்கூடப் பதிப்பு 1864. இது ஆறுமுக நாவலர் எழுதிய முதல் வசன நூலைப் பெயர் சொல்லாமல் அச்சிட்டது போலும்.*

## புராண அட்டவணை

| நூற்றாண்டு | பெயர் | ஆசிரியர், பிற குறிப்பு | யாப்பு | பாடல் தொகை | விளக்கம் |
|---|---|---|---|---|---|
| இடைச் சங்கம் | மாபுராணம் | மதிநலங்கவின்ற மாபுராணம் பெருந்தொகை | நூற்பா | -<br>1384 | யாப்பிலக்கண நூல், எழுத்துங் கூறுவது, யாப்பருங்கல விருத்தி பார்க்க. |
| இடைச் சங்கம் | பூத புராணம் | புதுநலங்களிந்த பூத புராணம் | - | - | தெரியவில்லை யாப்பருங்கல விருத்தி பார்க்க. |
| கி.பி.7 | தசபுராணம் | அப்பர் | விருத்தம் | - | இது ஒரு தேவாரப் பதிகம்: 4 :14 |
| கி.பி.7 | இலிங்கபுராணம் | அப்பர் | விருத்தம் | - | இது ஒரு தேவாரப் பதிகம்: 5 :95 |
| கி.பி.8 | புராணசாகரம் | - | பஃறொடை வெண்பா | - | யாப்பருங்கலவிருத்திக் குறிப்பு |
| கி.பி. 8. | சாந்திபுராணம் | - | விருத்தம் | - | புறத்திரட்டு மேற்கோள் 9பாடல். சைன தீர்த்தங்கரர் சரிதம். |
| கி.பி. 9. | சிவபுராணம் | மாணிக்கவாசகர் | கலிவெண்பா | 1 | திருவாசகத்தில் முதற் பாடல். |
| கி.பி.10. | (புராண சிந்தாமணி. நூல் அன்று.) | புராண பூதங்கள் என்ற தொடர்கள் திருவிசைப்பா நூலில் பயில்கின்றன; | | | |
| கி.பி.12. | திருத்தொண்டர் புராணம் | சேக்கிழார் | விருத்தம் | 4286 | திருத்தொண்டர் வரலாறு. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கி.பி.13. | திருவாலவாயுடையார் திருவிளையாடல் | பெரும்பற்றப் புலியூர் நம்பி | விருத்தம் | 1753 | மதுரையின் தல புராணம். |
| கி.பி.13. | குருபரம்பராப்பிர பாவம் ஆறாயிரப்படி | பின் பழகிய பெருமாள் ஜீயர் | உரைநடை | - | பரமபதநாதன் தொடங்கி நம்பிள்ளை வரையில் ஆழ்வார் ஆசாரியர் வரலாறு. மணிப்பிரவாளம். |
| கி.பி.14. | திருமுறைகண்ட புராணம் | உமாபதி சிவம் | விருத்தம் | 46 | நம்பியாண்டார் நம்பி திருமுறை களைத் தேடித் தொகுத்த வரலாறு. |
| கி.பி.14. | சேக்கிழார் புராணம் | உமாபதி சிவம் | விருத்தம் | 104 | திருத்தொண்டர் புராணம் பாடப்பட்ட வரலாறு. |
| கி.பி.14. | கோயிற்புராணம் | உமாபதி சிவம் | விருத்தம் | 415 | தில்லைத்தலத்தின் வரலாறு |
| கி.பி.14. | மேருமந்தர புராணம் | சமய திவாகர வாமன முனிவர் | விருத்தம் | 1405 | மேரு மந்தரர் என்ற இரு சைனப் பெரியார் வரலாறு. |
| கி.பி.14. | கந்தபுராணம் | கச்சியப்ப சிவாசாரியர் | விருத்தம் | 10345 | முருகப் பெருமானுடைய சரிதம். |
| கி.பி.15. | திருவாதவூரடிகள் | கடவுள் மாமுனிவர் | விருத்தம் | 545 | மாணிக்கவாசகர் வரலாறு. |
| கி.பி.15. | ஸ்ரீ புராணம் | - | உரைநடை | - | சைனப் பெரியார் வரலாறு; மணிப்பிரவாளம். |

(பிந்திய நூற்றாண்டுகளில் எழுந்த புராணங்களின் வரலாற்றை எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு என்ற நூலில் விரிவாகக் காணலாம்.)

புராணங்களுக்குச் சூசனம் என்பது மட்டும், அம்மையார் புராணம் வரையில் எழுதப்பெற்று அவருடைய மூலப்பதிப் புடன் சேர்த்து வெளியிடப்பட்டது, தனியாகவும் வெளியாகி யிருக்கிறது. சிறப்பாக எழுதப்பெற்ற மற்றோர் உரைநடை நூல், நாயன்மார் வரலாறு என்ற பெயரில் திரு.வி. கலியாண சுந்தர முதலியார் எழுதி வெளியிட்டது. 1937. பின்னர் காசி மடத்துப் பதிப்பு, திருத்தொண்டர் புராண உரைநடை என்ற பெயரில் வெளியாயிற்று.

ஆராய்ச்சி நூல்கள் பல வெளியாகியுள்ளன. மகாதேவ முதலியார், பெரியபுராண ஆராய்ச்சி 1924. சி.கே. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார் (சென்னைச் சர்வ கலாசாலைப் பிரசங் கங்கள்) 1933. மா. இராசமாணிக்கனார், சேக்கிழார் 1945; பெரிய புராண ஆராய்ச்சி 1948.

மாகேசுர பூசையில் ஓதத்தக்கவையாக நெடுங்காலமாய்ப் பதினான்கு பாடல்கள் திரட்டி வழங்கிவருதல் உண்டு. பஞ்ச புராணம் என்ற முறையில், அகத்தியர் தேவாரத்திரட்டு, திரு வாசகம் முழுமையும், திருவிசைப்பா முழுமையும், திருப் பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுள் திரட்டு என்று சேர்த்து அருட்பா என்ற பெயரில் ஆறுமுக நாவலர் அச்சிட்டபோது, பெரியபுராணத்தில் திரட்டிய பாடல்கள் 43; இத்திரட்டையே பின்னைப் பலரும் அச்சிட்டனர். சி.கே. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார் செம்மணித்திரள் என்ற பெயரில் 1960இல் ஒரு பெருந்திரட்டு வெளியிட்டார்; இதில் அவருடைய சிறப்பான பொருள் விளக்கமும் உள்ளது.

சென்ற நூற்றாண்டில் சில பதிப்புக்கள், புராணந்தோறும் ஐதிகப்படங்களோடு வெளியிடப்பட்டன; ஒன்று கலாரத் நாகரம் அச்சுக்கூடப் பதிப்பு, 1872; இதனுள் 112 படங்கள் உள்ளன.

செப்பலுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொருட் குரை யாவரும் கொள்வரால்:
இப்பொருட் கென் னுரை சிறிதாயினும்
மெய்ப்பொருட் குரியார் கொள்வர் மேன்மையால்.

○○○

*அத்தியாயம் 3*

# இலக்கியம் – 3

## ஒட்டக்கூத்தர்

### *முன்னுரை*

*தமிழ் இலக்கிய வரலாற்றில் காலம் நன்கு ஐயத்துக் கிடமின்றித் தெரிந்த ஒரு பெரும்புலவர், ஒட்டக்கூத்தர். 1118 முதல் 1163 வரை ஆட்சி புரிந்த சிறப்பான மூன்று சோழமன்னர் மீது இவர் மூன்று உலாக்கள் பாடியிருப்பதால், இக்கால எல்லைக்குள் வாழ்ந்தார் என்பது திட்டமாகத் தெரிந்த செய்தி. கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்ற மூவரில் இவர் காலத்தால் கடைசியானவர். இத்தகைய சிறப்புடைய இவர், 19ஆம் நூற்றாண்டில் சிலர் புனைந்த பொய்யான கதைகளால், பொறாமைக் குணமுடையவர் என்றும், இரக்கமில்லாத கொடுமையுள்ளம் படைத்தவர் என்றும், கற்றோர் மனத்தில் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. புகழேந்தி ஒட்டக்கூத்தர் பற்றிய பூசல்களைப் படிப்பவர் மனத்திலிருந்து எளிதில் அகற்ற முடியாது. ஆனால் உண்மையில் கூத்தர் புகழேந்திக்கு நூறாண்டு முற்பட்டு வாழ்ந்தவர். இவர் கல்வியாளரைப் பெரிதும் போற்றும் இயல்பு மிக்கவர். குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழில், 'பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி கவிச்சக்கரவர்த்தி பரவச் - செஞ்சேவகம் செய்த சோழன் திருப்பெயர செங்கீரை யாடியருளே' என்று சயங்கொண்டாருடைய கலிங்கத்துப் பரணியை மனமாரப் புகழ்வதால், இவருடைய விரிந்த உள்ளப்பண்பு நன்கு விளங்கும்.*

*சோழர் மூவரால் போற்றப்பெற்ற கூத்தர், மூவர் மீதும் பல நூல்கள் பாடினார் என்று தெரிகிறது; சிலவே கிடைக்கின்றன. இவையாவும் இங்கு ஆராயப்பெறும். இவர் செய்யாத*

நூல்கள் சிலவும் புகழேந்தி கதைபோல, இவர்மீது சுமத்தப் பெற்றுள்ளன; அவையும் ஆய்ந்து விளக்கப்பெறும். புலவர் கதை சொல்லுகிறவர்கள் ஒட்டக்கூத்தர் கதை சொல்லாம லிருக்க மாட்டார்கள். எனினும், திறனாய்வு முறையில், வர லாற்றையோ நூல்களையோ இதுவரை யாரும் ஆய்வு செய்ய வில்லை. இந்நூலே அவ்வாறு செய்யும் முதல் முயற்சியாகும்.

## ஒட்டக்கூத்தர்

**வரலாறு**

இப்புலவரது இயற்பெயர் கூத்தர் என்பது. இப்பெயர் நடராசப் பெருமானுக்குரியது. இது, இவரது குலம் சிவபெரு மானுக்குத் தொண்டு பூண்டது என்பதை உணர்த்தும். கூத்தர் என்ற பெயருக்கு, 'துணி நெய்யும் பொழுது கால்மாறிக் கால் மாறி மிதித்து நெய்யும் தொழிலைச் செய்வதால் கூத்தர் என்று ஒரு காரணப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்' என்று ஒருவர் எழுதி னார். இவர் வாழ்ந்த ஊர் மலரி; இது தண்டியலங்கார மேற் கோட் செய்யுளொன்றில் 'மலரிவரும் கூத்தன் தன் வாக்கு' என்று வருவதனால் விளங்கும். இம்மலரியே பாடல் பெற்ற தலமாகிய திருஎறும்பியூர் என்பது அத்தலத்துக் கல்வெட்டொன்றால் தெரியவருகின்றது. பிறந்த ஊர் காழியாகிய சீகாழி என்று சொல் வர் சிலர். இக்கூற்றுக்கு ஆதாரமாக,

> கம்பனென்றுங் கும்பனென்றுங் காழிஒட்டக்கூத்தனென்றும்
> கும்பமுனி யென்றும்பேர் கொள்வரோ, – அம்புவியில்
> மன்னா வலர்புகழும் வாயல்அன தாரியப்பன்
> அந்நாளி லேஇருந்தக் கால்?

என்று சுந்தரபாண்டியம் செய்த அனதாரியைப் புகழும் பழைய பாடல் ஒன்றை எடுத்துக்காட்டுவர்;* 'இங்கு காளி என்பதே பாடம்; அது ஒட்டக்கூத்தருடைய சமகாலத்தவராகிய நம்பிகாளி என்ற புலவரைக் குறிப்பிடுவது' என்றும் சிலர் சொல்வதுண்டு; 'காளியொட்டக் கூத்தர் - உம்மைத்தொகை'❖ ஆனால், 'இதி லுள்ள எண்ணிடைச் சொல்லும் எண்ணும்மையும் காளி யென்ற பாடத்திலும் காழி என்ற பாடம் சிறந்ததென்பதை

* அனதாரியின் காலம் 16ஆம் நூற்றாண்டு.

❖ பெருந்தொகை 1704.

விளக்குகின்றன' என்ற ஐயரவர்கள் குறிப்பே பொருந்துவது. காழி ஒட்டக்கூத்தர் - சீகாழியில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர். இவரது சொந்த ஊர் சீகாழியாயிருக்கலாம்; தக்கயாகப் பரணியில் எத் தொடர்பும் இல்லாமல் சம்பந்தர் வரலாற்றைப் புகுத்தியிருப் பதால், இவர் தம் ஊரினரான ஞானசம்பந்தப் பெருமானிடம் பக்திபூண்டு அவர் வரலாற்றைப் பாடுகிறார் என்று எண்ண இடங்கொடுக்கிறது.

மேலும், தக்கயாகப் பரணியில் கூத்தர் முதலில் வைரவ ருக்குக் காப்புக் கூறுகிறார். சீகாழியில் சட்டைநாதர் என்ற பெயரில் வைரவ மூர்த்திக்குத் தனிச்சிறப்பு அமைந்துள்ளது. ஆகவே காழித் தொடர்புக்கு இதுவும் ஒரு சான்றாகும். (வீர பத்திரருக்குக் காப்புக் கூறினால் நூலுக்குப் பொருந்தும்.)

அன்றியும், சோழமண்டல சதகம் 64ஆம் பாடல், கூத்தர் 'காழிக் கவுணியர்கோன் பத்தியுடனே தக்கன் மகப்பரணி' பாடினார் என்று கூறுகிறது:

> ஒத்த துணர்ந்த நாடனைத்தும் ஒருங்கே கூடி உயர்கூத்தன்
> கத்தி யலையத் துரத்துதலும் கசிந்துகாழிக் கவுணியர்கோன்
> பத்தி யுடனே தக்கன்மகப் பரணி பாடப் பணிந்து முத்தின்
> வைத்த சிவிகை மகிழ்ந்தேற வைத்தார் சோழ மண்டலமே.

இதுகொண்டு அதன் பதிப்பாளர் கூத்தர் காழி நகரினர் என்று குறிப்பிட்டார்; இது பொருந்தாது. இப்பாடலில் காழி என்பது கவுணியர்கோனுக்கு அடைமொழியே யன்றி, கூத்தருக்கன்று.

இனி, இவர் பிறந்த ஊர் திருமணவூர் என்று குறிப்பிட்டு, கூத்தர் சரிதமெழுதிய நாராயணசாமி முதலியார் 'கந்தவிரத விலாசம்' என்று பின்வரும் பாடலைத் தந்துள்ளார்:

> தேனுந்து மலர்ச்சோலைத் திருமணவூர்ச் சிவசங்கத்—
> தோனந்தச் சிற்சபைஎம் கூத்தனருட் கூத்தனெனும்
> ஆனந்தச் செல்வநின தாசனத்தில் அலகுபெறின்
> நானந்தச் செனனமுனை நயந்திரத்தல் என்கடனே.

இதை விரித்து, பின்னர் செங்குந்தர் பிரபந்தத்திரட்டு பதிப் பித்தவர், "ஒட்டக்கூத்தர் சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய திருவாய்மூர்ப் பக்கலிலுள்ள மணக்குடியில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சிவசங்கரபூபதி என்றும், தாயார் பெயர் வண்டமர் பூங்குழலி என்றுங் கூறுவர். ஆதியில் ஒட்டக்கூத்தர்

பெயர் அம்பலக்கூத்தர் என்று வழங்கி வந்தது. இப்பெயர் பின்னால் கூத்தர் என்றே பெருவழக்கில் நின்றுவிட்டது. இவ்வூருள் நாளைக்கும் ஒரு மனைக்கட்டு ஒட்டக்கூத்தர் மனைக் கட்டு என்று வழக்கில் காணப்படுகிறது. தமிழில் தண்டியலங் காரம் செய்த தண்டி என்னும் புலவர் தமது நூலுள்,

சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள், – ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக்கு, ஒன்று
மலரிவருங் கூத்தன்தன் வாக்கு.

என்று கூத்தர் பாட்டைப் புகழ்ந்திருப்பதனால், ஒரு சாரார் அவ்வொட்டக்கூத்தர் 'மலரி' என்னும் ஊரிலே பிறந்தவர்* என்று கருதுவர். அவர், இப்பாட்டு சில கையேட்டுப் பிரதி களிலே பின்னடி இரண்டும்,

மணமமருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மணவைவருங் கூத்தன்றன் வாக்கு.

என்று வருவதைக் கண்டு ஆராய்ந்தறிவாராக" என்று எழுதி னார். இச்சொற்கள் அபிமானத்தால் விளைந்தவை; ஆராய்ச்சி யாளர் கொள்வனவல்ல. காழியில் பிறந்த கூத்தர் சோழனால் சிறப்புப் பெறுவதற்குமுன் மலரியில் வாழ்ந்திருத்தல் இயல்வ தாகும்.

கூத்தர் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வடமொழி நூல்களையும் நன்கு பயின்றிருந்தார். தமிழில் சிறந்த புலமை பெற்று, சிறப்பாகக் கவிபாடும் ஆற்றலுடையவரானார். கலை மகள் இவருடைய நாவில் எழுதினார் என்ற வரலாறும், தம்பலம் உமிழ்ந்தாள் என்ற வரலாறும் உள்ளன. இவருக்குச் சரசுவதி யிடமுள்ள பக்தியை, தக்கயாகப்பரணியில் சரசுவதிக்கு வணக் கமும் வாழ்த்தும் கூறியிருத்தலாலும், தேவி, சரசுவதியை அழைத்து மதுரையில் சம்பந்தர் சமணரை வென்ற கதையைக் கூறுமாறு அமைத்திருத்தலாலும், நன்கறியலாம்.

பின்வரும் குறிப்பும் இதை நன்குணர்த்தும். தக்கயாக சங்காரம் நிகழ்த்திய வீரபத்திரர் எல்லாத் தேவர்களையும் தண்டித்தது போல, நாமகளையும் தண்டித்தார் - மூக்கரிந்தார் என்பதே வரலாறு. ஆனால், கூத்தர் பரணியில் இது கூறாது

* இலக்கிய வரலாற்றில் கூத்தர் பலர்.

விட்டமை இவருக்கு நாமகளிடத்துள்ள பக்திக்கு அடையாளம். சோழமன்னன் இவருக்கு அரிசிலாற்றின் கரையிலுள்ள ஒரூரை யளித்தான்; அவ்வூர் இன்றும் இவர் பெயரால் கூத்தனூர் என்று வழங்கப்படுகிறது. அங்கு இவர் கலைமகளுக்கு ஒரு கோயில் அமைத்து அங்கே வாழ்ந்து வந்தார். அக்கோயில் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. (இவர் மரபில் பின்வந்த ஓவாத கூத்தர் என்பார் பெயரால் ஒரு கல்வெட்டும் அங்கு காணப்படுகிறது.) தக்கயாகப் பரணியின் இறுதியில் ‘ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே’ என்று இவர் நாமகளைத் துதிப்பது, இவ்வூர்க் கோயிலையே* என்பது ஐயரவர்கள் கருத்து. தமிழ்நாட்டில் சரசுவதிக் கென்று தனியே அமைந்த கோயில் இது ஒன்றே❖.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பார்த்தால், பல புலவர் - இலக்கியப் புலவரும் சமயப் புலவரும் - திருஞானசம்பந்தப் பெருமானிடத்தே மிக்க ஈடுபாடு கொண்டிருந்திருக்கிறார்கள். சம்பந்தர் முருகனுடைய அவதாரம் என்ற கருத்து இவ்வீடு பாட்டை அதிகப்படுத்தியிருக்கிறது. நம் ஒட்டக்கூத்தரும் ஞான சம்பந்தரிடம் ஈடுபாடு மிக்கவர். இதைப் பின்னர் தக்கயாகப் பரணி ஆராய்ச்சியில் விரிவாய்க் கூறுவோம்.

வள்ளல்களால் இவர் ஆதரிக்கப் பெற்றிருப்பினும், முதன் முதலாக, முதற்குலோத்துங்க சோழனுடைய புதல்வனாகிய விக்கிரமசோழனுடைய ஆதரவு இவருக்குக் கிடைத்தது. அவனே இவரைத் தன் அவையில் இருத்தி உயர்வு தந்தான். அவனுடைய ஆட்சியில் இளமை வாய்ந்த அவைக்களப் புலவராயிருந்தார். அம்மன்னன் தென்கலிங்க மன்னனாகிய தெலுங்க வீமனை வெற்றி கொண்ட செய்தியை இவர் ஒரு பரணிப் பிரபந்தத்தில் பாராட்டிப் பாடியிருக்கிறார்.

அடுத்து இச்சோழன் மீதே இவர் சிறப்பான உலாப் பிரபந்தம் பாடினார். பாடி வரும்போது அதில்,

> **கையும் மலரடியும் கண்ணும் கனிவாயும்**
> **செய்ய கரிய திருமாலை.**

---

* இவ்வூர் திருவீழிமிழலையருகே உள்ளது. பூந்தோட்டம் என்ற ரயில் நிலையத்திலிருந்து மூன்று மைல் மேற்கில் உள்ளது.

❖ இங்கு சரசுவதி வடிவம் சிற்ப சாத்திரங்கள் சொல்வது போலவும் கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ளதுபோலவும் இருகாலையும் மடக்கி அமர்ந்த கோலம், ரவிவர்மா படத்தில் காண்பது போலன்று.

*என்ற 158ஆம் கண்ணி வந்தது. கவிச்சுவை தேர்வதில் சோழ மன்னர் சிறந்தவன் ஆதலால், இக்கண்ணியை யொட்டி ஒரு வெண்பாப் பாடுமாறு கூத்தரைக் கேட்டான். அதன்மேல் கூத்தர் அக்கண்ணியை முன்னிரு அடிகளாக வைத்துப் பின்வரும் வெண்பாப் பாடினார்:*

கையும் மலரடியும் கண்ணும் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே, – வையம்
அளந்தாய், அகளங்கா, ஆலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய், தளர்ந்தாளென் மான்.

*இவ்வாறு ஒட்டிப் பாடியதால் இவருக்கு ஒட்டக்கூத்தர் என்ற பெயர் வந்தது. (இவர் பந்தயம் வைத்துப் பாடியதால் இப்பெயர் வந்தது என்று சொல்வாருமுளர்: ஒட்டம் - பந்தயம்.) நூல் முடிந்தபின் சோழன் கூத்தருக்குப் பெருஞ்சிறப்புச் செய்தான். அவனால் கொடுக்கப்பட்ட காளம் கொடி முதலான பல விருது களைப் பெற்ற கூத்தர், தமது நன்றியையும் பணிவையும் தெரி வித்து அரசன் சிறப்பையும் தமது சிவபக்தியையும் புலப்படுத்திப் பின்வரும் இரு பாடல்களையும் பாடினார்:*

இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன்று
இரக்கச் சென்றஇன் றெனக்குச் சிங்களந்
திடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
திருக்கைப் பங்கயம் சிறக்கத் தந்தன:
படுக்கக் கம்பளம், பதக்கக் குங்குமம்,
பதிக்கக் கங்கணம், பரிக்கக் குஞ்சரம்,
கடுக்கக் குண்டலம், கவிக்கச் சங்கினம்,
கவிக்குப் பஞ்சரம், கவிக்கத் தொங்கலே.

பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொற்றா ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருள்மானா பரணா
முத்துப்பந் தரினிற்குங் குருளைக்கும் சினவேல்
முருகற்கும் பொதியக்கோ முனிவர்க்கும் பதுமக்
கொத்தற்கும் சடிலக்குந் தளருக்கும் அல்லாற்
கூழைத்தண் டமிழிற்கேன் கொடியுங்கா ளமுமே.

போலிக்கதைகளைக் கண்டிக்கும் பழம் பாடலாகிய 'குட்டு தற்கோ' என்ற பழம் பாடல், 'இரண்டென்றாய்த் தலையை முடித்து இறங்கப் போட்டு - வெட்டுதற்குக் கவி ஒட்டக் கூத்தனில்லை' என்று கூறுகிறது. இங்கு கூறிய 'வெட்டுதற்குக் கவி ஒட்டக்கூத்தன்' என்ற கருத்தை, தமிழ் விடுதூது என்ற பிற்கால நூலும் 'மேலோரில், பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்கூத்தன் இவர் கல்லாது கோட்டி கொள்ளும் - சீத்தையரைக், குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம், வெட்டிக் களைபறிக்க' என்று கூறுவதால், இக்கதை பழங்கதையே என்பது தெளிவு. மேற்கூறியவாறு கூத்தர் தமது இளமை வளத்தினாலும், விக்கிரம சோழனிடம் பெற்ற சிறப்புக்களாலும், மிக்க பெருமையோடு வாழ்ந்து, கீழ்ப்பட்ட கவிஞருடைய குற்றம் பொறுக்காதவராயிருந்தார். புன்கவிகளைப் பெரிதும் இவர் கண்டித்து வெருட்டினார். அவ்வாறு சிறிதும் பொறையின்றி நடந்து கொள்ளுதல் பெருந் தன்மையாகாது என்பதை உணர்த்தி, அவர் காலத்தில் நிலக் கிழாராகவும் புலவராகவும் சிவபக்திச் செல்வராகவும் சிறப் படைந்திருந்த நெற்குன்றவாணர்,

கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர்; கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில; பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்தி, நின் கட்டுரையாம்
பாக்கண்டு ஒளிப்பர்க ளோ, கவி பாடிய பாவலரே?

என்ற பாடலைப் பாடி, கூத்தருக்குச் சிறிதே பொறுமையைக் கற்பித்தார் என்னும் வரலாறு உண்டு.

விக்கிரம சோழனுடைய வீரத்தைப் புகழ்ந்து கூத்தர் பாடிய தனிப்பாடல்கள் சில கிடைக்கின்றன. இரண்டு பாடல்கள் அவனுடைய போர்ப் பெருமையைக் குறிப்பிடுகின்றன:

இன்னம் கலிங்கத்து இகல்வேந்தர் உண்டென்றோ,
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ, – சென்னி
அகளங்கா! உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு.

இங்கு, கலிங்கத்துப் போரை இவர் குறிப்பிடுதல் கருதத்தக் கது. இப்பாடல் ஒரு சமயம் விக்கிரம சோழனுடைய யானை யைக் கட்டுத்தறியிலிருந்து அவிழ்த்து விட்டபோது பாடியது.

மற்றொன்று, ஒட்டக்கூத்தர் அற்பக் கவிஞரைத் தண்டித்தது பாவம் என்று சொல்லி ('கவி தலை அறுத்தபோது') சேரனும் பாண்டியனும் ஓலை அனுப்ப, அச்சமயம் சோழவேந்தன் வாளேந்தி அவர்மீது போர் தொடுக்க எண்ணிச் சிலஅடி நடந்தான்; அவன் சீற்றத்தைத் தணிப்பிக்கக் கூத்தர் பின்வரும் பாடல் பாடினார்:

அன்றையிலும் இன்றைக் ககன்றதோ, அல்லாது
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ, – என்றும்
அடைந்தாரைத் தாங்கும் அகளங்கா! நீயும்
நடந்தாயோ நாலைந் தடி.

இவர் காலத்தில் இலக்கணநூல்கள் செய்த சைன சமயப் புலவர் நேமிநாதர் என்பவர் சிறப்புடைய பேராசிரியராகவும் விளங்கினார். 'உலாப் பாடியபோது, பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது' என்ற தலைப்பில் தமிழ் நாவலர் சரிதை பின்வரும் பாடலைத் தருகிறது:

செங்கால்மட அன்னம்படர் தீயாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின்
பைங்காய்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா!
தங்காதலி யருமைந்தரும் உடனாக வணங்கித்
'தலைகா, எம துடல்கா, எம துயிர்கா, அக ளங்கா!
கொங்கா, மன துங்கா!' என மதுரேசர் வணங்கும்
கொல்யானை அபங்கா! இவள் குழலோசை பொறாளே.

இப்பாடல் மிக்க இலக்கியச் சுவையுடைய பாடல் ஆதலால், இதை விட மனமின்றி இங்கு இதுபற்றிச் சில சொல்லுகிறோம். தமிழ் நாவலர் சரிதை கனகசுந்தரம்பிள்ளை (1921) பதிப்பில் தலைப்பு மேலே தந்துள்ளபடியே உள்ளது. சரிதையில் இதற்கு முன்னுள்ள பாட்டு ஆடுங்கடைமணி என்ற கூத்தர் பாட்டு; ஆகவே அடுத்த பாட்டும் கூத்தர் பாட்டாயிருத்தல் இயல்பே. இது பற்றிப் பிள்ளையவர்கள் எழுதிய குறிப்பு: 'பேராசிரியர் நேமிநாதர் என்பது ஒருவர் பெயரேபோலும். பேராசிரியராகிய நேமிநாதர் என்க. இவர் தொல்காப்பியத்திற் குரையெழுதிய பேராசிரியர் அல்லர் .... இவர் நேமிநாதஞ் செய்தவருமல்லர்; நேமிநாதஞ் செய்தவர் குணவீர பண்டிதர். ஒட்டக்கூத்தர் என்னும் தலைப்பின் கீழ்வரும் ஏனைப் பாட்டுக்கள் போல

இதுவும் ஒட்டக்கூத்தர் பாடியதேயாம். நேமிநாதர் பட்டோலை பிடிக்க இதனைப் பேராசிரியர் பாடினார் என்று கொள்வது பொருந்துவதாகக் காணவில்லை.' இவ்வாறு பலவகை ஐயத்துக்கு இடங்கொடுக்கும் இப்பாடலைப் பின்னர் அச்சிட்டவர் (1949) 'இது பேராசிரியர் ஒட்டக்கூத்தர் உலாப் பாடியபோது, நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது' என்று ஐயத்துக்கு இடமின்றி, எந்த ஆராய்ச்சிக்குமே இடமின்றி, அச்சிட்டுவிட்டார்கள்.*

பட்டோலை பிடித்தலாவது, பட்டிற்பொதிந்து பாடல் எழுதுவதற்காகச் சித்தப்படுத்தி வைத்துள்ள ஓலை. பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடித்தமை, அவருக்குக் கூத்தரிடத்திருந்த பெருமதிப்பையுணர்த்தும். நேமிநாதர் குறித்த வேறு எந்த வரலாறும் தெரியவில்லை.

விக்கிரமன் காலத்துக்குப் பின்னர் அவன் புதல்வனாகிய இரண்டாம் குலோத்துங்கசோழன் காலத்தில் இவர் அவனுக்கு வித்தியாகுருவாகவும் அவைப் புலவராகவும் விளங்கினார். அவன் மீது உலாப் பிரபந்தமும் பிள்ளைத் தமிழும் பாடினார். அவன் இளவரசனாயிருந்தபோது இவை பாடப்பட்டனவாகும். பிற்காலத்தில் இந்த அளவு உண்மை நிகழ்ச்சியோடு, கற்பனையும் கலந்து பொய்க்கதை கட்டிவிட்டிருக்கிறார்கள்.❖ குலோத்துங்கன் மனைவி பாண்டி நாட்டு அரசகுமாரி, அவருடன் வந்த புலவர் புகழேந்திப் புலவர், இருவருக்கும் புலமைக் காய்ச்சல் என்று குறிப்பிட்டு கீழ்த்தரமான பல கிளைக்கதைகள் கட்டப்பட்டுள்ளன. இவை பொருந்தாதன; புகழேந்தியார் அடுத்த நூற்றாண்டுக்குரியவர்; ஆதலால் அவருக்கும் கூத்தருக்கும் எவ்விதத் தொடர்பும் இருந்திருக்க முடியாதென்பது உண்மை.

ஒட்டக்கூத்தர் புகழேந்தி பூசற்கதைகள் வீராசாமிச் செட்டியாருடைய கற்பனையென்று இங்கு குறிப்பிட்டோம். எனினும், அவருக்கும் முன்னமே இக்கதைகள் கால்கொண்டுவிட்டன; கால்கொண்ட கதைகளை அவர் பெருக்கினார்.

---

* தமிழ் நாவலர் சரிதை, கழகப்பதிப்பு 1949, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.

❖ இவை விநோதரச மஞ்சரியில் காணப்படும் - 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி; அதன் ஆசிரியரான அட்டாவதானம் வீராசாமிச் செட்டியாரின் கற்பனையில் இவை உதித்தவை. விநோதம் என்ற பெயர் அமைப்பே, அவை சுவையுடையன ஆனால் உண்மையல்ல என்பதை நன்கு புலப்படுத்தும். புகழேந்தியின் வரலாற்றை எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டில் விரிவாய்க் காணலாம்.

இத்தகைய போலிக் கதைகளைச் சொல்பவை மண்டல சதகங்களே. 17ஆம் நூற்றாண்டுக் குரியதாகிய தொண்டை மண்டல சதகம் இப்பூசற் கதைகளில் ஒன்றைக் குறிப்பிடுகிறது: 'செம்பியன் கேட்க, ஒட்டக்கூத்தனை அன்று தற்கோலி என்று கவி சொல்லி வென்று கொண்ட களந்தைப் புகழேந்தி' என்பது அதன் பாடல்.* புகழேந்தி வென்றார் என்று மட்டும் இப்பாடல் சொல்கிறது. சென்ற நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் பாடியிருந்த பாடலிலும் ஏற்றமாகப் புகழேந்தி இப்போது பாடிவென்றார் என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. உடன் காலத்தில் நிகழ்ந்த போட்டி என்றே கொள்ளும் அவசியமில்லை.

இக்குலோத்துங்கனுக்குத் தியாகவல்லி, முக்கோக்கிழானடி என்ற இரு மனைவியரே இருந்தனர் என்று திருமழபாடிக் கல்வெட்டொன்றால் அறிகிறோம்.❖ தியாகவல்லி, புவனமுழுதுமுடையாள் என்ற பெயருமுடையவள், பட்டத்தரசி. யாருமே பாண்டி மன்னன் மரபு என்று வரலாறு இல்லை: அவ்வாறிருந்தால் சாசனங்கள் சிறப்பித்துச் சொல்லியிருக்கும். இரண்டாம் மனைவி மலாடர் குலமணி விளக்கு என்று மெய்க்கீர்த்தி கூறுகிறது. இவற்றாலும், புகழேந்தி பாண்டிய குமாரியைச் சாந்தப் படுத்தினார் என்பது பொய்க்கதை என்பதைத் தெளியலாம்.

குலோத்துங்கனுக்கும் கூத்தருக்கும், மாணாக்கன் ஆசிரியர் என்ற முறையில் சிறப்பான தொடர்பு இருந்தது. அத்தொடர்பை விளக்கும் பல குறிப்புக்கள் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளன. பின்வருவது ஒன்று. கூத்தர் குலோத்துங்கன் புகழை முன்னிரு வரிகளால் பாடினார்:

> ஆடுங் கடைமணிநா அசையாமல் அகிலமெல்லாம்
> நீடுங் குடையில் தரித்த பிரான் என்றும் –

கேட்டுக் கொண்டே வந்த குலோத்துங்க சோழன் தன்னுடைய பணிவையும் குருபக்தியையும் புலப்படுத்தி அவர் பாடலை முடிப்பதற்குள் பின்வருமாறு பாடிமுடித்தான்:

> – நித்தநவம்
> பாடுங் கவிப்பெருமான் ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
> சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே என்னைச் சொல்லுவரே.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு, 13ஆம் நூற்றாண்டு பார்க்க.

❖ சதாசிவபண்டாரத்தார், சோழர் வரலாறு இரண்டாம் பகுதி, 1951 பக்கம் 103.

*உலாப் பாடுதலில் வல்லவரென்று பெயர்பெற்ற கூத்தர், கூத்தப் பெருமானுக்குரிய தலமாகிய தில்லைப் பதியில் திருமாலைக் குலோத்துங்கன் கடலில் போட்ட காலத்தில், ஓர் உலாப் பாடினார் என்றும் கருத இடமுண்டு; இவ்வுலா தில்லையுலாவாகும் என்றும் கருதக்கூடும்: ஆதாரமில்லை.*

*அடுத்துப் பட்டமேற்ற இரண்டாம் இராசராசன் காலத்தில் இவர் மீண்டும் அவைக்களப் புலவராய், தமது தளர்ந்த பருவத்தில் இருந்தார். அவனால் பல்வகையாலும் சிறப்பிக்கப்பெற்று இவர் வாழ்ந்திருந்த காலத்தில் பல நூல்கள் செய்தார் போலும். இராசராசன் உலா அவனைப் புகழ்வது; அளவாலும் பொருட் சிறப்பாலும் இது பின்னும் பெரியது. பின்னர் இவர் அவன் புகழை இடைமடுத்துத் தக்கயாகப்பரணி பாடினார். இந்நூல் இவருடைய சிவபக்தியையும் சம்பந்தரிடத்து இவருக்குள்ள ஈடுபாட்டையும் நன்கு புலப்படுத்துவது. இவ்வரசனைப் போற்றி இவர் கண்டன் கோவை, கண்டன் அலங்காரம் என்ற நூல்களும் பாடினார் போலும். (கண்டன் - இரண்டாம் இராசராசனது சிறப்புப் பெயர்) இந்நூல்கள் இன்று இல்லை.*

*இராசராசனைக் குறித்து இவர் பலவேறு சந்தர்ப்பங்களில் பல தனிப்பாடல்கள் பாடியுள்ளார். சில தமிழ் நாவலர் சரிதையுள் தொகுக்கப்பட்டுள்ளன. அவன் குதிரையேற்றம் கற்றுக் கொண்டு வெளியிற் குதிரைவிட்ட சமயம் பாடிய பாடல்:*

**கண்டன் பவனிக் கவனப் பரிநெடுங்கால்**
**மண்துளங் காதே யிருந்தவா!– கொண்டிருந்த**
**பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல**
**வாம்புரவி தாய வகை.**

*அவன் துலா புருடதானம் செய்த சிறப்பைக்கண்டு பாடிய பாடல்:*

**தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத்திடைவண்டு**
**உழுகின்ற தார்க்கண்டன் ஏறிய ஞான்றின் உவமாமதிபோய்**
**விழுகின்ற தொக்கும் ஒருதட்டுக் காலையில் வேலையில்வந்து**
**எழுகின்ற ஞாயிறொத் தான்குல தீபன் எதிர்த்தட்டிலே.**

*இராசராசனுடைய அரசி ஊடலாய்க் கதவடைத்தபோது, இவர் பின்வரும் பாடல் பாடி அவளைச் சமாதானப்படுத்தினார்:*

> கரத்தும் சிரத்தும் களிக்குங் களிறுடைக் கண்டன்வந்தான்,
> இரத்தும், கபாடம் இனித்திறப் பாய்,பண் டிவன் அணங்கே,
> உரத்தும் சிரத்தும் கபாடம் திறந்திட்ட துண்டு, இலங்கா
> புரத்தும் கபாட புரத்தும்கல் யாண புரத்தினுமே.

*இவர் வயோதிகராயிருந்தமையாலும், அரச குடும்பத்துடன் நெடுங்காலமாய்த் தொடர்பு கொண்டிருந்தமையாலும், இவர் உரிமை பாராட்டித் தேவியைச் சாந்தப்படுத்துவது இயல்பே. இராசராசனைக் குறித்த இவ்வரலாறே பிற்காலத்தில், சமயம் விளங்காமையால், கூத்தர் புகழேந்தி போட்டி என்ற பொய்க் கூற்றுக்கு இடங்கொடுத்தது போலும்.*

*இவர் தம்பாலுள்ள தக்க புலமையில்லாக் கவிவாணரைச் சிறையிலிட்டு வைத்து மகா நவமி பூஜை முடித்து மறுநாள் விஜய தசமியில் அவர்களை வருவித்து சில வினாக்களை வினாவித் தகுதியான விடைதராதார் தலையை வெட்டுதல் வழக்கென் பது 'இரண்டொன் றாத்தலை முடிந்து இறங்கப் போட்டு வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை' என்பதனால் விளங்கும். இவர் இராமாயணத்தின் உத்தர காண்டமும், ஈட்டி யெழுபது ஏரெழுபது முதலிய சில நூல்களுஞ் செய்தவர். தெய்வப் புலமையர்.*

> கரண்ட கண்டத்தொனிக் கஞ்சியமான் கருங்கங்குலிலே
> திரண்ட வெள்ளத்துப் பிணமீது சென்றனன் சேர்ந்தவனை
> அரண்ட வின்பங்கொடு மீளக்களம் பற்றவங்கொலுசால்
> குரண்ட கன்னத்திலு தைத்தனன் காணங் குலோத்துங்கனே.

*எனக் கண்டசுத்தி பாடியவர். ஒட்டக்கூத்தர் புன்கவிகளிடத்து இரக்கம் காட்டாதவராதலால் அவர்களுடைய பகைமை அவருக்கு ஏற்பட்டிருந்தது. அதனால் அவருக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்று இராசராசன் அஞ்சியபோது ஒருசமயம் அஞ் சற்க என்று இவர் தேற்றியதாக ஒரு பாடல் உண்டு:*

> பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்படல்பே –
> தாட்டுக் கடற்புலி யஞ்சலன் றோ, அறுத் துக்கிடந்த
> சூட்டுக் கதிர்கள் நிலத்தடங் காமல் தொகுத்துமள்ளர்
> மேட்டுக் குவாலிடும் பொன்னிநன் னாடுடை வேற்கண்டனே.

*இப்பாட்டு, கூத்தர் செய்ததுதானா என்பது ஐயத்திற்கிடமானது.*

புலவர்களின் பிழை பொறுக்காது தண்டம் செய்த இப் பெரும் புலவர், அரசனது சமையல் தொழிலாளி செய்த பிழையைப் பொறுக்குமாறு உணர்த்திய செய்தியும் இங்கு அறியத்தக்கது; அவன் பிழையாவது, அவன் சமைத்த உணவில் மண்ணும் கல்லும் கலந்தமை போலும்:

மீனகம் பற்றிய வேலையும் மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோ?பொருந் தாஅரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள் பற்ற,
வானகம் பற்ற, வடிவேல் விடுத்த மனதுங் கனே.

மற்றொரு சமயம் அவையில் வீற்றிருந்த புலவர், அவை கலைந்த போது தளர்ச்சியுற்ற உடல்நிலையினால், இருக்கையிலிருந்து எழச் சிறிது சிரமப்பட்டார், அரியணையிலிருந்து இறங்கி வந்த இராசராசன், கைகொடுத்து அவரைத் தூக்கிவிட்டான். அவன் செயலால் உளம் உருகிய கூத்தர் பின்வரும் பாடல் பாடினார்:

கொலையைத் தடவிய வைவேல் அரக்கர் குலம்மடியச்
சிலையைத் தடவிய கையே யிது, செக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தஒன்னார்
தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே.*

இராசராசன் 'விழுந்த அரிசமயத்தை மீள எடுத்தான்' என்று அவனுடைய மெய்க்கீர்த்தி கூறுகிறது. தன் தந்தை போலன்றி இவன் சமயப்பொறை உடையவனாயிருந்தான். தந்தை திரு மாலைக் கடலில் போட்டமையால் மனம் வருந்தியிருந்த வைணவருக்கு ஆதரவளித்திருந்தான் போலும். தமிழ் நாவலர் சரிதையானது, 'அரியைப் பாடவேண்டும்' என்று கூத்தரைக் கேட்டதாகவும் கூத்தர் பின்வரும் பாடலைப் பாடியதாகவும் உள்ள வரலாறு இந்த நிலைமையை நமக்கு உணர்த்தும்:

ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினும் அவ்விடத்துன்
பேரே வரும், என்ன பேறுபெற் றேன், பெரு நான்மறையின்
வேரே, மிதிலையின் மின்னுட னேவெய்ய கான்நடந்த
காரே, கடல் கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.

---

* இதனோடு, சேரமான் செல்வக் கடுங்கோ ஆழியாதன் கபிலர் கைப்பற்றி, 'மெல்லியவாமால் நும் கை' எனக் கபிலர் பாடியது என வரும் 'கடுங்கண்ண கொல் களிற்றால்' என்ற புறம் 14ஆம் பாடல் ஒப்பு நோக்கத்தக்கது.

ஒட்டக்கூத்தர் காலத்துப் புலவர்கள் நெற்குன்றவாணர், நம்பி காளி, தண்டியலங்கார ஆசிரியர் என்போர். புகழேந்தி இவர் காலத்தவர் என்பது பிழை. அன்றி, சேக்கிழார் இதே காலத்திலிருந்தவர் என்பதில் ஆட்சேபம் இருக்க முடியாது.

இரண்டாம் குலோத்துங்கன் சேக்கிழாருக்கும் ஒட்டக் கூத்தருக்கும் அதரவு அளித்திருக்கிறான். சேக்கிழாரை அவன் அழைத்து அமைச்சராக்கியதோடு ஞானமார்க்கத்தில் தனக்கு ஆசாரியராகவும் வழிகாட்டுபவராகவும் கொண்டான். கூத்தர் அவனுடைய அவைக் களப்புலவர். இவருடைய நிலைகளும் வெவ்வேறானவை. 'சேக்கிழாரை ஆதரித்தான், ஆகவே கூத்தருக்கு ஆதரவு அளிக்க மாட்டான். அல்லது ஒருவர் இருக்கும்போது மற்றொருவர் எதற்கு?' என்ற கேள்விகளுக்கு இடமில்லை. அரசனுடைய அவையில் புலவர் பலர் இருந்தமை இயல்பே. பலரும் பல்வேறு துறைக்குரியவராயிருப்பர். இரண்டாம் இராசராசன் கேசவசுவாமி என்ற வடமொழிப் புலவரைத் தன் அரசியல் அதிகாரியாகக் கொண்டு, அவரைக் கொண்டு ஒரு வடமொழி அகராதியையும் எழுதிவைத்தான் என்று அறிகிறோம். அங்ஙனமே குலோத்துங்கன் அவையில் சேக்கிழார் அமைச்சராக இருந்து திருத்தொண்டர் புராணம் பாடினார். ஞான மார்க்கத்தில் இவர் உதவியதுபோல, கூத்தர் உலகியல் மார்க் கத்தில் உதவியிருக்கிறார்.

கம்பர் அவ்வையார் முதலியோரும் ஒட்டக்கூத்தர் காலத் தவர் என்று ஆதாரமற்ற கட்டுக்கதைகள் வழங்குகின்றன. கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். காலத்தால் மிக முற் பட்டவர். மேலும், உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடியதே என்று கொள்வோமாயின், அதனுள் கம்பராமாயணத்தின் தொடர்கள் நிரம்ப உள்ளன. இவற்றால் கூத்தர் கம்பருக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்டவர், இருவரும் சமகாலத்தவர் அல்லர் என்பதைத் தெளிவாகச் சொல்லலாம். அவ்வையார் பற்றிய தொடர்பும் நம்பத் தகுந்ததன்று. 12ஆம் நூற்றாண்டில் ஓர் அவ்வையார் வாழ்ந்தார் என்பது உண்மை. அவர் சிறு நீதி நூல்கள் பல பாடினார். ஆனால் ஒட்டக்கூத்தருக்கும் புக ழேந்திக்கும், அவர் ஒரு வரியில் மூன்று சந்திரன் வருமாறு பாடுவதாகிய கவிதைப் போட்டி நடத்தினார், அதில் கூத்தர்

இரண்டு மதி மட்டும் வரும்படி பாடியதால் 'ஒட்டா ஒரு மதி கெட்டாய்' என்றெல்லாம் அவ்வை அவரைப் பழித்துப் பாடினார் என்னும் கதைகள் யாவும், பிற்காலத்தில் வந்த கீழ்த்தரமான போலிக்கதைகள்.

கூத்தர் காலத்தில் சோமன் என்ற வள்ளல் திரிபுவனத்தில் வாழ்ந்து வந்தான். அவன் கூத்தருக்கு நண்பன். கூத்தர் எப்போதும் பிறர் பிழைபொறுக்க மாட்டாராதலால், இவருக்குப் பகைவர் பலர் தோன்றியிருந்தமை இயல்பே. அத்தகையோர் சிலர் ஒரு சமயம் இவரைத் தொடர்ந்து துரத்தி வந்தபோது, இவர் பக்கத்திலிருந்து சோமன் இல்லத்துக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டு பின்வரும் பாடல் பாடினார்:

அடையென்பார், தள்ளென்பார், அன்பொன்றில் லாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேம் – கொடையென்றால்
முந்துஞ்சோ மா,புவனை முன்னவனே, நின்கடைக்கீழ்
வந்துய்ஞ்சோம் ஆதலான் மற்று.

இவ்வாறு சோமனுடைய ஆதரவைப் பலமுறை பெற்றவராதலால், பின்னொரு சமயம் அரசனைக் காணவேண்டி, சோமன் வந்து எந்நேரம் காணலாமென்று கேட்டபோது, அங்கு வந்திருந்த கூத்தர் சோமனுடைய பெருமை தோன்றவும், உயர்வு நவிற்சியும் நகைச்சுவையும் கலந்தும், பின்வரும் பாடல் பாடினார்:

தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் தானுரைப்பது
உன்னுடைய கீர்த்தி உயர்நலமே – துன்னுபுகழ்ச்
சோமா, திரிபுவனத் தோன்றலே, நின்புகழை
யாமோ உரைக்க இனி?

இவ்வரலாற்றை வேறுவிதமாகச் சொல்வதும் உண்டு.

புலமையில் அக்காலக் கவிஞருள் கூத்தர் மிகச் சிறந்து விளங்கியமையினால் கவிச்சக்கரவர்த்தி எனப் பெயர்பெற்றார். தமிழ் இலக்கிய மரபில் சக்கரவர்த்திப் பட்டம் பெற்றோர் சிலரே: கம்பர், சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர். இவருக்குக் கௌடப்புலவர் என்ற பெயரும் வழங்கும்; காரணம் உலக இயல்பைக் கடந்த வருணனை அமைப்பதால் இப்பெயர்.

கௌடம் என்பது 'செறிவு முதலிய வைதருப்ப நெறிக்குரிய குணங்கள் நிரம்பி வராமல் சொற்பெருகத் தொடுக்கும் செய்யுள் நெறி' என்பது தண்டியலங்கார உரை. அடுத்து, சோழமண்டல சதக மேற்கோள் பாடலொன்று இவரைக் கவிராட்சதர் என்று கூறும்:

> புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்கு
> உதவித் தொழில்புரி ஒட்டக் கூத்தனைக்
> கவிக்களி றுகைக்கும் கவிராட் சதனெனப்
> புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
> வேறுமங் கலநாள் வியந்து காங்கயன்மேற்
> கூறு நாலாயிரக் கோவைகொண் டுயர்ந்தோன்.

கவிராட்சதன் என்பது அவ்வளவு பெருமைப்படத்தக்க பட்டமாய்த் தெரியவில்லை. அரசனிடம் காளம் என்ற விருது பெற்றமையால் காளக்கவி எனப்படுவார். பல மொழிகளும் நன்கறிந்து எல்லாப் பொருள்களையும் எளிதில் பாடும் ஆற்றல் பெற்றிருந்தமையால், சர்வஞ்ஞ கவி என்றும் பெயர் பெற்றார். உதாரணமாக, தக்கயாகப்பரணியில் இவர் கூறுவனவற்றை நோக்கும்போது, இவருக்குள்ள யாமள நூற் பயிற்சி நன்கு புலப்படும்.

'காசுக்குக் கம்பன்' என்ற பழம்பாடல், 'தேசு பெறும் ஊழுக்குக் கூத்தன்' என்று கூறுதல் கருதத்தக்கது. கூத்தர் சொல், வாழ்த்தாயினும் சாபமாயினும், ஊழ்வலி போலத் தப்பாது பயன் தந்தமையால், இச்சொல் எழுந்தது போலும்.

இப்புலவருடைய சிறப்பு, ஏனையோர் போலன்றி இளமையிலிருந்தே இவர் திருமகளின் அருளும் பெற்றிருந்தமையாகும். சோழமன்னரன்றி அவருடைய படைத்தலைவரனைவரும் இவரைப் பெரிதும் போற்றியிருக்கிறார்கள். இவருடைய பெருமை காரணமாக இவரைக் குறித்த போலிக்கதைகள் மிகுந்தன. கதைகளை மட்டும் காண்போர் இவருடைய பெருமையை உணரமாட்டார்.

### தனிப்பாடல்கள்

சோழர் ஆதரவில் நீண்டகாலம் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் சமயம் நேர்ந்தபோதெல்லாம் தனிப்பாடல்கள் பல பாடியிருப்

பார். அவற்றுள் சந்தர்ப்பம் தெரியவந்தவை முன்னே அவர் வரலாற்றில் தரப்பட்டன. பின்னும் சில தனிப்பாடல்கள் உள்ளன. அவற்றை இனிக் காண்போம். ஒன்று, திருநெய்த்தானத்துச் சிவபெருமானை ஒட்டக்கூத்தர் சேவித்தபோது பாடியது:

விக்கா வுக்கா வித்தா விப்போய்
    விட்டா னட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
    இற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்காடப் பேய் தொக்கா டச்சூ
    ழுப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்போம்
    நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

கூத்தர் விக்கிரம சோழனைக் குறித்துப் பாடிய ஒரு தனிப்பாடல் முன்னமே தரப்பட்டது. ஏட்டுப் பிரதிகளில் அவர் பாடியன என்று கருதத்தக்க சுவைமிக்க தனிப்பாடல்கள் கிடைக்கின்றன. பின்வரும் பாடல்கள் அத்தகையவை.

தண்டாமரை தருநாண்மலர் மீதோதிம மீனத்
    தரளத்திரள் பவளத்திரள் என்றேழையர் தங்கைக்
கொண்டாடிட முன்னைக்கிது பின்னைத்தரு செம்மைக்
    குணநான்மடி யுளதாகிய குடகாவிரி நாடா!
பண்டாலிலை அமளித்துயில் குழவிப்பரு வத்தே
    பவ்வத்தொடும் உலகைச்சிறு பவளத்துவர் வாயால்
உண்டாய், அக ளங்கா! நிக ளங்காய்கரி தொழுதாள்,
    உய்யத்திரு வுளமோ, எது செய்யத்திரு வுளமோ?

செய்யோனக ளங்கன்வள வன்சோழ குலேசன்
    சென்னிக்குல தீபன்னுயர் பொன்னித்திரு நாடன்
பொய்யோடொரு நாளும்முறை செய்யாமனு துங்கன்
    போர்வல்லவன் மல்லைப்பொழில் பொங்குங்குரு கீரே!
ஐயோ, அவ ரைப்போலொரு நிட்டூரரும் உண்டோ?
    அஞ்சம்படு கைக்கே, துயர் நெஞ்சம்படு கைக்கே,
வெய்யோன்விழு கைக்கே, முழு மதிவந்தெழு கைக்கே
    விழிநீர்சொரி கைக்கே, எனை விட்டுப்பிரிந் தாரே.

## சோழர் மூவர் வரலாறு

### விக்கிரம சோழன் (1118 – 35)

இவர் சோழர் மூவரையும் பாடியிருப்பதால் இவ்வரசர் வரலாற்றைச் சுருக்கமாகவேனும் அறிதல், உலாப் பயிற்சிக்குப் பயன்படும். விக்கிரமசோழன், கலிங்கம் வென்று பெரும்புகழும் பரணியும் கொண்ட அபயன் என்னும் முதற்குலோத்துங்க சோழனுடைய புதல்வன். 1118இல் இளவரசனாகி, தந்தை 1120இல் இறக்கவே பட்டமேற்றவன், பரகேசரி என்பது பட்டம். ஆனி உத்திரட்டாதியில் பிறந்தவன். இளமையில் வேங்கி நாட்டில் தந்தையின் பிரதிநிதியாயிருந்து, தென்கலிங்கப் போரில் பங்குகொண்டு புகழ்பெற்றான். இவன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவிற்று. பல கோயில்களுக்குத் திருப்பணி செய்தான். தில்லைச் சிற்றம்பலத்தின் பல பகுதிகளைப் பொன்வேய்ந்தான். திருத்தேருக்கு முத்து வடம் அணிவித்தான். விக்கிரமசோழன் திருமாளிகை, விக்கிரமசோழன் திருவீதி, விக்கிரமசோழன் திருமண்டபம் எனப் பல கோயிற் பகுதிகள் இவன் பெயராலேயே அக்காலத்தில் வழங்கின. காவிரிக்கும் மண்ணியாற்றுக்கும் இடையில் விக்கிரமனாறு என்ற புதிய பாசன ஆறு ஒன்று இவனால் வெட்டப்பெற்றது. படைத்தலைவன், அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காலிங்கராயன், தலைநகர் கங்கைகொண்டசோழபுரம். பழையாறை என்ற முடிகொண்ட சோழபுரம், தில்லை, காட்டுமன்னார்கோயில் முதலியனவும் அரசர் பேரூர்கள். இவன் ஒட்டக்கூத்தருடைய இளம் பருவத்தில் அவருடைய தகுதியறிந்து அவரைத் தனது அவைப்புலவராக்கிச் சிறப்பித்தான். அவர் இவன் செய்த நன்றியை மனத்தில் கொண்டு உலாவிலும் பிற இடங்களிலும் இவனைப் புகழ்ந்து இருக்கின்றார். அன்றியும் தென்கலிங்க வெற்றியில் இவன் கொண்ட பங்கைப் பாராட்டி இவன்மீது வேறொரு கலிங்கத்துப் பரணியும் பாடினார். (அப்பரணி இன்று இல்லை.) அகளங்கன், தியாகசமுத்திரம் என்பன இவனுக்குரிய சிறப்புப் பெயர்கள். இவன் மனைவியர் மூவர்; புதல்வனே அடுத்துப் பட்டமேற்ற இரண்டாம் குலோத்துங்கன். கலிங்கம் வென்ற கருணாகரத் தொண்டைமான், முனையர்கோன், மணவிற்கூத்தன், முற்கூறிய காலிங்கராயன் முதலியோர் இவனுடைய படைத்தலைவர். ஆந்திர நாட்டில் பல பகுதியினர் இவனுக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசராய் இருந்தனர்.

*பூமாலை மிடைந்து, பூமாது புணர என்னும் இருமெய்க் கீர்த்திகள் இவனுக்குரியன. பின்வரும் தனிப்பாடல் இவனைப் புகழும் அழகிய பாடல்களில் ஒன்று; கூத்தரே பாடியும் இருக்கலாம்:*

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத்துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறாமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ?
அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்டு
அகலா நிற்கும் அகளங்கா!
திடமுக் கடவா ரணமுகைத்த
தேவே, சோழ சிங்கமே!
திக்கு விசயஞ் செலுத்தியொரு
செங்கோல் நடாத்தும் எங்கோவே.

## *இரண்டாம் குலோத்துங்க சோழன் (1133 – 50)*

*இவன் 1133இல் இளவரசுப்பதவி பெற்று, தந்தை இறந்ததும் 1135இல் இராசகேசரி என்று பட்டம் பூண்டு மகுடம் சூடினான். இவனுடைய சிறப்பான மெய்க்கீர்த்திகள் பன்னிரண்டு உள்ளன. இவன் ஆட்சியில் போர்கள் இல்லை. எங்கும் அமைதி நிலவிற்று. தில்லையில் திருப்பணிகள் பல செய்தான். நடராசப் பெருமான் திருவடித்தாமரையிலுள்ள தேனைப் பருகும் வண்டு போன்றவன் என்று இவனைத் திருவாரூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது. சிவகாமியம்மை கோட்டத்தைப் பெரிதாகக் கட்டியது இவனுடைய அருஞ் செயல்களில் ஒன்று. திருக்குளம் அழகுற அமைத்தான், நகரைப் பெரிதாக ஆக்கினான். திருமாலை இவன் கடலில் பெயர்த்துப் போட்டான் என்பது ஒட்டக்கூத்தர் கூறும் செய்தி. தொடக்கத்தில் தில்லைத் திருச்சித்திர கூடம், நடராசர் சந்நிதி எதிரில் திருச்சுற்றில் இருந்ததில்லை; எட்டாம்*

நூற்றாண்டில்தான் நந்திவர்ம (2) பல்லவ மன்னனால்* வெளிச் சுற்றிலிருந்த இங்கு கொணர்ந்து பிரதிட்டை செய்யப்பெற்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தில்லையில் இரண்டாம் குலோத்துங்கன் கணக்கற்ற திருப்பணிகள் செய்தகாலத்து, அங்கு வழிபட்டுவந்த வைணவர் சிறு குறும்பு பல செய்தனர் என்பதும், அதனால் கோபமடைந்த சோழன் திருமாலைப் பெயர்த்துக் கடலிற் போடச் செய்தான் என்பதும் உண்மையா யிருக்கலாம். வேங்கிநாடு இவன் கீழ் இருந்தது. இவன் கலைத் தேர்ச்சி நிரம்பியவன் ஒட்டக்கூத்தர் இவனுக்கு ஆசிரியராயும் அவைப்புலவராயும் இருந்தார். இவன் இளவரசாயிருந்த போது இவன்மீது உலாவும் பிள்ளைத்தமிழும் பாடினார். இவ னுடைய பல்கலைப் புலமையைப் பெரிதும் போற்றிப் பாடி யிருக்கிறார். தண்டி ஆசிரியர் மற்றொரு புலவர். சேக்கிழார் இவன் காலத்தில் வாழ்ந்து பெரியபுராணம் பாடினார். இவன் செய்த தில்லைத் திருப்பணிகளை நோக்கும்போது, இவனே சேக்கிழாரைக் கொண்டு பெரியபுராணம் பாடுவித்தவன் என்று உறுதியாகக் கூறமுடியும். தலைநகர் கங்கைகொண்ட சோழபுரம். இவனது இயற்பெயர் எதிரிலாப் பெருமாள்; சிறப்புப்பெயர் அனபாயன், திருநீற்றுச் சோழன். இவனுடைய திருமந்திர வோலை, மூவேந்தவேளான், அனபாய நல்லூர் என்ற ஊர்ப் பெயரும் இவனால் புதுப்பிக்கப்பட்டது. மனைவியர் இருவர். பல்லவர் குலத்தில் வந்த ஒரு தலைவன் இவன் கீழ்த் திருமாணி குழிப்பக்கம் வாழ்ந்து, குலோத்துங்க சோழக் காடவராயன் என்ற பெயர் பூண்டிருந்தான். அவன் பரம்பரை பின்னால் மூன்றாம் குலோத்துங்கனிடத்தும் சிறப்புப் பெற்றிருந்தது. (அடுத்த நூற்றாண்டில் இப்பரம்பரையில் தோன்றிய கோப் பெருஞ்சிங்கன் என்ற காடவனே சோழர் வீழ்ச்சிக்குக் காரண மாயிருந்தவன்.) இவன் காலத்தில் வாழ்ந்த ஒரு சீயகங்கன் பரம் பரையில் வந்த மற்றொரு சீயகங்கனே அடுத்த நூற்றாண்டில் நன்னூல் பாடுவித்தவன்.

### இரண்டாம் இராசராச சோழன் (1146 – 1163)

தந்தை இறக்கவும் இவன் பரகேசரி இராசராசன் என்ற பட்டம் புனைந்து 1150இல் முடிசூடினான். இவனுக்கும் பல மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன.

---

* சதாசிவ பண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம், இரண்டாம் பகுதி 1951, பக்கம் 94.

இவன் ஆட்சிக் காலத்தில் போர் நிகழ்ச்சியில்லை. இவன்,

தந்தை யில்லோர்க்குத் தந்தை யாகியும்
தாயில் லோர்க்குத் தாயாகியும்
மைந்தரில் லோர்க்கு மைந்த ராகியும்
மன்னுயிர்கட் குயிராகியும்.

ஆட்சி புரிந்தான். முத்தமிழ்த் தலைவன், வடமொழியிலும் பண்டிதன், இராசபண்டிதன் என்று வழங்கப்பெற்றான். இவன் காலத்தில் ஒட்டக்கூத்தர் வயது முதிர்ந்த புலவராய் இவனால் பெருமதிப்புப் பெற்றிருந்தார். சேரனோடும் பாண்டியனோடும் சிறு போர்கள் நிகழ்த்தினான் போலும். மலையை வெட்டிக் காவிரிக்கு வழிகண்டான். இச்செய்தியைப் பாடல்கள் கூறுகின்றன:

மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாளென்ன வந்தே.

என்பது தக்கயாகப்பரணி (549).

சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வாள்காண வாரீர். **கண்ணி 85**

என்பது இராசராசன் உலா.

தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை மேற்கோளொன்றும் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது (பொருள். 91):

மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்.

தலைநகர் கங்கைகொண்டசோழபுரம், பழையாறையை மற்றொரு தலைநகராகக் கொண்டு அதற்கு இராசராசபுரம் என்றும் பெயரிட்டிருந்தான். இது மிகவும் பெரிய நகரம். பத்து மைலுக்கு மேல் நீள அகலம் உடையதாயிருந்தது. அந்நகரின் வடகீழ்ப் பகுதியில், இப்போது தாராசுரம் என வழங்கும் பகுதியில் தன் பெயரால் இராசராசேச்சுரம் என்ற ஒரு பெருஞ் சிவாலயம் அமைத்தான். இச்சிவாலயம் இன்று தன் பழஞ் சிறப்புக்கள் பலவும் அழிந்த நிலையிலுங்கூட, சிற்பச் சிறப்பு வாய்ந்த ஒரு பெருங்கோயிலாகவே திகழ்கிறது; அறுபத்து மூன்று நாயன்மார் உருவங்களும் நூற்றெட்டு சிவாசாரியர்

உருவங்களும் சிறப்புடையவை. ஒட்டக்கூத்தர் இவன் மீது ஓர் உலாப் பாடியிருக்கிறார். (ஒரு கோவை பாடியிருத்தலும் கூடுமென்பது பின்னால் சொல்லப்படும்.) கேசவசுவாமி என்பவரைக் கொண்டு நாநார்த்தார்ணவ சம்க்ஷேபம் என்ற வடமொழி அகராதியொன்றும் இவன் எழுதுவித்தான். இவனுடைய சிறப்புப் பெயர்களில் முக்கியமானது கண்டன்; மற்றொன்று இராசகம்பீரன். இவன் மனைவியர் நால்வர். திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவதரையர் இவ்வரசனுடைய படைத் தலைவர்களுள் சிறப்பானவர். இவன் தன் இறுதி நாட்களில் பழையாறை அரண்மனையில் நோய்ப்பட்டிருந்தபோது, இவனுக்குச் சந்ததியில்லாமையால், விக்கிரம சோழன் மகள் ஆளுடையநாச்சியின் பேரப்பிள்ளைகள் இருவர் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்தோரை இவர் வாழ்ந்த குளத்தூரில் (இன்று பல்லவராயன்பேட்டை என வழங்குவது) கொண்டு வந்து பாதுகாப்பாக வைத்திருந்து, அரசன் இறக்கச் சிலநாள் முன்பு பழையாறைக்குக் கொண்டு போய், மூத்தவனை இரண்டாம் இராசாதிராசன் என்ற பெயரால் மகுடாபிஷேகம் செய்வித்தார். இன்றுள்ள பல்லவராயன் பேட்டைக் கோயில் இப்பெருமான் நம்பியால், தம் அரசனான இரண்டாம் இராசராசன் பெயரால் இராசராசேச்சுரம் என்று கட்டப்பட்டது.

## ஒட்டக்கூத்தர் நூல்கள்

'கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்' என்று பாடலில் புகழப்பெற்றவர் நம் புலவர். இதை ஊன்றிப் பார்த்தால் இந்தப் பிரபந்தங்கள் பல இவர் செய்திருக்க வேண்டும். ஆனால் உலா தவிர, கோவை அந்தாதி இவர் செய்தனவாக இன்று கிடைக்கவில்லை. நாலாயிரக்கோவை இவர் செய்தார் என்பர்; ஆனால் நூல் இல்லை. இவர் செய்த நூல்கள், செய்து கிடைக்காத நூல்கள், இவர் செய்தவை என்று கருதத்தக்க பிற நூல்கள் ஆகியவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

### கிடைக்கிற நூல்கள்

விக்கிரம சோழன் உலா, குலோத்துங்கசோழன் உலா, குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், இராசராசசோழன் உலா, தக்கயாகப்பரணி; இராமாயண உத்தரகாண்டம்.

### கிடைக்காத நூல்கள்

விக்கிரமன் மீது பாடிய கலிங்கத்துப்பரணி, அரும்பை தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக்கோவை, எதிர்நூல்.

இவர் பாடி இருக்கலாம் என்று கருதத்தக்க நூல்கள் கண்டன் கோவை, கண்டன் அலங்காரம், தில்லை உலா.

இவர் பாடாமல் இவர் பெயரால் வழங்கும் நூல்கள் ஈட்டி எழுபது முதலாயின.

ஒரு காலத்தில் குலோத்துங்கசோழன் கோவை இவர் பாடியது என்று தவறாகக் கருதினர். ஆனால் இக்குலோத்துங்கன் காலத்தால் பிற்பட்ட மூன்றாம் குலோத்துங்கன் ஆதலால். அந்நூல் இவர் பாடியதன்று என்பது தெளிவாக்கப்பட்டது*. செங்குந்தர் பிரபந்தத்திரட்டு பதிப்பித்தவர், சரசுவதி அந்தாதியும் இவர் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார், அது பிழை, அபிமானத்தால் விளைந்த கருத்து. அவ்வந்தாதி, கம்பர் பாடியதாக வழங்கும்.

கம்பர் ஒட்டக்கூத்தர் இருவருமே நாமகளை வழிபட்டு அருள் பெற்றார்கள் என்பது வரலாறு. சரசுவதி அந்தாதி, இராமாயணம் பாடிய கம்பருக்குத் தொடர்புடையதன்று. அவருக்குப் பின்னால் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் கம்பர் செய்ததென்பது வேறிடத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இனி மேற்குறித்த நூல்களை இயன்றவரை ஆராய்ந்து கூறுவோம்.

### கோவை

நாலாயிரக் கோவை இவர் செய்ததாகச் சொல்வர். இராசராசன்மீது கண்டன் கோவையும் செய்திருக்கக் கூடும். ஆனால் இரு நூல்களும் இல்லை. உலா: சோழர் மூவர் மீதும் மூவர் உலா; மற்றும் தில்லை உலா இவர் செய்திருக்கக் கூடும். மூவர் உலாக்கள் அச்சில் உள்ளன. தில்லை உலாவின் இறுதிப் பகுதி மட்டும் கிடைக்கவில்லை. அந்தாதி: இவர் செய்ததாக எந்த அந்தாதியும் கிடைக்கவில்லை.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு பார்க்க.

## மூவருலா

விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசசோழன் ஆகிய மூன்று அரசர் காலத்திலும் அவர்களால் பெரிதும் போற்றப்பெற்று வாழ்ந்தவர் ஒட்டக்கூத்தர்; விக்கிரமனுக்கு அவைப்புலவர் தலைவராகவும் (ஆஸ்தான பண்டிதர்), அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும், அவன் மகன் இரண்டாம் இராசராசனுக்கு, முதுமையடைந்த அவைப் பெரும்புலவராயும் இவர் விளங்கியிருந்தார். மூவரையும் சிறப்பித்துப் பல பிரபந்தங்கள் பாடினார் என்று கருத இடமுண்டு. இவை யாவும் இன்று கிடைக்கவில்லை; எனினும், மூவர் மீதும் பாடிய மூன்று தனியான உலாப் பிரபந்தங்கள் கிடைக்கின்றன. அவற்றை இங்கு ஆராய்தல் பொருந்தும். இந்த மூன்று உலாக்களையும் 'கூத்தன் நிகழ்த்த ஒரு மூன்று - உலாக் கொண்டான் போந்தான் உலா' என்ற வரிகளில் சங்கர சோழன் உலா குறிப்பிடுகிறது.

ஒட்டக்கூத்தர் பாடிய மூன்று உலாக்களும் முறையாகத் திருமால் தொடங்கி அவ்வச்சோழன் வரையிலுள்ள சோழர் அரச பாரம்பரியத்தைச் சொல்லுகின்றன. இவை அன்றி, முன்னதாகத் தோன்றிய கலிங்கத்துப்பரணியும் பின்வந்த (13ஆம் நூற்றாண்டு) சங்கரசோழன் உலாவும் இப்பாரம்பரியத்தை முறையாகச் சொல்லுகின்றன. இவை கூறும் மரபு முறையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில கருத்துக்கள் எழுகின்றன. இதற்குப் பயன்படும் பொருட்டு அவ்வைந்து நூல்களிலும் கண்ட செய்திகளைக் கீழே ஓர் அட்டவணையாகத் தருகிறோம். நூலில் குறிப்பிட்ட எண் கண்ணி எண் ஆகும். இவை பற்றிய விளக்கங்களையும் ஆங்காங்கு குறிப்பிடுகிறோம்.

ஐந்து நூல்களை இங்கு ஒப்பு நோக்கியிருக்கிறோம். ஐந்தையும் ஆயும்போது, ஒருண்மை புலப்படுகிறது.

முதலாவது நூலாகிய கலிங்கத்துப் பரணியில்கூட, ஐதிகக் கதைகள் அதிகம் காணப்படுகின்றன. சோழர் சூரிய குலத்தார் என்ற கருத்துக்குப் பொருந்த, சூரிய குலத்துப் பண்டைய மன்னர் பலருடைய செய்திகள் இங்கு சோழர் பரம்பரைக்கு

உரியவையாகவும், அம்மன்னரே சோழர் முன்னோராகவும் சொல்லப்பட்டிருக்கக் காணலாம். பரம்பரை திருமாலில் தொடங்குகிறது. பிரமன், மரீசி, காசியபன், சூரியன், இக்குவாகு, மாந்தாதா, பகீரதன், திலீபன், ரகு, தசரதன், இராமன், சித்திர ரதன், பஞ்சபன், உபரிசரன் முதலான பல இதிகாச மன்னர் இங்கு சொல்லப்பட்டுள்ளனர். இவர் விக்கிரம சோழன் உலா வில் சொல்லப்படவில்லை. ஆனால் குலோத்துங்க சோழன் உலாவிலும் இராசராசன் உலாவிலும் இவருட் சிலர் காணப் படுவதோடன்றி, அங்கு அரிச்சந்திரன், சகரன் முதலியோர் வரலாறுகளும் காணப்படுகின்றன. இவற்றால் ஒரு கருத்துச் சொல்லத் தோன்றுகிறது. விக்கிரமனால் அவைப் புலவராக்கிப் பெருமைபெற்ற ஒட்டக்கூத்தர், அம்மன்னன்மீது உலாப் பாடிய போது, மிக்க அடக்கத்தோடு, வரலாற்றை நன்குணர்ந்து, இயன்ற வரை வரலாற்றுக்குப் பொருந்தச் செய்திகளை அமைத்துப் பாடினார். குலோத்துங்கசோழன் காலத்தில் இவருக்குச் செல்வாக்கும் மதிப்பும் உயர்ந்து விட்டன. அன்றியும், சோழ மன்னரிடத்து நன்றி உணர்வு பின்னும் அதிகமாகி, வரலாற் றோடு புராணக் கதைகளையும் அதிகம் புனைந்து கூறுமாறு செய்திருக்கிறது. இந்த இயல்பைப் பிந்திய இரு உலாக்களிலும் காண்கிறோம். ஆனால் பின்னர் ஒரு நூற்றாண்டு கழித்து, மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய தம்பியாய், பட்டத்துக்கு வராத சங்கர சோழன்மீது உலாப் பாடவந்த பெயர் தெரியாத புலவர், இந்தப் பழங்கதைகளைக் கூடியவரை ஒதுக்கிவிட்டு, முழுமையும் வரிக்கு வரி விக்கிரமசோழன் உலாவையே பின் பற்றிப் பாடியிருக்கிறார். காலத்தால் அவருக்கு அதிகம் நெருங்கி யுள்ள குலோத்துங்க சோழன் மீதும் இராசராசன் மீதும் பாடப் பெற்ற உலாக்களை விடுத்து, காலத்தால் முந்திய விக்கிரம சோழன் மீது பாடப்பெற்ற உலாவைத் தமக்கு முன், மாதிரியாக வைத்து அவர் பாடியிருக்கிறார். இங்கே காட்டியுள்ள அட்ட வணையில் விக்கிரமசோழன் உலா, சங்கரசோழன் உலா என்ற இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கண்ணிக்குக் கண்ணி அவர் விக்கிரமன் உலாவைத் தழுவிப் பாடியிருப்பது தெளிவாகும். வரலாறு அறிந்த விசயாலயன் முதல் விக்கிரம சோழன் வரையில் இந்த இரண்டு நூல்களுக்கும் கண்ணி எண் ணும், பொருளும் ஒன்றாகவே இருக்கின்றன. இவர் நூல் செய்த காலம் 1215; விக்கிரமன் காலம் 1118 - 35.

**சோழர் இராச பாரம்பரியம் - உலாக்கள்**

| எண் | பெயர் | விளக்கம் | கலிங்கத்துப் பரணி | விக்கிரம சோழன் உலா | குலோத்துங்கன் உலா | இராசராசன் உலா | சங்கர சோழன் உலா |
|---|---|---|---|---|---|---|---|
| | புராணகாலச் சோழர் | | | | | | |
| 1 | திருமால் | ஆதிமால் | 187 | 1 | - | 1 | - |
| 2 | பிரமன் | மால் அமல நாப்பிக்கமலத்து அயன் உதித்து | 187 | 2 | - | 1 | - |
| 3 | மரீசி | அயன் மரீசி எனும் அண்ணலை அளித்த பரிசு | 187 | 3 | - | - | - |
| 4 | காசிபன் | மரீசி மகனாகி வளரும் காசிபன் | 187 | 2 | - | 2 | - |
| 5 | சூரியன் | காசிபன் கதிர் அருக்கனை அளித்த பரிசு | 187 | 3 | 1 | 2 | 3 |
| 6 | மனுநீதிச் சோழன் | தேரில் மைந்தனை யூர்ந்த மறவோன் | 188 | 4 | 2 | 3 | 3 |
| 7 | இக்குவாகு | இக்குவாகு இவன் மைந்தன் என வந்த பரிசு | 188 | - | - | - | - |
| 8 | - | அவனிபுறவாழி முட்டப்புரந்தோன் | - | - | - | 3 | - |
| 9 | அரிச்சந்திரன் | பூவிற் கிழத்தியையும் பூமிக் கிழத்தியையும் நாவிற் பழுதஞ்சி நல்கினோன் | - | - | - | 4 | - |
| 10 | மாந்தாதா | புலியும் மானும் ஒக்க உண்ணவைத்த உரவோன் | 190 | 5 | 7 | 5 | 4 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | சகரன் | கடலேழும் தன் பெயரேயாகத் துரங்கப் பசு நாடித் தொட்டோன் | - | - | - | 7 | - |
| 12 | முசுகுந்தன் | மாகவிமானந் தனியூர்ந்த மன்னவன் | 190 | 6 | 4 | - | 4 |
| 13 | சுகுத்தன் (புரஞ்சயன்) | எயில்காத்த நேமி இறையோன் புரந்தரனூர் புரந்த வேந்தன் | 189 | 6 | 3 | 10 | 5 |
| 14 | திலீபன் | வானவர்கோன் ஆசனத்தில் உடனிருந்தோன் | - | - | 5 | - | - |
| 15 | பகீரதன் | மந்தாகினி கொணர்ந்த மன்னர்கோன் | - | - | 8 | 8 | - |
| 16 | ரகு | ரகுவின் மரபென்று சொல்ல உலகளித்தோன் | - | - | - | 9 | - |
| 17 | தசரதன் | ஈரைவர் போர் ஒரு தேரால் வென்ற உரவோன் | - | - | 9 | 11 | - |
| 18 | இராமன் | திரையைச் சிலையால் வழிபட வைத்தோன் | - | - | 10 | 12 | - |
| 19 | பெருநற்கிள்ளி | கூற்றுக்கு ஒக்க வழக்குரைத்தோன் | 193 | 7 | 6 | - | 5 |
| 20 | சுரகுரு (நாபாகன்) | முதுமக்கட்சாடி வகுத்தோன் | 193 | 8 | 12 | - | 6 |
| 21 | சித்திரரதன் | புலி எனக் கொடியில் இந்திரனை வைத்தவன் | 194 | - | - | - | - |
| 22 | பஞ்சபன் | குருதி உண்க என யட்சருக்கு அளித்தவன் | 194 | - | - | - | - |
| 23 | - | வாதராசனை வலிந்து பணிகொண்டவன் | 194 | - | - | - | - |
| 24 | செம்பியன் | தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் | 195 | 9 | 13 | 13 | 7 |
| 25 | சமுத்திரசித்து (சங்கர்ஷணன்) | மேல்கடல் கீழ்கடல் விட்டோன் | 194 | 9 | 14 | 14 | 8 |
| 26 | உபரிசரன் | விமானமது வானமிசை ஊர்ந்தவன் | 195 | - | - | - | - |

| எண் | பெயர் | விளக்கம் | கலிங்கத்துப் பரணி | விக்கிரம சோழன் உலா | குலோத்துங்கன் உலா | இராசராசன் உலா | சங்கர சோழன் உலா |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | - | பாரதம் முடிப்பளவும் தருமன் படைக்குச் சோறளித்தன் | 195 | - | - | - | - |
| 28 | கிள்ளிவளவன் (சாலீசுகன்) | உரகர்மணி கொண்டவன், நாக கன்னிகையை மணந்தவன் | 196 | 10 | 19 | 16 | 8 |
| 29 | - | பாட்டுக்கு நூறாயிரம் பொன் ஈந்தோன் | - | - | - | - | 9 |
| 30 | கரிகாலன் I | பட்டினப்பாலை கொண்டு பதினாறு கோடி பொன் ஈந்தோன் | - | - | - | 17 | 10 |
| 31 | சிபி | புறவுக்காக நிறை புக்க பிரான் | 191 | 11 | 17 | 6 | 11 |
| 32 | சிவுகன் | ஆறு கண்ட திறலோன் | - | 12 | 15 | 15 | 12 |
| 33 | பிருது | வில்லால் நடுவுள்ள வெற்பெடுத்தோன் | 191 | - | 16 | - | - |
| 34 | கரிகாலன் II | காவிரிக் கரை கண்டான் | 188 | 13 | 18 | - | 13 |
| 35 | கோச்செங்கணான் | களவழிப்பாடல் கேட்டுச் சேரன் தளை களைந்தான் | 196 | 14 | 20 | 18 | 14 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **வரலாற்றுச் சோழர்** | | | | | | |
| 1 | விசயலயன் (சுராதிராசன்) | தொண்ணூறு மாறும் பூணாகப் புண் சுமந்தவன் | 192 | 15 | 21 | 19 | 15 |
| 2 | பராந்தகன் I (இருமடிச் சோழன்) | அரக்கன் அகலம் பிளந்து திருத்தில்லை பார்த்தோன், திருமன்றம் ஆடகத்தால் வேய்ந்த அபயன் | 201 | 16 | 22 | 20 | 16 |
| 3 | இராசராசன் I | கேரள நாடு சிந்தினவன் | 202 | 17 | 23-24 | 21 | 17 |
| 4 | இராசேந்திரன் I | கடாரமும் கொப்பமும் கொண்டவன் | 203 | 18 | 25 | 22 | 18 |
| 5 | இராசாதிராசன் | கல்யாணம் அட்ட தனிக் காவலன் | 204 | 19 | - | 23 | 19 |
| 6 | இராசேந்திரன் II | கொப்பத்து யானை ஆயிரம் கொண்டோன் | 205 | 20 | - | 24 | 20 |
| 7 | இராசமகேந்திரன் | கருமுகிற்கு மாணிக்கப் பாப்பணை செய்தோன் | 206 | 21 | - | - | 21 |
| 8 | வீரராசேந்திரன் | கூடலார் சங்கமத்துப் போர் வென்று பரணிகொண்டான் | 207 | 22 | - | 25 | 22 |
| 9 | அதிராசேந்திரன் | அங்கவன் பின் அவனி காத்தோன் | - | 23 | - | - | - |
| 10 | குலோத்துங்கன் I | தவிராத சுங்கம் தவிர்த்தோன் | 208 | 27 | 26 | 26-7 | 23 |
| 11 | விக்கிரமன் | கலிங்கப்பரணி புனைந்த பரிதி | - | 28 | 27-8 | 28 | 24 |
| 12 | குலோத்துங்கன் II | திருக்காமக்கோட்டம் எடுத்தவன் | - | - | 29 | 29-33 | 25 |
| 13 | இராசராசன் II | உலாக்கண்ணி தொறும் பொன்னாயிரம் சொரிந்த பூபதி | - | - | - | 34-37 | 26 |

கலிங்கத்துப்பரணி எண்கள் எஸ்.ராஜம் பதிப்பு.மூவருலா அடையாற்றுப் பதிப்பு.

இருவரும் கூறுகின்ற பண்டைச் செய்திகளில் பின்வருபவை குறிப்பிடத்தக்கன. சூரியன்; மனுநீதிச்சோழன் - தேரில் மைந்தனை ஊர்ந்தவன்; மாந்தாதா - புலியும் புல்வாயும் ஒக்க உண்ண வைத்தவன்; முசுகுந்தன் - மாகவிமானம் தனி ஊர்ந்தவன்; ககுத்தன் - இந்திரனை ஏறு வாகனமாகக் கொண்டு அசுரரை வென்றவன்; பெருநற்கிள்ளி - கூற்றுக்கு ஒக்க வழக்குரைத்தோன்; சுரகுரு - முதுமக்கட் சாடி வகுத்தவன்; தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்; சமுத்திரசித்து - மேல்கடல் கீழ்கடல் விட்டோன்; கிள்ளிவளவன் - நாககன்னியை மணந்தவன்; சிபி - புறாவுக்காக நிறை புக்கவன்; சிவூகன் - காவிரியாறு வழிகண்ட திறலோன்; இரண்டாம் கரிகாலன் - காவிரிக்குக் கரைகண்டவன். கோச்செங்கட் சோழன் - பொய்கையார் களவழிப் பாடல் கேட்டுச் சேரன் தளை களைந்தவன்.

பாட்டுக்கு நூறாயிரம் பொன் ஈந்தோன் என்று சங்கர சோழன் உலாக் கூறுவது விளங்கவில்லை. அடுத்து, பட்டினப் பாலைக்காக முதல் கரிகாலன் பதினாறு கோடி பசும்பொன் கொடுத்தது நன்கு விளக்கமான செய்தி. இனி கரிகாலன் (2) காவிரிக்கரை கட்டியது கி.மு. 11ஆம் ஆண்டில் என்று ஒரு தனிப்பாடல் குறிப்பிடும், கோச்செங்கட் சோழன் வாழ்ந்தது கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பது இன்று நன்கு முடிவு செய்யத்தக்க ஒரு செய்தி.

இனி, வரலாறு அறிந்த மன்னர்களில், தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவிய விசயாலயன் தொடங்கி விக்கிரமன் வரையில் ஆண்ட அரசர்களை எல்லா உலாக்களும் முறையாகக் குறிப்பிடுகின்றன. இருப்பினும், விசயாலயன் மகன் ஆதித்தனையும், பராந்தகன் மகனும் திருவிசைப்பா செய்தவருமாகிய கண்டராதித்த சோழரையும், பராந்தகன் பேரனும் இராசராசன் தந்தையுமாகிய சுந்தரசோழன் என்னும் இரண்டாம் பராந்தகனையும் எந்த உலாவும் குறிப்பிடவில்லை. அப்படியே பட்டத்துக்கு வராத இராச மகேந்திரன், திருவரங்க நாதனுக்கு மாணிக்கத்தால் நாகணைப் பள்ளிசெய்து அளித்த சிறப்பை, விக்கிரமன் உலாவும் சங்கரசோழன் உலாவும் சொல்வது குறிப்பிடத்தக்கது. குலோத்துங்கன் உலா சில அரசர்களைக் குறிப்பிடவில்லை. இரண்டாம் இராசராசன் தன் மீது ஒட்டக் கூத்தர் உலாப் பாடியபோது உலாக்கண்ணி தோறும் ஆயிரம் பொன் சொரிந்தான் என்ற அரியசெய்தி சங்கர சோழன் உலாவினால் மட்டும் தெரியவருகிறது.

விசயாலயனைக் குறிப்பிடும்போது, அவன் தன் மார்பில் தொண்ணூற்றின் மேலும் இரு மூன்று புண் கொண்டான் என்று எல்லா நூல்களும் தவறாது குறிப்பிடுகின்றன. இது, விசயாலயன் மிக்க பராக்கிரமத்தோடு தஞ்சையில் சோழப்பேரரசை நிறுவிய வெற்றிச் செயலைப் பின்வந்தோர் எவ்வளவு உணர்ச்சியோடு போற்றியிருக்கிறார்கள் என்பதை நன்கு எடுத்துக் காட்டும். இவனைக் கலிங்கத்துப் பரணியில் சுரராசராசன் என்று குறிப்பிடுகிறார். பராந்தகனுக்கு இருமடிச் சோழன் என்ற பெயருண்டு. இவன் தில்லைத் திருமன்றம் பொன்னால் வேய்ந்தவன். தவிர, பிரம அரக்கன் அகலம் பிளந்து பரமர் திருத்தில்லை பார்த்தோன் என்று கூறுகிறார். இந்த வரலாறு தெரியவில்லை. பிற செய்திகள் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ளன.

## விக்கிரம சோழன் உலா

முதலாவதாகிய விக்கிரமசோழன் உலா 342 கண்ணிகள் உடையது. வழக்கம் போல் ஏழு பருவ மகளிருடைய செயல்களையும் தனித்தனியே கூறுவது. விக்கிரமசோழன் தன் மீது இவர் பாடிய உலாவிலுள்ள 'கையும் மலரடியும்' என்ற ஒரு கண்ணியை ஒட்டி இவரை ஒரு வெண்பா பாடச் சொல்ல, இவர் அங்ஙனமே விரைந்து பாடினமையால் ஒட்டக்கூத்தர் என்று பெயர் பெற்றார் என்ற செய்தி சொல்லப்பட்டது. இவ்வுலாவானது காலத்தால் மிகவும் பழைய உலாப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். சேரமான் பெருமாள் செய்த ஆதியுலாவும், நம்பியாண்டார் நம்பி செய்த ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையும் (இந்நூல் உலாப்பிரபந்த இலக்கண முழுமையும் பொருந்தியதன்று) காலத்தால் இதற்கு முற்பட்டவை. பிரபந்த இலக்கணம் கூறும் இலக்கண நூல்களில் இன்று கிடைப்பனவற்றுள் பன்னிரு பாட்டியல் ஒன்றே ஒட்டக்கூத்தருக்கு முற்பட்டது. எனவே, இவருடைய நூல்கள் ஒரு வகையில் இலக்கணம் அமைக்கின்ற இலக்கியங்கள் என்று கருதவேண்டும்.

உலா இலக்கணத்துக்குப் பொருந்த இந்நூல், சோழர் குலப் பழமை, தலைவன் பெருமை, பள்ளியெழுதல், தலைவன் நீராடி அலங்கரித்துக் கொள்ளுதல், யானைமீது இவர்ந்து வருதல், யானையின் வீரச் செயல்கள், உடன் வருவோர், குழாங்கள், குழாங்களின் கூற்று என்பவற்றைத் தொடக்கமாகப் பெற்றிருக்கிறது. பின்னர், உலாவரும் தலைவனைக்கண்டு பேதை மாலை

வாங்கித் தருமாறு தாயரைக் கேட்கிறாள். அடுத்துப் பெதும்பை. கனாக் கண்டு அதைத் தாயாருக்குக் கூறுகிறாள். மூன்றாவது மங்கை; உரிய சிறப்போடு இப்பகுதி சொல்லப்பட்டுள்ளது. அடுத்து மடந்தை; பந்தாடுதல். பின்னர் அரிவை, அதன்பின் தெரிவை; இப்பருவத்தில் தசாங்கம் சொல்லப்பட்டுள்ளது. இவள் தலைவன் ஏறிவரும் யானையைக் கண்டு 'பெயராது நில்' என்று வேண்டுகிறார். பின்னர் பேரிளம்பெண். இம்முறையில் நூல் சென்று முடிகிறது. இங்கு பண்டைய நூல் கருத்துக்கள் மிகப்பல எடுத்து ஆளப்பெற்றமை காணலாம். நூலின் இறுதியில் கூத்தர் பாடிய வெண்பாப் பாடல் - கையும் மலரடியும் - காணப்படுகிறது.

குலப்பெருமை அல்லது பாரம்பரியம் கூறும் பகுதியில் இவ்வுலாவில் முறையாக பிரமன், காசிபன், மரீசி, சூரியன், மனு, மாந்தாதா, மாகவிமானம் ஊர்ந்தவன், முசுகுந்தன், கிள்ளி வளவன், சுரகுரு, தூங்கெயிலெறிந்தவன், சமுத்திர சித்து, நெடுமுடிக்கிள்ளி, சிபி, சிவூகன், கரிகாலன், கோச்செங்கட் சோழன், மார்பில் தொண்ணூற்றாறு புண் கொண்டவன், முதற்பராந்தகன், இராசராசன், கங்கைகொண்டசோழன் (இராசேந்திரன் I), இராசாதித்தன், இரண்டாம் இராசேந்திரன், இராச மகேந்திரன், வீரராசேந்திரன், அதிராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரமன் என்போர் சொல்லப்பட்டுள்ளனர். இங்கு சில செய்திகள் குறிப்பிடத்தக்கன. பராந்தகன் தொடங்கி விக்கிரமன் வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய் முறையாக அரசாண்டவர்கள். சாசன வாயிலாக இதற்குத் தக்கசான்று கிடைத்துள்ளது. இவர்களுள் இராச மகேந்திரன் மட்டும் பட்டத்துக்கு வராமல் இளவரசனாயிருந்த போதே போரில் உயிர் துறந்தான். இவ்விராச மகேந்திரன் திருவரங்கநாதனுக்கு நவமணிகளால் சேஷசயனம் அமைத்துத் தந்தான். இவன் பெயரால் அங்கு இராசமகேந்திரன் திருவீதி என்ற ஒரு வீதி உள்ளது. அடுத்து, கூடலசங்கமத்துப் போர் வென்ற வீரராசேந்திர சோழன் கூடலசங்கமத்துப் பரணி என ஒரு பரணி கொண்டான் என்று இப்பகுதியால் (கண்ணி 21 - 22) அறிகிறோம். வேறு வழியில் இப்பரணி அறிவதற்கில்லை.

இவ்வளவும் திருத்தமாக இருக்கும்போது, இவர்களுக்கு முன்வந்த அரசர்களும் வெறுங்கற்பனை அல்ல, அரசாண்ட மன்னர்களே என்று நாம் நன்கு உணர்தல் வேண்டும். இவர்கள்

பற்றி இங்கு ஒருசெய்தி மட்டும் குறிப்பிடலாம். தொண்ணூற்றாறு புண் கொண்டவன் விசயாலயன் போலும். திட்டமாக இது அறிய முடியாவிட்டாலும், வீழ்ந்துபட்ட சோழமரபைத் தலையெடுக்கச் செய்து, சோழநாட்டைக் கைப்பற்றியிருந்த முத்தரையரைப் போரில் வென்று, மீண்டும் சோழப் பேரரசைத் தஞ்சை நகரில் நிறுவியவன் விசயாலயன். ஆகவே, இவ்வரசனே புண் கொண்டவன் என்று நாம் முடிவு செய்யவேண்டும். கூத்தர் அரச குலத்தோடு மூன்று தலைமுறைகள் நெருங்கிய தொடர்புடையவராதலால் வரலாற்றை நன்கறிந்தே இவ்வாறு குறிப்பிடுகிறார்.

விசயாலயனைக் குறிப்பிடும் வரிகளுக்கு முந்திய கண்ணியில் 'பொய்கைக் கவிகொண்டு வில்லவனைப்பாதத் தளைவிட்ட பார்த்திபனும்' என்று கோச்செங்கட் சோழனைக் குறிப்பிடுகிறார். இவ்வரசன் இருந்து உண்மையாகவே பொய்கையாரின் கவியாகிய களவழி நாற்பது கேட்டுச் சேரமானைச் சிறைவீடு செய்தான் என்பதைப் பிற நூல்கள் பலவற்றாலும் அறிகிறோம். இவனுடைய காலம் திட்டமாகத் தெரியாவிட்டாலும்கூட, இவ்வரசன் இருந்து சேரமானை விடுதலை செய்து, பல கோயில்களும் கட்டினான் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவன் காலம் 5ஆம் நூற்றாண்டு எனக் கருதக்கூடும். இவனைக் குறித்து அக்காலத்திற்குரிய இலக்கிய வரலாற்றில் விரிவாக ஆராய்வோம். இவனை அடுத்து ஒட்டக்கூத்தர் விசயாலயனையே குறிப்பிடுகிறார். இடைப்பட்ட காலம் நானூறு ஆண்டு. இக்காலத்தில் புயவலி மிக்க எந்தச் சோழனும் ஆட்சி புரியவில்லை என்பது இவரது கருத்து மட்டுமின்றி, நாட்டு வரலாற்றாலும் அறிகிறோம். விசயாலயனுக்கு அடுத்துவந்த சோழர்களை அவரவர் சிறப்புச் செய்திகளால் இவர் குறிப்பிடுவது போற்றத்தக்கது. விசயாலயன் தொண்ணூற்றாறு புண்கொண்டவன். அவனுடைய பேரன், திருமன்றம் காதலாற் பொன்வேய்ந்த காவலன், முதல் பராந்தகன், ஈரொன்பது சுரமும் மலைநாடும் கொண்டவன் முதலாம் இராசராசன். கங்காநதியும் கடாரமும் கைக்கொண்ட செம்பியன் - முதலாம் இராசேந்திரன். மும்மடி போய்க் கல்யாணி செற்ற தனியாண்மைச் சேவகன் - இராசாதிராசன். கொப்பத்து ஒருகளிற்றாற் கொண்டோன்* - இரண்டாம் இராசேந்திரன். தென்னரங்கம் மேயாற்குப் பன்மணியால்

* மூவர்உலா அடையாற்றுப் பதிப்பில் இங்கு இராசாதிராசன் என்று இருப்பது பிழை.

ஆடரவப் பாயல் அமைத்தோன் - இராச மகேந்திரன். கூடல் சங்கமத்துக் கொள்ளும் தனிப் பரணிக்கு எண்ணிறந்த யானை துணித்தோன் - வீர இராசேந்திரன். அவனுக்குப் பின் காவல் புரிந்தவன் அவன் மகனாகிய அதிராசேந்திரன். மறக்கலியும் சுங்கமும் மாற்றிய அபயன் முதல் குலோத்துங்க சோழன். இவனுடைய மகனாகத் தோன்றியவன் விக்கிரமசோழன்.

அடுத்து, தொடக்கத்தில் கூத்தர் நயமான சில தொடர்களைப் பெய்திருக்கிறார். விக்கிரமசோழனுடைய தேவி உலக முழுதுடையாள் - பெண் சக்கரவர்த்தி. காவேரி - பொய்யாத பொன்னி. பூசுரருடைய வாழ்த்து - பூசுரர் கைக்கன்னித் தளிர் அறுகின் காப்பணிந்து, சிவபிரானை வணங்கி:

மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மோலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக் – கறைக்களத்துச்
செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி.

இதனுள் சோழன் ஏறி வருகின்ற பட்டத்து யானையைப் பதினாறு கண்ணிகளால் வருணிக்கிறார். இந்த வருணனையானது உண்மையிலேயே பெருஞ் சக்கரவர்த்தியாக வாழ்ந்து பட்டத்து யானையையும் பெற்றிருந்த விக்கிரம சோழனுக்கு நன்கு பொருந்துவது. உடன் வருவோரைக் கூறுமிடத்துக் கூத்தர் விக்கிரமனுடைய தலைவர் பதினைவரை முறையாகக் குறிப்பிடுகிறார். அவர்களைக் குறித்து அறியப்பெற்ற செய்திகளை இங்கு சுருக்கிக் கூறுவோம்.* பரணி மலையத் தரும் தொண்டைமான் - கலிங்கத்துப்பரணி பாடக் காரணமாயிருந்த கருணாகரத் தொண்டைமான் - இவன் விக்கிரமனுடைய தந்தை காலத்திலும் விக்கிரமனுடைய காலத்திலும் இருந்த படைத்தலைவன். முனையர்கோன் - மந்திரி, படைத்தலைவன். இவனைக் குறித்த வரலாறு திருக்கண்ணபுரத்தோடு தொடர்புபடுத்திச் சிறப்பாக உள்ளது. அப்பகுதியில் ஏற்பட்ட பஞ்சத்தில் இவன் அரசிறைப் பொருளை மக்களுக்கு வழங்கிவிட்டமை காரணமாகச் சிறை செய்யப்பட்டு, பின்னர் பெருமாளின் அருளால் அரசன் உணர்ந்து விடுதலை செய்தான் என்ற உண்மை சொல்லப்படும்.

* இவை பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 2 என்ற நூலில் சதாசிவ பண்டாரத்தார் விரிவாக எழுதியுள்ள குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டவை.

சோழர்கோன் - போர்களில் விக்கிரமனுக்கு வெற்றிபெற்றுத் தந்தவன். திருமழபாடிக் கல்வெட்டு இவனைப் போற்றுகின்றது. திருமறையோன் கண்ணன் - அந்தணன், கஞ்சை என்ற ஊரினன். வாணகோவரையன் - சாசனத்தால் அறியப்பட்ட தலைவன். காலிங்கர்கோன் - அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் என்ற பெயரும் உடையோன். குலோத்துங்கன் காலத்திலும் படைத் தலைவனாக வாழ்ந்தவன். காலிங்கராயன் நரலோகவீரன் என்ற பட்டம் உடையவன். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த திருப்பணிகள் மிகவும் விரிவான பாடல்களாகப் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. இவனே ஒட்டக்கூத்தரிடம் அரும்பைத் தொள்ளாயிரம் என்ற பிரபந்தம் பெற்றவன். செஞ்சியர்கோன் காடவன் - 1129ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இவனைக் குறிப்பிடுகிறது. இவனும் கருணாகரன் போலப் பல்லவர் மரபினன்.

வேணாடர் வேந்து - இவன் சேரன் மரபில் வந்தவன். (திருவிசைப்பாப் பாடியோருள் ஒருவர் வேணாட்டு அடிகள்.) அனந்த பாலன் - இவன் தருமம் பாலித்தவன் என்று உலா குறிக்கிறது. இவனுடைய அறச்சாலைகள் திருவாவடுதுறையில் இருந்தன. வத்தவன் - முதல் குலோத்துங்கன் காலத்திலும் இருந்தவன். வச்சத்தொள்ளாயிரம் இவனைக் குறித்ததாய் இருக்கலாம். சேதித் திருநாடர் சேவகன் - திருக்கோவலூர்ப் பகுதியில் தலைவனாய் இருந்தவன். (சேதிராயர் என்ற திரு விசைப்பா ஆசிரியரும் முன் இருந்தார்.) அதிகன் - கலிங்கப் போரில் முதல் குலோத்துங்கன் காலத்தில் துணைசெய்தவன். நுளம்பன் வல்லவன் காரானைக் காவலன் திகத்தன் முதலியோர் பற்றிய விளக்கம் இல்லை; திகத்தன் திரிகத்தராயன் என்பவனாக இருக்கலாம். இவன் புதுவைக்குரியவன் என்று தெரிகிறது. காரணை விழுப்பரையன் என்பவர்* (பிற்காலம்) பாண்டி நாட்டில் புலவராய் இருந்தார்.

இவ்வுலாவில் விக்கிரமனுடைய பட்டங்களில் ஒன்றாகிய தியாக சமுத்திரம் என்ற பெயரைக் குறிப்பிட்டு அதற்கேற்ப சோழனைக் கடலாகவே உருவகம் செய்து இருக்கிறார் (211 - 16). விக்கிரமனை,

---

* இவர் சுந்தரபாண்டியனிடம் (1216 - 38) அவைப்புலவராய் இருந்தார். இவர் மீது மடல் ஒன்று பாடப்பட்டு இருந்தது. எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு பார்க்க.

மாடப் புகாருக்கும் வஞ்சிக்கும் காஞ்சிக்கும்
கூடற்கும் கோழிக்கும் கோமானே.

என்று புகழ்கிறார். பிறகு தொண்டைநாடு, பொன்னிநாடு, கன்னித்திருநாடு என்ற மூன்று நாடுகளையும் வாளியும், சிலையும், தேருமாக மன்மதனுக்குப் பொருத்திப் பாடுகிறார். (வாளியாவது அம்பு.) தொண்டை நாட்டில் உள்ள காஞ்சி - மா; திருமுல்லை வாயில் - முல்லை; திருத்தணிகை - குவளை என்ற பஞ்சபாணங்களில் உள்ள மூன்று அம்புகள். பொன்னி வளநாடு பூஞ்சிலை - கரும்பு. கன்னித் திருநாடு - மன்மதன் தேராகிய தென்றல்.

## கலிங்கத்துப் பரணி

கூத்தர், விக்கிரமன் குலோத்துங்கன் இராசராசன் ஆகிய மூன்று சோழர் மீதும் பல பிரபந்தங்கள் பாடியிருக்கிறார் என்று அறிகிறோம். பாடியதாகத் தெரிந்த நூல் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அதுபற்றித் தெரியவருகின்ற செய்தி களை இங்கு தொகுத்துச் சொல்லுவோம். விக்கிரமன் மீது உலாப் பாடியதற்கு முன்னதாக, ஒரு பரணியும் பாடினார் என்று தெரிகிறது. சயங்கொண்டார் விக்கிரமன் தந்தையாகிய முதற் குலோத்துங்கன் மீது வடகலிங்க வெற்றி குறித்துப் பாடிய கலிங் கத்துப் பரணி மிகவும் பிரசித்தமானது. நூற் சிறப்புப் பற்றி கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டப்பெயரும் அவர் பெற்றார். அவரைப் போலவே தென்கலிங்கத்தை வெற்றி கொண்ட விக்கிரமசோழன் மீது ஒட்டக்கூத்தர் மற்றொரு பரணி பாடி னார் என்று அறிகிறோம். இவ்வாறு பாடிய செய்தி பல நூல் களால் நமக்குத் தெரியவருகிறது. விக்கிரமசோழன் இளமையில் வேங்கி நாட்டில் தன் தந்தையின் பிரதிநிதியாக நிர்வாகம் செய்துவந்த காலத்தில் தென்கலிங்க வேந்தனாகிய தெலுங்க வீமனைப் போரில் வென்றான்; இது,

தெலுங்க வீமன் விலங்கல்மிசை ஏறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்.

என்று விக்கிரமன் மெய்க்கீர்த்தியில் போற்றப் பெற்றுள்ளது. அவன் பட்டத்துக்கு வருமுன் இளைஞனாயிருந்தபோதே

இத்தென்கலிங்கப் போரில் படை நடத்தி வெற்றிபெற்றான். இவ்வீரச் செயலைப் பாராட்டி விக்கிரமனது அவைப் புலவரா யிருந்த ஒட்டக்கூத்தர் ஒரு கலிங்கத்துப்பரணி பாடினார். இதைத் தாமே பின்னர் தாம் பாடுகின்ற தக்கயாகப்பரணியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

செருத்தந் தரித்துக் கலிங்கரோடத்
தென்தமிழ்த் தெய்வப் பரணிகொண்டு
வருத்தந் தவிர்த்துல காண்டபிரான்
மைந்தர்க்கு மைந்தனை வாழ்த்தினவே.

(தாழிசை 776). இதை அதன் உரைகாரர் தெளிவாகப் பின் வருமாறு குறிப்பிடுகிறார்: "இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்த ரான கவிச்சக்ரவர்த்திகள்; இப்பரணி பாட்டுண்டார் விக்கிரம சோழதேவர்". இது வெளிப்படையாக உள்ளது.

ஆனால் ஒருவர், ஒட்டக்கூத்தர் தமது நூலையே தெய்வப் பரணி என்று கூறமாட்டார் என்று குறிப்பிட்டு, இப்பரணி சயங்கொண்டார் நூலே ஆகும் என்று எழுதினார். தக்கயாகப் பரணி உரைகாரர் கூற்றால் இது மிகவும் தெளிவாயிருக்கிறது. அன்றியும், தெய்வப்பரணி என்பது தெய்வமாகிய காளிதேவிக் குக் கூழட்டுப் படைத்துப்பாடும் பாட்டு ஆதலால், தெய்வப்பரணி என்பதும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. மேலும், சொற் களின் பொருளையும் வேறுபல தொடர்களையும் கருதவேண்டும். இங்கு 'பிரான் மைந்தர்க்கு மைந்தனை வாழ்த்தினவே' என்று வருமிடத்து தக்கயாகப்பரணி இரண்டாம் இராசராசனைச் சிறப்பிப்பதாதலால், பரணிகொண்டு உலகாண்ட பிரான் விக்கிரமன், அவன் மைந்தன் இரண்டாம் குலோத்துங்கன், அவன் மைந்தன் இரண்டாம் இராசராசன் என்ற வமிசாவளித் தொடர்பும் தெளிவாயிருக்கிறது.

மேலும், கூத்தரே பாடிய பிற நூல்களிலும் தாம் கலிங்கத்துப் பரணி புனைந்த செய்தியை ஐயத்துக்கிடமின்றித் தெளிவாகக் குறிப்பிடுகிறார்:

விரும்பரணில் வெங்களத்தி வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமாள் – தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன். 28 – 29

*என்ற குலோத்துங்க சோழன் உலாக் கண்ணிகள் குலோத்துங்க சோழனுடைய தந்தை கலிங்கப்பரணி கொண்டவன் என்று குறிப்பிடுகின்றன. இவ்வுலாவுக்குக் கிடைக்கும் பழைய உரையும் பெருமாள் விக்கிரமசோழ தேவர் என்று குறிப்பிடுகின்றது. குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் சிற்றில் பருவப்பாடல் (83) இவ்விரண்டாங் குலோத்துங்கனைப் 'பரணி கொள்ளும் அகளங்கன் மதலாய்' என்று குறிப்பிடுகின்றது:*

பாவகன் வளைத் தெழுகலிங்கமும் விழுங்கப்
பகட்டணி துணித்தொரு பெரும்பரணி கொள்ளுஞ்
சேவகன் அபங்கன் அகளங்கன் மதலாய்!நின்
சேவடிக ளால் எமது சிற்றில் சிதையேலே.

*அடுத்து இராசராசசோழன் உலாக் கண்ணிகள் (27 - 28) விக்கிரமசோழனைக் குறிப்பிடும்:*

தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பருதி – முரணில்
புரந்தரன் நேமி பெருவும் அகில
துரந்தரன் விக்ரம சோழன்.

*இவற்றால் திட்டமாகத் தெரிவது ஒட்டக்கூத்தரே இக்கலிங் கத்துப்பரணி பாடினார் என்பது. இந்நூல் இன்று கிடைக்க வில்லை எனினும், இதன் பாடல்கள் என்று கருதத்தக்க சில தெரிய வருகின்றன.*

*மற்றொரு குறிப்பை இனிக் கருதலாம். சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையுரையில் அடியார்க்கு நல்லார் பலியிடுதலைக் கூறும்போது மூன்று பாடல்களை இடையில் பிற குறிப்புக்களோடு கூறுகிறார். அவை பின்வருவன.*

மோடி முன்தலையை வைப்பரே முடி
குலைந்த குஞ்சியை முடிப்பரே
ஆடிநின்று குருதிப் புதுத் திலதம்
அம்மு கத்தினில் அமைப்பரே.

அடிக்கழுத் தினுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைத் துதிக்குமாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்குமாலோ.

மண்ணி னாளற அறுத்த தங்கள்தலை
 வைத்த பீடிகை வலங்கொள
விண்ணி னாகியதன் யாக சாலைதொறும்
 மீளவும் சிலர் மிறைப்பரே.

இம்மூன்றுள் இரண்டாம் பாடல் மட்டும் கலிங்கத்துப்பரணி 97ஆம் பாடல். மற்ற இரண்டும் பரணித் தாழிசைகளாக உள்ளன. ஆனால் எந்தப் பரணியிலுள்ளன என்பது விளங்கவில்லை. இவற்றுள் முதல் தாழிசையின் இறுதியில், என்பது 'கவிச்சக்கர விருத்தி' என்று ஐயரவர்கள் அடியார்க்கு நல்லார் குறிப்பாக அச்சிட்டிருக்கிறார்கள். கவிச்சக்கரவிருத்தி என்பது கவிச்சக்கர வர்த்தியாக இருக்கவேண்டும் எனக் கருதலாம்; அங்ஙனமாயின் அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன் மிகவும் அண்மையிலுள்ள காலப்பகுதியில் கவிச்சக்கரவர்த்தி என வழங்கப்பெற்றார் இருவர்; இவர் சயங்கொண்டார் ஒட்டக்கூத்தர் என்போர். சயங்கொண்டார் பாடிய கலிக்கத்துப்பரணியுள் இப்பாடல் இல்லை. இப்பரணியுள் பாடல்கள் எவையேனும் விடுபட்டன என்பதாக எந்த வரலாறும் இல்லை. மற்றவராகிய ஒட்டக்கூத் தர் பாடிய தக்கயாகப்பரணி இன்று கிடைக்கிறது. அதனுள் இவ்விரு பாடல்களும் இல்லை. எனவே, இவ்விரு பாடல்களும் ஒட்டக்கூத்தர் பாடியதாக நாம் உறுதிசெய்த கலிங்கத்துப் பரணிப் பாடல்கள் என்று கருதுவது பிழையாகாது. அடியார்க்கு நல்லார் கூத்தருக்குக் காலத்தால் சிறிது பிற்பட்டவர் ஆதலால், அவர் கூத்தர் பாடலைத் தருதல் பொருந்துவதே.

மேலும் தக்கயாகப்பரணி 13ஆம் தாழிசை வரையில்,

"முத்தின் கனங்குழையை யுங்குமிழை யுங்கதுவி
மொட்டும் கருங்கயல்க ளின்கடை யடங்குவன.

என்றார் தாமே என உணர்க" என்று அவ்வுரைகாரர் ஒரு தாழி சையின் பகுதியை எடுத்துத் தருகிறார். என்றார் தாமே என்று அவர் கூறியதால், இது ஒட்டக்கூத்தரே பாடிய பாடலாகும். ஆகவே இதுவும், இவர் பாடிய தக்கயாகப் பரணியில் இல்லாமை யால், மற்றொரு பரணியாகிய கலிங்கத்துப்பரணியில் இருந் திருக்கும் என்று கருதுவது பொருத்தமே. இவற்றால் இவர் இளைஞனான விக்கிரமனுடைய முதன் கலிங்க வெற்றியைச் சிறப்பித்து ஒரு கலிங்கத்துப்பரணி பாடினார் என்பது உறுதி யாகிறது.

## குலோத்துங்கசோழன் உலா

இரண்டாம் குலோத்துங்கன் மீது ஒட்டக்கூத்தர் பாடிய உலா இரண்டாவது சிறப்பான நூல். இது 387 கண்ணிகள் உடையது. முந்திய உலாப் போலவே எல்லாப் பகுதிகளும் இதனுள் சிறப்புற அமைந்துள்ளன. தொடக்கத்தில் இவன் குலப்பெருமை சொல்லப்பட்டுள்ளது. விக்கிரமனை அடுத்துப் பட்டத்துக்கு வருபவன் பாட்டுடைத் தலைவனான இரண்டாம் குலோத்துங்கன். இவன் தில்லையிற் செய்த திருப்பணிகள் 21 கண்ணிகளால் கூறப்பெறுகின்றன. தில்லைத் திருமுன்றில் சிறு தெய்வக் குறும்பு தொலைத்தல் (திருமாலை அப்புறப்படுத்து தல்; கடலிற் போகட்டல்); பசும் பொன்னால் பூரணகும்பம், வச்சிரகும்பம், முத்துக் கவிகை, மணிவைத்த தீபம், மணிவைத்த பதுமபீடம், பேரம்பலம், கோபுரம் மாடம், மாளிகை எழு நிலைக் கோபுரம், செம்பொற் பாறையொத்த திருமுற்றம், திருக்காமக் கோட்டம் (அம்பிகை கோயில்), நான்கு திரு வீதிகள் - இத்தனையும் செய்தான். இவன் கட்டிய அம்பிகை கோயிலானது, தான் பிறந்தற்கிடமான பெரிய இமவான் என்னும் கடவுட் குன்றம் தன்னையும் அம்பிகை மறக்கும்படி இருந்தது என்று பாடுகிறார்:

– ஒருதான்
பிறக்கும் இமயப் பெருங்கடவுட் குன்றம்
மறக்கும் படிசெல்வம் மல்கச் – சிறக்கும்
இருக்காதி எம்மறையும் எவ்வுலகும் ஈன்றாள்
திருக்காமக் கோட்டம் திகழ்வித்து.

பிறகு மன்னன் நீராடி அலங்கரித்து, யானைமீது உலா வருகின்றான்; குழாங்களும் உடன் வருவோர் கூற்றும் சொல்லப் படுகின்றன. பின்னர் பேதைப் பருவம். அடுத்து பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய பருவங்கள் முறையே வருணிக்கப்படுகின்றன. தெரிவைப் பருவத்து அம்மனையும் பந்தும் சொல்லப்படுகின்றன. நூலின் இறுதியில் 'என்று இனி மீள்வது' என்ற தனி வெண்பா உள்ளது.

தொடக்கத்தில் மரபு கூறும்போது ஆசிரியர் பண்டை இதிகாச சரித்திரப்படி உள்ள அரசர் பெயர்களை முன்னிலும் விரிவாகக் கூறுகிறார். திலீபன், ரகு, தசரதன், இராமன்

போன்றார் சொல்லப்பட்டுள்ளனர். அன்றியும் வரலாறுகள் காலமுறைப்படி இங்கு சொல்லப்படவில்லை. கரிகாலன் இங்கு மூன்று இடங்களில் கூறப்படுகின்றான் (11, 18, 23). சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் கரிகாலர் இருவர் இருந்தனர் - என்ற கருத்துக்கு இக்கண்ணிகள் ஆதரவு தருகின் றன. ஆயினும், வரலாற்று விளக்கத்துக்கு விக்கிரமசோழன் உலா பயன்படுவதுபோல, இவ்வுலாக் குறிப்பிடும் செய்திகள் பயன்படவில்லை.

சோழ மன்னர் அனைவருமே கருநிறமாயிருப்பர்; இரண் டாம் பராந்தகன் ஒருவன் மட்டும் (இராசராசன் தந்தை) சிவப் பாயிருந்தமை பற்றிச் சுந்தரச்சோழன் எனப்பட்டான். இவ் விரண்டாம் குலோத்துங்கனும் நிறத்தால் கறுப்பானவன். நரபதி மைம்முகில் வண்ணத்து வானவன் என்று குறிப்பிடுவார். நிறத்துக்குப் பொருந்த உடுத்தல் என்பதும், ஒரு நிறத்துக்குப் பொருந்தப் பெண்கள் சேலை, சட்டை, மாலை, வளை, நாடா, பொட்டு, செருப்பு எல்லாம் அதே நிறத்தால் அணிதல் என்பதும் இருபதாம் நூற்றாண்டின் நாகரிகக் கோலம் என்றும் நாம் நினைக்கிறோம். ஒட்டக்கூத்தர் காட்டும் மங்கையும் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வாறு நினைத்தாள். சோழனுடைய நீலமேனிக்குப் பொருத்தமாக அவளும் நீலமே புனைகிறாள்:

– மொய்ம்மலர்
நீலமே வேய்ந்து, அடுக்க நீலமே பூண்டு, உடுக்க
நீலமே அன்றி நினையாதாள் – நீலமே;
கோலத்தார் மௌலிக் குலோத்துங்க சோழற்கு
ஞாலத்தார் எல்லார்க்கும் நாயகற்கு – நீலத்தின்
காசும் கலாபமும் மேகலையும் காஞ்சியும்
தூசும் துகிலும் தொடியும்நான் – கூசேன்.

என்கிறாள்; நீலரத்னாபரணம் அணிகிறாள்.

பந்தடி என்பது மகளிருடைய சிறப்பான விளையாட்டுக் களுள் ஒன்று. சிலப்பதிகாரம், பெருங்கதை, சிந்தாமணி முதலான காப்பியங்களுள் இதை விரிவாகக் காண்கிறோம். இங்கும் தெரிவைப் பருவத்தில் பதினொரு கண்ணிகளால் பந்தாடலை விரித்துரைக்கிறார்.

இராமானுசர் வரலாற்றில் குலோத்துங்கசோழன் அவ ருக்குத் தொந்தரவு விளைவித்தான், தில்லையில் சபை முன்றி

வில் எழுந்தருளியிருந்த பெருமானைக் கடலில் தூக்கி எறிந்தான் - என்றெல்லாம் சில வரலாறுகள் கூறும். இவ் உலாவிலும் ஒரு கண்ணி இச்செயலைக் குறிப்பிடுகிறது:

தில்லைத் திருமன்ற முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தெலைத்தெடுத்து.

ஆதலால் இது பற்றிச் சில சொற்கள் இங்கு சொல்வது அவசியமாகும். இராமானுசர் திவ்யார்ய சரிதை என்ற பிற்கால மணிப்பிரவாள உரைநடை நூல் (பிள்ளை லோகஞ்ஜீயர் செய்தது, காலம் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) ஒரு பாடலால் இச்செய்தியைக் கூறுகிறது:

அம்பொற் கொடைச்சகரன் ஆயிரத்தின் மேனாற்பத்
தொன்பதாம் வர்ஷத் துயர்தில்லைத் – தென்பாலில்
சென்னி குலோத்துங்கன் சித்திரகூ டத்திருமால்
தன்னை அலைஎறிநாள் தான்.

(சகம் 1049 - கி.பி. 1127.) இந்த ஆண்டில் இரண்டாம் குலோத்துங்கன் பட்டத்துக்கு வரவில்லை; இது விக்கிரமசோழன் காலம். ஒட்டக்கூத்தர் பாடிய இராசஇராசன் உலாவும், தக்கயாகப் பரணியும் இச்செயலைக் குறிப்பிடுகின்றன; 'புறம்பிற் குறும்பனைத்தும், முன்னிற் கடல் அகழின் மூழ்குவித்த - சென்னி, திருமகன் இராசஇராசன்' என்பது அவ்வுலா (33 - 4);

முன்றிற் கிடந்த தடங்கடல் போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றிற் கிடங்கண்ட கொண்டல்மைந்தன்
மரகத மேருவை வாழ்த்தினவே.

என்பது தக்கயாகப்பரணி 777. இவை அனைத்தாலும் இராசராசன் தந்தையான இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் தில்லைத் திருமால் கடலில் போடப்பட்டார் என்ற செய்தி தெளிவாகிறது. முதல் குலோத்துங்க சோழன் விஷ்ணுவர்த்தனன் எனும் பட்டம் உடையவன். அவன் மன்னார்குடி இராசகோபால சுவாமி கோயிலை எடுத்து, குலோத்துங்க சோழ விண்ணகரம் என்று பெயர் இட்டான். அவன் வேங்கி நாட்டில் இளவரசுப் பட்டம்பெற்ற காலத்து, விஷ்ணுவர்த்தனன் என்ற பெயர் தரித்தான்; 'விஜயாபரண ஸ்ரீ ராஜகேசரிவர்ம பெம்மானடிகள் கங்கா காவேரி பர்யந்தம் சப்தமோவிஷ்ணுவர்த்தனரான ஸ்ரீ

திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்' என்ற கல்வெட்டுத் தொடர் காண்க. அவனுடைய மகன் விக்கிரம சோழனும் திருமாலிடத்து அன்புபூண்டு வாழ்ந்தவன். ஆதலால் இந்தப் பரம்பரையில் வந்த இரண்டாம் குலோத்துங்கன் திருமாலுக்குத் தீங்கு செய்தான் என்பது பொருந்தும் என்று தோன்றவில்லை. இவன் தில்லைத் திருப்பணி செய்த காலத்தில் இங்கிருந்த வைணவர் இவனுடைய திருப்பணிக்கு இடையூறு செய்யவே, இவன் அந்த இடையூற்றுக்கு மூலமாய் இருந்த திருமாலை அவருக்குரிய கடலுக்கே அனுப்பிவிட்டான் என்று ஒட்டக்கூத்தர் நகைச்சுவை தோன்றக் கூறியிருக்கிறார். இவற்றை அக்காலக் கண்கொண்டு ஆராயும்போது, இச்சோழன் கிருமி கண்ட சோழன் என்றும், இவனே கூரத்தாழ்வாரையும் பெரிய நம்பியையும் கண்ணைப் பிடுங்கி வெருட்டிவிட்டான் என்றும் சொல்பவை மிகைபடுத்திய பொய்க்கதைகளோ என்று ஐயுற வேண்டி இருக்கிறது; கோபத்தால் திருமாலை இவன் கடலில் எறிந்திருக்கலாம். குலோத்துங்கன் முடிபுனைந்தது 1133இல். கூத்தர் இவன் மீது உலாவும் பிள்ளைத்தமிழும் பாடியது, இதற்குச் சில ஆண்டுகள் முன்னதாக இருக்கலாம் என்று இறுதித் தலைப்பில் காட்டுகிறோம்; சுமார் 1125, இவன் இளவரசாயிருந்த காலம், ஆதலால் இவன் திருமாலைக் கடலில் போட்ட காலம் இதற்கு இரண்டோர் ஆண்டுகள் முற்பட்டிருக்கலாம் - 1120 - 25க்குள். பின்னால் இவன் மகன் கடலிலிருந்து திருமாலைக் கொண்டுவந்து மீண்டும் பிரதிட்டை செய்வித்தான் என்றும் அறிகிறோம்.

## உரை

மூவர் உலாக்களில், இவ்வுலாவிற்கு மட்டும் சிறப்பான பழைய உரை உண்டு. இது ஐயர் அவர்களின் புதல்வரால் அச்சிடப்பட்டுள்ளது. இது பதவுரையும், விசேடவுரையுமாக அமைந்துள்ளது. உலாவிற்குரிய இலக்கண அமைதியை இது நன்கு விளக்குகிறது. உரைகாரர் மேற்கோளாகக் காட்டிய நூல்கள் தொல்காப்பியம், கலித்தொகை பரிபாடல், பெருங்கதை முதலாயின. உரை நெடுகிலும் வினை முடிபு காட்டிப் பொருளைக் கூட்டி முடிக்கின்றார். திருமாலைக் குறிப்பிடும்போது ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ கருடாழ்வார் என்று எழுதுகிறார்; ஸ்ரீ பீடம் என்பதும் காண்க. உரை சுவையுடைய உரை. ஆங்காங்கு அணி

இலக்கணக் குறிப்புக்கள் அதிகமாய் உள்ளன. உரையாசிரியர் பெயர் வரலாறு முதலியன விளங்கவில்லை. இலக்கியச் சிறப்புடையதாயினும், இது வரலாற்றுப் பிழைகள் நிரம்ப உடையது. கரிகால் சோழனை மூன்றிடத்தில் குறிப்பிடுகிறார். மூன்றாம் முறை கரிகால் பெருவளத்தான் என்று இவர் கூறுவது முதல் பராந்தகனே. சுரகுருவை நாபாகன் என்கிறார். தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்று எல்லா நூல்களும் குறிப்பிடுபவனை இவர் இக்குவாகு என்கிறார். 96 புண் சுமந்தவன் இராசராசன் என்கிறார். இவை போல்வன பின்னும் சில பிழைகள். பொய்கையாரால் களவழிப் பாடல் கொண்டு பொறையை விடுவித்தவன் சோழன் செங்கணானாய் இருக்க, உரையாசிரியர் தஞ்சை விசயாலயன் என்று கூறுவதும் பிழையே.

## குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்

இந்நூல் முழுமையும் கிடைக்கப் பெறாமல் ஏடு சிதிலமாகி விட்டது; கிடைத்த ஓர் ஏட்டை வைத்துச் செப்பம் செய்து பண்டிதர் உலகநாத பிள்ளை 1933இல் இதை அச்சிட்டார். அச்சிட்ட பகுதியானது 103 பாடல்களை உடையது எனத் தெரிகிறது. இடையில் பல பாடல்களும் அடிகளும் இல்லை. நாலாயிரப் பிரபந்தத்துள் பெரியாழ்வார் கண்ணன் துதியாகப் பாடியுள்ள பிள்ளைத்தமிழ்ப் பகுதிகள் நீங்கலாக, இந்நூலே முதன்முதலாகத் தோன்றிய தனியான பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமாகும். இதன் பருவங்கள் முறையே காப்பு 11, செங்கீரை 11, தால் 11, சப்பாணி 11, முத்தம் 11, வாரானை 11, அம்புலி 12, சிறுபறை 7, சிற்றில் 11, சிறுதேர் 7 பாடல்கள் கொண்டன. சிறுபறை நாற்சீர் கொண்ட சந்தக் கலிவிருத்தமாக உள்ளது. இம்மன்னன் உலாக்கொண்ட செய்தியை,

> கூடிய சீர்தந்த என்றெடுத்த கூத்தனுலாச்
> சூடிய விக்கிரம சோழனும் – பாடிய
> வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
> பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்.

என்று பின்வந்த சங்கரசோழன் உலா குறிப்பிடுகிறது. இக்கண்ணிகளால் குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரிடம் முதலில் உலா மாலை பாடப்பெற்று, பின்னர் பிள்ளைத்தமிழும் பெற்றான் என்று கருதலாம்.

'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்ற சூத்திரம்: (தொல்காப்பியம் பொருள். 84) "குழவி மருங்கினுங் கிழவதாகும்: 'மருங்கு' என்றதனான் மக்கட் குழவியாகிய ஒருமருங்கே கொள்க, தெய்வக் குழவியின்மையின் இதனை மேலவற்றோடொன்றாது வேறு கூறினார். தந்தையரிடத்தன்றி ஒரு திங்களிற் குழவியைப் பற்றிக் கடவுள் காக்க என்று கூறுதலானும், பாராட்டு மிடத்துச் செங்கீரையுந் தாலுஞ் சப்பாணியும் முத்தமும் வரவுரைத்தலும், அம்புலியும் சிற்றிலும் சிறுதேரும் சிறுபறையுமெனப் பெயரிட்டு வழங்குதலானு மென்பது" என்று நச்சினார்க்கினியர் எழுதுகிறார். இங்கு இவர் பத்துப் பருவங்களையும் குறிப்பிட்டிருப்பது காணத்தக்கது. அவருக்கு முன் தோன்றியிருந்த பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தம் குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஒன்றே. இப்பகுதியில் அவர் பிள்ளைத்தமிழ் என்ற பெயரைச் சொல்லவில்லை.

பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் பாடுவதற்கு வழிகாட்டினர் என்று கருதுகிறோம். உண்மை. அவர் தமது பாசுரங்களில், பிள்ளைத்தமிழுக்குரிய பொருள் என்று கருதுபவற்றில், சில வற்றையே கூத்தர் எடுத்துப் பருவமாக அமைத்திருக்கிறார். எடுத்துக்காட்டாக அவர் பாடியுள்ள செங்கீரை தால் சப்பாணி அம்புலி என்ற நான்கே கூத்தர் கொண்டுள்ளார். தளர்நடைப் பருவம், அச்சோப்பருவம் என்றெல்லாம் பருவப்பெயர்களும் பதிகங்களில் இடப்பட்டிருப்பதைக் காண்கிறோம். புறம் புல்கல் புச்சிகாட்டுதல் முதலியனவும் உந்திபறத்தலும், சிற்றில் சிறுதேர்போலக் கொள்ளத்தக்கனவே. அம்புலி அழைத்தல் போல உள்ளது காக்கையை வாவெனல். மஞ்சனமாட நீ வாராய் என்ற நீராட்டற் பதிகம் பின்னர், பெண்பாற்பருவத்துக்குரிய தாய்ச் சொல்லப்பட்டுள்ளது. ஆழ்வார் முத்தம் தா என்று ஒரு பாடலை முடிப்பதும் இங்கு நோக்கத்தக்கது (245). இது முத்தப் பருவத்துக்குத் தோற்றுவாயாகலாம். என்ன ஆதாரம் அல்லது மரபுகொண்டு, கூத்தர் சிலவற்றைக் கொண்டார் சிலவற்றைத் தள்ளினார் என்று அறிய முடியவில்லை. இவர் காலத்திலும் முன்னரும் (பன்னிருபாட்டியல்) பிள்ளைத்தமிழ் இலக்கணம் சொல்லப்பட்டிருந்தமை உண்மையே. இலக்கியமின்றி எவ்வாறு இலக்கணம் வந்தது என்பது பெருவியப்பு எப்படியிருப்பினும், கூத்தர் கொண்ட பருவ அமைப்புக்கள் தமிழ்மொழியில் மிகச் சிறந்ததோர் இலக்கிய மரபுக்கு வித்தாயின. பிள்ளைத்தமிழ் நீண்டவிருத்தத்தால் பாடுதல், சந்தத்தால் பாடுதல், ஒரே

பருவத்தில் சந்தம் மாற்றிப் பாடுதல், பருவத்தின் பொருளை மகுடத்தில் அமைத்துப்பாடுதல் முதலாக இவர் கையாண்ட உத்திகள் மொழியை வளம்படுத்தியிருக்கின்றன. இவர் பிள்ளைத் தமிழ் பாடிய நேரம் தமிழ் வரலாற்றில் பொன்னான நேரம் என்பதில் ஐயமில்லை.

பிள்ளைத்தமிழ் கூறும் செய்திகளை ஆராயுமுன், பிள்ளைத் தமிழ் இலக்கணம் சிறிது அறிதல் இங்கு பயனுடையதாயிருக்கும். மற்றப் பலவகைப் பிரபந்தங்களைப் போலப் பிள்ளைத்தமிழ் அவ்வளவு பழமையானதன்று. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழுக்கு முன்னர் தனிப்பிரபந்தம் இல்லை. எனினும், பன்னிரு பாட்டியல் (இதன் காலம் 985 - 1000) பிள்ளைத்தமிழைப் பேசு கிறது. இதனுள் 85 வரி கொண்ட 15 நூற்பாக்கள் பிள்ளைத்தமிழ் இலக்கணம் வரையறுக்கின்றன; இப்பாட்டியலில் அளவால் நீண்டது பிள்ளைத்தமிழின் இலக்கணமே. இது பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என்று பெயர்பெறும். இங்கு நாம் குறிப்பிட விரும்புவது ஒரு நூற்பா:

> **தொன்னில வேந்தர் சுடர்முடி சூடிய**
> **பின்னர்ப் பெறாஅர் பிள்ளைப் பாட்டே.**

இதன்படி, அரசர் மகுடம் சூடிய பின்னர் அவர் மீது பிள்ளைப் பாட்டு பாடுவது மரபன்று. முடிசூடிய அரசனைப் பிள்ளை யாகப் பாவித்தல் பொருந்தாது அல்லவா? இவ்விலக்கணத்தைப் பொருத்திப் பார்த்தால் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழின் காலமும் அதனில் காணும் சில செய்திகளும் விளக்கமுறும். இதன்படி இந்நூல் குலோத்துங்கன் மகுடம் சூடுமுன் அவன் இளவரசாய் இருந்த காலத்துப் பாடப்பட்டது என்பது தெளி வாகும்.

காலத்தால் பன்னிரு பாட்டியலுக்கு அடுத்து வந்த பாட்டியல் வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல் ஆகும். அதன் காலம் மூன்றாம் குலோத்துங்கன் காலம் (1178 - 1218.) ஆகவே, அதை இங்கே நாம் கருதவில்லை. இரண்டாம் குலோத்துங்கன் மகுடம் சூடிய பிறகே அனபாயன் என்று சொல்லப்பெறுகிறான். அனபாயன் என்ற சொல் பிள்ளைத் தமிழில் ஓர் இடத்தில் கூட வரவில்லை. ஆதலால் இந்நூல் மகுடம் சூடுமுன் பாடப்பட்டது. என்பது, இச்சொல் அமைதி யினாலும் நன்கு விளங்குகிறது. இனி இந்நூலால் அறியப்படும் செய்திகளை இங்கு கூறுவோம்.

இலக்கணமானது, திருமாலுக்கு இன்னவகை இலக்கணங்கள் உரியவை ஆதலினால், காப்பின் முதலில் அவரைப் பாடவேண்டும் என்று சொல்கிறது. ஆனால் கூத்தர் இங்கு முதலில் விநாயகர் காப்புக் கூறி, காப்புப் பருவத்து 11 பாடல்களிலும் திருமாலைக் குறிப்பிடவேயில்லை. தீவிர சைவரான கூத்தர் திருமாலை விலக்கி விட்டார் என்று சொல்வதைவிட, அவர் இலக்கணத்தை நோக்காது, தம் மனம் போனபடி பாடினார் என்பதே முறை. இவர் திருமாலைக் கடலில் போட்ட செய்தியைச் சிறப்பித்துச் சொல்பவர் அல்லவா? பிள்ளைத் தமிழில் குலோத்துங்கனுடைய முன்னோர் செய்திகள் பல போற்றி உரைக்கப்படுகின்றன - முதுமக்கட்சாடி வகுத்த சுரகுரு, இந்திரனை விடையாகக் கொண்டு ஊர்ந்த ககுத்தன், காவேரிக்குக் கரை கட்டிய கரிகாலன், பொய்கையார் களவழிப் பாடல் கேட்குப் பொறையனைச் சிறைவிட்ட கோச்செங்கணான், கடாரங்கொண்ட இராசேந்திரன், கல்யாணம் அட்ட இராசேந்திரன், கூடல் சங்கமத்துப் போர் வென்ற வீர ராசேந்திரன்,கலிங்கப் போரைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். இங்கு இரண்டு போர்களும் சொல்லப்படுகின்றன. குலோத்துங்கனுடைய தந்தை விக்கிரமன் செய்த தென்கலிங்கப் போர் நூறிரட்டித்த ஏழ் கலிங்கத்தர் ஓடிடச் செற்ற சென்னி சேய், பரணிக் கவிதர ...... கண்டருளிய விக்கிரம சோழன், ஏழ் கலிங்கமும் விழுங்கப் பகட்டணி துணித்தொரு பெரும் பரணி கொள்ளும் சேவகன் அகளங்கன் மதலாய் என்பன, விக்கிரம சோழனுடைய தென் கலிங்கப்போரைக் குறிப்பிடுகின்றன. வடகலிங்கப் போரை வட கலிங்கன் புறக்கிட்ட நாள் என்றும், ‘பாடற் பெரும் பரணி தேடற் கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவ’ என்றும் குறிப்பிடுகின்றார். இப்போர் வென்ற முதற் குலோத்துங்கனைப் பண்டித சோழன் என்றும், செயங்கொண்ட சோழன் என்றும் சொல்கிறார். அரவணையைச் சேவித்தோம் என்று சொல்வது, ஒருகால் இராச மகேந்திரன் திருவரங்கத் திருமாலுக்கு செய்தளித்த மாணிக்கப் பாம்பணையைக் குறிப்பிடலாம்.

இங்கு இவர் குலோத்துங்கனைக் குலோத்துங்கன், எதிரிலாப் பெருமாள், அபயன் என்றே பலகாலும் சொல்லுகிறார். ஓர் இடத்தில் மட்டும் இராசேந்திர சோழன் என்கிறார். இவன் தன் சேவகம் நிரம்பு திருவீதி புலியூரிற் செய்த பெருமான் என்று தில்லைத் திருப்பணியைக் குறிப்பிடுகிறார்.

*கரிகாலன் உருத்திரங்கண்ணனாரிடம் பட்டினப்பாலை என்னும் பாடலைப் பெற்றுப் பதினாயிரம் பொன் கொடுத்தான் என்பது வரலாறு. அதனோடு புகார் நகரத்தில் முத்தினும் பொன்னினும் செய்த ஒரு பதினாறுகால் மண்டபம் அந்நூல் அரங்கேற்றத்துக்காக அமைத்தான் என்று தனிப்பாடல் கூறும்; இச்செய்தியைக் கூத்தர் இரண்டு பாடல்களில் குறிப்பிடுகிறார்:*

அன்று கவிக்கு வியந்து நயந்து தரும்பரி சிற்கொருபேர்
ஆழியில் வந்து தராதல நின்று புகாரி லனைத்துலகும்
சென்று கவிக்கு மகத்தது தூண்வயி ரத்தினு முத்தினுமெய்
செய்ததொர் பொற்றிரு மண்டபம் நல்கிய செயகுல நாயகமே.

நாவலனே கிடையா நவமணி மண்டப நின்
பாவலனே கவரப் பண்டு பணித்த வனே.

*பொய்கையார் களவழி பாடிய செய்தியை நூலின் இறுதிப் பாடலில் ஆசிரியர் தனியே சொல்கிறார்:*

பாடிய பொய்கை களவழி கேட்டுப்
பழம்படியே படிப்படிந்து
வாடிய பொறையனைச் சிறை மீட்ட
மன்னவ னொருதிரு மருகன்
கோடியர் புலவர் விறலியர் பாணர்
குலகிரி களுங்குறை நிறையத்
தேடிய நிதியம் குலோத்துங்க சோழன்
உருட்டுக சிறுதேரே.

*குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்திகள் பூமன்னு பதுமம் முதலான பலவும் பூமன்னு என்றே தொடங்குவன. அவற்றை யொப்ப, இப்பிள்ளைத் தமிழும் 'பூமன்னு பொழிலேழும்' என்றே தொடங்குவது குறிப்பிடத்தக்கது. ஒருகால் கூத்தரே மெய்க்கீர்த்திகளையும் பாடி அமைத்திருக்கலாம். இதனுள், சயங்கொண்டாரின் பரணியைப் 'பாடற் பெரும் பரணி' என்ற வரிகளால் இவர் சிறப்பித்திருப்பது வேறிடங்களில் சொல்லப் பட்டது. ஆழ்ந்த சிவபக்தியுடையவர் கூத்தர் என்பதைத் தக்க யாகப்பரணியால் நன்கு அறியலாம். எனினும், சமயப்பொறை யுடையவர் என்பதையும் திருமாலையும் போற்றுகின்றவர் என்பதையும், 'ஆரேயெனுமொன்று' என்ற இவரது தனிப்பாட லாலும், பிள்ளைத் தமிழுள் பல இடங்களில் குலோத்துங்கனைத்*

திருமால் என்றே குழைந்து பாடுவதாலும் அறியலாம் குரு குலோத்தமர் தூதா மாபூதா தாரா - கோலவேய்க் குழலாலே மால்சூழ் கோபாலா;

மல்லையில் வழங்குமிள வேறுமுது கஞ்சன்
வஞ்சவய வேறுமடி யத்தழுவு மல்லா!
முல்லையில் வெறுஞ்சில துழாய்கமழ் முகுந்தா!
முன்பொரு வலம்புரி முழக்குமுகில் வண்ணா!

என்பன முதலான பல தொடர்கள் காண்க.

கூத்தர் சோழனை நித்திய கீதப் பிரமோகன், துரகவித்தியா விேனாதன், ஞான கம்பீரன் முதலான சொற்களால் போற்று கின்றார். இவை இவனது கலைத்திறனையும் படைத்திறனை யும் காட்டுவன. இங்கு சொல்லப்பட்ட பல செய்திகளில், சிவ பெருமான் பெயர் செஞ்சடையப்பர் என்பதும், அவர் அமுத சூத்திரம் அறுபதாய்ச் சமை நூல் அருளும் மூர்த்திகள் என்பதும் குறிப்பிடத்தக்கவை. இவன் முன்னோருடைய வெற்றிச் செயல் களும் இவனுடைய வெற்றிச் செயல்களும் மிகச் சிறப்பாக இங்கு சொல்லப்பட்டுள்ளன. இந்நூல் கூத்தருக்குரிய சொல்வளமும் சந்தச் சிறப்பும் நிரம்பப் பெற்றது. வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றைக் கூறுவதால் வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் பயன் படுவது. இந்நூல் எல்லாப் பாடல்களின் முழு வடிவமும் விளங்க வெளிவராதது பெருங்குறை. கிடைத்த ஏட்டைப் பயன்படுத்தி இந்த அளவிற்கேனும் நூலை அமைத்துத் தந்த பிள்ளையவர் களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையது.

## இராசராசன் உலா

கூத்தர் பாடிய உலாக்களில் இது மூன்றாவதாகும். இந்நூல் பாடிய காலத்தில் கூத்தர் மிக்க முதுமையடைந்திருந்தார். இந் நூலானது 391 கண்ணிகளும் இறுதியில் ‘அன்று தொழுத அரிவை’ என்ற தனி வெண்பா ஒன்றும் உடையது. வழக்கம் போல் இதன் தொடக்கப் பகுதியில் குலப்பெருமை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பிரமன் தொடங்கி இரண்டாம் இராசராசன் வரை உள்ள வரலாறுகளில், மார்பில் 96 புண்கொண்ட மன்னன் முதல் இப்பாட்டுடைத் தலைவன் வரையுள்ள அரசர்கள் முறை பிறழ்ச்சி இன்றிச் சொல்லப்பட்டுள்ளனர். ஆனால் பண்டை அரசர் வரலாறு மிகவும் பிறழ்ச்சி உடையதாகவுள்ளது.

விக்கிரமன் உலாவில் பண்டைய வரலாற்றை ஓரளவு திருத்த மாகச் சொன்ன கூத்தர், மற்ற இரு உலாக்களிலும் அவ்வளவு திருத்தத்தைக் கொள்ளவில்லை போலும்.

இராசராசன் உலாவினால் தெரியவரும் செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறோம். இம்மன்னன் வரராசராசன், சனநாதன், கண்டன் என்ற பெயர்களை உடையவன். இவனும் தந்தை போலக் கருநிறம் பொருந்தியவன். ஒட்டக்கூத்தர் பாடிய இவ் வுலாவுக்கு இவன் கண்ணிதோறும் ஆயிரம் பொன் சொரிந்தான்:

– தெள்ளித்தம்
முன்னா யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னா யிரம் சொரிந்த பூபதியும்.

என்பது சங்கரசோழனுலாக் கண்ணி;

– கூடல்
நராதிபன் கூத்தன்எதிர் நண்ணியோர் கண்ணிக்கு
ஓராயிரம்பொன் ஈந்த உலாவும்.

என்பது தமிழ்விடுதூது (கண்ணி 58 - 9). களவழிப் பாக் கேட்டமை பலமுறை குறிப்பிடுகிறார். இராசராசனுடைய யானையின் பெருமை மிகவும் புனைந்துரைக்கப்படுகிறது. குலோத்துங்கன் தில்லையில் செய்த திருப்பணிகளை இந்நூல் மிகவும் விரிவாகக் குறிப்பிடுகிறது:

சேய பெரிய திருக்குலத்து – நாயகன்
சிற்றம் பலமும் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும் – சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமும் கோபுரமும்
சூளிகையும் எத்தெருவும் தோரணமும் – ஆளுடையாள்
கோயில் திருக்காமக் கோட்டமும் அக்கோயில்
வாயில் திருச்சுற்று மாளிகையும் – தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்தும்
முன்னிற் கடலகழின் மூழ்குவித்த – சென்னி
திருமகன் சீராச ராசன்.

இராசராசனுக்கு முன்னிருந்த புராண வரலாற்றுச் சோழர் தேவருலகஞ் சென்று தங்கள் பராக்கிரமங்களை நிலை நாட்டினர். அவ்வுலகங்களிலிருந்து வந்த அரமாதர் பத்துக் கண்ணிகளால் வருணிக்கப்பட்டுள்ளனர். பேதை அம்பாவை பாடுகிறாள். கச்சிக்கற்றளி (கயிலாயநாதர் கோயில்) ஒரு கண்ணியில் சொலப்

பட்டிருப்பது சிறப்பு. இராசராசனுடைய யானை, தமிழ் வேந்தர் பாடும் பரணி புனைந்த பகடு. தில்லையை ஆசிரியர் மிகவும் உருக்கமாய்க் குறிப்பிடுவது காணத்தக்கது:

– பார்த்திபர்தம்
தொல்லைத் திருமரபுக் கெல்லாம் தொழுகுலமாம்
தில்லைத் திருநடனம் சிந்தித்து.

இனி, தமிழ் வரலாற்றினுக்கு இவ்வுலா செய்யும் பேருதவி, முன்னிருந்த மூன்று பரணிகளைக் குறிப்பிடுவதாகும்.

பப்பத் தொருபசிப்பேய் பற்ற வொருபரணி
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோன் – ஒப்பொருவர்
பாட அரிய பரணி பகடொன்றின்
கூடல சங்கமத்துக் கொண்டகோன். 24 – 25

இங்கு இரண்டு பரணிகள் கூறப்பட்டுள்ளன.* முதலாவது கொப்பத்துப் பரணி. கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள கொப்பம் என்ற ஊரில் இரண்டாம் இராசேந்திரசோழன் (1054 - 63) மேலைச் சாளுக்கிய அரசனான ஆகவமல்லனுடன் போரிட்டு வெற்றி பெற்றான். அப்போரை நடத்தியவன் முதல் இராசேந்திரனுடைய முதல் புதல்வனும், அவனுக்குப் பின் பட்டம் எய்தியவனுமாகிய முதல் இராசாதிராசன். போர்க்களத்தில் இவன் இறக்கவே தம்பியாகிய இராசேந்திரன் தொடர்ந்து போரை நடத்தி வெற்றி பெற்றான். கொப்பத்து வெற்றியைக் குறித்த இப்பரணியைக் “கொப்பத்துப் பரணி” எனல் பொருந்தும்.

மற்றொரு பரணியானது வீரசோழன் என்னும் வீரராசேந்திரன் (1063 - 1070) கூடல் சங்கமம் என்ற இடத்தில் மேலைச் சாளுக்கருடன் போர்செய்து பெற்ற வெற்றியைச் சிறப்பிப்பது. இப்போரில் சாளுக்கிய அரசனான ஆகவ மல்லனும் அவனுடைய பெருஞ்சேனையும் முறியடிக்கப்பட்டனர். இப்போரைக் குறித்த தனிப்பாடல்கள் வீரசோழிய உரையுள் காணப்படுகின்றன. அன்றியும், விக்கிரமசோழன் உலாவும் இப்பரணியைக் குறிப்பிடுகிறது. இந்நூலும் இப்போது கிடைக்கவில்லை. ஆனால் கூத்தர் காலத்தில் இப்பரணிகள் வழக்கில் இருந்தன என்று நாம் அறிகிறோம்.

---

* இவ்விரு பரணிகளின் விளக்கத்தை எமது தமிழ் இலக்கிய வரலாறு 11ஆம் நூற்றாண்டில் காணலாம்.

மூன்றாவது பரணி கூத்தரே பாடிய கலிங்கப்பரணி; முன்னமே குறிப்பிட்டோம்.

## தக்கயாகப் பரணி

இராசஇராசனைச் சிறப்பித்துக் கூத்தர் செய்த மற்றொரு நூல் இதுவாகும். இன்று கிடைக்கின்ற சிறப்பான பண்டைப் பரணி நூல்களில் இது கலிங்கத்துப் பரணிக்கு அடுத்த பழமையும் சிறப்பும் உடையது.* பரணி என்னும் பெயர்க்காரணம் பலவாறாகக் கூறப்படினும், காளியையும் யமனையும் தன் தெய்வமாகப்பெற்ற பரணி என்னும் நட்சத்திரத்தால் வந்த பெயர் என்பதே பொருத்தமுடையது. அமரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரன் மீது பாடுவது பரணி. இது 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. கடைதிறப்பு முதல் களங்காட்டல் வரையிலுள்ள உறுப்புக்களையும் புறப்பொருள் அமைதி தோன்றப் பாடி, போர்க்களத்தில் இறந்து கிடக்கும் வீரர்களின் உடல் முதலியவற்றால் கூழ்சமைத்துக் கூளிகள் காளிக்குப் படைப்பதாகப் பாடுதல் மரபு. 'காடுகெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு' என்பர் பேராசிரியர். இந்நூல் வீரபத்திரப் பரணி என்று பெயர் வழங்கினும், அப்பெயர் மரபுக்கு முரண். பரணி, தோற்ற தக்கன் பெயரால் வழங்க வேண்டுமேயன்றி, வென்ற வீரபத்திரர் பெயரால் வழங்கலாகாது.

கலிங்கத்துப்பரணி உண்மையான ஒரு போர் நிகழ்ச்சியைக் குறித்துப் பாடப்பெற்ற நூல். சயங்கொண்டார் பாடிய இந்த நூலும், மேலே குறிப்பிட்டபடி கொப்பத்துப் பரணியும் கூடலசங்கமத்துப் பரணியும், விக்கிரமசோழன் வெற்றியைக் குறித்துக் கூத்தர் பாடிய மற்றொரு கலிங்கத்துப் பரணியும் இவ்வாறு சிறப்பித்துப் பாடப்பெற்றவையாகும். ஆனால் தக்கயாகப் பரணியானது இவ்வாறின்றி ஓர் இதிகாச வரலாற்றைப் பொருளாகக்கொண்டு பாடப் பெற்றிருக்கிறது. சிவபெருமான் தம்மை அவமதித்த தக்கன் செய்த யாகத்தைக் கலைக்க வேண்டி வீரபத்திரரைத் தோற்றுவித்து அவரால் தக்கனையும் அவன் யாகத்தையும் அழித்த செய்தியைப் பொருளாக அமைத்து

* பரணி பற்றிய விரிவான ஆராய்ச்சியைச் சயங்கொண்டார் - கலிங்கத்துப் பரணி என்ற கட்டுரையில் காணலாம்.

இப்பரணி பாடப்பெற்றுள்ளது. இவ்வாறு புதிய வழி வகுத்தது ஒட்டக்கூத்தருக்குரிய சிறப்பு. பிற்காலத்தில், கலிங்கத்துப் பரணி போல் உண்மைப்போர் நிகழ்ச்சிகளைக் கொண்டு பாடப் பெற்ற பரணிகள் எழவில்லை. ஆனால் புராண நிகழ்ச்சிகளைப் பொருளாக வைத்துத் தக்கயாகப்பரணி போன்ற பரணிகள் சில எழுந்தன. சிறப்பாகக் கூறத்தக்கவை இரணியவதைப் பரணி, திருச்செந்தூர்ப் பரணி என்பன. தத்துவக் கருத்துக்களை வைத்துப் பாடப்பெற்ற அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாச வதைப் பரணி என்பன வேறுவகை. மேலும் சிவபெருமானுடைய பராக்கிரமங்களைப் பாடுகின்ற சில தாழிசைகள் பரணி என்ற பெயரால் வழங்குகின்றன. இவை சிவாலயங்களில் அந்தி வழி பாட்டின்போது ஓதப்பெறுதல் உண்டு; இவை பரணிப் பிரபந்தங் களல்ல; இங்கு ஆன்மாவைக் கலந்து ஆனந்தம் அருளவேண்டும் என்று இறைவனை நோக்கி வேண்டுவதாகப் பாடல் அமைந் துள்ளது. பரணியின் கடைதிறப்புப் போன்ற சந்த அமைப்பு உடைமையால், பொருளறியாதவர்கள் இதைப் பரணி என்று பெயரிட்டனர் போலும். பின்வருவன, தொட்டிக்கலைச் சுப்பிர மணிய முனிவர் இவற்றிய சிதம்பரேசர் பரணிக் கண்ணிகள்:

விரை யலர்ந்த புயல் அளக மங்கை மனம்
மிகஇரங்கி உரை குழறுமால்
மரை பெறுங் கலைசை வளர்சிதம் பரநல்
வாகரே கலவி புரிமினோ.

கவின்கைக் கமலம் குவித்துவிழிக்
காவி மலர்த்தி வழிபார்க்கும்
அவன்பாற் கலைசைச் சிதம்பரநல்
அழக ரேவந் தருள்மினோ.

## நூற்பொருள்

தக்கயாகப்பரணி என்பது, தக்கன், சிவபெருமானை மதிக்காமல் செய்யப் புகுந்த யாகத்தைச் சிவபெருமான் வீர பத்திரக் கடவுளைத் தோற்றுவித்து அவரால் அந்த யாகத்தை அழித்து, தக்கனுக்கு உதவியாக வந்த தேவர்கள் அனைவரையும் வென்று பங்கப்படுத்தித் தக்கனுடைய தலையையும் தடிந்த புராண வரலாற்றைப் பொருளாகக் கொண்டு காப்பிய நயம் படப் புனைந்த ஒரு பிரபந்தம். இதனுள் இரண்டாம் இராச ராசனுடைய புகழ் மிகுதியாகச் சொல்லப்படுவதால், அவன்

விரும்பியே கூத்தர் இந்நூல் செய்தார் என்றும் சொல்வர். தக்கயாக சங்காரம் என்பது சிவபெருமானுடைய அட்ட வீரட்டங்களுள் (எட்டுப் பராக்கிரமச் செயல்களுள்) ஒன்று; இது நிகழ்ந்த இடம் சோழநாட்டுத் திருப்பறியலூர். கலிங்கத்துப் பரணியிலிருந்து இது பொருளால் வேறுபட்டமை போலவே, அமைப்பாலும் வேறுபட்டது. இரண்டின் அமைப்பை விளக்கிக் காட்டும் ஓர் அட்டவணையை இதன்பின்னே சேர்த்திருக்கிறோம்.

கலிங்கத்துப் பரணியில் பாட்டுடைத் தலைவன் முதற் குலோத்துங்கசோழன்; இங்கு சிவபெருமானே பாட்டுடைத் தலைவர்; ஆக்குவித்தோன் இரண்டாம் இராசராசன்.

தக்கயாகப் பரணியானது, காப்பு, கடவுள் வாழ்த்து என்று தொடங்கி, வாழ்த்து இறுதியாகப் பதினொரு உறுப்புக்களை உடையது. கடவுள் வாழ்த்துப் பகுதியில் முதலாவதாக வைரவக் கடவுள் காப்பு. வீரபத்திரருடைய வெற்றியைக் கூறுவதால் இவ்வாறு காப்பு அமைத்தது சிறப்பு.

இந்நூலாசிரியருடைய சந்தப்பொலிவு காப்புமுதலே தொடங்குகின்றது. பின்னர் உமைபாகர், விநாயகர், முருகன், திருஞானசம்பந்தர் ஆகியோர் துதியும் பொதுவியல் வாழ்த்தும் உள்ளன. சம்பந்தர் துதியால், இந்நூலில் சிறப்பாகச், சம்பந்தர் வரலாறு கூறப்படுவது சுட்டப் பெறுகிறது; கலிங்கத்துப் பரணியில் பதின்மர் வாழ்த்து இருக்க, இங்கு ஐவர் வாழ்த்தே உள்ளது.

இரண்டாவது கடை திறப்பு; வீரபத்திரருடைய வெற்றியையும் தக்கயாக சங்காரத்தில் தேவர்கள் தோற்ற செய்தியையும் பாடுதற்குக் கதவு திறக்கும்படி பலவகை மகளிரை அழைத்தல் இங்கு கூறப்படுகிறது. மூன்றாவது காடு பாடியது - இங்கு தேவி கோயில் கொண்டுள்ள பாலைவனம், சோலை, யோகினிகள் வைரவர் ஆகியோரின் செயல்கள் வருணிக்கப்படுகின்றன. தேவியைப் பாடியது - காளியின் பெருமையும் பூசைக்குரிய பொருள்களும். பேய்களைப் பாடியது - அவற்றின் உருவ வருணனையும் பசி மிகுதியும்.

கோயிலைப் பாடியது - இங்கு கூத்தர் புதிய அமைப்பை மேற்கொள்கிறார். காளிகோயில் முதலியவற்றைச் சிறப்பித்துப் பின்னர் காளிதேவி, முருகக்கடவுள் சம்பந்தராக வந்து சமணரை

வாதில் வென்ற கதை கூறுமாறு நாமகளைக் கட்டளை இட, அவ்வாறே நாமகள் கூறுகிறாள். இப்பகுதியில் சம்பந்தர் மதுரை அடைந்தது, சமணர் தீயிட்டது, அத்தீ கொடும்வெப்பு நோயாகப் பாண்டியனை வருத்தியது, மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளின்படி சம்பந்தர் நோய் நீக்கியது, அரசன் நீறிட்டது, நீர் வாதம் நெருப்பு வாதம் இரண்டிலும் சம்பந்தர் வென்றது, பாண்டியனது கூனை நீக்கியது. அரசன் சமணரைக் கழுவேற்றப் புகுந்தபோது சம்பந்தர் தடுத்தது, அவர்கள் தாமே கழுவேறியது - ஆகிய செய்திகள் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. நாமகள் மூலமாக இவ்வரலாற்றை உரைத்த காரணத்தால் கூத்தர் தமக்கு நாமகளிடத்தும் சம்பந்தரிடத்துமுள்ள அன்பைப் புலப்படுத்தியிருக்கிறார்.

ஏழாவது பேய்முறைப் பாட்டில், பேய்கள் தங்கள் பசியைக் கூறி முறையிட, அப்போது தக்கயாக அழிவை ஒரு பேய் வந்து கூறுகிறது. காளிக்குக் கூறியது - வேத விதிக்கு மாறாகத் தக்கன் சிவபெருமானை மதியாது செய்த யாகத்தை வீரபத்திரர் அழித்த செய்தியும் தேவர்கள் பங்கப்பட்ட செய்தியும் இங்கு விரித்துக் கூறப்பட்டது. கூழ் அடுதலும் இடுதலும் - பேய்கள் போர்க்களத்தில் இறந்தவர்களுடைய உடற்பகுதிகளைக் கொண்டு கூழ்சமைத்து உண்டு களித்து, இராசராசனையும் முன்னோரையும் வாழ்த்துகின்றன. களங்காட்டல் - தேவிக்குச் சிவபெருமான் போர்க்களத்தைக் காட்டுதலும் தேவியின் சினம் தணிதலும், தேவர் வேண்டியவாறு சிவபெருமான் சினந்தணிந்து தக்கனுக்கு ஆட்டுத்தலையைத் தந்து ஏனைய தேவரை எழுப்புதலும்.

இறுதி வாழ்த்துப் பகுதி. கூத்தர் இங்கு இராசராசனையும், உறையூர், காவிரியையும் வாழ்த்துகிறார். இறுதியில் இரு பர்டல்கள் ஒட்டக்கூத்தரைக் கூத்தன் கவிச்சக்கரவர்த்தி என்று வாழ்த்துகின்றன; இவை பிற்காலத்தில் செய்யப்பட்டன போலும்; நூல் முழுமையும் 815 தாழிசைகள் உடையது.

ஆறாம் பகுதி கோயிலைப் பாடியது என்ற இடத்தில் தேவி நாமகளை அழைத்து, 'முருகன் மதுரையில் வெல்லும் இனியதொரு கதை சொல்லு' எனவும், அவள் சம்பந்தர் வரலாற்றில், அவர் மதுரை சென்று சமணரை வென்ற பகுதி மட்டும் சொல்லுகிறாள். இப்பகுதி மட்டும் 53 தாழிசை, கலிங்கத்துப் பரணியில் முதுபேயின் இந்திரசாலம் கண்டு மற்றைப் பேய்கள் பசியால்

**கலிங்கத்துப் பரணியும் தக்கயாகப் பரணியும்**

| எண் | கலிங்கத்துப் பரணி – பகுதி, விளக்கம் | பாடல் | எண் | தக்கயாகப்பரணி – பகுதி, விளக்கம் | பாடல் |
|---|---|---|---|---|---|
| - | காப்பு | இல்லை | - | வைரவர் காப்பு | 1 |
| 1 | கடவுள் வாழ் - உமாபதி, திருமால் நான்முகன், சூரியன், கணபதி, முருகன், நாமகள், துர்க்கை, சத்தமாதர், அறு வகை வாழ்த்து. | 20 | 1 | கடவுள் வாழ்த்து - உமாபாகர், விநாயகர், முருகர், சம்பந்தர், வாழ்த்து. | 9 |
| 2 | கடை திறப்பு | 54 | 2 | கடை திறப்பு | 38 |
| 3 | காடு பாடியது | 22 | 3 | காடு பாடியது | 55 |
| 4 | கோயில் பாடியது - அமைப்பு, வழிபடுவோர், பலியிடுதல், பேய்கள், சுடலை. | 24 | 6 | கோயிலைப் பாடியது - யாமள நூலின் படி என்பது: மரநிழல், அமளி, கொலு, ஆயுதங்கள், திருமேனி; சம்பந்தர் கதை சொல்ல நமகளைப் பணித்தல். | 86 |
| 5 | தேவியைப் பாடியது | 14 | 4 | தேவியைப் பாடியது | 17 |
| 6 | பேய்களைப் பாடியது | 19 | 5 | பேய்களைப் பாடியது | 16 |
| 7 | இந்திரசாலம் - முது பேய் வருதல், தன் இந்திரசாலம் காட்டுதல், பிற பேய்கள் துன்புறல். | 25 | - | இல்லை. | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | இராச பாரம்பரியம் - குலோத்துங்கன் முன்னோர் வரலாறு, பேய் கூறுதல். | 34 | - | இல்லை. | - |
| 9 | பேய் முறைப்பாடு | 20 | 7 | பேய் முறைப்பாடு | 23 |
| 10 | அவதாரம் - குலோத்துங்கன் பிறந்து முடி சூடிக் கச்சிக்கு வருதல். | 80 | - | இல்லை. | - |
| 11 | காளிக்குக் கூளி கூறியது - கலிங்கர் திறை தராமை கேட்டு, சோழன் கருணாகரனைப் போருக்கு அனுப்புதல் - இரு படைகளின் எழுச்சி, போர், கலிங்கர் தோல்வி. | 160 | 8 | காளிக்குக் கூளி கூறியது - தக்கன் யாகம், உமாதேவிக்கு அவமதிப்பு, சிவ பெருமான் சினம், வீரபத்திரர் தோற்றம், பூதகணங்களோடு செல்லல், போர், யாகத்தின் அழிவு. | 483 |
| 12 | களங் காட்டியது - தேவி சென்று போர்க்களம் காணுதல். | 31 | | (9. மகா காளி களங் காண்டல் 2) | |
| 13 | கூழடுதல் - பேய்கள் குலோத்துங்கனை வாழ்த்திக் கூழ் அட்டு உண்ணல். | 94 | 9 | கூழடுதலும் இடுதலும் - பேய்கள் கூழட்டுக் காளிக்குப் படைத்து, இராசராசனை வாழ்த்தி உண்ணல். | 50 |
| | | | 10 | களங் காட்டல் - சிவபெருமான் தேவிக்குக் களம் காட்டல், தேவி அருளல், சிவபெருமான் அருள்புரிதல். | 22 |
| | (குலோத்துங்கன் வாழ்த்து 5) வாழ்த்து - பொதுவியல். | 2 | 11 | வாழ்த்து - இராசராசன், கூத்தன் கவிச்சக்கரவர்த்தி. | 15 |

துன்பமடைகின்றன. ஆனால் இங்கு தேவி இவ்வாறு சம்பந்தர் புகழைக் கேட்டுமுடிக்கும் நேரம், பேய்கள் முறையிடுதலும், அப்போது யுத்தகளம் போன பேய்களில் ஒன்று ஓடிவந்து தக்கயாக சங்காரத்தைச் சொல்ல, பேய்கள் வயிறார உண்ணலாம் என்று தெரிவிக்கிறது.

தக்கயாக சங்காரம் மிகமிகப் பழமையான புராணக்கதை. ஆனால் சம்பந்தர் வரலாறு மிகவும் புதிய கதை. அந்நிகழ்ச்சி யோடு இதையும் புகுத்திச் சொல்வதில் ஒட்டக்கூத்தருக்கு அசம்பாவிதம் ஒன்றும் தோன்றவில்லை.

நாமகள் கூறிய சம்பந்தர் வரலாற்றுப் பகுதியைச் சில சொற் களால் இங்கு கூறலாம். புகலிப் பெருந்தகை பொன்னி நாடு கடந்து போய், மதுராபுரித் திருவாலவாயை வணங்கினார். அவர் கோயில் கொண்ட மடத்தை வெங்கனல் கொண்டு குண்டர் கொளுத்தினார்கள். அவ்வெரி தென்னன் பெருமடத்தைச் சுடப் பிள்ளை திருவாய் மலர்ந்தது. அக்கனல் தென்னனைக் கொளுத்திற்று. சமணர் மந்திர தந்திரங்கள் பயனளிக்கவில்லை. அரசி அரசன் பக்கல் இருக்க, குலச்சிறை சென்று பிள்ளை யாரிடம் தம்குறை செப்பினார். அவர் வந்தார். அரசி வணங்கி, 'எம்பெருமானுக்கு இதுவோ தகவு' என்று முறையிட்டார். 'சூரியன்போல் தெறுகின்ற நோய் சந்திரன்போல் குளிரச் செய் வேன்' என்று சம்பந்தர் அருகில் ஒரு பீடத்தில் அமர்ந்தார். சமணர், 'சமணமுனிவரால் தீர்க்கவியலாத இவ்வெப்பு இச் சோழிய வைதிகச் சிறுவனால் தீர்க்கமுடியுமோ?' அரசன் திரு மேனியை இவன் தொடப்பெறுமோ?' என்றார். குலச்சிறை யாண்டார் அவரை அமர்த்தி, சம்பந்தரை வேண்டலும், இவர் திருநீறு நெற்றியில் இட்டார்; வெப்புத் தடைப்பட்டது. உணர்வு வந்த பாண்டியன், சம்பந்தரை அரியாசனத்தில் வைத்து தேவி யும் தானும் மந்திரியுமாக வணங்கினான். கண்டசமணர் 'நீரினும் நெருப்பினும் இட்டறிவோம்' என்றனர்; வைகையில் ஏட்டை இட்டு ஏடு நீரோடு போயிற்றானால் ஏடுடையாரைக் கழுவில் இடுக என்றனர். சமணரைக் கண்டு அஞ்சிய தேவி, இப்போர் வேண்டாம் என்று தடுத்தாள். சம்பந்தர் தேற்றினார். சமணர் ஏடுகள் நெருப்பில் சாம்பல் ஆயின. நீரில் போட்ட போது சென்று கடலிற் புக்கன. சம்பந்தர் நெருப்பில் இட்ட ஏடு பொன்போல் பிரகாசித்தது. நீரில் இட்டது எதிர்போயிற்று. செழியன் முதுகிலே

*சம்பந்தர் கை வைத்தவுடன் அவனுடைய கூன் நிமிர்ந்தது. சமணர் கழுவேறினர். சம்பந்தர் தம் நாடு திரும்பினார் - என்று அகிலகலாவல்லி கதையைச் சொல்லி முடித்தாள்.*

**நூல்**

*தக்கயாகப்பரணி சிறந்த இலக்கியச்சுவை உடையதென்பதில் ஐயமில்லை. காப்புச் செய்யுளே இப்பரணியின் சந்தச் சுவையை எடுத்துக் காட்டுகிறது:*

உரக கங்கணம் தருவன பணமணி
　உலக டங்கலும் துயிலெழ வெயிலெழ
உடைத விர்ந்ததன் திருவரை யுடைமணி
　உலவி யொன்றொடொன் றலமர விலகிய
கரத லந்தருந் தமருக சதிபொதி
　கழல்புனைந்த செம் பரிபுர ஒலியொடு
கலக லன்கலன் கலனென வருமொரு
　கரிய கஞ்சுகன் கழலிணை கருதுவாம்.

*இது போலவே வாழ்த்துப் பாடலும் சந்தச்சுவையும் பொருட் சுவையும் உடையது.*

இறைவாழி தரைவாழி நிரைவாழி இயல்வாழி இசைவாழியே
மறைவாழி மனுவாழி மதிவாழி ரவிவாழி மழைவாழியே.

*இயல் இசையை உரைகாரர் ஒழுக்கம் கீர்த்தி என்று எழுதுகிறார். மதி ரவி மழை என்பன, சிலப்பதிகாரத் தொடக்கத்திலுள்ள கடவுள் வாழ்த்தைத் தழுவியுள்ளன. தேவி நாமகளையழைத்து, சம்பந்தர் மதுரை சென்று சமணரை வென்ற கதை சொல்லச் சொல்லுகிறாள். இங்கு சம்பந்தரை முருகன், என் மருமகள் வள்ளி வதுவை மனமகிழ்பிள்ளை என்று குறிப்பிடுகிறாள்:*

வருகதை தெய்வ மகளென் மருமகள் வள்ளி வதுவை
　மனமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில் வெல்லும் இனிய
தொருகதை சொல்லு தரள ஒளிவிரி செவ்வி முளரி
　ஒளிதிகழ் அல்லி கமழும் ஒருமனை வல்லி எனவே.

*சம்பந்தர் முருகன் அவதாரம் என்ற கருத்தை ஒட்டக் கூத்தரே முதலில் தோற்றுவித்தவராவார் என்பதும், இதைச் சேக்கிழார் சொல்லவில்லை யென்பதும் இங்கு சொல்லப் பட்டன. சம்பந்தர் பாடலில் உள்ள அகச்சான்றுகளும் இக் கருத்துக்கு ஆதரவு தரவில்லை என்பதை மட்டும் இங்கு*

*குறிப்பிட விரும்புகிறோம். 'துறக்குமா சொலப்படாய்' என்ற பாடலில் (5.98.2) 'திருந்தடி - மறக்குமாறிலாத என்னை மையல் செய்து இம்மண்ணின் மேல் - பிறக்குமாறு காட்டினாய்' என்று சம்பந்தர் கூறியுள்ளது அவர் சிவானந்தமே அனுபவித்துக் கொண்டிருந்த முத்தி பெற்ற ஆன்மாவாகிய தம்மை, புதிதாக மையல் செய்து சிவபெருமான் மண்ணின்மேல் பிறவி எடுக்கச் செய்தார் என்று குறித்துப் பாடுவதாகும்.*

*கலிங்கத்துப் பரணியையும் தக்கயாகப் பரணியையும் ஒப்புநோக்கும்போது, பிந்தியது கடுநடையாயிருப்பது எளிதில் புலப்படும். சந்தமும் சொற்களும் சொற்றொடர்களும் கருத்தமைதியும் எளிமை பொருந்தியனவாயிரா. எனினும், கூத்தர் சம்பந்தர் வரலாற்றை தொடங்கியவுடனேயே நடையும் தொடையும் எளிமையாகி விடுகின்றன. முதற்பாடலே இக்கருத்துக்கு எடுத்துக்காட்டாகும். அன்றியும் சம்பந்தர் முருகப்பெருமானின் அவதாரம் என்பது, பின்வந்த அருணகிரிநாதர் போன்ற சிறந்த முருகபக்தருடைய கருத்து. இக்கருத்தைச் சேக்கிழார் சொல்லவில்லை. ஆனால் இக்கருத்து ஒட்டக்கூத்தருக்கு உடன்பாடு. முதல் பாடலிலேயே இதைச் சொல்கிறார். ஒருகால், இக்கொள்கையைத் தோற்றுவித்தவரே கூத்தராயிருக்கலாம்:*

எழுமலை கொல்லும்அசனி, இளமயில் வள்ளி கணவன்,
இறைமலை வில்லி புதல்வன், இகல்மகள் ஐயை களிறு
கழுமலம் உய்ய விரவு கலியுக எல்லை பொருத
கதைகளி லுள்ள சமணர் கழுமிசை கொள்வ திதுவே.

*கூத்தர் இங்கு, சம்பந்தர் மதுரையில் சமணரை வென்ற கதையொன்று மட்டுமே கூறுகிறார். சம்பந்தர் பொன்னி நாடு கடந்து மதுரை வந்து வணங்கினார் என்று கதை தொடங்குகிறது:*

பொய்கை சூழ் புகலிப் பெருந்தகை
பொன்னி நாடு கடந்துபோய்
வைகை சூழ்மது ராபுரித்திரு
ஆலவாயை வணங்கியே. **171**

*கதை வேகமாகச் செல்கிறது. சம்பந்தர் மடத்தைத் தீயிடுகிறார்கள், தீ தென்னர் மன்னன் உடலைத் தாக்குகிறது, வெப்பைத் தணிக்க முற்பட்ட சமணர் வேகிறார்கள்:*

ஆவிவெந்து மந்த்ரம் வெந்து யந்த்ரம் வெந்தமைந்ததோர்
பீலிவெந்து பாயும் வெந்து பிண்டியேற மண்டவே. **176**

*சம்பந்தரைக் கண்டு, மன்னவன் வெப்பு தகுமோ என்று தேவி யார் வேண்டுதல்:*

மன்காதலில் உய்வதிவ் வையமெலாம்,
மலையாண்முலை யாரமு துண்டவனே,
என் காதலன் எம்பெருமான் இவனுக்கு
இதுவோ தகவென்றனள்; என்றலுமே. **186**

*சம்பந்தரைக் குறிப்பிட இவர் உபயோகிக்கும் சுவை மிகுந்த தொடர்களும் கருதத்தக்கன; அமண் மூகர் கருமாள வருமீளி, கொச்சைப் பெருமான், பரசமய கோளரி, பிள்ளையார், புகலிப் பெருந்தகை, வைதிகராச சிங்கம், வைதிக வாரணம் என்பன சில. சம்பந்தர் சமணரை வென்ற வரலாறு மட்டும் இங்கு 53 கண்ணிகளில் சொல்லப்பெறுகின்றது. குலச்சிறை நாயனார் நகரை அலங்கரிக்கின்றார்:*

மேகத்தொரு பந்தர் எடுத்துடுவாம்
வெண்முத்த மொழுக்கிமினற் கொடியால்
மாகத்து நிரைத்து மழைச்சிலையால்
வழிதோரணம் இட்டனன் வாசவனே.

*(வாசவன் - குலச்சிறையாண்டார்.)* தன்நாயகனுக்கு வந்த கொடிய *வெப்புநோயைத் தீர்க்க என்று வேண்டிய அரசியாருக்கு, சம் பந்தர் சூரியன்போலக் கொதிக்கும் இவனுடைய சுரம் சந்திரன் போலக் குளிரச் செய்வேன் என்கிறார்:*

மாமான் மரபிற் பகல்மண்டில மொத்து
எரிமண்டினன் என்னும் மகீபதி, நின்
கோமான் மரபிற் சசி மண்டில நேர்
குளிரும்படி காணுதி கோமளமே.

*வெப்புநோய் நீங்கியபின், சமணர் அனல்வாதம் புனல்வாதத் துக்குச் சம்பந்தரை அழைத்தல் கண்டு, அரசியார் இவருடைய இளமையையும் அவருடைய பெருந் தகுதியையும் கண்டு அஞ்சி, 'இவ்வளவு உபகாரம் போதும், இனி நீ பிரமாபுரத்துக்கு எழுந் தருளலாம்' என்கிறாள்:*

குழைதந்தனை செந்தமிழ் மண்டலமும்
கொடிமா நகரும்; குன்றங் களிகூர்
மழைதந் தென வந்தனை; வாழி, இனிப்
பிரமாபுர மேற மறித்தருளே.

சம்பந்தர் வரலாறு முடிந்து, காளிக்குக் கூளி கூறியவிடத்துத் தக்கயாக சங்காரம் சொல்லப்படும். எல்லாப் பாடல்களும் சந்தப் பொலிவுக்காக, வடசொற்களும் சந்திகளும் மிகுதியாய்ப் பெற்றிருத்தலினால், உரையின்றி எளிதிற் பொருள் விளங்க மாட்டா. சில பாடல்கள் எளிதாயுள்ளவை மட்டும் குறிப்பிடுவோம். யுத்த வருணனை, மிக எளிய பாடல்கள், அடுக்குச் சொற்கள்:

சிரமும் சிரமும் செறிந்தன, சரமும் சரமும் தறிப்பவே,
கனமும் கனமும் கனைத்தன, சினமும் சினமும் சிறக்கவே.
கடையுங் கடையுங் கலித்தன, தொடையுந் தொடையுந் துரப்பவே
தாருந் தாருந் தழைத்தன, தேருந் தேருந் திளைப்பவே
தோலுந் தோலுந் துவைத்தன, கோலுங் கோலுங் குளிப்பவே.
தோளுந் தோளுந் தொடங்கின, தாளுந் தாளுந் தரிப்பவே.
கிரியுங் கிரியுங் கிடைத்தன, கரியுங் கரியுங் கடுப்பவே.
தலையுந் தலையுந் தகர்த்தன, சிலையுஞ் சிலையுஞ் சிலைப்பவே.
குடையுங் குடையுங் கொழித்தன, படையும் படையும் பகைப்பவே.

யாகத்துக்கு வந்த தேவர்கள் முதலியோருக்கும், பூதகணங்களுக்கும் பெரும்போர் நடக்கிறது. பூதகணங்களின் செயல்களையும் அவற்றின் நகம், கை, மற்போர், தோல், கண்கள், வாய், விழி முதலிய பெருமைகளையும் ஆசிரியர் வருணித்திருப்பதைப் படித்தே இன்புறவேண்டும். பத்திர காளியினுடைய போரும், வீரபத்திரருடைய போரும் விரிவாகச் சொல்லப்படுகின்றன. போர் முடிந்து கூழ் அடுதல் என்ற பகுதியில் அடுப்பில் தாழி ஏற்றுதல், அரிசியைப் புடைத்தல், குத்துதல், கொழித்தல், அடுப்பு எரித்தல் முதலான செய்திகள் சொல்லப்படுகின்றன. பேய்கள் காளிக்குக் கூழ் படைக்கின்றன. பின்னர் அடைக்காய் உண்டபின், பேய்களுக்குக் கூழ் இடுதல் சொல்லப்படுகின்றது. இங்கு, தேவர்கள் இறந்து பேய்களாகி வந்து உண்ணுதல் சுவைபடச் சொல்லப்படுகிறது. பஞ்ச பூதங்கள், விஷ்ணு, பிரமன், இந்திரன், சூரியசந்திரர், பகன், அக்கினி, தக்கன் என்ற பேய்கள் சொல்லப்படுகின்றன. புத்தப்பேயும் இங்கு காண்கிறோம். பேய்கள் கூழ்குடித்து இராசராசனை வாழ்த்துகின்றன. அந்த இடத்தில் இராசராசன் தஞ்சைக்கோயில் கட்டியது, குலோத்துங்கன் தில்லையில் பொன் வேய்ந்தது, இரட்டனை இராசகம்பீரனாகிய இராசராசன் பட்டங்கட்டிவிட்டது, முதற் குலோத்துங்கன் சுங்கம் தவிர்த்தது, விக்கிரமன் கலிங்கப்பரணி

கொண்டது, குலோத்துங்கன் திருமாலைக் கடலிலே போட்டது ஆகிய வரலாற்றுச் செய்திகள் சொல்லப்படுகின்றன. இவற்றின் பின் தெய்வங்கள் எல்லாம் பேய்களாக நின்ற நிலையைச் சிவ பெருமான் தேவிக்குக் காட்டுகிறார். தேவி முனிவு தீர்ந்து அருள் செய்ய தேவர்கள் உயிரும், உடம்பும், பதவியும் பெற்றுச் செல் கிறார்கள். நூல் முடிவில் கவிச்சக்கரவர்த்தி கூத்தரை வாழ்த்து கின்ற இரண்டு பாடல்கள் உள்ளன:

ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச் சக்ர வர்த்தி வாழியே.

வாழி தமிழ்ச்சொற் றெரிந்த நூற்றுறை
வாழி தமிழ்க்கொத் தனைத்து மார்க்கமும்
வாழி திசைக்கப் புறத்து நாற்கவி
வாழி கவிச் சக்ர வர்த்தி கூத்தனே.

**உரை**

தக்கயாகப் பரணிக்குப் பழமையான உரையொன்று உண்டு; இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை; காலம் 15ஆம் நூற்றாண்டு என்று தெரிகிறது. தமிழ் மொழியில் எழுந்த சுவை மிக்க இலக்கிய உரைகளில் இது மிகவும் சிறப்பானது.* இவ் வுரையில் பிற்காலத்து வழங்காத அரிய சொற்கள் தொடர்கள் கருத்துக்கள், கதைகள் மரபுகள் மேற்கோள்கள் முதலியவற்றைக் காணலாம். இவரும் வடமொழிப் பயிற்சி மிக்கவர். பல ஆகமக் கருத்துக்களையும் பிற வடநூற் கருத்துக்களையும் எடுத்துச் சொல்கிறார். மரபைப் பேணுதலில் மிக்க கருத்துடையவர். தமிழினிடத்து மிக்க அன்புடையவர். சில இடங்களில் மிகவும் விரிவாக எழுதி, சில இடங்களில் 'இதன் பொருளறிக' என்று ஒன்றும் சொல்லாமலே விட்டுவிடுவார். நயங்களை உணர்த்து வதில் இவருக்கு ஈடு. வேறு எவரும் இலர். இவர் அழகையும் கலையுணர்ச்சியையும் நிரம்பப் போற்றுபவர். உவமைகளும் பழமொழிகளும் இவர் உரையில் அதிகம் பயிலும். சில சமயம் பல பொருள் கூறி, இது நல்லது கொள்க என்பார். பாட பேதங் களையும் குறிப்பிட்டுச் சொல்வார். பல இலக்கண விசேடங்கள் காட்டுவார். அடைகொடுத்து மேற்கோள் கூறுவார்: 'இவர்

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு பார்க்க.

வளையாபதியை நினைத்தார் கவியழகு வேண்டி' என்பார். மேற்கோள் நூற்பெயர்களைச் சுருக்கி வழங்குவார்: சிறு பாணாறு, முல்லை என்பனபோல. திருவாய்மொழியையும் பகவத் கீதையையும் குறிப்பிடுகிறார். ஆசிரியர் கருத்தை உணர்ந்து எழுதுவார். சொற்களையும், அவற்றின் வடிவத்தையும் அவற்றுக் குரிய பாஷையையும் தெரிந்து குறிப்பிடுவார். வடசொற்கள் இவர் உரையில் அதிகம்.

கட்டுரை சுவைபடவும் நகைச்சுவை ததும்பவும் எழுது வார். தெய்வப் பெயர்களையும் பெரியோர் பெயர்களையும் மரபு வழுவாது குறிப்பிடுவார்; திருக்கோயில், திருவுள்ளம், அருகபரமேஷ்டி, கருடாழ்வார், மயித்திரி யாழ்வார், ஸ்ரீபாதம், எழுந்தருள்க - போன்றன காண்க. மதங்கள் பதினைந்தைக் குறிப்பிட்டெழுதுகிறார். தெய்வபக்தி நிரம்பியவர். இவர் உரை யால் பல புதிய நூற்செய்திகள் விளக்கமாகின்றன. உரையால் அறியத்தக்க செய்திகள் எண்ணில்லாதன.*

மிக்க சிறப்புடைய கலிங்கத்துப் பரணிக்குப் பழைய உரை எதுவும் இல்லை; அடுத்து வந்த தக்கயாகப்பரணிக்கே உரை உண்டென்பது இந்நூலின் சிறப்புக்களில் ஒன்று.

## உத்தர காண்டம்

### ஆசிரியர்

இராமாயணம் உத்தரகாண்டம் கூத்தர் பாடியதாகவே வழங்கிவருகிறது. எனினும், இக்காலத்தில் இதுபற்றி ஐயம் எழுப்பினரும் உளர். ஏழு காண்டங்களையும் இரண்டு தொகுதி களாக முதன் முதலாக நல்ல எழுத்திலும் நல்ல காகிதத்தி லும் அச்சிட்ட இராமரத்தினம் ஐயர் (சிதம்பர முதலியார் பதிப்பு 1926) உத்தரகாண்டத்தை, "மகாகவி ஒட்டக்கூத்தர் செய்தருளிய இராமாயண உத்தர காண்டம்" என்று தலைப்பு கொடுத்தார். நூல் பொதுவாக, கம்பராமாயணம் ஏழு காண்டம் என்றே வழங்கிவந்தது. ஆழ்வார் திருநகரிப் பதிப்புக்கூட "கம்ப ராமா யணம் உத்தரகாண்டம்" என்றே பெயர் குறிப்பிடுகிறது. உத்தர காண்டமும் கம்பர் செய்தாரென்று நூல்கள் அச்சிடப்பட்ட ஆரம்ப காலத்தில் சிலர் தவறாகக் கருதியது உண்டு. எனினும்,

---

* இவ்வுரைச் சிறப்பை அறிவதற்கு, தக்கயாகப் பரணி ஐயரவர்கள் பதிப்பு 1945, முன்னுரை பக்கம் 34 - 43 பார்க்க.

கற்றார் உலகில் உத்தரகாண்டம் மட்டும் ஒட்டக் கூத்தர் செய்தது என்ற கருத்து நெடுங்காலமாக நிலவுகிறது. கூத்தர் சோழன் வேண்டுகோளுக்கிணங்கி இராமாயணம் உத்தர காண்டத்தை 1500க்கு மேற்பட்ட பாடல்களில் பாடி முடித்தார் என்று பழைய வரலாறு கூறுகிறது. இங்ஙனமிருக்க, புலவர் சிலர் ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் பாடவில்லை என்ற கருத்தைச் சொல்லியுள்ளனர்.

செங்குந்தர் பிரபந்தத் திரட்டு என்ற நூலில் அதில் அடங்கியுள்ள பிரபந்தங்களுக்கு மு. இராகவையங்கார் ஓர் ஆராய்ச்சி முன்னுரை எழுதியிருக்கிறார். அவ்வுரையில் ஈட்டி எழுபது எழுப்பெழுபது களிப்பொருபது திருக்கை வழக்கம் பிள்ளைத் தமிழ் கலித்துறை மாலை தசாங்கம் ஊசல் முதலியவற்றுக்கு ஆராய்ச்சியுரை எழுதியுள்ளார். 'எழுபெழுபது அப்புலவரே பாடினார் என்பதற்கு வேறு ஆதாரம் இல்லையேனும் பரம்பரை வழக்குண்டென்பர்' என்று பரம்பரை வழக்கைப் போற்றிக் கூறுகின்றவர், கூத்தர் உத்தரகாண்டம் பாடினார் என்ற பரம்பரை வழக்கை மட்டும் ஏற்க விரும்பவில்லை. இப்பேராசிரியர் இங்கு தக்கயாகப்பரணி உலர்க்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டாராயினும், உத்தரகாண்டத்தைக் கூத்தர் பாடவில்லை என்றே எழுதிவிட்டார், இவரும், இவர் போன்ற பிறரும், கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று முடிவு செய்து கொண்டு, அதற்கு ஏற்ப, கிடைத்துள்ள கதைகளைத் தொடர்பு படுத்துவாராயினர். "ஒட்டக்கூத்தர் முதியவராய் இருந்த காலத்தில் கம்பர் இளைஞராய் இருந்தார். சோழமன்னன் இருவரையும் இராமாயணம் பாடச் சொன்னான். அவ்விதமே கம்பர் பாடிய நூலின் சிறப்பை நேரில் கண்ட ஒட்டக்கூத்தர் தாம் பாடிய இராமாயணத்தைக் கிழித்தெறிந்தார். இதை அறிந்த கம்பர் அவ்வாறு கிழிக்கவேண்டாம் என்று அவரைத் தடுத்தார். அப்போது எஞ்சி நின்றது உத்தரகாண்டப்பகுதி ஒன்று மட்டுந்தான். ஆகவே இது ஒன்றே இன்று ஒட்டக்கூத்தர் செய்ததாக வழக்கில் உள்ளது" என்று பழமையாக வழங்கும் கதை பொய் என்று எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் எழுதியிருப்பது பொதுவாக ஏற்கத்தக்கதன்று. ஒட்டக்கூத்தர் உத்தர காண்டம் பாடினார் என்பது மட்டும் உண்மையாகும். கம்பர் காலம் ஒட்டக்கூத்தர் காலமன்று. இராமாயணச் சிறப்புப் பாயிரம் கூறுகின்றபடி, அது ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியது என்பது வேறிடத்தில் விளக்கப்படும்.

இங்கு நாம் பார்க்க வேண்டுவது, கூத்தர் உத்தரகாண்டம் பாடினார் என்பதற்குரிய சான்று: நெடுங்காலமாக வழங்கிவரும் வழக்கு இவர் பாடினாரென்பது. தாம் இளைஞராயிருந்தபோது ஒரு பேரிலக்கியம் பாட இவர் எண்ணினார். இராமாயணம் ஞாபகம் வந்தது. அதன்மேல், முன்னமே கம்பர் இராமாயணத்தைப் பாடி முடித்திருந்தமையால் அவர் பாடாதுவிட்ட உத்தர காண்டப் பகுதியை மட்டும் தாம் பாடி முடித்தார் என்று கருதுவது பொருந்தும், பாடியதைக் கிழித்தெறிந்தார் என்பதெல்லாம், கம்பருக்கு ஏற்றம் கூறுவதற்காக வந்த பொய்க்கதை.

கூத்தர் சிறந்த சைவர். தாம் பாடிய தக்கயாகப்பரணியில், சம்பந்தமில்லாமலே திருஞானசம்பந்தர் வரலாற்றில் ஒரு பகுதியை விரித்துப் பாடியிருப்பதால் இதை நன்கு அறியலாம். இவர் இராமன் கதையின் ஒரு பகுதியாகிய உத்தரகாண்டம் என்னும் வைணவ நூல் பாடுவாரா என்பது ஓர் ஆட்சேபம். விரிந்த இராமாயணம் பாடிய கம்பர் அதைப் பெருங்காப்பியமாகப் பாடினாரே அன்றிச் சமயநூலாகப் பாடவில்லை. அதுபோலவே, கூத்தரும் உத்தர ராமாயணத்தைக் காவியமாகப் பாடினாரேயன்றிச் சமய நூலாகப் பாடவில்லை. கூத்தர் சமயப் பொறையுடையவர்; ஆரேயெனுமொன்று என்ற இவருடைய தனிப்பாடலும் இதை உணர்த்தும்.

இனி இது பற்றிய பிற செய்திகளை இங்கு குறிப்பிடலாம். ஒன்று, கம்பர் உத்தரகாண்டம் பாடவில்லை என்பது. பிற்காலத்தில் 17ஆம் நூற்றாண்டில் இரகுவமிசம் பாடிய அரசகேசரி என்பவர் கம்பர் உத்தரகாண்டம் பாடாமையால், தாம் அதைப் பாடுவதாகக் கூறுகிறார்:

பொற்றா மரைமான் ஒழியாது பொலியும் மார்ப
வெற்றாங்கு மேனி ரகுராம சரிதை யாவும்
கற்றார் கவியிற் பெரிதாந்தமிழ்க் கம்ப நாடன்
உற்றாங் குரைத்தான் உரையாதன ஓது கிற்பாம்.

இதனால் இவர் கருத்தின்படி உத்தரகாண்டம் பாடியவர் கம்பரல்லர் என்பதும் தெளிவாகிறது.

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் 1904ஆம் ஆண்டில் செந்தமிழ்ப் பத்திரிகையில் (தொகுதி 3 பக்கம் 43) இக்கருத்தைத் தெளிவுபடுத்திப் பின்வருமாறு எழுதுகிறார். “கம்பர் பாடியது பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் வரை

யுள்ள ஆறு காண்டங்களே என்பதும், பின்வந்த காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினார் என்பதும் அவ்வுத்தரகாண்டம் சோழனது அவைக்களத்தே அரங்கேற்றப்பட்டது என்பதும்,

பூணிலாவுங் கம்பனலம் பொலியுந் தமிழாற் புகழெய்திக்
காணும் ஆறு காண்டமுறுங் கதையிற் பெரிய காதையெனும்
தாணி லாவுங் கழலபயன் சபையிற் பயிலுத் தரகாண்டம்
வாணி தாசன் அரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே.

என்ற சோழ மண்டல சதகப் பாடலால் (80) தெளிவாகின்றன. ஈண்டு அபயன் என்பது சோழன் என்னும் பொதுப்பொருளில் வந்தது. ஒட்டக்கூத்தர் சரசுவதி தம்பலம் கொடுக்க அதனால் கவித்திறம் எய்தினவராதலால் அவரை வாணிதாசன் எனப் பெயர் சிறப்பித்து வழங்குவரெனத் தெரியலாகும்.”

அதே செந்தமிழ்த் தொகுதியில் (பக்கம் 9), வாணியன் தாதனுக்கும் கம்பருக்கும் இருந்த நட்புப் பகைமைகளைப் பற்றி மகாவித்துவான் விரிவாக எழுதி இருக்கிறார். அவருடைய கருத்து வாணியன் தாதன் வேறு, அவன் செக்கார் மரபைச் சேர்ந்தவன், ஆனால் வாணிதாசன் என்று சோழமண்டல சதகம் குறிப்பிடுவது, கவிச்சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தரையே என்பதாகும்.

இக்கூற்றுக்களால் நாம் இங்கு எடுத்துக்காட்டியது கூத்தரே இராமாயண உத்தரகாண்டம் பாடினார் என்பதாகும். எனினும், வாணிதாசன் என்ற பெயரைத் தவிர, இங்கு கூத்தர் என்ற பெயருக்கான ஆதாரம் வழக்கேயொழிய வேறு இல்லை. கூத்தர் பாடவில்லை என்பதற்கும் ஆதாரமோ, காரணமோ யாரும் சொல்லவில்லை என்பதும் உணரத்தக்கது.

மற்றப்படி, பிற்காலத்தில் உத்தரகாண்டம் பற்றி ஆராய்ந்தோர் எந்தக் குறிப்பும் தந்ததில்லை. ஒட்டக்கூத்தர் ஒரு கலிங்கத்துப்பரணி பாடினார் என்பதை முதலில் குறிப்பிட்டோம். அந்நூலின் பாடல்கள் என்று கருதத்தக்க இரண்டு பாடல்களை அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டுவதையும் கண்டோம். அவரே சிலப்பதிகார உரையில் உத்தரகாண்டப் பாடல் ஒன்றை எடுத்துத் தருகிறார்:

மக்க ளிழந்த இடும்பையினும்
   மனையா ளிழந்த இடும்பையினும்
மிக்க இடும்பை, வேல்வேந்தே
   விதவை இடும்பை எனவிளம்பித்

தக்க அதனால் என்கழுத்தில்
தாலி நீதந் தருளென்று
தொக்க மணிநீண் முடியானைத்
தொழுது பின்னும் இவைசொல்லும்.

பதிக உரையில் கணவனை இழந்ததாகிய பெரிய துன்பம் என்பதைக் கூறுமிடத்து, “என்றார் பிறரும்” என்று சொல்லி இப்பாடலைக் காட்டுகிறார். இது அந்நூல் என்று இவர் குறிப் பிடவில்லை. கூத்தர் காலம் 12ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் இடைப்பகுதியும் ஆகும். அடியார்க்கு நல்லார் காலம் இறுதிப் பகுதியாகும். எனவே, கூத்தர் நூலை அடியார்க்கு நல்லார் குறிப் பிடுவது நடைபெறக்கூடியது. ஒட்டக்கூத்தர் பாடியது என்று நாம் கருதுகின்ற பரணியின் பாடலை எடுத்துக் காட்டுகின்ற இவ்வுரை ஆசிரியர், மற்றோரிடத்தில் தரும் பாடலைக் கொண்ட உத்தரகாண்டமும், பொதுவாக வழங்குகின்றபடி அதே ஒட்டக்கூத்தர் பாடியதாக இருத்தல் பொருந்துவதே. 12ஆம் நூற்றாண்டில் இருந்த புலவர் வரலாறுகள் யாவும் ஓரளவு திட்ட மாய்த் தெரிந்துள்ளன. அவர்கள் யாரும் உத்தரகாண்டம் பாடியதாக வரலாறு இல்லை. வாணியன் தாதன் பெயர் ஏதோ தனிப்பாடலில் வருவது அன்றி, சிறந்த வரலாறாகவோ ஒரு நூலை ஒட்டியோ வழங்கவில்லை. சிறப்பான ஒரு நூலாகிய உத்தரகாண்டம், சிறப்பு மிக்க புலவராகிய ஒட்டக்கூத்தர் பாடி னாரென்று கொள்வது பொருத்தம். உரையாசிரியர் கருத்தும் இதுவாகவே இருக்கலாம். மிகப் பலவான நூல்களின் பெயரைக் குறிப்பிடுகின்ற அடியார்க்கு நல்லார், இவர் பெயரைக் குறிப் பிடாமைக்குக் காரணம், மற்றைய ஆசிரியர் அனைவரும் காலத்தால் அவருக்கு மிகவும் முற்பட்டு இருந்தமையும், கூத்தர் மிக அணிமையில் இருந்தமையுமே ஆகும். அணிமையில் இருந்தமையால் இவர் பெயர் அதிகப் பிரசித்தம் ஆகவில்லை என்ற கருத்தினால் போலும், சொல்லவில்லை. கூத்தர் இந்த நூலை இளமையில் பாடியிருக்கலாம். இது பாடிய பின்னரே விக்கிரம சோழனுடைய ஆதரவும் கிடைத்திருக்கலாம்.

ஒட்டக்கூத்தரே உத்தரகாண்டம் பாடினார் என்ற கருத்தில் தான் இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது. இதை மறுப்பதற்கு நியாயமில்லை. அடியார்க்கு நல்லார் இந்நூலின் பாடலைக் காட்டுவதால், உத்தரகாண்டம் அவருக்கு முந்தியதாகும்; ஆகவே 12ஆம் நூற்றாண்டின் முற்பாதியாகலாம். இம்முற்பாதியில்

வாழ்ந்த கூத்தர் இதைப் பாடினார் என்பது இதனால் நன்கு விளங்கும். அப்படி அவர் அல்ல என்று கருதினாலும் கூட, வேறொருவர் பாடியிருக்க வேண்டுமல்லவா? அவரைப் பற்றிய ஆய்வுக்கு நாம் இங்கு தந்துள்ள குறிப்புக்கள் நிச்சயம் பயன்படும்.

**கதைச் சுருக்கம்**

பின்வருவது உத்தரகாண்டத்தின் கதைச் சுருக்கமாகும். இராவண வதம் முடிந்து அயோத்தில் இராமன் அரசு வீற்றிருந்த சமயம், அகத்தியர் முதலான பெருமுனிவர் பலரும் அங்கு வர, இராமன் கண்டு வணங்கினான், உபசரித்து முகமன் மொழிந்த பின், அரக்கரின் பூர்வ வரலாறுகளை விரித்துரைக்க வேண்டும் என்று இராமன் கேட்க, அவ்வாறே முனிவர் கூறலுற்றார்.

பிரமனிடத்தில் புலத்தியன் தோன்றினான். அவனுடைய மகனாய்க் குபேரன் பிறந்து புட்பகவிமானம் பெற்று, உலக பாலகனாகி இலங்கையில் சென்று ஆண்டிருந்தான். பின்னர் அரக்கர் தோன்றினர். அவர்கள் தலைவராகிய மாலியவான், சுமாலி, மாலி என்னும் மூவரும் பிரமனிடத்தில் பெற்ற வரத்தினாலே உலகை அழிக்கத் தொடங்கினர். இந்திரன் திருமாலைத் துதிக்க, திருமால் "நாம் தோன்றி அரக்கர் குலத்தை வேரறுப் போம்" என்று வரம் அளித்தார். இச்செய்தியை அறிந்த அரக்கர் திருமால்மீது படையெடுத்துச் செல்ல அவர் வந்து அரக்கர் களோடு போரிட்டார். அரக்கர் அழிந்தனர். மாலியவான் முதலானோர் பாதாளத்தில் புகுந்து ஒளிந்தனர். சுமாலி தன் மகளுக்கு வரன் தேடிய காலத்தில், இலங்கையில் குபேரன் ஆண்டிருந்த சிறப்புக் குறித்துப் பொறாமை கொண்டான். தன் மகளைப் புலத்தியருக்கு மணம் செய்வித்து அவளிடத்துப் பேரரக்கர்களைப் பிள்ளைகளாகப் பெற்று, இலங்கையைக் கைப்பற்றக் கருதினான். அப்படியே அவள் புலத்தியரை மணந்து, இராவணன் முதலியோரைப் பெற்றாள். இப்பிள்ளைகள் பெருந்தவஞ் செய்து அரிய வரங்களைப் பெற்றனர்; இராவணன் இலங்கையை வென்று மயன்புதல்வி மண்டோதரியை மணந்து பல பிள்ளைகளைப் பெற்று அரசாண்டிருந்த காலத்தில், கயிலைமலை தன் விமானத்தைத் தடுத்தமையால் கயிலையைப் பெயர்க்க முயல, அங்கு நந்தி சாபம் பெற்றான். சிவபிரான் விரலை ஊன்ற, வாய்விட்டலறி, பின்னர்ச் சாமகீதம் பாடி, அதனால் மகிழ்ந்த பெருமானால் வாளும் நாளும் தரப்பெற்று மீண்டான். திக்குவிசயம் செய்து வந்தகாலை, ஆயிரம்

கையுடைய கார்த்தவீரிய அர்ச்சுனனால் சிறைப்பட, அங்கு பிதாமகன் வந்து சிறை விடுவித்து, அழைத்துச் சென்றான். மீண்டும் அவன் அவ்விதமே வாலியிடம் சென்று அவனாலும் பெரிதும் அவமானப்பட்டான். வாலிக்குத் தோற்றோடிய சுக்கிரீ வனிடம் அனுமன் வாழ்ந்து கொண்டிருந்தான். பின்னர் இரா மன் தோன்றி சீதையோடு வனம் வந்து சீதையைப் பிரிந்து சுக்கிரீவன் துணைபெற்று இராவணனை வதைத்தான் - என் பவை முதலாயின கூறிமுடித்தார்.

அப்போது சீதை இலங்கையில் தங்கியிருந்ததற்காக ஊரார் வம்பு மொழிபேச, அதைக்கேட்ட இராமன் சீதையை மீண்டும் காட்டிற்கு அனுப்பினான். வால்மீகியின் ஆதரவில் சீதை குசன் லவன் என்று பெயரிட்ட இரு குழந்தைகளைப் பெற்றாள். முனிவர் தாம் செய்திருந்த இராம சரித்திரத்தை அவர்களுக்குப் பாடக் கற்பித்து, இராமருடைய அசுவமேத யாகத்தில் அவர் களைக்கொண்டு அச்சரிதத்தை இசையோடு பாடச்செய்து, இராமனை மகிழ்வித்தார். சீதை உயிரோடு இருப்பதை அறிந்த இராமன் அவளை அங்கு வரவழைத்து, அவள்மீது ஏற்பட்ட அவச்சொல்லைப் போக்கவேண்டும் என்று வேண்ட, அவள் பூமிதேவியை வேண்டினாள். நிலம் வெடித்துப் பூமி தேவி வெளிப்பட்டுச் சீதையை அழைத்துச் சென்று மறைந்தாள். வருந்திய இராமன் ஒருவாறு சமாதானமடைந்து, அரசு செய்து வந்தான். பின்னர் உரிய காலத்தில் வைகுந்தம் அடைந்தான்.

**நூல்**

உத்தரகாண்டம் நூல் முழுமையும் கம்பராமாயணக் கருத்தையும் தொடர்களையும் அப்படியே கொண்டியன்றது. அப்படியே பல குறட்பாக்களின் விரிவாக இருப்பதும் காணத் தக்கது. ஒன்று மட்டும் காட்டுவோம்.

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

என்பது குறள் 850. இதன் விளக்கம், உத்தரகாண்டம்:

உலகத்தார் உள்ளதென்ற துள்ளதாம்; ஒலிநீர்வேலை
உலகத்தார் இல்லையென்ற தில்லையாம் உணருங்காலை;
உலகத்தார் உள்ளதென்ற தில்லைஎன் றுரைக்குமாகில்
உலகத்துக் கவன்பேயாகும் உண்மையாற் பயனொன்றில்லை.

*நூலில் படலப் பாகுபாடும் பாடல் தொகுதியும், கம்ப ராமாயணம் போலவே ஏட்டுக்கு ஏடு வேறுபடுகிறது. இவற்றை ஓரளவு தொகுத்துக் காட்டும் ஒரட்டவணை பின்னாலுள்ளது. நூன்முகப்பில் காணும் காப்புச் செய்யுள் இராமாவதாரத்துக்கு விளக்கம் கூறுவதாய் உள்ளது:*

வெள்ளியங் கிரியை மீதே வேரொடும் எடுத்த வீரக்
கள்ளவன் புயம்நா லைந்தும் கனகமா மவுலி பத்தும்
துள்ளியம் புவிமேல் வீழ ஒருகணை தொடுத்து விட்ட
வள்ளலம் புயமே யன்ன மலரடி வணக்கம் செய்வாம்.

*இதையடுத்து உள்ள நூலின் கடவுள் வணக்கப்பாடல், நாமம் கடந்த பரம்பொருளை வணங்குவதாயுள்ளது:*

ஒன்றாய்ப் பலவாய் உளவாய் இலவாய் உரைப்போர்க்கு
அன்றாகி யாமாய் அருவாயுரு வாகி மெய்ம்மை
குன்றாத ஞானக் கொழுந்தாய்க் குணமூன் றிறந்து
நின்றான் யாவன் அவன்நீள்கழல் நெஞ்சின் வைப்பாம்.

*இப்பாடல் யுத்தகாண்டக் கடவுள் வணக்கப் பாடலாகிய 'ஒன்றே என்னின்' என்பதைத் தழுவியிருப்பது தெளிவு. அது கொண்டே, இப்பாடலை நூலின் தொடக்கச் செய்யுளென்றும், 'வெள்ளியங்கிரியை' என்ற பாடல் பிற்காலத்தார் பாடல் என்று கருதுவோரும் உளர். இனி, மற்றொரு சிவத்துதி: தேவர்கள் கயிலை மலையடைந்து, அரக்கர் கொடுமையிலிருந்து தங்களைக் காக்கும்படி, துதிக்கிறார்கள்:*

எந்தாய் போற்றி, ஏறேறும் இறைவா போற்றி, ஏழுலகும்
தந்தாய் போற்றி, அணிகொன்றைத்தாராய் போற்றி, சகமுய்ய
வந்தாய் போற்றி, வஞ்சகர்முன் வாராய் போற்றி, மலரோனும்
செந்தா மரைக்கண் திருமாலும் ஆனாய்போற்றி, சிவபோற்றி.

*பின்னர் தேவர்கள் அங்கிருந்து வைகுந்தம் சென்று திரு மாலைக் கண்டார்கள். ஆறு பாடல்களில், கண்துயில் வானை, உலகங்களெல்லாம் உள்ளடங்கும் உதரத்தினானை, ஒளியார மார்பினனை, மணிமுடியானை, நித்திரையுகந்தானைக் கண்டு போற்றியதாகக் கூறுகிறார். எட்டுப் பாடல்களால் போற்றியது கூறப்பெறுகிறது.*

உறப்பெரி துணரின் உருவமாய் அருவாய்
உளவுமாய் இல்லையு மாகிப்
பிறப்பிலி யாகிப் பிறத்திநீ, ஆண்பெண்
அலியெனப் பேசவும் படைத்தாய்;
மறப்பகை யொன்றும் அன்றியே என்றும்
வலிகொள் பஞ்சாயுத மெடுத்தி,
அறச்சிலு குடைத்து நின்திறம் உரைக்கின்,
அச்சுதா! யாருனை அறிவார்?

எல்லாப் பாடல்களுமே 'யாருனை அறிவார்' என்ற மகுடத்தை உடையன. இப்பகுதி அப்படியே கம்பராமாயணத்தில் யுத்த காண்டம் நாகபாசப் படலம் (பாடல்கள் 251 - 261) 'ஆருன் வெதிரேகமாயை யறிவார்' என்றுள்ள பகுதியை அடியொற்றிச் செய்யப்பட்டதென்று தோன்றுகிறது.

வருணனையாகக் கூறுமிடத்துப் பல பாடல்களைக் குளக மாகக் கொண்டு முடிப்பது இவருக்கு ஓர் இயல்பு. இராவணன் அரம்பையைக் கண்டான் என்று கூறுமிடத்து, ஐந்து பாடல் களில் அவனை வருணித்து ஆறாம் பாடலில் ஆசிரியர் கருத்தை முடிக்கிறார். இப்படியே வாலி இராவணனைத் தன் வாலில் கட்டிவைத்துப் பல நாடும் மலையும் கடலும் பாய்ந்து சென்று சிவபூசை முடித்த செய்தி கூறுமிடத்தும் பார்க்கலாம்.

இவை போலவே, பாடல்களை அடுக்கிச் சொல்வதும் இவருடைய இயல்புகளில் ஒன்று. அனுமப் படலத்தில் 'அனுமானை யொக்கு மவரார் சகத்திலினியே' எனப் பல பாடல்கள்; இராமன் சீதைக்குச் சோலைவளம் காட்டுமிடத்துக் 'காணாய்' என்ற பாடல்கள்; இலக்குவன் சீதையை வனத்தில் விட்டுத் திரும்பியபோது, சீதை தன் நிலையை எண்ணி வருந்தி 'விதியேயோ விதியேயோ' என்று கதறும் பாடல்கள்; புலத்தியர் இராவணனுக்கு இலங்கையின் சிறப்புக்களைக் கூறுமிடத்து, உடையது உடையது என்ற முடிவையுடைய ஐந்து பாடல்கள்; சூர்ப்பனகை அரற்றுமிடத்து அண்ணாவோ அண்ணாவோ என்ற முடிபையுடைய நான்கு பாடல்கள்; அரம்பையை இராவணன் கண்டான் என்றவிடத்து, அல்குல் தடத்தாளை, இடையாளை, பவள வாயாளை, குழலாளை என்று முடிகின்ற நான்கு பாடல்கள்; காட்டில் விடப்பட்ட சீதை, விதியேயோ விதியேயோ என்று அரற்றுகின்ற ஐந்து பாடல்கள் என்பன முதலானவை காணத்தக்கன.

*உலகியல்பும் நீதியும் கூறுகின்ற பாடல்கள் பல சுவை யுடையனவாக இந்நூலில் உள்ளன. விதவைத் துன்பத்தைக் குறித்து முன்னம் காட்டிய 'மக்கள் இழந்த இடும்பையினும்' என்பது ஒன்று.*

குலம்வேண்டு மென்றிருப்பார் குலத்துள்ளோர்,
கல்வியினாற் குறையா ஞானப்
பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்,
பரந்தபெருஞ் செல்வம் உள்ள
தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்,
எவ்வனமும் அழகும் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழற்
கன்னிமார் நலத்தின் மிக்கார்.

பண்புடைய குடிப்பிறப்பும் பழிப்பில்லாப்
பேரழகும் பரந்த கேள்வி
நுண்பொருளை நீரொழியப் பால்நுகரும்
அன்னம்போல் நோக்கித் தீரும்
ஒண்பொருளும் இந்நான்கும் உடையாரைக்
கிடையாது இவ் வுலகந் தன்னில்
பெண்பெறுகை போலிந்தப் பெரியதுயர்
தானுண்டோ பேசுங்காலே.

*இந்த இருபதாம் நூற்றாண்டிலும் எத்துணை பொருந்தக் கூடிய உண்மை! சினத்தீயின் கொடுமையைக் குறித்து இராமன் கூறும் கருத்துக்கள் சிறப்புடையவை (இராவணன் வதைப்படலம் 28-9).*

*இராவணன் நடுங்கும்படியாகச் சத்துருக்கனன் வில்லை நாணெறிந்தான் என்று கூறும் பாடல் கவிதைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்:*

திண் அசுரன் இவ்வண்ணம் செப்பியசொல்
செவி நுழையச் சீற்றம் பொங்க,
கண் எரிகான் றிட, ஊழிக் கடலென்ன,
கடல் ஆல கால மென்ன,

மண் அதிர, மண்சுமந்த மாநாகம்
தலைஅதிர, வஞ்சன் நெஞ்சத்து
எண் அதிர, விண் அதிர, இருஞ் சிலையை
நாணெறிந்தான் இராமன் தம்பி.

## உத்தர காண்டம் - படலம், பாட்டு

| படலம் எண் | இராமரத்னம் ஐயர் பதிப்பு | பாட்டு | படலம் எண் | சரசுவதி மகால் ஏடு | பாட்டு | படலம் எண் | பெரியன் பதிப்பு | பாட்டு |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | காப்பு - வெள்ளியங்கிரி | 1 | - | காப்பு | 1 | - | இல்லை | - |
| - | கடவுள் வாழ்த்து அவையடக்கம் | 4 | - | கடவுள் வாழ்த்து, அவையடக்கம் | 4 | - | கடவுள் வாழ்த்து அவையடக்கம் | 4 |
| 1 | திருவோலக்கப் படலம் | 22 | 1 | திருவோலக்கப் படலம் | 22 | 1 | கோத்திரப் படலம் | 55 |
| 2 | புலத்தியப் படலம் | 30 | 2 | புலத்தியப் படலம் | 30 | | | |
| 3 | அரக்கர் பிறப்புப் படலம் | 50 | 3 | அரக்கர் பிறப்புப் படலம் | 50 | 2 | அரக்கர் பிறப்புப் படலம் | 50 |
| 4 | தோத்திரப் படலம் | 30 | 4 | தோத்திரப் படலம் | 30 | 3 | இலங்கை அழித்த படலம் | 76 |
| 5 | இலங்கை அழித்த படலம் | 47 | 5 | இலங்கை அழித்த படலம் | 47 | | | |
| 6 | இராவணன் பிறப்பு | 70 | 6 | இராவணன் பிறப்பு | 70 | 4 | இராவணாதியர் பிறப்பு | 70 |
| | | | 7 | அளகாபுரிப் படலம் | 63 | 5 | குபேரன் மேற்சொல் படலம் | 63 |
| 7 | வரையெடுத்த படலம் | 82 | 8 | வரை எடுத்த படலம் | 14 | 6 | வரை எடுத்த படலம் | 13 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | திக்கு விசயப் படலம் | 252 | 9 | வேதவதி அனல் மூழ்கு படலம் | 20 | 7 | வேதவதி அனல் மூழ்கு படலம் | 20 |
| | | | 10 | திக்கு விசயம் மருத்தன் வேள்விப் படலம் | 12 | 8 | மருத்தன் வேள்வி | 12 |
| | | | 11 | அனரண்யப் படலம் | 12 | 9 | அனரண்ணியன் சாபம் | 11 |
| | | | 12 | யமபுரப் படலம் | 11 | 10 | இயமன்மேற் செல் படலம் | 35 |
| | | | 13 | வருணபுரிப் படலம் | 35 | 11 | பாதாளம் செல் படலம் | 6 |
| | | | 14 | சூர்ப்பனகை பிரலாபம் | 16 | 12 | வருணன் மேற்செல் படலம் | 10 |
| | | | 15 | மதுவின்மேற் படை சென்ற படலம் | 21 | 13 | சூர்ப்பனகை கோபப் படலம் | 21 |
| | | | 16 | அரம்பை எதிருற்ற படலம் | 27 | 14 | மதுவின்மேற் செல் படலம் | 27 |
| | | | 17 | தேவர்கள் மேற் படை சென்ற படலம் | 36 | 15 | அரம்பைப் படலம் | 35 |
| | | | | | 74 | 16 | தேவர்கள்மேற்செல் படலம் | 74 |
| 9 | கார்த்தவீரியார்ச்சுனப் படலம் | 22 | 18 | இராவணன், கார்த்த வீரியார்ச்சுனன் கையிற் கட்டுண்ட படலம் | 22 | 17 | கார்த்திவீரியார்ச்சுனப் படலம் | 22 |
| 10 | வாலி வாலாற் கட்டுண்ட படலம் | 20 | 19 | இராவணன் வாலிவாலாற் கட்டுண்ட படலம் | 20 | 18 | வாலி வாலாற் கட்டுண்ட படலம் | 20 |
| 11 | அனுமப் படலம் | 72 | 20 | அனுமப் படலம் | 73 | 19 | அனுமார் பிறப்புப் படலம் | 52 |
| | | | | | | 20 | விடைகொடுத்த படலம் | 21 |

| படல எண் | இராமரத்னம் ஐயர் பதிப்பு | பாடல் | படல எண் | சரசுவதி மகால் ஏடு | பாடல் | படல எண் | பெரியன் பதிப்பு | பாடல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | சீதை வனம் புகு படலம் | 99 | 21 | சீதை வனம் புகு படலம் | 98 | 21 | சீதை வனம் புகு படலம் | 21 |
| 13 | இராவணன் வதைப் படலம் | 110 | 22 | உபகதை, லவண வதைப் படலம் | 110 | 22 | இராச நீதிப் படலம் | 49 |
| | | | | | | 23 | இராவணன்வதைப் படலம் | 61 |
| 14 | சம்புவன் வதைப் படலம் | 67 | 23 | சம்புவதைப் படலம் | 68 | 24 | சம்புவதைப் படலம் | 67 |
| 15 | அசுவமேத யாகப் படலம் | 317 | 24 | அசுவமேத யாகப் படலம் | 303 | 25 | யாகப் படலம் | 328 |
| 16 | கந்திருவர் வதைப் படலம் | 61 | 25 | வைகுண்ட யாத்திரைப் படலம் | 226 | 26 | கந்திருவர் வதைப் படலம் | 71 |
| 17 | சந்திரகேது நகர்ப் படலம் | 155 | | | | 27 | குமாரர் முடிசூட்டு படலம் | 31 |
| | | | | | | 28 | மறலிப்படலம் | 27 |
| | | | | | | 29 | துருவாசப் படலம் | 19 |
| | | | | | | 30 | வைகுண்டப் படலம் | 79 |
| | | | | | | | பல சுருதி | 3 |
| | | 1511 | | | 1515 | | | 1453 |

நூல்களை ஆன்றோர் எத்தனையோ முறைகளில் அனுபவிக்கிறார்கள். அசுவமேத யாகப் படலத்தில், அசுவமேதயாக சாலைக்குச் செல்ல, இராமன், சனங்கள் செங்கரங் கூப்பத் தேவர்கள் உவப்பச் செழுமணித் திண்தேர் ஏறினான் என்று கூறியவிடத்து, ஆசிரியர் சின்னங்கள் மாறி மாறி ஊதத்தலைப் பட்டன என்று ஆறு பாடல் பாடுகிறார்.

தாயுரை தலைமேற் கொண்டு தையலை உடனே கொண்டு
தீய வெங் கானம் சேர்த்த செருவிலி வில்லி வந்தான்
தூய மா முனிவன் முன்பு தோன்றிய தூயோன் வந்தான்
மாய மாரீசன் மாள வலி சிலை வளைத்தோன் வந்தான்.

என்று இங்ஙனம் இராமகாதை முழுமையும் சுருக்கி, வந்தான் வந்தான் என்று பாடுகிறார். (ஒருவரி, 'இன்று போய் நாளை வா என்றியம்பிய இறைவன் வந்தான்' : இது கம்பராமாயணத் தொடரை எடுத்துப் பெய்தது என்பது வெளிப்படை) வேதாந்த தேசிகர் பாடிய திருச்சின்ன மாலை என்ற பதினொரு பாடல் கொண்ட சிறு பிரபந்தத்துக்கு இது மூலமாயிருக்கலாம் என்பது ஆன்றோர் கருத்து.

அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்
ஆனைபரி தேரின்மேல் அழகர் வந்தார்
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரந் தருதெய்வப் பெருமாள் வந்தார்
முத்துமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென ஓலமிட வல்லார் வந்தார்
உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார்
உம்பர்தொழும் கழலுடையார் வந்தார் தாமே

என்பது அந்நூலின் பத்தாம் பாட்டு.

### இதிகாசமும் புராணமும்

இதிகாச உலகத்தில் உத்தர ராமாயணத்தின் நிலை குறித்து வடமொழிவாணர் சொல்லும் கருத்து அறியத்தகுந்தது. இராமாயணம் இதிகாசம்; உத்தர ராமாயணம் புராணம். இதிகாசத்தில் பல வரலாறுகள் காரண காரியத்தோடு விளங்கச் சொல்லப்படவில்லை; ஆனால் அவற்றுள் பல உத்தர ராமாயணத்துள் விளக்கப்பட்டுள்ளன. இராமாயணத்தில் இராவணன் எப்படி குபேரனிடம் பகைமை பூண்டான், ஏன் இலங்கை

யைக் கைப்பற்றி அவனை வெருட்டி விட்டான் என்பது தெளிவாகவில்லை.

விச்சுவாவசு என்ற முனிவர் தவம் செய்திருந்தபோது பெண்கள் மயக்கிலிருந்து தப்பவேண்டி, தம்மைச் சூழ்ந்த ஓர் எல்லைக்குள் வந்த பெண் யாராயினும் கர்ப்பவதியாக வேண்டுமென்று திட்டம் செய்திருந்தார். கர்ப்பமான பெண் தன்னை மயக்கமாட்டாள் என்பது அவர் கருத்து. பந்து விளையாடிய ஒரு கந்தருவப் பெண் அந்த எல்லைக்குள் வந்ததும் நாலு மாத கர்ப்பமாகி விடவே, உற்றார் அவளை இவருக்கே மணம் புரிவித்தார்கள். பிறந்தவனே குபேரன். இவன் இலங்கையை முன் ஆண்டிருந்த அரக்கரிடமிருந்து கைப்பற்றி, அரக்கரை அழித்தான். அவர்களுள் ஒருவன் மட்டும் தப்பியிருந்து, தன் மகளை இதே இருடிக்கு மணம் செய்வித்தான். அவள் இவரையே வரித்துத் தன்னை மணம் புரியவேண்டியபோது, நேரம் மாலை. இவர் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டபோதும், கோபத்தால், கொடிய பிள்ளைகள் பிறக்கட்டும் என்றார். அவள் வேண்டவே மன மிரங்கி, ஒருவன் மட்டும் சற்புத்திரன் ஆவான் என்று அருளினார். அவனே விபீடணன்; மூத்தோர் இராவணனும், கும்பகருணனும்.

விச்சுவாவசு முனிவருக்கு இரு மனைவியர் மூலம் பிறந்தவர்கள் குபேரனும் இராவணாதியரும் ஆதலால், இராவணனுக்குக் குபேரன் மீது பங்காளிக் காய்ச்சல். அதுபற்றியே தான் அவன் குபேரனை வெருட்டி அவன் நாட்டையும் பொருளையும் கைப்பற்றிக் கொண்டான். பங்காளிப் பகைமை நியாயமானது என்பது வடமொழிக் கருத்து.

## குறிப்பு

உத்தரகாண்டத்தின் முதலில், தனியாக ஒரு பாயிரப்பகுதி அமைந்துள்ளது. அதனுள் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இரண்டு, அவையடக்கப் பாடல்கள் மூன்று உள்ளன. இவை, இது தனியான நூல் என்றும், செய்த புலவர் முந்திய ஆறு காண்டங்களையும் பாடிய புலவரினும் வேறாவர் என்றும் உணர்த்தும். இதன் செய்யுள் நடை கம்பராமாயணச் செய்யுள் நடையினும் அதிகம் வேறுபட்டுள்ளது. அன்றியும், கம்பராமாயணம் யுத்தகாண்டத்தின் இறுதிப்பகுதி இராமன் அயோத்தி மீண்டு முடிபுனைந்த செய்தியும், பின்னர் அனைவருக்கும்

விடைகொடுத்து அனுப்பிய செய்தியும் சொல்லி, நூலை முற்று விக்கிறது. அதைப் பார்க்கும்போது, கம்பர் பாடிய இராமா யணம் யுத்தகாண்டத்தோடு நிறைவு பெறுகிறது என்று திட்ட மாய்த் தெரிகிறது. ஆகவே, உத்தரகாண்டத்தைக் கம்பர் பாடி னார் என்று சொல்வது சிறிதும் பொருந்தாது.

இனி, கம்பரும், ஒட்டக்கூத்தரும் ஒரே காலத்தில் வாழ்ந் தவர்கள், கம்பருடைய இராமாயணத்தைக் கண்டு கூத்தர் தாம் பாடிய இராமாயணத்தைக் கிழித்தெறிந்தார் என்ற பொய்க் கதை முன்னமே சொல்லப்பட்டது. இது விநோதரச மஞ்சரி எழுதிய அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் கற்பனையில் உதித்தது; கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது என்று எழுபது பக்கத்துக்கு மேற்பட்ட ஒரு கட்டுரையாக அவர் எழு தியிருக்கிறார். அதன்சாரம் பின்வருவது. சடையப்பவள்ளல் கம்பரைக் கொண்டு இராமாயணம் பாடுவிக்க எண்ணி, தம் விருப்பத்தைச் சோழ மன்னனிடம் சொல்ல, மன்னன் தனக்கு அவைப்புலவராக ஒட்டக்கூத்தர் இருந்தபடியால் இருவரையும் போட்டியாகப் பாடச்செய்தால் நூல் விரைவில் நிறைவேறும் என்று கருதி, இருவரையும் பாடச் சொன்னான். சில நாள் சென்று இருவரையும் அழைத்துக் கேட்க, கூத்தர் ஐந்து காண்டம் பாடி ஆறாவது காண்டத்தில் கடல்காண் படலம் வரையில் பாடியிருப்பதாகச் சொன்னார். கம்பரைக் கேட்க, அவர் ஒரு பாடல் கூடப் பாடாதிருந்தும், கூத்தருக்குச் சளைக்க வில்லை என்று காட்டவேண்டி கடல்தாவு படலம் வரையில் பாடியிருக்கிறேன் என்றாராம். ஒரு பகுதியை எடுத்துப் பிரசங்கம் செய்யும்படி அரசன் சொல்ல, கம்பர் உடனே தம் மனத்தால் பாடலை எண்ணிக் கொண்டு ‘குமுதனிட்ட குலவரை கூத்தரில்’ என்ற பாடலைச் சொல்லிப் பிரசங்கம் செய்தார். அதில் வந்த துமி என்ற சொல்லை வழக்குச்சொல் என்று அவர் காட்டி சரசுவதியே இடைப்பெண்ணாக வந்து, மோர்த்துமி தெறிக்கும் என்றுகூறித் தம் வாக்குக்கு ஆதரவு தரச் செய்தார். பின்னர் இருவரையும் முடித்துத் தருமாறு அரசன் சொல்ல, அப்படியே கம்பர் நாளொன்றுக்கு எழுநூறு பாடல் வீதம் யுத்தகாண்டம் வரையில் பாடி முடித்தார். அரசவையில் கம்பர் தம் இராமா யணத்தைப் பிரசங்கிக்கக் கேட்ட கூத்தர், அதன் பெருமைக்கு முன்னே தம் இராமாயணம் தேவையில்லை என்று எண்ணிப் பின்னர் கிழித்தெறிந்தார். அந்நேரம் அவர் வீட்டுக்கு வந்த

கம்பர், அவர் செயலைக் கண்டு, கிழிப்பதைத் தடுத்து, எஞ்சிய உத்தரகாண்டத்தைத் தம் நூலோடு சேர்த்து ஏழு காண்டமாக்கிக் கொண்டார்.

வீராசாமிச் செட்டியார் கூற்று நல்ல கற்பனையாயினும், அதனால் பயன் இல்லை; அது போலியாகவும் முடிகிறது. கால உணர்வு இல்லாமல் இக்கதை தோன்றியது. கம்பராமாயண அரங்கேற்றம் கி.பி. 885இல். கூத்தர் உத்தரகாண்டம் பாடியது அவருடைய இளமையில் கி.பி. 1120க்குள் இருக்கலாம் - விக்கிரம சோழன் இவரை அவைப்புலவர் ஆக்குவதற்கு முன்.

> **இன்றைக்கோ கம்பன் இறந்தநாள், என்கவிதை**
> **இன்றைக்கோ ராசசபைக் கேற்குநாள், – இன்றைக்கோ**
> **பூ மடந்தை வாழப் புவி மடந்தை வீற்றிருப்ப**
> **நாமடந்தை நூல் வாங்கு நாள்.**

என்ற ஒரு பாடல், கம்பர் இறந்தபோது ஒட்டக்கூத்தர் வருந்திப் பாடியதாகச் சொல்லப்படும். பாடல் அழகாய் இருப்பினும், இது ஒட்டக்கூத்தர் பாடியதன்று.

ஒட்டக்கூத்தருடைய பிற நூல்களின் நடைக்கும் உத்தரகாண்டத்துக்கும் நிரம்ப வேறுபாடு உண்டென்று சொல்கிறார்கள். உண்மை. பிற்காலத்தில் சக்கரவர்த்திகளுடைய அவைப் புலவராகப் பெருஞ்சிறப்போடு வாழ்ந்த காலத்தில் இவர் பாடிய பாடலின் பெருமித நடைவேறு; உலாக்களிலும், பிள்ளைத் தமிழிலும் தக்கயாகப் பரணியிலும் இதை நன்றாய்க் காணலாம். ஆனால் இளமையில் ஓர் ஆதரவுமின்றி, வாழ்க்கையில் முன்னேற வழி தேடிக் கொண்டிருந்த இளம் புலவருடைய நடை வேறு. இந்த இளம் புலவர் சிறப்பான இந்நூல் செய்தார் என்பதை அறிந்தே விக்கிரமசோழன் இவரைத் தனது அவைப்புலவராக ஆக்கிக் கொண்டான் என்பதும் இங்கு நினைவு கூரத்தகும்.

### அரும்பைத் தொள்ளாயிரம்

"சரசுவதி தம்பலம் கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்த முதலியாரை, அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரம சோழன் கேட்டு, ஒரு கவியை யொட்டச் சொல்லென்று சொன்னபோது ஒட்டக்கூத்தர் பாடியது" என்ற தலைப்போடு பின்வரும் பாடலைத் தமிழ் நாவலர் சரிதை தருகிறது:

நடித்தது நச்சர வுச்சியின், உச்சி மதிலிலங்கை
பிடித்தது, வென்ற திருபது தோள், பதி னெண்பகலே
முடித்தது பாரதம், வீரப் புலிவைப்ப மூரிச் செண்டால்
அடித்தது பொற்கிரி, விக்கிரம சோழ அகளங்கனே.

நூலின் பெயர் அரும்பகைத் தொள்ளாயிரம் என்றும் பாட பேதத்தோடு காணப்படுகிறது. நூல் இன்று இல்லை. எண் செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக முத்தொள்ளாயிரத்தையும், இந்நூற் பெயரையும் இலக்கண விளக்கப் பாட்டியலுரைகாரர் கூறுவர். இவ்வுரையின் காலத்தில் இவ்விரு நூல்களுமே இல்லை, மரபு பற்றியே இங்கு காட்டப்பட்டன. விக்கிரமசோழன் ஒரு சமயம் கூத்தர் இந்நூல் பாடி வருவதைக் கண்டு, அதனுள் வரும் ஒரு கவியை ஒட்டி வேறொரு பாடல் பாடச் சொன்னார் என்றும், அவ்வாறே கூத்தர் இப்பாடல் பாடியுள்ளமையால் ஒட்டக்கூத்தர் என்ற பெயர் வந்ததென்றும் ஒரு வரலாறு கூறும்.

உலாக் கண்ணியை ஒட்டிப் பாடிய செய்தியை முன்னர்க் குறிப்பிட்டோம். தொள்ளாயிரம் பாடலுடைமையால், நூல் அப்பெயர் பெற்றது போலும்: முத்தொள்ளாயிரம் வச்சத் தொள்ளாயிரம் என்பன போல.

அரும்பை என்பது அரும்பாக்கம். விக்கிரம சோழனுடைய படைத் தலைவனாயிருந்த தில்லைப்பதி திருவதிகை வீரட்டா னம் முதலிய தலங்களில் பல திருப்பணிகள் புரிந்தவனாகிய அரும்பாக்கம் மணவிற்கூத்தன் காலிங்கராயனுடைய சிறப்பை இவர் இந்த நூலால் பாடினார் போலும். காலிங்கராயன், கூத்தன் என்ற பெயருடையவனாய் முதற் குலோத்துங்கனது படைத் தலைவனாயிருந்து பல போர்களில் பெருவெற்றி பெற்றவன்; காலிங்கராயன் என்ற சிறப்புப் பட்டம் அம்மன்னனால் இவனுக்கு அளிக்கப் பெற்றது. நரலோக வீரன் என்ற பெயரும் இவனுக் குரியது. இவன் மேற்குறிப்பிட்டவாறு அளவற்ற சிவாலயத் திருப்பணி செய்தவன். அவற்றைச் சிறப்பித்துக் குறிப்பிடுகின்ற பாடல்கள் 60க்கு மேலாக அவ்வாலயங்களில் பொறிக்கப் பட்டுள்ளன. ஒட்டக்கூத்தருடைய அரும்பைத் தொள்ளாயிரப் பாடல் கொண்டவன் இவனே அன்றியும் சாசனப் பாடல்களை நன்கு ஆராயும்போது இவை ஒட்டக்கூத்தரால் பாடப் பெற் றிருக்கலாமோ என்று ஐயமும் எழுகின்றது. விக்கிரமசோழன் உலாக் கண்ணிகள் (77 - 79) இவன் சிறப்பைக் குறிப்பிடும்:

– வேங்கையினும்
கூடார் விழிஞத்தும் கொல்லத்தும் கொங்கத்தும்
ஓடா இரட்டத்தும் ஒட்டத்தும் – நாடாது
அடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடி யெடுத்த காலிங்கர் கோனும்.

எனவே, தன் தந்தை காலத்தில் மிக்க சிறப்போடு விளங்கிய படைத்தலைவனும், தனது சிறந்த படைத்தலைவனுமாகிய இம் மணவிற் கூத்தன் மீது ஒட்டக்கூத்தர் பாடிய நூலை, விக்கிரம சோழன் பாடச்சொல்லிக் கேட்டான் என்று கருதுவதில் இழுக்கில்லை.

## நாலாயிரக் கோவை

புதுவைக் காங்கேயன் மீது கூத்தர் காங்கேயன் நாலாயிரக் கோவை என்ற ஒரு நூல் செய்ததாகச் சோழமண்டல சதகம் குறிப்பிடுகிறது:

கோலா கலமன் னரிலவன்போற்
கொடுத்தே புகழுங் கொண்டாரார்
மேலார் கவுடப் புலவனெனும்
விழுப்பேர் கூத்தன் முழுப்பேராய்
நாலா யிரக்கோ வையும் புனைய
நவில்கென் றிசைத்து நாட்டுபுகழ்
மாலா மெனுங்காங் கெயன்வாழ்வு
வளஞ்சேர் சோழ மண்டலமே.

'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்று பாடலில் புகழ்கொண்ட கூத்தர், உலா பிள்ளைத்தமிழ் பரணி பாடியமை போல, கோவையும் பாடினார் என்று சொல்வர். பாடியவற்றுள் இதுவும் ஒன்றாய் இருக்கலாம். நாலாயிரப்பாடல் கொண்டது என்றும், புதுவை காங்கேயனுக்குரிய நாலாயிரம் என்ற ஊரைச் சிறப்பித்து எழுந்தது என்றும் பலவாறாகக் கூறுவர். நூல் கிடைக்காமையால் இதுபற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஒரு பாட்டு மட்டும் அச்சதகவுரையில் மேற்கோளாய்த் தரப் பட்டுள்ளது (94):

பதிநோக்கி அன்னையைத் தண்டனிட் டேனெனும் பாங்கியரை
எதிர்நோக்கி நின்று தழுவுகின் றேனெனும், என்று பொன்னி
நதிநோக்கி வாழும் நவபுதுச் சேரிநன் னாட்டில் என்றன்
விதிநோக்கிக் காளைபின் மேவுகின் றேன்எனும், வேதியரே.

*இச்சதகக் கூற்றுக்கள் யாவும் உண்மையென்று கொள்வதற்கில்லை; கற்பனையும் கலந்துள்ளன.*

## எதிர்நூல்

*எதிர்நூல் என ஒன்று உண்டென்பதை இறையனார் களவியலுரையாலும், தொல்காப்பிய மரபியல் பேராசிரியர் உரையாலும் அறிகிறோம். 'எதிர் நூல் என்பதும் ஒன்று உண்டு. அது யாதோ எனின், முதனூலின் முடிந்த பொருளை ஒருவன் யாதானும் ஒரு காரணத்தால் பிறழ வைத்தால், அதனைக் கருவியால் திரிபு காட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒரு புலவனால் உரைக்கப்படுவது என்னை:*

தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுப்பது
எதிர்நூல் என்ப ஒருசா,ரோரே.

*என்றாராகலின். பேராசிரியர் கூறுவது: 'மாணிக்க மணியினைச் செவ்வண்ணம் முதலாயின சில இலக்கணங் கூறிய நூல் கிடப்பக் கருவண்ண முதலாயினவும் அதற்கிலக்கணமென்று ஒருவன் எதிர்நூல் என்பதோர் நூல் பிற்காலத்துச் செய்யுமாயின், அஃது அதன் இலக்கண மெனப்படாதாகலானென்பது; ஆசிரியரும் அவர் போல்வாரும், அவர் வழி ஆசிரியரும், செய்யுள் செய்த சான்றோரும், சொல்லாதன சொல்லப்படா வென்பதூஉம் அவருடம்படாதன சொல் உளவென்று எதிர் நூலென ஒருவன் பிற்காலத்து நூல் செய்யுமாயின் தமிழ் வழக்கமாகிய மரபினொடும் தமிழ் நூலொடும் மாறுபட நூல் செய்தானாகு மென்பதூஉம். 'தன்கோன் நிறீஇ' என்ற சூத்திரத்தை இறையனாரகப் பொருளுரையும் தருகிறது.*

*எதிர்நூல் என்ற இலக்கணமொன்றும் கூத்தரால் இயற்றப் பட்டிருந்ததென்பது -*

ஆரவார இலக்கணநூல் ஐந்தும் முழங்க அதற்கெதிர்நூல்
பாரின்மீது தமிழ்க் கூத்தன் பாடியமைத்தான் பயனோர்ந்தே.

*என்ற சோழ மண்டல சதகப் பாடலால் (95) புலப்படுகின்றது. இந்நூல் வழக்கை இலக்கணவுரைகள் குறிப்பிடுகின்றன. ஆனால் இந்நூலில்லை. இது பற்றிய செய்திகளும் தெரியவில்லை.*

## கண்டன் கோவையும் அலங்காரமும்

இதுவரையில் ஒட்டக்கூத்தர் செய்தனவாக இப்போது கிடைக்கின்ற நூல்களையும், கிடைக்காத நூல்களையும் நன்கு ஆராய்ந்தோம். இனி ஒட்டக்கூத்தர் செய்தார் என்று கருதத் தக்க மூன்று நூல்களை இங்கே குறிப்பிடுவோம். இவற்றை ஒட்டக்கூத்தர் செய்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை; யூகத்தால் மட்டுமே இவ்வாறு சொல்கிறோம். இவை கண்டன் அலங்காரம், கண்டன் கோவை, தில்லையுலா என்பனவாகும். இவற்றை வேறு இடத்தில் விரிவாக ஆராய்ந்திருக்கிறோம்.

கண்டன் அலங்காரமும், கண்டன் கோவையும், கண்டன் என்ற சிறப்புப் பெயருடைய இரண்டாம் இராசராசன் மீது பாடப்பெற்றவை. இவை முறையே கட்டளைக் கலித்துறை யாலும், வெண்பாவாலும் செய்யப்பெற்றவை. உரைகளில் மேற்கோளாக முறையே 5 பாடல்களும் 2 பாடல்களும் வரு கின்றன. ‘கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்’ என்று பாடலில் புகழ்பெற்ற கூத்தர் செய்த உலாக்கள் கிடைக்கின் றனவே அன்றி, கோவையும் அந்தாதியும் கிடைக்கவில்லை. ஒருகால் கண்டன் கோவையும் கண்டன் அலங்காரமும், கூத்தர் செய்த கோவையும் அந்தாதியும் ஆகலாம்.

## தில்லையுலா

இந்நூல் இறுதிப் பகுதி கிடைக்காமல், தொடக்கப் பகுதி மட்டும் அச்சிடப்பட்டுள்ளது. இதனுடைய பொருட் போக்கி னாலும், ‘தண்துழாய், மாலைத் திகிரி மரகதமேகத் துயில - நீலக் கடலளித்த நேரியனும்’ என்று குலோத்துங்கன் திருமாலைக் கடலில் எறிந்த செய்தியைப் பாடியிருப்பதாலும், இதில் காணப் படும் சிவபக்தி முதிர்வினாலும், இதையும் கூத்தரே பாடினார் என்று கருதுகிறோம்.

## ஈட்டி எழுபது

‘செங்குந்தர் பிரபந்தத் திரட்டு’ என்ற நூலில் மு. இராக வையங்காரவர்கள் ஒட்டக்கூத்தர் பிரபந்தங்களை விரிவாக ஆராய்ந்து 25 பக்கங்களில் ஓர் ஆராய்ச்சியுரை எழுதியிருக்கிறார். அவ்வுரையில் கண்ட சில குறிப்புக்களைப் பின்னே கூறலாம். முருகக் கடவுளின் துணைவர்களான நவவீரர் வழித்தோன்றல் களாகச் செங்குந்தர் தங்களைப் பழங்காலம் முதலே கருதி

வருகிறார்கள். ஒட்டக்கூத்தர் இக்குலத்தில் உதித்தவரே - ஈட்டி யெழுபது இவர் பாடியது, குலப்பெருமைகளை விளக்குவது. இதுபற்றிய ஒரு வரலாறு உள்ளது. ஒரு சமயம் குலப்பெருமை பற்றி ஒரு நூல் செய்து தரும்படி இவரைச் செங்குந்தர் வேண்ட, இவர் நம் குலத்தை நாமே புகழ்தல் தகுதி அன்று என்று மறுக்க, குலாபிமானம் அற்றவர் என்று இவரை அவர்கள் கொல்லத் திரண்டு வந்தனர். இவர் புவனைச் சோமன் மாளிகையில் ஓடி ஒளிந்தார். இவரிடம் அன்பு கொண்டிருந்த அவன், கூட்டத் தாரிடத்து ஒரு சிவிகையைக் கொடுத்து, 'இதை இங்கே திறவாமல் உரிய இடத்தில் கொண்டுபோய் வைத்துத் திறந்து விருப்பம் போல் செய்யுங்கள்' என்றான் அதனுள்ளிருந்தது ஒட்டக்கூத்தர் அல்ல; சோமனுடைய புதல்வன். இச்சூது அறியாத கூட்டத்தார் ஒட்டக்கூத்தர் அதனுள் இருக்கிறார் என்று எண்ணி அங்ஙனமே செய்துபார்க்க, ஒட்டக்கூத்தரைக் காணாது சோமனுடைய புதல்வனைக் கண்டு அவன் அன்புக்கு வியந்து அவனிடம் திரும்பி வந்தனர். அடைக்கலம் கொடுத்த சோமன், "நீங்கள் உங்கள் வீரத்தை அரசனிடம் காட்டினால் அப்போது கூத்தர் உங்கள் சிறப்பைப் பாடுவது முறை; மற்று, குலாபிமானம் கொண்டு பாடுவது முறையன்று" என்று சொன்னார். அப்படியே அவர்கள் சோழன் சபையில் தம் தலைகளை அரிந்து வைத்து, வீரச்சிங்காதனமிட்டு, அதன்மீது புலவரை இருக்கச்செய்து, தம் மரபின் பெருமையைப் பாடச்சொல்ல, அவர் ஈட்டி எழுபது பாடினார். இச்செய்தி இந்நூலின் பாடல்களால் (தற்சிறப்புப் பாயிரம், பாட்டு 60) விளங்குகிறது.

ஈட்டி எழுபது பாடியபோது, 'கலைவாணி நீ உலகில் இருப்பதுவும்' என்ற பாடலை இவர் பாடியவுடனே இறந்த செங்குந்தர் உயிர் பெற்றெழுந்தனர், இவர் சிரச் சிங்காசனாதிபதி என்று பெயர் பெற்றதோடு, தலைகள் ஒட்டச் செய்த காரணத் தால், ஒட்டக்கூத்தர் என்றும் பெயர் பெற்றார் என்பர். இதற்குச் சான்றாக 'நிலைதந்தார் உலகினுக்கும்' என்ற பாடலில் 'எனக்கும் ஒட்டக்கூத்தர் எனப் பெயரினையும் தந்தாரே' என் பதையும் காட்டுவர். முன் குறிப்பிட்டபடி, 17-18ஆம் நூற்றாண்டில் வேறொரு புலவர் இருந்து அவரே ஈட்டி எழுபது பாடினார், இப்பாடல்களையும் பாடினார் என்று கருதுவது பொருந்தும்; அவருக்கும் ஒட்டக்கூத்தர் என்ற பெயர் இருந்தது என்று கருதுவதால் இழுக்கில்லை: இவர் அரசனிடம் அடைக்கலம்

புகுந்தபோது, அரசன், இவரைக் காக்க வேண்டித் தன் மகனைப் பல்லக்கில் வைத்து மூடி அனுப்பினான் என்ற கதையை ஒரு தனிப்பாடல் குறிப்பிடுகிறது.

அந்நாளில் குமணன்தன் சிரசை ஈந்தான்
அகளங்கச் சோழனொரு பிள்ளை ஈந்தான்
ஒன்றாகும் தமிழ்க்கூத்தன் கவிதைக் காக
ஓராயிரம் செங் குந்தர்முதற் றலையை ஈந்தார்.

என்ற பாடற்பகுதி காண்க. தக்கயாகப்பரணி பாடியது இரண்டாம் இராசராசன் காலத்தில். அவன் பிள்ளைகள் அவன் காலமானபோது பச்சிளங் குழவிகள். அகளங்கச் சோழன் - அவன் பாட்டனான விக்கிரமசோழன். இவன் பல்லக்கில் பிள்ளையை அனுப்பினான் என்பது, வரலாறு விளங்காமல் பிற்காலத்தில் புனைந்த போலிக்கதை என்பது இதனால் தெளிவாகும்.

ஈட்டி எழுபது அச்சிடப்பட்டுள்ளது. இது காப்பு வெண்பா ஒன்றும் பாயிரப்பகுதி ஒன்றும் பலவகை விருத்தப்பாக்கள் 71உம் கொண்டுள்ளது. இந்நூல் ஒட்டக்கூத்தர் பாடினார் என்று வழங்கும் கதை மிகவும் பிற்காலத்தில் எழுந்தது. பாடல்தோறும் குந்தம் செங்குந்தம் என்ற முடிவைக் கொண்டது. மணியன் வேம்பன் நாராயணன் முதலான வீரர்களைப் பற்றிய குறிப்புடையது. பிற்காலத்தில் இன உணர்ச்சி காரணமாகத் தமிழ் நாட்டில் தங்கள் தங்கள் இனத்தைச் சிறப்பித்துப் பாடிய பல நூல்கள் எழுந்தன. அவ்வாறு எழுந்தவற்றில் இதுவும் ஒன்று. ஏரெழுபதின் வழியே வந்த பல நூல்களில் ஈட்டி எழுபதும் ஒன்று. இதன் காலம் 17 - 18ஆம் நூற்றாண்டு ஆகலாம். இது ஒட்டக்கூத்தர் செய்ததன்று. இதுபற்றி வழங்கும் கதைகளும் பொருந்துவன அல்ல. இதன் பாடல்கள், உலாக்களும் பரணியும் பாடிய புலவருடைய வாக்குக்கு உரியன அல்ல.

இறந்த செங்குந்தரைக் கூத்தர் எழுப்பெழுபது என்ற நூல் பாடி எழுப்பினார் என்று கூறி, 13 பாடல்கள் அச்சிடப்பட்டுள்ளன; நூல் முழுமையும் கிடைக்கவில்லை என்பது அதன் இறுதியில் உள்ள குறிப்பு. நூலின் இறுதிப் பாடல் ஒட்டக்கூத்தர் என்ற பெயர், தலைகள் ஒட்டிக்கொள்ளுமாறு பாடியமையால் வந்தது என்று குறிப்பிடுகிறது. அடுத்து, குலோத்துங்க சோழன்

செய்ததாக 10 பாடல் கொண்ட களிப்பெழுபது என்ற பெயரில் உள்ளது. இது அசரீரி முதல் சைவாசாரியர் வரை 10 பேர் கூத்தர் பாடலையும், செங்குந்தரையும் சிறப்பிப்பதாக உள்ளது. இதை அடுத்து, 159 கண்ணிகள் கொண்ட திருக்கை வழக்கம் என்ற நூல் புகழேந்திப் புலவர் பாடியதாக அச்சிடப்பட்டுள்ளது. இது செங்குந்தர் கைப்பெருமையை, வேளாளர்மீது பாடப்பெற்ற திருக்கை வழக்கம்போல, சிறப்பித்துப் பாடுவதாகும். இதனுள் பண்டைக் கால வரலாறுகள் பல தொகுக்கப் பெற்றுள்ளன. இந்நூல்கள் யாவும் 18 - 19ஆம் நூற்றாண்டுக்குரியன; 20ஆம் நூற்றாண்டு நூலும் உண்டு. இவை ஒட்டக்கூத்தர் குலோத்துங்க சோழன் புகழேந்தி முதலியோருக்குச் சிறிதும் சம்பந்தப்பட்டன அல்ல.

புவனைச் சோமன் என்ற பெயர், செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் பின்னும் பெருக்கப்பட்டுள்ளது; ஊரின் பெயர் புவனை வீரன்; சோமன் பெயர் சோமாசியாண்டார்.

### வீரசிங்காதன புராணக்கதை

17ஆம் நூற்றாண்டின் இடையில் எழுந்த வீரசிங்காதன புராணம், அகளங்க சோழச் சருக்கம் என்ற பகுதியில் கூத்தர் தக்கயாகப்பரணி பாடிய வரலாற்றை மிகவும் விரித்துக் கூறு கிறது. இராசராசசோழன் காலத்தில் குடந்தை வீரசிங்காதன மடத்தில் வாழ்ந்த சிவயோகி ஒருவர் தேவாரம் பாடிப் பிச்சை யேற்றுக் கூத்தர் இல்லத்தெதிரே வருங்காலத்தில், ஒருநாள் பின்வரும் சம்பந்தர் தேவாரத்தைப் பாடினார்:

**கல்லால் நிழற் கீழாய் இடர் காவாய் எனவானோர்**
**எல்லாமொரு தேராய்அயன் மறைபூட்டிநின் றுய்ப்ப**
**வல்லாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்**
**வில்லால்எயில் எய்தானிடம் வீழிம் மிழ லையே.**

அப்போது தம் வீட்டு வாயிலிலிருந்து இதைக்கேட்ட கூத்தர் நீண்ட நேரம் சிந்தித்தும் இப்பாடலுக்குப் பொருள் விளங்காமல், பாடியவரைப் பொருள் என்ன என்று கேட்டார். அந்தச் சிவ யோகி சினக்குறிப்புடன், “இதன் பொருளை யான் அறிந்திலேன். நீரும் இதனை அறிய வல்லீரல்லீர்” என்று கூறினார். சினங் கொண்ட கூத்தர் சிவயோகியாரைக் கசை கொண்டு நையப் புடைக்க, அவரும் அவ்விடத்தே வீழ்ந்து மடிந்தார். மடத்தி

லுள்ளார் கேட்டு, ஆயுதங்களோடு திரண்டுவந்து பழிவாங்க எண்ணி இவர் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டனர். இதை எதிர்பார்த்த புலவர், அரசனிடம் சென்று முறையிட்டார். அச்சமயம் அங்கு வந்த அடியவர்கள் கூத்தரைத் தங்களிடம் விடுமாறு கேட்டனர். சோழனும், கூத்தருக்குப் பதிலாக அவர் கள் அறியாமல் தனது புதல்வனை மூடு பல்லக்கில் வைத்து அனுப்பிவிட்டான். அவர்கள் தங்கள் மடம் அடைந்து பார்க்க, அரசகுமாரனாயிருக்கக் கண்டு, மீண்டும் அரசனிடம் வந்தனர். அப்போது கூத்தர் தாமே வந்து அடியவர்களிடம் சரண்புகுந்தார். அவரை அவர்கள் கொல்ல முற்பட்டபோது, அவர் நீராடிப் பூசை முடிக்க மட்டும் அனுமதி கேட்டார். அவர்கள் இசையவே, அவர் அரிசிலாற்றில் நீராடி அருகில் இருந்த முளைச்சாள் அம்மை கோயிலில் புகுந்து, தாளிட்டுக் கொண்டார். அவர் வெளிவருவதை எதிர்நோக்கி அடியவர்கள் காத்திருந்தனர். முளைச் சாளம்மை கோயிலில் கதவடைத்திருந்த கூத்தர், தேவி யைத் துதித்தபோது 'தேவி அவருக்குப் பிரசன்னமாகி, நின்குல தெய்வமாகிய வீரபத்திரக் கடவுள் மீது ஒரு பிரபந்தம் பாடுக' என்றனள். 'அங்ஙனமே பாடுவேன், ஆனால் அதை நீதான் எழுத வேண்டும் என்றனர் புலவர். தேவி அதற்குச் சம்மதித்தனள். உடனே புலவர், வீரபத்திரக் கடவுள் மீது தக்கயாகப்பரணி என்ற பிரபந்தத்தைப் பாடினார். காளிதேவி அதைத் தன் கைப்பட எழுதினாள். அப்போது, வீரரசம் பாடுகிற தருணத்தில் தேவி தன் சதுர்க்கரங்களுள் ஒன்றில் ஏந்தியிருந்த தீபம் அசை வது கண்டு புலவர் 'கைத்தீபம் அசைவதென்?' என்று கூறித் தேவியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தனர். அப்பால் வீரரசம் முடித்ததும், ஆவேச மடங்கி தாம் செய்த தவற்றை யுணர்ந்து அதைப் பொறுக்கும்படி தேவியை வேண்டினர். தேவியும், 'நீ உன் உணர்வின்றிச் செய்த செய்கை அது, அதைப் பற்றிக் கவலாதே' என்று அருளினள். இவ்வடியவர்களின் வழி படு கடவுளாகிய வீரபத்திரக் கடவுள் புகழாகப் பாடி முடித் துப் பொழுது விடிந்ததும் சாளர வழியே நீட்டினார். அதை வாங்கிப் படித்த அடியவர்கள் நூலைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து, "நீர் செய்த கொலைக்கு இந்நூலே கழுவாய்" என்று கூறி, அவரை விடுவித்து இல்லம் போக வழிவிட்டனர்.

இக்கதை பற்றிச் சில குறிப்புக்கள் மட்டும் கூறலாம். அர சனுக்குப் பதிலாகச் சோமன் என்ற வள்ளலை அமைத்து,

அடியவருக்குப் பதிலாகச் செங்குந்தரைச் சொல்லி, இக்கதை இப்படியே ஈட்டி எழுபது பாடிய வரலாறாக அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் உண்மையில், சோமன் என்ற வள்ளல் ஒட்டக்கூத்தருக்கு ஆதரவு தந்தவர்களில் ஒருவன் என்பது மட்டும் வரலாறு. மற்றபடி, தக்கயாகப்பரணிக்குச் சொன்ன கதை முழுவதும் பிற்காலத்தில் எழுந்த போலிக்கதை. 17 - 18ஆம் நூற்றாண்டுகளில் சாதி அபிமானம் பற்றி எழுந்த புராணங் களும் கதைகளும் கணக்கில் அடங்கா. அவற்றுள் இக்கதையும் ஒன்று. இதனுள் பொருந்தாத செய்திகள் பல. பாடலின் பொருள் ஒட்டக்கூத்தருக்கு விளங்கவில்லை என்பதொன்றே இக்கதை போலி என்று காட்டும். சோழர் வரலாற்றின்படி இராசராசனுக்குப் பிள்ளை இல்லை என்பது மற்றொரு குறிப்பு. இராசராசன் காலத்தில் கூத்தர் மிகவும் வயது முதிர்ந்தவர். இவர் தேவாரம் பாடியவரை அடித்துக் கொன்றார் என்பது இயல்வதன்று. மேலும், மடத்தில் இருந்த அடியவர்கள் ஆயுதம் தாங்கிக் கொலைக்குக் கொலைவாங்க முற்பட்டவர்கள் என்பது நம்ப ஒண்ணாதது. அன்றியும், சோழமன்னர் மூவர் காலத்தி லும் கூத்தருக்கிருந்த பெருஞ் செல்வாக்கை அறிந்த எவரும், அவரிடத்தில் பகைமை கொள்ளத் துணிவுபெற முடியாது என்பது சாமானிய உண்மை. இக்கதை பொய் என்பதற்கு இச் சான்றுகள் போதுவன.

அன்றியும், பரணிக்கு உரை எழுதிய காலத்தில் இல்லா மல், பிற்காலத்தில் மூலம் மாத்திரம் உள்ள ஏட்டில் பெரிய மடத்தைக் குறிப்பிட்டு, ஒரு பாடல் எழுதி நூலின் இறுதியில் வாழ்த்துச் செய்யுளாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

குடந்தையம் பதியிற் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மயேச்சுரர் வாழியே.

இது மேற்குறித்த வரலாறு புதிதாகப் புனையப்பட்டது என்பதற்குத் தக்க சான்றாகும். இதனால் தக்கயாகப்பரணி நூலுக்குச் சிறப்புக் குன்றாது; கதை புதியதேயொழிய, நூல் பழையது. வீரசிங்காதன புராணம், சிவப்பிரகாசருடைய தம்பி வேலைய சுவாமிகளாலும் பின்னர் கோட்டூர் உமைபாக தேவ ராலும் பாடப்பட்டது. முந்தியவர் சுமார் 1698இல் காலமா னார், பிந்தியவர் 1719இல் நூல் செய்தார். மொத்தம் 875 பாடல். முந்தியவர் செய்தது 387 பாடல். பிந்தியவர் செய்தது 488 பாடல்.

அகளங்கசோழச் சருக்கம் வேலையர் செய்தது. 180. பாடல் உடையது. கூத்தர் வீர சிங்காதனச் செய்தி இதனுள் கூறப்பட்டுள்ளது. கன்னட பாஷையில் இருந்த பகுதியை வேலையர் தமிழில் மொழிபெயர்த்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. தமிழில் வழங்காத தமிழ்ப் புலவர் கதை கன்னடத்தில் இருந்தது, அதைத் தமிழில் மொழிபெயர்க்க நேர்ந்தது என்று குறிப்பிடும் வரலாறுகள், இக்கதை முழுதும் கற்பனை, உண்மையன்று என்பதை உணர்த்தும். கன்னடத்திலிருந்து தமிழில் வந்தது எனும்போது, கருத்து வீர சைவத்தைச் சிறப்பிப்பதொன்றே. கதைகளே 17ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கக் கூடும் தமிழ்ப் புராணம் 1905இல் அச்சாயிற்று.

## பதிப்பு

உலா: இராசராசன் உலாமட்டும் வையாபுரிப்பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு மதுரை தமிழ்ச்சங்கப் பிரசுரமாக 1922இல் வெளிவந்தது. வையாபுரிப்பிள்ளை அச்சிட்ட உலா இராஜராஜ தேவருலா என்ற பெயரில் செந்தமிழில் (தொகுதி 23, 1925) அச்சிடப்பட்டது - இராசராசன் II; இவ்வுலா மூவருலா ஏடுகளும் கலந்துவிட்ட குழப்பத்தால் தோன்றிய வடிவம் என்று அவரே குறிப்பிட்டுள்ளார்; அக்காலம் மூவருலாவும் கிடைக்கப் பெறாமல், அச்சிடப்பெறாமல் இருந்த காலம்.

மூவருலா மூலம்: பண்டித அ. கோபாலையர் பதிப்பு 1925. டாக்டர் சாமிநாதையர் நூல் நிலையப் பதிப்பு, அடையாறு; விக்கிரம சோழனுலா மூலம், குலோத்துங்க சோழனுலா பழையவுரை, இராசராசனுலா மூலம், குறிப்புரைகளுடன் 1946. குலோத்துங்க சோழன் உலா மூலம், எஸ் ராஜம் 1956.

தக்கயாகப் பரணி: பழையவுரையுடன் ஐயரவர்கள் பதிப்பு 1930, 1945. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்; பண்டித உலகநாதப் பிள்ளை பதிப்பு 1933.

இராமாயணம் உத்தரகாண்டம்: இராமரத்னம் ஐயர் பதிப்பு 1926. ஆழ்வார் திருநகரி பெரியன் சீனிவாசையங்கார் பதிப்பு 1968. செங்குந்தர் பிரபந்தத்திரட்டு, மு. இராகவையங்கார் முன்னுரை 1926. சோழர் வரலாறு இரண்டாம் பகுதி, சதாசிவ பண்டாரத்தார் 1951.

○○○

## அத்தியாயம் 4

# அவ்வையார்

## முன்னுரை

தமிழ் வழங்குமிடமெங்கும் பிறந்த குழந்தைகள் ஐந்து ஆறு வயதில் முதல் முதல் அறிமுகம் பெறும் இலக்கியம் அவ்வையார் நூல்கள்: ஆத்திசூடி, கொன்றைவேந்தன். அவ்வைப் பாட்டியாருடைய* வரலாறும் கதைகளும், அவர் செய்த பாடல்களும், பலரால் தனித்தனியே சொல்லப்பட்டிருப்பினும், அவற்றைச் செவ்வையாக ஆராய்ந்தவர் அனவரத விநாயகம் பிள்ளையவர்கள்; எல்லாக் கதைகளையும் எடுத்துக்கூறி ஆங்காங்கு தடைகளையும் நிகழ்த்தினார்; முடிவு சொல்லவில்லை. (அவ்வையார் என்ற அவரது நூல் 1919) ஆராய்ச்சிகளின் முடிவான கருத்துக்களை நன்கு ஆய்ந்து, அவற்றுட் கொள்ளத் தக்கனவற்றையும் புதிய கருத்துக்களையும் பின்வருமாறு இங்கு தொகுத்துக் கூறலாம்.

### அவ்வை என்ற சொல்

வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு சூழ்நிலையில் வாழ்ந்து, வெவ்வேறு வள்ளல்களாலும் போற்றி ஆதரிக்கப்பெற்று, சிறப்

---

* பாட்டி என்ற சொல்: பாணன் என்ற ஆண்பாலுக்குப் பெண்பாற் பெயர் பாணிச்சி, பாடினி, பாட்டி என்பனவாகும். பாட்டி என்ற சொல் "பாணர் வருக, பாட்டியர் வருக" என்று மதுரைக் காஞ்சியில் சொல்லப் பெறுகிறது (அடி 749). (பாட்டு சொல்வதனால் பாட்டியர்.) பாட்டியர் - பாணிச்சியர் என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுகின்றார். இவ்வாறு பொருள் கொள்வது 14ஆம் நூற்றாண்டுக்குரியவராய்ப் பாணர் சேரியில் வளர்ந்து ஞானநூல்கள் பாடிய பிற்கால அவ்வையாருக்குப் பொருந்துவது ஆகலாம். ஆனால் நாம் இங்கு கருதும் 12ஆம் நூற்றாண்டு அவ்வையார், மேல் வகுப்பிற்கு உரியவர் என்பதை அவர் சொல்லாலே பின்னால் காட்டுவோம். பாட்டியார் என்பது இங்கு மூதாட்டி என்று மட்டுமே பொருள் கொள்வோம்.

பான நூல்கள் செய்த அல்லது பாடல்கள் பாடிய மூதாட்டியர் பலர் அவ்வையார் என்ற பெயரால் வழங்கப்பெற்று வந்திருக் கிறார்கள். தமிழ் நெடுங்கணக்கில் ஔ என்ற எழுத்தைத் தொடக்கமாக உள்ள சொல்லொன்று வேண்டும் என்பதற்காக இப்பெயரை ஔவை என்ற வடிவத்தில் எழுதி வருகிறார்கள். இப்பெயரின் வடிவம் அவ்வை* என்பதாகும். அவ்வை என்றால் அம்மை என்று பொருள். 'அவ்வைக்கு மூத்த மாமன்' என்பது சிந்தாமணி 1046. சூடாமணி நிகண்டு 'அவ்வையும் கந்தியும் நோற்பவள் பெயர்' என்று கூறுவதும் இங்கு கருதத்தக்கது. (சூடாமணி செய்தார் சைனராகலின், கந்தி என்ற சைன சமயத் துத் துறவுபூண்ட பெண்ணேடொப்ப அவ்வையைச் சேர்த்துக் கூறினார்.) அவ்வை - அன்னை (திருக்கோவையார் உரை 214, பேராசிரியர்). அன்னோன் அவ்வை அத்தன்மையனான பீமன் மாதாவாகிய குந்திதேவி (ஞானாமிர்தம், 32:8).

பொதுவாக இன்று அவ்வை என்ற சொல் கிழவி என்ற பொருளோடு வழங்கி வருகிறது. சந்திரனில் காணப்படும் களங் கம் போன்ற நிழல் வடிவத்தை அவ்வைக்கிழவி நூல் நூற்கும் தோற்றம் என்று நம்மக்கள் இன்றும் சொல்லக் காண்கிறோம். அம்மை என்ற சொல்லின் மற்றொரு வடிவம் அல்லது திரிபு என்று இதைக் கருதவேண்டும்.

துறவுபூண்ட பெண்கள் என்ற பொருளில் சிந்தாமணி (2637) அவ்வை என்ற சொல்லை வழங்குகிறது:

அணியிருங் கூந்தலை அவ்வை மார்கள் தாம்
பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்ன நூல்
துணி பொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார்.

அன்றியும், இரக்கச் சொல்லாக, அம்மா, அம்மாவோ என்று உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் கூறுவது போல, "அங்குறை அரவு தீண்டி, அவ்வையோ என்று போக" என்பது சிந்தாமணி 1271; இங்கு அவ்வை - அம்மை; சிந்தாமணி ஆசிரி யரும் சைனர் என்பது இங்கு கருதத்தக்கது. இன்றும் சில சாதி யாரிடையே அவ்வை என்பது அவ்வம்மை என்ற பொருளில் ஆட்சியில் உள்ளது.

---

* இதுபோலவே பழிச்சொல் என்ற பொருளுடைய கவ்வை என்ற சொல் கௌவை என்ற எழுதப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

மணம் செய்து கொள்ளாதிருந்து பருவத்தால் முதிர்ச்சி பெற்றுத் தவக்கோலம் தாங்கி, கல்வி கேள்விகளில் மேம்பட்டு விளங்கிய பெண்டிரை இயற்பெயர் சுட்டாது, அவ்வை என்று வழங்கினர் போலும்.* இத்தகைய பெண்டிர் பலர் இலக்கியம் வல்லவர்களாய்க் காலந்தோறும் இருந்திருக்கிறார்கள்.

அவ்வை பெயரால் அவ்வை நோன்பு இன்றும்கூடத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் பெண்கள் அனுட்டிக்கிறார்கள். இது செவ்வாய்ப் பிள்ளையார் கும்பிடுதல் என்ற பெயரிலே யும் வழங்குகிறது. நள்ளிரவிற்கு மேல் ஓர் ஊரில் உள்ள ஒரு சமூகத்தின் பெண்டிர் பலரும் கூடிப் பிள்ளையார் பிடித்து வைத்து அவ்வை என்று சொல்லி, கொழுக்கட்டை நைவேத்தியம் செய்து வணங்கி, இரவே உண்டு முடித்து விடுகிறார்கள். இதில் செய்கிற பூசை மிக்க இரகசியமாகவும் ஆண் காற்றே வீசாத படியும் பாதுகாக்கப்படுகிறது.❖

யாப்பருங்கல விருத்தியுரை (சூத்திரம் 61) ஔகாரக் குறுக்கம் நேரசை என்பதற்கு உதாரணமாக,

**ஔவை என்று வேறெடுத் துரைக்கும்**
**தௌவை என்றன் ஓலை.**

என்ற ஒரு பாடலை எடுத்துத் தருகிறது.

### அவ்வை பாடல்

இவர்கள் பாடலைத் தொகுத்து, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் திரட்டப்பட்ட தமிழ் நாவலர் சரிதை என்ற நூலானது, கிடைத்த வரலாறுகளையும் ஒன்று சேர்த்து, அவ்வை பாடலாக அமைத்திருக்கிறது. இனி, 19ஆம் நூற்றாண்டின் இடையில் விநோதரச மஞ்சரி எழுதிய வீராசாமிச் செட்டியாரும், தனிப் பாடல் திரட்டுத் தொகுத்த தில்லையம்பூர் - சந்திரசேகர கவிராச பண்டிதரும், தாம் கேட்டறிந்தவற்றை ஒரு சேரத் தொகுத்துத் தந்தார்கள். புலவர் புராணம் செய்த தண்டபாணி சுவாமிகள் தாம் கேட்டறிந்தவற்றைச் சேர்த்து அவ்வை புராண

* காரைக்கால் அம்மையார் என்ற வழக்கும் இதைப் போன்றது. இல்லறத்தைத் துறந்து பேய்வடிவம் பூண்டு பலரால் தொழத்தகும் நிலையில் இருந்த இவரை, புனிதவதி என்ற இயற்பெயர் இருந்துங்கூட, அம்மை என்றே வழங்குவது வழக்கு.

❖ இந்த நோன்பின் விளக்கத்தை அனவரத விநாயகம் பிள்ளை எழுதிய அவ்வையார் (1919) பக்கம் 3 - 7இல் காண்க.

மாகப் பாடி வைத்தார். பொதுவாக, தமிழ் இலக்கிய வரலாற்றில் கால உணர்வு என்பது மிகவும் புதியது. முந்தையோர், கிடைத்த பாடல்களையும் செய்திகளையும் புராதனமாய்க் கருதினார்களே யன்றி, எந்தக் காலம் என்று அவர்கள் ஒருபொழுதும் ஆராய்ந்த தில்லை. அவர்களுக்கு அவ்வையார் பலர் இருந்தனர் என்ற நினைவும் ஏற்படவில்லை. பாடல்களை அவர்கள் தொகுத்துத் தந்தது அவர்கள் நமக்குச் செய்த பேருபகாரம்.

ஆனால் நாம் காலக்கண் கொண்டு பார்க்கிறோம். பார்க்கவே, அவ்வையார் பலர் பல்வேறு காலத்தில் வாழ்ந்தார்கள் என்பது மிகவும் திட்டமாய்த் தெரிகிறது. இவ்வாறு ஒரே பெயர் தரித்த பல்வேறு புலவர்களை ஒருவராகவே கருதிய நிலை, கபிலர், கல்லாடர், நக்கீரர், பட்டினத்தார், கம்பர், பெருந்தேவனார் பேராசிரியர் முதலான புலவர் பலர் சார்பிலும் உள்ளது.

இப்போது கிடைக்கும் அவ்வையார் கதைகளையெல்லாம் தொகுத்துப் பார்த்தோமானால், குறைந்தது அவ்வையார் நால்வர் பற்றிய வரலாறுகளை தனிப்படுத்த முடியும். முதலாமவர் சங்ககாலத்து அவ்வையார். இரண்டாமவர் பாரி மகளிர் - பெண்ணை நதி என்ற கதைளோடு சம்பந்தப்பட்ட அவ்வையார். மூன்றாமவர் சோழர் காலத்து அவ்வையார். இவரே இந்த அத்தியாயத்துள் நாம் கருதுகின்ற பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவ்வையார். நான்காமவர் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று திட்டமாய்க் குறிப்பிடலாம். பின்னும் பலரும் இருந்தார்கள் என்பது உறுதி. அல்லாமலும், இவ்வரலாறுகளிலும் கூட, பின்னால் எழுந்த போலிக்கதைகள் சேர்க்கப்பட்டிருத்தலும் கூடும். இவையெல்லாம் காலக்கிரமத்தில்தான் ஆராய்ந்து தெளிவாக்கித் தனிப்படுத்த முடியும்.

## அவ்வையார்

### 1. சங்ககால அவ்வை

இனி இங்கு குறித்த அவ்வையார் நால்வரைப் பற்றியும் உள்ள வரலாறுகளைப் பாகுபடுத்திக் கூறுவோம். முதலாவது சங்ககால அவ்வையார். இவர் பாடின பாடல்கள் அகநானூறு 4, குறுந்தொகை 15, நற்றிணை 7, புறநானூறு 33 - ஆக 59. இவர் பாடலில் சங்கப்புலவர் பரணரைக் கூறுகிறார். இவரால் பாடப்பட்டோர் சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன்

கானப்போர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தர், அதிகமான் நெடு மானஞ்சி, அவன் மகன் எழினி, தொண்டைமான், வள்ளல் களான பாரி நாஞ்சில் வள்ளுவன் ஆகியோர். பரணர் அன்றி, வெள்ளிவீதியார் என்ற சங்ககாலப் பெண்பாற் புலவரையும் இவர் குறிப்பிடுகிறார். அதிகமானிடம் நெல்லிக்கனி பெற்று உண்ட கதை இவரைக் குறித்தது. இக்கதையைச் சங்கப் புலவர் நத்தத்தனாரும் குறிப்பிடுகிறார். குறளாசிரியர் காலமும் சங்க இலக்கியக் காலம் என்று கருதக் கூடுமானால், குறளின் சிறப்பைக் குறித்த "கடுகைத் துளைத் தேழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என்ற பாடலை "அணுவைத் துளைத் தேழ் கடலை" என்று திருத்திப் போற்றிய அவ்வையார் ஒருவர் உண்மையா கவே இருந்தார் எனவும், அவர் இவரே எனவும் கருதலாம். இவர் தனியாக எந்த நூலும் செய்ததாய்த் தெரியவில்லை.

பொதுவாக, அவ்வையார் வயது சென்ற மூதாட்டி, அஞ்சா நெஞ்சம் உடையவர், பெரியோரிடத்து அன்பு மிக்கவர், மன்னர்கள் அவரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார்கள் என்ற எண்ணம் நம் உள்ளத்தில் உள்ளது. இந்தத் தன்மைகள் யாவும் இச் சங்ககால அவ்வைக்குப் பொருந்துவன. இந்த அவ்வையார் அதிகமானைப் பாடியிருக்கிறார்:

> நீல மணிமிடற் றொருவன் போல
> மன்னுக, நீயே பெரும! தொன்னிலைப்
> பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
> சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
> ஆதல் நின்னகத் தடக்கிச்
> சாதல் நீங்க எமக்கீத் தனையே.

என்ற வரிகளில் (புறம் 91) அவ்வையார் தமக்குச் சாதலைத் தவிர்க்க வல்ல நெல்லிக்கனி தந்தமையைச் சுட்டிப் பாடியிருக்கிறார்.*

இவ் அவ்வையாரைக் குறித்து இரு கருத்துக்களைக் கூறி விட்டு நிறுத்திக்கொள்கிறோம். எட்டுத் தொகையுள், பொருளால் தனித்தன்மை வாய்ந்தனவான பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு,

---

* பிற்காலத்தில் இந்த உண்மை வரலாறு, போலியாகப் பந்தன் என்ற வணிகனோடும் அக்காலத்து ஓர் அவ்வையோடும் பொருத்தப்பட்டு, பந்தனந்தாதி என்ற நூலில் காணப்படுகிறது - இக்கட்டுரையிறுதியில் பந்தனந்தாதி என்ற தலைப்பைப் பார்க்க.

*கலித்தொகை, பரிபாடல் என்ற நான்கையும் நீக்கி, ஏனைய நான்கு தொகைநூல்களான அகநானூறு குறுந்தொகை நற்றிணை புறநானூறு என்ற நான்கிலும் இவர் பாடல்கள் காணப்படுகின்றன என்பது ஒன்று. இரண்டாவது, இந்த நான்கு தொகை நூல்களில் மட்டும் அடங்கிய பாடல்களில் மிகவும் அதிகமான பாடலுடையோர் யாரெனின், கபிலரும் பரணரும் அவ்வையாரும். கபிலர் 106, பரணர் 85, அவ்வையார் 59; பிறர் அனைவரும் 40 பாடல்களுக்குக் குறைவாகப் பாடினவர்களே. இக்குறிப்பினால், கபிலபரணர் என வழங்கும் தொடரின் பொருத்தமும், அவ்வை பாடல்களின் மிகுதிச் சிறப்பும் நன்கு விளங்கும். இவ் அவ்வை நாம் ஆராயும் காலத்துக்கு மிக முற்பட்டவராதலின், இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறோம்.*

*சங்ககால அவ்வை பாடியதென்று கருதத்தக்க பின்வரும் பாடல் தொல்காப்பியச் செய்யுளியல் - பேராசிரியர் நச்சினார்க்கினியர் உரைகளில் தரப்பட்டுள்ளது. அங்கதம் என்னும் வசைப்பாட்டுக்கு உதாரணமாக அங்கு இப்பாடல் வருகிறது. பின்னால் தமிழ் நாவலர் சரிதை இதை அவ்வை பாடல் என்றே பெயர் குறிப்பிடுகிறது; 'அவ்வையார் ஒருவனைப் பாட அவன் இகழ்ச்சி சொல்ல அப்போது பாடியது.' இவன் கொடை வழங்குந் தன்மையற்றவன்; இவனைப் போன்ற கட்டி என்பவனும் இப்பாடலில் குறிப்பிடப்பெறுகிறான்:*

எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
எம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோர் எம்புகழ் இகழ்வோர்
பாரி ஓரி நள்ளி எழினி
ஆஅய் பேகன் பெருந்தோள் மலையனென்று
எழுவருள் ஒருவனு மல்லை; அதனால்
நின்னை நோவ தெவனோ?
அட்டார்க் குதவாக் கட்டி போல,
நீயும் உளையே நின்னன் னோர்க்கே;
யானும் உளனே தீம்பா லோர்க்கே;
குருகினும் வெளியோய் தேஎத்துப்
பருகுபா லன்னஎன் சொல்லுகுத் தேனே.

*நாடி வந்தவருக்கு உதவாதவன் கட்டி என்று இங்கு அவ்வையார் கட்டி என்பவனைப் பழிக்கிறார். இக்கட்டி சங்ககாலத்தில்*

வாழ்ந்தவன். இவன் உறந்தைச் சோழனுடைய போர்ப்பறையின் ஒலியைக் கேட்டு அஞ்சிப் பொராது ஓடிவிட்டான் என்று பரணர் அகநானூற்றில் பழிக்கிறார் (226):

வலிமிகு முன்பின் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய ஆர்ப்பினும் பெரிதே.*

அவ்வையாரும் பரணரும் சமகாலத்தவர், சங்ககாலத்தவர் அதியமானைப் பாடிய பாடலில் (புறம் 99) 'அன்றும் பாடுநர்க் கரியை, இன்றும், பரணன் பாடினன் மற்கெல்' என்று அவ்வை பரணரை உடன்காலத்தவராகக் குறிப்பிடுவது காண்க. அன்றி, 'எம்மிகழ்வோரவர்' என்ற பாடல் சங்கால அவ்வை பாடல் என்பதில் ஐயமில்லை.

இது எவ்வாறு தொகைநூலில் காணப்படாமல் விடுபட்டது என்பது விளங்கவில்லை. புறம் 267, 268 பாடல்கள் கிடைக்கவில்லை என்பது ஐயரவர்கள் குறிப்பு. இப்பாடல் ஒருகால் அவற்றுள் ஒன்றாக இருக்கலாமோ? 269ஆம் பாடலும் அவ்வையார் பாடல்; இப்பாடல் ஒருகால் 268ஆம் பாடலாயிருக்கலாம்.

## 2. அங்கவை – சங்கவை கால அவ்வை

சங்ககால வள்ளல் பாரியின் தோழராகக் கபிலர் வாழ்ந்தார்; அவன் இறந்தபின் அவர் அவனுடைய மகளிர் இருவரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்து உயிர்நீத்தார் என்று புறநானூற்றால் அறிகிறோம். அம்மகளிர் பாடிய ஒரே பாடல் 'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்' என்ற 112ஆம் புறப் பாடல். அம்மகளிர் மணத்தைப் பற்றிய செய்தியோ, அங்கு அறியுமாறில்லை. இராசராசசோழன் கல்வெட்டொன்று 'முத் தமிழ்க் கபிலன் மூரிவண் தடக்கைப் பாரி தன் அடைக்கலப் பெண்ணை மலையர்க்கு உதவி...' என்று கூறுகிறது. இதன்

---

* கட்டி என்பது தோற்றோடுபவருக்குரிய இழிசொல் போலும். பிற்காலத்தில் தோற்றோடிய ஒரு கட்டியைக் கொங்கு மண்டல சதக மேற்கோள் பாடலொன்று குறிப்பிடுகிறது.

வரலாறு தெளிவாயில்லை. பாரியின் அடைக்கலப் பெண்ணா, ஒரு பெண்ணா, மலையர்க்குக் கொடுத்தாரா - தெளிய வழி யில்லை. காலம் இராசராசனுக்கு முற்பட்ட காலம். ஆனால் ஓர் அவ்வையார், பாரி மகளிரை - அங்கவை சங்கவை என்ற இருவரையும் - மலையரசனான தெய்வீகன் என்பவனுக்கு மணம் முடித்தார் என்ற கதை உலவுகிறது. இது பற்றிய விரிவான கதை களும் தனிப் பாடல்களும் அனேகம். இப்பாரி யாராயினும், பாடல்களைப் பார்க்கும்போது இது சங்ககால வரலாறா யிருக்கவியலாது என்பது மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். எப்படியோ இந்த அவ்வை இருபெண்களுக்கு மணம் முடித்தார். வரலாற்று விளக்கமின்மையால் எல்லோரும் ஒரே அவ்வை என்ற நினைப்பு இதுவரை இருந்து வருகிறது. இதைமாற்றி, சங்ககால அவ்வைக்குப்பின் வேறொரு அவ்வை இருந்து, அங்கவை சங்கவை பற்றிய பாடல்களைப் பாடி இப்பெண் களுக்கு மணமும் முடித்தார், இவர் நூல் எதுவும் பாடவில்லை எனலாம். இவர் காலம் 9 - 10ஆம் நூற்றாண்டாயிருக்கலாம். இவர் வரலாற்றில் கற்பனைக் கதைகளே அதிகம், இவர் பாடல்களும் கொச்சைத் தமிழாலே இருக்கும் என்று மட்டும் இப்போது ஒரு வரையறை செய்து தருகிறோம். இவர் பற்றிய கதைகளையும் ஒரு தொகுப்பாக இங்கு தருகிறோம். தொகுத்தமையினாலேயே இவை மெய்யென்பது பொருளல்ல, இவை இடைக்கால அவ்வை என்று வேண்டுமானால் பெயர் சூட்டலாம்.

சுந்தரரும் சேரமானும் கயிலாயம் சென்றபோது ஓர் அவ்வை விநாயகரகவல் பாடிக் கயிலாயம் சென்றார் என்று ஒருகதை சொல்வார்கள். சுந்தரரும் சேரமானும் கயிலாயம் சென்ற வரலாற்றைப் பாடிய சேக்கிழார் அவ்வையாரைச் சொல்லவில்லை. மேலும், விநாயகரகவல் 14ஆம் நூற்றாண்டுக் குரியது என்று எமது நூலில்* விளக்கியிருக்கிறோம். ஆதலால் அந்தக் கதையை இங்கு சொல்லவில்லை.

கலைமகளின் அருள் நோக்கம்பெற்ற புலவர்கள் மனித இயல்பையும் கடந்த செயல்களையும் செய்ய வல்லவர் என்பது முற்காலத்தில் இருந்த நம்பிக்கை. ஆகவே இந்த உணர்வோடு இனிவரும் கதைகளையும் பார்க்க வேண்டும். இந்த அவ்வையார், காரைக்கால் அம்மையார் போல, சிவபெருமானை வேண்டி

* எமது தமிழிலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு பார்க்க.

இளமையிலேயே மூப்பு வடிவமடைந்து, அவ்வைக் கிழவி என்று உலகத்தாரால் போற்றப்பெற்றார் என்று புலவர் புராண முடையார் கூறுவர். இங்ஙனமன்றி, அவ்வையார் மங்கைப் பருவம் அடைந்தபோது, பூர்வ புண்ணிய வசத்தால் மணத்தை விரும்பாது சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சுடையவ ராய் வாழ்ந்து, வயதில் முதிர்ந்து யோகிபோல வாழ்ந்து உலகத் தாரின் மதிப்பைப் பெற்றிருந்தார் என்றும் சொல்வர்.

அவ்வையார் வரலாற்றில் காணும் கிளைக்கதைகள் எண்ணற்றன. அத்தனையும் எடுத்துச் சொல்லி ஆராய்வதற்கு ஒரு பெருநூல் போதாது. எனினும், இங்கு சில நிகழ்ச்சிகளை மட்டும் ஏற்ற பெற்றி எடுத்து ஆய்ந்துகொண்டு செல்வோம். முதலாவதாகப் பாரி பறித்த பறி என்பது. இதற்காதாரமான பாடல் பின்வருவது:

பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரியன் றீந்த களைக்கோலும், – சேரமான்
வாராய் என அழைத்த வாய்மையும், – இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.

இங்கு நான்கு வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பாரி பறித்த பறி, காரி கொடுத்த களைக்கோல், சேரமான் வாராய் என அழைத்தது, நீலச் சிற்றாடை இப்பாரி சங்ககாலத்து வள்ளலாகிய பாரி என்று சொல்வர். இவன் அவ்வையாரைத் தன்னிடத்தேயே இருத்தவேண்டும் என்ற விருப்பத்தினால், அவருக்கு நிரம்பப் பரிசில் கொடுத்து அனுப்பி, அவர் தன்னூர் கடந்து செல்லும் போது தன் ஏவலாளரைக் கொண்டு அத்தனையும் பறிக்கச் செய்து, அவர் தன்னிடம் வந்து முறையிடுவதைக் கண்டு மகிழ்ந்து, மீண்டும் நிரம்பப் பரிசளித்து மகிழ்வான். இதுவே பாரி பறித்த பறி.

காரி என்ற வள்ளல், அவ்வையார் யாசித்தபோது, ஒரு களைக்கொட்டைக் கொடுத்துக் களையெடுக்கச் செய்து, பின் அவருக்கு உணவு அளித்தான். சேரமான் அவ்வையாரைக் கண்ட வுடன், தன் இருக்கையை விட்டு எழுந்து அப்பாற் சென்றுவிடு வான்; இவரை உபசரிக்கும் தகுதி தனக்கில்லை என்ற பணி வுணர்ச்சியினால், இதுவே சேரமான் வாராய் (வருக) என அழைத்த வாய்மை.

அவ்வையார் ஒரு சமயம் மழையால் நனைந்து நடுக்கிக் கொண்டு திருக்கோவலூர்ப் பெண்ணை யாற்றங்கரை வர, அங்கு ஒரு சிறு குடிசையில் இருந்த அங்கவை சங்கவை என்ற இரு பெண்கள், தங்களுக்கு மாற்றுடையின்மையால், தங்கள் சிற்றாடையைக் களைந்து அவ்வைக்கு உடுத்தத் தந்து அவருடைய நனைந்த துணியை உலரச்செய்து, அதுவரை தாங்கள் ஆடையின்றிக் குடிசைக்குள் இருந்துகொண்டு, கேழ்வரகுக் களியும் கீரையும் சமைத்து அவரை உண்பித்தனர். அவரும் குளிர் நீங்கி மகிழ்ச்சியோடு உண்டு களைப்பு நீங்கினார். தம் நன்றியுணர்வினால், அச்சிறுமிகள் தமக்கு நீலச் சிற்றாடையளித்ததை முற்காட்டிய பாடலாலும், கீரைக்கறியைப் பின்வரும் பாடலாலும் சிறப்பித்தார்.

வெய்தாய், நறுவிதாய், வேண்டளவும் தின்பதாய்,
நெய்தான் அளவி நிறம்பசந்து, – பொய்தான்:
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்:
கடகம் செறிந்த கையார்.

கடகம் செறிந்த கையார் என்று இவர் பாடினமையால், அக் குடிசை மாளிகையாகி, அப்பெண்களுக்குச் சகல செல்வமும் நிரம்பிற்று என்பர். பாரி கதையையும், பெண்கள் நீலச் சிற்றாடை கொடுத்ததையும், அவ்வை வரலாற்றையும் கேட்டறிந்த ஒருவர் மூன்றையும் சேர்த்து விட்டார் என்றே கருதவேண்டும். பாரியின் நண்பரான சங்கப்புலவர் கபிலர், பாரியின் பெண்களுக்கு மண முடிக்க ஏற்பாடு செய்தார் என்பது புறநானூற்றுச் செய்தி. இப் பெண்களுக்கும் அவ்வைக்கும் சம்பந்தம் வெறும் கற்பனையே. தம்மை உபசரித்த பெண்களின் உபசாரம், பாரி காரி சேரமான் என்போருடைய பேரன்பு என்று கதையில் கேட்ட செய்திகளை ஒத்தது என்று அவ்வையார் பாடினார் என்றே பாரிபறித்த பறி என்ற பாடலுக்கு நாம் பொருள் செய்ய வேண்டும்.

இங்ஙனமே பிற செய்திகளான காரி அன்று ஈந்த களைக் கோல், சேரமான் வாராய் என அழைத்த வாய்மை என்பனவும். இவை மூன்றும் சங்ககாலத்து வரலாறுகள்; அக்கால அவ்வை பற்றிய வரலாறுகளாயிருக்கலாம். பின்வந்த அவ்வையார் அக்கதைகளைக் குறிப்பிட்டு, பிரசித்தமாயிருந்த அச்செயல் தமக்கு இப்பெண்கள் நீலச்சிற்றாடை அளித்து ஆதரித்த அன்புடைமைக்கு நேராகும் என்றே நாம் பொருள் கொள்ள வேண்டும். பாடல் பழங்கால அவ்வையார் பாடலன்று,

*நீலச் சிற்றாடையைத் தொடர்ந்து இப்பெண்கள் திருமணச் செய்திகள் வருகின்றன. தமக்கு, ஆடையும் உண்டியும் அளித்த பெண்கள் ஆதரவற்றிருந்தமை அறிந்த அவ்வையார், விச்சிக்கோ இருங்கோவேள் ஆகிய இருவருக்கும் இப்பெண்ணை மணம் முடித்துக் கொடுக்க முயன்றபோது, அவர்கள் பாரியிடம் பகைமை பூண்டிருந்த மூவேந்தரையும் பகைத்துக் கொள்ள அஞ்சி மறுத்தனர் என்பது கதை. பின் அவ்வையார் தெய்வீக னுக்கு இவர்களை மணம் செய்விக்க எண்ணி ஓலை எழுதும்படி விநாயகரை அழைத்தார்:*

ஒருகை இருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுருவக் கங்காளன் செம்மல் – கரிமுகத்தன்
கண்ணால வோலை கடிதெழுத வாரானேல்.
தன்னாண்மை தீர்ப்பன் சபித்து.

*பின்னர் அவன் விரும்பியவாறு, மூவேந்தரையும் திருமணத்துக்கு வருமாறு பின்வரும் மூன்று பாடல்களில் மணவோலை எழுதி யனுப்பினார். அரசர் மூவரும் வந்தனர். மணம் நடந்தது. உணவு உண்ணும்போது அவர்கள் அது பனை காய்க்கும் காலமன் றாயினும், அவ்வையாரின் வல்லமையை வெளிப்படுத்த வேண்டு மென்று எண்ணி பனை நுங்கு வேண்டும் என்று கேட்டார்கள். அங்கு வெட்டி உலர்ந்து கிடந்த துண்டத்தை நோக்கி அவ்வையார்,*

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே,
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

*என்ற பாட்டைச் சொல்லவே, அத்துண்டம் குருத்துவிட்டு வளர்ந்து பச்சோலை சலசலக்க நெடுங்குலைகளைத் தாங்கி நின்றது. பார்த்தோர் மகிழ்ந்தனர். சிற்றாடை தந்த பெண்கள் இருவரும் இடையர் குலமாதலின், அவர்களுக்கு மரபை யொட்டி ஆடு சீதனங் கொடுக்க எண்ணிச் சேரனைக் கொடுக்கச் சொன்னபோது சேரன் பொன்னாடு தந்தான். அவனுடைய கொடைச்சிறப்பைப் பாராட்டி அவ்வையார் பின்வரும் பாடல் பாடினார்:*

சிரப்பான் மணிமுடிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடு கேட்கவே, பொன்னாடொன் றீந்தான்;
இரப்பவர் என்பெறினுங் கொள்வர், கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்.

*இம்மண விழாவுக்காக, பெண்ணை நதியில் பால் நெய் பெருகி வரும்படி அவ்வையார் பின்வரும் பாடல் பாடினார்.*

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து – குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண் டோடிவா.

*பொன்மாரி பொழியும்படியாக வருணனைப் பாடினார்.*

கருணையால் இந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே, மாமலையன் கோவற் – பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீ ரதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி.

*இவ்வளவும் நடந்த திருக்கோவலூரைச் சிறப்பித்து ஒரு வெண் பாப் படினார்.*

பொன்மாரி பெய்யுமூர், பூம்பருத்தி, யாடையாம்,
அந்நாள் வயலரிசி யாகுமூர், – எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருக்கோவலூர்.

*மணமக்களைப் பின்வரும் பாடலால் வாழ்த்தினார்.*

ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றளக
மாயனூ துங்கருவி யானாலும் – தூயமணிக்
குன்றுபோல் வீறு குணமுடையான் தன்னுடன்நீர்
இன்று போ லென்றும் இரும்.

*மேற்கூறியவை திருக்கோவலூரில் நடந்த திருமணம் பற்றிய தொகுப்பான செய்திகள். பாரி மகளிர் மணம் பற்றிய வரலாறு திருக்கோவலூர்க் கோயிலில் முதல் இராசராச சோழன் காலத் துச் சாசனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சாசனம் மிக நீண்டது. அதனுள் இவ்வரலாற்றுப் பகுதி பின்வருவது. சாசன காலம், இராசராசனது ஆட்சியாண்டு 27 (கி.பி.1012):*

மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையற்கு உதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத்து அந்தரிட் சஞ்செல
மினல்புகும் வீடுபே றெண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்லது.

*இங்கு கபிலர், பாரி தன் அடைக்கலப் பெண்ணை மலையற்கு மணம் முடிப்பித்தார் என்றசெய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் பாரி மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்தார் என்று புறநானூறு 236 கூறும். சரிதைச்செய்தி இதனோடு பொருந்து கிறது. மலையர்க்கு என்ற குறிப்பு மலையமானாட்டுப் பார்ப்பா ரைக் குறித்தாகும். இவ்வரலாற்றுக்கும் அங்கவை சங்கவையை அவ்வையார் மணம் முடித்ததற்கும் தொடர்பு இல்லை. இரண் டும் ஒன்றாக வழங்குவது பிழையே. அன்றியும் பிற்கால நூலா கிய அண்ணாமலைச் சதகம் திருக்கோவலூரில் அவ்வையார் அங்கவை சங்கவை மணத்தில் கணபதியை அழைத்து ஓலை எழுதச் சொன்ன வரலாற்றை உரைத்ததோடு, இவர் தந்தை பாரி சாலன் என்னும் சிங்கள மன்னன் என்று கூறுகிறது:*

சிங்கள மெனுந்தேய முழுதாளு மன்னவன்
சிறந்தபேர் பாரி காலன்
செய்யுமெய்த் தவத்தால் உதித்துநற் குணமேவு
சிறுமி யங்கவை சங்கவை
மங்கையர்க ளிருவரை வளர்த்தெடுத் தவ்வையார்
மாமுகக் கணபதி கையான்
மணவோலை எழுதிமும் மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகி டற்குத்
தங்கிப் பனந்துண்ட மரமாகி யேபழந்
தரநதிப் பெண்ணை நெய்பால்
தானாய்வரப் பாடியப் பெண்களைத் தெய்விகத்
தலைவன் மணம் புரியவே
அங்குதவும் அவ்வைதொழும் ஐங்கரன் தந்தையே
அருள்பெறு வசந்த ராயர்
அண்ணாவி னிற்றுதிசெய் உண்ணா முலைக்குரிய
அண்ணாமலைத் தேவனே.

இவற்றால் நாம் பெறுவது, அவ்வை மணம் முடித்து வைத்த அங்கவை சங்கவை என்பவர் பாரி மகளிரல்லர், பாரிசாலன் என்பான் மகளிர் என்பதும், இம்மண வரலாற்றுக்கும் சங்க காலப் பாரி மகளிர் கபிலர் அவ்வை என்பாருக்கும் தொடர்பில்லை என்பதாகும்.

மகளிர் திருமணத்துக்கு வரவேண்டும் என்று அவ்வை கணபதியைக் கொண்டு எழுதுவித்து அனுப்பிய ஓலை பின்வரும் பாடல்கள்:

சேரலர்கோன் சேரன் செழும்பூத் திருக்கோவ
லூரளவுந் தான்வருக உட்காதே, – பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்
சங்கவையை யுங்கூடத் தான்.

புகார்மன்னன் பொன்னிப் புனனாடன் சோழன்
தகாதென்று தானங்கிருந்து – நகாதே
கடுக வருக, கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள்.

வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே – தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியாஈ ரொன்பானாள்
ஈண்டு வருக இயைந்து.

மூன்று அழைப்புகளிலும் நிரம்பப் பொருள் வேறுபாடு காணப்படுகிறது. முதற்பாடல் பாரியின் பெண்களான அங்கவை சங்கவை இருவர் மணத்துக்குச் சேரன் திருக்கோவலூரளவும் வரவேண்டும் எனக் கூறுகிறது. இரண்டாம் பாடல் 18ஆம் நாள் சோழன் வரவேண்டும் என்று சொல்லுகிறதேயொழிய, மணத்தைக் கூறவில்லை. மூன்றாம் பாடல் வேண்டுவன கொண்டு வரும்படி பாண்டியனுக்குக் கூறுகிறது. எனினும், இம்மூன்றுக்கும் திருத்தமான தொடர்பு காணமுடியவில்லை.

எப்படியோ மூவரும் வந்தனர். மணம் செய்து முடிந்த செய்தி முதலியவற்றை முன்னமே பார்த்தோம். அவ்வை பாடலுக்காகப் பெண்ணை நதியில் நெய், பால் பெருகி வந்த செய்தியை வில்லிபாரதத்தின் சிறப்புப் பாயிரத்தில் திருமுனைப்பாடி நாட்டைச் சிறப்பிக்குமிடத்து வரந்தருவார் குறிப்பிடுகிறார்:

அவ்வை பாடலுக்கு நறுநெய்பால் பெருகி
அருந்தமிழறிவினாற் சிறந்து
பெளவநீ ராடைத் தரணிமான் மார்பிற்
பயிலுமுத் தரியமும் போன்று
மொய்வரால் கெண்டை வாளைசேன் மலங்கு
முதலிய சனமெதிர் கொள்ளத்
தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத்
திருமுனைப் பாடிநன் னாடு.

இக்குறிப்பினால், அவ்வையையும் பெண்ணை நதியையும் பற்றிய கதைகள் மிகவும் பழங்காலத்துக் கதைகள் என்பதில் ஐயமில்லை. அன்றியும், பிற்காலத்தில் பல தலபுராணங்கள் செய்த சுவாமிமலை கனகசபைஐயர் என்ற பெயருள்ள வீரசைவப் புலவர் பெண்ணைநதிப் புராணம் என்ற ஒரு புராணம் பாடி உரையோடு 1889இல் அச்சிட்டார். இது 18 படலங்களும் 677 பாடல்களும் உடையது. இதனுள் 11ஆவது பால் - தயிர் - நெய் - படலம் என வந்தது, 170 பாடல்கள் கொண்டது, அவ்வை வரலாற்றைக் கூறுகின்றது. இதனுள் செவிவழியாகக் கேட்ட பல செய்திகளையும், பாடல்களையும் புலவர் தொகுத்து அமைத்திருக்கின்றார். வரலாற்று அறிவுக்கு இதனால் ஒரு பயனும் இல்லை. ஒரு சாபம் காரணமாகப் பார்வதியின் தந்தையாகிய இமராசன், முனிவர் செய்த யாகத்தில் இரு அசுரரை அழிக்க வேண்டித் தெய்வீகராசன் என்ற பெயரோடு தோன்றினான். சிறப்பான பச்சைக் குதிரையை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தமிழ்வேந்தர் மூவரும் அவனோடு போரிட்டுத் தோற்றனர். பாண்டியன் தன்மகள் காஞ்சனமாலையைத் தெய்வீகனுக்கு மணம் செய்து கொடுத்தான். இவள் பெற்ற பிள்ளையே நரசிங்கமுனையரையர் என்ற நாயனார். சோழன் தன் மகள் பொன்மாலையைத் தெய்வீகனுக்கு மணம் செய்து கொடுத்தான். இவள் பெற்றபிள்ளை மெய்ப்பொருள் நாயனார். சேரன் தன் பெண் பதுமாவதியைத் தெய்வீகனுக்கு மணம் செய்து கொடுத்தான். இவள் பெற்றபிள்ளை சித்திரசேனன் வழியாக மலையமான் வமிசம் உண்டாயிற்று. இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அவ்வை பெருங்கணவாய் என்ற ஊரிலுள்ள சிங்களர் வீதி வழியே சென்றபோது, மழையால் நனைந்த குளிரால் நடுங்கி ஒரு வீட்டினுள் நுழைந்தார். அங்கிருந்த அங்கவை சங்கவை என்ற சிறு பெண்கள் செய்த உபசாரத்தால் மகிழ்ந்து அவர்களை அழைத்துக்கொண்டு தெய்வீகனுக்கு அவர்களை மணம்

செய்விக்க எண்ணித் திருக்கோவலூரரை அடைந்தார். தெய்வீகன் கேட்டு, முன்னமே தனக்குப் பெண் கொடுத்த சேர சோழ பாண்டியன் மூவரும் சம்மதித்தால் தான் மணம் செய்து கொள் வதாய்ச் சொன்னான். அதன்மேல் அவ்வையார் மூவருக்கும் புகார் மன்னன், வையைத்துறைவன், சேரலர்கோன் என்ற பாடல் களை எழுதி ஓலை அனுப்பினார். மூவரும் வந்து நிலைமையை உணர்ந்து, அங்கு கிடந்த ஒரு பனந்துண்டம் மூவருக்கும் மும் மூன்று பனநுங்கு தருமானால் மணம் செய்யலாம் என்று சொல்ல, அவ்வையார் திங்கட் குடையுடை என்ற பாடல் பாடி, அப்பனை நுங்கு தருமாறு செய்தார். இதன்மேல் மணத்துக் காகப் பொன்மாரி என்ற பாடல் பாடி, பருத்தி ஆடை காய்க்கும் படியும், நெற்பயிர் அரிசி காய்க்கும்படியும், பொன்மாரி பெய்யும்படியும் செய்தார் முத்தெறியும் பெண்ணை என்ற பாடல் பாடி பெண்ணை நதியில் நெய் பால் வருமாறு செய்தார். மணம் நடந்தது அவ்வையார் அங்கவை சங்கவை என்ற இரு பெண்களுக்கும் நல்வாழ்வு தரவேண்டுமென்று தாம் எண்ணிய எண்ணம் இவ்வாறு கைகூடப்பெற்ற பின்னர், அப்பால் வழக் கம் போல் நாடு சுற்றத் தலைப்பட்டார். இவர் வரலாறு இவ் வளவோடு முடிகிறது.

இந்த அவ்வையார் "பழையனூர்க் காரிக்கு ஆடு வாங்கிக் கொடுக்க வாதவன் வத்தவன் யாதவன் மூவரிடத்தும் போய் அவர்கள் கொடாதபடியினாலே சேரமானிடத்துப் போய்ச் சொல்லியது" என்று பின்வரும் பாடல் தமிழ் நாவலர் சரிதை யில் காணப்படுகிறது:

வாதவர்கோன் பின்னைஎன்றான் வத்தவர்கோன் நாளைஎன்றான்
யாதவர்கோன் யாதொன்றும் இல்லைஎன்றான் – ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோன் நாளையினும்
யாதவர்கோன் இல்லை இனிது.*

---

* வாதக்கோன் நாளைஎன்றான், வையைக்கோன் பின்னைஎன்றான்,
ஏதக்கோன் யாதேனு மில்லைஎன்றான்; – ஓதக்கேள்;
வாதக்கோன் சொல்லதினும், வையைக்கோன் சொல்லதினும்,
ஏதக்கோன் சொல்லே இனிது.

என்று இப்பாடலைப் பாடபேதமாகக் காட்டி, வாத நாடி யடங்கில் ஒரு நாளிலும், சிலேத்தும் நாடி யடங்கில் ஒரு நாழிகையிலும் பித்த நாடி யடங்கில் ஒரு நிமிஷத்திலும் உயிர் நீங்கும் என்று பாடியது என விநோதரசமஞ்சரியுடையார் காட்டுகிறார். இதிலிருந்து பொதுவாக விநோதரசமஞ்சரி கூறும் கதைகளில் தன்மை எப்படியிருக்கும் என்பதை நாம் உணரலாம்.

இவ்வாறு சொல்லிக் கேட்கவே, சேரமான், பால் கறக்கும் ஆட்டுக்குப் பதிலாகப் பொன்னாடு தந்தான் என்று அந்நூல் 'சிரப்பா மணிமுடிச் சோழன்' என்று முன்காட்டிய பாடலைத் தந்துள்ளது.

இவ் அவ்வையார் சுந்தரர் - சேரமானுக்கு முன்னதாக, விநாயகரகவல் பாடிக் கயிலை சென்றதாக ஒரு வரலாறுண்டான மையால், அவரே 'சேரமான் கயிலையிலிருக்கத் தாம் திரும்ப வந்து பாடியது' என்று தமிழ் நாவலர் சரிதை கூறும் பாடல்:

**சிறுக்கீரை வெவ்வடகும் சேதாவின் நெய்யும்**
**மறுப்படாத் தண்தயிரும் மாந்தி – வெறுத்தேனை**
**வஞ்சிக்கும் கொற்கைக்கும் மன்னவனேற் பித்தானே**
**கஞ்சிக்கும் புற்கைக்கும் கை.**

தமிழ் நாவலர் சரிதையின் கூற்றுக்கள் எவ்வாறு எழுந்தன, எந்த அளவு ஆராய்ச்சிக்கு அவற்றை ஆதாரமாகக் கொள்ளலாம் என்பதை எமது 10ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாறு பக்கம் 12 - 13இல் காணலாம். இப்பாடல் போன்றவை யாவும் பிற்காலத்தில் ஒருவருக்குத் தனிப்பாடல் கிடைக்க, அதற்கென்று கற்பனையாகக் கதை புனைந்து கொண்ட நிலையாகும்.

இதுவரை நாம் பார்த்த இடைக்கால அவ்வை வரலாற்றில் கூடியவரை வரலாறுகளை ஒருமுகப்படுத்தி உரைக்க முயன்றிருக் கிறோம். இதில் அசம்பாவிதம் எதுவும் இல்லை. இவருடைய வரலாற்றைச் சங்ககால அவ்வையின் வரலாற்றுடனோ பின் வந்த பல அவ்வை வரலாற்றுடனோ தொடர்புபடுத்துவதற்குப் பொருத்தம் எதுவும் காணப்படவில்லை.

### 3. சோழர் கால அவ்வை

இனி, 12ஆம் நூற்றாண்டுக்கு உரியவரான அவ்வையாரையே இங்கு சோழர் கால அவ்வையார் என்ற பெயரால் இங்கு குறிப் பிடுகிறோம். இவரே ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் மூதுரை நல்வழி என்ற நீதி நூல்கள் பாடியவர். அகளங்கனாகிய விக்கிரம சோழன் காலம் தொடங்கி நீண்ட காலம், பல சோழமன்னர் ஆட்சிக் காலத்தில், இவர் வாழ்ந்தவராவார்; ஒருகால் விக்கிரமன் தந்தையான முதற்குலோத்துங்கன் காலத்திலும் இவர் இருந் திருக்கலாம்.

சங்ககால அவ்வையின் வரலாறு, சுவைமிக்கது, சம்பவங்கள் பல கொண்டது, பல சிறப்புக்கள் பொருந்தியது. அதேபோல, இவ் அவ்வையின் வரலாறும் சுவைமிக்கது, சம்பவங்கள் பல கொண்டது, பல சிறப்புக்களும் பொருந்தியது; அனைத்திலும் மேலானது, இவர் தனி நீதி நூல்கள் சில செய்திருப்பது, இவருக் கும் பின்வந்த அவ்வையார், இருவர் அல்லது மூவர் உள்ளனர். அவர் வரலாறுகள் இத்துணைச் சிறப்புப் பெற்றவையல்ல.

இவர் வரலாற்றின் தொடக்கம் ஒன்றும் தெரியவில்லை. கபிலரின் உடன் பிறந்தவராய், இட்டமுடன் என்தலையில் என்ற பாடல் பாடி, பாணர் சேரியில் வளர்ந்த அவ்வையார் சமயநூற் புலவர்; சித்தர் வரிசையில் வைத்து எண்ணத்தக்கார். முன்னமே குறிப்பிட்டபடி அவருடைய காலம் 14ஆம் நூற்றாண்டுக்குரியது.

இவர் காலம் 12ஆம் நூற்றாண்டு எனவே, பின்னால் கட்டுக்கதை கட்டியவர்கள் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று தாங்கள் கருதிய புலவர் அனைவருடைய வரலாற்றை யும் இவரோடு தொடர்புபடுத்திவிட்டார்கள். இவ்வளவும் பொய் என்பது சொல்லவேண்டியதில்லை. சோழர் அவையில் பெரும்புலவராய் வீற்றிருந்த ஒட்டக்கூத்தரையும் அவருக்கு நூறாண்டு பிற்பட்டு வாழ்ந்த புகழேந்தியையும் இவர் மோத விட்டு வேடிக்கை பார்த்தார் என்பது ஒரு பொய்க்கதை. அதுவும் அல்லாமல், ஒட்டக்கூத்தர் சிரச் சிங்காதனத்தின் மீது இருந்து பாடிய காலத்து அவருடைய பாடலை இவர் பாராட்டினார் என்பது மற்றொரு பொய்க்கதை. அப்படியே ஒட்டக்கூத்தர் இறந்தபோது இவர்,

> நூற்றெரன் பதின்காதம் நுங்கு நறுந்தமிழின்
> ஏற்றமினி யென்னால் இயலுமோ – போற்று
> புவிராசர் யாரும் புகழுமொட்டக் கூத்தர்
> கவிராசன் காட்சியிலாக் கால்?

என்ற வெண்பாவைப் பாடினார் என்பதும், அன்றி, கம்பருக்கும் அவ்வைக்கும் வாக்குவாதம் என்ற கதைகளும் பல. தண்ணீரும் காவிரியே என்ற கம்பர் பாட்டை இவர் பூர்த்தி செய்தார் என்பதும், ஒரு காலில் நாலிலைப் பந்தலடி என்ற தொடரும் அதன்பின் வந்த வசவுப் பாட்டும் பிறவும் எல்லாம், தமிழ்ப் புலவர்களையே தலைகுனியச் செய்யத்தக்க கீழ்த்தரக் கதைகள். கம்பர் காலத்துக்கும் இந்த அவ்வை காலத்துக்கும் பல நூற் றாண்டு இடையில்.

*கூத்தர் கதையும் கம்பர் கதையும் ஒத்ததே; அவ்வையார் நம்மாழ்வார் பாடல்களை வியந்து இரண்டு கவிகள் கூறினார் என்று காணப்படும் தனிப்பாடல்கள்:*

ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளை எம்மறைக்கும் சேட்பொருளைத் – தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலர், யான் இவ்வுலகில்
தாய்மொழிய தென்பேன் தகைந்து.

சேய்மொழியோ தாய்மொழியோ செப்பில் இரண்டுமொன்றே
வாய்மொழியை யாரும் மறையென்பர் – வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சால உளவெனினும் அம்மொழிகள்
தாய்மொழிகள் என்பேன் தகைந்து.*

*இவையும் இவையொத்த பிற பாடல்களும் பிற்கால அன்பர்கள் அவ்வை பெயரால் தாங்களே பாடிவைத்துக் கொண்டவை என்று கருதத்தக்கன.*

*இந்த அவ்வையார் எந்த ஊரில் பிறந்தார் எங்கு இறந்தார் என்பதொன்றும் தெரிய இயலாது; காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்திருக்கலாம் என்பர், மேலும், அவ்வையார் சிலையொன்று திருத்தருப்பூண்டியருகே துளசியார்பட்டணம் என்ற ஊரில் உள்ளது. அங்கு அவ்வையார் கோயில் உள்ளது.*

*அங்கு முதுமை நிலையில் அவ்வையார் சிலையும் அருகில் இளமை நிலையில் உப்பை சிலையும் உள்ளன; அங்கு ஒரு கொல்லன் உணவளித்து உபசரித்தது பற்றி, அவனுடைய திடலில் வெள்ளம் கொள்ளாதவாறு இவர் செய்தார் என்ற கதையை செந்தமிழ் ஆசிரியர் குறிப்பிட்டார்❖ (செந்தமிழ் தொகுதி 2, பகுதி 6-7). அவ்வை என்பது சாதாரணப் பெயர். இந்தப் பெண் தேவதையின் சிறு கோயிலும், மாரி துரோபதை என்று வழங்குவதுபோல, அவ்வை என்று வழங்கப்பெறுதலும் உண்டு; இதனால் இது அவ்வையார் வரலாற்றுத் தொடர்பு கொண்டது என்று கருதுதல் பொருந்தாது.*

---

* *இப்பாடல் இடைக்காடர் பாடியதென்று சொல்வதுமுண்டு.*

❖ *இதன் குறிப்பு அவ்வையார் - அனவரத விநாயகம் பிள்ளை, பக்கம் 111 -113இல் காணப்படும்.*

இந்த அவ்வையார் உயர்ந்த குடிப் பிறந்து வசதியான் வாழ்க்கை உடையவராய் வளர்ந்திருந்தார் என்பது மட்டும் தெரிகிறது. மணமாகாமலே வளர்ந்த முதுமையா; கைம்மைக் கோலம் தாங்கிய முதுமையா என்பது தெரியவில்லை. வாழ்க் கையில் சிறந்த அனுபவங்களை எல்லாம் பெற்று அவற்றின் முதிர்ச்சியால் கைவரும் அனுபவமும் அறிவும் பண்பாடும் பொருந்தியவர். உறுதிப் பொருள்களை நன்கு உணர்ந்து சொல் பவர். உழுதூண் வாழ்க்கையில் பற்றுதல் நிரம்பியவர். நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை என்று பாடியதோடு, அக் கொள் கையைக் கடைப்பிடித்து ஒழுகியவர். அடக்கம் மிகுந்தவர். அதே சமயத்தில் அவமதிப்பைக் கண்டால் வெகுளுபவர். தெய்வ பக்தி நிரம்பியவர். எல்லாச் சமயங்களையும் சமமாகக் கருதிய போதிலுங்கூட, சிவ வழிபாடு உடையவர் என்பது தெரிகிறது. இவருடைய பாடல்களில் நகைச்சுவை மிகவும் அதிகம். இவருடைய தனிப் பாடல்களின் தொகுப்பே மூதுரை நல்வழி போல ஒரு சிறந்த தனி நூலாக இருக்கும் தகுதி வாய்ந்தது. இத்தகைய ஒரு புலமை மிக்க மூதாட்டி, பிற மொழிகளில் வாழ்ந்து எல்லோரும் சுவைக்குமாறு நூலும் பாடலும் பாடிய தாக நாம் கேட்டதில்லை.

சிறப்புப்பெயர் எதுவும் தெரியாமல் இவரைச் சமூகம் அவ்வை என்றே கூறிவந்திருக்கிறது. கிடைக்கின்ற பாடல்களில் விக்கிரமசோழனுடைய தொடர்போடு இவரது வாழ்க்கை முதன்முதலாக நமக்குத் தெரியவருகிறது. பின்வரும் வரலாற்றில் நான்காவது பாடல் அகளங்கன் என்ற பெயரைச் சொல்லுகிறது. அகளங்கன் என்பது விக்கிரமனுடைய பெயர். இந்த நான்கு பாடல்களும் ஒரு தொடர்பு உடையன. இவ் அவ்வையார் எங்கு சென்றபோதிலும் தெய்வத்தை ஒத்த பெருமரியாதையோடு தான் கொண்டாடப் பெறுகிறார்.

அடுத்து, அவ்வையார் சஞ்சரித்துக்கொண்டிருந்த காலத்தில் பலா தழைக்கப் பாடிய செய்தி சொல்லப்படும். ஒரு குறவன் தான் அருமையாய் வளர்த்த பலாவைப் பேணிக்காக்கும்படி தன் இரு மனைவியருக்கும் சொல்லி அயலூருக்குச் சென்றான். அவனுக்கு இளையாள் மோகம் அதிகம். இளையாள், அம் மரத்தை வெட்டிப்போட்டு, அவன் வந்தபின் மூத்தாள்தான் இவ்வாறு வெட்டினாள் என்று சொல்லலாம் என்று அவன்

வரவை எதிர்நோக்கியிருந்தாள். இப்பழிக்கு அஞ்சி, மூத்தாள் நடுங்கிக் கொண்டிருந்தபோது, அவ்வழி வந்த அவ்வை, செய்தி யறிந்து, பின்வரும் வெண்பாப் பாடிப் பலா உயிர்பெற்றுப் பண்டை உருவோடு நிற்கச் செய்தாள்:

கூரிய வாளால் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கொம்பாய் உயர்மரமாய்ச் – சீரிய
வண்டுபோல் கொட்டை வளர்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோல் நிற்கப் பணி.

பலாவும் முன்போல் தழைத்துப் பழம் தாங்கி நின்றது கண்ட மூத்தவள், மிக்க மகிழ்ச்சியடைந்து, நன்றியறிதலோடு ஒரு கந்தையில் தினை அரிசியை முடிந்து கொடுத்து அவ்வையை வழியனுப்பினாள். அவ்வை நெடுந்தூரம் கடந்து உரிய காலத்தில் சோழமன்னன் வாயிலையடைந்தபோது, கண்ட மன்னன் "எப்படி வந்தீர்?" என்று கேட்க, அவர்:

கால்நொந்தேன் நொந்தேன், கடுகி வழிநடந்தேன்,
யான்வந்த தூரம் எளிதன்று; – கூனல்
கருந்தேனுக்கு அண்ணாந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக்கு எங்கே இடம்?

என்று விடை கூறினார். அவ்வை வயதில் மிகவும் முதிர்ந்தவராய் இருந்தபடியால், அரசர் உள்பட எல்லோரும் அவரிடம் உரிமை பாராட்டிப் பேசுவதுண்டு. தினை மூட்டையைக் கண்ட சோழன் 'இது என்ன?' எனலும் அவ்வையார்:

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
ஊழக் குழக்குத் தினைதந்தாள், – சோழகேள்,
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்.

என்ற பாடலைச் சொல்லி, தாம் தினை பெற்ற வரலாற்றைக் கூறினார். இங்கு, குசேலர் மூட்டையைப் பிரித்து அவல் உண்ட கிருஷ்ணனைப்போல, சோழன் தினை உண்டானா என்பதைக் கதை சொல்லவில்லை. எனினும், கதையினால் வியப்படைந்து அவன் அவருக்கு மதிப்புயர்ந்த பட்டாடை ஒன்று பரிசளித்தான். ஆனால் அவ்வை, மன்னன் நிலைக்குப் பட்டாடை பெரிதென்று அவன் தற்பெருமை கொள்ளுதல் கூடாது என்ற கருத்தோடு, பின்வரும் பாடல் பாடினார்:

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும், நூல்சீலை
நாற்றிங்கள் தன்னில் கிழிந்துபோம்:– மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வேல் அகளங்கா!
என்றும் கிழியாதென் பாட்டு.*

இங்கு சோழன் செருக்கடையலாகாது என்று கூறிய அவ்வையார், செருக்கடைதல் தமக்கு மட்டுமே உரியது என்பதை நிலை நாட்டுவது விசித்திரம். அகளங்கன் என்ற குறிப்பினால் இது விக்கிரம சோழன் என்று நாம் கருதவேண்டும்.

பல சம்பவங்களால் அவ்வையாருக்குப் புலமைச் செருக்கு மிகுந்திருந்ததென்றும் அதை முருகப்பெருமான் நேரே வந்து போக்கினான் என்றும் சுவைமிக்க வரலாறு ஒன்று சொல்லப் படுகிறது. காட்டுவழியே அவ்வையார் சென்றபோது ஒரு சமயம் ஒரு நாவல் மரத்தில் மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் அமர்ந்து பழம் பறித்து உண்ணக் கண்டு தமக்குச் சில பழம் தருமாறு கேட்டார். சிறுவன், 'பாட்டி, உனக்குச் சுடுகிற பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று வினவினான். பழத்திலே சுடுகிற பழமும் சுடாத பழமும் உண்டா என்று வியப்படைந்த அவ்வை சுட்ட பழங்களையே போடு என்றார். பையன் சில கனிந்த பழங்களைப் பறித்து எறிந்தான். குனிந்து பழங்களைப் பொறுக்கிக் கொண்ட அவ்வை, அவற்றில் ஒட்டி யிருந்த மண்ணைப் போக்குவதற்காக ஊதியபோது, சிறுவன், இவை அதிகம் சுடுகிற பழம். நன்றாக ஊதிச் சாப்பிடு என்று சொல்லிப் பரிகசித்தான். அவ்வை இப்பொருள் தமக்குத் தெரி யாததற்கு வெட்கமுற்று, 'மாடு மேய்க்கிற பையனுக்கு நான் தோற்றேனே' என்று வருந்திப் பின்வரும் பாடல் பாடினார்:

கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் – பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றது,
ஈரிரவுந் துஞ்சாதென் கண்.

சிறுவன் மரத்திலிருந்து கீழே குதித்து, அவ்வையாருடைய செருக்கு சிறிது அடங்கியிருந்தமை கண்டு மகிழ்ந்து, தம்முடைய முருகன் கோலத்தையும் அவ்வை காணும்படி காட்டி,

* இதனோடு, சயங்கொண்டார் வரலாற்றில் அவர் பாடியதாக வழங்கும் 'காவலரீகை கருதுங்கால்' என்ற பாடலை ஒப்பு நோக்குக.

*அவ்வைக்கு முகமன் கூறி, உலக உபகாரமாக உலக நீதிகளைச் சுருக்கிச் சொல்ல வேண்டுமென்று அறிவுறுத்தி, 'உலகத்தில் கொடியது யாது? இனியது யாது? பெரியது யாது? அரியது யாது?' என்று தனித்தனியே வினவினான், அதற்கு அவ்வையார் பின்வரும் நான்கு பாடல்களால் விடை பகர்ந்தார்:*

கொடியது கேட்கின், நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது,
அதனினுங் கொடிது இளமையில் வறுமை,
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்,
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்,
அதனினுங் கொடிது –
இன்புற அவர்கையில் உண்பது தானே.

இனியது கேட்கின், தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது,
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்,
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்,
அதனினும் இனிது – அறிவுள் ளோரைக்,
கனவிலும் நனவிலுங் காண்பது தானே.

பெரியது கேட்கின், எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது,
புவனமோ நான்முகன் படைப்பு,
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்,
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்,
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்,
கலசமோ புவியிற் சிறுமண்,
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்,
அரவோ உமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்,
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்,
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

அரியது கேட்குந் தனிநெடு வேலோய்,
மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே;
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்,

மூங்கையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே;
மூங்கையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடும் நீக்கிப் பிறந்த காலையும்,
ஞானமுங் கல்வியும் நற்குறல் அரிதே,
ஞானமுங் கல்வியும் நற்குறு மாயினும்,
தானமுந் தவமுந் தரித்தலும் அரிதே,
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது,
வானவர் நாடு வழிதிற வாதே.*

*பாடல்களைக் கேட்டு முருகப்பெருமான் மறைந்தார். முருகப் பெருமான் காட்சி கொடுத்தார் என்ற வரலாறு புராணக் கதைகளில் நம்பிக்கை கொண்டிருந்த அக்காலத்துக்குப் பெரிதும் ஏற்றதே. மாடு மேய்க்கும் சிறுவனிடம் தோற்றதனால் அவ்வையாருக்குச் சிறிது வருத்தம்; இதை மாற்றவே முருகன் தோற்றம் என்ற வரலாறு எழுந்தது. முருகன் குறிப்பிட்டபடி அவ்வையார் பிற்காலத்தில் ஆத்திசூடி முதலான சிறு நீதி நூல்களைப் பாடியது இதனால் விளைந்த நற்பலன்.*

*இக்கதையில் வேலோய் என்பது ஓர் அரசன் என்று கொண்டால், இந்நான்கு பாட்டுக்களும் அரசன் கேட்கப் பாடியன ஆகின்றன.*

## தனிப் பாடல்கள்

*தமிழ் நாவலர் சரிதையானது, அவ்வையார் பாடிய சில பாடல்களை இடம் சுட்டிச் சொல்கிறது. அவை சுட்டும் வரலாறுகளையும் இங்கே கருதுவோம். இரண்டு பாடல்கள் புல்வேளூர்ப் பூதன் உணவளித்த சிறப்பைக் கூறுகின்றன. முதல் பாட்டு:*

பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையும்,
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையும், – ஈங்கு
மறப்பித்தாய், வாள்அதிகா! வன்கூற்றின் நாவை
அறுப்பித்தாய், ஆமலகந் தந்து.

*அதிகமான் ஆமலகம் (நெல்லிக்கனி) தந்தமையால், கூற்றின் நா அறுபட்டது, புல்வேளூர்ப் பூதனையும் பால் கொணர்ந்த*

* *இவ்வொரு பாட்டு மட்டும் தமிழ்நாவலர் சரிதையுள் காணப்படுகிறது. பிற மூன்றையும் அவ்வை பாடவில்லை என்பது இவர் கருத்துப் போலும்.*

*பெண்ணை யாற்றினையும் மறக்க நேர்ந்தது என்பது பொருள். பாடல் மிகவும் பிற்காலப் பாடல்; அதிகமான் வாழ்ந்த சங்க காலப் பாடலன்று; பூதனுக்கும் பெண்ணைக்கும் பிறகு அதிகன் நெல்லிக்கனி தந்தான் என்பது பெரும் பிழை. அவ்வை பெயரால் பிற்காலத்தில் பொய்யாகவே பாடல்கள் புனையப்பட்டன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இது அவ்வை பாடினாள் என்பதில் பொருளில்லை; இக்கூற்று பொய்க் கூற்று. அடுத்த பாட்டு:*

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும் – பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோறு
எல்லா உலகும் பெறும்.

*இப்பாடல் உண்மையாகவே அவ்வை பாடியிருக்க, முன் பாடல் இதிலிருந்து கிளைத்த பொய்க் கூற்றாயிருக்கலாம். தொண்டை மண்டல சதகம் இப்புல்வேளூர்ப் பூதனைத் தன் நாட்டுக்குரியவனாக்கிக் கதையும் கட்டியிருக்கிறது. பூதன் தன் நிலத்துக்கு நீர் இறைத்தநேரம் அங்கு பசியோடு வந்த அவ்வைக்கு, தனக்கிருந்த வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் புளித்த மோரும் கொடுத்துப் பசி தீர்த்தான்; உனக்கு அழியா வாழையும் ஒழியாக் கிணறுமாக என்று அவ்வை வரம் தந்தார் என்ற வரலாற்றை அது கூறுகிறது (54):*

சொல்லாயும் அவ்வை பரிவாய்த் தனக்கிட்ட சோறு உலகம்
எல்லாம் பெறும் என்று பாட்டோதப் பெற்றவள் இன்னருளால்
கல்லாரற் சுற்றிக் கிணறேறிப் பாயும் கழனிபெற்றான்,
வல்லாளன் பூத மகிபால னுந்தொண்டை மண்டலமே.

*'திருத்தங்கிதன் வாழை தேம் பழுத்து நிற்கும்' என்ற பாடலையும், 'கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்' என்ற பாடலையும் அவ்வை பாடல்களாகத் தமிழ் நாவலர் சரிதை தருகிறது. இது பிழை. இரண்டும் பிற்காலப் பாடல்கள், பிற்கால வரலாறுகள். முதற் பாடல் இரட்டையர் பாடலாகவும் இரண்டாம் பாடல் இராமச்சந்திர கவிராயர் என்பவர் பாடலாகவும் வழங்கும்.*

*அடுத்து அவ்வையார் பாடிய நாலு கோடிப் பாடல்கள் இங்கு குறிப்பிடத்தகும். சோழ மன்னன் தன் அவைப்புலவரை அழைத்து நாளைப் பொழுது புலருவதற்குள் நீங்கள் நாலு*

கோடிப் பாடல் பாடிவர வேண்டும் என்று கட்டளையிட்டான். பாடுவது எங்ஙனம் என்று அவர்கள் அஞ்சி வருந்தினர். விவரம் அறிந்த அவ்வை கோடி உறும் என்று சிறப்பான பண்பு ஒவ்வொன்றும் ஒரு கோடிக்குச் சமானம் என்று பொருள் படுகின்ற நான்கு பாடல்களைப் பாடிக் கொடுத்தார். புலவர்கள் பெற்று மகிழ்ந்து அரசனிடம் சென்று பாடிச் சன்மானம் பெற்றார்கள். பாட்டின் பொருட்சுவையை உணர்ந்த அரசனும் இவை பாடியவர் அவ்வையாரே என்று நன்குணர்ந்து, அவருக்கும் பெருஞ் சிறப்புச் செய்தான்.

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.

உண்ணீருண் ணீரென்றே ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி யுறும்.

கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடும்
கோடாமை* கோடி யுறும்.

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும்.

நல்லொழுக்கத்துக்கு ஏற்ற நீதிச் சூத்திரங்களாகப் பாடல் செய்தவர்களில் அவ்வையாருக்கு இணையாக யாரையும் சொல்ல முடியாது. இப்பாடல்கள் அவர் பாடல்கள் அனைத்துக்கும் சிகரம் என்று சொல்லத்தக்கவை.

மற்றொரு சமயம் இது போலவே பாண்டியன் அவையிலும் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. பாண்டியன் பொற்சங்கிலிகளால் ஊஞ்சல் அமைத்து அதன் மீது பொற்குவையை இட்டு, பாடல் பாடி இச்சங்கிலிகள் நான்கும் இற்று விழும்படி யாரேனும் செய்து விடுவாரேயாயின், அவருக்கு இப்பொற் குவியலையும் கொடுத்துப் பெருஞ் சிறப்புக்களும் செய்வோம் என்று நாடெங்கும் முரசறைவித்தான். யாரும் அவ்வாறு பாட முடியவில்லை. அவ்வழி வந்த அவ்வையார் பின்வரும் நான்கு பாடல்களையும் முறையாகப் பாடியதும், சங்கிலிகள் ஒவ்வொன்றாக இற்று வீழ்ந்தன:

---

* கூடுவதே என்ற பாடமும் உண்டு. ஆனால் எல்லாப் பாடல்களிலும் எதிர்மறைச் சொல்லே இருப்பதால் இங்கும் அப்படியே கோடாமை என்பதே திருத்தமான பாடம்.

ஆர்த்தசபை நூற்றொருவர்; ஆயிரத்தொன் றாம்புலவர்:
வார்த்தை பதினா யிரத்தொருவர்; – பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே! தாதாகோ டிக்கொருவர்:
உண்டாயின் உண்டென் றறு.

தண்டாமல் ஈவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை; – அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி; பின்சென்றும்
ஈயான்எச் சம்போல் இறு.

உள்ள வழக்கிருக்க, ஊரார் பொதுவிருக்க,
தள்ளி வழக்கதனைத் தான்பேசி, – எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சம்அறும் என்றால் இறு.

வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன், – வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சம்அறும் என்றால் இறு.

*தமிழ் நாவலர் சரிதை இவ்வரலாற்றைச் சிறிது மாற்றி உரைக்கும்: "இவையும் மேல்வருவனவும், மூன்று கிழிக்கும் சங்கிலி இறப்பாட, ஒரு கிழிக்கு நிறை நில்லாத கவிபாட, ஒரு கிழிக்கு நாலு கோடி கவிபாட என்று ஆக அஞ்சு கிழியும் பாண்டியன் வாசலிற் கட்டிவைத்தபோது அவ்வையார் பாடியன" என்பது அச்சரிதை தரும் குறிப்பு. இங்கு கிழிகள் ஐந்து, அவ்வையார் பாடிய பாடல்களில், ஆர்த்த சபை நூற்றொருவர் என்பது இல்லை. தண்டாமல் என்ற பாடலில் நான்காம் அடிக்குப் பதிலாகப் பின்வரும் ஈரடிகள் உள்ளன:*

பொய்த்தான் இவன்என்று போமேல் அவன்குடி
எச்சம் இறுமேல் இறு.

*உள்ள வழக்கிருக்க என்ற பாடல் இல்லை. அதற்குப் பதிலாகப் பின்வரும் பாடல் உள்ளது:*

சென்றுழு துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுழு துண்பான் மனைவாழ்க்கை – முன்றிலில்
துச்சி லிருந்து துடைத்தழுகண் ணீராலேழ்
சுற்றம் இறுமேல் இறு.

*கடைசிப் பாடலும் பின்வருமாறு மிக்க பாடபேதத்தோடு உள்ளது:*

வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின் – வழக்குடையார்
சுற்றமும் தாமும் துடைத்தழுகண் ணீராலேழ்
சுற்றம் இறுமேல் இறு.

*அவ்வையார் இம்மூன்று பாடல்கள் பாடவும், சங்கிலிகள் இற்று வீழ்ந்தன. பின் துலாக்கோலில் நிறைநில்லாதவாறு, பின்வரும் பாடல் பாடவே, துலாக்கோல் நிலை நில்லாதாயிற்று:*

வையக மெல்லாம் வளவயலா, வானோர்
தெய்வமா முகடு சேரி யாக,
காணமும் முத்தும் மணியும் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினும், ஒருநாள்
ஒருபொழுது தொருவன் ஊண்ஒழிதல் பார்க்கும்
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே.
நேர்நிறை நில்லா தென்னும் மனனே.*

*அடுத்து முன்காட்டிய கோடிப்பாட்டுக்கள் நான்கும் பாடினார், அரசன் ஐந்து கிழியும் இவருக்குக் கொடுத்தான் என்பது இங்குள்ள வரலாறு.*

நம் காலத்தில், 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியார் பாடினார். அவர் கருத்துக்கும் அவ்வைக் கிழவியின் கருத்துக்கும் வேற்றுமை யில்லை. 'ஒருநாள் ஒருபொழுது ஒருவன் உணவில்லாமல் போவதைத் தம் மனம் காணச் சகிக்காது' என்று அவ்வையார் சற்று மென்மையாகப் பண்பாட்டோடு சொன்னார். பாரதியார் அதையே வன்மையாகச் சொன்னார். 'என்னும் என் மனனே' என்று முதல் வரியில் சொல்லி, அடுத்தவரியில் என் என்ற சொல்லை நீக்கி, 'என்னும் மனனே' என்று சொல்வது மேலான கவிதை உத்தி; சிறந்த கவிதைப் பண்பு உடையது.

அவ்வையார் உழவுத் தொழிலை மிகவும் போற்றியவர் அவருடைய நூல்களில் இதற்குச் சான்று பல காணலாம். இத் தொழிலிலுள்ள இடர்ப்பாடுகளை அவர் மிகவும் நன்கு உணர்ந்

* இது, பாடலில் வரும் தொடரை ஒட்டி, நேர் நிறைநில்லாத அகவல் என்று பெயர் பெற்றது; இதில் நேர் என்பதை நீக்கி, நிறைநில்லாத அகவல் என்று பெயர் சூட்டி, துலாக்கோல் நிறை நிற்கவில்லை என்ற கதையையும் தமிழ் நாவலர் சரிதை புனைந்தது.

தவர். ஒரு சமயம் இவர் பேசியபோது, இவர் கூறிய மறு மொழி இன்றைக்கும் மிக நன்றாய்ப் பொருந்துவதாக உள்ளது:

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய், – ஊரருகே
சென்று வரஎளிதாய், செய்வாரும் சொல்கேட்கின் –
என்றும் உழவே இனிது.

செய்வாரும் சொல் கேட்கின் என்ற தொடரில் எவ்வளவுதான் பொருள் பொதிந்திருக்கிறது! இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு அது எவ்வளவு பொருத்தமாயுள்ளது! செய்வாரும் சொல் கேட்கின் - சுதந்திர இந்தியாவில் செபிக்கத் தகுந்த ஒரு மந்திரம்.

'சொல்கேட்கின்' என்றமையால், அவ்வை தாம் உழும் குடியல்ல, உழுவித்துண்ணும்குடி. 'உயர்ந்த' குடி என்பது நன்கு தெரிகிறது.

மற்றொரு பாடல் இவர் உழவுத்தொழிலின் நுட்பத்தை நன்குணர்ந்தவர் என்பதைக் காட்டுகிறது. உழவுக்கு, நீரின் அருமையை நன்குணர்ந்து நீரருகே சேர்ந்த நிலம் என்று முந்திய பாடலில் இவர் பாடக் கண்டோம். குலோத்துங்க சோழன் முடிசூடிய போது, இவரை வாழ்த்தச் சொன்னார்களாம். இவர் 'வரப்புயர' என்று மட்டும் சொல்லி அமைந்துவிட்டார். கேட்டோர் சமாதானமடையவில்லை. அதன்மேல் இவர் இத்தொடரைப் பின்வருமாறு விளக்கிக் காட்டினார் என்பது வரலாறு:

வரப்புயர நீருயரும்
நீருயிர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்.

பெருஞ்சிறப்புப் பெற்றிருந்த அவ்வையார் தகுதியற்றோரை மதித்தல் இலர் என்பது கூறாமலே அமையும். புல்லறிவாளர் சிலர் அவ்வையாரை அணுகித் தம்மீது பாடல் பாடுமாறு வேண்டினர். இவர் அவரை இகழ்ந்து தாம் அவர்களைப் பாடும் தகுதி அவர்களுக்கு இல்லை என்று பழித்துப் பின்வரும் பாடல் பாடினார்; முடியுடை மன்னர் மூவரையும் பாடியவரல்லவா அவ்வையார்?

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக என்றனிர்; நும்மையிங்கு
எங்ஙனம் பாடுகெம் யாம்? வெங்கட்
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்;
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்;
புலவர் வாய்ச்சொல் புலம்பலுக் கிரங்கீர்;
இலவு வாய்ச்சியர் இளமுலை புல்லீர்;
அவிழ்ச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தேரீர்;
உடீஇர், உண்ணீர், கொடீஇர், கொள்ளீர்;
ஒவ்வாக் கானத்து உயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே.

என்ன கடுமையான வசவு! கேட்டவர் இதை உணர்வாரா?

இங்ஙனமே, இவர் மற்றொரு சமயம், ஏழில் என்ற மலையில் ஆட்சி புரிந்திருந்த தலைவனிடம் சென்றார். அவன் இவரது தகுதியறிந்து தக்கபடி போற்றவில்லை. இவர் அவனை முனிந்து பின்வரும் அங்கதப் பாடலைப் பாடினார் என்று பேராசிரியர் தொல்காப்பியவுரையில் எடுத்துக்காட்டுகிறார்:

இருள்தீர் மணிவிளக்கத்து ஏழிலார் கோவே!
குருடேயும் அன்று நின் குற்றம்; – மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலாதன இரண்டு
ஓட்டைச் செவியும் உள.

ஏழில் தலைவன் மெய்யாகவே புறக்கண் இல்லாதவன் போலும்.

இவ்வாறு வசைப் பொருளாக இவர் பாடிய பாடல்கள் சிலவே; பொருட்பொலிவுடைய எண்ணற்ற தனிப்பாடல்கள் இவர் பாடியனவாக வழங்குகின்றன; இவை பெரும்பான்மை வெண்பாக்கள். அவற்றின் சிறப்பை நோக்கி அவற்றுள் முக்கிய மானவற்றை மட்டும் இங்கு ஒருசேரத் தருகிறோம். பாடல் களில் எப்பகுதி மிகவும் கடினமானது என்பதைக் கூறும் பாடல் எல்லோரும் நன்கறிந்தது:

காசினியிற் பிள்ளைக் கவிக்குஅம் புலிபுலியாம்;
பேசும் உலாவிற் பெதும்பைபுலி; – ஆசு
வலவற்கு வண்ணம் புலியாம்; மற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி.

*யாருடைய பிரிவினாலே எவ்வகைச் செல்வம் போம் என்று ஒரு பாடல் கூறும்:*

தாயோடு அறுசுவைபோம்; தந்தையொடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்; – ஆயவாழ்வு
உற்றாருடன்போம்; உடற்பிறப்பால் தோள்வலிபோம்;
பொற்றாலியோடு எவையும் போம்.

*இன்ன நாட்டில் இன்னது சிறப்பு என்று இரண்டு பாடல்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாடினார்:*

வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து; – பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

வஞ்சி வெளிய குருகெல்லாம்; பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது;
சோழன் உறந்தைக் கரும்பினிது; தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது.

*இவற்றுட் பிந்திய பாடல் தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையிலும் யாப்பருங்கலக்காரிகை உரை யிலும் தரப்பட்டுள்ளது, இரண்டையும் அவ்வையார் நால்வேந் தர் வைகும் அவையில் பாடினார் என்று தொண்டை மண்டல சதகம் கூறுகிறது (22):*

அஞ்சொல் முதுதமிழ் நால்வேந்தர் வைகும் அவையிலவ்வை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர் வைகும் சிறப்புடைத்தால்;
விஞ்சிய வேழ முடைத் தென்னும் பாடல் விளம்பிப்பின்னும்
வஞ்சி வெளிய எனும்பா மொழிதொண்டை மண்டலமே.

*நால்வேந்தர் என்பது வெறுங் கற்பனை; அவ்வை காலத்தில் நால்வேந்தர் இல்லை. இனி, இன்ன இடத்தில் இன்னது உள்ளது என்று அவ்வை மற்றுமொரு பாடல் பாடினார்; அது பின் வருவது; பாண்டிய என்று அவ்வையார் குறிப்பிடுகின்றமை யால், இப்பாடல் ஒரு பாண்டியன் முன்னிலையில் பாடப் பட்டது போலும்:*

நல்லம்பர் நல்ல குடியுடைத்து; சித்தன்வாழ்வு
இல்லந் தொறும்மூன் றெரியுடைத்து; – நல்லரவப்
பாட்டுடைத்து, சோமன் வழிவந்த பாண்டிய! நின்
நாட்டுடைத்து நல்ல தமிழ்.*

*கொங்கு மண்டல சதகப் பாடல் (63) நல்லம்பர் என்ற இப்பாட்டைச் சொல்கிறது. அவ்வை வடிவம் பற்றிய கதையையும் உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.*

*தற்பெருமை கூடாது என்று அறிவுறுத்தி இவர் பாடிய பாடல் மிக்க பிரசித்தி பெற்றது:*

கற்றதுகைம் மண்ணளவு, கல்லா துலகளவுஎன்று
உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்; – மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா, புலவீர்!
எறும்புந் தன் கையால்எண் சாண்.

*பல இயல்புகளைச் சுவைபடத் தொகுத்து ஒரே பாடலில் அழகுபெற அமைத்துப் பாடுவது இவருடைய பாடற் சிறப்பு. பிறவிக் குணத்தைக் கூறவந்தவர் வேறு பல தன்மைகளையும் தொகுத்துக் கூறுகிறார்:*

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்; – நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் – பிறவிக் குணம்.

*பெரியவர் சிறியவர் கயவர் தன்மைகளைக் கூறும் பாடலும் இத்தகையதே:*

சொல்லாமலே பெரியர், சொல்லிற் சிறியர்செய்வர்,
சொல்லியும் செய்யார் கயவரே: – நல்ல
குலாமாலை வேற்கண்ணாய்! கூறுவமை நாடில்.
பலா மாவைப் பாதிரியைப் பார்.

*நன்னெறி நிற்பது மிகவும் கடினமானது:*

---

* *ஆவினன்குடி சித்தன் வாழ்வு என்ற பெயருடையதென்று காட்ட வந்த நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படையுரையில் இப்பாடலை எடுத்துத்தந்து 'என்று அவ்வையார் கூறியதனால் உணர்க' என்று எழுதுவது காணத்தக்கது.*

எழுதரிது முன்னம்; எழுதிய ஒன்றைப்
பழுதற வாசிப்பரிது பண்பா; – முழுதுமதைக்
கற்பரிது; நற்பயனைக் காண்பரிது; கண்டக்கால்
நிற்பரிது, தான்அந் நிலை.

*எவரை எவ்விடத்துப் புகழ்தல் தகும்:*

நேசனைக்கா ணாவிடத்து நெஞ்சார வேதுதித்தல்;
ஆசானைஎவ் விடத்தும் அப்படியே; – வாச
மனையாளைப் பஞ்சணையில்; மைந்தர்தமை நெஞ்சில்;
வினையாளை வேலைமுடி வில்.

*அவ்வையார் உயர்குடியினர் என்பதற்கு இங்கு வினையாள் என்பதுவும் ஒரு சான்று. இன்னாருக்கு இது துரும்பு;*

போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு; சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதுரும்பாம்; – ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி அருந்துரும்பாம்; இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

*இவை பயனற்றவை:*

மாடில்லான் வாழ்வு, மதியில்லான் வாணிபம், நன்
னாடில்லான் செங்கோல் நடாத்துவது, – கூடுங்
குருவில்லா வித்தை, குணமில்லாப் பெண்டு,
விருந்தில்லா வீடு – விழல்.

*இதனின் இது நன்று:*

ஏசி இடலின் இடாமையே நன்று; எதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று; – நேசமிலா
வங்கணத்தின்* நன்று வலியபகை; வாழ்விலாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

*தீய இயல்பினரைத் திருத்த வியலாது என்பது:*

ஆலைப் பலாஆக்க லாமோ, அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ, – நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ, கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா மோ?

---

* *வங்கணம் - நட்பு.*

*ஈயாதார் செல்வம்:*

கருங்குளவிச் சூரைத்தூற் றீச்சங் கனிபோல்,
வருந்தினர்க் கொன்றீயாதான் வாழ்க்கை – அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே,
எற்றோமற் றெற்றோமற் றெற்று.*

நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் – வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகுங் காண்.

*கல்லாதவருடைய பேச்சு கற்றோர் முன் எழாது:*

காணாமல் வேணதெல்லாம் கத்தலாம், கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே; – நாணாமற்
பேச்சப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால் –
கீச்சுக்கீச் சென்னும் கிளி.

*அவ்வையார் சிறந்த நன்றி பாராட்டும் பண்புடையவராதலாலும், சிறுநன்றி செய்தவரையும் பெரிதுயர்த்திப் பாடித் தம் தவ வலிமையால் அவருக்குப் பெருநிலையளிக்கும் ஆற்றல் பெற்றிருந்தமையாலும், கூழுக்கும் பாடுபவர் என்ற பெயர் இவருக்கு அமைந்தது;*

காகுக்குக் கம்பன், கருணைக்கு அருணகிரி,
ஆசுக்குக் காளமுகில் ஆவரே – தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன், உவக்கப் புகழேந்தி,
கூழுக்கிங்கு அவ்வையெனக் கூறு.

*பின்வரும் பாடலும் அவ்வை பாடல் என்று சொல்வதுண்டு.*

பாடல் பெறானேல். பலர்மெச்ச வாழானேல்,
நாடறிய நன்மணங்கள் நாடானேல். – சேட
னிவன்வாழும் வாழ்க்கை, இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னை காண்.

## 4. சமயப் புலவர் அவ்வையார்.

*ஆதி என்ற பெண்ணும் பகவன் என்ற அந்தணனும் மணம் புரிந்து கொண்டு ஏழு பிள்ளைகளைப் பெற்று, பிறந்த இடத்*

---

* *தமிழறியும் பெருமாள் கதைப் பாட்டு?*

திலேயே பிள்ளைகளை விட்டுச்சென்ற கதை 14ஆம் நூற்றாண்டில் உண்டாயிற்றுப் போலும். பிறந்த ஏழு பிள்ளைகளில் அவ்வை யாகிய பெண்ணே முதல் குழந்தை. அவர் விநாயகர் அகவல், ஞானக் குறள் என்ற இரு நூல்கள் செய்தார். இட்டமுடன் என் தலையில், ஈதல் அறம், ஐயம் இடுமின், ஒன்றாகக் காண்பதே காட்சி என்பன போன்ற சில பாடல்களை அவர் பாடினார் என்று திட்டமாய்ச் சொல்லலாம். அவர் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து தம் நூல்களைச் செய்தார் என்று குறிப்பிட்டு அவருடைய வரலாற்றையும் நூல்களையும் வேறு இடத்தில் ஆராய்ந்திருக்கிறோம்.

## பிற அவ்வை

அவ்வையார் இந்நால்வர் மட்டுமே என்பதில்லை. கிடைக் கின்ற நூல்களையும் கதைகளையும் தனிப் பாடல்களையும் கொண்டு, பின்னும் இரு அவ்வையாரையும் திட்டமாய்க் குறிப்பிட முடியும்.

அவ்வையார் ஒருவர் பிற்காலத்தில் தோன்றிய தமிழ் அறியும் பெருமாள் கதை என்ற கதையில் தொடர்புடையவர். ஒரு ரோகியால் மோசம் செய்யப்பட்டு உயிர் விட்ட அரச குமாரன், அரசகுமாரிஆகிய இருவருடைய பேய் வடிவங்கள் ஒரு நகரத்தில் பொதுச் சத்திரத்தில் வந்து இருந்து, அங்கு வந்து இராத் தங்குவோரைத் துன்புறுத்தி வந்தன. அவ்வையாரும் ஒரு சமயம் அங்கு வந்து ஓரிரவு தங்கினார். அப்போது கல்வி வல்லவளாய் இருந்த அரசகுமாரியின் பேய் வடிவம் ஒவ்வாரு யாமத்தின் இறுதியிலும் மிகவும் ஆங்காரத்துடனே வந்து உறங் கிக் கொண்டிருந்த அவ்வையாரை எற்றெற்று* என்று அறைய வந்தது. அவ்வையார் அந்த பேயின் பழஞ் செய்தியெல்லாம் நன்கு உணர்ந்தபடியினாலே முறையாக நான்கு பாடல்கள் சொன்னார்.

வெண்பா இருகாலிற் கல்லானை, வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானை, – பெண்பாவி
பெற்றாளே, பெற்றாள், பிறர்நகைக்கப் பெற்றாளென்று
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

---

* எற்று - அறை (அடி).

என்ற முதல் பாடல் நன்கு தெரிந்தது. இதைக் கேட்டவுடனேயே அந்த அரசகுமாரியின் பேய் வடிவம் அவ்வையின் ஆற்றலை உணர்ந்து நான்காம் யாமத்தில் அவள் காலில் விழுந்து வணங்கித் தனது பிற்கால வாழ்க்கையும் அறிந்து கொண்டது. இவ்வரசகுமாரியே பிறகு தமிழ் அறியும் பெருமாளாகப் பிறந்து, விறகு தலையனாகப் பிறந்திருந்த அரசகுமாரனை நக்கீரர் முயற்சியால் மணந்து கொண்டாள் என்பது பிற்காலத்தார் புனைந்த கதை.

இவ் அவ்வையார் பாடிய நான்கு பாடல்களும் உள்ளன. இவரே, தனக்கு அடங்காத மனைவியை மணந்து கொண்டு அவளால் பெரிதும் துன்பமுற்ற ஒருவனை நோக்கி, இருந்து முகந்திருத்தி, காணக் கண் கூசுதே, சண்டாளி சூர்ப்பனகை, பத்தாவிற்கேற்ற பதிவிரதை, அற்றதலை போக என்ற ஐந்து பாடல்களையும் பாடினார் என்று கருதலாம். இவர் எந்த நூலும் செய்ததாகத் தெரியவில்லை. இவரது காலம் 16-17 நூற்றாண்டாயிருக்கலாம்.

அவ்வையார் செய்த பந்தனந்தாதி என்ற ஒரு நூல் அச்சிடப் பட்டுள்ளது. இது பற்றிப் பின்னே சுருக்கமாக ஆராய்கிறோம். இதன் காலம் 17 - 18 நூற்றாண்டு ஆகும். இதன் ஆசிரியர் அவ்வையார் என்று சொல்லப்பட்டமையால் இவரை ஆறாவது ஆன ஓர் அவ்வையார் என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

## அவ்வையார் நூல்கள்

அவ்வையார் செய்தனவாக மிகப் பலவான நூல்கள் பெயர் சொல்லப்பட்டுள்ளன. விநோதரச மஞ்சரியிலும் ரிப்பன் பிரஸ் அவ்வையார் சரித்திரத்திலும்தான்* இவை முதன்முதல் சொல்லப் பட்டவை என்று தெரிகிறது. அவ்வாறு சொல்லப்பட்ட நூல்கள் பின்வருவன:

அ. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி.

ஆ. அசதிக்கோவை, பந்தனந்தாதி.

இ. விநாயகரகவல், ஞானக்குறள்.

---

* இச்சரித்திரம் எழுதினவர் பெயரோ, அச்சிட்ட வருஷமோ அதில் சொல்லப்படவில்லை.

ஈ. கல்வியொழுக்கம், நன்னூற் கோவை, நான்மணிக் கோவை, நாண்மணி மாலை, அருந்தமிழ் மாலை, தரிசனப்பத்து, பிடக நிகண்டு.

இவற்றுள் அ பிரிவில் காட்டிய நான்கு நூல்களும் 12ஆம் நூற்றாண்டு அவ்வையார் செய்தவை; இந்த வரலாற்று நூலில் அடுத்து ஆராயப்பெறுகின்றன. ஆ பிரிவில் கண்ட இரண்டில், அசதிக் கோவை இதே அவ்வையார் செய்தது, ஆனால் நூல் கிடைக்கவில்லை; பந்தனந்தாதி, நூல் இன்று இருக்கிறது, ஆனால் 17ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்றது, இவ் அவ்வையார் செய்ததன்று; இவ்விரு நூல்கள் பற்றியும் சில குறிப்புக்களைப் பின்னே தருகிறோம். இ பிரிவில் சொல்லிய இரு நூல்களையும் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேறோர் அவ்வையார் செய்தார்; இந்நூல்கள் 12ஆம் நூற்றாண்டுக்குரியவை அல்ல. ஈ பிரிவிலுள்ள நூல்கள், முதலில் ஒருவருடைய கற்பனையில் அவ்வையார் நூல்கள் என்று பெயர் புனையப்பட்ட போலும்; நூல்கள் இன்று எங்கும் இல்லை, அவை பற்றி எச்செய்திகளும் இல்லை. கல்வியொழுக்கம் என்ற நூலைப் பற்றி மட்டும் செந்தமிழ்ப் பத்திரிகாசிரியர் பின்வருமாறு எழுதியுள்ளார்; 'கல்வியொழுக்கம் என்பது ஒரு நூல், இது மொழிக்கு முதலாம் எழுத்துக்களின் அடைவே நாற்சீரடியான் வருவது' என்று கூறி உதாரணம் காட்டியுள்ளார்:

**ஈட்டிய பொருளின் எழுத்தே உடைமை**
**சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே.**

இருப்பினும், இந்நூல் இப்போது கிடைப்பதாகத் தெரியவில்லை. ஈ பிரிவில் சொல்லிய நூல்கள் யாவும் வெறும் கற்பனை என்றே கருத வேண்டியுள்ளது.

நாம் இங்கு கருதும் அவ்வையார், தமது மூதுரை நல்வழி ஆகிய நூல்களில் விநாயக வணக்கம் கூறியிருப்பதாலும், விநாயகரகவல் விநாயகரைத் துதிப்பதாலும், இதைச் செய்தவரும் அவரே என்ற குழப்பம் ஏற்பட்டு விட்டது போலும்; அவ்வை ஒருவரே இருந்தார் என்று கருதிய காலத்து, எல்லா நூல்களையும் அவர் மீது ஏற்றியது வியப்பன்று. நம் அவ்வை பெரும்பான்மை சோழநாட்டில் வாழ்ந்த போதிலும் கூட, மிகச் சிறந்த பொதுமை நோக்கு உடையவராகவே காணப்படுகிறார். அந்தந்த நாட்டின் இயல்பை நன்கு போற்றியும் வலியுறுத்தியும்

சொல்லுகிறார். இவர் காலத்து மன்னர் அனைவருமே இவரிடத்துப் பெருமதிப்போடும் அன்போடும் ஒழுகியது பெரிதும் போற்றத்தக்கதாய் உள்ளது.

## ஆத்திசூடி

அவ்வையார் நூல்களைக் குறிப்பிடும்போது, இந்த நூலை முதலாக வைத்துக் கணக்கிடுவதே மரபாக இருக்கிறது. ஆகவே இதையே முதலாவதாக நாமும் குறிப்பிடுகிறோம். ஆத்திசூடி என்பது முதற்குறிப்பாற் பெற்ற பெயர்; இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் தேசியக் கவிஞர் பாரதியார் இப்பெயரை வைத்தே, தமது புரட்சிக் கருத்துக்கிசையப் புதிய ஆத்திசூடி எனப் பாடியிருப்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. இன்றுள்ள இதன் காப்புச்செய்யுள் இத்தொடரோடு தொடங்குகிறது:

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

இந்நூல் 109 வரிகளை உடையது. ஒவ்வொன்றும் ஒரு நூற்பா போன்றது. உயிர் எழுத்து, உயிர்மெய் எழுத்துக்கள் ஆகியவற்றை நிரலே முதலெழுத்தாக வைத்துத் தொடங்கும் அடிகளாக அமைக்கப்பட்டுள்ளன. உயிர் (ஃ உள்பட) 13, அகரமேறிய மெய் 18, ககரவருக்கம் 12, சகரம் 11, தகரம் 11, நகரம் 11, பகரம் 11, மகரம் 11, வகரம் 11 ஆக 109. மெய் 18 இல், தமிழிலக்கணப்படி மொழிக்கு முதலில் வரலாகாத எழுத்துக்களான ட, ண, ய, ர, ல, ழ, ள, ற, ன என்பவற்றின் முன் இகரம் அல்லது அகரம் அமைத்த சொல்லாக வரிகள் செய்யப்பட்டுள்ளன:

இடம்பட வீடு எடேல்
அனந்த லாடேல்

என்பன காண்க. இவ்வாறே வகர வருக்கத்தில் வு, வூ, வொ, வோ - மொழிக்கு முதலாக வாரா ஆகையால், இவை உ, ஊ, ஒ, ஓ என்றே கொள்ளப்பட்டுள்ளன:

உத்தமனாயிரு (வு)
ஓரம் சொல்லேல் (வோ)

என்பன காண்க. எனினும், மொழிக்கு முதலில் வரத்தக்க ஞகர, யகர வருக்கங்கள் இங்கு விலக்கப்பட்டுள்ளன. காரணம் விளங்கவில்லை.

அப்பர் சுவாமிகள் தாம் பாடிய திருக்குறுந்தொகை (ஐந்தாந் திருமுறை) இறுதியில் பொதுக் குறுந்தொகை - சித்தத் தொகை என்ற பதிகத்தை, இரண்டாம் பாடலிலிருந்து முப்ப தாம் பாடல் வரை, முதலெழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கு உயிரெழுத்துக்களும் அகரமேறிய மெய்யுமாக அமைத்திருப்பது கருதத்தக்கது. அ, ஔ, ஃ - வரை 13 பாடல்கள், க - ன; 17 பாடல்கள்; இங்கு வ, ற வுக்குரிய பாடல்கள் இல்லை. தமக்கு வழக்கமாயுள்ள முறைப்படி ல என்ற எழுத்து வருகிற இலங்கை என்ற சொல்லை முதலாக உடைய பாடலை 30ஆம் பாடலாக, ன வுக்குப் பின் இறுதியில் வைத்திருக்கிறார். மொழிக்கு முதலில் வராத ட, ண, ய, ழ, ள, ல என்றவற்றுக்கு முதலில் இகரத்தையும், ரவுக்கு அகரத்தையும், னகரத்துக்குப் பதிலாக ன் என்ற எழுத்தைத் தன் என்ற தொடக்கமாகவும் அமைத்திருக்கிறார்.

15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவராயர் தமது பாடு துறையுள், 99. சொரூபானந்த சுவாமிகள் வீட்டு நெறி என்ற பிரபந்தத்தை 114 அடிகள் கொண்ட ஓர் அகவலாக அமைத்திருக் கிறார். எதுகை பெற்ற தனி வாக்கியம்; முதல் எழுத்துக்கள் அவில் தொடங்கி வையில் முடிகின்றன. பிற்காலத்தில், ஆசிரியர் பெயர் அறியப்படாத நூலாகிய வேழமுகம் என்பதன் வரிகள் எல்லாம் அகரவரிசையில் அமைத்துள்ளன.

இந்நூல் வரிகள் பற்றிச் சில சொற்கள் கூறலாம். ஙப் போல் வளை என்று இவர் ஙகர வர்க்கத்திற்காகப் பரிந்து பேசும் கூற்று, தமிழ் உலகில் சுற்றம் தழுவுதலுக்கு ஒரு சூத்திரம் ஆகிவிட் டது. கல்வியை அதிகமான வரிகளால் சொல்லுகின்றார்: எண் ணெழுத்து இகழேல், ஓதுவது ஒழியேல், இளமையிற் கல், கேள்வி முயல், நூல்பல கல், வித்தை விரும்பு. தெய்வ வழிபாடு - திருமாலுக்கு அடிமைசெய், தெய்வம் இகழேல். உடல் நலம் - நோய்க்கு இடங்கொடேல், மீ தூண் விரும்பேல். பாம்பு - அரவமாட்டேல், பாம்பொடு பழகேல். உழவு - பருவத்தே பயிர் செய், நெற்பயிர் விளை, பூமி திருத்தி உண். மை விழியார் மனையகல் என்றது சரியே; ஆனால் இவரே பெண்பாலா யிருந்தும், 'தையல் சொற் கேளேல்' என்று சொல்லி இருப்பது விசித்திரமாயுள்ளது.

இணக்கமறிந்து இணங்கு, சேரிடமறிந்து சேர் என்று ஒரே கருத்தைத் தெரிவிப்பது போன்ற இரு வரிகள் காணப்படுகின்றன.

இரண்டுக்கும் பொருள் வெவ்வேறாகக் கொள்ளுதல் தகும். சேர்க்கை என்பதற்கு, மெய்யினால் மட்டும் (செயலால்) பெறும் நட்பு என்றும், இணக்கம் என்பதற்கு மனம் மொழிமெய் என்ற முக்கரணங்களாலும் கொள்ளும் நட்பு என்றும் பொருள் செய்வது பொருந்தும் என்று தோன்றுகிறது.

மிகச் சுருங்கிய சொற்களால் உலகத்துக்குப் பொதுவான நீதிகளை இவ்வளவு அதிகமாகச் சொன்ன நூல் வேறு இல்லை. திருக்குறளின் சாரமான கருத்துக்கள் பலவற்றை இரண்டே சொற்களால் சொல்லுகின்றார்; ஏற்பது இகழ்ச்சி, ஐயம் இட்டு உண் என்று தொடர்ந்த இரு வரிகளையும் காண்க; குறளை ஒப்பிடுக.

ஆத்திசூடி அமர்ந்த தேவன் - ஆத்தி சூடுகின்ற சிவ பெருமான் விரும்பிய தேவனாகிய விநாயகன் என்றும், ஆத்தியைச் சூடிய சிவபெருமான் என்றும் பொருள் சொல்லுவர். இந்நூலானது பாமரமக்கள் நாவிலும், சாமானியப் பழமொழி போல இன்றும் வழங்கி வருகிறது. அறிவுடையார் நாவில் இவை சிறந்த மேற்கோள் வாக்கியங்களாக வழங்குகின்றன. திருக்குறள் போன்றவை, சிறிதேனும் கல்வியறிவுடையவர்க்கே பொருள் விளங்கும் தன்மையுடையவை; ஆனால் ஆத்திசூடி வாக்கியங்களுக்குப் பொருள் தானே விளங்கும். இவை தோன்றிய காலந்தொட்டு தமிழ்மக்களுக்கு நல்லொழுக்கம் போதிக்கும் சட்டநூல் போலமைந்துள்ளன. அகர வரிசையானது சிறு பிள்ளைகள் தொடர்பாய் நினைவில் கொள்ளுவதற்கு உதவுவது.

இந்நூலுக்குப் புதிய உரைகள் பல. பழமையான உரைகள் இரண்டு. ஒன்று இராமானுச கவிராயர் உரை; சென்ற நூற்றாண்டு. இது பின்னும் பழையதோர் உரையைப் பின்பற்றி எழுதியதாகும். கவிராயர் ஆத்திசூடி வரிதோறும் ஒவ்வொரு குறளை மேற்கோள் காட்டிச் செல்கிறார். இதற்கென்றே வரியையும் மாற்றிக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது; விரிவஞ்சி இவருடைய மாற்றங்களைச் சொல்லவில்லை. பல இடங்களில் பொருளும் வேறாகச் சொல்கிறார். உரை மிகவும் கடினமானது.

கவிராயர் வு, வூ, வொ, வோ என்ற நான்கெழுத்தும் முதலில் வரவேண்டிய இடங்களில் அம்ம என்ற ஒரு சொல்லை முதலிற் பெய்து, அம்ம வுத்தமனாயிரு, அம்ம வோரஞ் சொல்லேல் என்றமைத்திருப்பது கருதற்பாலது.

*மற்றது, இதற்கு காலத்தால் முந்தியதான பழையவுரை; செய்தார் பெயர் தெரியவில்லை; இதுவே கவிராயர் உரைக்கு ஆதாரம். இதனுள் ஏற்ற விடங்களில் மட்டுமே குறள் மேற் கோள் தரப்பட்டுள்ளது. புறநானூறு, நாலடி, கம்பராமாயணம், பகவத்கீதை, மனையலங்காரம் ஆகிய மேற்கோள் கூறுகிறார் இவ்வுரை எழுதிய ஏட்டில் ஆத்திசூடிக்கும் 'கொன்றைவேந்தன்' என்றே பெயர் காணப்படுகிறது; ஆத்திசூடி, என்ற காப்புச்செய் யுள் இதில் காணப்படுகிறது. அன்றியும், இவ்வுரை இறுதியில்,*

கொன்றைவேய்ந் தோனுரையைக் கொன்றைவேய்ந்தோனருளால்,
இயன்றமிழார் வேந்தர் இருங்குழுவே, – ஒன்றும்
அறியா துரைத்தேன், அவையார் உரையாற்
பிறியாத நார்ப்பூப் பிணை.

*என்ற வெண்பாவும் காணப்படுகின்றது. இதனால் கொன்றை வேந்தன் - ஆத்திசூடி என்று தொடங்கும் கடவுள் வணக்கப் பாடல்கள் புதிதாக எடுத்துச் சேர்க்கப்பட்டன, அவைகொண்டு, நூல்களுக்குப் பெயரும் புதிதாக வழங்கப்பட்டன என்று திட்ட மாய்த் தெரிகிறது.*

*சாமிநாத ஐயர் என்பவர் ஆத்திசூடி விருத்தியுரை என்ற விரிவான உரை நூல் எழுதி 1898இல் அச்சிட்டு வெளியிட்டார்.*

*ஆத்திசூடியைச் சிறப்பிக்கும் நூல்கள் பல எழுந்துள்ளன. தொண்டை நாட்டில் பாகை என்ற ஊரில் கணபதி என்பவர் புதல்வரான புன்னை வனநாதன் என்ற வள்ளலைப் போற்றி, வெண்பா யாப்பில், பாடல் இறுதியில் ஒவ்வோர் ஆத்திசூடி வரியை அமைத்து, பாடலின் முற்பகுதியில் அவ்வரியை விளக் கும் கதையை அமைத்து, இராம பாரதியார் என்பவர் ஆத்தி சூடி வெண்பா என்ற ஒரு நூல் செய்தார்: வெண்பா 109. பின் வரும் பாடல் ஓர் எடுத்துக் காட்டு:*

நித்தியத்தைக் கேட்கப்போய் நித்திரைஎன் றேகுளறிப்
புத்தியற்ற கும்பகர்ணன் பொன்றினன்பார்; – மத்தமத
குன்றம்போற் புன்னைவனக் கொற்றவா, வாகை மன்னா,
என்றும் – சொற் சோர்வு படேல்.

*இந்நூலானது, திருக்குறளுக்கு இம்மாதிரி வெண்பா நூல்கள் பல செய்யப் பெற்றிருக்கும் மரபையொத்து எழுந்ததாகும்*

குரு முனி (குறுமுனி?) செய்ததாக அச்சிடப்பட்டு வழங்குகிற ஆத்திசூடி திறவுகோல் என்பது மற்றொரு நூல். இதன் கண் அ தொடங்கி ஃ வரையில் உள்ள 13 வரிகளுக்கான பாடல்களே காணப்படுகின்றன. எண்சீர் ஆசிரிய விருத்தம். பாடல் ஆத்தி சூடியில் உட்பொருளைக் கூறுவதாகச் சொல்கிறது. நடை மிக வும் தாழ்ந்த நடை. பின்வரும் பாடல் எடுத்துக்காட்டு:

அரனென்ற பொருளல்லால் உலகின் கண்ணே
　　அண்டருக்குத் தான்முனிவர் காணார் சூக்மம்;
சரமென்றும் பெயர்பெற்று உலகில் தானும்
　　தனக்குள்ளே தானாகி அண்ட மாகிப்
பரமென்ற கீர்த்தியுள்ள சித்தர் யோகி
　　பரிவாக உச்சரித்தும் நமனை வெல்வார்;
குருவென்றும் சீடனென்றும் கற்ப மென்றும்
　　குவலயத்தில் அறஞ்செய்ய விரும்பு மாச்சே.

இவையன்றி ஆத்திசூடி புராணம் என வேறொரு நூலும் உள் ளது. ஆத்திசூடியில் கருத்துக்களை அமைத்து ராஜரத்தின முதலியார் என்பவர் ஆத்திசூடிச் சிந்து என்ற ஒரு நூல் எழுதி னார். அது 1878இல் வெளியாயிற்று.

தமிழ் நெடுங்கணக்கில் மொழிக்கு முதலாய் வரத்தக்க எழுத்துக்களை வைத்துப் பாடல்களை முறையே தொடங்கு வது ஒரு பிரபந்த மரபு வருக்கமாலை, வருக்கக்கோவை காண்க. முன்வந்த கலம்பகங்களில், இத்தகைய அமைப்பு ஒரே பாடலில் காண்பதும் உண்டு. பன்னிருஅடி ஆசிரியப் பாடலாய், அடிதோறும் உயிரெழுத்துக்களை முறையாகப் பெய்து பாடு வது இத்தகைய பாட்டு. ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் அப்பாட்டின் அமைப்பைக் கொண்டு இயன்றிருக்கின்றன. ஆத்திசூடி அகர வரிசை பாடல்களின் முதல் எழுத்தை அகர வரிசையில் அமைப்பதை, பதினோராந் திருமுறையிலுள்ள திரு ஈங்கோய் மலை எழுபதிலும் காணலாம்.

## கொன்றைவேந்தன்

ஆத்திசூடியை யடுத்தும் பெயர் வழங்குவது இந்நூல். காப்புச் செய்யுளின் முதற்குறிப்பால் இந்நூல் இக்காலத்தில் இப்பெயர் பெற்று வழங்குகிறது:

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

கொன்றை வேந்தன் - சிவபிரான்; செல்வன் விநாயகன், கொன்றை வேய்ந்த செல்வன் என்று பாடமோதி, சிவபிரான் என்று பொருள் செய்தலுமுண்டு. ஆத்திசூடி போலவே உயிர் எழுத்துக்களையும் உயிர்மெய் யெழுத்துக்களையும் முதல் எழுத்தாகவுடைய அடிகள்; தனியே சகரமேறிய மெய்யை அமைக்காமையால், அடிகள் அதனினும் குறைவு; 91. மற்றவை அங்ஙனமே அமைக்கப் பெற்றுள்ளன. நாற்சீராக அமைத்துள் ளமையால், அடிதோறும் நயமான வழி எதுகை பொருந்தி யுள்ளது. முதலெழுத்துக்களைப் பற்றி ஆத்திசூடியும் சொல்லி யமை யாவும் இதற்கும் பொருந்தும்.

தெய்வ வழிபாடு, நல்லொழுக்கம், வினைப்பயன், ஊக்கம்; மேழிச் செல்வம், கல்வி, இன்சொல், பெற்றோர்ப் பேணல், மகளிர் ஒழுக்கம் முதலியவற்றை இச்சிறு நூல் நயம்படக்கூறிய அளவு வேறெந்த நூலும் கூறவில்லை.

இந்நூலாசிரியர் வரிகளில் பொருளை அமைத்து வைத்திருக் கும் நயம் நோக்கி இன்புறத்தக்கது. திருக்குறள் இரண்டடி களில் சொல்லியுள்ள கருத்தை இவர் ஒரே அடியில் அமைக்கிறார்:

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிருக்கு.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்

என்ற குறட்பாக்களையும்,

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

என்ற அடிகளையும் ஒப்பிடுக. கொன்றைவேந்தன் தொடர்கள் ஆத்திசூடிக்கு விளக்கம் தருவனபோல் அமைந்துள்ளன. தொடை நயம் இவற்றின் சிறப்பு. பிற்காலத்தில் எழுந்த வெற்றி வேற்கை வரிகள் சில இதன் வரிகளைத் தழுவிச் செய்யப் பெற்றவை. ‘பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்’ என்பது வினையை வலியுறுத்தியவாறு. இங்கும்கூட, பெண்டிரைக் குறை கூறும் இருவரிகள் காணப்படுவது கருதத்தக்கது.

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
தூற்றும் பெண்டிர் கூற்று எனத்தகும்.

ஆத்திசூடி போலவே இதற்கும் புதிய உரைகள் பல, பழைய உரைகள் இரண்டு. முற்கூறிய உரைகள் போலவே இதன் பழைய உரையும் வேறான பழைய பாடங்கொண்டு சுவைபட உள்ளது. கவிராயர் உரையும் அதுபோலவே, பல்வேறு பாடங்களைக் கொண்டு கடினமாகச் செய்யப்பட்டது. பழைய உரைகாரர் இந்நூலை 'அன்னையும் பிதா' என்றே எழுதுகிறார்; இதற்குக் காப்புச் செய்யுள் இல்லை. பல இடங்களில் இவர் ஆத்திசூடிக்கும் இதற்கும் உள்ள தொடர்பை விளக்கி எழுதுகிறார். பாட பேதங் களில் 50ஆம் தொடர் குறிப்பிடத்தக்கது. ஏனையவை 'நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை' என்று இருக்க, இவர் 'நித்தக் கூத்துச் செய்தலைப் பாம்பு' என்று கொண்டு உரை எழுதுகிறார்: 'நித்தலும் சண்டையிட்டால் ஒரு நாள் மரணம் வரும். எப்படி என்றால், புற்றிடத்தில் சஞ்சரிக்கும்போது என்றேனும் ஒருநாள் பாம்பை மிதிக்க அது கடித்து இறக்க நேரும்' என்பது உரை.

நூலின் காப்பாக இன்று உள்ள செய்யுள் 'கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை - என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' என்ற பாடத்தோடு, தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியம் செய்யுளியல் 149ஆம் சூத்திர உரையில் நான்குமுறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது இரண்டடியாகவின், வெண்பாவினுள் ஒரு சாரனவற்றுக்கும் கவியுள் ஒரு சாரன வற்றுக்கும் இனமெனப்படும்' என்பது அவர் குறிப்பு (13 நூ) அன்றியும் இதுவே முன்வந்த யாப்பருங்கல விருத்தியுரையிலும் தொல்காப்பியம் இளம்பூரணர் உரையிலும் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளது. இவ்வுரைகளின் காலம் முறையே 10, 11 நூற் றாண்டுகள் என்று காட்டியிருக்கிறோம். எனவே, இக்காப்புச் செய்யுள் மட்டும் ஒருகால் பழம் பாடலாயிருந்து, அவ்வையார் நூலுக்குக் காப்பாக எடுத்து அமைக்கப்பெற்றது போலும். பழைய உரைப்பிரதிகள், நூற்பெயர் கொன்றைவேந்தன் என்பதற்குப் பதிலாக 'அன்னையும் பிதா' என்ற தொடக்கத் தொடரை வைத்தே நூலைக் குறிப்பிடுகின்றன. இவ்வுரையை கா. நமச்சிவாய முதலியார் (1930) பதிப்பித்திருக்கிறார். ஆத்திசூடியும் கொன்றை வேந்தன் இரண்டும், வெற்றிவேற்கை என்று நூற்காப்புச் செய்யுளின் காப்புத்தொடரால் நூலுக்குப் பெயர் வருவது போலவே, காப்பின்றி, அன்னையும் பிதா என அமைவது பொருத்தமே. சேரமான் செய்த பொன்வண்ணத்தந்தாதி,

தொடக்கத் தொடராகிய பொன்வண்ணம் என்பதை வைத்தே பெயர் பெற்றிருப்பதும், வடமொழியில் ஈசாவாஸ்யம் என்று தொடங்குகின்ற உபநிடதம், ஈசாவாஸ்ய உபநிடதம் என்ற பெயர் பெற்றிருப்பதும் இங்கு அறியத்தக்கன.

யாப்பருங்கல விருத்தின் காலம் 10ஆம் நூற்றாண்டு ஆதலால், கொன்றைவேந்தன் நூல் அதற்கு முற்பட்டதெனல் பொருந்தாது. நூலினுள் வரும் மிகப் பலவான சொற்கள் பெரிதும் பிற்பட்ட காலத்துக்குரியவை. ஆதலால் முற்கூறிய வாறு 12ஆம் நூற்றாண்டில் இவ் அவ்வையார் வாழ்ந்தார்; இவர் செய்த நூல்களுள் கொன்றை வேந்தனும் ஒன்று; காப்புச் செய்யுள் மட்டும், ஒரு தனிப் பழம் பாடலாயிருந்து, பிற்காலத்து ஆன்றோரால் தலைப்பில் பெய்யப்பட்டது என்று கொள்ளுதல் அமைவுடையது.

'அன்னையும் பிதா' என்னும் இந்நூலுக்கு (இன்று கொன்றைவேந்தன் என்பது) உரை எழுதிய பழைய உரைகாரர் பின்வருமாறு தொடக்கம் செய்கிறார்:

**அன்னையும் பிதாவும் என்று முன்னுரைப்**
**பெயருடை நூற்கும் பெயர்த்துரை உரைஎன**
**நல்லோர் சொல்லும் நல்லுரை கேட்டுச்**
**சொல்லெனச் சொல்லும் சொற்கிள்ளை போல**
**வல்லார் முன்உரை வழங்குவன் மாதோ.**

ஆத்திசூடியில் 'திருமாலுக்கடிமைசெய்' என்று சொன்ன அவ்வையார், இங்கு 'சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு' என்கிறார். சிவத்தை அதிகம் சொல்ல வேண்டும் என்று கருதி னோர், முந்தியதில், 'அறனைமறவேல்' என்றிருந்ததை 'அரனை மறவேல்' என்று திருத்தினார்கள் - அவ்வரி றகரத்துக்குரியது என்பதையும் மறந்து. அப்படியே சிவத்தைச் சொல்லவேண்டாம் என்று கருதினோர், 'சினத்தைப் பேணில் தவத்திற் கழகு' என்று திருத்தினர் - வழியெதுகை நயத்தையும் மறந்து.

இந்நூலின் அடிகள் ஒவ்வொன்றும் சிறப்புடைய மாணிக்கம் போல் பாமர மக்கள் நாவிலும் பயில்வதால், இது சிறப்பு என்று இங்கு தனியே எதையும் எடுத்துக்காட்டவில்லை. 'பையச் சென்றால் வையந் தாங்கும்' என்பதையும் 'பீலிபெய்

சாகாடும் அச்சிறும் அப்பண்டம் - சாலமிகுத்துப் பெயின்' என்பதையும் ஒப்பிடுக, வழக்கம் போல் உழவை மிகுதியும் வற்புறுத்துகிறார் (29, 46, 71, 77)* பெற்றோரை ஆத்திசூடியினும் அதிகமாகவே இங்கு கூறுகிறார் (1, 37, 38, 65). பெண்கள் பற்றிய குறிப்பும் இதனுள் அதிகம் (5, 10, 15, 41, 42, 66,) தெய்வத்தையும் அதிகம் வற்புறுத்திச் சொல்கிறார் (2, 28, 43, 89).

மேலும் இரு கருத்துக்கள் இங்கு சிறப்பாகச் சொல்தற் குரியன. ஒன்று, போனகம் என்பதுதான் உழந்து உண்டல் என்பது. தனது உடலுழைப்பினால் வரும் ஊதியமே சிறப் புடையது; இதுவே சுதந்திரமானது, இந்த உணவே உணவு, பிற யாவையும் அடிமை வாழ்வு என்பது இருபதாம் நூற்றாண்டுக் கொள்கை. இதை இவ்வரி வலியுறுத்திச் சொல்லியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. அவ்வை என்ற ஒரு பெண்பாலார் இதைச் சொல்லியிருப்பது பின்னும் போற்றுதற்குரியது.

இரண்டாவது கருத்து, வளவனாயினும் அளவறிந்து அழித்து உண் என்பதில் அடங்கியது. பொருள்தனைப் போற்றி வாழ்! என்று முன்னமே சொல்லியிருக்கிறார். வளவனாயினும் என்ற இடத்தில், காலத்தின் சாயலைக் காணலாம். இவர் 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர். சோழர் ஆட்சி மிக்க சிறப்பாய் இருந்த காலம், வேறு சேரருக்கோ, பாண்டி யருக்கோ, பல்லவருக்கோ அக்காலம் சிறப்பு இல்லை என்பது வரலாறு. ஆகவேதான் வளவன் (சோழன் மன்னன்) போன்ற பெருஞ்செல்வம் படைத்திருந்தாலும், வருவாயின் அளவு அறிந்து அதற்குத் தக்கபடி செலவைத் திட்டம் செய்து வாழ வேண்டும் என்று வரையறுத்துச் சொல்கிறார். எனவே, இவரு டைய இக்குறிப்பினால், இவர் சிறப்பான ஒரு சோழராட்சிக் காலத்தில் வாழ்ந்தார் என்று நன்றாய் உணரமுடிகிறது. அக் காலம் பிறவகையாலும் நாம் அறிகிறபடி, 12ஆம் நூற்றாண் டின் இடைப் பகுதியாகும்.

**மூதுரை**

விநாயகர் காப்பும் 30 வெண்பாக்களுடையது மூன்றாவது நூல். காப்பு வாக்குண்டாம் என்று தொடங்குவதால் நூலே வாக்குண்டாம் என்று மற்றொரு பெயரும் பெற்றிருக்கிறது.

---

* எண்கள் எஸ்.ராஜம் பதிப்பு 1959.

## அவ்வையார் அறுவர்

| எண் | பெயர் | காலம் | தனிப்பாடல் | நூல் | பாடல்பெற்றோர் | வரலாறு |
|---|---|---|---|---|---|---|
| 1. | சங்ககால அவ்வை | சங்க காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கு முன் | சங்க நூற் பாடல் | அகநானூறு 4, குறுந்தொகை 15, நற்றிணை 7, புறநானூறு 33: | சேர சோழ பாண்டியர்: அதிகமான் அவன் மகன், நாஞ்சில் வள்ளுவன் முதலான பலர். | அதிகன் நெல்லிக் கனி. |
| 2. | இடைக் கால அவ்வை | 10ஆம் நூற்றாண்டுக்கு முன் | பல | | வேந்தர் மூவர். | அங்கவை சங்கவை மணம். |
| 3. | சோழர் கால அவ்வை | 12ஆம் நூற்றாண்டு | பல | ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை | சோழர், அசதி. | அசதி, விக்கிரம சோழன் |
| 4. | சமயப் புலவர் அவ்வை | 14ஆம் நூற்றாண்டு | சில | அவ்வை குறள், விநாயகர் அகவல், | விநாயகர். | அகவல் பாடியது |
| 5. | பிற்கால அவ்வை-1 | 16 - 17 - நூற்றாண்டு | சில | | | தமிழறியும் பெருமாள் கதை. |
| 6. | பிற்கால அவ்வை-2 | 17 - 18 நூற்றாண்டு | | பந்தனந்தாதி. | பந்தன் என்ற வணிகன். | பந்தன் செய்த சிறப்புக்கள் |

வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலராள்
நோக்குண்டாம், மேனி நுடங்காது; – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.*

*பெரும்பான்மையும் நேரிசை வெண்பாக்கள்; 4ஆம் பாடல் மட்டும் நேரிசை வெண்பா அல்ல; இரண்டாம் அடியில் ஒரு சீர் குறைந்து வந்துள்ளது. இதுபற்றி தொல்காப்பியம் செய்யுளியல் "வெண்பா ஈற்றடி முச்சீர்த்தாகும்" என்ற 72ஆம் சூத்திரத்தின் உரையில் பேராசிரியர்,*

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

*என்ற இம்மூதுரைப் பாடலை எடுத்துக்காட்டி "முச்சீரடி இடையும் வந்ததால் வெண்பாவினுள் எனின், முச்சீர்த்து என்னாது, ஆகும் என்று ஆக்கம் கூறக் கொடுத்தமையான் அத்துணை ஆக்கமின்றி இடையும் சிறுபான்மை வரும் எனக் கொள்க" என்று எழுதுகிறார். இதனால் பேராசிரியர் காலமாகிய 13ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது மூதுரை என்று ஏற்படுகிறது. இவ்வாறு பேராசிரியர் உரையுள் மூதுரை சுட்டப் பெறுவதால், இந்நூல் செய்த அவ்வையார் பேராசிரியருக்கு முன்னுள்ளதாகிய 12ஆம் நூற்றாண்டினர்❖ என்று கருதுவது சாலப் பொருத்தமுடையது.*

---

* *இக்காப்புச் செய்யுள் பிற்காலத்ததோ என்ற ஐயம் எழுதல் கூடும்.*

❖ *இளம்பூரணர் "அட்டாலும் பால் சுவையிற் குன்றாது" எனத் தொடங்கும் இவரது பாட்டை எடுத்துக் காட்டுகின்றார், இதனால் இரண்டாம் அவ்வையார் கி.பி. பத்தாம் நூற்றாண்டினரெனக் கொள்ளலாம் என்று ஔவை சு. துரைசாமிப் பிள்ளை தமது சைவ இலக்கிய வரலாற்றில் எழுதுகின்றார். (அண்ணாமலை பல்கலைக் கழக வெளியீடு பக்கம் 408) இது பிழை; அட்டாலும் என்ற பாடலைத் தருபவர் பேராசிரியரேயன்றி இளம்பூரணர் அல்லர். ஆதலால் அவ்வையார் பேராசிரியர் காலமாகிய 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 12ஆம் நூற்றாண்டுக்குரியவர் என்று நாம் கருதுவது பொருந்தும், அவர் கருதுகின்ற 10ஆம் நூற்றாண்டு பொருந்தாது என்பது தெளிவு.*

*இங்கு காட்டிய 'அட்டாலும்' என்ற பாடலில் கெட்டாலும் என்ற சொல்லைத் தனிச் சீராக்கி, இடையில் தான் மிக்க என்ற தொடரைச் சேர்த்து,*

மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும்
தான் மிக்க வெண்மை தரும்.

*என்று நேரிசை வெண்பாவாக்கிக் காட்டினோரும் உளர்.*

*இந்நூலுக்கு மற்றொரு காப்புச் செய்யுளும் உண்டு; ஆனால் அது வழக்கில் இல்லை;*

ஆதி அனாதி ஔவையார் அருளியவை
ஓதுவார் ஓதும் பொருளெல்லாம் – மேதினியில்
ஆதிரை யானை அடிபணிந் தேத்திட
மூதுரை முப்பால் வரும்.

*சிறப்பான நீதிகளையுடைய இந்நூலும் ஏனையவை போலவே பள்ளிப் பிள்ளைகள் கற்கும் பாடமாக இருந்து வந்திருக்கிறது. உலக நீதிகள் சிறந்த உவமைகளால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஓரளவு கொஞ்சம் கற்றோரும் இப்பாடல்களில் நல்ல பயிற்சி யுடையோராயிருக்கிறார்கள்.*

*இதன் 27ஆம் பாடல்,*

கல்லாத மாந்தருக்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்,
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம், – மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்; கூற்றமே–
இல்லிற்கு இசைந்தொழுகாப் பெண்.

*என்பது. இது நான்மணிக்கடிகை 11ஆம் பாடலைத் தழுவிய தென்பது வெளிப்படை.*

கல்லா ஒருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்,
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்,
அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம், கூற்றமே;
இல்லிருந்து தீங்கொழுகு வாள்.

*பின்வரும் பிற்காலச் சொல்லாட்சிகள் இந்நூலுட் காண்கிறோம். ஆகாரம் உபகாரம் கந்தம் கற்பகம் பலம் பாவித்து விடகாரி விதி வியாதி என்பன. 14ஆம் பாடலில், "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்றவிடத்து வான்கோழி கூறப்பட்*

டுள்ளது. ஆங்கிலேயர் இந்தியா வந்தது 16ஆம் நூற்றாண்டில். அதன்பின்தான் 'டர்கி' எனப் பெயருள்ள இப்பறவை இந்நாடு வந்தது, ஆகவே இப்பாடலுள்ள நூல் மிகவும் பிற்காலத்தது என்பது ஒரு சாரார் கூற்று. உண்மைவேறு. டர்கி என்பது துருக்கி. துருக்கியர் இந்தியா வந்தது 10ஆம் நூற்றாண்டு என்பர். அப்போதே இப்பறவையும் துருக்கியர் வழியாக இங்கு வந்திருத்தல் வேண்டும். கோழி போலப் பெரியதாயிருத்தல் பற்றி வான்கோழி (வான் - பெரிய) என இதற்குப் பெயர் இடப் பெற்றிருக்கும். 12ஆம் நூற்றாண்டில் அவ்வையார் இதைக் குறிப்பிடுவதில் அசம்பாவிதம் இல்லை. (சங்ககால அவ்வை எனில் பொருந்தாது.)

மூதுரைப் பாடல்கள் எல்லாமே எளிய நீதிகளை உவமை வாயிலாகப் போதிக்கின்றன. அவ்வுவமைகளும் வெறும் இலக்கிய உவமைகளாயிராமல், மக்கள் நேரே நன்கறிந்த செய்திகளும் பொருள்களுமாயுள்ளன. ஒரு பாடலில் வினையைக் குறிப்பிடு கிறார்; நல்வழியில் வினைக்கு அதிகமான பாடல்கள் உள்ளன.

தீயவரைப் பற்றிய பாடலில் உள்ள ஒரு பொருத்த நயத்தை இங்கு குறிப்பிடுதல் சுவையாயிருக்கும்:

> **தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற**
> **தீயார் சொற் கேட்பதுவும் தீதே; தீயார் –**
> **குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு**
> **இணங்கி யிருப்பதுவும் தீது.**

காந்தியடிகளின் வாழ்க்கையை அறிந்தவர்களுக்கு அவரருகே மூன்று சீனப் பொம்மைகள் இருப்பது தெரியும். ஒன்று கண்ணை இரு கைகளாலும் மூடியிருக்கும், ஒன்று காதை மூடியிருக்கும், ஒன்று வாயை மூடியிருக்கும்; இவற்றின் பொருளாவது; தீமை யைக் காணாதே! தீமையைக் கேளாதே! தீமையைப் பேசாதே! என்பது. இதை அப்படியே எழுநூறு ஆண்டுகளுக்கு முன் அவ்வையார் சொல்லியிருப்பது படிக்க மகிழ்ச்சி தருகிறது. அது மட்டுமல்ல; அவர் இன்னும் ஒருபடி அப்பால் சென்று 'தீமையொடு இணங்காதே' என்றும் சொன்னார்.

மூதுரையின் பாடல்கள் முப்பது என்பதே வழக்கு. எனி னும் ஏடுகளில் மிகைப் பாடல்கள் சிலவும் காணப்படுகின்றன. இரண்டைக் கீழே தருகிறோம்.

விதியால் வருவதல்லால் வேதத்தோர் தங்கள்
மதியினால் வாழ்வ தொன்றில்லை; – பதிதோறும்
சங்கரனும் ஐயம் எடுத் துண்டான், தாழ்கடல்சூழ்
மங்கையுடன் காடுறைந்தான் மால்.

ஓடம்விட்ட ஆறவ் வடுசுடுமா றொக்குமே;
நாடுவிட்டுக் காடுறைந்தான் நாரணனும், – தோடவிழும்
செந்தா மரையோன் சிரமேந்திச் செஞ்சடையோன்
வந்தான் பலிக்கு மகிழ்ந்து.

*(இரண்டாம் பாடல் நல்வழி ஏடுகளிலும் காணப்படுகிறது.)*

*'மூதுரை என்னும் சொல் அது தொகை நூல் என்று காட்டும்; பலராலும் பாடப்பட்டு வழங்கி வந்த செய்யுள்களைப் பிற்காலத்தில் திரட்டினது' என்று அனவரதவிநாயகம் பிள்ளை ஐயமுற்றார். சங்க காலத்தில் அவ்வையார் வாழ்ந்து இம் மூதுரையும் செய்தார் என்பார் கூற்றை மறுக்க வேண்டி அவர் இவ்வாறு கருதினார் என்று தெரிகிறது. நாம் கொண்டுள்ள படி அவ்வையார் பலர் என்று தெரியும்போது, இவர்களுள் ஓர் அவ்வையார் மூதுரையைப் பாடினார், இது தனிநூலே, தொகுப்பன்று என்பதும் தெளிவாகும்.*

**பதிப்பு**

*1860இல் தாமஸ் மார்டன் எப். ஸ்காட் என்பவர் சுகாத்தியன் என்ற தமிழ் வடிவப் பெயரில் மூதுரையை ஆங்கில மொழி பெயர்ப்போடு அச்சிட்டார். அவரே எழுதிய காண்டிகை விசேட உரைகளும் அதில் உள்ளன. அறத்தால் வரும் பயனுறுத்தல், கல்வி வாழ்க்கைப்பால், செல்வ வாழ்க்கைப்பால், இல் வாழ்க்கைப்பால், அறத்தாற்றினப்புறுத்தல் என்ற ஐந்து தலைப்புக்களில் தலைப்புக்கு ஆறு பாடல் வீதம் நூலைத் தொகுத்தமைத்துள்ளார். உரையின் சிறப்புப் பாயிரமாக, உரைச் சிறப்பு, ஆக்கியோன் பெயர், நூல் வந்த வழி, நூல் வழங்கும் எல்லை, நூற்பெயர், நூல் யாப்பு, நூல் நுதலிய பொருள், நூல் கேட்போர், நூற்பயன் என்ற தலைப்புக்களில் எண்மர் புலவர் செய்த பாடல்கள் உள்ளன. இது நீதிநூல் விளக்கம் முதல் பகுதியாக வெளியிடப்பட்டது. காப்புச் செய்யுள் இப்பகுதி யில் இல்லை.*

நல்வழி

இங்கு நாம் கருதும் அவ்வையார் செய்த நூல்களில் இது நான்காவது. இதன் காப்பாகிய 'பாலும் தெளிதேனும்' என்ற பாடலும்* இறுதிப் பாடலாகிய,

> **தேவர் குறளும், திருநான்மறை முடிவும்**
> **மூவர் தமிழும், முனிமொழியும்❖ – கோவை**
> **திருவா சகமும், திருமூலர் சொல்லும்**
> **ஒருவா சகம் என்று உணர்.**

என்ற பாடலும் கற்றோர் நன்கறிந்தவை. காப்புச் செய்யுளில் 'சங்கத் தமிழ்' என்று வருவதானாலேயே, சங்கத்தமிழ் வேறு, இவர் கூறும் தமிழ் வேறு என்று ஆகிறது. சங்கத்தமிழ் காலத்தால் மிகவும் சேய்மையுள்ளது எனல் பொருந்தும். ஆகவே இப்பாடல் செய்த அவ்வையார் சங்ககால அவ்வையார் அல்லர், வேறானவர் என்பது தெளிவு. இறுதிப் பாடலில் திருவாசகம் முதலான நூல் களைக் குறிப்பிடுகின்ற படியால், இதைப்பாடிய அவ்வையார் சங்ககால அவ்வையாரினும் பிற்பட்டவர் என்று திட்டமாய் உணர்த்துகிறது.

இந்நூலின் நாற்பது பாடல்களும் மிகவும் சிறப்புடையவை. பல இடங்களில் பல நயமான உவமைகளால் தம் கருத்தை இவர் வற்புறுத்துகிறார். ஆசிரியர் சைவர் என்பதைச் 'சிவாய நம என்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை', 'நீறு இல்லா நெற்றி பாழ்' முதலான தொடர்கள் காட்டும். இந்நூல் மூதுரை போலல்லாமல், முழுமையும் ஆன்மார்த்த நெறியில் இயன்றுள்ளது. புண்ணிய பாவம் 5 பாடல்கள், வினை 3, ஊழ் 6, ஈசன் 6, ஒழுக்கம் 5, நிலையாமை 7, ஈகை 7, பொருள் 1 பாடல்.

---

* பாலும் தெளிதேனும் என்ற பாடலில் வழக்கமாயுள்ள 'பருப்புமிவை' என்ற பாடத்துக்குப் பதிலாக, 'பருப்பவலும்' என்ற பாடம் ஏடுகளில் காணப்படுகிறது.

❖ 'முனிமொழியும் கோவை திருவாசகமும்' என்ற தொடர் பற்றி இங்கு ஒரு குறிப்புத் தருதல் நலம். முனி - மாணிக்கவாசகர்; அவர் மொழிந்த கோவையும் திருவாசகமும் என்றே ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். 'முனியின் மொழியாகிய வேறு ஒரு நூல்' என்று கொள்வது பொருத்தமுடையதன்று. 'முனிமொழி முப்பது' என்ற ஒரு நூல் 1940இல் வெளியாகியிருக்கிறது. அது மிக வும் பிற்காலத்து நூல்; இவ்வரிசையில் சேர்க்கும் தகுதியுடையதன்று.

நூலின் பெயரே சிறப்புடையது. நல்வழி மக்களை நன்னெறிப்படுத்த வல்லது என்ற பொருளுக்கேற்ப, நூல் முழுமையும் ஆன்மார்த்த நெறிக்குரியதாய் அமைந்துள்ளது. நல்வழியின் பாடல்கள் பல சிறப்புடையன. இட்டார் இடாதார் எனச் சாதி இரண்டே என்பது மிகவும் சிறப்பு (2) அப்படியே முப்பதாமாண்டளவில் உள்ளத்துறவு பூணவேண்டும் என்று கூறும் பாடலும் (39). எல்லாப் பாடல்களும் எளிய சொற்களால் மிக்க பொருள் பொதியுமாறு உவமை நயங்கள் சிறக்கப் பாடப்பட்டவை. சில பாடல்கள் மிக்க வன்மை பொருந்திய சொற்களாலானவை. உடம்பு புழுமலி நோய்ப் புன்குரம்பை, மாண்டார் வருவரோ, வயிறு பற்றிய இரு பாடல்கள், மானம் அழியாது உயிர்விடுகை, இடாதார், பணம், மன்று ஓரம் சொன்னார், அதிகச் செலவு என்ற பாடல்கள் காண்க. உலகர், நெஞ்சு, வயிறு, பெண் ஆகியோரை முன்னிலைப்படுத்திச் சில பாடல்கள் உரைக்கும்; ஒன்று மட்டும் வேந்தே என்று கூறுகிறது.

13ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் மீது (1178 - 1218) பாடப்பெற்ற குலோத்துங்க சோழன் கோவை நல்வழிப் பாட்டொன்றைக் குறிப்பிடுவது, இங்கு கருதத்தக்கது. கோவை 17ஆம் செய்யுளின் தொடக்கம் பின் வருவது:

இட்டார் எப்போதும் இடுவார்; இடார் என்றும் இட்டுண்கிலார்;
பட்டாங்கி லுள்ள படியிதன்றோ?

இதனோடு பின்வரும் நல்வழிப் பாடலை ஒப்பு நோக்குக:

– மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

கருத்தில் மாறுதல் இருப்பினும், சொற்றொடர் ஒப்புமைகளால் கோவையானது நல்வழிப் பாடலைத் தழுவியது என்பது தெளிவு. இது, நல்வழி செய்த அவ்வையார் 12ஆம் நூற்றாண்டினர் என்ற கருத்துக்கு ஆதரவு தருகிறது.

அறநெறிச்சாரம் என்ற சைனசமய ஒழுக்க நூலின் பாடலொன்று நல்வழியை அப்படியே தழுவியிருப்பது இங்கு கருதத் தக்கது:

ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்,
இரு நாளைக்கு ஏலென்றால் ஏலாய், – ஒரு நாளும்
என்நோ அறியாய், இடும்பை கூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது.

என்பது நல்வழி. அறநெறிச்சாரம் 159ஆம் பாடலை இதனுடன் ஒப்பு நோக்குக:

ஒரு நாளும் நீதரியாய், உண் என்று சொல்லி
இரு நாளைக் கீந்தாலும் ஏலாய், – திருவாளா!
உன்னோடு உறுதி பெரிது எனினும், இவ்வுடம்பே!
நின்னோடு வாழ்தல் அரிது.

இந்த ஒப்புமை பற்றி அறநெறிச்சாரமும் நல்வழி பாடிய அவ்வையாரின் காலமாகிய 12ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்று கருதலாம்.*

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்ற நல்வழித் தொடர் (28), புறநானூறு 189ஆம் பாடலில் வரும் 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்பதை எடுத்தமைத்தது. நல்வழியின் 13ஆம் பாடல் கருத்தும் சொல்லமைதியும், சேரமான் பெருமாளுடைய பொன் வண்ணத்தந்தாதியின் 84ஆம் பாடலைக் கொண்டமைந்தன:

ஆவாரை யாரே அழிப்பர்? அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்? – ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய்யம் புவியதன் மேல்.

என்பது நல்வழிப் பாடல். அந்தாதிப் பாடல் தொடக்கம் பின் வருவது:

ஆவன யாரே அழிக்கவல் லார் அமையா உலகில்
போவன யாரே பொதியகிற்பார்?

மரியாதை, மகிதலம், போவிப்பம், பணம், மானிடன், அனுபவிப்பார் முதலான சொற் பிரயோகங்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

மூதுரை போலவே, நல்வழியிலும், மிகைப் பாடல்கள் ஏடுகளில் காணப்படுகின்றன. பின்வருவது ஒரு பாட்டு:

---

* இதன் விரிவை, எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டில் பார்க்க.

எல்லா மலைகளிலும் இல்லை இருமணிகள்,
நல்லோர் களுமில்லை நாடுதொறும், – கொல்யானைக்
கோடுதொறு மில்லை குளிர்முத்தம், சந்தனமும்
காடுதொறு மில்லையாம் காண்.

*மூதுரை நல்வழி இருநூல்களையும் ஒரு சேர நோக்கும் போது, மூதுரை உலகியல் நீதிகளான அறவொழுக்கத்தைக் கூறு வதென்றும், நல்வழி சமய நீதிகளான ஆன்ம வொழுக்கத்தைக் கூறுவதென்றும் நன்கறியலாம்.*

## பதிப்பு

*ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்ற நான்கு நூல்களும் எத்தனை முறைதான் அச்சிடப்பட்டுள்ளன என்பதற்கு எல்லையே சொல்ல முடியாது. இந்த நூற்றாண்டின் முதல் கால் பகுதிக் காலம் இந்நான்கும் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் மனப்பாடம் செய்து உரையோடு ஒப்புவிக்கும் பழக்கம் தமிழ்நாடெங்கும் இருந்து வந்தது; ஆத்திசூடி - முதல் வகுப்பு; கொன்றை வேந்தன் - இரண்டாம் வகுப்பு; வெற்றி வேற்கை - மூன்றாம் வகுப்பு; மூதுரை - நான்காம் வகுப்பு; நல்வழி (நன்னெறியுடன்) - ஐந்தாம் வகுப்பு. அந்த நிலைமை யின் தேவைகளையொட்டி, பலரும் இந்நூல்களை உரையுடன் அச்சிட்டார்கள்.*

*சிறப்பான ஆராய்ச்சிப் பதிப்பு - கா. நமசிவாய முதலியார். பழைய உரைகளோடு புதிய உரையும் எழுதி வெளியிட்டது: ஆத்திசூடி, கொன்றைவேந்தன் 1930; மூதுரை நல்வழி, புதிய உரை மட்டும் 1931;*

*வேறு பதிப்புக்களில் சிறப்பானவை ஆறுமுக நாவலர் உரைப்பதிப்பு, வேங்கடசாமி நாட்டார் உரைப்பதிப்பு. எஸ். ராஜம் மூலப்பதிப்பு 1959 (நீதிக் களஞ்சியம்). சுகாத்தியன் மொழி பெயர்ப்பு முன்னமே குறிப்பிட்டோம். டி.பி. கிருஷ்ணசாமி முதலியார் பத்து நீதிநூல்கள் ஆங்கில மொழிபெயர்ப்புடன் 1937; இதனுள் இந்நான்குடன் உலகநீதி, வெற்றிவேற்கை, நன்னெறி, நீதிநெறி விளக்கம், நீதி வெண்பா, அறநெறிச்சாரம் என்ற ஆறும் உள்ளன.*

## அசதிக் கோவை

*நாம் கருதுகின்ற அவ்வையார் பாடிய நூல்களில் ஒன்று என்று திட்டமாய்க் கொள்ளத்தக்கது அசதிக்கோவை. இது*

பற்றிய வரலாற்றைப் பின்வருமாறு சுருக்கமாய்க் கூறலாம். ஒரு சமயம் அவ்வையார் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந் தார். பசியாலும் வழிநடந்த வருத்தத்தாலும் மிகவும் சோர்ந்து போனார். இவர் சோர்ந்திருந்த நிலையைப் பக்கத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஓர் ஆட்டிடையன் கவனித்தான். 'பாட்டி, என்னிடத்தில் கலயத்தில் கொஞ்சம் பழங்கஞ்சி இருக் கிறது; அதைச் சிறிது குடித்துக் களைப்பைப் போக்கிக் கொள் வாயாக' என்று சொல்லிக் கலயத்தை நீட்டினான். இவரும் அதை வாங்கி உண்டு பசியாறினார். அவன் ஏழையாயிருந்த போதிலும், அன்போடு தமக்குச் செய்த உதவியைப் பெரிதும் பாராட்டினார். இவர் உண்ண, அவன் பட்டினி கிடக்க நேர்ந் தது. அவனைப் புகழ்ந்து பாடிச் சிறப்பிக்க வேண்டும் என்று நன்றி நிறைந்த இவருடைய கவிதையுள்ளம் கருதிற்று.

"அப்பா உன் பெயர் என்ன?" என்று கேட்டார். அவனோ, "அசதியாக இருக்கிறது" என்று சொன்னான்.

இப்படியும் ஒருவன் தன் பெயரை மறந்த பேதையாக இருப்பானா என்று எண்ணிய அவ்வை, "சரி, போகட்டும், உன் ஊரையாவது சொல்" என்று கேட்டார். அதையும் மறந்த அவ்விடையன் 'ஊர் பெயரும் மறந்து விட்டது' என்றான். 'அப்படியானால் உன் வீட்டுக்கு அடையாளமாவது சொல்' என்று மீட்டும் அவ்வையார் கேட்க, அவன் 'எங்கள் குடிசைக் கூரையில் ஐவேலி படர்ந்திருக்கும்' என்று சொன்னான்.

கேட்ட அவ்வையார், 'இப்படியும் ஓர் அசடன் உண்டா!' என்று அதிசயிருத்தவராய், ஐவேல் அசதி என்று பெயர்களைப் பொருத்தி அவன் மீது அசதிக்கோவை என்ற ஓர் அரிய பிரபந்தம் பாடினார். இது சிறந்த இலக்கியச் சுவை பொருந்திய கதை என்பதில் ஐயமில்லை; உண்மையா என்பது வேறு.

இது பழமையாகப் பலரும் கூறி வருகின்ற வரலாறு. ஆனால் இக்கோவைப் பிரபந்தம் இதுவரைக் கிடைத்ததாகத் தெரியவில்லை. எனினும், சில பாடல்கள் மட்டும் ஆங்காங்கு புலவர்களால் சொல்லப்பட்டு வருகின்றன. சிவஞான சுவாமி கள் தாம் பாடிய சோமேசர் முதுமொழி வெண்பாவில்,

> பன்னும் அசதியன்பு பாராட்டிக் கோவைநூல்
> சொன்னாளே அவ்வைமுன்பு சோமேசா –

என்று பாடுகிறார். கொங்கு மண்டல சதகம் 45ஆம் பாடல். அசதி வாழ்ந்த ஐவேலி கொங்கு மண்டலத்தில் உள்ளது என்று குறிப்பிடும்.

தெய்வீகமான தமிழ்ப்புல வோர்கள் தினமுளங்கொள்
பொய்தீ ருரையெம் பிராட்டியார் அவ்வை புனைந்துபுகழ்
செய்கோவை யேற்ற திறலோன் அசதி செழித்துவளர்
மைதாழ் பொழில்திகழ் ஐவேலி யுங்கொங்கு மண்டலமே.

இதன் பதிப்பாளர் வரலாறு கூறுமிடத்து, ஐவேலி என்ற ஊர் சங்ககிரிதுர்க்கத்துக்கு அருகிலுள்ளது, அசதி அவ்வூரிலிருந்த ஓர் பிரபு என்றும், இவன் அவ்வைக்குப் பொன்னிலையிட்டு உபசரித்தான் என்று குறிப்பிட்டுப் பின்வரும் நந்தமண்டல சதகப் பாடலை* மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார்:

ஐவே லசதி இரவினில் அவ்வைக் கமுதளித்து
மெய்வேதம் போனிற்குங் கோவை கொண்டோன்றவழ்புவிமீதிற்
செய்வோன் தனிலும் பசுக்காவன் மிக்கெனச் செய்யுமன்பன்
மைவேலை வண்ணன் அசதியும் வாழ்நந்த மண்டலமே.

இவற்றால், அசதியில் செல்வநிலை இருவகையாகக் கூறப் படினும், அப்பெயரால் சுட்டத்தக்கவன் ஒருவன் இருந்தான் என்றும், அவன் மீது அவ்வையார் ஓர் கோவை பாடினார் என் றும், மிகப் பழங்காலம் தொடங்கியே' வரலாறுகள் இருந்தன என்று அறிகிறோம்.

அசதிக்கோவை மிகவும் சிறப்பான இலக்கிய நயம் பொருந்திய நூல் என்பதில் ஐயமில்லை. அவ்வையாருடைய பெரும்புலமைக்குச் சான்றாகவே இந்நூல் உள்ளது. பின்வரும் நான்கு பாடல்களையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

அற்றாரைத் தாங்கிய ஐவே லசதி அணிவரைமேல்
முற்றா முகிழ்முலை எவ்வாறு சென்றளள்? முத்தமிழ்நூல்
கற்றார்ப் பிரிவும், கல் லாதவர் ஈட்டமும், கைப் பொருள்கள்
அற்றார் இளமையும் போலே கொதிக்கும் அருஞ்சுரமே.

---

* நந்தமண்டல சதகம் மிகவும் சமீப காலத்தில் செய்யப்பெற்ற நூல். ஆசிரியர் மாதுருபூதமையர், உரைகாரர் ப. திருவேங்கடம்பிள்ளை. மாயூரம் தாலுக்காவில் உள்ள ஐவநல்லூரே இவ்வூர் என்று சொல லவும் கேட்டிருக்கிறோம்.

அருஞ்சஞ் சலங்கொண்ட ஐவே லசதி அகல்வரையின்
இருஞ்சஞ் சலஞ்சொல்ல வேண்டுங் கொலோஎன தன்னைமொழி
தருஞ்சஞ் சலமுந்தனி வைத்துப் போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந் தேனொரு பெண்பிறந்தே.

அறங்காட் டியகரத் தைவேல் அசதி அகன்சிலம்பில்
நிறங்காட்டுங் கஞ்சத் திருவனை யீர்,முக நீண்டகுமிழ்த்
திறங்காட்டும் வேலுஞ்சிலையுங் கொல்யானையுந் தேருங்கொண்டு
புறங்காட்ட வுந்தகு மோ,சிலைக் காமன்தன் பூசலிலே.

ஆடுங் கடைமணி ஐவேல் அசதி யணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி யாள்தந்த ஆசை நிகழ்த்தரிதால்;
கோடுங் குளமுங் குளத்தரு கேநிற்குங் குன்றுகளுங்
காடுஞ் செடியும் அவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.

*இவை அசதிக் கோவைக்குரியன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவையன்றி மேலும் சில பாடல்கள் தனிச் செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு முதலிய தொகுப்புக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. நிச்சயமாக இவைபற்றிச் சொல்ல முடியாவிடினும், இப்பாடல்கள் யாவும் ஒருசேரக் கிடைப்பது அரிதாகையால், இங்கு இவற்றை ஒருசேரத் தந்திருக்கிறோம்:*

அலைகொண்ட வேற்கரத் தைவேல் அசதி அணிவரைமேல்
நிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்கு தோற்றிள நீரினங்கள்
குலையுண் டிடியுண்டென் கையினி லெற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர் ததும்பவும் வெட்டுண்டவே.

அழற்கட்டுக் கட்டிய ஐவேல் அசதி அணிவரையின்
மழைக்கட்டுக் கட்டிய மாளிகை மேலொரு மங்கைநல்லாள்
உழக்கிட் டுரியிட்டு முவ்வுழக் கிட்டுரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துடன் அங்ஙனின் றேமயிர் கோதினளே.

ஆலவட் டப்பிறை ஐவேல் அசதி அணிவரைமேல்
நீலவட்டக் கண்கள் நேரொக்கும் போதந்த நேரிழையாள்
மாலைவிட்டுச் சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட் டுக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே.

ஆரா யிரங் கொண்ட ஐவேல் அசதி அகன்கிரியில்
நீராடப் போகும் நெறிதனி லே அந்தி நேரத்திலே
சீரானகுங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொருபெண்
போராள், பிடிபிடி யென்றே நிலாவும் புறப்பட்டதே.

ஆய்ப்பாடி யாயர்தம் ஐவேல் அசதி அணிவரையில்
கோப்பா மிவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக் கோடிரண்டும்
சீப்பாய் சிணுக்கரி யாய்,சிமி ழாய்,சின்ன மோதிரமாய்
காப்பாய், சதுரங்க மாய்,பல்லக் காகிக் கடைப்பட்டவே.

ஆதித்த னைக்கண் டரவந் தொடஅந் நகரினுள்ளார்
பாலித்த முத்தும் பவழந் தொட்டார், இந்தப் பைந்தொடியாள்
சேனைத்தலைவனைச் செங்கோல் அசதியைச் சேர்ந்தொருநாள்
கூடித் தழுவுவம் என்றுதொட் டாள்தன் குவிமுலையே.

*இறுதிப்பாடல் கொங்கு மண்டல சதகவுரை மேற்கோளாக மட்டும் வந்துள்ளது. எதுகை யாப்பிலக்கண முறைப்படி அமையவில்லை. சேனைத்தலைவன் செங்கோல் அசதி என்று இங்கு சொல்லப்பட்டமையால், இவன் இத்தகுதிகளைப் பெற்றவன் என்பது பதிப்பாளர் குறிப்பு. இதற்கு நியாயமில்லை; ஏனெனில் ஒன்றுமில்லாதவனை இந்த நிலைக்கு உயர்த்த எண்ணி அவ்வை பாடியமையால், இவ்வாறு புகழ்ந்தார்; அவர் வாக்குப் பலிக்குமாகையால்.*

*இங்கு ஒரு குறிப்புக் கூறத்தகும். அசதிபற்றிக் கிடைத்த பத்துப் பாடல்களின் முதலெழுத்தும், அவன் பெயரின் முதலெழுத்தோடு மோனையாகவுள்ளன. இங்ஙனம் பாடப் பட்ட பொருட் பெயரின் முதலெழுத்துடன் மோனையமைத்துப் பாடுவது ஒரு மரபு போலும். சம்பந்தர் தேவாரத்துள் திரு முக்கால் என்ற பதிகங்கள் காண்க. (விருத்தாசலம் அமுத மொழி - சிவப்பிரகாசம் பிள்ளை என்ற தமிழ்ப் புலவர் அசதிக் கோவை ஏடு தம்மிடம் உள்ளதென்றும் அதை அச்சிடப் போவதாயும் தெரிவித்ததுண்டு.)*

### *பந்தனந்தாதி*

*அவ்வையார் பாடியதாக வழங்குகின்ற பல சிறு பிரபந்தங் களில் ஒன்று. காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த ஆயிர வைசியர் மரபில் உதித்த நாகந்தை புதல்வன் பந்தனைப் புகழ்வது. இந்நூல் புஷ்பரதச் செட்டியார் பதிப்பாக 1890இல் அச்சாயிற்று. அப் பதிப்பில் விரிவான பந்தன் வரலாறும் கூறப்பெற்றுள்ளது. இவன் வாணிகம் செய்தபோது நாகலோகம் அடைந்து, நாக ராசனிடம் பொருட் செல்வமும், போர்த்தால் இளமை மாறா திருக்கச் செய்யும் பொற்படாம் ஒன்றும், நீடூழி காலம் உயிர் வாழ்ந்திருக்கச் செய்யும் நெல்லிக்கனி யொன்றும் பெற்று*

வந்தான் என்றும், நெல்லிக்கனியில் பாதியைத் தன் நாட்டு அரசனுக்கும் மறு பாதியையும் பொற்படாத்தையும் அவ்வை யாருக்கும் கொடுத்து, அவ்வையாரிடம் நவமணிமாலையும் அந்தாதியும் பாடப்பெற்றானென்றும் வரலாறு கூறும். அந்தாதி நூல், காப்பும் 100 வெண்பாவும் கொண்டது. நூலின் நடையும் பொருளும் அவ்வை வாக்காகத் தோற்றவில்லை. பிற்காலத்தில் ஆயிர வைசியரைச் சிறப்பிக்கவென்றே இது பாடப்பெற்றது. ஆயிர வைசியரின் தசாங்கங்கள் இதனுள் பல இடத்தில் சொல்லப் பட்டுள்ளமை காணலாம். மேலும், இப்பந்தன் அவ்வையாருக்கு நெல்லிக் கனியும் பொற்படாமும் ஈந்து அருள் செய்தான் என்ற வரலாறு பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. பின்வரும் பாடல்களைக் காணலாம்:

போர்த்தபடா மாநாகன் நாகபதி புக்கதற்பின்
வாய்த்தபெருங் கீர்த்திபெற்ற வாழ்வணிகன் – ஏத்தரிய
நற்கவிசொல் அவ்வைக் கருள்புரிந்த நாகந்தை
மற்பொலி தோட் பந்தன் வலி. 15

நானவ்வை யென்றிரங்கி வாழ்த்தினேன், மற்றவனும்
ஏனவ்வை யேயென் றிறைஞ்சினான், – நானுங்கேள்:
மன்னும் புகார்வணிகன் மாநாகன் பந்தனெனும்
பொன்னைச்சே மித்தேன் பொதிந்து. 22

இப்பாரிடத்தில் இயல்வணிகன் பந்தனைப்போல்
ஒப்பாரே சொல்லீர், உலகுதனின்: – மெய்ப்புலவர்
நெல்லிக் கனியளித்த நீள்கவிகைக் கோமானென்
சொல்லுக் கவனே துரை. 34

கூடற்றமிழ்ச் சங்கம் கொண்டாடும் கோவணிகன்
மாடப் புகார்நீடு மாநாகன், – தேடுபுகழ்ப்
பொற்படாம் ஈந்தான் எனக்குப் புகல்பந்தன்,
சொற்படா நாவன்றோ சொல். 69

இவற்றால், பின்வந்தோர் ஒருவர், அவ்வை பற்றிய கதைகளெல் லாம் கேட்டறிந்து, பந்தன்மீது இந்த அந்தாதி பாடியபோது, அவ்வை பற்றிய குறிப்பையும் இதனுள் சேர்த்துக் கொண்டார் என்று நாம் கருதவேண்டும். நெல்லிக்கனியும் பொற்படாமும் இங்கு சொல்லப்பட்டுள்ளன. ஆயிர வைசியர் இந்நூலின் 32, 74 முதலான பாடல்களில் சொல்லப்பட்டுள்ளனர். ஆயிர வைசியர்

என்ற வழக்கு மிகவும் பிற்காலத்தது. துரை போன்ற சொல் வழக்குகளும் (நூ. 15) இந்நூல் பிற்காலம் என்றே தெரிவிக்கும். 17 - 18 நூற்றாண்டு என்று கருதலாம். இக்காலத்தில் மற்றுமோர் அவ்வையார் வாழ்ந்தார், இவர் ஒருகால் ஆயிர வைசிய மரபினர், தம் மரபின் வள்ளல் பந்தனைப் புகழ்ந்து புனைந்துரையாகப் பழங்கதைகளையும் சேர்த்துக் கொண்டார் என்று கருதுவது பிழையாகாது.

சாதி பற்றிய பெருமைகளைக் கூறும் புராணங்கள் பிர பந்தங்கள் போன்றவை 17-18 நூற்றாண்டில் தோன்றின. செங்குந்தர், சீர்கருணர், ஆயிர வைசியர், விசுவகர்மர், வன்னியர், சான்றார் போன்றார் பெருமையைக் கூறி நூல்கள் எழுந்தன. இப்பந் தனந்தாதியும் அக்காலத்துக்குரிய நூலாகும். ஆதலால் இதற்கும் அவ்வையார் வரலாற்றுக்கும் யாதோர் இயையும் இல்லை. அவ் வையைச் சம்பந்தப்படுத்துவது எல்லாம் பிற்காலத்துப் புனைந் துரையாகும். பந்தனந்தாதி போலவே நவமணி மாலையும் புனைந் துரையே; நூலும் இல்லை. இப்பந்தனந்தாதியை ஓர் அவ்வை யார் பாடினார் என்பது உண்மையானால், இவர் முன்னமே கருதிய நால்வரும் அல்லாமல் பின்னர் அதே பெயரைச் சூட்டப் பெற்று வாழ்ந்த ஒருவர் எனக் கொள்ளவேண்டும்.

**காலம்**

காலம் என்று தனியே கூறும் அவசியம் இல்லை. இக்கட்டுரை யில் ஆறு அவ்வையைப் பற்றிப் பேசினோம். நூல்கள் செய்த சிறப்பான அவ்வை 12ஆம் நூற்றாண்டு சோழர் கால அவ்வை என்று திட்டமாகப் பலவிடத்தும் உறுதி செய்திருக்கிறோம்.

**முடிவுரை**

கல்வியில்லாத தமிழ் மக்களும் நன்கறிந்த தமிழ்ப் புலவர் பெயர்களில் அவ்வையார் பெயரும் ஒன்று. இப்பெயரால் விளங்கும் கதைகளை விலக்கிவிட்டு நாம் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் தோன்றிய தவப்புலவர்களில் இவரும் ஒருவர் என்று காண்கிறோம். அவ்வையார் பலர் இருப்பினும், அனை வரும் சைவ சமயத்தினரே. நாம் கருதுகின்ற நூற்றாண்டுக்குரிய அவ்வையார் மிகவும் அழுத்தமான சமயப் பற்றுக் கொண்டவர். எனினும், மிகுந்த சமயப் பொறையோடு திருமாலுக்கு அடிமை செய் என்றும் இவர் உபதேசிப்பதையும் கண்டோம். இவருடைய நீதி வாக்கியங்களில் சமயமும் உலக நீதியும் இழைந்து வரு

கின்றன. இது இவருடைய பெருஞ்சிறப்பு. இவர் கூறும் நீதிகள் ஒரு தலைமுறைக்கு முன் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆண் பெண் வேற்றுமையின்றி, மனப்பாடமாகி அவரவர் வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்திருக்கின்றன. நமது துர்ப்பாக்கியம் இக் காலத்தில் அவ்வையார் நீதி நூல்கள் பள்ளியில் இடம்பெற வில்லை. இதைச் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் தமிழ்நாட்டின் கல்விச் சாதனை என்று சொல்வதா? புதிய பாடல்களும், புதிய ஒழுக்கமும் இடம்பெற்று, பழமையான நல்ல பாடத்தையும் நல்லொழுக்கத்தையும் விலக்கிவிட்டன. பள்ளி வாழ்க்கையில் மட்டுமின்றி, பொது வாழ்விலும், நல்லொழுக்கமும் பண்பாடும் இறை உணர்வும் சமூக நலனும் அத்தமித்து விட்டன. மீண்டும் இவை உதயமாவதற்கு நாம் குழந்தைப் பருவத்திலிருந்தே அவ்வையின் உபதேசத்துக்கு அதிகம் இடம் கொடுத்தால், ஒருகால் பலன் ஏற்படும்.

இவர் செய்த நீதி நூல்களன்றி தனிப்பாடல் தொடர்களும் மிகச்சிறந்த பழமொழி போல மக்கள் நாவில் இன்னும் வழங்கு கின்றன. பாரம் அவனுக்கு, சித்திரமும் கைப்பழக்கம், தயையும் கொடையும் பிறவிக்குணம், சொல்லாமலே பெரியவர் செய்வர், கற்றது கைம்மண் அளவு, தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிது, நிற்பது அரிது என்பது காண்க. இரண்டு மூன்று சொற் களால் உலக முழுமைக்கும் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய பெருநீதிகளை உள்ளத்தில் தைக்குமாறு எடுத்துச் சொல்வது இவருக்கு மட்டுமே உரிய தனிப்பெருஞ் சிறப்பு.

### ஆராய்ச்சி நூல்கள்

அவ்வையார் வரலாற்றை எழுதினோர் எண்ணிறந்தோர். எனினும், அவர்களுள் வரலாற்றுணர்வுக்குப் பயன்படுமாறு எழுதினோரும் ஆராய்ந்தோரும் மிகச் சிலரே. இருப்பினும் பின்வரும் நூல்களைக் குறிப்பிடுகிறோம்.

1. விநோதரச மஞ்சரி: இதனுள் அவ்வை சரித்திரத்தை வீரா சாமிச் செட்டியார் எழுதவில்லை, அதுபின்னரே சேர்க்கப் பட்டது.
2. முன்கூறியது: ரிப்பன் பிரஸ், அவ்வை சரித்திரம்.
3. பன்னிரு புலவர் சரித்திர சார சங்கிரகம்: வி. கிருஷ்ணமா சாரியர்; இது பழைய நூல் என்பதொன்றே சொல்லத்தக்கது. இதனுள் ஆசிரியர், அவ்வை நீதி நூல்களின் சிறப்பைச் சிறிது எடுத்துக்காட்டியிருக்கிறார்.

4. *புலவர் புராணம்: தண்டபாணி சுவாமிகள். இது புராணமே யன்றி வரலாறோ ஆராய்ச்சியோ அன்று; 128 பாடல்கள்.*

5. *தமிழ் நாவலர் சரிதை.*

6. *அவ்வையார் ; அனவரத விநாயகம் பிள்ளை, 1919. இந் நூலின் இறுதியில் இவ்வாசிரியருடைய வழக்கம்போல் சிறப்பான உதவி நூல்பட்டியல் தந்திருக்கிறார்.*

7. *ஔவை. சு. துரைசாமி பிள்ளை: சைவ இலக்கிய வரலாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1958. இறுதி இரண்டும் ஆராய்ச்சி நூல்கள். இவற்றுள் அனவரத விநாயகம்பிள்ளை யின் நூல் மிக்க சிறப்புடையது.*

**பாடல் தொகுப்புகள் :**

*1. தனிப்பாடல் திரட்டு உரை முதல்பாகம்.*

*2 - 3 தனிச் செய்யுட் சிந்தாமணி கருப்பையாப் பாவலர் பதிப்பு. மு. ரா. கந்தசாமிக் கவிராயர் பதிப்பு.*

*4. பெருந்தொகை, மு. இராகவையங்கார் 1936.*

## குறிப்பு

1. *யாப்பருங்கலம் செய்யுளியல் இறுதிச் சூத்திர உரையில் (93) விருத்தியுரைகாரர், அவ்வையார் செய்யுள் என்று பின்வரும் பாடலைத் தருகிறார்:*

**உடையராய்ச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்;**
**முடவராய்க் கோலூன்றிச் சென்றக்கால், சுற்றம்**
**உடையவனும் வேறு படும்.**

*இப்பாடல் யாப்பருங்கல விருத்தியின் காலமாகிய பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதில் ஐயமில்லை; இது ஆரிடப்போலி, ஆரிடவாசகம் என்பது அவ்வுரை. ஒருகால் இப்பாடல் சங்ககால அவ்வை பாடலாயிருக்கலாம்.*

*பிற்காலத்தில், இம்மூன்று வரிகளோடு 'உடைமையறா தீட்டல் உறுதுணையாம் யாண்டும்' என்ற சொற்களை முதலடி யாகப் பெய்து, இப்பாடல் இன்னிலை என்ற நூலில் 13ஆம் பாட லாகக் காட்டப்பட்டது. இருபதாம் நூற்றாண்டுப் புதுமை.*

2. *புல்வேளூர்ப்பூதன் உண்மையாகவே வாழ்ந்த ஒரு வள்ளல் என்பதைப் பின்னே 8ஆம் அத்தியாயத்தில் வீரசோழிய வுரையாராய்ச்சியில் காணலாம். ஊர்ப்பெயர் புள்வேளூர் என்றே இருக்கத்தக்கது.*

3. தீவினை நிகழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக, ஞானாமிர்தம் 40ஆம் பாடல் பலகதைகளைச் சொல்கிறது. தக்கன்; இந்திரசித்து, யாளி, வரருசி ஆகிய இருடிகள்; சயத்திரதன், சனமேசயன், நகுடன் முதலானோர் கதைகள். இவர்கள் கதைகள் யாவும் வடமொழி நூல்களில் உள்ளவை. இவற்றுள் யாளி பற்றிய பகுதி:

**யாளி,**
**கூவற் றூண்டிய காதற் காசனி**
**ஆதிப் புலைச்சி யாகி, மேதினி**
**இன்னிசை எழுவர்ப் பயந்தோன்.**

என்பது. எழுவர் என்ற மாத்திரத்தில், இவர் அவ்வை முதலான எழுவர் என்று சொல்வது. 'இடையிலே யாரோ செருகிவிட்ட பொய்யுரை' என்பது ஔவை. துரைசாமிப் பிள்ளை குறிப்பு (ஞானாமிர்தப் பதிப்பு, பக்கம் 253); யோகநந்தன் முதலிய எழுவர் என்று உரை கூறும். இந்த யாளியே யாளிதத்தன் என்ற பிராமணன், அவ்வை முதலியோருக்குத் தந்தை என்பதெல் லாம் பொய்யுரை.

4. வாக்குண்டாம்: அவ்வையார் தம் பாடலின் பொருட் சிறப் பால் வழி மோனையில் அதிகக் கவனம் செலுத்தவில்லை என்று தெரிகிறது. இந்நூலின் 30 பாடல்களில் 12 இன் இறுதியடியில் மோனை இல்லை. நல்வழியின் 40 பாடல் களிலும் மோனை காணப்படுகிறது.

இந்நூலின் 13ஆம் பாடலில், அவை நடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம் என்ற இடத்து, வாசியா நின்றான் - வாசிக்க மாட்டாமல் நின்றவன் என்றே அனைவரும் உரை எழுதியிருக்கிறார்கள். இதுபிழை என்று தோன்றுகிறது. ஆநின்று - நிகழ்காலம் காட்டும் இடை நிலை. வாசிக்கின்றான், ஆனால் வாசித்ததன் குறிப்பு உணராமல் இருக்கிறான் என்பதே பொருள்.* குறிப்பறிதல் என்பது வாழ்க்கை யிலும் இலக்கிய உணர்விலும் மிக்க சிறப்புடையது. குறளில் இத்தலைப்பில் இரண்டு அதிகாரங்களைக் காணலாம்.

○○○

* 'புத்தகமும் வித்தகமும்' என்ற எமது கட்டுரை நூலில் இதன் விரிவைக் காணலாம்.

## சொல்லாட்சியும் பொருளும்


அகளங்கள் 87
அப்பாலும் அடிச்சார்ந்தார் 244
அபயன் 4
அமுதுபடையல் 247
அருத்த ஞானம் 232,234
அலகை விநோதம் 17
அவ்வை 346
அவதாரம் 198
அற்புதத் திருவந்தாதி 225
அனபாயன் 73
ஆத்தி சூடி 391
இசை 204
இணக்கம் 384
இயல் 182
உபய குலோத்தமன் 25
எதிர் நூல் 334
எதிரம்பலம் 88
எற்று 379
ஐயர் 195
ஒட்டக்கூத்தர் 255
ஒட்டம் 260
கடைதிறப்பு 20
கண்டன் 86
கந்தி 346
கலிங்கம் 24
கவ்வை 346
காஞ்சி 51
காளக்கவி 270
குடியான் 51
குலோத்துங்கன் 25
கொன்றை வேந்தன் 385
கோடிப்பாடல் 372
கௌடப் புலவர் 269
சிவலிங்கம் 148
சுட்ட பழம் 366
சேர்க்கை 384
சேவையர் 71
தருமன் 14
தாழிசை 16
திருக்களிற்றுப்படி 162
திருக்காமக் கோட்டம் 203
திருநீற்றுச் சோழன் 242
திருவாசகம் 198
துமி 46
துருக்கர் 49
நாயனார் 196
பட்டோலை 262
பரணி 18

பற்கு உறைவு 184
பனவப் பேய் 41
பாட்டி 345
பாடினி 345
பாணிச்சி 345
பிரபந்தம் 12
பெரிய புராணம் 115
பையவே 137
போதம் 14
மதவாரணம் 48
மாக்கதை 103
மாகேசுவரர் 246
மாதேவடிகள் 96
முடுகு 16
மூத்த திருப்பதிகம் 225
மெல்வினை 239
வடசொற் பெயர்கள் 318
வல்வினை 243
வள்ளல் 196
வீரட்டம் 308
வெள்ளி 110
வெள்ளியார் 110

○○○

# மேற்கோள் செய்யுள் அகராதி


| | |
|---|---|
| அகிலவெற்பும் | 38 |
| அஞ்சொல் | 375 |
| அட்டாலும் | 392 |
| அடிக்கழுத்தி | 36, 40 |
| அடியவர் | 104 |
| அடைய | 158 |
| அடையென்பார் | 269 |
| அண்டவாணர் | 71 |
| அண்ணலார் | 154 |
| அணியிருங் | 346 |
| அத்தர்வே | 108 |
| அந்தமெய்ப் | 105 |
| அந்நகரில் | 80 |
| அப்பர்எழுந் | 210 |
| அம்பொற்கொ | 247, 296 |
| அரகர | 247 |
| அரசுகொள் | 126 |
| அரனென்ற | 386 |
| அரியதுகேட் | 367 |
| அருக்கன் | 152 |
| அருஞ்சஞ்சல | 402 |
| அருட்பெருகு | 157 |
| அருமறைஒத்து | 7 |
| அருள்பொழி | 190 |
| அருளார்கருங் | 209 |
| அருட்பொழியு | 159 |
| அல்லற்பவ | 193 |
| அலர்மழையும் | 25 |
| அலைகொண்ட | 402 |
| அவ்வைபாட | 359 |
| அவகதையாய் | 69 |
| அவதிஇல்லா | 41 |
| அவனிபர்க்கு | 25 |
| அவனுடைய | 159 |
| அவிக்காதரம் | 31 |
| அழற்கட்டு | 402 |
| அளவில்இன்ப | 155 |
| அளவில்சனம் | 189 |
| அளிக்குலங்கள் | 189 |
| அற்றதோள் | 36 |
| அற்றாரைத் | 401 |
| அறங்காட் | 402 |
| அன்றுகவிக்கு | 302 |
| அன்றையிலும் | 262 |
| அன்னதொல் | 79 |
| அனகதானம் | 50 |
| ஆக்கம்பெரு | 303, 317 |
| ஆக்கியபின் | 105 |

ஆங்கவர் 159,200
ஆடுங்கடைமணி 402
ஆடுங்கடைமணிநா 264
ஆடுமயில் 205
ஆடுவதும் 59
ஆதிஅனாதி 393
ஆதித்தனை 403
ஆய்ப்பாடி 403
ஆயஇசை 205
ஆயநானில 179
ஆயன்பதி 356
ஆயிரம்யானை 18
ஆரங்கண்டி 109
ஆரம் இவை 50
ஆரவார இலக் 337
ஆராயிரங் 402
ஆரேயெனு 267
ஆலவட்ட 402
ஆலைப்பலா 377
ஆவதென் 181
ஆவிவெந்து 314
ஆனிரைகள் 205
இங்கிதன் 102
இடம்படவீடு 382
இடரினும் 236
இடியுற்றெழும் 192
இடுக்கட்புண் 260
இணக்கம் இல் 42
இத்தன்மை 163,220
இத்தன்மையர் 145
இந்த உரற் 47
இப்பாரிடத் 404
இருதொடை 53
இருந்தவத்தோர் 135
இருள்தீர்மணி 374
இலங்கைஎறி 51
இலைபடர்ந்த 229
இவ்வாறு 206
இவர்கள்மேல் 53
இவையும் 50
இறைவாழி 313
இன்றுசீறி 52
இன்னம்கலி 262
இன்றைக்கோ 334
இனியது 367
ஈசனையே 159
ஈட்டியபொரு 381
ஈறில்வணக் 19
உகம்நான்கும் 7
உடையராய் 407
உண்ணீருண் 317
உத்தமனாயிரு 382
உதிர்ந்த வன்னி 35
உயிரைக்கொல் 41
உரககங்கண 113
உலகத்தார் 324
உள்ளம் ஆர் 156
உள்ளவழக் 371
உளையாழி ஓர் 10
உறப்பெரிது 326
உறுவதென் 38
ஊன் ஆதரி 41

எங்குமுள 49
எடும் எடும் 37
எண்ணியநூற் 205
எண்ணிலாண் 188
எண்ணிறந்த 234
எண்ணும்எழுத்தும் 387
எண்ணென்ப 387
எந்தாய்போ 325
எம்பிரான் 80
எம்மிகழ்வோ 350
எல்லாமலை 399
எழுதரிது 377
எழுந்தது சேனை 54
எழுமலை 314
எளியன்என் 38
எற்றைப்பக 47
எறிக்கும்புகழ் 31
என்றும் இன் 133
என்னையாட் 111
என்னைவென் 52
ஏசிஇடலின் 377
ஏரும்இரண் 373
ஏவியகுரிசில் 53
ஏழ்தலைப் 17
ஏனமொடு 192
ஐந்துபேரறி 154
ஐம்பொருளும் 363
ஐவேலசதி 401
ஒத்ததுணர் 257
ஒருகைஇரு 355
ஒருதான்பிற 294
ஒருநாள் உண 398
ஒருநாளும் 398
ஒருவயிற்றும் 7
ஒருவர் ஒருவர் 25
ஒருவர் ஒருவரின் 36
ஒன்றாய்ப்பல 325
ஒன்றியசீர் 94
ஒன்றுபுரி 178
ஓங்காரத்துட் 6
ஓடம் விட்ட 395
ஓருலகோ 69
ஔவை என்று 347
கங்கர்கராளர் 48
கடக்கம் அன்று 36
கடவுள் வாழ்த்து 18
கடையும் கடை 316
கண்கொள்ளா 184
கண்டன்பவனி 265
கண்ணிடை 190
கண்ணோட்டம் 75
கம்பனென்றும் 256
கயமொடு 192
கரடத்தான் 24
கரண்டகண்டத் 266
கரத்தும் 266
கருங்கடலை 62
கருங்கதலி 189
கருங்காலி 366
கருங்குளவி 378
கருணையால் 356
கரும்பிற்றொகு 12

கல்லாஒரு 393
கல்லாதமாந் 393
கல்லால் நிழற் 341
கலகமிடும் 69
கலவிக்களி 45
கலையினொடும் 48
கவின்கைக் 307
களியானை 188
கற்பகத்தின் 183
கற்பகப்பூந் 207,220
கற்றதுகை 376
கனமும் தனமும் 316
காக்கும்நீதி 78
காசினியிற் 374
காசுக்குக்கம் 378
காஞ்சியிரு 51
காட்டியவேழ 19
காட்டுமுறுவல் 208
காடுகிழவோள் 14
காடுமீனம் 315
காணாமல் 378
கரைதோட 222
கார்கெழு 291
காரணகாரிய 7
கால்நொந்தே 365
காலத்தினாற் 72
காவலர்ஈகை 5
காவலன் 72
காவற்பூத 13
கானக்கடி 130
கிரியும் 316
குடந்தையம் 343
குடையும் 316
குருதியின் 37
குலத்திற் 78
குலம்வேண் 327
குழைதந்த 315
குறித்தான்குறி 259
குறுமோட 49
கூடல் நராதி 304
கூடலார் சங்க 10
கூடற்றமிழ் 404
கூடியசீர் 298
கூராரல் 124
கூரியவா 365
கூழைப்பலா 365
கெண்டைமா 49
கேடும் ஆக்க 108
கேழல் மேழி 33
கைம்மலர் 43
கையில்மான் 79
கையும் தலை 153
கையும்மல 200,259
கொட்டி 262
கொடியது 367
கொண்டலணி 112
கொண்டுவந்து 140,208
கொய்தபன் 140
கொலையானை 9
கொலையைத்தட 267
கொன்றைவேந் 386
கொன்றைவேய் 385

கோக்கண்டு 254, 261
கோட்டந்திருப் 24
கோடானு 370
கோடிகொடு 370
கோலத்தார் 295
கோலாகல 336
சரநிரைத்தா 32
சாலமறை 212
சிங்களர் 49
சித்திரமும் 376
சிந்தையிடை 157
சிரப்பான் 356
சிரமும்சிர 316
சிவனடியே 163
சிறப்புடைய 70
சிறுக்கீரை 361
சீலமிலரே 150
சுரந்ததிரு 170, 229
சுரிகுழல் 45
சுழியிட்ட 275
சுற்றம் நீடிய 231
செங்கால்மட 262
செடிநுகரும் 124
செப்பரிய 246
செப்பலுற்ற 254
செம்மைவெண் 178
செய்யும்வினை 4
செய்யுள்நிகழ் 106
செய்யோகை 271
செய்வானும் 149
செருத்தந்தரி 11
செருந்தந் 291
சென்றகால 165
சென்றுசெவி 100, 258
சென்றுதேவர் 236
சென்றுழுது 371
சென்னிஅப 80
சென்னிவெண் 80
சேய்மொழி 363
சேயபெரிய 304
சேரலர்கோன் 358
சொருகுகொந் 46
சொல்லாமலே 376
சொல்லாயும் 369
சோதிமுத்தின் 134
ஞானத்தின் 164
தங்குகண் 46
தக்க அதனால் 322
தடங்குலவு 24
தடநிலைமா 136
தந்திடை 269
தடியால்மடு 51
தண்டாமரை 271
தண்டாமல் 371
தந்தையில் 275
தம்கணவ 38
தம்பிரானை 172
தரணியொரு 292
தலையுந்தலை 316
தன்கோள் 337
தன்மைஉவ 88
தன்மையினார் 74

தனமாவது 104
தாழும் சமண் 130
தாராய்அடை 47
தாயோடு 375
தாருந்தாரு 316
தாளறுவன 192
தான்வேண்டி 25
தானநிலை 206
திங்கட்குடை 355
திண் அசுரன் 327
திருக்கிளரும் 68
தில்லைத்திரு 246, 296
தீயாரை 394
துங்கமாத 119
துஞ்சிவீழ் 36
துதிக்கை 42
தூதைந்து 20
தூயவெண்ணீ 157
தெய்வீக 401
தெலுங்கவீம 290
தெள்ளித்தம் 304
தென்னவர் 48
துடியாய்பெண்டிர் 387
தேரொலிக்க 194
தேவர்குற 396
தேவர்வாழ்த் 17
தேவாசுர 55
தேனுந்து 257
தொடைகள் 49
தொண்டையர்க்கு 28
தொழுகின்ற 265
தொன்மையவாம் 74
தொன்னில 300
தோலுந் 316
தோளும் 316
நடித்தது 335
நம்பன் 378
நம்மையுடை 182
நல்லம்பர் 376
நல்லறத்தாற் 271
நலிவாரும் 206
நற்றமிழ் 79
நாடியவிரி 131
நாணனும் 233
நான் அவ்வை 404
நித்தநவம் 264
நித்தியத்தை 385
நிலையில் 72
நிழலில்அடை 50
நின்றமறை 182
நின்றாலும் 100
நீடுந்திரு 193
நீலமணி 349
நீலமாமஞ்ஞை 189
நீலமாமணி 49
நூற்றுப்பத் 366
நூற்றெண் 362
நெடுநிலமகள் 53
நேசம்நிறை 185
நேசனைக்காணா 377
பஞ்சின்மெல் 188
படிகொண்ட 194

| | |
|---|---|
| படியில் நீடும் | 156 |
| படைபுக்கு | 18 |
| பண்டையோர் | 29 |
| பண்ணின் | 148 |
| பண் தரு | 194 |
| பண்பார்கவி | 119 |
| பண்புடைய | 327 |
| பத்துக்கொண்ட | 260 |
| பப்பத்தொரு | 305 |
| பயன்தூக்கா | 72 |
| பரிசில் | 50 |
| பருதிகுலம் | 94 |
| பல்வகைத்தா | 145 |
| பன்னும் அசதி | 400 |
| பாசத்தொடை | 192 |
| பாட்டுத்தொடு | 266 |
| பாடவரிய | 10 |
| பாடிய பொய்கை | 302 |
| பாண்டிமா | 137 |
| பார்சிறுத்த | 38 |
| பார்த்திபர் | 305 |
| பாரிபறித்த | 353 |
| பாலாறு | 98 |
| பாவகன் | 292 |
| பிள்ளைதைவர | 119 |
| பிள்ளையார் | 151 |
| பிறர்க்கின்னா | 387 |
| புகார் மன்னன் | 158 |
| புதுவைச்சடை | 270 |
| புறநடஞ் | 13 |
| பூங்கமல | 368 |
| பூணிலாவு | 321 |
| பூதமைந்து | 108 |
| பூவைமற | 71 |
| பூவேய்ந்த | 244 |
| பெரியது | 367 |
| பெருகுவிரு | 235 |
| பெருங்காப்பிய | 170 |
| பேணும்கொழு | 46 |
| பையாப்போடு | 41 |
| பொங்குகடல் | 182 |
| பொய்கைசூழ் | 314 |
| பொய்த்தான் | 371 |
| பொருதடக்கை | 39 |
| பொருபுலி | 37 |
| பொல்லா ஓட்டை | 42 |
| பொற்றாமரை | 320 |
| பொன்மலை | 80,158 |
| பொன்மாரி | 356 |
| போதையார் | 136 |
| போந்தவுதார | 377 |
| போர்த்தபடா | 404 |
| பௌவம் அடங்க | 47 |
| மக்கள் இழந்த | 321 |
| மங்கையர்க்கு | 227 |
| மங்கையர்க்குத்தனி | 228 |
| மண்ணில்நல் | 135 |
| மண்ணினாளற | 293 |
| மண்ணுலகில் | 135 |
| மதியாதார் | 370 |
| மதுரஇரா | 70 |
| மந்தரத்தும் | 205 |

| | | | |
|---|---|---|---|
| மந்திரிகள் | 80 | முத்தெறியும் | 356 |
| மயக்கறு | 16 | முந்துறவே | 204 |
| மருவியகால் | 206 | முந்தைமறை | 204 |
| மருவுலகம் | 180 | மும்மைப்புவ | 175 |
| மல்லையில் | 303 | முருகின் | 46 |
| மலைகொன்று | 275 | முலைமீது | 46 |
| மலைச்சிறை | 275 | முழுத்தோல் | 41 |
| மழலைத்திரு | 47 | முறையால் வரு | 206 |
| மழைகள் | 36 | முன்புபணி | 159 |
| மற்றிதற்கு | 105 | முன்றிற்கிடந்த | 296 |
| மறந்தருதீ | 180 | முன்னேவந் | 184 |
| மலையாளர் | 153 | மூண்ட அடர் | 18 |
| மறைக்கொழு | 288 | மூவேந்தர் | 243 |
| மன்காதலில் | 315 | மெய்யன்பர் | 206 |
| மன்னவர்க்கு | 123 | மெய்யே | 46 |
| மன்னியநாள் | 121 | மேகத்தொரு | 315 |
| மனமமருங் | 258 | மேய அத்திரு | 223 |
| மா ஆயிரமும் | 55 | மேய இவ்வுரை | 79 |
| மாசிலாத | 108 | மேன் மக்கள் | 393 |
| மாடப்புகா | 290 | மொய்ம்மலர் | 295 |
| மாடில்லான் | 377 | மொய்வைத்தி | 357 |
| மாநிலங்கா | 213 | மொய்த்துவளர் | 190 |
| மாமான்மர | 315 | மோடிமுன் | 292 |
| மாய்ந்தவர் | 238 | யாழில் எழும் | 206 |
| மார்பார | 158 | யாழின்மொழி | 191 |
| மாறு முதல் | 205 | யானை சாய்த்த | 17 |
| மானினேர் | 228 | வஞ்சிவெளிய | 375 |
| மீனகம் | 267 | வடவைக்கன | 273 |
| முடிசூடும் | 48 | வண்டைவளம் | 48 |
| மீண்டுசிவ | 137 | வண்ண நீள் | 119 |
| முத்தின்கனம் | 293 | வத்தவர் | 49 |

| | | | |
|---|---|---|---|
| வம்புலா | 118 | விண்ணைஇடிக்கும் | 35 |
| வரகரிசி | 369 | விதியால் | 395 |
| வரப்புயர | 373 | விரும்பரணில் | 291 |
| வரிவிற்கதை | 192 | விரையலர்ந்த | 307 |
| வருகதை | 313 | விழுந்து கொழும் | 40 |
| வருசெரு ஒன் | 48 | வெள்ளியங்கிரி | 325 |
| வருவார்கொழு | 47 | வெண்பா இரு | 379 |
| வலி மிகு | 351 | வெய்தாய் | 354 |
| வழக்குடையார் | 372 | வெய்யநீற் | 137 |
| வழக்குடையான் | 371 | வெள்ளநீர் | 111 |
| வள்ளலார் | 205 | வெள்ளிவெற்பி | 158 |
| வள்ளுவர்சீர் | 77 | வெறியார் | 134 |
| வற்றல்வாகை | 35 | வென்றிவண் | 52 |
| வாக்குண்டாம் | 392 | வேங்கையினும் | 336 |
| வாசிகொண்டர | 30 | வேடத்தால் | 37 |
| வாதவர்கோன் | 360 | வேண்டுங்கால் | 176 |
| வாய்த்த பொருள் | 103 | வேழமுடைத்து | 375 |
| வாய் மடித்து | 39 | வையகம்பொலிய | 197 |
| வாயிற்கடை | 112,114 | வையகமாம் | 33 |
| வாழிதமிழ் | 317 | வையகமெல் | 372 |
| வாழிதில்லை | 71 | வையைத்துறை | 358 |
| விக்காவுக்கா | 271 | விடுமின் | 45 |
| விடவிகள் | 51 | வேந்திய | 186 |
| விண்ணிற் | 77 | | |


○○○

## பொருள் அகராதி


அகப்பொருட்சுவைப் பாடல் 44

அங்கதம் 350

அஞ்செழுத்து 141

அடியவர் பெயரே நாம மந்திரம் 150

அடியார் இலக்கணம் 159

அடையாள மாலை 139

அண்டமுற நிமிர்ந்தாடும் அப்பன் 146

அப்பாலும் அடிச்சார்ந்தார் 246

அம்பிகை கோயில் இன்மை 203

அமங்கலச் சொல் இன்றிப் பாடியது 186

அருச்சனை பாட்டேயாகும் 153

அருள் வெளிப்பாடு 164

அவ்வையார் நோன்பு 347

அவ்வையும் கந்தியும் 346

அவதாரம் என்ற சொல்லாட்சி 198

அறுபத்து மூவர் சிலையமைப்பு 246

ஆகமப்படி பூசை 206

ஆணை நமதே 148

ஆதிசைவ நிலை 215

ஆறிய கற்பும் சீறிய கற்பும் 149

ஆனந்தக் குற்றம் 150, 205

இடறினும் தளறினும் பாடற் பொருள் 236

இராமாயணம் இதிகாசம் 331

இராவணன் பற்றிய பாடற் பொருள் 135

இலக்கிய விமர்சன தத்துவம் 74

இறையுணர்வு 161

உடை-நிறத்துக்குப் பொருந்த 295

உத்தரகாண்டக் கதை 318

உத்தரகாண்டம்-புராணம் 331

உந்தி பறத்தல் 303

உபநிடதப் பொருளே சித்தாந்தம் 149

உருத்திராக்கச் சிறப்பு 150

உலக்கைப்பாட்டு 48

உலா இலக்கணம் 290

உலாவின் பொருள் 344

உழவாரப் பணி 219

உழவின் சிறப்பு 288

உழைப்பின் உயர்வு 218

ஊர்ச்சபையின் பொறுப்பு 177

ஊருடையான் 244

என்றுவந்தாய் என்ற குறிப்பு 145

ஐயர் என்ற சொல்லாட்சி 195

ஒரே குலம் 245

கடையருக்கும்
கடைத்தேற்றம் 241
கடைதிறப்புப் பாடும் மகளிர் 44
கருநிறத்துக்குப் பொருந்த
உடுத்தல் 295
கலைமகளை வீரபத்திரர்
தண்டிக்காமை 259
கவிச்சக்கரவர்த்தி 255
கவி ராட்சதன் 270
களப்பலியூட்டுதல் 14
களப்பிரனும்
களப்பாளனும் 128
களவழி 13
களவேள்வி 15
கன்னட மொழியில்
கூத்தர் கதை 343
காடு கிழவோள் 14
காப்பியத்துக்கு வித்து வேதம்
இராமாயணம் பாகவதம் 174
காப்பிய நோக்கம் 169
காபாலிகம் என்பது
பொருந்தாது 162
காவிரிக்கு வழி கண்டமை 275
காவிரிச் சிறப்பு 118
கானத்தின் எழுபிறப்பு 165
கீரைக்கறிச் சிறப்பு 354
கும்பாபிஷேகம் 125
குருடருக்கு நிபந்தம் 96
குறிப்பறிதல் 408
கொடிவகைகள் 49
கொற்றவை நிலை 14
கோடிப் பாடல் 372
கோயில் வகைகள் 60
கௌட நெறி 269
சண்டேசர் வரலாற்றில்
மாற்றம் 160
சத்தமாதர் வாழ்த்து 33
சத்தி சிவமாம் காட்சி 160
சத்தியாக்கிரகம் 126
சந்தப் பாடல் 37
சந்தனக் காப்பு 130
சம்பந்தர் பாலை நெய்தல்
பாடிய செய்தி இன்மை 161
சமபந்தி போசனம் 335
சமூக சேவை 336
சமையல்காரன் செய்த
பிழை 267
சரசுவதி வடிவம் 259
சரியைகிரியை யோகம் 155
சரியை நிலை 153
சாதி பற்றிய நூல்கள் 405
சிலேடை 41
சிவஞானமும்
கலைஞானமும் 163
சிவஞான ஜனநாயகம் 242
சிவபெருமான்
இடபாரூடராய்க்
காட்சியளித்தல் 149
சிவலிங்க வழிபாடு 148
சிவாசாரியர் நிலை 148
சிற்பத்தில் பெரியபுராணச்
செய்திகள் 248
சிற்றிலக்கியம் 2
சிறுத்தொண்டர் அமுது
படையல் 247
சீருத்திரம் 148

சீனப் பொம்மை 394
சுட்ட பழக்கதை 366
சும்மேலோ சும்முலக்காய் 48
செந்தமிழ்நாடு சோழநாடு 175
செய்திகொன்றோர்க்கு உய்தி இல் 319
செருக்கள வஞ்சி 13
சேக்கிழார் காட்டும் பொதுமை 237
சேக்கிழாரின் உவமைகள் 161
சேக்கிழாரின் தமிழ்ப்பற்று 175
சைவசித்தாந்தம் 148
சைவப்பொருள் 4 149
சைவருக்கிருந்த வைணவப் பெயர்கள் 97
சைன இலக்கியம் 224
சைனர் சோழரைப் பாடாமை 7
சோழபாரம்பரியம் 286
சோழமன்னர் சிறப்புப் பெயர்கள் 81
சோழர் திருமால்பணி 296
சோழர் பேரரசு 12
தமிழின் பொற்காலம் 63
தமிழின் மேலாந்தரம் வாய்ந்த நூல்கள் 77
தலச் செய்திகள் 141
தலப் பெயரும் கோயில் பெயரும் 203
தாவரமும் உயிருடையது 151
திருக்காமக் கோட்டம் 203
திருக்கூட்டச் சிறப்பு 108
திருத்தொண்டர் காலம் 123
திருநீற்றின் பெருமை 150
திருப்பாசுரப் பொருள் 135
திருமணச் செய்திகள் 355
திருமாலைக் கடலில் போட்டமை 271,296
திருவாதிரை 151
தில்லைத் திருநடம் கண்ட பாடினோர் 155
தில்லைத் திருப்பணி 277
திலகவதியார் 150
தீட்சை 151
தீண்டாமை 210,232
துலா புருடதானம் 265
தெய்வப்பரணி 291
தேசியக் காப்பியம் 238
தேவாரப் பதிகங்கள் பாடிய சந்தர்ப்பம் 129,136
தேவாரப் பொருள் விளக்கம் 138
தேவி வருணனை 43
தொகையடியார் 243
தொண்டுக்குப் பயிற்சிச் சாலை 223
தொண்டு வகை மூன்று 104
தொண்டைநாடு சான்றோருடையது 179
நடந்தாய் வாழி காவேரி 118
நடுநாட்டுச் சிறப்பு 201
நாகம் வழிபட்ட தலம் நாலு 65
நாட்டுப்பற்று 177
நாட்டுப் பற்றுக்கான இலக்கியம் 32
நாடிகளின் நிலை 54
நாயன்மார் யாத்திரைகள் 120
நாயனார் என்ற சொல்லாட்சி 196

நிறை நில்லாத அகவல் 372
நீதி மன்றம் 215
நீலகண்டம் என்ற ஆணை 229
நீலச் சிற்றாடை 258
நூல்களின் இழப்பு 43
நூலாசிரியர் நோக்கம் 166
நேர் நிறை நில்லாத அகவல் 372
பக்திச் சிறப்பு 158
பக்தி வெறியால் விளைந்த செயல் 186
பங்காளிப் பகைமை 332
பட்டோலை படித்தல் 262
பந்தடி 295
பரணி இலக்கணம் 15
பரணிதோற்றார் பெயரில் 19
பரணி நாளின் சிறப்பு 16
பரணிப் பிரபந்த வகை மூன்று 11
பரணி பாடியாடுதல் 12
பரணி பாடும் முறை 19
பரணியின் நாடகப்பண்பு 33
பரணியின் பொருளமைப்பு 43
பரணி வகைகள் 54
பரார்த்த பூசை 147
பலி கொடுத்தல் 15
பவதி பிக்ஷாந்தேகி 41
பனைகளும் சிவமே கூடின 151
பாட்டே உரைநடை என்பது பிழை 183
பாத்திரப் படைப்பு 166
பாதாதி கேச வருணனை 43
பாலாற்றியல்பு 119
பிரணவமும் திருமுறையும் 130
பிரபந்தர்கள் தெய்வம்மீது 11
பிரபந்தங்களில் பழமையானவை 16
பிரபந்தம் 130
பிள்ளைத்தமிழ் இலக்கணம் 299
- முடி சூடியபின் இல்லை 300
பிள்ளைத்தமிழின் தோற்றம் 299
- பருவங்கள் 299
புலவர் பலர் ஒரே பெயரில் 348
புலவியனுபவம் 191
பெண்ணின் அழகும் கண்ணுதல் கருணையும் 187
பெண்ணின் சுதந்திரம் 226
பெரியபுராண அமைப்பு 139
- இடைச்செருகல் 109
- காப்பியத் தன்மை 171
- சருக்க அமைப்பு 107
- சிறப்பின் தொகுப்பு 241
- செய்யுள் திறன் 207
பெரிய புராணச் சொற்கள் 186
பெரிய புராணத்தில் அறம் பொருள் இன்பம் வீடு 174
- இசைக்கலை 203
- இடைச்செருகல் 109
- 'உலகெலாம்' 134
- உழைப்பே உயர்வு 218
- ஓவியம் 201
- கட்டளைக்கலித்துறை 145
- கட்டிடக்கலை 203
- கலைப்பண்பு 208
- காப்பியத்தன்மை 169
- குழந்தைகள் 245

- கூத்து 204
- சந்தம் 188
- சமணம் 229
- சமூக சேவை 234
- சாதி 230
- சிற்பம் 169
- சீர்திருத்தம் 241
- சைனம் 127
- ஞானநெறி 162
- திருமுறை பாடிய ஆசிரியர் 117
- துதிப்பாடல்கள் 188
- நாடகப்பண்பு 181
- நீதி 214
- நோக்கம் 175
- பெண்களின் உயர்வு 226
- பூத்தொடுத்தல் 207
- பௌத்தநிலை 127
- வரிப்பாடல் 188
- வருணனை 188

பெரிய புராணம் 64,168
பெரிய புராணம் தமிழ்நாடு முழுமைக்கும் 117,118
- தேசியக் காப்பியம் 121,123
- பாடிய முறை 133,138
- பெருங்காப்பியமா 169
- பொருள் 112

பெரியோரைப் படர்க்கையில் சுட்டுதல் 209
பெருங்காப்பிய இலக்கணம் 170
பேய்களின் பெயர்கள் 42
பேய் வருணனை 36,40
பொருநர் பலவகை 15
போர்கள் 216
போர்ப் பிரபந்தம் 13
பௌத்த தத்துவம் 126
மடக்கு 188
மணம் பற்றிய செய்திகள் 361
மள்ளர் வகை 48,49
மறக்கருணை 165
மறக் கருணையின் விளக்கம் 135
மன்மதனுக்கு அங்கங்கள் நாடும் ஊரும் 290
மனத்தால் வரும் கன்மம் 181
மனிதப் பிறவியின் பயன் 141
மனையறம் 173
மாகேசுவர பூசை 249
முடிசூட்டுதல் 211
முத்தமிழ் வளம் 15
யானை வருணனை 288
வடமொழி அகராதி 272
வடமொழிப் பெயர்கள் 112
வள்ளல் என்ற சொல் 196
வள்ளைப்பாட்டு 47
வாசக தீட்சை 164
வாண்மங்கலம் 15
வாழ்க்கைச் சரிதம்-சுந்தரர் 109
வீரசைவ வரலாறுகள் 247
வேதாந்தம் 279
வைணவர் வடமொழியிலேயே நூல் செய்தமை 172,173

○○○

## சிறப்புப் பெயரகராதி


அகத்தியபக்தவிலாசம் 112
அகத்தியர் தேவாரத்திரட்டு 254
அங்கவை சங்கவை 354
அச்சுத களப்பாளர் '97
அசதிக் கோவை 399
அஞ்ஞவதைப் பரணி 55
அட்டவீரட்டம் 308
அடியார்க்கு நல்லார் 292
அதிகமான் 368
அதிகை 44
அதிராசேந்திரன் 25
அப்பர் 136,138
அப்பர் உண்ணாவிரதம் 129
அப்பர் ஏழெழுநூறுபதிகம் 143
அப்பாலும் அடிச்சார்ந்தார் 118
அப்பூதி அடிகள் 187
அபயன் 4
அம்பர் மாகாளம் 246
அம்மங்காதேவி 153
அமர்நீதி 141,150
அரசகேசரி 320
அரிவாள் தாயர் 273
அருண்மொழித் தேவர் 64
அருணகிரிநாதர் 8
அருணந்திசிவம் 176
அருந்தமிழ்மாலை 381
அரும்பைத்தொள்ளாயிரம் 277
அல்லி அரசாணிமாலை 304
அவ்வை 178
அவிநயம் 120
அழகிய மணவாளனி மண்டையாழ்வார் 30
அற்புதத்திருவந்தாதி 225
அறநெறிச்சாரம் 397
அன்னையும் பிதா 389
அனதாரி 256
அனந்தபத்மன் 32
அனந்தபாலன் 289
அனபாய சோழன் 82,248
அனபாயநல்லூர் 274
அனபாய மூவேந்த வேளான் 82
அனபாயனாகிய வண்டு 82
அனவரத விநாயகம்பிள்ளை 345
ஆகவமல்லன் 305
ஆடிஸி 46
ஆண்டாள் 45
ஆத்திசூடி 345
- சிந்து 386
- திறவுகோல் 386
- (புதிய) 382

- புராணம் 64
- விருத்தியுரை 385
- வெண்பா 34
ஆதியுலா 239
ஆதித்தசோழன் 118
ஆதிபகவன் 378
ஆயிரவைசியர் 404
ஆரிட வாசகம் 407
ஆலாலசுந்தரர் 251
ஆவினன்குடி 376
ஆளுடைய தேவநாயனார் 197
ஆளுடைய நம்பிபுராணம் 97
ஆளுடைய நாச்சியார் 276
ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை 285
ஆறுமுகத்தம்பிரான் 251
ஆறுமுகநாவலர் 250
ஆனாயரினர் 204
இசையாயிரம் 59
இடைக்காடர் 363
இடைக்கால அவ்வை 352
இரகு வம்சம் 320
இரணியவதைப் பரணி 48
இராகவையங்கார், மு. 3,59,97
இராகவையங்கார், ரா. 74,78,320
இராசகம்பீரன் 87
இராசகேசரி 27
இராச சிம்மப்பல்வன் 106
இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி 349
இராசபண்டிதன் 275
இராச மகேந்திரன் 33
இராசமாணிக்கம் 78
இராசராசதேவர் 69
இராசராசதேவருலா 10
இராசராசன் I 3
இராசராசன் I
- கல்வெட்டு 356
இராசராசன் II 75,85,86
இராசராசன் II உலா 11,88
- உலாவுக்கு ஆயிரம் பொன் 284
இராசராசன் III 93
இராசராசேச்சுரம் 248
இராசராசேந்திரன் 25
இராசாதிராசன் I 306
இராசாதிராசன் II 99
இராசேந்திரன் I 25
இராசேந்திரன் II 9
இராமகிருஷ்ண பரமஹம்சர் 244
இராமச்சந்திர கவிராயர் 369
இராமதேவர் 97
இராமபாரதி 385
இராமரத்தின ஐயர் 318
இராமலிங்க சுவாமி 196
இராமானுச கவிராயர் 384
இராமானுச திவ்யசரிதை 296
இராமானுசர் 295
இருமடிச் சோழன் 285
இலக்கண விளக்கப் பாட்டியல் 335
இலக்கண விளக்கம் 4

இளங்கோ 117
இளம்பூரணர் 121
இளையான்குடி மாறர் 229
இறையனார் களவியல் 8
ஈசாவாசிய உபநிடதம் 389
ஈட்டிஎழுபது 266
ஈலியட் 32
உத்தமசோழப் பல்லவராயர் 65,94
உத்தரகாண்டம் 277
உத்தரகாண்டம் படலப் பாகுபாடு 325
உத்தராபதி ஈசர் 124
உபமன்யபக்த விலாசம் 112
உபமன்னிய முனிவர் 113
உபயகுலோத்தமன் 25
உமாபதிசிவம் 68,71,94,151
உய்யவந்ததேவ நாயனார் 196
உய்யவந்ததேவர் திருக்கடவூர் 197
உய்யவந்தார் திருவியலூர் 176
உருத்திரங்கண்ணனார் 302
உருத்திரபசுபதி 148,150
உலகநாத பிள்ளை 342
உலகமுழுதுடையாள் 288
உறையூர் 3
எங்கராயன் 28
எட்டுத்தொகை 3
எதிர் நூல் 277
எதிரம்பலம் 88
எதிரிலாப்பெருமாள் 274
எழுப்பெழுபது 319
எறிபத்தநாயனார் 186
ஏசுநாதர் 244
ஏயர்கோன் கலிக்காமர் 291
ஏர்எழுபது 275
ஏழிசைவல்லபி 204
ஏழிற்கோ 374
ஏனாதிநாதர் 161
ஐயடிகள் காடவர்கோன் 117
ஐயர் அவர்கள் 15
ஒட்டக்கூத்தர் பெயர்க் காரணம் 260
ஐவேலசதி 400
ஐன்ஸ்டைக் 240
ஒட்டக்கூத்தர் 23,180
ஒன்பதாம் திருமுறை 72
ஔவை 392
கங்கைகொண்ட சோழபுரம் 27
கச்சிச்செப்பேடு 60
கச்சிநகர் 44
கச்சியப்பர் 77
கச்சியப்பர் புராணம் 249
கச்சூர் 143
கஞ்ச வதைப்பரணி 54,57
கஞ்சனூர் 114
கட்டி 351
கடாரப்போர் 27
கடாரவெற்றி 82
கண்டராதித்தர் 284
கண்டன் 86
கண்டன் அலங்காரம் 265
கண்டன் கோவை 265

கண்ணப்பர் 158
கணநாதர் 208
கந்தசாமிப் புலவர் 261
கந்தபுராணத்தின் நோக்கம் 166
கந்தபுராணம் 99
கந்தவிரதவிலாசம் 257
கந்தியார் 110
கம்பர் 52
கம்பராமாயணத்தின் நோக்கம் 166
கம்பராமாயணம் 32,63,166,186
கம்பரில் பெண்கள் 225
கயிலாயநாதர்கோயில் 100
கரிகாலன் 21
கருணாகரத் தொண்டமான் 4
கருப்பையாப்பாவலர் 407
கருவூர்த்தேவர் திருவிசைப்பா 101
கல்வி ஒழுக்கம் 381
கலிக்கம்பர் 161
கலிங்கத்துப்பரணி 55,126,306
கலிங்கத்துபரணி (விக்கிரமன்) 54
கலிங்கமன்னன் 34
கலிப்பகை 213
கலியாணசுந்தரனார், திரு.வி. 251
கவிச்சக்கரவர்த்தி 59
கவிசக்கரவர்த்தி சயங்கொண்டார் 1
கவிச்சக்ரவிருத்தி 293
கழற்சிங்கர் 100
களத்தூர்க் கல்வெட்டு 95
களப்பிரர் 1
களப்பிரர் காலம் 23
களப்பிரரால் துன்புற்றோர் 129
களிப்பொருபது 319
களவழி நாற்பது 1,88
கன்னட புராணம் 115
கன்னிவன புராணம் 6
கனகசபை ஐயர் 359
காங்கேயன் புதுவை 334
காட்டுமன்னார்கோயில் 272
காஞ்சிப்பல்லவர் 29
காஞ்சிவாய்ப்பேரூர் 143
காந்தியடிகள் 215
காந்தியடிகள் புராணம் 250
காமாட்சிகோயில் 203
காரனைவிழுப்பையன் 289
காரிஈந்த களைக்கொட்டு 353
காரைக்கால் அம்மை 122,182,200
காலிங்கர்கோன் 289
காழி - காளி 256
காளமேகப்புலவர் 20
கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி 349
கிருமிகண்ட சோழன் 297
கிருஷ்ணசாமி முதலியார் 399
கிருஷ்ணமாசாரி, வி. 406
குண்டலகேசி 129
குண்டையூர் 143
குணசாகரர் 175
குணபரேச்சரம் 124
குணவீரபண்டிதர் 80
குந்திதேவி 346

குருமுனி 386
குலச்சிறை 211
குலச்சிறை ஆண்டார் 315
குலோத்துங்க சோழசரிதை 6
குலோத்துங்கசோழபெருமாள் 3
குலோத்துங்கசோழ விண்ணகரம் 296
குலோத்துங்கர் மூவர்காலம் 81
குலோத்துங்கன் - I 4,83,204
- சாசனம் 30
- மனைவியர் 264
குலோத்துங்கன் - II 78,204
- உலா 12,77
- உலா உரை 297
- பிள்ளைத்தமிழ் 89,90
குலோத்துங்கன் - III 79,87
குலோத்துங்கன் கோவை 277
குறள் 176
குன்றத்தூர் 64
குன்றத்தூர் சேக்கிழார் என்ற பெயருடையோர் 96
கூடல் சங்கமத்துப்பரணி 9
கூத்தர் கவிஞரைத் தண்டித்தது 262
கூத்தன் கவிச்சக்கரவர்த்தி 309
கூத்தனூர் 259
கூற்றுவநாயனார் 127
கேசவசுவாமி 268
கொங்கு சேரர் 83
கொங்கு மண்டலசதகம் 376
கொங்குவேளிர் 166
கொடுங்கோளூர் 144,201
கொப்பத்துப்பரணி 2,9
கொன்றைவேந்தன் 345
கோகரணக்கல்வெட்டு 95
கோச்செங்கட்சோழன் 33,117
கோட்புலி 162
கோதாவரி 4
கோப்பெருஞ்சிங்கன் 93
கோபாலையர், அ. 8,59
கோபிநாதராவ் 78
கோயிற்புராணம் 253
கோவூர்கிழார் 3
கோளறு பதிகம் 146
சங்ககால அவ்வை 350
சங்கத்தமிழ் 396
சங்கப்புலவர் 106
சங்கரசோழன்உலா 90
சடங்கவி சிவாசாரியர் 141
சடையப்பவள்ளல் 343
சண்டேசர் 243
சண்டேசர் வரலாறு 210
சதாசிவ பண்டாரத்தார் 79,87
சதுரானன பண்டிதர் 178
சந்தான ஆசாரியர் புராண சங்கிரகம் 249
சந்திரசேகர கவிராச பண்டிதர் 108
சபாபதிமுதலியார், காஞ்சி 251
சம்பந்த சரணாலயர் 139
சம்பந்தர் 101
சம்பந்தர் அவதாரம் 163,175

சம்பந்தர் செய்த அற்புதம் 164
சம்பந்தர் திருமுகப்பாசுரம் 133
- பூம்பாவையைக் காணுதல் 184
- பொன் பெற்றது 146
- முருகன் அவதாரம் 313
- வரலாறு 308
சயங்கொண்டார் 91
சரசுவதி அந்தாதி 277
சரசுவதி மகால் 199
சாக்கிய நாயனார் 127
சாக்கியர் 139
- வரலாறு 127
சாமிநாத ஐயர் 385
சாமிநாத தேசிகர் 249
சாவுந்தராய புராணம் 115
சித்தாந்தம் இதழ் 116
சித்தியார் 174
சிதம்பர புராணம் 94
சிதம்பரரேசர் பரணி 307
சிந்தாமணி 14,68
சிந்தாமணியின் நோக்கம் 166
சிரவணபெள் குளம் 115
சிலப்பதிகார அரும்பதவுரை
- உரை 36
- நோக்கம் 36
சிலப்பதிகாரம் 126
சிலை எழுபது 31
சிவகாமசுந்தரி கோயில் 203
சிவசங்கர பூபதி 257
சிவஞானசுவாமி 77
- சரிதம் 180
சிவஞானபோதம் 158
சிவப்பிரகாச சுவாமி 229
சிவப்பிரகாசம் 74
சிவப்பிரகாச பிள்ளை, அமுதமொழி 403
சிவபாத இதயர் 210
சிற்றம்பலம் பொன்வேய்ந்தவன் 276
சிறுத்தொண்டர் 118,173
சிறுத்தொண்டர் பஜனை 247
சீகாழி 142
சீயகங்கன் 274
சீராளதேவர் 242
சீருத்திரம் 148
சுகாத்தியன் 399
சுங்கம் தவிர்த்தசோழன் 27
சுந்தரசோழன் 284
சுந்தரபாண்டியன் 256,289
சுந்தரர் 111,141,159
- காலம் 100
- பரவையைக் காணுதல் 183
சுப்பராயலு நாயகர் 251
சுப்பிரமணியபிள்ளை, கா. 84
சுப்பிரமணியமுதலியார், சி.கே. 63,111
சூடாமணி நிகண்டு 295
சூரன்வதைப்பரணி 54
சூரியநாராயண சாஸ்திரி 59
சூளாமணி 44,187
- நோக்கம் 166
செங்குந்தர் பிரபந்தத் திரட்டு 277

செங்குன்றூர்ப்பணி 189
செந்தமிழ்ப்பத்திரிகை 320
செம்பியன்மாதேவி 245
செம்பொற்சிலை எழுபது 290
செல்வக்கடுங்கோ
ஆழியாதன் 267
சேக்கிழார் 250
- உரையாசிரியர் 133
- காலம் 98
- செம்மணித்திரள் 254
- நாட்டுப்பற்று 175
- நாடகப்பாங்கு 181
சேக்கிழார் நாயனார் 77
- நூல் ஆசிரியர் 131
- பாடலின்சந்தம் 145
- பிள்ளைத்தமிழ் 131
- பிராணம் 63
- மரபு 64
சேக்கிழான்மாதேவடிகள் 96
சேய்த்தொண்டர் புராணம் 250
சேரநாடு 118
சேரமான் கணைக்காலிரும்
பொறை 125
சேரமான் பெருமாள் 117,141
- அழைத்தது 253
- மாரிவெண்கோ 348
சேவையர் காவலர் 71
சைவசித்தாந்த மகாசமாஜம் 25
சைனப்புராதன புருஷர் 114
சொக்கலிங்கம் பிள்ளை,
வானூர் 250
சோமநாத பண்டிதர் 247
சோமன் 269
சோமாசிமாறர் 246
சோமாசியாண்டார் 218
சோமாஸ்கந்தமூர்த்தி 202
சோமேசர் முதுமொழி
வெண்பா 400
சோழநாடு 118
சோழமண்டல சதகம் 77,321
சோழர்கால அவ்வை 361
சோழர் பேரரசு 149
சோழன் நலங்கிள்ளி 3
ஞானக்குறள் 380
ஞானாமிர்தம் 159,173
டி.கே.சி. 194
தக்கயாகப்பரணி 11,19
- உரை 11
- பாடிய வரலாறு 340
தஞ்சை 3
தஞ்சைக் கோயில் 152
தஞ்சைச் சரசுவதிமகால் 77
தடுத்தாட்கொண்ட புராணம் 109
தண்டபாணி சுவாமி 249
தண்டி 218
தண்டியடிகள் 199
தண்டியலங்காரம் 4
தத்தா நமரே காண் என்ற
மிலாடுடையார் 116
தத்துவராயர் 17
தமிழ்நாவலர் சரிதை 59
தமிழ்நெறி விளக்கம் 71
தமிழ்ப்பரணி 5

தமிழ்விடுதூது 261
தமிழறியும் பெருமாள் கதை 334
தரிசனப்பத்து 381
தனிச்செய்யுட் சிந்தாமணி 261
தனிப்பாடல் திரட்டு 260
தாயுமானவர் 245
தாராசுரக் கோயில் 86
தாராசுரம் 86,248
தியாகசமுத்திரம் 272
திரிகர்த்தராயன் 305
திரிபுவனதேவன் 324
திரிபுவனை 269
திரு அங்கமாலை 145
- அஞ்சைக்களம் 144
- அதிகை 44
- ஆரூர் 4,329
- ஆரூர்க்கல்வெட்டு 248
- ஆரூர்மும்மணிக்கோவை 142
- ஆவடுதுறை 129
- ஈங்கோய்மலை 386
- உந்தியார் 159
- எறும்பியூர் 256
- ஐயாறு 121
- ஒற்றியூர்க் கல்வெட்டு 99
- கச்சூர் 143
- கடவூர் உய்யவந்தார் 197
திருக்கயிலாயஞான உலா 142
- கருப்பறியலூர் 143
- கலம்பகம் 61
- கலயநல்லூர் 237
- கழுக்குன்றச் சாசனம் 64
- களிற்றுப்படியார் 196
- காமக்கோட்டம் 294
- குருகூர் 143
- குருகைப்பிரான்பிள்ளான் 3
- குறள் 3
- குறிப்புத்தொண்டர் 119
- கைவழக்கம் 72
- கோட்டிக்குழகர் 146
- கோலக்கா 143
- கோவை 346
- சித்திரகூடம் 273
- சிற்றம்பலமுடையான் பெருமானம்பி 329
- சின்னமாலை 331
திருச்செங்காட்டங்குடி 124,159
- செந்தூர் 44,54
- செந்தூர்ப்பரணி 54,307
- சேய்ஞலூர் 178
- ஞானசம்பந்தர் வரலாறு 88
திருத்தங்கி 369
- தணிகை 290
- துருத்தி 144
- துறையூர் 142
- தொண்டத்தொகை 66,100
- தொண்டத்தொகை நல்லூர் 95
- தொண்டர் அந்தாதி 69
- தொண்டர் புராணசாரம் 74
திருத்தொண்டர் புராணம் 102
- நல்லூர்ப் புராணம் 201
- நறையூர் நாடு 29
- நனிபள்ளி 146

- நாகேச்சுரம் 65
- நாகைக்காரோண புராணம் 187
- நாட்டியத்தான்குடி 143
- நாராயணப்பட்டர் 6,27
- நாவுக்கரசு முத்தி பெற்றது சதயம் 152
- நாளைப்போவார் 195
- நின்றியூர் 143
- நீலகண்ட யாழ்ப்பாணர் 195
- திருநீலநக்கர் 230
- திருநீற்றுச்சோழன் 27,94,274
- நெடுங்களம் 146
- நெய்த்தானம் 271

திருப்பதிக்கோவை 199
- பதிகக்கோவை 74
- பராய்த்துறைக் கல்வெட்டு 84
- பல்லாண்டு 254
- பறியலூர் 308
- பனந்தாள்தாடகேச்சுரம் 249
- பனையூர் 143
- பாச்சில் 143
- பாண்டிக் கொடுமுடி 143

திருப்புகலூர் 143
- புகலூரந்தாதி 252
- புன்கூர் 144,202
- பூந்துருத்தி 145
- பைஞ்ஞீலி 217
- மங்கையாழ்வார் 125
- மணலூர் 257
- மழபாடி 96

திருமழபாடிக் கல்வெட்டு 264
- மறைக்காடு 138

திருமறையோன் கண்ணன் 289
- மாகாளம் கல்வெட்டு 95
- மாணிகுழிக் கல்வெட்டு 84
- மாந்துறை 146

திருமாலைக் கடலில் போட்டது 85
- முதுகுன்று 143
- முருகன் பூண்டி 144
- முருகாற்றுப்படை 11
- முல்லைவாயில் 290
- முறை வகுப்பு 101
- முனைப்பாடி நாடு 120
- மூலர் 136,141,148

திருவருட் பயன் 149
- வலிவலம் 143
- வாசகம் 72,254

திருவாதவூரடிகள் புராணம் 249

திருவாதிரை 151

திருவாலங்காட்டுச் செப்பேடு 125

திருவாலங்காடு 201

திருவிசைப்பா 252
- வீழிமிழலை 146

வெண்காட்டு நங்கை 229
- வெண்பாக்கம் 144
- வேங்கடம்பிள்ளை 401

தில்லை 44

திருப்பணிகள் 91
- பொன்வேய்ந்தவன் 82

தில்லையில் அம்பலம் 82

தில்லையுலா 157

திலகர் புராணம் 250

திலகவதி 208
திலோத்தமை 184
திவாகரம் 44
தீபங்குடி 4
தீபங்குடி அருகன்கோயில் 60
தீபங்குடி கவிச்சண்டிதன் 3
தீபங்குடிப்பத்து 8
தீபநாயகர்கோயில் 60
துருக்கியர் 394
துரைசாமிப்பிள்ளை, ஔவை 263
துவரைக்கோமான் 17
துளசியார்பட்டணம் 363
தூங்கெயில் எறிந்ததொடித் தோட்செம்பியன் 32
தெய்வப்பரணி 291
தெய்வீகன் 259
தெலுங்க வீமன் 290
தென்கலை 191
தேரர் 129
தேவாசிரியன் 108
தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் 307
தொண்டர்சீர் பரவுவார் 67
தொண்டைமண்டல சதகம் 109
தொண்டைமண்டலம் நின்று காத்தபெருமாள் 96
தொல்காப்பிய உரை 27
தொல்காப்பியம் 177
- செய்யுளியல் 88
செய்யுளியல் உரை 10
பொருளதிகாரம்
- மரபியல் 270
- மெய்ப்பாட்டியல் 16
நச்சினார்க்கினியர் 15,19
நத்தத்தனார் 115
நந்தமண்டல சதகம் 401
நந்திக்கலம்பகம் 12
நந்திவர்மன் III 100
நம்பிகாளி 256
நம்பியாண்டார் நம்பி 64,72,101
நம்பியாண்டார் அந்தாதி 104
நம்மாழ்வார் 193
நம்மாழ்வார் திருவிருத்தம் 217
நமசிவாயப்பதிகம் 143
நமசிவாய முதலியார் 399
நமிநந்தியடிகள் 233
நமிநந்தியடிகள் புராணம் 138
நரசிங்க முனையரையர் 152
நரசிம்மவர்மன் 123
நரலோகவீரன் 289
நல்லம்பர் 376
நல்லூர்ப்பெருமணம் 165
நல்வழி 397
நவநீதப் பாட்டியல் 13
நன்னூல் 17
நன்னூற் கோவை 381
நாகந்தை புதல்வன் 403
நாகலிங்க முனிவர் 172
நாஞ்சில் வள்ளுவன் 349
நாராயணசாமி முதலியார் சி.கு. 31

நான்மணிக் கோவை 381
நான்மணி மாலை (அவ்வை) 381
நானார்த்தார்ணவசம்க்ஷேபம் 227
நானாற்பது 147
நித்திய கீதப் பிரமோகன் 204
நீலகண்ட சாஸ்திரி 7,114
நிலகேசி 187
நெடுங்கிள்ளி 3
நெடுஞ்செழியன் 214
நெடுமாறன் 212
நெல்வேலி வென்ற சீர் நெடுமாறன் 117
நெற்குன்றங்கிழார் 27
நெற்குன்றவாணர் 268
நேச நாயனார் 159
நேமிநாதர் 262
பஞ்சநதி வாணன் 31
பஞ்ச புராணம் 254
பட்டினப்பாலை 93
பண்டித சோழன் 301
பந்தனந்தாதி 290
பரசமயகோளரிமாமுனி 6
பரஞ்சோதி 118,123
பரஞ்சோதி திருவிளையாடல் 187
பரஞ்சோதி முனிவர் 174
பரணர் 115
பரணிக்கோர் சயங்கொண்டான் 5
பரமேசுவரவர்மன் 126
பராக்கிரமபாண்டியன் 244
பராந்தகன் I 21,331
பராந்தகன் II 284
பரிபாடல் 11
பரிமேலழகர் 4
பல்லவநாடு 122
பல்லவராயன்பேட்டை 276
பல்லாண்டு ஓதல் 208
பழமொழி நானூறு 212
பழையனூர்க் காரி 360
பழையாறை 272
பழையாறை வடதளி 126
பன்னிரண்டாம் திருமுறைத் தொகுப்பு 133
பன்னிரு திருமுறை யாசிரியர் வரலாறு 249
பன்னிரு பாட்டியல் 25
பாசவதைப் பரணி 307
பாண்டிக் கோவை 11,125
பாண்டி நாடு 120
பாண்டியர் ஐவர் 28
பார்சுவநாதர் 225
பாரதம் 122
பாரத வெண்பா 14
பாரதி 38
பாரதியார் 372
பாரிசாலன் 357
பாரி பறித்த பறி 354
பாரிமகளிர் 352,356
பாலறாவாயர் 63,68
பாலாறு 46

பிடக நிகண்டு 381
பிரமேயசாரம் 207
பிரயோக விவேகம் 92
பிரான்சிஸ் முனிவர் 244
பிள்ளை லோகஞ்சீயர் 296
புகலூரந்தாதி 6
புகழ்ச்சோழர் 117,139,150
புகழ்த்துணை நாயனார் 147
புகழேந்தி 255
புட்பவிதி 207
புத்தமித்திரனார் 10
புராணத்திருமலைநாதர் 94
புருடோத்தமநம்பி 97
புல்வேளூர்ப்பூதன் 368
புலவுர் புராணம் 249
புறநானூற்றுரைகாரர் 47
புறநானூறு 398
புன்னைவனநாதர் 385
புனிதவதி 118,208
பூசலார் 100
பூதப்பாண்டியன் தேவி 224
பூதபுராணம் 252
பூம்புலியூர் நாடகம் 6
பூரணலிங்கம்பிள்ளை 78,84
பெண்ணை நதிப்புராணம் 359
பெரிய புராணம் 63
பெரியன் சீனிவாசையங்கார் 344
பெரியாழ்வார் 289
பெருங்கதை 43
- நோக்கம் 166
பெருந்தேவனார் 320
பெருமிழலைக் குறும்பர் 117
பேரம்பலம்
பொன்வேய்ந்தவன் 84,95
பேராசிரியர் 10
பொய்கையார் 115
பொய்கையார் களவழி 33
பொன்வண்ணத்தந்தாதி 142
பௌத்தம் 127
மகாதேவ முதலியார் 254
மகாபாரதம் 122
மகாபுராணம் 85
மாபுராணம் 252
மகாலிங்கையர் பெரியர்
புராணவுரை 251
மகேந்திர வர்மன் 124
மங்கையர்க்கரசி 117
மணக்குடி 257
மணவிற்கூத்தன் 272
மணிமுடிச்சோழன் 126
மணிமேகலை 30,44
மணிமேகலை காலம் 168
- நோக்கம் 166
மதுரகவி 111,196
மதுரை 225
மயிலைநாதர் 19
மலாயா 27
மன்னார்குடி இராசகோபாலப்
பெருமாள் 296
மனுநீதிச்சோழன் 211,119
- வரலாறு 108

மாணிக்கவாசகர் 101
மாதுருபூதமையர் 401
மாபுராணம் 17
மாறவர்மன் குலசேகர பாண்டியன் 98
மானக்கஞ்சாறர் 200
மீனாட்சிசுந்தரமபிள்ளை 77,131
மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. 79
முடிகொண்ட சோழன் 31
முத்தமிழ்க் கபிலன் 351
முத்தரையர் 94,287
முத்தூர்க்கல்வெட்டு 82
முத்தொள்ளாயிரம் 46,60,151
முளைச்சாளம்மை கோயில் 342
முனிமொழி 396
முனையர்கோன் 288
மூத்த திருப்பதிகம் 225
மூதுரை 390
மூர்க்க நாயனார் 118
மூர்த்தி நாயனார் 211
மூல நூல்கள் 19
மூவர்உலா 278
மூவேந்த வேளான் 29
மெய்கண்ட சந்தானம் 169
மெய்கண்டார் 245
மெய்ப்பொருள் 114
மேருமந்தர புராணம் 253
மோகவதைபரணி 48
யாப்பருங்கல விருத்தி 25
ரவிவர்மா படம் 259
ராஜம், எஸ். 59
ராஜரத்தின முதலியார் 386
ரிப்பன் பிரஸ் 401
வச்சணந்திமாலை 24
வச்சத்தொள்ளாயிரம் 60
வச்சராயன் 272
வசவபுராணம் 247
வண்டமர்பூங்குழலி 257
வண்டலூர் 29
வண்டாழஞ்சேரி 30
வண்டுவாஞ்சேரி 30
வண்டைநகர் 4
வர்ஜில் 32
வரகூர்சுந்தரேச சாஸ்திரி 112
வரந்தருவார் 358
வள்ளுவர் நூல் 77
வளையாபதி 318
வாக்குண்டாம் 390
வாகீசபண்டிதர் 99
வாணகோவரையன் 31
வாணிதாசன் 321
வாணியன்தாதன் 321
வாதாபி 213
வாதாபி கணபதி 202
வாதாபி போர் 100
வாதீபசிம்மன் 86
வானதேவ முருகபட்டாரகர் 249
வாயிலார் 140
விக்கிரமசோழன் 11
விக்கிரமன் உலா 9,276

விக்கிரமன் சாசனம் 324
விச்சிக்கோ இருங்கோவேள் 255
விசயாலயன் 3
விஞ்ஞானசாரம் 337
விநாயகர் அகவல் 379
விநோதரச மஞ்சரி 263
வில்லிபாரதம் 14
விஷ்ணுவர்த்தனர் 26,296
வீமகவி 247
வீரசிங்காதன புராணம் 339
வீரசோழிய உரை 10
வீரசோழியம் 10
வீரராசேந்திரன் 25
வீராசாமிச்செட்டியார் 263
வெண்பாப் பாட்டியல் 80
வெண்பாவில் புகழேந்தி 5
வெள்ளியம்பலவாணத் தம்பிரான் 110
வெள்ளைவாரணனார் 76,249
வெள்ளிவீதி 349
வெற்றிவேற்கை 388
வேங்கிநாடு 274
வேணாட்டடிகள் 289
வேதாரண்யம் 227
வேலையர் 341
வேழமுகம் 383
வைத்தியநாத தேசிகர் 265
வையாபுரிப்பிள்ளை 63
ஹரிஹரர் 86
ஹோமர் 32
க்ஷத்ரசூளாமணி 86
க்ஷேத்திரத்திருவெண்பா 142
ஜேசுதாசன் 75
ஸ்காட் 395
ஸ்ரீகண்டேசர் ஆலயம் 116
ஸ்ரீபுராணம் 253

ooo



மு. அருணாசலம்



இலக்கிய ஆராய்ச்சி பற்றி
இந்நூலில் பேசும்போது
சில கருத்துக்களை
நாம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம்.
காலத்தில் பின்னோக்கிச் செல்லச்செல்ல
வரலாற்றுச் செய்திகள் கிடைப்பது அருமை;
போலிக் கதைகளும் புனைந்துரைகளும்
மிகுதியாகவே காணப்படும்.
முக்கியமாக
இப்பன்னிரண்டாம் நூற்றாண்டானது
போலிக் கதைகளுக்கு
அதிகம் இடம் கொடுத்துள்ள காலப்பகுதி.
எனவே,
இந்த நூற்றாண்டின் செய்தியை
இங்கு நாம் கூறும்போது,
பலருடைய விருப்பு வெறுப்புக்கள்
வந்து மோதவே செய்யும்.
ஒரு சார்பாக நின்று பேசுவது
மனித இயற்கை எனினும்,
அவ்வாறு இன்றி நடுநிலையாகவே நின்று,
வரலாறுகளை ஆராய
யாம் இங்கு முயன்றிருக்கிறோம்.

**The PARKAR**